

மாணிக்க வீணை
விக்கிரமன்

# மாணிக்க வீணை

[பல்லவர் சரித்திர நாவல்]

சென்னை மாவட்ட வட்டார நூலகம்
அசோக் நகர், சென்னை-83

'சரித்திரக்கதைச் செம்மல்'
கலைமாமணி விக்கிரமன்

# முன்னுரை

"அடுத்த வாரமே தொடங்க வேண்டும்; ஒரு சரித்திரக் கதை எழுதித் தாருங்கள்" என்று ஆசிரியர் சாவி கட்டளையிட்டார்.

நாற்பத்தியிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பத்திரிகையாளனாக ஆவதற்கு எனக்கு வாய்ப்பளித்த சாவி சார் அவர்கள் அன்புக் கட்டளையை மீற முடியவில்லை. மேலும் புதினத் தலைப்பை மறுநாளே தர வேண்டும் என்றும் சொல்லி விட்டார்.

என் இனிய நண்பர் திரு. ஸ்ரீவேணுகோபாலன் சொல்லி வைத்தாற்போல் மறுநாள் காலையில், தொலைபேசி மூலம் நினைவுபடுத்தினார். நான் சுறுசுறுப்பாக இயங்கினேன். பிறந்தது 'மாணிக்க வீணை'.

தமிழ்நாட்டிற்கு பரிவாதினி என்ற வீணையை அறிமுகப் படுத்தியவர் புகழ் பெற்ற பல்லவ மன்னர் மகேந்திரவர்மன். அந்த வீணையை எவ்வாறு படைத்தார் என்ற கதையை 'பரிவாதினி' என்ற பெயரில் குறுநாவலாக எழுதினேன். அந்த வீணை என் மனத்தில் ஆழமாகப் பதிந்து விட்டது.

பல்லவர்கள் கண்டெடுத்த பரிவாதினி வீணையின் பிற்கால வரலாறு என்ன என்பதைச் சிந்தித்து வந்தேன். 'சாவி' பத்திரிகையில் தொடர்கதை எழுதும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டேன். திரு. சாவி அவர்களுக்கு நன்றி.

கலைமாமணி கோபுலு அவர்களுடன் கதையைப் பற்றி அவ்வப்போது கலந்து பேசுவேன். அவரது ஊக்கம் எனக்கு உறுதுணையாக இருந்தது. அவரது சித்திரங்கள் கதைக்குப் பெருமை சேர்த்தன.

மலைநாட்டிலிருந்து வந்த சைலேந்திரியும், நரேந்திரனும், முகுந்தனும் ஐம்பத்திரண்டு வாரங்களுக்கு என்னுடனேயே இருந்து கதை வளர உதவினார்கள். அவர்களுக்கும் நன்றி.

விக்கிரமன்

# மாணிக்க வீணை

## 1

*பால்வண்ண நிலவொளியின் தாக்கம் பெற்ற*
*பாற்கடலின் வெண்சங்கே, உனது வெண்மை*
*நூல் அருளும் கலைவாணி திருமிடற்றின்*
*நுண்ணழகு வெண்மைக்கே தோற்கும் கண்டாய்!*

(கருத்து : சியாமளா தண்டகம்)

"பராசக்தி, தாயே, ஏழேழு உலகங்களையும் காப்பவளே! அம்மா! நான் எடுத்த காரியத்தை வெற்றியுடன் நிறைவேற்றம்மா!" என்று அந்தப் பெரியவர் முணுமுணுத்தார்.

மரக்கலம் ஆடி அசைவதற்கு ஏற்ப, தான் உட்கார்ந்திருக்க, நிற்க, தன்னைச் சரி செய்து கொள்ள அவர் பழகிவிட்டார்.

அவர் எதிரே வெள்ளித் தாம்பாளத்தில் நான்கு கரங்களுடன் கூடிய தேவியின் விக்கிரகம் ஒன்று இருந்தது. சிறந்த வேலைப்பாடுகளுடன் விளங்கிய அந்த அழகிய விக்கிரகத்தை, மரப்பெட்டியினின்று எடுத்து, வெளியே வெள்ளித் தட்டில் வைத்து, தூய நீரினால் அபிஷேகம் செய்தார்.

வெளியே கடலலை மரக்கலத்தின் மீது கடுங்கோபத்துடன் மோதிச் சிதறிக்கொண்டிருந்தது. கிழக்கு வானில் நீலக்கடல் வானுடன் சேர எல்லை வகுத்து இட்டிருக்கும் கருநீலக் கோட்டின் மீது மெல்லிய வெள்ளி, பொன் இழைகள் படர்ந்தன. விடிவெள்ளி முளைத்துச் சிறிது நேரம் ஆகியிருந்தது.

மரக்கலத்துக் கூம்பின்மீது அமர்ந்திருந்த புள்ளினங்கள், மிக வேகமாகக் கடலை நோக்கிப் பறந்தன.

மேல்தளத்தில் காற்று வீசுவதற்கு ஏற்ப, பாயை இழுத்துக் கட்ட, கப்பல் பணியாளர்கள் முனையத் தொடங்கிவிட்டனர்.

மேல் தளத்தில் அமர்ந்து, பெரியவர் பாடத் தொடங்கிவிட்டார் என்றால், பொழுது புலரப்போகிறது என்பதற்கு அடையாளம். வழக்கம்போல் நரேந்திரன் அவர் அருகே வந்து நின்றான்.

காம்போஜத்திலிருந்து மரக்கலம் புறப்பட்ட மறுநாள், அவன் பெரியவர் பூசை செய்வதைக் கண்டான். வெள்ளித் தட்டில் வீற்றிருக்கும் தேவியின் சிற்ப அழகு அவனைக் கவர்ந்தது. சின்னஞ்சிறு சிலையில் இவ்வளவு பெரிய அற்புதமா? தேவியின் முகத்திலே ஒளி வீசும் அழகுக்கு விழிகளிரண்டும் காரணமா? செவிகளில் தொங்கும் குண்டலங்கள் பொறுப்பா? அழகிய நாசியும், இதழ்களும், வட்ட முகத்துக்கு எடுப்பாய் முகவாயும், புன்சிரிப்பை அள்ளித் தெளிக்கும் இதழ்களும் காரணமா?

காம்போஜ நாட்டினின்று அந்த மரக்கலம் புறப்பட்ட நாளிலிருந்து நரேந்திரன், ஒவ்வொரு நாளும் தேவியின் சிலையைப் பார்த்து வியப்படைகிறான். நான்கு கரங்களுடன் உட்கார்ந்த நிலையிலிருக்கும் அந்தச் சிலையைச் செய்த சிற்பி, யாரோ? சிற்பி ஓர் அழகியை நாள்தோறும் அணு அணுவாகப் பார்த்து ரசித்துப் படைத்தானோ?

கப்பல் புறப்பட்ட முதல் இரண்டு நாள்கள், பாடல்களைப் பாடி உடன் கொண்டு வந்திருந்த மலர்களைத் தூவி பூசை செய்தார். கொண்டு வந்த மலர்கள் வாடிவிட்டன. வாடிய மலர்களைப் பிரிய மனமின்றிக் கடலில் வீசும்போது, அவர் தன்னருகே இருக்கும் மங்கையிடம் கூறுவார்: "இந்த மரக்கலத்தில் எல்லா வசதிகளும் இருக்கின்றன. சிறிய பூந்தோட்டம் ஒன்று இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?"

அவள் மெல்ல இதழ் விரிப்பாள். அதற்குப் புன்னகை என்று பெயராம்! அந்தச் சிறுநகை தன்னைப் பார்த்து மலரக்கூடாதா என்று, அந்த இளம் வாலிபன் நரேந்திரன் ஏக்கப் பெருமூச்சு விடுவான்.

"மலர் தூவி அர்ச்சிக்கத்தான் முடியவில்லை. உன் இதழ் விரித்துப் பாமாலையாக தேவியைப் பூசிக்கக் கூடாதா? சைலேந்திரி, ஒரு நாளாவது தேவியின் எதிரே அமர்ந்து நீ பாடக்கூடாதா?" என்று பெரியவர் கேட்பார்.

தேவிக்கு அபிஷேகம் செய்து கொண்டிருக்கும், பொழுது புலராத அந்தக் காலைப் பொழுதில் சைலேந்திரி உறங்கிக் கொண்டிருப்பாள். மரப் படிக்கட்டுகள் வழியே நரேந்திரன் மேல் தளத்திற்கு ஏறிவரும்போது, அறை மஞ்சத்தில் அவள் படுத்திருக்கும் கோலம் விழியில் படும்.

அவள் சயனித்திருக்கும் காட்சியை நின்று சற்று ரசிப்பான். எந்தவித ஆபத்தும் இல்லை என்ற உணர்வில், தைரியத்தில் அவள் படுத்திருக்கும்



நிலையை நின்று ரசிப்பது தவறு என்று அவன் உள்ளுணர்வு சொல்லும்; என்றாலும் பொங்கித் ததும்பிக் கொண்டிருக்கும் கலையூற்றை, ரசனை உணர்வைத் தடுக்க எவ்வளவு முயன்றும் அவனால் முடியவில்லை. அலைபாயும் மனத்தை அடக்கிக் கொள்ள முடியாவிட்டால், அவன் பயணம் பாழ்பட்டுவிடும். தன் தாய்க்கு அவன் கொடுத்திருக்கும் வாக்குறுதி சிதைந்து விடும்.

ஒரு நாள் மாலை. மரக்கலம் ஆடி அசைந்து சென்று கொண்டிருக்கும்போது, கதிர்க்கோடுகள் சாய்ந்து மேல் தளத்தில் படர்ந்திருக்கும் போது, விழிகளை மூடி மனத்தை அலைபாயாமல் செய்ய, மனத்தை ஒருமைப்படுத்த அவன் முயன்று கொண்டிருந்தான். 'கலுக்'கென்ற சிரிப்பொலி கேட்டது; அவன் திடுக்கிட்டான். மனப் பாறையில் மீண்டும் அலைகளின் தாக்குதல்.

"இந்த இளம் வயதிலேயே முற்றும் துறந்தவராகப் போகிறீர்களா?" அந்தக் குரல் வண்டின் ரீங்காரமோ? பொங்கிவரும் புது நிலவின் மோகன ராகமோ?

ஒரு நிலைக்குக் கொண்டு வர முனைந்த மனக் கப்பல் நிலை கொள்ளாமல் ஆடியது.

மறுமொழி கூறுவதற்குள், அவள் அங்கிருந்து போய்விட்டாள். போகிற போக்கில் விழிக் கணையுடன் இதழ் விரித்துப் பூஞ்சிரிப்பையும் வீசிவிட்டுப் போய்விட்டாள். மன ஓடம் புயலில் சிக்குண்டதுபோல் தத்தளித்தது.

மின்னல் போன்று ஒரு கண நிகழ்ச்சி; அதன் விளைவு? பல நாழிகை, கதிர்வீச்சு உடலைப் பிடித்து உலுக்கிக் கொண்டிருந்தது.

காம்போஜ நாட்டுத் துறைமுகத்திலிருந்து மரக்கலம் புறப்பட்ட அன்று, அவள் பெரியவருடன் ஒயிலாக மரக்கலத்தில் ஏறிய காட்சி, அவன் விழி வழி இதயத்தில் புகுந்தது.

அந்தப் பெரிய மரக்கலத்தில் அவனுடைய பணி சமையல் கூடத்தில். எப்போதோ ஒரு தடவைதான் அவன் மேல் தளத்திற்கு வர முடியும். நடமாடும் சிங்கார வடிவழகு நல்லாளைக் கண்டு களிக்கும் வாய்ப்பு மிகக் குறைவு. கடுமையான வேலையின் நடுவே, அவனுக்கு அவள் நினைவு இராது. பொழுது புலரும் காலை வேளையில் மேல் தளத்திற்கு அவன் வரும்போது, அவள் தங்கியிக்கும் அறை வழியே அவள் சயனித்திருக்கும் கோலத்தைக் காணாமல் அவனால் இருக்க முடியாது.

"சைலேந்திரி! ஒரு நாளாவது தேவியின் எதிரே அமர்ந்து நீ பாடக் கூடாதா?" என்று பெரியவர் ஏக்கத்துடன் புலம்புவது அவனுக்குத் தெரியும்.

சைலேந்திரி-மலைமகள். ஆகா! அழகான பெயர்.

நாமே கேட்டுவிடலாமா? 'சைலேந்திரி! நீ பாடத்தான் வேண்டும். அழகிய உன் கண்டத்தின் வழியே பொங்கிவரும் இனிய கீதம், கந்தர்வ கானமாகத்தானிருக்கும். தேவர்கள் மட்டுமே கேட்டின்புறும் இனிய குரலை நான் கேட்கக்கூடாதா? சங்குக் கழுத்தின் வழியே இனிய இசை பொங்கி வருவதைக் கண்டு நான் மகிழக் கூடாதா?'

அவன் ஒருமுறை சொல்லிப் பார்த்துக் கொண்டான்.

"சந்திரோதயத்தினால் பொங்கி வரும் பாற்கடலினின்று வெளி வரும் சங்கின் வடிவழகைப் போன்ற கழுத்தை உடையவளே!"

யாரோ அவனைத் தொட்டார்கள். திரும்பிப் பார்த்தான். பெரியவர் நின்றிருந்தார்.

"நீ இப்போது முணுமுணுத்தது தேவியை வர்ணிக்கும் பாடலன்றோ?" என்று அவர் கேட்டார்.

'எந்த தேவியை!' நல்லவேளை அவனுடைய கள்ள மனத்தை அவர் அறியவில்லை.

'பிழைத்தேன்! சைலேந்திரியை வர்ணித்து நான் பாடுவதாக நினைத்துச் சீற்றங்கொண்டு, கலபதியிடம் முறையிடப் போகிறார் என்று ஒரு கணம் பயந்து விட்டேன். பெண்களிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டால் கப்பலில் என்ன தண்டனை? கடலில் தூக்கி எறிந்துவிடுவார்கள்.'

"ஆமாம்... ஆமாம்... நான் ரசித்த தேவியை வர்ணித்துப் பாடினேன்" என்று கூறி, 'ஹி... ஹி' என்று மனவிகாரத்தை மறைக்கச் சிரித்தான்.

"உனக்கு சமஸ்கிருதம் தெரியுமா?"—அவர் கேட்டார். எனினும் அவனுக்கு, அவரிடம் பயம் தெளியவில்லை. தலையை மெல்ல அசைத்தான்.

"நீ இப்போது பாடிய பாட்டு— அது மகாகவி காளிதாசனின் வர்ணனை. பரதக் கண்டத்தின் வட பகுதியில் ஹர்ஷ மகா சக்கரவர்த்தியின் நாட்டிலிருந்து மலை நாட்டிற்கெல்லாம் காளிதாசனுடைய கவிதைகள் பரவிவிட்டனவா? சரி, சரி! எனக்கொரு உதவி செய்வாயா? தேவியின் பூசை முடிந்தவுடன் ஒரு பதிகம், தினமும் ஒரு பாட்டு நீ பாட வேண்டும், முடியுமா? சைலேந்திரி பாடினால் தேவியே எதிரே வந்து விடுவாள். வீணையை எடுத்து மீட்டினால் காற்றும், கடலும், விண்மீன்களும், கடலில் மறைந்திருக்கும் பவழ இரத்தினங்கள் எல்லாம் இசை கேட்க ஓடோடி வந்துவிடும். அவள் மிகச் சோம்பேறி, பிடிவாதக்காரி. தன் இலட்சியம் ஈடேறும்வரை வேறொன்றின் மீதும் கவனம் செலுத்த



மாட்டாள். அவளைப் பல்லவ நாட்டிற்கு அழைத்துச் செல்கிறேன். தக்கவரைத் தேடி ஒப்படைக்கும்வரை நான் நெருப்புக் கடல் மேல் நடப்பது போல்தான்! இந்தக் கப்பலில் நானா தேசத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பேசும் மொழி புரியவில்லை. தமிழும் சமஸ்கிருதமும் தெரிந்தவன் இங்கு நீ ஒருவன்தான். காலை வேளையில் மட்டும் நான் பூசை செய்யும் இடத்திற்கு வந்து ஒரு பதிகம், ஒரு சுலோகம் பாடினால் என் மனம் நிம்மதியடையும். நிறைவேற்றுவாயா?"

அந்த இளைஞன், பெரியவர் பேசுவதை இமை கொட்டாமல் கேட்டுக் கொண்டிருந்தான். அழகிய இளமங்கை பெரியவருக்கு என்ன உறவு? காம்போஜத்திலிருந்து பல்லவ நாட்டிற்கு அவளை ஏன் அவர் அழைத்து வருகிறார்? அவள் பாடினால் பராசக்தி எதிரே பிரசன்னமாகி விடுவாளாமே! அவளுக்கு வீணை மீட்டத் தெரியுமாம். வீணா கானம் கேட்டுக் காற்று, வீச மறந்து வந்து நிற்கும்! கடலலைகள் கோஷமிடாமல், இசை கேட்டு ஆனந்திக்கும். அவள் பிடிவாதக்காரி! தன் இலட்சியம் ஈடேறும்வரை வேறொன்றிலும் அவள் கவனம் செலுத்தமாட்டாள்.

அப்பப்பா! இவ்வளவு புதிர்களா?

சைலேந்திரி— அழகிய பெயர். பெரியவருக்கும் அவளுக்கும் என்ன உறவு? காம்போஜத்திலிருந்து பல்லவ நாட்டிற்கு அவர்கள் ஏன் வருகிறார்கள்? 'தக்கவரிடம் அவளை ஒப்படைக்கும் பெரும் பொறுப்பை' அவர் ஏற்றிருக்கிறாராமே! தக்கவர் என்பதற்கு இலக்கணம் – இலட்சணம் என்ன? அவற்றை அறிந்தாக வேண்டும்.

ஏ! நரேந்திரா! உனக்கு இன்றிலிருந்து உறக்கம் இல்லை. உன் குணம், போக்கு எல்லாம் மாறிவிடப் போகிறது!

நரேந்திரன்—அந்த இளைஞன் தனக்குத்தானே சிரித்துக் கொண்டான்.

காம்போஜ நாட்டினின்று பல்லவ நாட்டின் துறைமுகமான கடல்மல்லையை நோக்கி வரும் அந்தக் கலத்தின் மேல் தளத்தில், அதிகாலையில் பெரியவர் தேவிக்குப் பூசை செய்து முடித்தவுடன், நரேந்திரன் தேவியை வர்ணித்துப் பாடுவதை வழக்கமாகக் கொண்டான். மெல்லிய குரலில் அவன் பாடுவான். பெரியவர் மெய்மறந்து கேட்பார். பாடிய பிறகு, உடனே போய் விடுவான். அவன் பெயரைச் சொல்லிக் கீழ்த்தளத்திலிருந்து கலபதி அழைக்கும் குரல், அவன் செவிகளில் விழும். ஒரு நாளாவது சைலேந்திரி அவன் பாடும்போது அங்கே வரமாட்டாளா என்ற எதிர்பார்ப்பு அவனிடம் இல்லாமலில்லை. ஒரு நாள் போதில் எப்போதாவது ஒருமுறை, பெரியவரைச் சந்தித்து அவர்களைப் பற்றிக் கேட்டறிய எண்ணுவான். அது நிறைவேறவில்லை.

பூர்ண சந்திரன் உதயமான நாளில் காம்போஜத்திலிருந்து புறப்பட்ட மரக்கலம், வான்மதி வானத்தில் இல்லாமல் போன பிறகு மூன்றாம் பிறை, சதுர்த்தி, பஞ்சமி, அஷ்டமி, நவமி என்று அது வளர்ந்து ஒரு நாள் மாலை, மரக்கல யாத்திரைக்கு முடிவு ஏற்படப்போகிறது என்று கலத்திலுள்ளவர்கள் பேசிக் கொண்டனர். அவர்களிடம் மகிழ்ச்சிப் பரபரப்பு ஏற்பட்டது.

கலத்தில் பயணம் செய்யும் பல நாட்டினர், தங்கள் பண்டங்களைச் சேகரிக்கத் தொடங்கினர். கரை இறங்கியவுடன், தாங்கள் தங்கப்போகும் இடத்தைப் பற்றியும், செய்யவிருக்கும் வணிகத்தைப் பற்றியும், சந்திக்க இருக்கும் பெரிய மனிதர்கள் இருக்குமிடங்களைப் பற்றியும் பேசிக் கொண்டனர். அவர்கள் பேச்சொலி அலை ஓசையையும் மிஞ்சியது.

மரக்கலத்தின், மேல்தளத்தில் சைலேந்திரியும் பெரியவரும் நின்று கொண்டிருந்தனர்.

"சைலேந்திரி, இவ்வளவு நாட்களும் சோர்வுற்று இருந்த உனக்குப் புதுத் தெளிவு ஏற்படப்போகிறது! புதிய உற்சாகம் ஏற்படப்போகிறது! நாளை இந்த நேரம் கடல்மல்லைத் துறையில் நம் கலம் நங்கூரம் பாய்ச்சி விடும்..." என்றார்.

சைலேந்திரி, பெரியவர் பக்கம் திரும்பினாள்.

"நாளைக்கு நாம் கரை இறங்கி விடுவோமா?" என்று பரபரப்புடன் கேட்டாள். ஆவலும், மகிழ்ச்சியும் அந்தக் குரலில் நிறைந்து வழிந்தன.

"ஆமாம், அதோ பார்! பெரிதும் சிறிதுமாக இரண்டு கோயில் விமானங்கள்" என்று பெரியவர் சுட்டிக் காட்டினார்.

மிகத் தொலைவில் மாமல்லபுரத்தில் சிவ-விஷ்ணு ஒற்றுமையை நிலை நிறுத்தியவாறு கம்பீரமாகத் திகழும் கடற்கரைக் கோயிலின் புதுமையான விமானங்கள், மங்கலாய்த் தெளிவற்றுத் தெரிந்தன. மரக்கலம் நெருங்க நெருங்க சிறு குன்றுகளும், அடர்ந்த தோப்புகளும் நிழல் உருவமாகத் தோன்றின.

"சைலேந்திரி, அதோ பார்!" என்று சிறு குழந்தைபோல் கூவினார் பெரியவர்.

சற்றுத் தொலைவில் நின்று கொண்டிருந்த நரேந்திரனுக்கும், "சைலேந்திரி, சைலேந்திரி மீண்டும் உன்னை எப்போது சந்திக்கப் போகிறேன்" என்று கவலையும், வருத்தமும் தோய்ந்த குரலில் அவளைக் கேட்கவேண்டும்போல் தோன்றியது.

# 2

கடல்மல்லைத் துறையில் இறங்கியவுடன் சுற்றும் முற்றும் பார்த்த சைலேந்திரி, தனக்கு ஏற்பட்டது வியப்பா, அதிர்ச்சியா என்று அவளுக்குப் புரியவில்லை. மரக்கலத்திலிருந்து பார்த்தபோது நிழலுருவமாகத் தெரிந்த தலசயனக் கோயில், அவர்கள் கரை இறங்கிய இடத்திலிருந்து சற்றுத் தொலைவில் இருந்தது.

பரதவர்கள் வாழும் குடிசைகளும், பண்டங்களைச் சேமித்து வைக்கும் பெரிய கல் கட்டடங்களையும் தாண்டி நகரத்திற்குள் நுழைந்தவுடனேயே மாமல்லையின் வளமும், செழிப்பும் பல வகைகளில் தென்பட்டன.

சாலையில் புத்தாடை அணிந்து பெண்களும் ஆண்களும் மகிழ்ச்சியுடன் பேசியவாறு சென்று கொண்டிருந்தனர். பெண்கள் விலையுயர்ந்த ஆபரணங்களைப் பூண்டிருந்தனர். சிலருடைய பாதங்களைத் தங்கச் சிலம்புகள் அணி செய்தன.

மயில்தோகை போன்ற நீண்ட கூந்தலை உடைய பெண்களையும் அவர்கள் ஆடவர்களுடன் கை கோத்துப் பேசிச் செல்வதையும் பார்க்கப் பார்க்க சைலேந்திரிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தவாறு மெல்ல நடந்தாள்.

மரக்கலத்திலிருந்து இறக்கப்பட்ட பண்டங்களைச் சுமந்து, இரட்டை மாட்டு வண்டிகளும், குதிரைகள் பூட்டப்பட்டு இழுக்கும் வண்டிகளும் சாலையில் சென்றன.

யானைகள் அசைந்தாடிச் சென்றன. வெள்ளைக் குதிரைகள் மீது வீரர்கள் அமர்ந்து ரிஷபக் கொடியை ஏந்தி விரைந்து சென்றனர்.

பெரியவரும், சைலேந்திரியும் நடக்க, அவர்கள் கொண்டு வந்த பண்டங்களைச் சுமந்துகொண்டு, பணியாளர் ஒருவன் அவர்களைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான்.

"சைலேந்திரி, உன் வீணையை அவனிடம் கொடுக்காமல் நீயே எடுத்து வருகிறாயே, கைகள் நோகாவா?" என்று பெரியவர் கேட்டார். "மிகவும் பயபக்தியுடன் எடுத்து வர வேண்டிய பூசைப் பெட்டியைக்கூட நான் சுமை தூக்குபவனிடம் கொடுத்திருக்கிறேன்" என்றார்.

"நீங்கள் பூசிக்கும் தேவியைவிட, இந்த வீணையை நான் மிக பயபக்தியுடன் வணங்குகிறேன். நான் வேறு, கலை வேறு இல்லை. நானே தூக்கி வருவதுதான் மரியாதை. இதில் எந்தவிதத் துன்பமும் இல்லை" என்றாள் சைலேந்திரி, வீணையைக் குழந்தையைப்போல் அணைத்தவாறு.

அவள் களைத்திருந்தாள். மரக்கலம் மாமல்லைக் கரையை அடையப் போகிறது என்பதை அறிந்த முதல் நாளிலிருந்தே பயணிகள் பரபரப்புடன் தங்கள் பொருள்களை எடுத்து வைத்துக்கொள்ளத் தொடங்கினர். பயணிகளுக்கு உணவு கொடுப்பதும் நிறுத்தப்பட்டது.

நரேந்திரன் மேலாடை கொண்டு மறைத்தவாறு ஒரு பாத்திரத்தில் கஞ்சி கொண்டு வந்தான். பொழுது நன்றாகப் புலர்ந்து விட்டது.

"பெரியவரே, இன்று தேவி பூசை இல்லையா?"

"நரேந்திரா, உன்னைத்தான் எதிர்பார்த்திருந்தேன். பூசைப் பாத்திரங்கள், தேவியின் சிலை எல்லாம் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிவிட்டேன். மிகவும் கவனமாக அவற்றை நான் கொண்டு செல்ல வேண்டும்" என்றார்.

மேலாடை கொண்டு மறைத்திருந்த பாத்திரத்தை வெளியே எடுத்தான் நரேந்திரன். ஆவி பறக்கும் கஞ்சி.

"இதோ கஞ்சி; அருந்துங்கள். இனி இந்தக் கப்பலில் குடிக்கக் கூடத் தண்ணீர் கிடைக்காது. மற்றவருக்குத் தெரியாமல் இதை எடுத்து வந்தேன்" என்று கூறி, அந்தப் பாத்திரத்தை சைலேந்திரியிடம் நீட்டினான்.

பெரியவருக்குச் சற்று எரிச்சல்தான். தன்னிடம் தராமல் அவளிடம் அதைக் கொடுக்கிறான்; 'மரியாதை தெரியாதவன்' என்று முணுமுணுத்துக் கொண்டார்.

"நொய்க் கஞ்சி. ஆகா! தேவ அமுதம் போலிருக்கிறது!" என்றாள் சைலேந்திரி, ஒரு வாய் பருகியபடி.

"பசி வேளையில் எல்லாம் அமுதம்தான்!" பெரியவர் அவனை எரிச்சலுடன் நோக்கினார்.

அவனை நேருக்கு நேர் அவள் பார்த்துப் பேசுவது இதுவே முதல் தடவை. விழிகளும் இதழ்களும் மெல்ல நகைத்துக் கொண்டன.



'சைலேந்திரி மீண்டும் உன்னுடன் பேச வாய்ப்பு கிடைக்குமா?' என்ற ஆவல் அவனிடமும் எழுந்தது.

"கரை இறங்கியவுடன் மாமல்லையில் தங்கிப் பிறகு உங்கள் ஊருக்குச் செல்லப் போகிறீர்களா?"- நரேந்திரன் பெரியவரைப் பார்த்துக் கேட்டான்.

அந்தக் கேள்விக்கு விடை கிடைத்தால், அவர்களைப் பற்றிப் பல செய்திகளை அறியலாம்.

சைலேந்திரி பருகிவிட்டு, மீதியைப் பெரியவரிடம் கொடுத்தாள்.

நரேந்திரன் கேட்ட கேள்விக்கு சைலேந்திரியே விடை கூறினாள். அவனுடன் ஏதாவது பேச வேண்டும். நல்ல வாய்ப்பு. இவ்வளவு நாள்கள் அவள், அவனை அலட்சியப்படுத்தியது உண்மைதான்.

"ஒருநாள்கூடத் தாமதிக்காமல் காஞ்சிபுரம் செல்ல வேண்டும் என்பதுதான் என் திட்டம்" என்றாள் சைலேந்திரி.

"காஞ்சிபுரத்தில் உங்களுக்கு உறவினர்கள் யாராவது இருக்கிறார்களா?"

"இருந்தார்கள். இப்போது இருக்கிறார்களா என்று தெரியாது. முகவரி ஒன்றை என் தாய் கொடுத்துள்ளாள்."

அவர்கள் இருவருடைய உரையாடல் தொடர்வதைக் கேட்கச் சகிக்காத பெரியவர், "இல்லை, இல்லை. எங்கள் திட்டமே வேறு" என்று கூறி, கஞ்சிப் பாத்திரத்தை அவனிடம் நீட்டி, "தேவ அமுதம் போலிருக்கிறது. இன்னும் இருந்தால் பருகலாம்..." என்றார்.

"பசி வேளையில் எல்லாம் அமுதம்தான்" என்றாள் சைலேந்திரி மெல்ல நகைத்தவாறு. நரேந்திரன் சிரித்திருக்கக்கூடாது. பசிக்குக் கஞ்சி கொடுத்தானே என்ற நன்றிகூட இல்லாமல் பெரியவர் கடுமையாக நோக்கினார்.

"நங்கூரம் பாய்ச்ச அதோ ஆட்கள் வந்துவிட்டார்கள். இனி நான் இங்கே தாமதிக்கக்கூடாது" என்றான் நரேந்திரன்.

"நீங்கள் எல்லாம் உடனே கரை இறங்கிவிடுவீர்கள். நான் கரைக்கு வர இரண்டு நாள்களாவது ஆகும்" என்றான் நரேந்திரன், சைலேந்திரியை நோக்கியவாறு.

கலத்தின் அடித்தளத்திலுள்ள சமையற்கூடத்திற்கு அவன் சென்றுவிட்டான். நரேந்திரன் செல்வதை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். கீழ்த்தளம் செல்லும் படிக்கட்டுகளில் இறங்கு முன்பு, அவன் ஒரு முறை திரும்பிப் பார்த்தான். அவள், தன்னைப் பார்த்தவாறு நிற்கிறாள்

என்பது அவனுக்கு ஒரு சுக அனுபவமாக இருந்தது. அவன் திரும்பிப் பார்ப்பான் என்று நினைத்தாள். அப்படியே நடந்தது.

பாய்களை இறக்கிச் சுருட்டிக் கட்ட முயல்பவர்களும், பெரும் இரைச்சலுடன் நங்கூரத்தைக் கடலில் பாய்ச்ச முயல்பவர்களுமாக மேல்தளத்தில் கலத்தின் அத்தனைப் பணியாளர்களும் கூடிவிட்டனர்.

மரக்கலத்திலிருந்து சிறு படகில் இறங்கினார்கள். படகு கரையை அடைந்தது. அவர்கள் கொண்டுவந்த பொருள்களைக் கரையில் சேர்த்தது. சிலர் உறவினர் அவரவரது பொருள்களைச் சுமந்து செல்ல, இளைஞன் ஒருவன் வந்தான்.

"தலசயனக் கோயிலுக்குச் செல்ல வேண்டும்" என்றார் பெரியவர், சுமைகளைச் சுமந்து வருபவனை நோக்கி.

"இந்த வழியேதான் செல்ல வேண்டும்" என்றான் சுமைதூக்கி.

"அதிக தொலைவோ? கப்பலிலிருந்து பார்த்தபோது, கோயிலின் அருகே கரை இறங்கப் போகிறோம் என்று தோன்றியது" என்றார் பெரியவர்.

"இந்த நாட்டிற்குப் புதியவரோ தாங்கள்?" என்று கேட்டான் சுமைதூக்கி.

"எதைக்கொண்டு அப்படிக் கேட்கிறாய்?"

"கப்பலிலிருந்து இறங்குவோர், நகரத்திற்குள் உடனே செல்ல மாட்டார்கள். கரையருகே வணிகர்கள் விடுதியிருக்கிறது. நானாதேயத்தார் விடுதி இருக்கிறது. அவரவர்களுக்கு விருப்பமான இடத்தில் தங்கி இளைப்பாறித்தான் புறப்படுவார்கள். அதனால் கேட்டேன்."

"எனக்குத் தெரியாமல் போய்விட்டது. நீயும் எனக்கு யோசனை சொல்லவில்லை. கடற்கரை அருகே தங்க இடம் இருக்கிறதா?" என்று சுமைதூக்கியிடம் கேட்டார் பெரியவர்.

"நீங்கள் எங்கே செல்லப் போகிறீர்கள் என்பது எனக்கு எப்படித் தெரியும்? பூஞ்சேரிக்குச் செல்கிறீர்கள் என்று எண்ணினேன். கூண்டு வண்டியொன்றை ஏற்பாடு செய்து விடலாம் என்று நினைத்தேன்."

"பூஞ்சேரியா! அங்கே நாங்கள் செல்லக்கூடும் என்று நீ நினைக்கக் காரணமென்ன?" என்று பெரியவர் கேட்டார்.

"தலைச்சுமையின் பாரம் அழுத்த, அவன் பேச முடியாமல் திணறுகிறான். நீங்கள் அவனிடம் கேள்வி மேல் கேள்வி கேட்கிறீர்கள். காஞ்சிபுரம் செல்ல வழி கேட்காமல், வேறு ஏதேதோ அவனைக் கேட்டுத் தொல்லைப்படுத்துகிறீர்கள்?" என்று சைலேந்திரி.....



"நாம் இப்போது காஞ்சிபுரம் செல்லப் போவதில்லை; மாமல்லபுரத்தில் சிலரைச் சந்திக்க வேண்டும்" என்றார் பெரியவர்.

"என்னிடம் சொல்லவில்லையே? என் தாய் தங்களிடம் சொல்லி அனுப்பியபடி செய்யுங்கள்; திட்டத்தை மாற்றாதீர்கள்" என்றாள் சைலேந்திரி சற்றுக் கடுமையாக, ஆனால் மெதுவாக, அவர்களுக்கிடையே பிணக்கு இருப்பதை சுமையாளிடம் புலப்படுத்த விரும்பாமல்.

"சைலேந்திரி, பல்லவ நாட்டிற்கு வந்துவிட்டோம். இங்கு நான் சொல்வதை நீ கேட்க வேண்டும். உன் அம்மா என்ன சொல்லியிருக்கிறாள், நினைவிருக்கிறதா? 'சைலேந்திரி, பெரியவர் உன் பாட்டனாரைப் போல. நீ புதிய இடத்திற்குச் செல்கிறாய். புதிய இடம் மட்டுமன்று; புதிய நாடு என்று சொன்னதை மறந்து விட்டாயா?"

சைலேந்திரி மறக்கவில்லை. விழிகளில் நீர்மல்க, பிரியாவிடை கொடுத்து, தன் தாய் கூறிய அறிவுரைகளை அவள் மறக்கவில்லை. ஆரத்தழுவி, உச்சி முகர்ந்து, முதுகை அன்புடன் வருடியபோது ஒரு சொட்டுக் கண்ணீர் தன் கன்னத்தில் வீழ்ந்ததை அவள் மறக்கவில்லை. அந்தக் கணத்தை, தாய்ப் பாசத்தின் பிரதிபலிப்பாக அமைந்த அந்தக் கணத்தை தாயைப் பிரிந்து பல்லவ நாட்டிற்குச் சென்றுதானாக வேண்டுமா? என்றுகூட ஒரு கணம் எண்ணினாள்.

"அம்மா, உன்னை விட்டுப் பிரிந்து கண்காணாத நாட்டில் நான் எப்படி அம்மா இருப்பேன்? இந்தப் பயணம் தேவைதானா?" என்று கேட்டு விம்மினாள்.

தான் கண் கலங்குவதால்தான், தன் மகள் சைலேந்திரி உணர்ச்சி மிகுதியால், பிரிவாற்றாமையால் வருத்துகிறாள் என்று எண்ணிய சைலேந்திரியின் தாய், தன் விழி நீரைத் துடைத்துக்கொண்டு, பாசத்தை அடக்கிக்கொண்டு, "என் அறிவுதான் மங்கிவிட்டது என்றால், உன் கலைத் தாகமும் வற்றிவிட்டதா? மகளே! இந்த நாட்டில் உன் கலைப் புலமையை வளர்க்கத் தகுந்த கலைஞர்கள் இல்லை, வீணை வாசிப்பதில் மிகுந்த திறமை பெறுவதற்காக மட்டுமா பல்லவ நாட்டிற்குச் செல்கிறாய்? மற்றுமொரு முக்கிய செய்தியை உன்னிடம் நான் தெரிவித்ததை அதற்குள் மறந்துவிட்டாயா?" என்று கேட்டாள். முன்பிருந்த துயரம், தாயின் குரலில் இல்லை. உறுதி இருந்தது.

தாயின் குரல், அவளுக்குப் புத்துணர்வை அளித்தது. கலை மேதையாவதற்கு மட்டும் பல்லவ நாட்டிற்குச் செல்லவில்லை; அதைவிட மிக மிக முக்கியமான செய்தி ஒன்றைத் தாய் சொல்லியிருக்கிறாள். அதை நிறைவேற்றியாக வேண்டும்.

என்ன செய்தி? தன் தந்தையை எப்படியாவது கண்டுபிடித்தாக வேண்டும்.

அது பெரியவருக்குத் தெரியும். அதனால் பெரியவர் சொல்லை அவளால் தட்ட முடியவில்லை.

"சரி, பாட்டா" என்று தலையசைத்து, "போகுமிடத்தை அவனிடம் சொல்லுங்கள்; இனியும் தாமதப்படுத்த வேண்டாம்" என்றாள்.

"வெற்றிப் பெருமிதத்தில், பாரம் சுமப்பவனை நோக்கி, "தலசயனப் பெருமாள் கோயில் அருகே செல்ல வேண்டும்" என்றார்.

"பெரியவரே! அவ்வளவு தொலைவு என்னால் சுமந்தபடி நடக்க முடியாது. உங்களுக்கு ஓர் குதிரையும், உங்கள் பெயர்த்திக்கு ஒரு சிவிகையும் ஏற்பாடு செய்து தருகிறேன்" என்றான்.

"அதெல்லாம் வேண்டாம்; பார்த்தால் இளம் வயதினனாக இருக்கிறாய்! எங்கள் பொருள்கள் அப்படி ஒரு கனமா? சுமப்பது சிரமமா?" என்று கோபமாகப் பேசினார்.

சாலையின் ஓரம் நின்று விவாதித்துக் கொண்டிருக்கும்போது, வெண்புரவியின் மீதமர்ந்த நடுத்தர வயதுடையவன் அவர்களை மிக அருகே கடந்து சென்றான். சிறிது தொலைவு சென்றவன், மீண்டு திரும்பி வந்து பெரியவரை நோக்கி, "காம்போஜத்திலிருந்துதானே வருகிறீர்கள்?" என்று கேட்டான். பெரியவரைப் பார்த்துக் கேட்கும்போதே அவனது பொல்லாத விழிகள், அருகே நின்ற சைலேந்திரியை விழுங்கி விடத் தவறவில்லை. சைலேந்திரி குதிரை மீது அமர்ந்திருந்தவனைப் பார்க்க விரும்பாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"காம்போஜத்திலிருந்து நாங்கள் வருகிறோமென்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று பெரியவர் வியப்புடன் கேட்டார்.

குதிரை வீரன் சிரித்தான். அந்தச் சிரிப்பில் கபடம் நிறைந்திருப்பதாக அவளுக்குத் தோன்றியது.

# 3

நந்தீசப் பெருமாளைப் பார்த்தவுடன், சுமைதூக்கி மரியாதையாக ஒதுங்கி நின்றான். தலையில் இருந்த சுமை அவனை அழுத்தியது.

நந்தீசப் பெருமாள், மாமல்லைக் கடல் துறையில் இறங்கும் அயல்நாட்டுப் பண்டங்களைக் கணக்கெடுத்து, சுங்கம் விதிக்கும் குழுவின் தலைவர். அத்துடன், மாமல்லையைச் சுற்றிலுமுள்ள ஊர்களில் பயிரிடப்படும் மருக்கொழுந்துக்கு வரி விதிப்பு அதிகாரி.

மருக்கொழுந்து, கடல் கடந்த நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்குக் கொண்டு வந்து பயிரிடப்பட்ட நறுமணச்செடி.

மாமல்லபுரக் கடற்பகுதியை ஒட்டி அமைந்திருந்த வணிகர்களும், செல்வந்தர்களும் வாழும் நகரப் பகுதியில் அவனைக் கண்டால் மரியாதை அதிகம். அந்த மரியாதை அச்சத்தின் அடிப்படையில் ஏற்பட்டது.

நந்தீசன் சாதாரண குதிரை வீரன் அல்லன்; அவன் மாமல்லை நகரத்துப் பெரிய அதிகாரி என்பதைப் புரிந்து கொண்டாள்.

காம்போஜத்திலிருந்து தாங்கள் வருவதை அவர் எப்படித் தெரிந்து கொண்டார் என்று வியப்புடன், பெரியவர் அவனை நோக்கினார்.

"இப்போது நங்கூரம் பாய்ச்சி நிற்கும் கலம் காம்போஜத்திலிருந்து வருகிறது. அதிலிருந்து இறங்கியுள்ள நீங்கள் காம்போஜத்திலிருந்து வராமல் வேறு எந்த நாட்டிலிருந்து வந்திருக்க முடியும்!" என்று கூறி மீண்டும் சிரித்தான் நந்தீசன். அவன் சிரிப்பதற்கு இடம், பொருள், காலம் ஏதும் கிடையாது.

அவனுடைய கரிய மேனியும், அடர்ந்த கரிய மீசையும், அவற்றிற்கிடையே சிரிக்கும்போது பளிச்சிடும் வரிசையான பற்களும் அச்சத்தைத் தான் அளித்தன. கவனித்தும் கவனிக்காதவள்போல் திரும்பிக் கொண்டாள் சைலேந்திரி.

நடு வீதியில் நின்று பேசுவது சைலேந்திரிக்குப் பிடிக்கவில்லை. தவிர நந்தீசனின் பார்வையும் சரியில்லை என்பதை உணர்ந்தாள்.

"பாட்டா, போகலாம் வாருங்கள்" என்று எரிச்சலுடன் கூறினாள் சைலேந்திரி.

நந்தீசன் மீண்டும் சிரித்தான். "பாட்டா, கோபப்படும்போதுகூட உங்கள் பெயர்த்தி அழகாய்த்தானிருக்கிறாள், உம்" என்று அவளைப் புகழ்வதன் மூலம், அவள் கவனத்தைத் தன் வசம் இழுக்க முயன்றான். மீண்டும் சிரித்து, சுமை தூக்குபவனைப் பார்த்து, "ஏய், இவங்களை எங்கே அழைத்துச் செல்வது? இரட்டை மாட்டு வண்டி ஒன்றை ஏற்பாடு செய்திருக்கக் கூடாது? முட்டாள்" என்று கடிந்து கொண்டான்.

அவன் பயத்துடன், பெரியவரைச் சுட்டிக்காட்டி, "அவர்தான் சொன்னார்- தலசயனப் பெருமாள் கோயிலுக்கருகே போகச் சொல்கிறார். நீங்களே சொல்லுங்கள் ஐயா. அவ்வளவு தொலைவு தலைச் சுமையுடன் எப்படி நடக்க முடியும்?" என்றான்.

நந்தீசன் மீசையை மெல்லத் தடவிக் கொண்டான் என்றால், ஏதோ தீவிரமாகச் சிந்திக்கிறான் என்று பொருள்.

"சரி, சென்றுகொண்டே இருங்கள். இதோ வருகிறேன்" என்று சொல்லிக் குதிரை மீது எங்கோ பறந்தான். சிறிது நேரத்தில் சாலையில் ஒரு சிவிகையும், குதிரையை நடத்திக் கொண்டு வீரனொருவனும் அங்கே வந்தனர்.

சிவிகையை இறக்கினார்கள் சிவிகையைச் சுமப்பவர்கள். குதிரை வீரன் பெரியவருக்கு வணக்கம் தெரிவித்து, "தங்கள் பெயர்த்தியைச் சிவிகையில் அழைத்து வருமாறு உத்தரவு. நீங்கள் இந்தக் குதிரையில் ஏறிக்கொள்ளுங்கள்" என்றான். குரலில் பணிவு இருந்தது.

"யார் சொன்னார்கள்?" என்று பெரியவர் வியப்புடன் கேட்டார்.

"பெருமாள் அய்யா அவர்கள் சொன்னார்கள்."

"எங்கே அழைத்துப் போகிறீர்கள்?"

"பூஞ்சேரிக்கு."

"பூஞ்சேரியா?" – சைலேந்திரியின் விழிகள் விரிந்தன.

பெரியவர், சைலேந்திரியின் பக்கம் திரும்பி, "பூஞ்சேரியை நீ முன்பே அறிவாயோ?" என்று கேட்டார்.

"என் தாய் சொல்லியிருக்கிறாள். பூஞ்சேரி ஓர் அழகிய கிராமம். தென்னந்தோப்புகளும், மாஞ்சோலைகளும் சூழ்ந்திருக்கும் அந்தக்



கிராமத்தில் இசை அறிஞர் ஒருவர் இருக்கிறார். அவர் ஸப்தஸ்வரங்களுடன் கூடிய வீணையை மீட்டுவதில் வல்லவர். அவர் வீணையை மீட்டிய வாறு பாடுவதை இன்றைக்கெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கலாம் என்று சொல்லியிருக்கிறாள். அவர் பெயர் என் அருமைத் தாய்க்கும் நினைவில்லை" என்று சைலேந்திரி விவரித்தாள்.

குதிரை வீரன் குறுக்கிட்டு, "நீங்கள் குறிப்பிடுபவர் வீட்டிற்குத் தான் பெருமாள் ஐயா அவர்கள் தங்களை அழைத்துச் செல்லுமாறு சொன்னார்கள்" என்றான்.

"இவள் சிறு பெண். இவளுக்கு ஊரைத் தெரிகிறது; பெயரைத் தெரியவில்லை. அவள் நினைத்திருக்கும் அந்த இசைப் பேரறிஞர் வீட்டைப் பற்றி பெருமாள் ஐயாவுக்கு எப்படித் தெரியும்? அல்லது உனக்குத்தான் தெரியுமா? போங்கள்- போங்கள். ஊருக்குப் புதியவர்கள்– அதிலும் கிழவன், சிறு பெண்- என்று எங்களை ஏமாற்றப் பார்க்கிறீர்களா?" என்று கூறி, வேகமாக நடக்கத் தொடங்கினார் பெரியவர்.

குதிரை வீரனுக்கு மெல்லக் கோபம் வந்தது. "என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்! புதிதாக உருவாக்கப்பட்ட வீணையில் சில ஆராய்ச்சிகள் செய்வதற்காக தங்கள் பெயர்த்தி கடல் கடந்து வந்திருக்கிறார்கள். நீங்கள் வருவது பல்லவ அரசருக்குத் தெரியும். பல்லவ மன்னர் சொல்லாமலா எங்கள் ஐயா உங்களை அழைத்து வரச் சொல்லியிருக்கிறார்! எங்கள் ஐயாவின் வார்த்தையை இதுவரையில் தட்டியவர்கள், தடுத்தவர்கள் யாருமே இல்லை. மீறுபவர்களுக்கு நேரும் கதியை நினைத்தாலே எனக்கு நடுக்கமாக இருக்கிறது. ஹூம்... எனக்கு எதற்கு வீண் பேச்சு? நாங்கள் போகிறோம்" என்று சொல்லி அங்கிருந்து புறப்பட ஆயத்தமானான்.

சைலேந்திரி, பெரியவரைப் பார்த்துச் சீறினாள்: "நீங்கள் என்னதான் மனத்தில் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? என் தாயிடம் நீங்கள் கொடுத்த வாக்குறுதி என்ன? இப்போது நடந்துகொள்ளும் முறை என்ன? கப்பலிலிருந்து இறங்கியவுடனேயே காஞ்சிபுரம் சென்று விடுவோம், என் தாய் குறிப்பிட்ட வீணைக் கலைஞரைத் தேடிப் பிடித்து என்னை ஒப்படைத்து விடுவதாக ஒப்புக் கொண்டீர்கள். அங்கே யார் இருக்கிறார்கள்? அவர்கள் பூஞ்சேரிக்கு அழைக்கிறார்கள்; அங்கு வர முடியாது என்கிறீர்கள். பூஞ்சேரியைப் பற்றி என் தாய் குறிப்பிட்டிருக்கிறாள். அது எங்கிருக்கிறது என்று சொல்லவில்லை. புதிய நாட்டில் நடுத் தெருவிலேயே விவாதம் செய்து பொழுதைக் கழிக்க முடிவு செய்துவிட்டீர்களா?"

சைலேந்திரி பிடிவாத குணமுடையவள் என்றுதான் பெரியவர் அறிவார். ஆனால், அவளுக்குக் கோபமும் வரும் என்பதை அப்போதுதான் உணர்ந்தார்.

"சைலேந்திரி, பசி, களைப்பு வேளையில் உனக்குக் கோபம் வருவது நியாயமே! நாம் காஞ்சிபுரம் செல்லத்தான் போகிறோம். கூப்பிடு தொலைவிலா காஞ்சி இருக்கிறது? அங்கு செல்வதற்கு வேண்டிய பயண வசதிகளைச் செய்து கொண்டுதானே புறப்பட வேண்டும்! தலசயனப் பெருமாள் கோயில் அருகே சிற்பி ஒருவர் இருக்கிறார். நம் நாட்டிலுள்ள அவருடைய உறவினர்கள் செய்தி ஒன்று சொல்லி அனுப்பியிருக்கிறார்கள். அங்கே சென்று தங்கிப் பிறகு காஞ்சிபுரம் செல்ல நினைத்தேன். பூஞ்சேரியைப் பற்றி எனக்குத் தெரியாது. புதிய ஊர். முன்பின் தெரியாத இடத்திற்குச் செல்வது சரியா?" என்று நயமாக விளக்கினார் பெரியவர்.

குதிரை வீரனும், சிவிகை சுமப்பவர்களும், அவர்கள் விவாதிப் பதைக் கேட்டவாறு நின்று கொண்டிருந்தனர். தலைச் சுமையைக் கீழே இறக்கி வைத்து விட்டான் சுமைதூக்கி. சாலையில் செல்பவர்கள் தங்களை உற்றுப் பார்த்துச் செல்வது சைலேந்திரிக்கு வேதனையை அளித்தது. அவமானமாகவும் இருந்தது.

நந்தீசன் மீண்டும் அங்கு வந்து விட்டான். சிவிகை சுமப்பவர்களையும், குதிரை வீரனையும் கடிந்து கொண்டான். சாட்டையடி விழாததுதான் பாக்கி.

பெரியவருக்கும் சைலேந்திரிக்கும் நடந்த விவாதத்தை அறிந்த நந்தீசன், சைலேந்திரியின் அருகே வந்து, "பெண்ணே! உனக்குக் காஞ்சிபுரம் செல்ல வேண்டும்; அவ்வளவுதானே? பூஞ்சேரியில் இசைப் பேரறிஞர் வீட்டிற்குச் சென்ற பிறகு, காஞ்சி செல்வது மிக எளிது. உன் இசை ஆர்வத்தைப் பற்றி முன்பே செய்தி கிடைத்துவிட்டது. பல்லவ மன்னருக்கு மிக நெருங்கியவர் அவர். எந்த நோக்கத்தோடு நீ பல்லவ நாட்டிற்கு வந்திருக்கிறாயோ, அந்த நோக்கம் நிச்சயம் அந்த மேதையால் நிறைவேறும்" என்று கூறினான். சைலேந்திரியிடம் ஏற்படும் மாறுதலையும் மெல்லக் கவனித்தான்.

நந்தீசனைப் பார்க்கவே பிடிக்காதிருந்த சைலேந்திரி, மெல்ல அவனை நோக்கி, "நடு வீதியில் நின்று பேச எனக்குப் பிடிக்கவில்லை. நாள் முழுவதும் இப்படியே நின்று அவர் பேசிக்கொண்டிருப்பார்" என்று பெரியவரைப் பார்த்துப் பேசினாள்.

நந்தீசன் நகைத்தான். மீசையைத் தடவிக் கொண்டான். சிவிகை சுமப்பவர்களை அழைத்தான். கீழே வைக்கச் சொன்னான்.

"பெண்ணே! சிவிகையில் நீ ஏறிக் கொள்" என்றான். பெரியவரை நோக்கி, "பெரியவரே! உங்களை நடக்க வைக்கக்கூடாது. குதிரை மீதமர்ந்து வருவீர்களல்லவா? குதிரையைச் செலுத்திப் பழக்கமில்லை என்றால், கவலை வேண்டாம். தைரியமாக ஏறி அமர்ந்து கொள்ளுங்கள்.



குதிரை வீரன் குதிரையுடன் நடந்து, உங்களைக் கவனித்துக் கொள்வான்" என்றான் சட்டளையிடும் குரலில்.

பெரியவரால் ஏதும் பேச முடியவில்லை. நந்தீசன் பார்வையே சுடுமையாக இருந்தது.

சைலேந்திரி வீணையுடன் சிவிகையில் அமர்ந்தாள்.

பெரியவர் விருப்பமில்லாமல் குதிரைமீதமர்ந்தார். அவருக்குக் குதிரை ஏறிப் பழக்கமுண்டு. ஏறி அமர்ந்தவுடன் குதிரை பறந்தது.

"ஓ! ஓ" என்று பெரியவர் அலறினார். "என் பூசைப் பெட்டி. ஐயோ, சைலேந்திரி..." என்று அவர் கூக்குரலிட்டார். காற்றில் கரைந்தது அவரிட்ட ஓலம். நந்தீசன் மீண்டும் சிரித்தான்.

சிவிகையில் வரும்போது சைலேந்திரி கண்ணயர்ந்து விட்டாள். சாலையின் இருபுறமும் உள்ள நிழல் தரும் மரங்களும், அருகிலுள்ள ஏரி, குளங்களிலிருந்து தவழ்ந்து வரும் குளிர்ந்த காற்றும், வெயிலின் கடுமையைத் தணித்தன.

சைலேந்திரி கண் விழித்தபோது, சிவிகையை இறக்கி வைத்திருந்தார்கள். திரையை விலக்கிப் பார்த்தாள். தோட்டமும், தோட்டத்தின் நடுவே சிறு மாளிகை போன்ற வீடும் தெரிந்தன.

சைலேந்திரி வீட்டிற்குள் நுழைய முதலில் தயங்கினாள். ஆனால், அவளை அன்புடன் வரவேற்ற பெண்ணின் இனிய குரலும், அன்றலர்ந்த மலர் போன்ற அவள் முகமும் அவளுக்குத் துணிவை ஏற்படுத்தின.

அவள் அங்கு வருவாள் என்பதை முன்பே அறிந்தவள்போல், அந்தப் பெண் அவளுக்கு தங்க ஓர் அறையைக் காட்டினாள். பிறகு குளிப்பதற்கு அருகிலிருந்த குளத்தைக் காட்டினாள்.

புறக்கடைத் தோட்டத்தில் சிறு குளம். இறங்கிக் குளிப்பதற்கு வசதியாக இருந்தது. கரையிலிருப்பவர்கள் நீராடுபவர்களைக் காண முடியாத வடிவமைப்பு. படிக்கட்டில் அமர்ந்தும், தண்ணீரில் அமிழ்ந்தும், நீந்தியும் ஆசை தீரக் குளித்தாள்.

குளித்துவிட்டு நுழையும்போது, வீணை மீட்டும் ஒலி வீட்டிற்குள்ளே ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.

"வீணையை யார் மீட்டுகிறார்கள்?" – சைலேந்திரி பரபரப்புடன் அருகே இருந்த பெண்ணைக் கேட்டாள். நடுத்தர வயதுடைய அந்தப் பெண் முகத்தில் இப்போது பெரிய மாற்றம் தெரிந்தது.

"இந்த வீட்டில் வேறு யார் வீணை வாசிப்பார்கள்... உனக்குத் தெரியாதா? பரமகுருதான்."

சைலேந்திரி முன் கூடத்திற்குச் செல்ல முற்பட்டாள். அந்தப் பெண் அவளைத் தடுத்து, இப்போது நீ அங்கே போகக்கூடாது. இலையில் உணவு பரிமாறப்பட்டிருக்கிறது. பசியாறிய பிறகு ஓய்வு எடுத்துக்கொள். பிறகு அவரே சொல்லியனுப்புவார். அப்போது போகலாம்'' என்றாள்.

அவள் பேசும் கொச்சைத் தமிழில் பிராகிருதம் கலந்திருந்தது. சைலேந்திரிக்கும் தமிழ் பேசுவதில் தடுமாற்றமுண்டு.

"அக்கா, நான் ஓரளவுக்கு வீணை வாசிப்பேன். வீணையின் நாதத்தைக் கேட்கும்போது பசி தாகம் பறந்தோடி விடுகிறது. நான் கையோடு வீணையைக் கொண்டு வந்திருக்கிறேன். நீராடியவுடன் வீணையை வணங்கி, அதை ஸ்பரிசித்த பிறகுதான் மற்ற காரியங்கள்'' என்றாள். வயதில் அவளுடைய சகோதரிபோல் இருந்ததால் 'அக்கா' என்றே அவளை அழைத்தாள்.

"ஓ, நீயும் வீணைப் பைத்தியமா? அதனால்தான் இங்கு வந்திருக்கிறாயா! எப்படி இருந்தாலும் நீ பரமகுரு எதிரே இப்போது போகக்கூடாது. அவர் மிகவும் கோபக்காரர். சரி, சரி, உன் வீணையைக் கொண்டு வருகிறேன். அதைத் தொட்டுக் கும்பிட்டுப் பசியாறி இளைப்பாறு. பரமகுரு உன்னைச் சந்திக்க எப்போது விரும்புகிறாரோ அப்போது அழைக்கிறேன்'' என்றாள். குரலில் கண்டிப்பு, கடுமை, ஏளனம் எல்லாம் கலந்திருந்தன.

அவளிடம் மேலும் பல செய்திகளை அறிய விரும்பி, "அக்கா'' என்று அழைத்தாள் சைலேந்திரி.

அவள் அங்கு இல்லை. வாழை இலையில் சுடச்சுட சோறு பரிமாறப்பட்டது. இருபது நாள்களுக்கு மேல் கப்பலில் கிடைத்த உணவை உண்டவளுக்கு, கடைசியாகக் காலையில் நொய்க் கஞ்சியைக் குடித்து 'அமுதம்' என்று ஆனந்தப்பட்டவளுக்கு, அந்த விருந்து தேவலோக விருந்தாகவே தோன்றியது. அப்போதுதான் பெரியவரின் நினைவு அவளுக்கு வந்தது.

"அக்கா, அக்கா'' என்று அழைத்தாள். "என்னுடன் வந்த பெரியவர் எங்கே? அவர் பசியாறிவிட்டாரா? அவருடைய ஆடைகள் எல்லாம் எங்கு இருக்கின்றன?'' என்று பரபரப்புடன் கேட்டாள்.

அந்தப் பெண், சைலேந்திரியை வியப்புடன் நோக்கினாள். "பெரியவரா? யார் அவர்? அப்படி ஒருவரும் இங்கு வரவில்லையே'' என்றாள்.

# 4

பெரியவர் கண் விழித்துப் பார்த்தார். குடிசையின் வெளியே மர நிழலில் அவரை ஓர் கயிற்றுக் கட்டிலில் கிடத்தியிருந்தார்கள். சுற்றிலும் அடர்ந்திருந்த வேப்ப மரங்களின் நிழலும், வீசும் காற்றும் கடுமையான வெயில் வேளையில் அவர் களைப்பைப் போக்கின. எங்கிருக்கிறோம் என்று அவருக்குத் தெரியவில்லை; கட்டிலிலிருந்து அவர் எழ முயன்றார், முடியவில்லை. காலை அசைக்கமுடியவில்லை. உடல் எங்கும் வலி, நாக்கு வறண்டிருந்தது. பசியைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். வயிறு, தன் கடமையைச் செய்தது. அதன் புரட்சியை வெல்ல அவரால் முடியவில்லை.

'அம்மா' என்று குரல் கொடுத்தார். வேதனை நிறைந்த வேளையில் நாள்தோறும் அவர் வணங்கும் உலக நாயகியாம் அம்மாவை அழைப்பதைத் தவிர வேறு ஒன்றும் அவருக்குத் தெரியவில்லை.

அங்கே குடிசைக்குள்ளிருந்து 'அம்மா' வெளியே வந்தாள். வெள்ளி இழை கோத்தது போன்ற முடியும், மஞ்சள் பூசியதால் மேலும் மினுமினுக்கும் முகமும், நெற்றியின் நடுவே வட்டமான குங்குமப் பொட்டுடனும் திகழ்ந்த அந்த மூதாட்டி, குனிந்து அவரை நோக்கினாள். பிறகு, உள்ளே யாரை நோக்கியோ குரல் கொடுத்தாள்.

"அவங்க கண் விழிச்சுட்டாங்க'' என்றாள். வயதுக்கேற்ற நடுக்கம் குரலில் இருந்தாலும், இனிமை இருந்தது. அந்த மூதாட்டியின் கணவர் வெளியே வந்தார். தலை முடியில் மாறுதல் ஒன்றே வயதானவர் என்பதற்கு அடையாளம்.

பெரியவரின் அருகே அவர் கையில் குவளையில் தண்ணீருடன் வந்து, "முதலில் இதைப் பருகுங்கள்'' என்றார். பிறகு மூதாட்டியை நோக்கி, உணவு கொண்டுவரச் சொன்னார்.

"நான் எங்கே இருக்கிறேன்?" என்று பெரியவர் கேட்டார். "நீங்கள் பத்திரமாக இருக்கிறீர்கள். முதலில் இந்த ஆகாரத்தை உண்டு களைப் பாறுங்கள். வைத்தியருக்குச் சொல்லி அனுப்பியிருக்கிறேன். அவர் வந்த பிறகுதான், உங்கள் உடலில் ஏதாவது ஊமைக் காயம் பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும்" என்றார். அதற்குமேல் அவரிடம் ஏதும் பேச முடியவில்லை. அவர் போய்விட்டார்.

எங்கோ அருகே 'க்ளிங் க்ளிங்' என்று சிற்றுளி ஓசை கேட்டது. அந்த முதியவர் அங்கிருந்த பாறையில், தன் கைவண்ணத்தைக் காட்டத் தொடங்கியிருந்தார்.

களைப்பு நீங்கப் பெற்ற பெரியவருக்கு உறக்கம் வரவில்லை. முதியவர் சொன்னதுபோல காலைத் தூக்கமுடியாமல் வலி எப்படி ஏற்பட்டது?

இப்போது புரிகிறது. குதிரை மீது ஏறியவுடன், இரு கால்களையும் ஏதோ நினைவில் குதிரையின் பக்கவாட்டில் தட்டியவுடன், குதிரை கட்டுக்கு மீறிப் பறந்தது. அதன் வேகத்தைத் தாங்க முடியாத பெரியவர் பயத்துடன் கூவினார். குதிரை ஓடிக் கொண்டிருந்தது. கீழே வீழ்ந்து விடுவோம் என்று அவர் பயந்தார். அதனால் ஓரிடத்தில் தாழ்ந்து வளைந் திருந்த மரக்கிளை ஒன்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். குதிரை அவரை விட்டுவிட்டு ஓடியது. அவருடைய பாரம் தாங்காமல் கிளை முறிந்து அவர் கீழே விழுந்தார். மூர்ச்சையானார்.

அந்தப்போது அங்கே வந்தார் முதியவர். அவர் ஒரு சிற்பி. அருகே இருந்த சிறு சிறு பாறைகளை மண்டபமாக்க முயன்று கொண்டிருந்தார். பல்லவமல்லர் என்று புகழ்ப்பெயர் கொண்ட பல்லவ அரசர் நந்திவர்மன், மாமல்லபுரத்தில் சிற்பப் பணிகள் சில செய்ய விரும்பினார். அந்தப் பணியை முதியவரிடம் ஒப்படைத்தார். கலைத் திறமையின் முன் முதுமை நிற்கவில்லை. அவர் கைவிரல்களில் இளமை ததும்பிக் கொண்டிருந்தது.

மூர்ச்சையாகிக் கிடந்த பெரியவரைச் சில இளைஞர்கள் உதவி யுடன் தூக்கி வரச் செய்து, கயிற்றுக் கட்டிலில் கிடத்தினார். முகத்தில் தண்ணீர் தெளித்தார். மயக்கம் தெளியட்டும் என்று காத்திருந்தார். பெரியவருக்கு மயக்கம் தெளிந்தது.

மூதாட்டி, பெரியவர் படுத்திருக்கும் கட்டிலருகே வந்து கீழே அமர்ந்தாள். வெற்றிலையைச் சிறு கலுவம் ஒன்றில் போட்டு இடித்துக் கொண்டிருந்தாள். பெரியவரைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பினாள். பெரியவர் நடந்தவற்றை விவரித்துப் பிறகு கேட்டார்: "பாட்டி, சைலேந்திரி எங்கே இருப்பாள் என்று சொல்ல முடியுமா? சிவிகையில் பூஞ்சேரிக்கு அவளை அழைத்துச் செல்வதாகச் சொன்னார்கள்!"



"உங்களைக் குதிரை மீது ஏற்றிவிட்டு, அந்தப் பெண்ணைப் பல்லக்கில் அனுப்பியதாகச் சொன்னீர்களே நந்தீசப்பெருமாள், அவனா? ஐயோ, பொல்லாதவனாயிற்றே" என்று கூறினாள்.

"நான் பேசுவது எங்கள் வீட்டுக்காரருக்குத் தெரிந்தால், உனக்கு ஏன் வீண் வம்பு என்று கோபிப்பார்..." என்று மேல் தலைப்பினால் வாயைப் பொத்திக் கொண்டாள்.

"முதல் பார்வையிலேயே அவனை நான் கணித்துவிட்டேன். சைலேந்திரி, நான் சொன்னதைக் கேட்கவில்லை. அவள் இந்த நாட்டிற்கு வந்ததே வீணையில் தேர்ச்சி பெற வேண்டும் என்பதற்காகத்தான். அதனால் எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் அவள் பூஞ்சேரிக்குச் சென்று விட்டாள். சைலேந்திரி கபடமற்றவள். வீணை வாசிப்பதில் திறமை பெற வேண்டும் என்பது ஒன்றே அவள் குறிக்கோள். நந்தீசன் பொல்லாதவன் என்று எனக்குத் தோன்றியது. என் பெயர்த்திக்கு ஒன்றும் நேராதே?"—பெரியவர் குரலில் பயமும் நிறைந்திருந்தது.

"அந்திவேளை அவங்க பணி முடிஞ்சு வருவாங்க.. அவங்களிடம் கேளுங்க. உங்க பெயர்த்தி வீணை கற்றுக்கொள்ள ஏற்ற இடம் பூஞ்சேரி தான். இந்த நாட்டிலேயே நான்கு பேர்தான் வீணை பயிற்றுவிக்கும் குருநாதர்கள் இருக்கிறார்கள். ஒருவர் பூஞ்சேரியில் இருக்கிறார். மற்றொருவர்..." என்று கூறி நிறுத்தினாள்.

"மற்றொருவர்? அவர் எங்கே இருக்கிறார். சொல்லுங்கள்"—பெரியவர் பரபரப்புடன் கேட்டார்.

மூதாட்டி உடனே மறுமொழி கூறவில்லை. பெரியவர் வற்புறுத் தினார். "சைலேந்திரியின் தாய், அவளைப் பல்லவ நாட்டிற்கு அனுப்பிய காரணமே, தன் மகளை வீணைக் கலையில் மேதையாக விளங்கச் செய்வதற்காகத்தான்..." என்றார்.

"தங்கள் நாட்டில், வீணைக்கலையறிந்தவர்கள் யாருமில்லையா?" மூதாட்டி கேட்டாள்.

"ஒருவரே ஒருவர்தான் இருக்கிறார்."

"அவரிடம் கற்றுக் கொள்ளாமல், நீங்கள் கடல் கடந்து வருவ தற்குக் காரணம்?"

பெரியவர் உடனே மறுமொழி கூறவில்லை. பிறகு பெருமூச்சு விட்டு மெல்லச் சொன்னார்: "அந்த ஒருவர் சைலேந்திரியின் தாய். அவளிடம் கற்றுக் கொண்டாள். மேலும் அந்தக் கலையில் தேர்ச்சி பெற விரும்பினாள். நீங்கள் இப்போது சொல்லுங்கள். இந்த நாட்டிலுள்ள

மற்றொரு வீணைக் கலைஞர் யார்? நான் அவரை உடனே சந்திக்க வேண்டும்."

மூதாட்டி சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு, "அவர்... அவர்... அவர்தான் இந்த நாட்டு அரசர், நந்திவர்மன்" என்றாள் மூதாட்டி.

"பல்லவ அரசரா? நந்திவர்ம பல்லவரா?" என்று வியப்பை அடக்க முடியாமல் கேட்டார் பெரியவர்.

"ஆமாம்... ஆமாம்... அவரேதான். நீங்கள் இந்த நாட்டு மன்னரை அறிவீர்களா?"

"காம்போஜத்திற்கும், பல்லவ நாட்டிற்கும் பல ஆண்டுகளாகத் தொடர்பு உண்டு என்பது உங்களுக்குத் தெரியாதா? திருத்தணிகைக்கு அருகிலுள்ள கிராமத்தில் என் மூதாதையர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு கொடிய பஞ்சம் இங்கே ஏற்பட்டதே, நினைவிருக்கிறதா?"

"நினைவில்லாமல் என்ன? பல்லவ அரசர் ராஜசிம்மன் காலத்தில் தான் பஞ்சம் ஏற்பட்டது. பஞ்சம் என்றால் அப்படியொரு பஞ்சம். ஓ! பஞ்ச காலத்தில் நெல் அளவுக்குத் தங்கத்தைத் தராசுத் தட்டிலிட்டு விற்பார்கள் என்று சொல்வார்கள். எங்களுக்குப் பஞ்சம் தெரியவில்லை; வறட்சி தெரியவில்லை. நெல்லும் நவதான்யங்களும் பல்லவ மன்னரின் மாளிகைக் களஞ்சியத்திலிருந்து வந்துவிடும்."

"உங்கள் குடும்பத் தொழில் என்ன? உங்களுக்கு அப்பொழுது என்ன வயதிருக்கும்?"– பெரியவர் கேட்டார். நடந்த செய்திகளைப் பேச்சின் வழியே அறிந்துகொள்வதால் உடலில் ஏற்பட்டுள்ள வலி மறைந்தது.

மூதாட்டி சிரித்தாள். "வயதைப் பற்றிய நினைவு இப்போது எதற்கு? உங்களைவிடப் பெரியவள். ஆனால், என் கணவரும் நானும் மாமல்லபுரத்தில் எப்போதும் சின்னஞ்சிறு சிட்டுக்கள். பள்ளி கொண்ட திருமால் கோயிலைக் கட்ட இராஜசிம்மன் ஆலோசனை புரிந்து கொண்டிருந்த காலம். அவர் காம்போஜ நாடு இன்னும் அதற்குக் கிழக்கே பல நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும், தெரியும். பல்லவ சக்கரவர்த்தி ராஜ சிம்மனின் பட்டத்து அரசி கடல் கடந்த மலைநாட்டைச் சேர்ந்தவர் என்பதும் தெரியும். சைலேந்திரியின் தாய் வழிப் பாட்டியாரிடம், அரசி மிகவும் அபிமானம் உடையவள். ஹும். அவற்றையெல்லாம் மனத்தில் கொண்டுதான் அந்த உறவின் உரிமையை எண்ணியே சைலேந்திரியை அழைத்துக் கொண்டு பல்லவ நாட்டிற்கு வந்தேன்."



"சைலேந்திரியின் தாயையும் அழைத்து வந்திருக்கக்கூடாதா? உங்கள் மகளை அங்கே விட்டு விட்டு பெயர்த்தியுடன் தனியே பல காத தூரம் கடல் கடந்து வந்திருக்கிறீர்களே, மிகவும் துணிச்சல்காரர்தான்" என்றாள் மூதாட்டி.

"உங்களை எப்படி அழைப்பது என்று சொல்லுங்கள். சகோதரி என்று அழைக்க அனுமதி தாருங்கள்" என்றார் பெரியவர்.

"என்னை இந்த வட்டாரத்தில் பொன்னாச்சி என்று அழைப்பார்கள். என் பெயர் நீலவேணி."

"பெயருக்கும் உங்கள் தோற்றத்திற்கும் சம்பந்தமில்லை. உருக்கிய பொன் போன்ற நிறத்தில் இருக்கும் உங்களுக்கு நீலவேணி பெயர் சரியில்லை. பொன்னாச்சி சரியான பெயர்" என்றார் பெரியவர் மெல்ல நகைத்து.

"கல் தச்சர்கள் குடும்பத்தில் பெரியவர் ஒருவர், பொன்னாச்சி என்று பெயர் சூட்டினார். அதைக் கேட்ட எங்கள் வீட்டவருக்கு மிகவும் பெருமை."

"புரிகிறது, புரிகிறது. ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன்பு நீங்கள் எப்படி இருந்திருப்பீர்கள் என்பதைக் கற்பனை செய்து பார்க்கிறேன். இப்போது உங்கள் புருஷரைப் பார்ப்பவர்கள் முதியவர் என்று சொல்லமாட்டார்கள். அந்தக் காலத்தில் அவர் எப்படி வாலிபத்தோடு மிடுக்காக, அழகாக இருந்திருப்பார் என்று நான் இப்பொழுது கற்பனை செய்து பார்க்கிறேன்" பெரியவர் இயற்கையாகப் பேசினார். அதில் புகழ்ச்சி பொங்கி வழிந்தது.

பொன்னாச்சியின் முகத்து முதுமைக் கோடுகளை நாணம் மறைத்தது. செம்பொன்னாக முகம் மாறியது. தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு, "பெரியவரே! அந்தக் காலத்துச் சம்பவங்களை நினைவுபடுத்திவிட்டீர்கள். மாமல்லபுரம் எங்கும் சிற்றுளியின் 'க்ளிங் க்ளிங்' என்ற ஓசை பரவியிருந்தபோது நாங்கள் மான் துள்ளி ஓடுவது போல், பாறைகளும் புதர்களும் நிறைந்த இந்த ஊரில் துள்ளித் திரிந்த நினைவு வருகிறது. நகரத்தின் சந்தடியில்லை. வணிகர்களும் செல்வந்தர்களும் வசிக்கும் நகரம் சற்றுத் தொலைவில் இருந்தது. எங்களவர் என் தந்தையிடம் சிற்பம் கற்றுக்கொள்ள வந்திருந்தார். அவருடைய சுறுசுறுப்பும், கலை ஆர்வமும் என் தந்தையைக் கவர்ந்தன. என்னை மணக்க முறைப்பிள்ளைகள் இருந்தாலும் என் தந்தை மனத்திற்குள் இவருக்கே என்னைத் திருமணம் புரிவிக்க வேண்டும் என்று திட்டமிட்டுவிட்டார்."

"ஓ... உங்களுக்கு விருப்பமில்லையா?"

"என்னய்யா இப்படிக் கேட்டு விட்டீர்கள். ஒவ்வொரு நாளும் நான் நள்ளிரவில் சோமஸ்கந்த மூர்த்தி சிலையின் முன் சென்று கண்ணீர் மல்க வேண்டிக்கொள்வேன்."

"சோமஸ்கந்த மூர்த்தியா?"

"ஆமாம், இப்போதுள்ள தலசயனப் பெருமாள் கோயில் என்று சொல்கிறார்களே பள்ளி கொண்டருளிய தேவர் கோயில் – அந்தக் கோயில் சைவ-வைணவ மத ஒற்றுமைக்காக எழுப்பப்பட்டது. கடலை நோக்கி சிவபெருமான் லிங்கவடிவில் இருப்பதையும், அவருக்குப் பின்னால் பரமசிவன் பார்வதியுடன் வீற்றிருப்பதையும், இருவருக்கும் நடுவே முருகக் கடவுள் குழந்தை வடிவில் அமர்ந்திருப்பதையும் என் தந்தை சிற்ப வடிவில் உருப்பெறச் செய்ய முடியாது. இருக்கும் இடத்திலேயே பாறையில் செதுக்கியாக வேண்டும். அங்குள்ள கருவறை மிகக் குறுகிய இடம். ஒவ்வொரு நாளும் மலைமகளையும், சிவபெருமானையும் இடையே அமர்ந்திருக்கும் முருகப் பெருமானையும் உருவாக்குவதை அங்கிருந்து பார்த்து வியப்படைவேன்.

"சில நாள்களுக்கு முன்பு அது ஒரு பாறை; மறுநொடி அந்தப் பாறை அகன்ற தோள்களாகவும், தோள்களிலே பூண்டிருக்கும் அணிகலன்களாகவும் மாறும். சிற்பங்களுக்கு இன்னும் கண் திறக்கவில்லை. 'உனக்குக் கண்ணில்லையா?' என்று வேதனையுடன் கடவுளை நிந்திக்கிறார்களே, அந்தக் கடவுளுக்கே கண்களைக் கடைசியாக சிற்பி செதுக்குவார். கண்ணற்ற இறைவனை நான் வேண்டிக் கொள்வேன்: "எங்கள் திருமணம் இடையூறில்லாமல் நிறைவேற வேண்டுமென்று" என்று பொன்னாச்சி பழைய சம்பவங்களை நினைவுப்படுத்திக் கூறினாள்.

"கடவுள் உங்கள் வாழ்க்கைக் கண்ணைத் திறந்து விட்டார். நீங்கள் நினைத்தது போலவே உங்கள் வாழ்க்கை அமைந்துவிட்டது, இல்லையா?"

"ஆமாம்; முன் பிறவியில் புண்ணியம் செய்திருப்பதால் இதுவரையில் எங்கள் வாழ்க்கையில் ஒரு குறையுமில்லை."

சிறிது நேரம் மௌனமாயிருந்த பெரியவர் பொன்னாச்சியை நோக்கி, "முதுமையில் கலைப்பணியைத் தொடர்ந்து செய்யும் உங்கள் கணவரின் பெயரை நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டார். அந்த முதிய பிராயத்திலும் பொன்னாச்சி நாணம் மிகுதியால் முகத்தை மூடிக்கொண்டாள்.

"ஹோ… ஹோ…" என்று குலுங்கக் குலுங்க நகைத்த பெரியவர், "கணவர் பெயரைச் சொல்லக்கூடாது, அல்லவா? போகட்டும்; சிற்பி ஒரு பிரம்மா, மற்றவர்கள் பெயரைத் காலாகாலத்திற்கு நிலைத்திருக்கச் செய்யும் கலைஞன், தன் பெயரை வெளியே தெரிவிக்க ஆசைப்பட்டதில்லை. கடல் கடந்து புகழ் பெற்றிருக்கும் சிவ-விஷ்ணு ஆலயத்தைப் புதுமையாகப் படைத்த ராஜசிம்ம பல்லவனைப் போல் வேறொருவர் பல்லவ நாட்டில் பிறந்திருக்கிறாரா?" என்று கேட்டார்.



பொன்னாச்சி சொன்னாள்: "சக்கரவர்த்தி ராஜசிம்மனுக்குப் பிறகு இந்தப் பல்லவ நாடே அழிந்துவிடும் என்று நாங்கள் கவலைப்பட்டோம். சிற்பக் கலைக்கு ஆதரவு இருக்காது என அஞ்சினோம். சிற்பிகள் பலர் சாளுக்கிய நாட்டிற்கும் மற்றும் பல்வேறு நாடுகளுக்கும் சென்றுவிட்டனர். பிறகு வந்த நந்திவர்ம சக்கரவர்த்தி இளம் வயதினர்தான். ஆனால், அவர் தான் ஒரு சிறந்த கலைஞர் என்பதை நிரூபித்துவிட்டார்…"

"ஆமாம், ஆமாம். அவர் புகழ் கடல் கடந்த நாடுகளிலும் பேசப்படுகிறது. அவரை நான் சந்திக்க வேண்டும். அவர் வீணைக் கலையில் மாமேதை என்பதையும் நீங்கள் இப்போது கூறினீர்கள். பல்லவ மன்னரை நான் உடனே சந்தித்தாக வேண்டும். அதற்கு முன்பு சைலேந்திரியைக் கண்டுபிடித்தாக வேண்டும். என்னால் ஒரு கணம்கூட இங்கே இருக்க முடியவில்லை. ஆச்சி, நீங்கள்தாம் உதவ வேண்டும்" என்று வேண்டினார், பெரியவர்.

பொன்னாச்சி உடனே ஒன்றும் பேசவில்லை. சிறிது நேரம் சிந்தனை செய்தாள். அப்போது பொன்னாச்சியின் கணவர் வைத்தியரை அழைத்து வந்தார்.

வைத்தியர், பெரியவரைச் சோதித்துப் பார்த்தார். கவலைப்படுவதற்கு ஏதும் இல்லை என்றும், மரத்திலிருந்து வீழ்ந்ததால் ஏற்பட்ட அதிர்ச்சி, ஓய்வு எடுத்தால் சரியாகிவிடும் என்றும் தெரிவித்தார். அவர் அளித்த மூலிகை, பெரியவரை அயர்ந்து உறங்குமாறு செய்தது.

"பெரியவர் இரவு நன்றாக உறங்குவார். காலையிலும் உறங்குவார். அவரை எழுப்பாதீர்கள். பிறகு, எல்லாம் சரியாகிவிடும்" என்று வைத்தியர் சொல்லிச் சென்றதுபோல், பெரியவர் நன்றாக உறங்கினார். விழித்தெழுந்த போது, இரவு மறைந்து, பொழுது புலர்ந்து, பகல் கழிந்திருந்தது.

பறவைகள் கூட்டையடையும் கலகலவென்ற சப்தம் எங்கும் நிறைந்திருந்தது. பெரியவர் கண் விழித்தார்.

முதியவர், பொன்னாச்சி இவர்களுடன் யாரோ மற்றொருவரும் பேசும் குரல் கேட்டது. இளம் சிற்பியாக இருக்கும் என்று முதலில் நினைத்தார். பிறகுதான் தன்னையும் சைலேந்திரியையும் பற்றி அங்கு பேசப்படுகிறது என்றுணர்ந்தார்.

அங்கே இளைஞன் ஒருவன் அமர்ந்து, முன்பே அறிமுகமானவன் போல் பேசிக் கொண்டிருந்தான். அவன்தான் நரேந்திரன்.

# 5

மரக்கலத்தில் பணிகளையெல்லாம் முடித்ததும் கரை இறங்கிய நரேந்திரன், எதிர்பார்த்தைவிட மாமல்லபுரத்தில் கலகலப்பு குறைந்து காணப்படுவதை அறிந்தான். ஏராளமான சிற்பிகள் பணியாற்றிக் கொண் டிருப்பார்கள். அவர்களுள் தன் தாய் கூறியிருந்த ஆனந்தக்கூத்தர் என்னும் கல் தச்சரைக் கண்டுபிடிப்பது மிகவும் எளிது என்று எண்ணியிருந்த அவனுக்கு, கரை இறங்கியவுடனிருந்த சூழ்நிலை அதிர்ச்சியாக இருந்தது.

ஆனந்தக்கூத்தர் இருப்பிடத்தைக் கேட்டறிவதற்கு மாறாக, மரக்கலத்தில் அகன்ற விழிகளையுடைய அழகு மங்கை எங்கே சென்றிருப்பாள் என்று தேட அவன் மனம் அலை பாய்ந்தது.

யாரைப் பார்த்து, என்னவென்று கேட்பான்? 'சைலேந்திரி என்ற அழகு மகளும், பெரியவர் ஒருவரும் காலையில் மரக்கலத்திலிருந்து இறங்கி வந்தார்களே, அவர்கள் இருக்குமிடம் தெரியுமா?' என்று கேட்பது சரியாக இருக்குமா? நகைக்க மாட்டார்களா?

'சிவப்பு நிறத் தலைப்பாகை, நீல நிறப் பட்டாடையைப் போர்த்திக் கொண்டு கையில் வைரக் கற்கள் பதித்த செப்புக் காப்புடன் ஐம்பது அறுபது வயது மதிக்கத்தக்க பெரியவர் – இப்படி அடையாளம் சொல்லிக் கேட்டால் போதுமா?'

அதுபோல் அடையாளம் சொல்லி ஒருவரைக் கேட்டான். அந்த அடையாளமுடையவர் சோனக நாட்டவராக இருக்க வேண்டும் என்று எண்ணிவிட்டதால், "சோனக நாட்டுக் கப்பல் ஏதும் இன்று வரவில்லையே!" என்று அவர் சொல்லிவிட்டார்.

சரி; ஆனந்தக்கூத்தரைப் பற்றியாவது கேட்டறிவோம். அதுதானே நம் பணி என்று ஓரிருவரைக் கேட்டான். ஒருவருக்கும் தெரியவில்லை. ஒருவர் மிகத் தெளிவாகச் சொன்னார்; "தம்பி, எனக்குத் தெரிந்து சிற்பப்



பணி ஏதும் இப்போது மாமல்லபுரத்தில் நடைபெறவில்லை. ஒரே ஒரு முதியவர் மேற்கே மொட்டைப் பாறைகளுக்கருகே வசிக்கிறார். அவரிடம் சென்று கேட்டுப் பார்."

அலைச்சலால் களைப்புற்று, இரவு ஒருவர் வீட்டுத் திண்ணையில் தூங்கி, காலையில் விழித்து எழுந்து மொட்டைப் பாறையைத் தேடிச் சென்றான்.

நரேந்திரனைப் பார்த்தவுடனேயே பொன்னாச்சி, யார் என்று கேட்காமல் அவனை வரவேற்றாள். அவன் முகராசி அப்படி! நரேந்திரன் ஆனந்தக்கூத்தரைப் பற்றி வினவினான். பொன்னாச்சி சிறிது நேரம் யோசித்தாள். பிறகு நினைவுக்கு வந்தவள் போல், "ஆனந்தக்கூத்தரும் அவருடைய சீடர்களும் மாமல்லபுரத்தை விட்டுச்சென்று பல ஆண்டுகள் ஆகிவிட்டன. வாதாபிக்குச் சென்றிருப்பார்கள் என்று நினைக்கிறேன்" என்று சொன்னாள்.

பிறகு கேட்டாள்: "தம்பி, ஆனந்தக்கூத்தரைப்பற்றி ஏன் கேட்கிறாய்? அவரிடம் சிற்பக் கலை பயில விரும்புகிறாயா?"

'எந்தக் கலையைத்தான் நான் முழுமையாகக் கற்க விரும்பினேன்? எதிலும் ஈடுபாடு கொள்ளாது அலைபாயும் என் உள்ளத்தில் அமைதி ஏற்படுவது எப்போது?' என்று நொந்துகொண்டு, பெருமூச்சு விட்டான் நரேந்திரன். அவ்வப்போது அவனுக்குத் தாய் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வரும்:

"விரைவில் பல்லவ நாட்டிற்குச் செல்ல வேண்டும். அங்கே காஞ்சி மாநகரம் செல்ல வேண்டும். ஆனந்தக்கூத்தரைச் சந்திக்க வேண்டும். அவர் சொற்படி கேட்க வேண்டும். பத்து ஆண்டுகளுக்குக் குறையாமல் கலை பயின்று, தேர்ச்சியுற்ற பிறகே தாய்நாட்டிற்குத் திரும்ப வேண்டும்."

"அம்மா, தாய் நாட்டிற்குத் திரும்ப வேண்டும் என்று சொல்கிறீர்களே, சோழநாடுதானே நமது தாய் நாடு?" என்று அவன் கேட்டிருக்கிறான்.

"சோழ நாட்டை விட்டு இங்கே வந்து இரண்டு தலைமுறைகள் ஆகி விட்டன. இங்கே நாம் நலமுடன் வாழ்கிறோம்; ஒரு குறையும் கிடையாது. ஒரே ஒரு குறை, உன்னுடைய தந்தை நம்மைவிட்டுப் பிரிந்தது. உனக்கு அந்தக் குறையும் ஏற்படக்கூடாது என்ற வகையில் வளர்த்து வருகிறேன். இங்கும் தமிழ் பேசுகிறார்கள். சிவன் கோயிலும், திருமால் கோயிலும் இருக்கின்றன. பல்லவ நாட்டின் வாரிசுகள்தாம். 'காம்போஜ நாட்டை நம் தாய்நாடு என்று கொள்வதுதான் நியாயம்' தாய் நாட்டிற்குத் திரும்பி வந்து கலை வளர்க்க நீ உறுதி எடுத்துக் கொள்" என்ற அறிவுரையை அவனால் மறக்கமுடியவில்லை.

நரேந்திரன், தான் கேட்ட கேள்விக்கு விடை கூறாமல் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருப்பதைக் கண்ட பொன்னாச்சி, 'தம்பி' என்று சற்று உரக்கவே அழைத்தாள்.

"சொந்த ஊர் நினைவு வந்துவிட்டதா?" என்று கேட்டாள்.

மெய் மெதுவாக சிலிர்க்க, சுயநிலையடைந்து சொன்னான்: "பாட்டி, ஊர் நினைவு வரவில்லை. மாமல்லபுரம் சென்று அங்கே ஆனந்தக் கூத்தரைச் சந்தித்தால், அவர் தக்க வழி காட்டுவார் என்று தாய் கூறியது நினைவுக்கு வந்தது. அவரைச் சந்தித்தால் அவர் பல்லவ இளவரசர் சித்திரமாயனிடம் அழைத்துச் செல்வார் என்று தாய் தெரிவித்திருந்தாள். தாயின் அந்திம கால அறிவுரைகளை நினைத்துப் பார்த்தேன். தாய் சொல்லைத் தட்டலாமா?"

பொன்னாச்சி கேட்டாள்: "சித்திரமாயனை உனக்குத் தெரியுமா?"

"தெரியாது பாட்டி, எனக்கு யாரையுமே தெரியாது. மாமல்லபுரத் துறைமுகத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். பல்லவ நாட்டு தலைநகரம் காஞ்சிபுரம் என்ற பெயரை மட்டும் நான் அறிவேன்."

"நரேந்திரா, இனி ஆனந்தக்கூத்தரைப் பற்றியும், சித்திரமாயனைப் பற்றியும் நீ பேசாமல் இருப்பது, உனக்கு நல்லது."

"ஏன் பாட்டி?"

"சித்திரமாயன் இளவரசனல்லன், ஆனந்தக்கூத்தர் பல்லவ நாட்டிற்குத் துரோகம் செய்தவர். பல்லவ அரசர் நந்திவர்மனுக்கு விரோத மானவர். பல்லவ மகுடம் தனக்கே உரிமை என்று கலகம் செய்கிறான் சித்திரமாயன். அவனுடைய தூண்டுதலினாலோ அல்லது வாதாபியின் சதியினாலோ ஆனந்தக்கூத்தர், சிற்பிகளை அழைத்துக் கொண்டு வாதாபிக்குச் சென்று விட்டார்."

"பல்லவ நாட்டில் சிற்பப் பணிகளுக்கு வாய்ப்பில்லாததால், அவர் வாதாபிக்குச் சென்றிருக்கலாம். அதற்காக ஆனந்தக்கூத்தர், பல்லவ நாட்டின் விரோதி என்று சொல்லிவிட முடியுமா? பல்லவ மன்னரின் விரோதிகளுடனா தொடர்பு கொள்ளுமாறு என் தாய் சொல்லியிருக்கிறாள்?" நரேந்திரன் குரலில் கவலையும் வியப்பும் இருந்தன.

"இந்த நாட்டில் நடப்பனவெல்லாம் உன் தாய் அறிந்திருக்க முடியாது. சில நாட்களாக பல்லவ மன்னர் நந்திவர்மனின் விரோதிகள் செய்யும் சதித்திட்டங்கள் அதிகமாகி வருகின்றன என்று எங்களவர் சொல்கிறார். அவர் இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடுவார். அவர் உனக்கு விளக்கமாகச் சொல்வார்" என்றாள் பொன்னாச்சி.



பெரியவர் கண் விழித்து எழுந்து உட்கார்ந்தார். அவர் உடலில் புதுத்தெம்பு ஏற்பட்டிருந்தது. நடந்தவை எல்லாம் கனவுபோல் தோன்றின. பசி அவரைத் தொல்லைப்படுத்தியது. தவிர, பொன்னாச்சியுடன் பேசிக் கொண்டிருக்கும் இளைஞன், கப்பலில் சந்தித்த நரேந்திரன் என்று அறிந்தவுடன் அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை.

"தம்பி, நீயா?" என்று கேட்டவாறு பரபரப்புடன் எழுந்து வந்தார்.

நரேந்திரன் திரும்பிப் பார்த்தான். மரக்கலத்தில் சந்தித்த அதே பெரியவர். பெரியவரை நோக்கி அவன் எழுந்தோடி வந்து, கை கூப்பி வணக்கம் தெரிவித்தான்.

நரேந்திரனிடம் நடந்த சம்பவங்களை விவரித்த பெரியவர், "அப்பாடா! என்னிடம் ஏற்பட்டிருந்த குழப்பம், பயம் எல்லாம் இந்தக் கணம் முதல் பறந்தோடி விட்டன" என்றார். பிறகு, பொன்னாச்சியைச் சுட்டிக் காட்டி, "மூதாட்டிதான் என்னைக் காப்பாற்றினார்கள். இப்போதும் அவர்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும். உடனே ஒரு கவளம் சோறாவது என் வயிற்றுக்குள் செல்லாவிடில், என் உயிர் என்னிடம் இருக்குமா என்று சந்தேகமே" என்று கூறிச் சிரித்தார். பொன்னாச்சியும் பொக்கை வாய் திறந்து சிரித்தாள்.

நரேந்திரன், "பெரியவரே! நீங்கள் பூசையை முடித்து விட்டுத்தானே உணவருந்துவீர்கள்? தேவியின் சிலை எங்கே?" என்று கேட்டான்.

பெரியவர் கவலை நிறைந்த குரலில், "தேவியின் விக்கிரகம் மற்றும் பூசைப் பொருள்கள் நிறைந்த மூட்டை, சைலேந்திரி சிவிகையில் புறப்படும்போது, அவளுடன் சென்று விட்டது. சைலேந்திரியை நான் உடனே கண்டுபிடித்தாக வேண்டும். நீ எனக்கு உதவி செய்கிறாயா?" என்று கேட்டார்.

சைலேந்திரி– விழி அழகி. ஆகா! ஆனந்தக்கூத்தரைச் சந்திக்க முடியாவிட்டாலும் புத்துணர்வை அளித்த சைலேந்திரியையாவது நாம் சந்திப்போம் என்ற உற்சாகத்தில், "ஆகா! இப்போதே புறப்படுவோம்!" என்றான்.

பொன்னாச்சியின் கணவர் முதிய சிற்பி அப்போது வந்து கொண்டிருந்தார்.

"அதோ அவர் வந்துவிட்டார். அவரைக் கேட்டுத் தெரிந்து கொண்டு புறப்படுங்கள்" என்றாள் பொன்னாச்சி.

"எங்கே புறப்பட்டு விட்டீர்கள்? நேற்று நீங்கள் கிடந்த நிலையைப் பார்த்தால், உங்களால் எழுந்து நடக்கவும் முடியாது என்று நினைத்தேன். மருத்துவர் தந்த மருந்து மிக நல்ல மருந்து" என்றார் சிற்பி.

"மருந்து பாதி, இந்த இளைஞன் நரேந்திரனைச் சந்தித்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சி பாதி. இவன் சைலேந்திரியைக் கண்டுபிடிக்க உதவி செய்ய வாக்களித்து விட்டான்" என்று பெரியவர் உற்சாகமாகக் கூறினார்.

"அவளை எங்கே போய்த் தேடுவீர்கள்?"- சிற்பி கேட்டார்.

"பூஞ்சேரிக்கு."

இதைக் கேட்டவுடன் சிற்பியின் முகம் மாறியது.

"பூஞ்சேரியா? அது சித்திரமாயனுடைய ஆதரவாளர் அதிகம் இருக்கும் இடம் ஆயிற்றே. அங்கே வசிக்கும் வீணைக் கலைஞர் வீட்டிற்குத் தான் சித்திரமாயன் அடிக்கடி வருகிறான். நந்திவர்மனை எதிர்த்துச் சதித்திட்டம் அங்கே உருவாகிறது. உங்களையும் மன்னரின் ஒற்றர்கள் கண்காணிப்பார்கள்."

நரேந்திரன் கேட்டான்: "சித்திரமாயன்- அவர் அங்கே வருகிறாரா?"

பொன்னாச்சி சற்று முன்பு கூறியவை நினைவுக்கு வந்தன. பொன்னாச்சி கூறியவை பெரியவருக்கும் தெரியும்.

பூஞ்சேரிக்குச் செல்வதா, வேண்டாமா என்று நரேந்திரன் யோசித்தான்.

"ஒரு கணம்கூட தாமதிக்காமல் உடனே போக வேண்டும்" என்று பெரியவர் எழுந்தார்.



# 6

நான்கு நாள்களாக சைலேந்திரிக்குச் சரிவர உறக்கம் வரவில்லை. பூஞ்சேரியின் அமைதியான சூழ்நிலை, அவள் மன அமைதியைக் குறைத்தது. புரிந்து கொள்ள முடியா அச்சம் அவளுள் எழுந்தது. வீணையை மீட்டாமல் இருக்க முடியவில்லை. வீணை நரம்புகள் மீது விரல்களைத் தடவும்போது, நடுக்கத்தால் ஸ்வர பேதம் ஏற்பட்டது. வீணையின் மீது முகத்தைச் சாய்த்துக்கொண்டு சிந்தித்தவாறு இருப்பாள். நேரம் விரைந்து சென்றது. வேளைக்கு உணவு வந்தது. சுவையான உணவு. இறைச்சி, மீன் இவற்றைச் சிறு வயது முதலே வெறுத்தாள். அந்த வீட்டில் அவை இல்லாத சமையல் இல்லை. "நீ சமண சமயத்தைச் சேர்ந்தவளா?" என்று அந்தப் பெண் கேட்பாள்.

வீட்டின் பின்பகுதியில் சைலேந்திரி இருப்பதற்கு இடம் கொடுக்கப்பட்டிருந்தது. தோட்டத்தில் உள்ள மரம், செடி, கொடியைப் பார்த்தவாறு பொழுதைப் போக்க முடியுமா? என்ன செய்வதென்றே அவளுக்குப் புரியவில்லை. பெரியவர் என்ன ஆனார் என்று தெரியவில்லை. யாரைக் கேட்பது? எதற்காக இந்த வீட்டில் இருக்கிறோம்? அடுத்து என்ன நேரப் போகிறது? என்பது தெரியாமல் ஒவ்வொரு மணித்துளியையும் ஒட்டி வருகிறாள். அந்த வீட்டில் அவள் விழிகளில் படுபவள் நடுத்தர வயது டைய அந்தப் பெண்தான். 'அக்கா, அக்கா' என்று அவளை அழைத்தாள். அவள் பேச்சையும் போக்கையும் பார்த்த பிறகு, அக்கா என்றழைப்பது சைலேந்திரிக்குப் பிடிக்கவில்லை.

'அக்காவாம், அக்கா! உடன் பிறந்தவள் என்ற தகுதியைத் தரக் கூடிய நல்ல குணம் ஒன்றும் அவளிடம் இல்லை. பெயர் சொல்லியே அழைப்போம்!' என்ற முடிவுக்கு வந்தாள்.

அவள் பெயர் சாலினி என்பதறிந்தாள். பரம குருவுக்கு அவள் என்ன உறவு என்று கேட்டறிய ஆவல் கொண்டாள். வீணைக் கலையில் வல்லவரான பரமகுரு எப்படி இருப்பார்? அவரைப் பார்க்க சாலினி தடை விதிப்பதேன் என்ற விஷயங்கள், அவளுக்குப் புரியாத புதிராக இருந்தன.

அன்று இரவு வழக்கத்திற்கு மாறாக, அவள் முன்ஜாமத்திலேயே தூங்கிவிட்டாள். நள்ளிரவில் தூக்கம் கலைந்தது. அவள் படுத்திருந்த அறைக்கருகே பேச்சுக் குரல் கேட்டது. திடீரென வீணையின் நாதம். வீணையின் இன்னிசைக்கு ஏற்ப தாள ஓசை, சலங்கை ஓசை. யாரோ நடனமாடுகிறார்கள்.

திடீரென்று நிசப்தம். மெல்லிய ஒளிக்கீற்று அவள் படுக்கை அருகே வந்து வீழ்ந்தது. இதுவரையில் இல்லாமல் வெளிச்சம் திடீரென இப்போது வருவதேன்? வெளிச்சம், அந்த அறையின் அடுத்துள்ள கூடத்தி லிருந்து வருகிறது என்பதை சைலேந்திரி உணர்ந்தாள்.

சைலேந்திரி எழுந்து வெளிச்சம் வரும் இடத்தின் அருகே திரைச் சீலைக்குப் பின்பக்கம் கதவு இருந்தது. கிழிந்து பழசாக இருந்த திரைச் சீலைக்கு நேராக துவாரம் தெரிந்தது. அதன் வழியாக வெளிச்சம் வந்தது. இதுவரை அந்த இடத்தருகே மறைந்தவாறு உட்கார்ந்திருந்தவர், எழுந்து வேறிடம் சென்றிருக்க வேண்டும்.

சைலேந்திரி பார்த்தாள். விசாலமான அந்தக் கூடத்தில், சிலர் அமர்ந்திருப்பது தெரிந்தது. வீணையை மடியில் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பவர்தான் பரமகுருவாக இருக்க வேண்டும். அவருடைய முதுகுப்புறத்தைத்தான் பார்க்க முடிந்தது. அவர் எதிரே கம்பீரமாக உயர்ந்த ஆசனத்தில் ஒருவர் உட்கார்ந்திருந்தார். மற்றும் சிலர் அவர் எதிரே உட்கார்ந்திருந்தனர். மற்றொருவர் கையைக் கட்டிக்கொண்டு அவர் எதிரே நின்று கொண்டிருந்தார். அவரைப் பார்த்தவுடன் சைலேந்திரி திடுக்கிட் டாள். அங்கே நின்றிருந்தவர் நந்தீசப்பெருமாள்.

இதுவரை நடனமாடிக் கொண்டிருந்த பெண், மண்டியிட்டு வணங்கினாள். பிறகு அவள் எழுந்து, வேகமாக அங்கிருந்து வெளியேறி னாள். அங்குள்ளவர்கள் பேசுவது காதில் விழவில்லை. மீண்டும் உறக்கம் வரும் வரையில், அந்த இடைவெளி வழியே அவள் பார்த்துக் கொண் டிருந்தாள். பார்த்தவரையில் ஒன்றும் புரியாததால், அவள் மீண்டும் படுக்கச் சென்றாள். இமைகளைத் துயில் மூடியது.

*வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்*
*மிகநல்ல வீணை தடவி...*



ஆகா! அற்புதமான பாடல். அவள் அந்தப் பாடலைப் பாடிக் கொண்டே வீணையை மீட்டுகிறாள். ஞானசம்பந்தப் பெருமாளின் கோளறு பதிகம் முழுமையும் அவள் பாடிக்கொண்டே வீணையை மீட்டு கிறாள். அதுவே சுகானுபவமாக இருந்தது. மீட்டிக்கொண்டே இருக்கிறாள். தன்னை மறந்து அவள் விரல்கள், வீணை நரம்புகளைத் தடவிக் கொடுக் கின்றன.

ட்ரிங்- வீணை வாசிப்பது தடைப்படுகிறது. யாரோ அவளை உரத்த குரலில் அழைப்பதுபோல உணர்ந்தாள். அவள் அருகே– மிக அருகே குரல் கேட்கிறது. சாலினி அவள் முகத்தருகே உரத்துப் பேசுகிறாள்.

"சைலேந்திரி, இன்னுமா தூக்கம்? விடிந்து இரண்டு நாழிகையாகி விட்டது. அதிசயமாக இருக்கிறதே! இரவு முழுவதும் கண் விழித்திருந் தாயா?" என்று சாலினி கேட்கிறாள்.

"சைலேந்திரி, உன் உதடுகள் ஏதோ முணுமுணுத்தன. நீ பாட லொன்றைப் பாடுகிறாய். அந்தப் பாடல் உனக்கு மனப்பாடமா? மலை நாட்டிலிருந்து வரும் உனக்கு, ஞானசம்பந்தரின் கோளறு பதிகம் பாடல் எப்படி மனப்பாடமாகியது?" என்று கேட்கிறாள்.

"நான் பாடினேனா? ஞான சம்பந்தரா? கோளறு பதிகமா? கோள் என்றால் என்ன? எனக்கு ஒன்றுமே தெரியாது சாலினி. எல்லாம் கனவில் எழுந்தவைதாம். யாரோ, அரசகுமாரர் போல் ஒருவர் கம்பீரமாக உட்கார்ந் திருக்கிறார். அவர் எதிரே ஒருவர் வீணையை மீட்டி, இனிமையாகப் பாடுகிறார். ஒரு பெண் நடனமாடுகிறாள். சாலினி, அங்கே, நான் மற்றொரு வரைக் கண்டேன். அவர்தான் என்னை இங்கே கொண்டு சேர்த்த நந்தீசப் பெருமாள். நான் பயந்துவிட்டேன் சாலினி..."

சைலேந்திரி சொல்லிக் கொண்டே போகும்போது, சாலினி பரபரப்பு டன் அவள் வாயைப் பொத்தி, "சைலேந்திரி, சொல்லாதே நிறுத்து, நிறுத்து. நீ கண்டது கனவன்று, நனவுதான். நேற்று இரவு சித்திரமாயன் இங்கு வந்திருந்தார். மிக முக்கியமான, ஆலோசனைக் கூட்டம் நடந்தது. கூட்டம் தொடங்குமுன்பு சித்திரமாயன் வீணை இசையைக் கேட்டு மகிழ்வது வழக்கம். நாட்டியமும் உண்டு. நந்தீசப் பெருமாள், சித்திரமாயனின் வலக்கரம் போன்றவர். அங்கே இருந்த மற்றவர்கள், பல்லவ நாட்டின் முக்கிய அதிகாரிகள், சித்திரமாயனுடன் இணைந்து நின்று போராடப் போகிறார்கள். கனவிலே உனக்கு இவ்வளவு பேரும் தெரிந்திருக்கிறார்கள். அங்கு பேசப்பட்டவையும் கனவில் தெரிந்ததா? சைலேந்திரி, நீ ஓர் அதிசயப் பெண்ணா? மாயக்காரியா? என்னிடம் சொன்னதைப்போல வேறு யாரிடமும் சொல்லாதே. நந்தீசன் மிகப்

பொல்லாதவர்!" என்று கூறி நிறுத்தினாள்! அவளுக்கு மூச்சு வாங்கியது.

சைலேந்திரிக்கு சிரிப்பு ஒரு புறமும், அச்சம் ஒரு புறமுமாக ஏற்பட்டன. தான் கண்டது கனவன்று என்று சொல்லி விடுவோமா? கதவின் இடுக்கு வழியாகப் பார்த்ததைச் சொல்லிவிடலாமா என்று ஒரு கணம் எண்ணினாள். பிறகு தன் ஆர்வத்தைச் சற்று அடக்கிக் கொண்டு, "சாலினி, இந்த வீடே மர்மமாக இருக்கிறது. ஆனால், இந்த வீட்டில் எதிரொலிக்கும் வீணையின் நாதம்தான் எனக்கு நம்பிக்கையை அளிக்கிறது. சித்திரமாயன் என்று சொன்னீர்கள். அவர் வீணையின் நாதத்தில் மெய் மறக்கக்கூடியவர் என்று சொன்னீர்கள், அவர் யார்?" என்று கேட்டாள் சைலேந்திரி.

சாலினி மெல்லப் பேசினாள். "சைலேந்திரி, காம்போஜத்திலிருந்து வந்து இப்படியோர் இடத்தில் நீ அகப்பட்டுக் கொண்டாயே என்று நினைக்கும்போது, எனக்கு உன்னிடம் பரிதாபம் ஏற்படுகிறது."

அவள் கூறுவதைக் கேட்ட சைலேந்திரிக்கு, மெய்யாகவே பயம் ஏற்பட்டது. இரவு சரியான உறக்கம் இல்லாததால் அசதியாகவும் இருந்தது.

"சாலினி, என்ன சொல்கிறீர்கள்? எனக்குப் பயமாக இருக்கிறது. இந்த வீடு ஓர் இசை மாளிகை என்று நினைத்திருந்தேன். இந்த வீட்டில் கூடி ஏன் சூழ்ச்சி செய்கிறார்கள்?" என்று நடுங்கும் குரலில் கேட்டாள்.

"சைலேந்திரி! இந்த நாட்டு நடப்பு உனக்குத் தெரியாது. எனக்கும் அப்படித்தான் சில காலம் புரியாமலிருந்தது. வாதாபியிலிருந்து இங்கு வந்த நோக்கம் வேறு. ஆனால் நந்தீசனிடம் சிக்கிக்கொண்டேன். அழகிய பெண்கள் அகப்பட்டால் அவர்களைத் தன் வயப்படுத்தி, தன் திட்டத்தை நிறைவேற்றப் பயன்படுத்தப் போகிறான்."

சைலேந்திரிக்கு மேலும் பயம் ஏற்பட்டது. "என்ன சொல்கிறீர்கள் சாலினி? சித்திரமாயனை இளவரசர் என்கிறீர்கள். இந்த நாட்டு மன்னர் நந்திவர்மனுக்கு அவர் என்ன உறவு? அவர் ஏன் சூழ்ச்சி செய்ய வேண்டும்? நந்தீசப் பெருமாள் ஒரு காமாந்தகரா? அவரைப் பார்த்தபோதே அவரைப் பற்றி நல்லெண்ணம் எனக்கு ஏற்படவில்லை."

"இல்லை, இல்லை. அழகிய பெண்களைத் தங்கள் இச்சைக்குப் பயன்படுத்துவது நந்தீசனின் எண்ணமில்லை. சித்திரமாயனுடைய இரண்டு இலட்சியங்களை நிறைவேற்ற உதவுவது அவர் இலட்சியம்."

"இரண்டு இலட்சியங்களா? என்னென்ன?"

"காஞ்சியில் பல்லவ மகுடத்தை அடையவேண்டும்; பரிவாதினி வீணையை நந்திவர்மனிடமிருந்து அபகரிக்க வேண்டும்."



"பரிவாதினி! பரிவாதினி!" – சைலேந்திரி பரவசத்துடன் அந்தப் பெயரை உச்சரித்தாள். "சாலினி, பரிவாதினி வீணையை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அது எழுப்பும் கந்தர்வகானத்தை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? காம்போஜத்திலிருந்து அதற்காகத்தான் நான் இங்கு வந்தேன். பரிவாதினியைக் காண உதவுவீர்களா? அதை மீட்டிப் பேரானந்தம் அடைய எனக்கு வழி சொல்வீர்களா?"– சைலேந்திரி ஆவலுடன் கேட்டாள்.

சாலினி அங்குமிங்கும் பார்த்தவாறு சொன்னாள்: "மற்றொரு முறை உன் ஆவலையும் ஆசையையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்தாதே. பரிவாதினி வீணையைக் காண உன்னைப்போல் எனக்கும் ஆர்வம். அதன் இனிய நாதத்தைக் கேட்பதற்காக அன்று" என்று தன் நோக்கத்தைக் கூறியது கேட்டு, சைலேந்திரி திடுக்கிட்டாள். சாலினியிடம் அவளுக்கு மேலும் அச்சம் ஏற்பட்டது. அந்த மர்ம வீட்டிலிருந்து தப்பிச் செல்வது எப்படி என்று சிந்திக்கலானாள்.



# 7

'காஞ்சியினின்று சாளுக்கிய நாட்டிற்குப் பரிவாதினி வீணையைக் கவர்ந்து கொண்டுவர அனுப்பப்பட்டவள்' என்று சாலினி ஒளிவு மறைவு இன்றி தன் நோக்கத்தைப் பற்றிக் கூறியது கேட்டு, சைலேந்திரி அதிர்ச்சியால் வாயடைத்துப் போனாள்.

"சைலேந்திரி ஏதும் பேசாமல் பதுமை போல் அமர்ந்து விட்டாயே! உன் உள்ளத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல், உன் முகத்தில் பிரதிபலிக்கிறது. அதுவும் அழகாகத்தான் இருக்கிறது. கடல் கடந்த நாட்டிலிருந்து ஓர் அழகி, தனியாகப் பல்லவ நாட்டிற்கு வருகிறாள் என்றால் அதற்கு மகத்தான துணிவு வேண்டும்" என்று கூறி, அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள் சாலினி.

"இதில் துணிவு என்ன இருக்கிறது சாலினி? காம்போஜ நாட்டிற்கும் பல்லவ நாட்டிற்கும் அதிக வேற்றுமை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இங்கு வந்து, சில நாள்களே ஆகியிருக்கின்றன. மக்கள் வாழ்க்கை, கோயில்கள், பல்லவ அரசர் இவர்களைப் பற்றி நான் இன்னும் ஏதும் அறிந்து கொள்ளவில்லை. ஆனால், வந்த அன்றே எனக்கு ஏற்பட்ட அநுபவம், சற்றுப் பயத்தை ஏற்படுத்துகிறது; நான் வீணையின் நுணுக்கங்களைக் கற்க வந்தேன். 'பரிவாதினி' என்ற வீணையைப் பல்லவ அரசர் மகேந்திரவர்மன் கண்டு பிடித்தார் என்று என் தாய் கூறியிருக்கிறாள். வீணையில் பல புதிய மாற்றங்களை அவர் செய்துள்ளார் என்றும், மற்ற நரம்புக் கருவிகள் எழுப்பும் ஒலியைவிட, வீணா கானம் மிகச் சிறந்து இருப்பதாகவும் என் தாய் சொல்லியிருக்கிறாள். மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் பல்லவ நாட்டில் தங்கியிருந்து, வீணைக் கலையில் மேதையாகி, காம்போஜம் திரும்ப எண்ணினேன். ஆனால் இங்கு வந்த பிறகு, தொடக்கமே சரியாக இல்லை. நீங்கள் சொன்ன செய்திகள் பயத்தை அளிக்கின்றன. சாலினி, இந்த இல்லம் ஓர் கலைஞரின் இல்லம். இங்கு



ஏன் சூழ்ச்சிகள் நடக்கின்றன? வீணை மேதை பரமகுருவைச் சந்திக்க, நீங்கள் ஏன் தடையாயிருக்கிறீர்கள்? சாளுக்கிய நாட்டினின்று நீங்கள் வந்ததாகவும், பரிவாதினி வீணையை எப்படியாவது கவர்ந்து வருமாறு சாளுக்கிய அரசர் கட்டளையிட்டிருப்பதாகவும் கூறுகிறீர்கள். என்னை ஓர் அழகி என்று புகழ்ந்தீர்கள்; இந்த வயதிலும் நீங்கள் கட்டுக் குலையாமல் அன்றலர்ந்த மலர் போலிருக்கிறீர்கள். நீங்களும் நாடுவிட்டு நாடு வந்துள்ளீர்கள். அதற்குத் துணிவு வரவேண்டுமல்லவா? இங்கு வந்தவுடன் உங்கள் எண்ணம் ஈடேற என்ன முயற்சி செய்தீர்கள்? இவற்றையெல்லாம் நினைக்கும்போது எனக்குக் கவலையாகவும் இருக்கிறது, பயமாகவும் இருக்கிறது" என்றாள்.

"அழகுடையவள், கலைத் திறமையுடையவள் என்று மட்டும் உன்னை நினைத்திருந்தேன்; பேச்சில் மற்றவரைக் கவரக்கூடிய சக்தி உடையவள் என்பதைத் தெரிந்து கொண்டேன்" என்று சாலினி கூறி, அவளை அன்புடன் அணைத்துக்கொண்டு, "ஆனால், உன்னைப் பார்ப்பவர்களுக்கு, உன்னிடம் இவ்வளவு திறமை பொதிந்திருக்கிறது என்பது தெரியாது. நந்தீசனுக்குப் புரிந்திருக்கிறது. பார்வையிலேயே உணரும் சக்தியுடையவர். அதனால்தான் உன்னை இங்கு கொண்டு சேர்த்திருக்கிறார்" என்றாள்.

அவள் அணைப்பிலிருந்த சைலேந்திரி, மெல்ல விடுபட்டாள். அவள் கரங்களில் சற்று முரட்டுத்தனம் இருந்தது. மென்மையான பெண்மை அணைப்பு அவளிடம் இல்லை. எலும்பைத் தொடக்கூடிய அந்த அணைப்பினால் சற்றுச் சிணுங்கிய சைலேந்திரி, "சாலினி, என் மீது உனக்கு மிக்க அன்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்கிறேன். தாய் அன்பைத் தவிர, வேறு அன்பையே அனுபவிக்காதவள் நான். காம்போஜத்தில் நான் வளர்ந்த விதமே வேறு. என்னைத் துணைக்கு அழைத்து வந்த பெரியவர், கண்டிப்பு நிறைந்த அன்பை என்னிடம் செலுத்தி வந்தார். அவர் துணை இருக்கும் துணிவில்தான் நான் பல்லவ நாட்டிற்கு வந்தேன். நந்தீசப் பெருமாள் என்னையும் அவரையும் பிரிக்கச் சதி செய்து, என்னை சிவிகையில் அனுப்பினார். அவரைக் குதிரை மீதேற்றி அனுப்பினார் என நினைக்கிறேன். என்னை எதற்கு இங்கே அழைத்து வந்திருக்கிறார்? அவருக்குப் பெண்ணாசை இல்லை என்கிறீர்கள். அப்படியென்றால் வேறு எதில் ஆசை? எனக்குத் தோன்றுகிறது, வீணையைக் கற்றுக் கொள்ளாமல் என் நாட்டிற்கே திரும்பி விடலாம் என்று. ஏதோ, அடுத்த கிராமமா, ஊரா நான் திரும்பிச் செல்ல? எனக்கு உதவ யார் இருக்கிறார்கள்? காஞ்சிபுரத்தில் ஓர் முகவரியை என் தாய் சொல்லியிருக்கிறாள். என் மீது நம்பிக்கை கொண்டிருக்கிறீர்கள். என் மீது அன்பு கொண்டிருக்கிறீர்கள். அதனால்தான் உங்களைப் பற்றிய உண்மையை

என்னிடம் சொல்லி விட்டீர்கள். சாலினி, எனக்கு நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும்'' என்று சைலேந்திரி பேசி முடிக்கும்போது, அவள் குரல் தழதழத்தது.

சாலினி, மறுமொழி கூறாமல் சிரித்தாள். அந்தச் சிரிப்புக்கு என்ன பொருள்? புரிந்து கொள்ள முடியவில்லை.

சைலேந்திரிக்கு, இரவு உறக்கம் வருவதில்லை. நடுநிசி நெருங்கும் நேரத்தில் திரைச் சீலையை உற்று நோக்குவாள். வெளிச்சம் அடுத்த அறையிலிருந்து வருகிறதா என்று பார்ப்பாள். தடை ஏதாவது இருந்தால் வெளிச்சம் வராது என்பதால், கதவருகே சென்று, அந்தக் கூடத்தில் பேச்சுக் குரல் கேட்கிறதா என்று உற்றுக் கவனிப்பாள். மீண்டும் உறக்கம் வரும் வரையில் கதவருகே நின்றிருப்பாள். பிறகு உறக்கம் விழிகளை அடிமைப் படுத்தும். காலையில் வழக்கம் போல் சாலினி எழுப்புவாள், சிறிது நேரம் பேசிக் கொண்டிருப்பார்கள். நாளை என்ன நடக்கப் போகிறதோ என்ற கவலையும், எதிர்காலம் இருண்டிருப்பது போன்ற தோற்றமும் அவளை மெலிவடையச் செய்யும்.

அன்று மாலையிலிருந்தே அவள் மனம் அலை பாய்ந்து கொண்டிருந்தது. வீணையை எடுத்து, அதைக் குழந்தைபோல் தன் மார்புடன் அணைத்துக் கொண்டாள்.

'வீணாவதி, என் செல்லமே! இந்தப் பயங்கர வீட்டினின்று, ஒருவரும் அறியாமல் வெளியேறிச் சென்று விடலாம் என்று நான் முடிவு செய்தாலும், உன்னை விட்டுப் பிரிய எனக்கு மனம் வரவில்லையே. உன்னையும் எடுத்துக் கொண்டு சென்று விடமுடியுமா? நான் என்ன செய்வேன்?'

வீணையின் சுருதியைச் சரிசெய்தாள். காம்போஜத்தில் மாணிக்க வாசகரின் திருவாசம், பரவலாக எல்லோரும் கற்றிருந்தார்கள். தான் அறிந்த பாடலை வீணையில் மீட்டினாள். மாலை மங்கி, இரவு படர்ந்து, அடர்ந்த நடுநிசியை நெருங்கும் வரை, அவள், தான் கற்றறிந்தவற்றையெல்லாம் இனிய ஒலி மாலையாகத் தொகுத்துக் கொண்டிருந்தாள்.

நடுநிசி நெருங்கிக் கொண்டிருந்தது. திடீரென ஒளிக்கீற்று அந்த அறையில் பரவியது. சைலேந்திரி கதவுக்கருகே விரைந்தாள்.

அங்கே பரமகுரு கதவின் பக்கம் முதுகு தெரிய உட்கார்ந்திருந்தார். சாலினி வெள்ளித் தட்டிலிருந்து சோற்றை உருண்டையாக்கி, அவர் கரத்தில் இட்டுக் கொண்டிருந்தாள். பேச்சுக் குரல் கேட்கிறது.

இனிய வீணையின் நாதம் எங்கிருந்து வருகிறது என்று அவர் கேட்கிறார். சாலினி உடனே மறுமொழி சொல்லாமல், வேறு ஏதோ



சொல்கிறாள். அருகே இருந்த செம்பிலிருந்து நீரெடுத்து, அவர் வாயைத் துடைக்கிறாள்.

பரமகுரு மீண்டும் கேட்கிறார். "வீணையின் நாதம் அருகே உள்ள அறையிலிருந்து வருகிறதே. யார் மீட்டுகிறார்கள்?'' என்று.

இனியும் மறுமொழி கூறாமல் இருக்க முடியாது என்று, சாலினி உண்மையைச் சொல்ல முற்படுகிறாள்.

வீணை பயில்வதற்காக காம்போஜ நாட்டிலிருந்து வந்திருக்கும் சைலேந்திரியைப் பற்றி அவள் கூறுகிறாள்.

"காம்போஜ நாட்டிலிருந்தா? அழகிய இளம் பெண்ணா? அவளை ஏன் என்னிடம் அழைத்து வரவில்லை?'' அவர் குரலில் கடுமை இருக்கிறது. "சாலினி, சில நாட்களாக நீ பலவற்றை மறைக்க முயல்கிறாய். நேற்று முகுந்தன் என்ற இளைஞன் இங்கு வந்திருக்கிறான். அவன் வந்ததைப் பற்றி ஏன் சொல்லவில்லை?'' என்று அவளைக் கடிந்து கொள்கிறார்.

"நீங்கள் அப்பொழுது ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தீர்கள். தங்களைத் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. அதனால்தான்'' என்று சாலினி கூறுகிறாள். மரியாதையும், பயமும் குரலில் கலந்திருந்தன.

"இல்லை, இல்லை... நந்தீசன் உன்னிடம் ஏதோ சொல்லிருக்கிறான். நந்தீசன் ஏன் இங்கு வருகிறான்?'' என்று பரமகுரு மீண்டும் உரத்த குரலில் கேட்கிறார்.

"அவரை வரவேண்டாம் என்று தடுக்க நான் யார்? இந்த ஊரில் பெரிய அதிகாரி. இளவரசர் சித்திரமாயனுடன் அவரும் இங்கு வருகிறார். உங்கள் வீணை இசையில் மயங்கிப் போகிறார். இந்த வீட்டில் ஒவ்வொரு இடத்திற்கும் சுதந்திரமாக அவர் செல்கிறார். அவரை நான் எப்படித் தடுக்க முடியும்?'' என்று சாலினி கூறும்போது அவள் குரல் தழதழக்கிறது.

"காம்போஜ நாட்டுப் பெண்ணை, இந்த வீட்டிற்குக் கொண்டு சேர்த்ததும் அவன்தானே?'' பரமகுரு சீறுகிறார்.

"ஆமாம்.''

"என்னிடம் சொல்லக்கூடாது என்று உன்னைத் தடுப்பதும் அவன் தானே?''

சாலினி மௌனமாயிருக்கிறாள்.

"பேச்சு ஏன் நின்றுவிட்டது? வீணையுடன் வந்துள்ள அயல் நாட்டுப் பெண்ணை இந்த வீட்டில் அடைத்து வைத்துவிட்டு, அது பற்றி என்னிடம் கூறக்கூடாது என்று அவன் சொல்வதற்கு, நீ உடந்தையாக

இருக்கிறாய். இளவரசர் சித்திரமாயன் நாளைக்கு இங்கு வரும்போது இதுபற்றி நான் அவரிடம் சொல்கிறேன்" என்று பரமகுர கூறுகிறார். சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவுகிறது.

பிறகு சாலினி விம்மும் ஒலி கேட்கிறது. "சாலினி, எங்கே இருக்கிறாய்? ஏன் அழுகிறாய்? இங்கே வா" என்று பரமகுரு அழைக்கிறார். அவர் எழுந்து நிற்கிறார். தடுமாறியவாறு சாலினி இருக்கும் இடம் நோக்கிச் செல்ல முற்படுகிறார்.

"சாலினி, சாலினி, இங்கே வா. உன்னை நான் என்ன சொல்லி விட்டேன்? ஏன் அழுகிறாய்? ஐயோ, நெஞ்சை அடைப்பதுபோல் இருக்கிறது. சிறிது தண்ணீர் கொடு" என்று சொல்லியவாறு, தட்டுத் தடுமாறி நடக்கிறார்.

சாலினி விரைந்து அவர் அருகே வருகிறாள். குடிக்க நீர் கொடுத்து விட்டு, மெல்ல அவர் மார்பைத் தடவிக் கொடுக்கிறாள். நெஞ்சு வலி என்று அவர் பொய் சொன்னார் என்று புரிந்துகொண்டு, அவரிடம் பொய்க் கோபம் கொள்கிறாள். "அடிக்கடி நெஞ்சுவலி வரக்கூடாது" என்று மெல்லியதாகச் சிரித்தவாறு சொல்கிறாள். அவர் கன்னத்தில் இலேசாகத் தட்டுகிறாள். அவர் சிரிப்பது கேட்கிறது. "அவன் பொல்லாதவன், மோசக்காரன். உன்னை ஏமாற்றி விடுவான். என்னிடமிருந்து உன்னைப் பிரித்து விடுவான். உன் நன்மைக்குத்தான் சொன்னேன்" என்று கூறி, சாலினியைத் தன் பக்கமாக இழுத்து மார்புடன் அணைத்துக் கொள்கிறார். அவள் இரு கரங்களும், அவர் கழுத்தில் மாலையாகின்றன. அவர் கரங்கள், அவளுடைய முதுகை மெல்ல இதமாகத் தடவுகின்றன. பிறகு அவளுடைய விழி நீரைத் துடைக்கின்றன.

சாலினி மெல்லக் குரல் கொடுக்கிறாள். கூடத்து நடைக் கதவைத் தாளிடவில்லை என்றும், யாராவது பார்த்துவிடப் போகிறார்கள் என்றும் சொல்கிறாள்.

"இந்த வீட்டிற்குள் நுழைய தோட்டத்தைக் கடந்து வரவேண்டும் என்று உனக்குத் தெரியாதா? வாயிலில் காவலர்கள் இருக்கிறார்களா? அல்லது நந்தீசன் அவர்களையும் வேலையிலிருந்து நீக்கிவிட்டானா?" பரமகுரு சிரிப்பது கேட்கிறது. அவர் முதுகுப்புறம் மட்டுமே சைலேந்திரிக்குத் தெரிகிறது. பின் புறத்திலிருந்தே அவருடைய கம்பீரத் தோற்றம் புலப்படுகிறது.

சைலேந்திரிக்கு அதற்கு மேல், அங்கு நடப்பனவற்றைப் பார்க்கப் பிடிக்கவில்லை. அருவருப்பாக இருக்கிறது. அவள் மேனி மெல்லச் சிலிர்க்கிறது. கூசுகிறது. திடீரென விண்மீன் ஒன்று, வான உச்சியிலிருந்து



சரிந்து விழுவதுபோல் தோன்றுகிறது. செந்நிறச் சூரிய வட்டத்தில், ஒரு கறுப்புக் கோடு விழுந்ததுபோல் தோன்றுகிறது. அங்கே விளக்கு அணைகிறது. ஒன்றுமே புலப்படாமல் இருள் சூழ்கிறது.

படுக்கையில் வந்து சரிகிறாள். விம்மி விம்மி அழவேண்டும்போல் தோன்றுகிறது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நாடகக் காட்சி. சாலினி எனும் பெண் மாய மோகினியா? சாளுக்கிய நாட்டிலிருந்து, பரிவாதினியைக் கவர்ந்து செல்ல வந்தேன் என்று அவள் சொன்னது கற்பனையா?

நந்தீசப் பெருமாளை, பரமகுரு ஏன் வெறுக்கிறார்? இளவரசர் சித்திரமாயன் அந்த வீட்டிற்கு வந்து கூடிப் பேசுவது, சூழ்ச்சி செய்வது ஏன்? பரமகுருவுக்கு அது தெரியாதா?

அவர் ஏன் தட்டுத் தடுமாறி நடக்கிறார்? மகளைப் போன்ற வயதுடைய சாலினியிடம், அவர் நடந்து கொள்ளும் முறை ஒழுக்கமுடையதாக இல்லையே!

ஓ! என்னைக்கூட பரமகுரு அவ்வாறுதான் பயன்படுத்திக் கொள்வாரா? நாம் இனியும் இங்கே இருக்கக்கூடாது; நாளைக்கே புறப்பட்டு விடுவோம் என்று எண்ணினாள். உறங்கிப் போனாள்.

மறுநாள் வழக்கம் போல் வெயில் சுள்ளென்று உறைக்கும்போது, அவளைச் சாலினி எழுப்பினாள்.

"இன்றுகூட கனவு கண்டாயா? சைலேந்திரி?" என்று சாலினி கேட்டாள் புன்முறுவலுடன்.

"ஆம்" என்று தலையசைத்த சைலேந்திரி, "பயங்கரமான கனவு சாலினி" என்று தொடங்கியவள், முதல் நாள் இரவு, தான் கண்டவற்றில் சிறிது கற்பனை கலந்து, கதை போல் கூறினாள்.

"சாலினி, எனக்குப் பயமாக இருக்கிறது சாலினி. உங்கள் சுற்புக்கு பங்கம் வரும்போல் தோன்றுகிறது. நாம் இருவருமே இங்கிருந்து தப்பி விடுவோமா?" என்று கேட்டாள்.

# 8

முதல் நாள் இரவு கண்ட காட்சியைக் கனவு கண்டதாகக் கற்பனை சேர்த்து, தான் மிகப் பயப்படுபவள்போல் நடித்து சைலேந்திரி கூறவும், சைலேந்திரியின் கனவுச் சக்தியின் மீது, சாலினிக்கு நம்பிக்கை ஏற்பட்டது. அதனால் மறைக்காமல் சில உண்மைகளைக் கூறினாள்.

"சைலேந்திரி, நீ நினைப்பதுபோல் என் கற்புக்கு இப்போது புதிதாக எந்த ஆபத்தும் நேராது. வாழ்க்கையில் என்னை நான் பலமுறை இழந்து விட்டேன். என் கதையே விசித்திரமானது. வாதாபிக்கு அருகே உள்ள சிறு கிராமத்தில் நான் பிறந்தேன்" என்று சாலினி தொடங்கினாள்.

"வாதாபி எங்கே இருக்கிறது?" சைலேந்திரி கேட்டாள்.

"சாளுக்கியர்களின் தலைநகரம் வாதாபி. பல்லவர்களைவிட சாளுக்கியர்கள் வலிமை மிக்கவர்கள். காஞ்சிமாநகரைவிட வாதாபி பெரிய நகரம்" – சாலினி சொல்ல, சைலேந்திரி சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"நகரேஷு காஞ்சி என்று கற்றறிந்தவர்கள் புகழ்கிறார்கள். என்ன இருந்தாலும், தாய் நாட்டுப் பற்று இல்லாமலா போகும்? வாதாபியை உயர்த்திப் பேச அதுதான் கராணம். அதனால் சிரித்தேன்."

"சைலேந்திரி, இப்போது எனக்குத் தாய் நாடு எது என்பதே நினைவில்லை. பல்லவ நாட்டிற்கு வந்து பத்து ஆண்டுகளாகின்றன. காஞ்சிபுரத்தில் சில ஆண்டுகள் கழித்தேன். பிறகு பூஞ்சேரிக்கு வந்து விட்டேன். பரிவாதினி வீணையை எப்படியாவது கவர்ந்து வரவேண்டும் என்று கட்டளையிட்டு, என்னை விக்கிரமாதித்தன் காஞ்சிக்கு அனுப்பினார்."

"விக்கிரமாதித்தன் யார்?"

"சாளுக்கிய நாட்டு மன்னர். பல்லவர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் தீராத பகை."

"விரோதம் ஏன் ஏற்பட்டது? பாஷை தகராறா?"



"பகை ஏற்படுவதற்கு எவ்வளவோ காரணங்கள். பல்லவ மன்னர் நரசிம்மவர்மர் காலத்திலிருந்து பல்லவ-சாளுக்கியர்களுக்கிடையே விரோதம் வளர்ந்து வருகிறது; குறையவில்லை. காஞ்சி நகரம் கலையில் முன்னேற்றி வருவது, ஓர் காரணம். மாமல்லபுரத்தைச் சிற்பக் களஞ்சியமாக்கப் பல்லவ மன்னர்கள் மாமல்லன், ராஜசிம்மன், பரமேச்வரவர்மன் முயன்று முன்னேறி வருவது, சாளுக்கியர்களுக்குப் பொறாமையை ஏற்படுத்தியது. கொங்கு நாட்டை, கதம்ப நாட்டைப் பல்லவர்கள் வென்று விட்டது மற்றொரு காரணம். நரசிம்மவர்மன், வாதாபி நகரைத் தீயிட்டதை அவர்கள் மறக்கவில்லை. அதனால் பல தடவை காஞ்சி நகரைச் சாளுக்கியர்கள் முற்றுகை இட்டனர். காஞ்சியைச் சுற்றி கடும் போர் நடைபெற்றது."

"ஓ! காம்போஜ நாட்டிலுள்ளவர்களுக்கு இவ்வளவு செய்திகள் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லை. காம்போஜத்தில் ஆட்சி நடத்துபவர்கள் காஞ்சிப் பல்லவர்களுக்கு மிக நண்பர்கள், பல்லவர்களுக்கு விசுவாசமாக இருப்பவர்கள். இங்கே சிவனுக்கும், திருமாலுக்கும் கோயில்கள் கட்டப் பட்டன. அதைப்போல் அங்கும் கோயில்கள் உள்ளன. பல்லவ மன்னர்கள் உதவி புரிந்தனர். இவற்றைப் பார்த்துச் சாளுக்கியர்கள் பொறாமைப் படுவது சரியா?"

"சைலேந்திரி, நமக்கு எதற்கு அரச விவகாரங்கள். நல்லதற்கோ கெட்டதற்கோ விக்கிரமாதித்தன் மகன் கீர்த்திவர்மனின் பார்வை என் மீது பட்டது. என் குடும்பம் வாதாபி மாளிகையில் பணியாற்றி வந்ததுதான் அதற்குக் காரணம். எனக்கு நாட்டியம் தெரியும். இனிய குரல் உண்டு. ஆனால், உன்னைப் போல் எனக்கு வீணை வாசிக்கத் தெரியாது. அழகும், கலையும் ஒன்று சேர்ந்த ஒரு பெண் மீது அரச பார்வை வீழ்வதில் வியப்பில்லை. கலையுணர்வு உள்ளவர் பல்லவ நாட்டில் எங்கும் செல்லலாம் என்றறிந்த கீர்த்திவர்மன், என்னைக் காஞ்சிக்கு அனுப்பினார். வெற்றியுடன் திரும்பினால் வாதாபி அரண்மனையில் பெரும் மதிப்பு கிடைக்கும் என்ற ஆசையும், நம்பிக்கையும் காரணமாக நான் காஞ்சி செல்லச் சம்மதித்தேன். பரிவாதினி வீணையை எப்படியாவது காஞ்சியிலிருந்து கவர்ந்து வந்துவிட வேண்டும் என்பது கீர்த்திவர்மனின் கட்டளை. பரிவாதினி வீணையைக் காஞ்சியினின்று கொண்டு வருவது ஒன்றும், கடினமான காரியமாக எனக்குத் தோன்றவில்லை. அதனால், நான் துணிவுடன் சாளுக்கிய மன்னரைக் கேட்டேன்: "பரிவாதினி வீணையைக் கொண்டு கொடுத்தால் எனக்கு என்ன பரிசு தருவீர்கள்?"

"நீ கேட்பதைத் தருவேன்" என்று அவர் கூறினார். "நிஜமாகவா?" என்று கேட்டேன். 'ஆமாம், சத்தியமாக' என்று என் கரத்தைப் பிடித்து, தன் வலது கரத்தால் சத்தியம் செய்தார். இளவரசர் அப்படிச் சொன்னது எனக்குப் பெருமையாக இருந்தது. என் கரத்தை அவர் தொட்டபோது

என் உடல் சிலிர்த்தது. அந்தக் கரத்தை எப்போழுதுமே பற்றியிருக்க வேண்டும் என்ற குரூரமான ஆசை எழுந்தது. என் அழகை ஆராதிப்பவர்கள் வாதாபியில் அதிகம். கடைவிழிப் பார்வையாவது தன் மீது விழாதா என்று ஏங்குபவர்கள் அதிகம் என்பதை நான் அறிவேன். ஆனால், என் இலட்சியம் வாதாபி மாளிகையில் அரசரின் அபிமானமிக்கவளாக உலா வரவேண்டும் என்பது. என்னைப்போன்ற அழகிகள் பலர் அங்கு இருந்தாலும், என் அறிவாற்றலின் மீது இளவரசருக்கு முழு நம்பிக்கை உண்டு. கீர்த்திவர்மனை என் அழகுக்கு அடிபணிய வைத்துவிட முடியும் என்ற உறுதி எனக்கிருந்தது. என் கரம் தொட்டு சத்தியம் செய்தபோதே, அவரைத் தழுவிக் கொள்ள வேண்டும் என்ற பரபரப்பு எனக்கிருந்தது. ஆனால், நான் சூழ்நிலை கருதி என்னை அடக்கிக் கொண்டேன். எடுத்த காரியத்தில் வெற்றி பெற்றால், வாதாபியை ஆட்டிப்படைக்கலாம் என்று கர்வம் ஏற்பட்டது. காஞ்சி சென்று பரிவாதினி வீணையை எப்படிக் கவர்ந்து வருவது என்பதற்கான திட்டங்களை அவர் வகுத்துக் கொடுத்தார். ஆபத்து ஏதாவது ஏற்பட்டால் உதவி புரிய மற்றொருவரையும் என்னுடன் உதவிக்கு அனுப்பினார். அங்குதான் சாளுக்கிய சக்கரவர்த்தி தவறு புரிந்து விட்டார். வாதாபியில் புறப்பட்டதிலிருந்தே அவன் என்னிடம் பழகிய முறை சரியில்லை. நான் நெருப்பு என்பதை அவன் புரிந்து கொண்டதால், என்னை அடையத் தக்க தருணத்தை எதிர்பார்த்திருக்கிறான் என்பதும் எனக்குத் தெரியும்."

சைலேந்திரி குறுக்கிட்டு, ஏதோ கேட்க விரும்பினாள். சாலினி சொல்வதில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பினாள்.

"வீட்டுக்குள்ளே சர்ப்பத்தை உலவ விட்டு, நிம்மதியாக எப்படித் தூங்க முடியும்? அவன் இன்னும் இருக்கிறானா? இவ்வளவு வருடமாகியும் அவன் சாளுக்கிய ஒற்றன் என்பதைப் பல்லவ ஒற்றர்கள் ஏன் தெரிந்து கொள்ளவில்லை?" சைலேந்திரி கேட்டாள்.

சாலினி திடுக்கிட்டாள். அறிவுப்பூர்வமான கேள்வியைச் சைலேந்திரி கேட்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டாள். தயக்கமில்லாமல், "அவன் இன்னும் இருக்கிறான். பல்லவ ஒற்றர்களுக்கு இருபுறத் தாக்குதல். அவர்கள் உட்பகைவரையும் கண்காணிக்க வேண்டியிருக்கிறது. சாளுக்கியர்களின் திட்டங்களையும் அறிந்து, அதற்கு ஏற்ப மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. அவன் சித்திரமாயனின் அணியில் கலந்து கொண்டான். எப்போதாவது இங்கே வருவான். நான் அவனைச் சந்திக்க விரும்பவில்லை" என்றாள்.

"பரிவாதினி வீணையை அடைய சாளுக்கிய அரசர் ஏன் ஆசைப் படுகிறார்?" சைலேந்திரி கேட்டாள்.



"பல்லவ சக்கரவர்த்தி மகேந்திரவர்மன் உருவாக்கியது பரிவாதினி வீணை. காஞ்சியில் அரியணை ஏறுவதற்கு முன்பு இளம் வயதில் அஜந்தாக் காடுகளுக்கு மாறுவேடத்தில் மகேந்திரன் வந்திருக்கிறார். அங்குதான் பரிவாதினி வீணையை உருவாக்கும் எண்ணம்* அவருக்கு ஏற்பட்டது. மகேந்திரன், சாளுக்கிய கலைஞர்களின் உதவியை மிகத் திறமையுடன் பெற்று, பரிவாதினியை உருவாக்கினார். பரிவாதினி எழுப்பும் இசைக்கு இணையே கிடையாது. நூறு போர்க்களங்களில் பெறும் வெற்றியைவிட, மகேந்திரன் படைத்த பரிவாதினி உலகப் புகழ் பெறச் செய்தது. கலை வளர்ப்பதில் பல்லவர்கள் உன்னத நிலையடையத் தொடங்கினார்கள். ஏழிசையை ஒலிக்கச் செய்யும் அற்புத வீணையைக் கண்டுபிடித்த பெருமையைப் பல்லவர்கள் பெற்றுவிட்டார்களே என்ற பொறாமை எழுந்தது."

"காஞ்சி நகரத்திற்கு வந்த பிறகு, பரிவாதினி வீணையை அடைவதற்கு நீங்கள் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லையா? அல்லது உங்கள் மனத்தை மாற்றிக்கொண்டு விட்டீர்களா?"

சைலேந்திரி கேட்டவுடன், சாலினியின் கண்கள் கலங்கின. எனினும் வெளியே புலப்படுத்தாமல், "சைலேந்திரி, இளம் வயதிலே உனக்கு அறிவுக்கூர்மை அதிகம் என்பதைக் கண்டு கொண்டேன். அதனால்தான் என் இரகசியத்தை உன்னிடம் சொல்ல முற்பட்டேன். ஒளிவு மறைவின்றி ஏன் சொல்கிறேன் என்று நீ நினைத்துப் பார்த்தாயா?" என்று கேட்டாள்.

"ஆமாம். நான் உங்களுக்கு அறிமுகமாகிச் சில நாள்களே ஆகின்றன. இந்த நாட்டிற்குப் புதியவள். அப்படியிருந்தும் முக்கியச் செய்திகளை ஏன் சொல்கிறீர்கள் என்ற சந்தேகம் என்னிடம் எழுவது நியாயம்தானே?"

"உன்னை எச்சரிக்கவே என் வரலாற்றைக் கூறினேன். காம்போஜ நாட்டிலிருந்து வீணை பயில, பல்லவ நாட்டிற்கு வந்திருக்கிறாய். உன்னையும் அரசியல் சூழ்ச்சியில் சிக்க வைத்துவிடப் போகிறார்கள். நான் வரும்போது இருந்ததைவிட, இப்போது நாட்டில் குழப்பம் அதிகமாகி வருகிறது. சித்திரமாயன், காஞ்சி மகுடத்தை அடைய மிகத் தீவிரமாகத் திட்டமிடுகிறார். தன்னை ஆதரிப்பவர்களின் அணியைத் திரட்டுகிறார். அவரும் இசைப் பிரியர். கலை ரசிகர். பரமகுருவின் நெருங்கிய நண்பர். இந்த வீடும் தோட்டமும் அமைத்துக் கொடுத்தவர் அவர்தான். அதனால் தான் அடிக்கடி சித்திரமாயன் இங்கே வருகிறார். இங்கே வரும்போது, முக்கியமான தன் ஆதரவாளர்களை இங்கே கூடுமாறு சொல்வார். இங்கே அவர்களுடன் ஆலோசனைகள் பல செய்வார்."

* 'விக்கிரமனின்' - பரிவாதினி நாவலில் படிக்கலாம்.

"பரமகுருவுக்கு இவை ஏதும் தெரியாதா?"

"தெரியாது. அவர் அரசியல் சூழ்ச்சிக்கு அப்பாற்பட்டவர். அவருடைய முப்பாட்டனாரும், பல்லவ சக்கரவர்த்தி மகேந்திரவர்மனும் கலைத் தோழர்கள். பரிவாதினி வீணையை மிகச்சிறந்த முறையில் உருவாக்க இருவரும் நேரம் போவது தெரியாமல் ஆராய்ச்சி செய்வார்களாம். ஸப்த ஸ்வரங்களும் துல்லியமாக ஒலிக்க, அவர்கள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமன்று. அந்தக் காலத்திலேயே திருநாவுக்கரசர் அந்த வீணையைப் பற்றி அறிந்திருக்கிறார். திருஞான சம்பந்தர் அந்த வீணையைப் பார்த்திருக்கிறார்."

சாலினி சொல்லச் சொல்ல, சைலேந்திரிக்கு ஆவல் பொங்கியது. "சாலினி, நீங்கள் பரிவாதினியைப் பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

சாலினி, விழிகளை மெல்ல மூடிக் கொண்டாள். நடந்த சம்பவம் ஒன்றை, மீண்டும் நினைவுக்குக் கொண்டு வர முயன்றாள்.

"சாலினி, காஞ்சிக்கு நான் வந்த சமயம், நந்திவர்மன் அரியணை ஏறிப் பத்தாவது ஆண்டுக் கொண்டாட்டம் காஞ்சியில் கோலாகலமாக நடைபெற்றது. புதிதாக சிவபெருமானுக்குக் கோயில் எழுப்பித்து, அன்று குடமுழுக்கு நடைபெற்றது. அன்று பௌர்ணமி நாள். முக்தேச்வரர் திருக்கோயிலின் எதிரே அமைக்கப்பட்டிருந்த விழா மேடையில், நந்திவர்மன் கம்பீரமாக அமர்ந்திருந்தார். பரிவாதினி வீணை மேடையின் ஓர் புறத்தே திகழ்ந்தது. வீணையில் பதிக்கப்பட்டிருந்த இரத்தின-மாணிக்கக் கற்கள் நிலவு ஒளியில் ஜ்வலித்தன. நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. சுற்றுப் புறத்திலுள்ள ஊர்களிலிருந்து மக்கள் ஏராளமாகக் கூடியிருந்தனர்.

வீணையை மீட்டப் போவது யார் என்று, மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். நிலவொளியும், ஆங்காங்கே தீவர்த்தியின் வெளிச்சமும், பக்க வாத்தியங்களின் ஓசையும், எனக்குப் பிரமிப்பை ஏற்படுத்தின. இது போன்ற கோலாகலமான நிகழ்ச்சியை நான் வாதாபியில் பார்த்ததில்லை.

பல்லவ மல்லன் என்று மக்கள் போற்றிப் புகழும் நந்திவர்மனின் இளமைத் தோற்றத்தையும், மாணிக்க வீணையின் அழகையும், நான் மாறி மாறிப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தேன். என் அருகே, சாளுக்கிய ஒற்றன் வந்தமர்ந்தான். என்னை இப்போது மிக முக்கியமானவரிடம் அழைத்துச் செல்லப் போவதாகக் கூறினான். அந்த இடத்தை விட்டகலவே எனக்கு மனமில்லை. கூட்டத்திலிருந்து வெளியே வந்து, ஒரு வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அங்கே சித்திரமாயனும் மற்றும் சிலரும் அமர்ந்திருந்தனர். அவர்கள் மிக அந்தரங்கமாக ஏதோ பேசிக் கொண்டிருந்தனர்.

நான் வணக்கம் தெரிவித்து, அச்சத்துடனும் நாணத்துடனும் நின்றேன்.



"ஓ! நீதான் சாளுக்கிய இளவரசர் கீர்த்திவர்மனால் அனுப்பப்பட்டவளா? அவருடைய தந்தை விக்கிரமாதித்தன் நலமுடன் இருக்கிறாரா? உன்னைக் காஞ்சிக்கு அனுப்பியதன் காரணத்தை எனக்கு அவர் எழுதியிருந்தார். சாளுக்கிய சக்கரவர்த்திக்கு வீணை மீது ஏன் ஆசை? அவரை நான் ஓர் உதவி கேட்டிருந்தேன். அதற்கு மறுமொழி எழுதவில்லை. எனக்கு அவர் உதவி செய்வதாக வாக்களித்தால், பரிவாதினி வீணை மட்டுமா, சமுத்ர கோஷம் என்ற புதிய வாத்யத்தையும் பரிசாக அளிக்கிறேன். கட்டுவாங்கம் என்ற ஆயுதம் மிகச் சக்தி வாய்ந்தது. அதையும் தருகிறேன் என்று சொல்லியிருந்தேன். எனக்கு உதவி செய்வதைப்பற்றி அவர் ஒன்றும் சொல்லவில்லையே?" என்று கேட்டார்.

பல்லவ அரியணையைத் தனக்கு மீட்டுத் தரவேண்டும் என்பது தான் அவர் கேட்ட உதவி. நான் மௌனமாக இருந்தேன். சித்திரமாயன் மெல்லச் சிரித்தார். "பெண்ணே! பரிவாதினியைக் கவர்ந்து செல்வது அவ்வளவு எளிதன்று. உனக்கு வீணை வாசிக்கத் தெரியுமா?" என்று கேட்டார்.

'தெரியாது' என்று தலையசைத்தேன். "வீணையைப் பற்றித் தெரியாமல் அதைக் கவர்வது அவ்வளவு எளிதா? என்ன துணிவுடன் நீ காஞ்சிக்கு வந்திருக்கிறாய்? இளமை, அழகு இவை தவிர, உன்னிடமுள்ள சக்தி வேறு என்ன?" என்று கேட்டார். பிறகு அவர் சிறிது நேரம் யோசித்து, அருகே நின்றிருந்த இளைஞனை அழைத்து, "இவளை, நம் பரமகுருவிடம் அழைத்துச் சென்று, அவர் வீட்டிலே தங்கியிருக்குமாறு ஏற்பாடு செய். அவரிடம் இவள் வீணை பயிலட்டும். தக்க தருணம் பார்த்து பரிவாதினியை எடுத்துச் செல்ல வழி செய்கிறேன்" என்றார்.

அவள் இதுவரை கூறியவற்றை, ஒரு கதை போல் ரசித்தாள் சைலேந்திரி. "அந்த இளைஞன் உங்களை, பரமகுருவிடம் அழைத்துச் சென்றாரா?" சைலேந்திரி கேட்டாள்.

"அந்த இளைஞன் – வேறு யாருமல்லர். நந்தீசப்பெருமாள்தான். என்னை அறிமுகப்படுத்தின அன்றிலிருந்து, நான் பரமகுருவின் வீட்டில் தங்கியிருக்கிறேன்" என்று கூறி நிறுத்தினாள்.

"தங்களையும் நந்தீசன்தான் அறிமுகப்படுத்தினாரா?" என்று கேட்டு பெருமூச்சு விட்டாள் சைலேந்திரி.

"ஆம், அதனால்தான் உன்னை எச்சரிக்க விரும்புகிறேன்" என்றாள் சாலினி.

"நாம் இருவரும் தப்பி ஓடிவிடலாமா?" சைலேந்திரி கேட்டாள்.

சாலினி உடனே மறுமொழி கூறாமல், ஒரு கணம் திகைத்து நின்றாள். அவள் அதிர்ச்சியடைந்தவள்போல் காணப்பட்டாள்.

அங்கே நந்தீசப் பெருமாள் நின்று கொண்டிருந்தான்.

# 9

நந்தீசப் பெருமாள், மீசையை மெல்லத் தடவிவிட்டுக் கொண்டான். அவன் பேசவில்லை. ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தான். தாங்கள் பேசிக் கொண்டிருந்ததை அவன் கேட்டிருந்தால், அடுத்து என்ன நேருமோ என்று அஞ்சினாள் சாலினி. அவள் பயத்தால் நடுங்கினாள். நடுக்கத்தைப் புலப்படுத்த விரும்பாமல், சைலேந்திரியின் தோளில் கையை வைத்து அழுத்தினாள்.

"சாலினி, நான் என்ன யோசிக்கிறேன் தெரியுமா?" என்று கேட்டான் நந்தீசன்.

அவன் பேச்சு விசித்திரமாக இருக்கும் என்பதை அவள் அறிவாள். அவள் பயந்ததுபோல் நடக்கவில்லை. அவர்கள் பேசிக் கொண்டிருந்ததை அவன் கேட்டிருக்கவில்லை என்பதை அறிந்தாள். துணிவு ஏற்பட்டது.

"நீங்கள் என்ன யோசிக்கிறீர்கள் என்று எனக்குச் சோதிடம் தெரியாது" என்று கூறி, நந்தீசனின் கடுமையான முகத்தை நகைமுக மாக்க முயன்றாள்.

"ஆமாம், உனக்கு ஒன்றும் தெரியாது. உன்னை எதற்காக சாளுக்கிய இளவரசன் இங்கு அனுப்பினான் என்பதையே மறந்து விட்டாய். அழகு ஒன்று மட்டும் இருந்தால் போதுமா? பரமகுருவிடம் வீணை பயிலச் சொன்னால், அவரிடம் காதல் பயின்று வருகிறாய்"- அவன் நகைச் சுவையாகக் கூறி, அங்கே கலகலப்பை ஏற்படுத்த முயன்றான்.

ஆனால், சாலினியின் முகம் சினத்தால் சிவந்தது. சைலேந்திரியின் எதிரே, பரமகுருவுக்கும் தனக்கும் உள்ள உறவை வெளிச்சப்படுத்த



முயல்கிறானே என்று கோபம் கொண்டாள். அவனை விழுங்கி விடுபவள் போல் பார்த்து, "பெருமாளே, நாவை அடக்கிப் பேசுவது நல்லது. எதைச் சொல்லலாம், சொல்லக் கூடாது என்ற இங்கிதம் தெரியாமல் இருக்கும் உனக்கு மீசை மட்டும்தான் கூர்மை"- சீறினாள்.

சைலேந்திரியின் எதிரே, தன் மீசையைப் பழித்த சாலினி மீது நந்தீசனுக்கு அடங்காக் கோபம் எழுந்தாலும், அப்போது வந்திருக்கும் காரியம் பாழாகிவிடுமே என்று அடக்கிக் கொண்டு, பேச்சின் திசையைத் திருப்ப விரும்பி, "சாலினி, வேடிக்கைப் பேச்சை ரசிக்கவும் உனக்குத் தெரியவில்லை. உன் நன்மைக்குத்தான் சொன்னேன்" என்றான்.

"எது என் நன்மை?"- சாலினி சீறினாள். கோபம் தணியவில்லை.

"வாதாபியிலிருந்து ஆள் வந்து விட்டார். 'பரிவாதினி வீணையைப் பற்றி நீ என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறாய்' என்று அவன் கேட்கிறான். என்ன மறுமொழி கூறுவது? உன்னைப் பரமகுருவிடம் வீணை பயிலச் சொன்னால்..." என்று கூறி, கீழ்க் கண்களால் நோக்கினான்.

வாதாபி இளவரசரின் ஒற்றன் வந்துவிட்டான் என்ற செய்தியைக் கேட்கும்போது, அவளுக்குச் சிறிது அச்சமாக இருந்தது.

தன் எதிரே அவர்களால் மனம் விட்டுப் பேசமுடியவில்லை என்பதை உணர்ந்தாள். சைலேந்திரிக்கு அங்கு நிற்பது சற்றுச் சங்கடத்தை அளித்தது. அங்கிருந்து மெல்ல நகர்ந்து, தன் அறைக்குச் சென்றாள்.

பகல் முழுவதும் சாலினி அவளைச் சந்திக்கவில்லை. சைலேந்திரி, தீவிரமாகச் சிந்தித்தாள். பரமகுருவைச் சந்திக்க சாலினி ஏன் தடையா யிருக்கிறாள் என்பது அவளுக்குப் புரியவில்லை. துணிந்து, அன்று இரவு பரமகுருவைச் சந்தித்துவிடுவது என்று முடிவு செய்தாள்.

பௌர்ணமிக்கு முதல் நாள். இன்னும் முதிராத மதிவாணன் வானத்தில் பவனி வந்து, உச்சிக்கு வந்துவிட்ட வேளை. அடுத்த அறையில் என்ன நடக்கிறது என்று கூர்ந்து கவனித்தாள் சைலேந்திரி.

யாரோ விம்மும் ஒலி கேட்டது. விழிகளையும், செவிகளையும் கூர்மையாக்கி இடைவெளி வழியே உற்று நோக்கினாள். அவள் கண்ட காட்சி திடுக்கிட வைத்தது.

பரமகுருவின் மடியில் சாலினி படுத்திருந்தாள். அவள் அழுது கொண்டிருக்கிறாள் என்பது தெரிந்தது. பரமகுரு, அவள் கேசத்தை வருடினார். முதுகை வருடினார்.

"இன்று முகுந்தன் வருவதாகச் சொல்லிச் சென்றிருக்கிறார். பகல் வேளையில் வருவதற்கு ஓய்வில்லையாம். காஞ்சி வேத பாடசாலையில்,

அவர் அர்த்த சாத்திரம் போதிக்கிறார். சங்கீதம் சம்பந்தமாக ஓய்வாக சிலவற்றைப் பேச விரும்புகிறார். அவர் வரும்போது நீ அழுத முகத்தோடு இங்கு இருக்காதே'' என்றார்.

சாலினி விம்முங் குரலோடு, ''என்றாவது நான் துக்கித்து நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? நந்தீசன் என்னை அந்தப் பெண் எதிரே அவமானப் படுத்திவிட்டான். நீங்கள் அவனைக் கண்டிக்க வேண்டும்; சித்திரமாயனி டம் சொல்லித் தண்டிக்க வேண்டும்'' என்றாள்.

''பெண்ணா? இங்கே உன்னைத் தவிர வேறு பெண் யார் இருக்கிறாள்? எனக்குப் பணிவிடை செய்து வந்த இரண்டு பெண் களையும் நீ நிறுத்திவிட்டாய். வேறு பெண்ணை வேலைக்கு அமர்த்தி யிருக்கிறாயா?'' என்று கேட்டார். 151984/5431584

சாலினி திகைத்திருக்க வேண்டும். அவர் மடியிலிருந்து எழுந்து உட்கார்ந்து, ''குருவே, உங்களிடம் சில நாள்களாக நான் ஒரு செய்தியை மறைத்துவிட்டேன். உங்கள் நன்மைக்காகத்தான், நந்தீசன் இங்கு ஒரு பெண்ணை அழைத்து வந்து, ஓர் அறையில் அடைத்து வைத்திருக்கிறார்.''

''ஓ!''– பரமகுரு வியப்புடன் குரல் கொடுத்தார். ''இந்த வீடு என்ன சிறைச்சாலையா? மர்ம மாளிகையா? சில நாள்களாக அப்படியொரு சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. நான் யாரிடம் கேட்பேன். என் இயலா மையை நீ சாதகமாக்கிக் கொண்டு விட்டாய் என்று தோன்றுகிறது. யார் அந்தப் பெண்? அவளை இங்கு ஏன் கொண்டு சேர்த்திருக்கிறான்?''– பரமகுருவின் குரலில் கடுமையிருந்தது.

சைலேந்திரிக்குச் சில செய்திகள் புரிந்தன. பல செய்திகள் மர்மமாக இருந்தன. அந்த வீட்டில் நடப்பது பரமகுருவுக்குத் தெரியாதா? ஆச்சர்யமாக இருக்கிறதே! 'என் இயலாமையை நீ சாதகமாக்கிக் கொண்டு விட்டாய்' என்று அவர் கேட்கிறாரே, அது என்ன? அங்கு நடப்பது ஒவ்வொன்றும், அவள் காதில் விழுவது ஒவ்வொன்றும் அவளுக்கு அதிர்ச்சியை அளிக்கின்றன. முகுந்தன் யார்? அவரும் வீணை பயில்கிறார் போலிருக்கிறது. நந்தீசனின் சதித் திட்டங்கள் பரமகுருவுக்கு தெரியாதா? நான் வந்திருப்பது அவருக்குத் தெரியாதா?' சைலேந்திரி, மேலும் கூர்ந்து நோக்கினாள்.

''நான் பெரும் ஆபத்தில் சிக்கியிருக்கிறேன் குரு. என்னை நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும்.'' சாலினி பரமகுருவின் கரத்தை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டாள்.

''சாலினி, வாதாபியிலிருந்து வீணை பயில வந்தவள் நீ என்பது, எனக்குத் தெரியும். உனக்கு என்ன ஆபத்து?'' –பரமகுரு கேட்டார்.



''வீணை பயிலாததுதான் ஆபத்து என்று சொல்'' என்று கூறி அவர் சிரித்தார்.

சாலினி, அவர் கரங்களைத் தன் கன்னத்தில் பதிய வைத்துக் கொண்டு அவருக்கு மட்டும் கேட்கும் கொஞ்சும் குரலில் ஏதோ கூறினாள்.

மீண்டும் அவர் சிரித்தார். அவளும் சேர்ந்து நகைத்தாள். என்ன சொல்லியிருப்பாள் என்று சைலேந்திரியால் ஊகிக்க இயலவில்லை.

''பல்லவ நாட்டிற்கு வந்த காரியத்தை மறந்து, உங்களிடம் நான் மயங்கி விட்டேனாம்'' என்றாள் சாலினி.

மங்கிய வெளிச்சத்தில், அவருடைய அணைப்பில் திணறியவாறு அவள் பேசுவது தெரிந்தது.

''உங்களை முதன் முதலில் சந்தித்தபோதே உங்கள் அடிமையாகி விட்டேன். உங்களுக்கு இறைவன் கலைத் திறமையுடன் கம்பீரமான அழகையும் கொடுத்திருக்கிறான்'' என்று அவள் பேசினாள்.

''உன்னைப் பார்க்காமலேயே, எனக்கு உன் மீது ஏற்பட்டது பாசமா, ஆசையா, காதலா, காமமா? எனக்குப் புரியவில்லை சாலினி'' அவர் குரல் ஏன் இப்படித் தடுமாறுகிறது.

சைலேந்திரிக்கு எல்லாமே புதிராக இருந்தது. ஓர் வீணை மேதை, சாலினியிடம் மயங்கி விட்டார். 'உன்னைப் பார்க்காமலேயே...' என்கிறாரே, என்ன விசித்திரம்? தினம்தோறும் பார்த்துக் கொண்டிருக்கிறாரே?

சைலேந்திரி, அந்தக் கதவருகே அதற்குப் பிறகு நிற்கவும், அங்கு நடப்பதைப் பார்க்கவும் விரும்பவில்லை. அவள் முகம் சுளித்தவாறு, தன் படுக்கையருகே வந்தாள். காம்போஜத்திலுள்ள தன் தாயை நினைத்துக் கொண்டாள்.

'அன்னையே! அங்கே நீங்கள் நாள்தோறும் என் நலனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பீர்கள். வீணைக் கலையில் பல நுணுக் கங்களைக் கற்று நான் அங்கு வந்து, காம்போஜத்தில் ஒரு கலைவாணி என்று புகழப்பட வேண்டும் என்று நீங்கள் கனவு காண்கிறீர்கள். என் ஒழுக்கத்தின் மீது தங்களுக்கு அபாரமான நம்பிக்கை என்றாலும், துணைக்குப் பெரியவரை அனுப்பினீர்கள் அம்மா. எப்படி அம்மா உங்களுக்குத் தெரிவிப்பேன்? அவர் எங்கு சென்றார்? நந்தீசன் என்ற பயங்கரமான மனிதரிடம் அவர் சிக்கி விட்டார். என்ன ஆகுமோ தெரியவில்லை? வீணைக் கலையின் மேதையின் வீட்டிலேயே நான் தங்கியிருக்கிறேன். இன்றுவரை அவரைச் சந்திக்க முடியவில்லை.

என்னைப் போன்ற ஒரு பெண் வீணைக் கலைஞரிடம் வந்திருக்கிறாள். பரிவாதினி எனும் வீணையைக் கவர்ந்து செல்ல வந்தவள். வீணைக் கலைஞரின் மனத்தை அல்லவா கவர்ந்து விட்டாள். அம்மா, என்னைப் பொறுத்தருளுங்கள். தீயன பார்க்காதே என்று சொல்லியிருக்கிறீர்கள். அம்மா, நான் இன்று அந்தக் காட்சியைப் பார்த்திருக்கக் கூடாது. இப்படியும் ஒரு பெண், தன் இலட்சியத்தை மறந்து காமத்துக்கு அடிமையாவாளா? எனக்கும் அந்த நிலை வரக்கூடாதம்மா. பல்லவ நாட்டில் எல்லாம் புதிராக இருக்கிறது' சைலேந்திரி வாய்விட்டுப் புலம்பினாள்.

அவள் ஒரு முடிவுக்கு வந்து விட்டாள். 'இப்போது முகுந்தன் வரும் நேரம். பரமகுருவை விட்டு அகன்று, தன் அறைக்குச் சாலினி சென்றிருப்பாள். நாம் பரமகுருவைக் காணச் செல்வோம். துணிவுடன் செல்வோம்' என்ற உறுதியான முடிவுடன், தான் இருக்கும் வீட்டின் பின்புற இடத்தைவிட்டு, வீட்டின் முன்புறத்திற்கு வந்து, பரமகுரு வீற்றிருக்கும் கூடத்தை அணுகினாள். அங்கே கம்பீரமான யுவபுருஷன் ஒருவர் உட்கார்ந்திருந்தார். கருமையான தாடியும், தோள் வரை தொங்கும் தலை முடியுடன் அவர் காணப்பட்டார். பச்சை நிறச் சால்வை அணிந் திருந்தார். நெற்றியின் கீற்றுச் சந்தனம் பளிச்சென்று தெரிந்தது.

அவர்... அவர்தான் முகுந்தனோ?



# 10

"யார் வந்திருக்கிறார்கள்?"- பரமகுரு கேட்டார். அவர் இருந்த கூடத்தில் வேறு யாருமில்லை.

"சாலினி, எங்கே போய்விட்டாய்?"- பரமகுரு மீண்டும் குரல் கொடுத்தார்.

அவருக்கு இருளும் வெளிச்சமும் ஒன்றாய்த் தாீனிருக்கின்றன.

அங்கே ஒருவித நறுமணம் எழுந்தது. பரமகுரு அங்கு பரவும் மணத்தை நுகர முயன்றார்.

சைலேந்திரி கூடத்துக் கதவருகே நின்றாள், எந்த வித ஓசையு எழுப்பாமல்.

"நான்தான்"- முகுந்தன் குரல் கொடுத்தார்.

"நான்தான் என்றால்...?" என்று கேட்க வாயெடுத்தவர், குரலைப் புரிந்து கொண்டு, "ஓ, வாருங்கள், வாருங்கள், உட்காருங்கள்" என்று கூறி, வரவேற்க எழுந்தார்.

முகுந்தன் எழுந்து அவர் அருகே வந்து, "பரமகுரு, நீங்கள் உட்காருங்கள். நான் சற்று முன்பே வந்து விட்டேன். இங்கே கூடத்தில் ஒருவரையும் காணோம். சிறிது நேரமாக உட்கார்ந்திருக்கிறேன். இந்த வீட்டிற்கு நான் வரும்போது இங்கே, எப்போதும் புன்முறுவலுடன் வளைய வரும் பெண் எங்கே?" என்று கேட்டார்.

"நீங்கள் வரும்போது இப்போது உங்களை வரவேற்க யாரு மில்லையா! இந்த வீட்டைப்பற்றி எனக்குக் கவலை வந்துவிட்டது. வேண்டியபோது யாருமிருக்கமாட்டார்கள். இன்று நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள். உங்களை யார் என்று கேட்கக்கூட யாருமில்லை. என் நிலை அப்படியாகிவிட்டது" என்று வருத்தப்பட்டுக் கொண்டார் பரமகுரு.

பரமகுருவை அமைதிப்படுத்தி, "பரமகுரு, பூஞ்சேரியை விட்டு நீங்கள் காஞ்சிபுரத்திற்கு வந்து விடுங்கள். அங்கே உங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து வைக்கிறேன். நானும் வீணையை விரைவில் பயில்வதற்கு வசதியாக இருக்கும். இனி நாள்தோறும் நான் வீணை பயின்று ஆக வேண்டும்" என்றார்.

பரமகுரு மெல்லச் சிரித்தார்.

"என் பாட்டனார் பல்லவ சக்கரவர்த்தியுடன் நெருங்கிப் பழகியவர். மகேந்திரவர்மனுடன் இணைந்து, பரிவாதினி வீணையில் பல முன்னேற்றங்களைச் செய்தவர். அப்பொழுதுகூட பூஞ்சேரியில் இதே வீட்டிற்குத்தான் அவர்கள் வருவார்கள். என் கண் பார்வை, சிறிது சிறிதாக மங்கி, அடியோடு நான் பார்வையை இழந்த பிறகு, பல்லவ அரசருடன் தொடர்பு இல்லை. பாழும் போர் நடந்தது. நாட்டில் பஞ்சம் வந்தது; அப்போதும் எனக்குக் கவலையில்லை. சாளுக்கியர்கள் மாமல்லபுரம் வந்தார்கள். சாளுக்கிய இளவரசர் என்னையும் சந்தித்தார். வாதாபிக்கே அழைத்தார்கள். அவர்கள் அழைப்பை ஏற்று விடலாம் என்றும் எண்ணினேன். இங்கே மாமல்லபுரத்தில் நந்தீசன் என்ற அதிகாரி என்னிடம் மரியாதையுடனும், அன்புடனும் பழகினான். எனக்கு வேண்டிய உதவிகளைச் செய்யத் தொடங்கினான். வேலைக்காரர்களை ஏற்பாடு செய்தான். பார்வை முற்றிலுமாக மறைந்த பிறகு, எனக்கு நம்பிக்கையுள்ள உதவியாளர் தேவைப்பட்டது. நந்தீசனே அதையும் நிறைவேற்றினான். என்னிடம் வீணை பயில ஒரு பெண் வந்தாள்."

முகுந்தன் குறுக்கிட்டார். "தங்களுக்குப் பார்வை குறைந்து வரும் செய்தி காஞ்சிக்கு எட்டவில்லை. ஏகாம்பரீசர் கோயிலில் சிறந்த மருத்துவர்கள் இருக்கிறார்கள்" என்றார்.

"முகுந்தா! காஞ்சிபுரத்தில் குழப்பம் இப்போதுதான் குறைந்து சீர் பட்டுள்ளது. பாவம் நந்திவர்மன் எதைத்தான் கவனிப்பார்? அவர் தன் அரியணையைக் காப்பாற்றிக் கொள்ளவே படாதபாடுபடவேண்டிய நிலையில் உள்ளார். என்னைப் போன்ற கலைஞர்களைப் பற்றி அவருக்குக் கவனம் வருமா? உம். இருந்தாலும், மன்னரைப் பற்றி நல்ல செய்திகளைக் கேள்விப்படுகிறேன். அவர் கலை மீது ஆர்வமுள்ளவர். தெய்வபக்தி மிகுந்தவரென்று அறியும்போது, மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது." பரமகுரு பேசிக் கொண்டேயிருந்தார்.

வந்த காரியம் நிறைவேறாமல், பரமகுரு ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறாரே என்று நினைத்த முகுந்தன், பேச்சைத் திருப்ப விரும்பி, "அதுதான் நான் சொல்கிறேன், காஞ்சிக்கு வந்து விடுங்கள் என்று. ஒவ்வொரு



நாளும் காஞ்சியிலிருந்து பூஞ்சேரிக்கு வந்து திரும்புவதென்பது இயலாத காரியம். பயணக் களைப்பு நீங்கவே சரியாகிவிடும். நான் இன்று வந்தது, வீணையைக் குறித்து எனக்கு ஏற்பட்டுள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளவே. தொடங்கலாமா?" என்றார்.

"ஆகா! தங்கள் சந்தேகத்தை விளக்காமல் இருக்க முடியுமா? இதோ என் வீணையை எடுத்து வரச் சொல்கிறேன்" என்று கூறிய பரமகுரு, "யாரங்கே, சாலினி இங்கே வா"-என்று குரல் கொடுத்தார்.

சாலினி வரவில்லை. முகுந்தனே இப்போது பேசினார்: "பரமகுரு, பணி செய்பவர்களை மட்டும் நம்பி நீங்கள் இந்த வீட்டில் வசிப்பது சரியில்லை. நீங்கள் காஞ்சிபுரம் வந்துவிடுங்கள்."

"முகுந்தா, வேலைக்காரர்களை மட்டும் நான் நம்பவில்லை. சாலினி எனக்குச் சிறந்த பணிவிடை செய்கிறாள். அவள்தான் என் வாழ்நாளில் உறுதுணை. பார்க்கும் விழியாக விளங்குபவள் அவள்" என்றார்.

"பணிவிடை செய்ய பல காத தொலைவிலிருந்து அவள் வந்திருக்கிறாளா?"- முகுந்தன் கேட்டார்.

"ஆமாம்; வாதாபியிலிருந்து வந்திருக்கிறாள். வீணை கற்றுக் கொள்ளும் ஆர்வம் அவளிடம் ததும்பி நிற்கிறது."

"ஓ... வீணை கற்றுக்கொள்கிறாளா?"

"தினமும் காலையில் சிறிது நேரம். மாலையிலும் வீணையை எடுத்து வைத்துக் கொள்வாள்; ஆனால், யாராவது வந்துவிடுவார்கள். சில நாள்களாக அவளுக்கு ஓய்வில்லை; ஒழிவில்லை. அவள் மனத்தில் கலக்கம். காஞ்சிக்குச் செல்ல வேண்டும் என்று வற்புறுத்துகிறாள். ஏன் என்று தெரியவில்லை."

"காஞ்சிக்குச் செல்லக் காரணம் வேண்டுமா? நல்ல நாள் பார்த்துப் புறப்பட்டுவிடுங்கள்."

"அது மட்டும் முடியாது. அமைதியான இந்தப் பூஞ்சேரியை விட்டு சந்தடி மிகுந்த காஞ்சிக்கு வரமாட்டேன். காலை வேளையில் ஆணைச் சத்தத்தின் 'கீச் கீச்' என்ற ஒலியும், இளங்குளிரின் ஆனந்தத்தில் கூவும் குயிலின் இனிய குரலோசையும், கதிரவன் கதிர்கள் பட்டு மலரத் துடிக்கும் மலர்களின் மணமும், தென்னங்கீற்றுகளின் சலசலப்பும், சந்தடி மிகுந்த காஞ்சியில் கேட்டு அனுபவித்து ஆனந்தப்பட முடியுமா? முகுந்தா, என் பார்வை நன்றாக இருக்கும் வரையில், நான் காலையில் வெளிச்சம் பரவத் தொடங்கும் முன்பே, வீணையை மீட்டிப் பாடிவிட்டு, பிறகு வெளியே உலாவச் செல்வேன். ஏற்றம் இறைப்பவர்கள் பாட்டும், கிணற்று நீர் சலசலவென ஓடி வயல்களில் பாயும் ஓசையும், என் உள்ளத்தில் இசைத்

துடிப்பை அதிகப்படுத்தும். சில நாள்கள் மாமல்லபுரத்து- எல்லைவரை நடந்து செல்வேன். பூர்த்தியாகா சிற்ப மண்டபங்கள் அருகே நின்று பார்த்துப் பெருமூச்சு விடுவேன். வீட்டுக்கு வந்து புழக்கடைத் தோட்டத்து வாயிலில் பூத்திருக்கும் தாமரையையும், கூம்பியிருக்கும் ஆம்பலையும் கண்டு களித்தவாறு, நீராடி விட்டு வீட்டிற்குள் வருவேன். முகுந்தா அந்த இன்பம் காஞ்சியில் வருமா?"

முகுந்தன், பரமகுருவின் கரங்களைப் பற்றி, "காஞ்சியில் வராது என்று சொல்ல முடியாது; பூஞ்சேரியின் சூழ்நிலையை அங்கும் ஏற்படுத்த முடியும். நீங்கள் அங்கு வருவதால், நாட்டுக்குப் பல பலன்கள் ஏற்படும்" என்றார்.

"என்னால் நாட்டுக்குப் பலன் ஏற்படுமா? இந்த வீணைக் கலைஞன் மிக எளியவன். அவனால் என்ன உபயோகம்?"

"பரமகுரு, காஞ்சியிலுள்ள பல்கலைக் கழகத்தில் தாங்கள் கற்ற வித்தையைப் பலருக்கும் போதிக்கலாம். வீணையில் தேர்ச்சி பெற்றவர்கள் முதலில் பாண்டிய, சோழ, சேர நாட்டிற்குச் செல்வார்கள். குழல், யாழோடு, வீணையும் நாட்டில் பரவும்" என்று முகுந்தன் உருக்கமாகக் கூறினார்.

பரமகுரு மெல்லச் சிரித்தார். முகுந்தனின் கரத்தைப் பற்றி, "முகுந்தா, முதல் முதலில் உங்களை அறிமுகப்படுத்திக் கொண்டபோது அரைகுறை பார்வை எனக்கிருந்தது. உங்களுடைய கம்பீரமான தோற்றம்; பௌர்ணமிச் சந்திரன் உதயமாகும்போது உள்ள நிறம்; கூர்மையான விழிகள்; அகன்ற நெற்றியின் குறுக்கே திருநீற்றுக்கு மாறாக நெடுக்காக இரு சந்தனக் கீற்றுக் கோடுகள். நீங்கள் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதைப் புரிந்து கொண்டேன். பிறகு நீங்கள் இங்கே என்னைச் சந்திக்க வந்தபோது, என் பார்வை மங்கலாகியது. வீணை பயில நீங்கள் விரும்பினீர்கள். உங்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள நான் விரும்பினேன். நந்திவர்ம அரசருக்கு என்னை அறிமுகம் செய்து வைக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்ள விரும்பினேன்" என்று தன் மனத்தில் புதைத்து வைத்திருப்பதைப் பேச விரும்பினார்.

"அதைத்தான் நான் சொல்கிறேன். காஞ்சிக்கு நீங்கள் வந்து விடுங்கள். நந்திவர்மப் பேரரசரிடம், தங்களை நானே அழைத்துச் செல்கிறேன். அவரைத் தங்களிடம் வருமாறு செய்யவும் என்னால் முடியும். இப்பொழுது 'உம்' என்று சொல்லுங்கள், நாளைக்கே அரச பல்லக்கை அனுப்புகிறேன்" என்றார் முகுந்தன்.

"அரச பல்லக்கா? வேத பாடசாலையில் உள்ள அறிஞரான உங்களுக்கு, அரசரிடம் அவ்வளவு செல்வாக்கா? நான் மட்டும் வந்தால்



போதுமா? என்னை நம்பியிருக்கும் சாலினியும் வரவேண்டும். என் வீணையையும் என்னுடன் எடுத்து வர வசதி வேண்டும்" என்றார் பரமகுரு.

"வீணையை உங்களிடமிருந்து எப்படிப் பிரிக்க முடியும்? வீணையையும் நீங்கள் கொண்டு வரலாம். ஆனால், சாலினியை அழைத்து வருவது அவசியம்தானா என்பதை முடிவு செய்து கொள்ளுங்கள். இன்னும் இரண்டு நாள்கள் கழித்து வருகிறேன். இன்று ஒரு பாடலாவது வீணையில் பாடக் கேட்டு மகிழ்ந்து செல்லலாம் என்று வந்தேன்" என்று முகுந்தன் கூறவும், பரமகுரு பரபரப்புடன், "முகுந்தன், உங்கள் விருப்பத்தை உடனே நிறைவேற்றுகிறேன். இந்தக் கூடத்தின் மூலையில் வீணை இருக்கும், எடுத்து வாருங்கள்" என்றார். வீணை அந்தக் கூடத்தின் ஓரமாக, ஓர் பீடத்தின் மீது வைக்கப்பட்டிருந்தது. பட்டுத் துணியால் அது போர்த்தப்பட்டிருந்தது.

வீணையை எடுக்கச் சென்றபோது, கூடத்தின் மூலையில், வெளிச்சமில்லாத இடத்தில், யாரோ நிற்பது தெரிந்தது. அவர் அதைக் காணாதவர்போல் வீணையை எடுத்து வந்து, பரமகுரு அருகே வைத்தார்.

முகுந்தன் கேட்டார்: "பரமகுரு, உங்கள் அபிமானத்திற்கு உரிய சாலினியைக் காணவில்லையே? எங்கே போயிருக்கிறாள்?"

"அதுதான் தெரியவில்லை. இரண்டு முறை அழைத்தும் வரவில்லை. உம், வீணையுடன் ஐக்யமாக வேண்டும் என்று தோன்றினால் உடனே நிறைவேற்ற வேண்டும்" என்று வீணையைக் குழந்தைபோல் அணைத்து, மடியின் மீது வைத்துக் கொண்டு, தொட்டு வணங்கி, சுருதி கூட்டினார். ஒலி பேதத்தைச் சரி செய்தார். பிறகு ஸமஸ்கிருதப் பாடல் ஒன்றைப் பாடிக்கொண்டே மீட்டினார்.

பாடல் முடிந்ததும் முகுந்தன் கரஒலி எழுப்பி, பரமகுருவின் கைகளை எடுத்து முத்தம் கொடுத்து, "பரமகுரு, இது சியாமளா தண்டகம் தானே" என்று கேட்டார்.

"ஆமாம்; மகாகவி காளிதாசன் எழுதியது."

"காளிதாச மகாகவியின் வாக்கிலிருந்து உதிர்ந்துள்ள ஒவ்வொரு சொல்லும், ஓவியன் வர்ணிப்பதுபோல் இருக்கிறது. பரமகுரு, நீங்கள் பாக்யசாலி. உங்கள் நாக்கு தேவியை வர்ணிக்கிறது. உங்கள் விரல்கள் வீணை நரம்புகளில் நர்த்தனமாடி, சொற்களை ஒலி வடிவமாக்கி, தேவியை கண் முன்னே நிற்க வைக்கின்றன. ஆகா, பாடலின் சிறப்பைச் சிலாகிப்பதா! தங்கள் இனிய குரலை வர்ணிப்பதா! பாடலுடன் இணைந்த வீணையின் நாதத்தைப் புகழ்வதா? பாடலின் பொருளைப் போற்றுவதா?

நாளெல்லாம் தங்கள் அருகே அமர்ந்து, இனிய பாடல்களை ரசிக்க வேண்டும். எனக்கொரு ஆசை. திருநாவுக்கரசரின், ஞானசம்பந்தரின் தேனினுமினிய பதிகங்களை வீணை இசையுடன் ரசிக்க வேண்டும் என்று என் மனம் துடிக்கிறது. பரமகுரு, நான் இரண்டு நாள்கள் கழித்து வருகிறேன். நல்ல முடிவைக் கூறுங்கள்" என்று கூறி புறப்பட முயன்றபோது, வெளியே யாரோ சிலர் வரும் காலடி ஓசை கேட்டது.

முகுந்தன் எட்டிப் பார்த்துவிட்டு, 'ஓ, சித்திரமாயன்!' என்று மெல்லிய குரலில் முணுமுணுத்து, விரைந்து மறைவிடம் சென்றார்.

சித்திரமாயன், நந்தீசன் மற்றும் சிலர் புடை சூழ உள்ளே வந்தார். வரும்போது ஏதோ நகைச்சுவையை ரசித்தவர்போல் பெரிதாகச் சிரித்த வாறு சித்திரமாயன் வந்தார்.

சித்திரமாயன், பரமகுருவை வணங்கி, "வீணையின் இனிய நாதம் ஒலிப்பதைத் தொலைவிலிருந்தே கேட்டேன். இந்த இனிய இசைக்கு ஏற்ப நடனம் ஆடினால் எவ்வளவு சுகமாக இருக்கும்?" என்று கேட்டார்.

"நடன அழகி மதாலஸா, எங்கே? சாலினி, எங்கே போய் விட்டாய்?" நந்தீசன் குரல் கொடுத்தான்.

இருளிலிருந்து மதாலஸாவும், சாலினியும் ஒன்றாக வந்தனர். சித்திரமாயன் வருகிறார் என்றால், அன்று அங்கே நடனம் இருக்கும்.

உரிமை மிகுந்த குரலில் நந்தீசன் கேட்டான்: "சாலினி, இவ்வளவு நேரம் நீ இங்கே இல்லையா? எங்கே போயிருந்தாய்?"

பரமகுரு திடுக்கிட்டார். "யார், சித்திரமாயனா? எப்போது வந்தீர்கள்? இங்கே முகுந்தன் இருந்தாரே, அவர் எங்கே? நான் கூப்பிட்டபோது வராத சாலினி, இப்போது எங்கிருந்து வந்தாள்?" என்று கோபத்துடன் கேட்டார்.

"முகுந்தனா? இங்கே வந்தானா? எங்கே அவன்? தேடுங்கள், தேடுங்கள்" என்று தன் ஆள்களிடம் சித்திரமாயன் பரபரப்புடன் பேசினார். தொடர்ந்து, "முகுந்தன் இங்கு வரப் போகிறான் என்பது எனக்குத் தெரியும். பாடசாலையில் வேதம் கற்றுத் தருவது போல் நடிக்கும் அவன் ஒரு துரோகி. என் திட்டங்களைத் தோல்வியடையச் செய்வதே அவன் வேலை. சரியாகச் சிக்கிக்கொண்டான். அவனைப் பிடியுங்கள்" என்று கூவினார்.

# 11

நடனமாடும் மதாலஸாவும், சாலினியும் அங்கே என்ன நடக்கிறது என்று புரிந்துகொள்ள முடியாமல் திகைத்து நின்றார்கள்.

'அவனைப் பிடியுங்கள்' என்று நந்தீசனும், சித்திரமாயனுடன் சேர்ந்து கூவியதும், கூப்பிட்ட குரலுக்கு சாலினி வராமல் இப்போது வந்ததும், பரமகுருவுக்குச் சினத்தைப் பெருக்கியது.

பரமகுருவுக்குக் கோபம் ஏற்பட்டு, சாலினி இதுவரையில் கண்டதில்லை.

"வீணையை எடுத்து வரச் சென்றாரே முகுந்தன், அவர் எங்கே? 'அவரைப் பிடியுங்கள்' என்று ஏன் கூக்குரலிடுகிறீர்கள்? அவர் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?" பரமகுரு குரலில் அதட்டலிருந்தது.

நந்தீசன், இங்குமங்கும் தேடினான். தன்னுடன் வந்தவர்களை விட்டுத் தேடுமாறு சொன்னான். சைலேந்திரி தங்கியிருக்கும் பின் கட்டு அறைக்குச் சென்று பார்த்து வரச் சொன்னான்.

"வெளியே போயிருக்க முடியாது. இங்கே வீட்டிற்குள்ளேதான் எங்கோ ஒளிந்திருக்க வேண்டும்" சித்திரமாயன் குரல் கொடுத்தார்.

பரமகுருவை மெல்ல உட்கார வைத்தாள் சாலினி.

"இங்கு என்ன நடக்கிறது சாலினி? இது ஒரு கலைஞரின் வீடாகத் தெரியவில்லையா? நீ எங்கே போய்விட்டாய்? முகுந்தன் வந்தார் – வரவேற்று உட்கார வைக்க யாருமில்லை. விளக்காவது ஏற்றி வைத்திருக்கிறாயா? சித்திரமாயன் வந்திருக்கிறார்; அவரை வரவேற்கவும் ஒருவருமில்லை" என்று அவளைக் கடிந்துவிட்டு, சித்திரமாயனை நோக்கி, "முகுந்தன் மீது உங்களுக்கு ஏன் கோபம்?" என்றார்.

சித்திரமாயன் சிரித்தார். "பரமகுரு, உங்களுக்கு ஏன் இப்போது கோபம் பொங்குகிறது என்று எனக்குத் தெரியவில்லை. முகுந்தனைப் பற்றிப் பிறகு விவரிக்கிறேன். இப்போது நாட்டியம் தொடங்கட்டும். பரமகுரு அவர்களே, எனக்கு ஓர் ஆசை. இன்று தங்கள் வீணை இசைக்கு

ஏற்ப, மதாலஸா ஆட வேண்டும்'' என்று அவன் கூறி முடிப்பதற்குள் பரமகுரு சீறினார்.

"என் வீணை இசைக்கு ஏற்ப நாட்டியமா? அது இருக்கட்டும். நான் சற்று முன்பு கேட்டேனே. அதற்கு என்ன மறுமொழி? இது ஒரு கலைஞர் வீடாகத் தெரியவில்லையா?''

சித்திரமாயன் திடுக்கிட்டான். "என்ன சொல்கிறீர்கள் பரமகுரு? நிச்சயமாக இது ஓர் கலைஞரின் வீடுதான். இல்லாவிட்டால் எனக்கு இங்கு என்ன வேலை? தங்களுடைய இனிய வீணை இசையைக் கேட்டு ஆனந்திக்க, அவ்வப்போது வருகிறேன். அப்படியே நடன சுந்தரி மதாலஸாவின் நடனத்தை ரசிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது. இவ்வளவு நாள்கள் வீணைக் கலையுடன், நடனக் கலையையும் ரசிக்க அனுமதித்தீர்கள். இன்றுமட்டும் தங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது?'' என்றார் மிகவும் பணிவு நிறைந்த குரலில்.

"இல்லை... இல்லை... இவ்வளவு நாள்கள் எனக்கு ஒன்றும் புரியவில்லை. இங்கே ஏதோ சதி நடக்கிறது. பார்வை இழந்த என்னை ஏனோ ஏமாற்றுகிறீர்கள்.'' பரமகுருவின் குரலில் கோபத்துடன் நடுக்கமிருந்தது.

"சதியா... சதி நடப்பதற்கேற்ற இடமா இது. ஆனால், சதிகாரன் ஒருவன் இங்கு வந்திருக்கிறான். கண நேரத்தில் அவன் மறைந்து விட்டான்'' என்றார் சித்திரமாயன்.

"சதிகாரனா?''– பரமகுரு கேட்டார். "இங்கு வந்தவர் முகுந்தன். காஞ்சிபுரத்து வேதபாடசாலையில் தர்க்கம் வியாகர்ணம் கற்றுத் தரும் பேரறிஞர். என் பழைய நண்பர். அவர் கலை ரசிகர். அவரைச் சதிகாரர் என்று எப்படிக் குற்றம் சுமத்துகிறீர்கள்?'' பரமகுரு கடுமையாகக் கேட்டார்.

"ஆமாம்; எனக்குச் சேர வேண்டிய பல்லவ மகுடத்தை அபகரித்துக் காஞ்சி அரியணையில் அமர்ந்துள்ள நந்திவர்மனுடைய உற்ற தோழன் அவன். நந்திவர்மனுக்கு வேண்டிய யோசனைகளை, யுக்திகளைக் கற்றுத் தருபவன். என்னை இந்த நாட்டைவிட்டு ஓட்டச் சதி செய்பவன். எப்படியாவது அவனைக் கையும் களவுமாகப் பிடித்து விடவேண்டும் என்று நீண்ட நாளாகத் திட்டமிடுகிறேன்; இன்றுதான் வகையாக சிக்கினான். இல்லை... இல்லை... இன்னும் சிக்கவில்லை. எங்கே சென்றிருப்பான்?''– சித்திரமாயன் இங்குமங்கும் நடந்தவாறு பேசினார்.

பரமகுரு மெல்ல நகைத்தார். "சித்திரமாயா! நல்ல கலை உள்ளம் படைத்தவர் என்று உம்மை இவ்வளவு நாள்களாக எண்ணியிருந்தேன். பல்லவ மன்னர் நந்திவர்மன் மீது தங்களுக்கு உள்ள கோபம் இன்னும் மறையவில்லையா? அவருக்கு முகுந்தன் உதவுகிறார் என்பதற்காக, அவரைச் சிறைப்படுத்த நினைக்கிறீர்களா? சிறைச்சாலையை எங்கே



கட்டியிருக்கிறீர்கள்? யார் விசாரித்துத் தண்டிக்கப்போகிறார்கள்? தண்டனை வழங்கப்போகிறார்கள்? பல்லவ மன்னருக்கு யோசனை வழங்குவதற்காக அவரைச் சிறைப்படுத்துவதா? விசித்திரமாகத்தானிருக்கிறது!'' என்றார்.

பரமகுருவிடம் ஏற்பட்ட மாறுதல், சித்திரமாயனுக்கு வியப்பை அளித்தது.

"சரி, சரி, நமக்கெதற்கு அரசியல் விவகாரம். என்னுடனேயே போகட்டும். இங்கு வந்து தங்கியிருக்கும் சிறிது நேரத்தில் தங்கள் வீணை இசையையும், நாட்டியத்தையும் ரசித்துச் செல்கிறேன்'' என்று பேச்சை வேறு திசையில் மாற்ற விரும்பினான்.

"நான் கேட்டதற்குத் தாங்கள் சரிவர சமாதானம் கூறவில்லை. முகுந்தன் இங்கு வருவதை யாராலும் தடுக்க முடியாது. அவர் சிறந்த குணவான். அவரிடம் விரோதம் பாராட்டுவதென்றால், நீங்கள் இனி இங்கு வரவேண்டாம்'' என்று கடுமையாகக் கூறினார் பரமகுரு.

சித்திரமாயன் திடுக்கிட்டார். முகுந்தனிடம் பரமகுருவிற்கு உள்ள மதிப்பு, அவனுக்கு வியப்பை அளித்தது. முகுந்தனிடம் பரமகுருவிற்கு ஏற்பட்டுள்ள மதிப்பு, மரியாதைக்கு என்ன காரணம்? முகுந்தன் யார்? காஞ்சி நகரத்திற்கு எப்போது வந்தார்? நந்திவர்மனிடம் அவருக்கு அறிமுகமும், தொடர்பும் எப்போது ஏற்பட்டன? சித்திரமாயனுக்குப் புரியவில்லை.

காஞ்சியை விட்டுச் சில காலம் மறைந்து வாழ்ந்தபோது, பரமகுருவிற்கு முகுந்தன் அறிமுகம் ஆகியிருக்கலாம். புதிதாக பல்லவப் படைக்கு தலைமை வகிக்கும் பொறுப்பேற்றுள்ளவன். உதய சந்திரன். உதய சந்திரனுடன் முகுந்தன் பேசிக் கொண்டிருப்பதை சித்திரமாயன் பார்த்திருக்கிறார். உதயசந்திரன் பலம் மிகுந்த வீரன், அறிவாளி என்பதையும் அறிந்திருக்கிறான். சித்திரமாயனின் சொந்த ஒற்றர்ப் படையினரால்கூட முகுந்தனைப் பற்றிய உண்மையைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

காஞ்சிபுரத்து தென் எல்லையில் கோட்டை மதிலருகே சிறு குடிலில் முகுந்தன் வசிப்பதையும், அங்கிருந்து குதிரை மீது நாள்தோறும் பாடசாலைக்கு வருவதையும் ஒற்றர்கள் கண்டிருக்கின்றனர். எப்போது வருகிறார், எப்போது புறப்படுகிறார் என்பதை மட்டும் அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை.

நந்திவர்மனுடைய உடன் பிறந்தவர்களுள் ஒருவராக முகுந்தன் இருக்கலாம் என்று, ஒற்றர் படைத்தலைவர், ஒருமுறை சித்திரமாயனிடம் கூறிய இந்தத் தகவலை, சித்திரமாயன் கடுமையாக மறுத்து விட்டான்.

"நந்திவர்மனின் சகோதரர்கள் ஸ்ரீமல்லன், இரணமல்லன், சங்கிராமல்லன். இவர்கள் காளஹஸ்தியில் இருக்கிறார்கள். அவர்களுக்குப்

பல்லவ நாட்டின் ஆட்சியைப் பற்றிய சிந்தனையோ, கவலையோ கிடையாது. பல்லவ மகுடத்திற்கு ஏற்பட்ட போட்டியைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கலாம் என்றாலும் மீண்டும் சொல்கிறேன். பரமேஸ்வர வர்மன் இறந்த பிறகு, பல்லவ நாட்டு அரசுரிமையை ஏற்க முறையான வாரிசுடையவர்கள் இல்லை என காஞ்சியிலுள்ள பெரியவர்கள் முடிவு செய்தார்கள். அரச குடும்பத்தில் மிகவும் போற்றுதற்குரிய, மதிப்புமிக்க பெரியவர் இரண்ய வர்மனை அனைவரும் அணுகி, ஆட்சிப் பொறுப்பை ஏற்குமாறு வேண்டினார்கள். தன்னுடைய தள்ளாமையைத் தெரிவித்துத் தன் புதல்வர்கள் நால்வருள் ஒருவரைக் காஞ்சி மகுடத்தை ஏற்குமாறு வற்புறுத்தினார். அவர்கள் மறுத்து விட்டனர். கடைசிப் புதல்வன் பல்லவ மல்லன், தான் ஏற்பதாக முன் வந்தான். அவனுக்கு அப்போது பன்னிரண்டு வயது. எனக்கு இருபது வயது. நான் இரண்யவர்மனிடம் சென்று நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்பதாகவும், எனக்குள்ள தகுதியையும் தெரிவித்தேன். அவர் சம்மதிக்கவில்லை. ஒற்றர் படைத்தலைவரே! உங்களுக்கு இவை யாவும் தெரிந்திருக்கும். தெரியாதது ஒன்றும் இருக்கிறது. அதையும் சொல்லி விடுகிறேன். நான் அரச குலத்தைச் சேர்ந்தவனில்லையாம்; என் பிறப்பைப் பற்றி இழிவாகக் கூறி வதந்தியைப் பரவவிட்டார்கள். என் மனத்தில் ஏற்பட்ட காயம் நீங்கவில்லை. நந்திவர்மனிடம் எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. அது போகட்டும்; நந்திவர்மனின் சகோதரர்களை நான் மிக நன்றாக அறிவேன். அதனால், முகுந்தன் நந்திவர்மனின் சகோதரனல்லன் என்பது எனக்கு உறுதியாகத் தெரியும். முகுந்தன் யார் என்பதை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும்" என்று சித்திரமாயன் உறுதியாகக் கூறிவிட்டார்.

பரமகுரு, முகுந்தனிடம் மதிப்பும் மரியாதையும் வைத்திருப்பதால், பரமகுருவிற்கு முகுந்தனைப் பற்றிய விபரம் தெரிந்திருக்கும். பரமகுருவிடமிருந்து எப்படியாவது உண்மையை அறிய வேண்டும் என்று மனத்துள் முடிவு செய்தான். சித்திரமாயன் ஏதும் பேசாமல், அந்தக் கூடத்தில் மேலும் கீழுமாக நடந்து கொண்டிருந்தபோது, அங்குள்ளவர்கள் ஏதும் செய்வதறியாது திகைத்து நின்றனர். ஆடுவதற்கு ஆயத்தமாக இருந்த மதாலஸா பயந்து, அடுத்து என்ன நேருமோ என்ற பயத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

சைலேந்திரியைத் தன் அறையில் காணவில்லை என்ற செய்தி அறிந்த சாலினிக்குக் கவலையும், அச்சமும் மேலிட்டன. அவள் எங்கே போயிருப்பாள்? இந்த நாட்டுக்குப் புதியவளாயிற்றே என்ற கவலையும் அவளிடம் எழுந்தது.

"நந்தீசா, முகுந்தனை எப்படியாவது கண்டுபிடித்தாக வேண்டும். இந்த வீட்டில் மறைந்திருக்க ஏதாவது இடமிருக்கிறதா பாருங்கள். பரம



குருவையும், சாலினியையும் கேட்கும் விதத்தில் கேளுங்கள்" என்று உரத்த குரலில் கட்டளையிட்டார் சித்திரமாயன்.

நந்தீசன், சாலினியை நெருங்கினான். சாலினி ஓடி, பரமகுரு அருகே நின்று, "குருநாதரே! என்னைக் காப்பாற்றுங்கள்" என்று பயத்துடன் கூறினாள்.

"யார் உனக்குத் தொல்லை தருகிறார்கள்? நந்தீசனா?" என்று கேட்டு நந்தீசன் காதில் விழுமாறு, "ஏ, நந்தீசா! நல்லவன் போல் நடித்தாய். அரசாங்க ஊழியனான நீ, தகாத செயலில் ஈடுபட்டால் உனக்குத் தண்டனை உறுதி" என்று பரமகுரு சீறினார்.

சித்திரமாயன் கையமர்த்தி, "நந்தீசா, இரவு வேளையில் நம் முயற்சி பலிக்காது. இன்று போய் நாளை வருவோம்" என்று புறப்பட எத்தனித்த போது, அங்கே ஒரு குரல் கேட்டது. நரேந்திரன் அங்கு நின்று கொண்டிருந்தான்.

"இது பரமகுருவின் வீடுதானே?" என்று நந்தீசனிடம் அவன் கேட்டான்.

நரேந்திரனுடைய இளமைத் தோற்றத்தையும், மரக்கலத்தில் பணியாற்றியதால் வலுவடைந்திருந்த திண் தோள்களையும் கண்ட நந்தீசன், அவனைப் பற்றி அறிய விரும்பி, "நீ யாரப்பா?" என்று கேட்டான்.

"இது வீணைக் கலைஞர் பரமகுருவின் வீடுதானே?" என்று மீண்டும் வினவினான்.

"ஆமாம், நீ யார்? எதற்காக பரமகுருவைக் காண விரும்புகிறாய்? வீணை பயில வந்திருக்கிறாயா?" என்று கேட்டான்.

"நான் பயில வரவில்லை. மரக்கலத்தில் நான் சந்தித்த பெண் ஒருத்தி இங்கே வந்திருக்கிறாள். அவளைச் சந்திக்க வேண்டும்" என்றான் சுற்றுமுற்றும் பார்த்தவாறு. அந்த இடத்தின் சூழ்நிலையை, அவன் ஒருவாறு உணர்ந்தான். அங்கே ஒவ்வொருவரும் ஏதோ நேர்ந்துவிட்ட கவலையில் ஆழ்ந்திருக்கிறார்கள் என்பதை அறிந்தான்.

அங்கே பரமகுரு, சித்திரமாயன், மற்றொருவர், நரேந்திரனை விசாரிக்கும் நந்தீசன், தவிர, சாலினி, மதாலஸா மிகவும் பயந்து மூலையில் நின்று கொண்டிருக்கிறார்கள். 'இவர்களுள் யார் பரமகுரு?' நரேந்திரன் விழிகள் தேடின.

நந்தீசன், நரேந்திரன் தோள்களில் கையை வைத்து அழுத்தி, "தம்பி நீ யார் என்று கேட்டேன்? சொல்லாமல் கள்ளனைப்போல் விழிக்கிறாயே?" என்றான்.

நந்தீசனுடைய பேச்சும், தோள்மீது பட்ட அழுத்தமான காமும், நரேந்திரனுக்கு எரிச்சலை அளித்தன. தன் இடக்கரத்தால் நந்தீசனின் கரத்தை விலக்கித் தள்ளி, "பல்லவ நாட்டில் மரியாதைக்கும் பஞ்சமோ?" என்றான் மிகவும் மெல்லிய – ஆனால் கடுமை பிரதிபலிக்க.

நந்தீசன், மீண்டும் நரேந்திரன் கரத்தைப் பற்றி இழுக்க முயன்ற போது, நரேந்திரன் அவனைத் தடுத்துத் தள்ள, நிலை தடுமாறினான் நந்தீசன்.

சித்திரமாயன் இப்போது குறுக்கிட்டான். அதற்குள் சாலினி, நரேந்திரன் அருகே வந்து, "ஓ! நீங்கள்தான் சைலேந்திரியும் பெரியவரும் பயணம் செய்த கலத்தில் வந்தவரா? உங்களிருவரையும் காணாமல் சைலேந்திரி தவியாய்த் தவித்துக் கொண்டிருக்கிறாள்" என்றாள்.

"நான் சைலேந்திரியைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறேன். அவளுடன் வந்த பெரியவர் கவலையால் துடித்துக் கொண்டிருக்கிறார். சைலேந்திரி எங்கே, நான் உடனே பார்க்க வேண்டும்" என்று பரபரப்புடன் கூறினான். அவன் விழிகள் மீண்டும் அலைபாய்ந்தன.

"சைலேந்திரி – நானும் அவளைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்றாள் சாலினி. நரேந்திரன் தன்னை அவமதித்துவிட்ட ஆத்திரத்தில் நந்தீசன், "ஏய் சின்னப் பயலே. என்னையா அவமதிக்கிறாய்?" என்று கூறியவாறு, மீண்டும் நரேந்திரனை நோக்கி முஷ்டியை உயர்த்திப் பாய்ந்தான். நரேந்திரன் சற்று நகரவே, நந்தீசன் அங்கிருந்த தூணில் மோதிக் கொண்டான்.

அங்கு நடக்கும் சந்தடியையும், தன் வீட்டில் புகுந்து பல்லவ அரசருக்கு விரோதமாக சதி செய்ய முயல்வதையும் உணர்ந்து எரிச்சலுடன், முகுந்தன் எங்கே போய் விட்டார் என்று அறிந்து கொள்ள முடியாத, தன் விழியற்ற நிலையும் கவலையும் ஒன்று சேர பரமகுரு உரத்த குரலில், "சித்திரமாயா! நந்தீசனை உடனே அடக்குங்கள். நீங்கள் எல்லோரும் உடனே இங்கிருந்து சென்று எனக்கு அமைதியைத் தாருங்கள்" என்று கூவினார்.

சித்திரமாயன்–

அந்தப் பெயரைக் கேட்டு நரேந்திரன் ஒரு கணம் திகைத்தான். "தங்களைத் தேடித்தான் பல்லவ நாட்டிற்கு வந்தேன். என் தாய் தங்களைச் சந்திக்குமாறும், ஆனந்தக் கூத்தரைச் சந்திக்குமாறும் கட்டளையிட்டிருக்கிறாள்" என்று கூறி, சித்திரமாயன் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான்.

எதிர்பாராத இந்த நிகழ்ச்சியைக் கண்டு திகைத்தான் சித்திரமாயன். அவன் மட்டுமா? சாலினி, நந்தீசன் இருவரும் ஒன்றும் புரியாமல் நின்றனர். அங்கே என்ன நடக்கிறது என்ற குழப்பத்தில், பரமகுரு திகைத்திருந்தார்.

# 12

சைலேந்திரி மெல்ல இமைகளைத் திறந்தாள். பொழுது விடிந்து அதிக நேரமாகியிருக்க வேண்டும். அவள் துயிலைக் கலைக்க ஒருவரும் அங்கே வரவில்லை. அந்தக் குடிசையினுள் குடிகொண்டிருந்த அமைதியைப் போல், வெளிப்புறத்திலும் விவரிக்க முடியா நிசப்தம் பரவியிருந்தது. காலை வேளையில் குதூகலத்துடன் குரல் எழுப்பும் புள்ளினங்களும் ஏதோ பணியிலிருப்பதுபோல் எங்கெங்கோ சென்றிருந்தன.

தாம் எங்கிருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள, அவளுக்குச் சிறிது நேரம் தேவைப்பட்டது. சாணத்தால் மெழுகப்பட்ட மண் தரையில், ஓலைப்பாயில் படுத்திருக்கிறோம் என்பதை உணர்ந்தாள். பரமகுருவின் வீட்டில் பஞ்சணையில் படுத்திருந்த சுகம் இப்போது இல்லாவிடினும், மனத்தில் நிம்மதியிருப்பது போன்ற உணர்வு.

முதல் நாள் இரவு பரமகுருவின் வீட்டிலிருந்து தப்பி ஓடி வந்தது முதல், அவள் நினைவுபடுத்திக் கொண்டாள்.

சித்திரமாயன் உள்ளே வரும்போதே அவள் இருளில் மறைந்து கொண்டாள். கூடத்தில் நடப்பது அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. தன்னைத் தேடுகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டாள். வீட்டின் பின்புற வழியாக அவள் ஓடினாள். அப்போது தன்னைத் தொடர்ந்து ஒருவர் ஓடி வருவதை உணர்ந்தாள். அவர் முகுந்தன் என்பதை மங்கிய ஒளியில் அறிந்தாள்.

"சைலேந்திரி, வேகமாக ஓடி வா. உனக்கு வழி தெரியுமா?" என்று ஓடிக்கொண்டே கேட்டார். அவள் முன்னால் ஓடினாள்; அவர் பின் தொடர்ந்தார். 'எங்கே வழி, எந்த வழி?' என்று அவளுக்குப் புரியவில்லை. 'வழி தெரியுமா?' என்று அவர் கேட்கிறார்– தன்னை அவர் தெரிந்து கொண்டிருக்க வேண்டும்; சைலேந்திரி என்று பெயரிட்டும் அழைக்கிறார்.

ஓரிடத்தில் நின்றாள். மேலே செல்ல வழி தெரியாமல் 'வழி தெரியுமா?' என்று அவர் கேட்டது சரிதான்.

"அதோ... யாரோ ஓடி வரும் ஓசை. இங்கே நிற்கக்கூடாது. ஓடி வா" என்று அவள் கரத்தை அழுத்தமாகப் பற்றி ஓடினார். இழுத்துக் கொண்டு என்றும் சொல்லலாம். அழுத்தமாக அந்தப் பிடி அமைந்திருந் தது என்றாலும், அந்த அழுத்தத்தில் ஓர் ஆறுதல் இருந்தது.

சுற்றுப் பக்கத்தில் வீடுகள் இல்லை. அமைதி சற்று அச்சத்தை அளித்தது. தென்னை ஓலைகள் அசையும்போது ஏற்படும் ஓசை, பயத்தை அதிகரிக்கச் செய்தது.

சிறு சிறு பாறைகள் குறுக்கிட்டன. அவர் ஓட்டத்தைக் குறைத்தார். திரும்பிப் பார்த்துவிட்டு மெதுவாக நடக்கத் தொடங்கினார். அந்த இடங்கள் அவருக்குப் பழக்கப்பட்டவைபோல் தோன்றின.

மணலில் கால் அழுந்த ஓடுவது, சைலேந்திரிக்குப் புதிய அநுபவம். இனி ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாது என்று தோன்றியது. அவள் நின்றுவிட்டாள்.

முகுந்தன் திரும்பிப் பார்த்தார். "கால் வலிக்கிறதா? அங்கே பரமகுரு வீட்டில் நின்று கொண்டிருந்ததில் மனமே வலித்திருக்குமே?" என்று கூறி, அவர் சிரித்தார். "வா, சைலேந்திரி. இன்னும் சிறிது தொலைவு தான்; போய்விடலாம். பயமாயிருக்கிறதா?" என்றார்.

'என் பெயர் இவருக்கு எப்படித் தெரிந்தது' என்ற வியப்புடன், "பயமாயிருந்திருந்தால் யார் என்று தெரியாமல் உங்களுடன் ஓடி வந்திருப்பேனா?" என்று கேட்டாள்.

முகுந்தன் அதற்கு மறுமொழி கூறவில்லை. அவர் நடந்தார். பிறகு மௌனத்தைக் கலைத்து, "சைலேந்திரி, பல்லவ நாட்டிற்கு எதற்காக நீ வந்தாய்?" என்று கேட்டார்.

"உங்களைச் சந்திக்கத்தான்" என்று அவள் கூறியது, முகுந்தனுக்கு வியப்பை ஏற்படுத்தியது.

'என்னையா? என்னை இவளுக்குத் தெரியுமா? ஆள் மாறாட்டம் போலிருக்கிறது' என்று நினைத்தார் முகுந்தன்.

"என்னைக் காப்பாற்றிக்கொள்ள ஓடி வந்து விட்டேன். என் வீணையை அங்கேயே விட்டு வந்துவிட்டேன்" என்றாள் சைலேந்திரி. பிறகு தொடர்ந்து, "ஐயா, காஞ்சிக்குச் சென்றால் அங்கே வீணை கற்பிக்க ஆசிரியர்கள் இருக்கிறார்களல்லவா? என் தாய் காஞ்சிக்குத்தான் செல்லு மாறு கூறியிருந்தாள். கலத்திலிருந்து இறங்கியது முதல், அடுக்கடுக்காகத்



தொல்லைகள். என்ன செய்வதென்றே புரியவில்லை. நல்ல வேளை, உங்களையாவது சந்தித்தேன். உங்களைச் சந்திக்கவே கடல் கடந்து வந்த உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது" என்றாள். பேச முடியாது மூச்சு வாங்கியது.

"ஐயா, பரமகுரு வீட்டில் தங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த தைக் கேட்டுக் கொண்டிருந்தேன். தங்கள் சொற்படி பல்லவ சக்கரவர்த்தி நடப்பதாக அறிந்தேன். என்னை அவருக்கு அறிமுகப்படுத்துகிறீர்களா? சித்திரமாயன் பல்லவ அரசருக்கு விரோதமானவரா? அவர்கள் சூழ்ச்சிகள் செய்வதற்குப் பரமகுரு வீட்டை ஏன் தேர்ந்தெடுத்தனர் என்று தெரிய வில்லை" என்று சைலேந்திரி கேட்டாள்.

"பெண்ணே! உனக்கு ஏன் அந்தக் கவலை எல்லாம். காஞ்சிபுரம் செல்ல வேண்டும். வீணை கற்க வேண்டும்; அவ்வளவுதானே உன் இலட்சியம்? அதை நிறைவேற்றுகிறேன். என்னை நம்பலாம்" என்றார்.

சைலேந்திரிக்கு அவர் முகத்தைப் பார்க்க வேண்டும்போல் தோன்றியது. முகுந்தன் முன்னே நடந்தார். சைலேந்திரி பின் தொடர்ந்தாள். ஒற்றையடிப்பாதை வழியே அவர்கள் விரைந்தனர்.

பொன்னாச்சியின் குடிலுக்கருகே சென்று, முகுந்தன் குரல் கொடுத்தார்.

பொன்னாச்சி குடிசைக்குள்ளிருந்து வந்தாள். கை விளக்கைக் கொண்டு வந்தாள்.

மரத்தடியில் இருந்த கட்டிலில், முதியவர் சிற்பி படுத்திருந்தவர் எழுந்து உட்கார்ந்தார்.

"யாரது?" என்று குரல் கொடுத்தார் சிற்பி.

விளக்கொளியில் முகுந்தனைக் கண்டு திடுக்கிட்டு, "நீங்களா...?" என்று கேட்ட முதியவரை நோக்கி, முகுந்தன் சைகை செய்ததை, சைலேந்திரி கவனிக்கவில்லை. எங்காவது சற்று உட்கார்ந்தால் நன்றா யிருக்கும் என்று அவள் இடம் தேடியபோது, பொன்னாச்சி சைலேந்திரி யைப் பார்த்து விட்டாள்.

"வா, குழந்தாய்" என்று வரவேற்றாள்.

"இருவருக்கும் பசி, களைப்பு. இந்த நேரத்தில் வீட்டில் இருப்ப தைக் கொடுங்கள்" என்றார் முகுந்தன்.

ஏதோ சொல்ல வாயெடுத்த பொன்னாச்சியைப் பார்த்து, "எல்லாம் காலையில் பேசிக் கொள்ளலாம்" என்று கூறி அடக்கினார் முகுந்தன்.

தண்ணீர் ஊற்றி வைத்த சோறும், தயிரும் கலந்து கொடுத்ததை முகுந்தனும் சைலேந்திரியும் உண்டு பசியாறினர்.

சைலேந்திரியின் விழிகளை உறக்கம் வந்து தழுவியது. குடிலுக்குள் அவள் படுக்க ஏற்பாடு செய்த பொன்னாச்சி, கவலை, பயம் ஏதுமில்லாமல் தூங்குமாறு அவளிடம் கூறிவிட்டு, அவள் அருகேயே தானும் படுத்துக்கொண்டாள்.

பொழுது புலர்ந்து அதிக நேரம் கழித்து விழித்தெழுந்த சைலேந்திரிக்கு, இவ்வளவு நேரம் தூங்கி விட்டோமே என்று வெட்கமாகக்கூட இருந்தது.

பொன்னாச்சியின் அன்பிலும், உபசரணையிலும் திகைத்துப் போன சைலேந்திரிக்கு, முகுந்தன் பொழுது புலர்வதற்கு முன்பே எழுந்து போய் விட்டார் என்றறிந்தவுடன் கவலை ஏற்பட்டது. குடிசையின் வெளியே ஏற்றி வைக்கப்பட்ட மங்கிய விளக்கொளியில், அவள் முகுந்தனைப் பார்த்திருந்தாள். பரமகுருவின் வீட்டில் பார்த்ததைவிட இப்போது மிக அருகில் அவரைக் காண முடிந்தது. காலையில் இன்னும் நெருக்கமாகக் கண்டு அளவளாவலாம் என்று நினைத்திருந்தவளுக்கு ஏமாற்றமாயிருந்தது.

அவர் விழிகளில், தனிக் காந்த சக்தியிருப்பதை அவள் உணர்ந்தாள். அழுத்தமாகத் தன் கரத்தைப் பிடித்துக் கொண்டு, சிறிது தொலைவு ஓடி வந்த அந்தக் கணத்தை நினைவுபடுத்திக்கொண்டாள். அவர் கரம்பட்ட இடத்தை, மெல்ல ஒருமுறை தடவிப் பார்த்தாள். கரங்களின் முரட்டுத்தனத்தால் இலேசான வலி இருந்ததாக அப்போது உணர்ந்தாள். இப்போது அந்த இடத்தை மெல்லத் தடவியபோது மேனி சிலிர்த்தது. அவருடன் அதிகம் பேச முடியவில்லை. களைப்பும் உறக்கமும் அவளைத் தடுத்தன. காலையில் எழுந்து பேசுவோம் என்ற எண்ணத்தில் குடிலுக்குள் உறங்கச் சென்றாள். ஆனால், காலையில் ஏமாற்றமே மிகுந்திருந்தது.

“முகுந்தன் எங்கே?” என்று அவள் பொன்னாச்சியைக் கேட்டாள்.

“பொழுது புலரும் முன்பாகவே அவர் எழுந்து போய்விட்டார். அவருக்கு ஆயிரம் பணிகள். அவர் இங்கே தங்கியதே நாங்கள் செய்த புண்ணியம்” என்றாள் பொன்னாச்சி.

“அவர் யார் பாட்டி?” சைலேந்திரி ஆவலுடன் கேட்டாள்.

பொன்னாச்சியின் கணவர் முதியவர் ஏதோ சைகை செய்வதை, சைலேந்திரி உணர்ந்தாள். பேச்சின் திசை திருப்ப விரும்பிய முதியவர், “முகுந்தனைப் பற்றி நாங்கள் சொல்வது இருக்கட்டும். உன்னைப் பற்றிச் சொல்லு குழந்தை. சில நாள்களாக இங்கே வருபவர்கள் கூறும் கதை, எங்களுக்கு வியப்பை அளிக்கிறது. முதலில் பெரியவர் ஒருவர் வந்தார். குதிரை மீதிருந்து கீழே வீழ்ந்து கிடந்தவரைத் தூக்கி வந்தோம். பிறகு ஓர் இளைஞன் வந்தான்” என்று அவர் சொல்லத் தொடங்கியபோது,



சைலேந்திரி பரபரப்புடன், “பெரியவர் எங்கே? நரேந்திரன் எங்கே?” என்று கேட்டாள். பிறகு, காம்போஜத்திலிருந்து புறப்பட்டது முதல், சைலேந்திரி எல்லாவற்றையும் விவரித்தாள்.

“பல்லவ நாடே விசித்திர பூமியாக இருக்கிறதே! அடுத்து என்ன நேருமோ என்று பயமாக இருக்கிறது பாட்டி. ‘என்னைப் போன்ற இளம் பெண்கள் அச்சமில்லாமல் பல்லவ நாட்டில் நடமாடலாம்’ என்று சொல்லியனுப்பியிருந்தாள் என் தாய். ஆனால் நேற்று, தப்பினோம் – பிழைத்தோம் என்று முகுந்தனும் நானும் ஓடி வந்தோம். முகுந்தன் பல்லவ அரசருக்கு மிக வேண்டியவராம். அவருக்கும் எதிரிகள் இருக்கிறார்கள் பாட்டி. அடுத்து நான் என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்; எனக்குத் துணையாகவும் பாதுகாவலாகவும் வந்த பெரியவர் இப்போது எங்கே? அவரை உடனே நான் சந்திக்க வேண்டும்” என்று கேட்கும்போது, சைலேந்திரிக்கு அழுகை எந்தக் கணமும் வந்துவிடுமோ என்று தோன்றியது.

பொன்னாச்சி, தன் சொந்த பெயர்த்திபோல் அவளை அன்புடன் அணைத்து, “சைலேந்திரி, உனக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதாக முகுந்தன் சொல்லிச் சென்றிருக்கிறார். அதுவரையில் எந்தவிதப் பயமுமின்றி இங்கே இருக்கலாம். உன்னைத் தேடி நரேந்திரனும், பெரியவரும் வெளியே சென்றார்கள். அவர்களைப் பற்றி இன்றுவரை ஒன்றும் தெரியவில்லை. உன்னைச் சந்திக்காமல் திரும்புவதில்லை என்ற உறுதியுடன் இருவரும் சென்றிருக்கிறார்கள். நல்லது நடக்கும்” என்று ஆறுதல் கூறினாள்.

“என் வீணை பரமகுரு வீட்டில் இருக்கிறது. பெரியவர் பூசிக்கும் தேவியின் சிலையும் அருகே இருக்கிறது. சிற்பப் பணி செய்யும் இளைஞர்களை அனுப்பி, அவற்றைக் கொண்டுவரச் சொல்லுங்கள். உங்களுக்குப் புண்ணியமுண்டு” என்று கெஞ்சும் குரலில் கேட்டாள் சைலேந்திரி.

“சைலேந்திரி, இப்போது பரமகுரு வீட்டிற்குச் செல்லக்கூடாது. ஆபத்து அங்கே காத்திருக்கும். பொறுமையாக இரு. முகுந்தன் நல்லதையே செய்வார்” என்றாள்.

சைலேந்திரிக்கு என்ன செய்வது என்று புரியவில்லை.

இரண்டு நாள்கள், சைலேந்திரிக்கு இரண்டு யுகங்களாகக் கழிந்தன. மூன்றாவது நாள் காலையில் சிற்பியின் குடிலுக்குக் குதிரையில் சிலர் வந்து இறங்கினார்கள்.

# 13

சித்திரமாயனுக்கு ஆதரவாளர்களும் உண்டு; எதிர்ப்பவர்களும் உண்டு. தனக்குத்தான் பல்லவ மகுடம் கிடைத்திருக்க வேண்டும்; தன்னை இழிவாகப் பேசி, தனக்குத் திறமை இல்லை என்றெல்லாம் பழி கூறி என்னை ஒதுக்கிவிட்டனர். அதற்குப் பலருடைய சூழ்ச்சிகள் காரண மாக இருந்தன; அவ்வாறு சதி செய்தவர்கள் யார் யார் என்பனவற்றை அவன் அறிந்து வைத்திருந்தான். அவனுக்கும் ஆதரவாளர்கள் சேரத் தொடங்கினர். அவர்கள், அரசாங்கத்தில் பல நிலைகளில் பணியாற்றி வந்தனர்.

பல்லவ மன்னன் நந்திவர்மன், தன்னைவிடப் பல ஆண்டுகள் இளையவனாயிருந்தும், அறிவாற்றலில் சிறந்து விளங்குவதை அவன் மனத்திற்குள் ஒப்புக்கொண்டிருந்தான். நாட்டு மக்களிடையே செல்வாக் கைப் பெற எவ்வளவு முயன்றும், மக்களிடம் ஏற்பட்ட அவப்பெயரை மாற்ற இயலவில்லை.

பல்லவ நாட்டுக் கோட்டத் தலைவர்களுள் பெரும்பான்மைத் தலைவர்களின் ஆதரவு அவனுக்கு இல்லை. 'அவர்களுடைய ஆதரவைப் பெறுவதைவிட, சாளுக்கியர்களின் ஆதரவைப் பெறுவதுதான் வெற்றி யைத் தரும்' என்று அவனுடைய முக்கிய ஆலோசகர் ஆனந்த கூத்தர் சொல்லியிருந்தார். அவர் மாமல்லபுரத்துச் சிற்பங்களைப் படைப்பதில் பெரும் பங்கேற்றவர். சிவ, விஷ்ணு வடிவச் சிற்பங்களைப் படைப்பதில் அவருக்குக் கருத்து வேற்றுமை ஏற்பட்டது.

பரமேச்வரவர்மனின் இறுதிக்காலத்தில் அவருடன் முரண்பாடு ஏற்பட்டுத் தன் சீடர்களுடன் வாதாபிக்குச் சென்றுவிட்டார். அவர் பல்லவ நாட்டை விட்டுச் சென்றது, பல்லவ அரசருக்குப் பெரும் இழப்புத்தான். நந்திவர்மன் அரியணையில் அமர்ந்தவுடன், சிற்பிகள் பலர் காஞ்சிபுரத் தையும், மாமல்லபுரத்தையும் விட்டுச் சென்றுவிட்டதை அறிந்தான்.

நந்திவர்மனுக்கு இளம் வயதிலேயே பல இலட்சியக் கனவுகள் உண்டு. இராமாயண, பாரதக் கதைகளைச் சொல்லக் கேட்பதில் அவனுக்குப் பெரும் ஆர்வம். மாமல்லபுரத்தில் சிவபெருமானுக்கும், திருமாலுக்கும் ஒரேயிடத்தில் கோயில் அமைத்து சைவர்களையும், வைணவர்களையும் கருத்து வேற்றுமை மறந்து ஒன்றுபடுத்த வேண்டும் என்பதை இலட்சியமாகக் கொண்ட இராசசிம்மன் புதுமையாகக் கட்டிய கோயிலைப் போல், தானும் காஞ்சியில் ஒரு கோயிலைக் கட்ட வேண்டும் என்ற எண்ணம் அவன் இதயத்தில் அழியாது பதிந்தது.

உலகளந்த பெருமாள் கோயிலின் அர்ச்சகரிடம் மகாபாரதத்தை முறையாகக் கற்கத் தொடங்கினான். திருமாலின் அவதாரக் கதைகள் அவனைப் பெரிதும் கவர்ந்தன. அவற்றைச் சிற்ப வடிவாக்க ஆவல் கொண்டான். மாமல்லபுரத்துச் சிற்பங்களைப்போல் காஞ்சியிலும் படைக்க ஆர்வங்கொண்டான்.

காஞ்சிபுரத்தில் இராசசிம்மன் எழுப்பிய கைலாசநாதர் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கி வரும்போது, சிவபெருமானின் தாண் டவங்களின் தத்துவத்தைக் கேட்டறிந்தான். கைலாசநாதர் கோயிலில் திகழும் சிவத் தாண்டவங்கள், அவனைப் பெரிதும் கவர்ந்தன. அழியா வண்ணத்தால் அலங்கரிக்கப்பட்டிருந்த அந்தக் கோயிலுக்குப் பலமுறை சென்று வந்தான். ஏகாம்பரநாதர் கோயிலில் இசையுடன் பாடப்படும் தேவாரப் பாடல்கள் அவனை ஈர்த்தன. விசாலமான திருச்சுற்றில் இளம் பெண்களும் ஆண்களும் கணீரென்ற குரலில், திருநாவுக்கரசரின் பதிகங்களைத் தாளத்துடன் பாடுவதைக் கேட்கும்போது, தன்னையே மறந்து விடுவான்.

நாள்தோறும் உலகளந்தார் கோயில் பட்டரும், கைலாசநாதர் கோயில் அர்ச்சகரும், ஏகாம்பரர் கோயில் ஓதுவா மூர்த்திகளும், நந்திவர் மனைச் சந்தித்து உரையாடி மகிழ்வார்கள்; மகிழ்விப்பார்கள்.

வேகவதி ஆற்றின் மறுகரையில், ஒரு சிறு கிராமத்தில் சித்திரமாயன் மாளிகை இருந்தது. நாள்தோறும் நம்பிக்கை மிகுந்த காவலர்கள் சூழ காஞ்சிமா நகரத்திற்குக் குதிரைமீதமர்ந்து வருவான். வழியில் திருப்பருத் திக் குன்றச் சமணர் கோயிலுக்குச் சென்று, அருகதேவரை வழிபட்டு வரத் தவறமாட்டான். அங்கு வரையப்பட்ட ஓவியங்களைக் கண்டு அதிசயப்படுவான்.

நந்திவர்மனுக்கு எதிராகத் திட்டங்கள் வகுப்பது, தன்னை ஆதரிப் பவர்களுடன் பேசி மகிழ்வது போன்றவற்றில் ஈடுபட்டிருந்ததாலும், அரியணையில் அமர வேண்டும் எனும் ஒரே குறிக்கோள் இருந்ததாலும், அவனுக்கு இறைவனை நினைக்க நேரமில்லை.

அவனுடைய இலட்சியத்தை அறிந்த தர்மபாலன் என்ற புத்த மதத்தைச் சேர்ந்தவரும், சித்திரமாயனுடன் நெருங்கிப் பழகலானார். காஞ்சிமா நகரில் மீண்டும் புத்த சமயம் பரவவேண்டும் எனும் தன் எண்ணத்தை, சித்திரமாயன் உதவியுடன் நிறைவேற்ற விரும்பினார்.

சித்திரமாயன் விழித்தெழுவதற்கு முன்பே, தர்மபாலன், அவன் வீட்டுத் தோட்டத்தில் காத்திருப்பான்.

மாளிகையின் மேல் மாடச் சாளரத்தினின்று தோட்டத்தை நோக்கும் சித்திராங்கிக்குத் தர்மபாலன் மீது வெறுப்பு ஏற்படும். பொழுது விடிவதற்கு முன்பே தன் கணவரைக் காண வந்து, நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருக்கும் தர்மபாலனிடம் அவளுக்கு எரிச்சல் ஏற்படும். வெளிப் படையாக அதைத் தன் கணவரிடம் தெரிவித்த பல சமயங்களில், சித்திரமாயன் புன்முறுவலையே மறுமொழியாகக் கூறி விடுவான். "கூடிய விரைவில் நீ பல்லவ நாட்டு அரசியாவதற்காகத்தான், நேரம் போவது தெரியாமல் தர்மபாலனிடம் பேசுகிறேன்" என்று கூறிவிடுவான்.

சித்திரமாயனுடன் பல்லவ அரசியாக அரியணையில் அமர சித்திராங்கிக்கு ஆசைதான்; அதற்கும், தர்மபாலன் நேரம் போவது தெரியாமல் தன் கணவருடன் பேசிக் கொண்டிருப்பதற்கும் என்ன தொடர்பு? அவளுக்குப் புரியவில்லை.

சித்திரமாயன் ஒருநாள், தன் திட்டங்களை விளக்கி சித்திராங்கி யிடம் விவரித்தான். பல்லவ மகுடத்தை அடைவது அவ்வளவு எளிதான செயல் இல்லை என்று அவளுக்குத் தோன்றியது. சித்திராங்கியின் தந்தை செல்வாக்கும் செல்வமும் மிகுந்தவர். சித்திரமாயன் அரச குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற எண்ணத்தில், தன் மகளை அவனுக்குத் திருமணம் முடித்துக் கொடுத்தார். அழகும் வீரமும் நிறைந்த சித்திரமாயன், பல்லவ மன்னராகவும் ஆகக் கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதைப் பிறகு தெரிந்து கொண்டவுடன், அவர் பல வழிகளில் தன் மருமகனுக்கு உதவ முன் வந்தார். அவருக்கும் புத்த சமயத்தைச் சேர்ந்தவர்களிடம் தொடர்பு உண்டு. அங்கேதான் அவர், தர்மபாலனைச் சந்தித்தார். சித்திரமாயனுடைய மாமன் என்றறிந்தவுடன், தர்மபாலன் தன் எண்ணத்தைக் கூறினார்.

மீண்டும் பல்லவ நாட்டில் புத்த சமயம் மலர வேண்டும் என்ற தர்மபாலனின் இலட்சியத்தைக் கேட்ட சித்திரமாயனின் மாமனுக்கு, மகிழ்ச்சி ஒருபுறமும் அச்சம் ஒருபுறமும் எழுந்தன.

"என் மருமகன் பல்லவ நாட்டின் மன்னராக வேண்டும் என்பதற் காக, புத்தரின் கொள்கைகளை மீண்டும் காஞ்சியில் பரப்புவதற்கு முயற்சி எடுத்துக்கொள்வது எளிதா?" சித்திரமாயனின் மாமன் கேட்டார்.



"பதவிக்காக, புத்தமதத்தை ஆதரிக்குமாறு நான் சொல்லவில்லை. புத்தபிரானின் புனிதக் கொள்கையை இந்த நாட்டில் பரப்புவதற்கு இது ஏற்ற சமயம். சித்திரமாயனால் அதைச் சாதிக்க முடியும் என்பதை நான் அறிவேன். சித்திரமாயன் அதை முனைப்புடன் செய்ய ஏற்றால், சித்திரமாய னுக்கு இந்த நாட்டை மீட்டுத் தருவேன்."

தர்மபாலன் சொல்வதை வியப்புடன் கேட்ட சித்திரமாயனின் மாமனுக்கு ஐயம் தீரவில்லை. "அதெப்படி முடியும்?" என்று கேட்டார்.

"எல்லாவற்றையும் விவரிக்க என்னால் முடியாது. மிக இரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டியவையும் உள்ளன" – தர்மபாலன் கண்டிப் பாகக் கூறினான்.

"நான் சித்திரமாயனுடைய மாமன். என் மகளின் வருங்காலத்தைப் பற்றி நான் கவலைப்படாமல், வேறு யார் கவலைப்படுவார்கள்?"

"கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை. என் திட்டங்களை வேறு யாரிடமும் சொல்வது முறையில்லை. அரசாங்கத்துடன் மோதப் போகி றோம். இரகசியம் அம்பலமானால், எல்லோருக்குமே ஆபத்து நிறைந் திருப்பதால்தான் நான் கவலைப்படுகிறேன்."

"மீண்டும் சொல்கிறேன்; கவலைப்படுபவர்களால் நாட்டை ஆள முடியாது."

"நான் ஆளப்போவதில்லையே. என் மகளின் நல்வாழ்வைப் பற்றிய திட்டங்கள் இதில் பிணைந்திருக்கின்றன. அதனால், நான் தங்களைக் கேள்வி பல கேட்க வேண்டியது அவசியமாகிறது."

"நான் உறுதியாகக் கூறுகிறேன். தங்கள் மகள் பல்லவ நாட்டின் அரசியாவது திண்ணம். சித்திரமாயன் என் சொற்படி நடந்தால், வெற்றி நிச்சயம். நீங்கள் தலையிடாமல் இருப்பது ஒன்றே உங்கள் மகளுக்குச் செய்யும் பெரும் உதவி!"

தர்மபாலன் அதற்கு மேல் விவாதிக்க விரும்பவில்லை. சித்திரமாய னிடம் நடந்தவற்றை விவரித்து, "நமது திட்டங்கள் இரகசியமாக இருக்க வேண்டும். புத்த சமயத்தை நீங்களும் ஆதரிக்க வேண்டும்" என்றான் தர்மபாலன்.

"முன்பே எனக்குப் புத்த சமயக் கொள்கை மீது ஈடுபாடு உண்டு. பல்லவ நாட்டு மக்கள், புத்த – சமண சமயங்களிடம் நம்பிக்கை வைத் திருந்த வரையில் நாடு செழிப்பாக இருந்தது. ஒழுக்கம் நிறைந்திருந்தது. மக்களின் நம்பிக்கை குறைந்தவுடன், நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. எதிரிகளின் படையெடுப்பால் நாடு குலைந்தது. மகேந்திரவர்மனும்,

நரசிம்மவர்மனும் சிவனையும், விஷ்ணுவையும் ஏற்று வேத சமயத்தை நம்பத் தொடங்கிய பிறகு, மக்கள் வாழ்க்கையே மாறிவிட்டது. புத்த – சமண சமயங்களின் மீது நம்பிக்கை குறைந்தது" என்று கூறிப் பெருமூச்சு விட்டான் சித்திரமாயன்.

"கபாலிகர்களும், பைரவர்களும், காளாமுகர்களும் இந்த நாட்டில் நடமாடிய வரையில், சிவனை வணங்குபவர்களிடையே ஒற்றுமை இல்லாதிருந்தது. பிறகு புத்த பிக்குகளும், தங்கள் அறநெறிப்படி நடக்கவில்லை. ஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் ஊர் ஊராகச் சென்று செய்த பிரச்சாரத்தால் புத்த, சமணக் கொள்கையினின்று மக்கள் மெல்ல மெல்ல மாறினர். பரமேச்வரனும், இராசசிம்மனும் சிவ பெருமானுக்கும், விஷ்ணுவுக்கும் கோயில்களைக் கட்டினர். அதனால் எல்லாம் நமக்குப் பெரிய இடையூறு ஏற்பட்டது. எங்கும் பாட்டும், கூத்தும், கேளிக்கையும் மிகுந்தன. இப்போது தக்க தருணம் வந்துள்ளது. நீங்கள் புத்த சமயக் கொள்கையை ஆதரிக்க வேண்டும்" என்றான் தர்மபாலன்.

"எனக்கும் முன்பே நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கையே எனக்கு மக்களிடையே அவப்பெயரை ஏற்படுத்திவிட்டது. நான் சைவ மதத்தையோ வைணவ மதத்தையோ ஆதரித்தால்தான், மக்கள் என்னை நம்புவார்கள்; ஆதரிப்பார்கள்" என்றான் சித்திரமாயன்.

"நந்திவர்மன் எந்தச் சமயத்தை ஆதரிக்கிறான்?"

"அதை அவன் இன்னும் வெளியே புலப்படுத்திக் கொள்ளவில்லை. கைலாசநாதர் கோயிலுக்குச் செல்கிறான். உலகளந்த பெருமாள் கோயிலுக்குச் செல்கிறான். அந்தச் சமயங்களைப் பற்றிக் கற்றறிய மாணவனைப்போல், அறிஞர்களிடம் பாடம் கேட்கிறான். வேதம் கற்கிறான். ஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் சிவபெருமான் மீது எழுதிய பாடல்களைப் பாடச் சொல்லிக் கேட்கிறான். மகாபாரதம் கதையைச் சொல்லச் சொல்லிக் கேட்கிறான். மகாபாரதக் கதைகளை, ஊர் ஊராகப் படிக்கச் சொல்கிறான்; அதற்கான மண்டபம் கட்டுகிறான்; புலவர்களை ஆதரிக்கிறான்" என்றான் சித்திரமாயன் பெருமூச்சு விட்டபடியே!

"ஆமாம்; முகுந்தனின் யோசனையும், உதயசந்திரனின் பக்கபலமும் அவனுக்கு நிறைய இருக்கின்றன."

"முகுந்தனையும், உதயசந்திரனையும் தீர்த்துக் கட்டிவிட்டால், நம் எண்ணங்கள் எளிதாக நிறைவேறும். முகுந்தனைப் பின் தொடர்ந்து உதயசந்திரனையும் ஒழிக்கத் திட்டமிட்டுள்ளேன்." சித்திரமாயன் கடுமையாகப் பேசினான்.



"உதயசந்திரனைப் படைத் தளபதியாக நியமிக்கப்போகிறான் நந்திவர்மன். நீங்கள் மிகக் கவனமாகத் திட்டமிட வேண்டும். முகுந்தனையும், உதயசந்திரனையும் தீர்த்துக்கட்டுவது ஒருபுறமிருக்கட்டும். அதைவிட தங்களுக்குப் பெரும் உதவியைப் பெற்றுத்தர, நான் சிறந்த யோசனை ஒன்று கூறுகிறேன். நீங்கள் அதற்கு ஒத்துழைத்தால், அடுத்த கோடைக் காலத்திற்குள் காஞ்சி மகுடம் உங்களுக்குத்தான்."

தர்மபாலனுடைய உறுதியான பேச்சு, சித்திரமாயனுக்கு வியப்பை அளித்தது.

"அந்தத் திட்டம் என்னவென்று உங்கள் மாமன் என்னிடம் வற்புறுத்திக் கேட்டார். எப்படிச் சொல்வது? மறுத்து விட்டேன். உங்கள் மனைவிக்கும் என் மீது சந்தேகம்" என்று கூறும்போது, சித்திரமாயன் குறுக்கிட்டு, "தர்மபாலரே! என் மாமனிடம் இப்போது ஒன்றும் சொல்லி விடாதீர்கள். ஒன்றுமே தெரியாதவர் என் மாமன். அவர் அவ்வளவு புத்திசாலியல்லர். அவருடைய மகள் மட்டும் அறிவாளியாக எப்படி இருக்க முடியும்?" என்று கூறி, பெரிதாக நகைத்தான்.

தர்மபாலன் உடன் சிரிக்காமல் மௌனமாக இருந்தான். பிறகு மெதுவாக, "சாளுக்கிய அரசரின் உதவியைப் பெற்றுத் தருகிறேன். நீங்கள் 'உம்' என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள்" என்று கூறி, சித்திரமாயனை நோக்கினான் தர்மபாலன்.



# 14

தர்மபாலனின் திட்டங்களைக் கேட்ட சித்திரமாயன், சிந்தனையிலாழ்ந்தான். சாளுக்கியர்களின் உதவியைப் பெற்றுத் தருவதாகக் கூறியது, அவ்வளவு எளிதில் நடக்குமா என்ற ஐயம் அவனுக்கு இருந்தது.

தர்மபாலனுடன் பழக்கம் ஏற்படுவதற்கு முன்பே, சாளுக்கிய இளவரசன் கீர்த்திவர்மனுடன் தொடர்பு உண்டு. பல்லவ நாட்டைக் கைப்பற்றுவதைவிட, பல்லவ நாட்டுக் கலைச் செல்வங்களைக் கவர்வதில்தான் கீர்த்திவர்மனுக்குப் பேராசை. அதன் முதற்படியாக பரிவாதினி வீணையைக் கவர்ந்து வருவதற்கு சாலினியை அனுப்பினான். சித்திரமாயன் அதை அறிவான். பரிவாதினி வீணையைக் கைப்பற்றுவது அவ்வளவு எளிதாக இல்லை. நந்திவர்மன் அதைப் பொக்கிஷம்போல் பாதுகாக்கிறான்.

காஞ்சி மாளிகையில், பரிவாதினி இருக்கிறது என்பதை அவன் அறிவான். அதைக் கவர்ந்து வருவதற்கு ஏற்றவர்களைத் தேர்ந்தெடுக்க, அவன் ஒற்றர்களால் இயலவில்லை. அதற்காக வாதாபியினின்று வந்துள்ள சாலினியும், பரமகுருவிடம் அடிமையாகிவிட்டாள். கீர்த்திவர்மனால் அனுப்பப்பட்டு சாலினியுடன் வந்த சாளுக்கிய ஒற்றன், ஒருமுறை சித்திரமாயனைச் சந்தித்தான்.

"வணக்கம், பல்லவ மன்னரே!" என்று அவன் கூறியவுடனே, சித்திரமாயன் நெகிழ்ந்துவிட்டான். அந்தக் கணமே, பல்லவ நாட்டு அரசன் என்றே தன்னைப் பாவித்துக் கொண்டான்.

அவன் தோள் மீது தன் கரத்தைப் பாசத்துடன் வைத்து, "தம்பி என்று உன்னை அழைப்பதைத் தவறாக நினைக்க மாட்டாயே?" என்றான்.

"எனக்குப் பெரும் பாக்கியம் மாமன்னரே! வருங்கால மன்னருடன் நெருக்கமாகப் பேசக்கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டதற்கு, எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை."

"சரி, என்னைத் தேடி வந்ததன் நோக்கம்?"



"என்னை எச்சரித்து இளவரசர் கீர்த்திவர்மனிடமிருந்து ஓலை வந்து விட்டது. இன்னும் இருபது நாள்களுக்குள் பரிவாதினி வீணையைக் கொண்டுவராவிடில், எங்கள் இருவருக்கும் மரணதண்டனை விதிப்பதாக அவர் கடிந்து எழுதியுள்ளார்."

இதைக் கேட்ட சித்திரமாயன் நகைத்தான். "உங்கள் இளவரசருக்குப் பரிவாதினி வீணை இருந்தால் மட்டும் போதுமா? நாடு வேண்டாமா? பல்லவ நாட்டைவிட அந்த வீணை பெரிதா?" என்று கேட்டான்.

"இளவரசர் அப்படித்தான் நினைக்கிறார்."

"நந்திவர்மனுக்கு இந்தச் செய்தி தெரிந்து, அவரே மனமுவந்து வீணையைப் பரிசாக அளிக்க முன்வந்து விட்டால்?" சித்திரமாயனுடைய இந்தக் கேள்விக்குச் சாளுக்கிய ஒற்றனால் மறுமொழி கூற முடியவில்லை.

"நந்திவர்மனின் நிலை இப்போது அப்படித்தான். நாட்டைக் காப்பாற்றப் போதிய வீரர்கள் பலமில்லை. சமாதானம் செய்துகொள்ளும் நிலையில்தான் இருக்கிறான்."

சித்திரமாயன் இவ்வாறு கூறியதைக் கேட்ட ஒற்றன், மௌனமானான். "அவ்வளவு பலஹீனமாக இருக்கிறாரா நந்திவர்மன்?" என்று கேட்டான்.

"எனக்கு உதவுவதாக உங்கள் இளவரசர் வாக்களித்தால், அவருக்குப் பரிவாதினி மட்டுமா, கட்டுவாங்கக் கொடி, கடுமுக வாத்யம் போன்ற அபூர்வமான – பல்லவ நாட்டிற்கு மட்டும் உரியவற்றைத்தரச் சித்தமாயிருக்கிறேன்" என்றான்.

"இளவரசரிடம் தெரிவிக்கிறேன். இதற்கிடையில், பரிவாதினி கிடைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டுமே! சாலினியை நான் சந்திக்க இயலுமா?" என்று கேட்டான்.

சித்திரமாயன் சிந்தித்தான். சாலினியையும், பரமகுருவையும் காஞ்சிக்கு அழைத்து வந்துவிட்டால்?

ஆனால், பரமகுரு வீட்டில் அன்று இரவு நடைபெற்ற நிகழ்ச்சிகள், சித்திரமாயனுக்கு ஏமாற்றத்தை அளித்தன.

எதிர்பாராமல் சந்தித்த பரமகுரு வீட்டிலிருந்து முகுந்தனைச் சிறைப்பிடிக்க முயன்றும் முடியவில்லை. சைலேந்திரியும் தப்பி ஓடிவிட்டாள். பரமகுரு மீது மிகுந்த ஆத்திரம் ஏற்பட்டது. ஆனால், எதிர்பாராது வந்து சேர்ந்த நரேந்திரனைச் சந்தித்தவுடன், சித்திரமாயனுக்குப் புது யோசனை ஒன்று தோன்றியது. தன்னைக் காணாமலேயே மதிப்பும் மரியாதையும் கொண்டிருக்கும் நரேந்திரனைப் பயன்படுத்தத் திட்டமிட்டான். நந்தீசனுடன் தனியே ஆலோசனை செய்தான்.

'நீங்கள் சொல்வது மிகவும் சரி; நாம் நரேந்திரனைப் பயன்படுத்த வேண்டும்'' என்றான் நந்தீசன்.

''சைலேந்திரியை, நரேந்திரன் நன்கு அறிவான். சைலேந்திரியைக் கண்டுபிடித்துத் தரும் பொறுப்பை அவனிடம் அளிப்போம்'' என்றான் நந்தீசன்.

“ஆகா, நல்ல யோசனை'' என்றான் சித்திரமாயன். இன்று நாம் பரமகுருவுக்கு எந்தத் தொல்லையும் தராமல் விட்டுவிடுவோம். நாளை இரவு சாலினியையும், பரமகுருவையும் காஞ்சிக்கு அழைத்துச் சென்று விடுவோம். தக்க பாதுகாப்புடன் அத்திரி வண்டியில் அவர்களைப் பயணம் செய்ய ஏற்பாடு செய்துவிடு'' என்றான் சித்திரமாயன்.

நந்தீசனுக்கு இந்தத் திட்டத்தில் அரை மனதுதான். சாலினியை எப்படியாவது அடையவேண்டும் என்று பேரவா கொண்டிருந்த நந்தீசனுக்கு, சித்திரமாயனின் திட்டத்தைக் கேட்டவுடன் சிறிது ஏமாற்றம் ஏற்பட்டது. காஞ்சிக்குச் சென்றுவிட்டால் சாலினியைச் சந்திக்க முடியாது.

இரவெல்லாம் உறங்காமல் சிந்தித்தான். பல்லவ அரசப் பணியில் இருந்துகொண்டே, அரசருக்கு விரோதச் செயலில் ஈடுபட்டிருப்பது தவறு என்று அவன் மனைவி எடுத்துக் கூறுவாள். அரசருக்கு விரோதமாகச் செயல்படுவது பெரும் துரோகம் என்று சொல்வாள். ராஜதுரோகம் மன்னிக்க முடியாத குற்றம் என்றும் எடுத்துரைப்பாள். தன் கணவர் ஏதோ சிந்தனையில் மனத்தை அலைபாயவிட்டுத் தவிப்பதை உணர்ந்து, காரணம் அறிய விரும்பினாள். ஏதாவது சதித் திட்டம் வகுக்கிறாரோ என்று பயந்தாள்.

நந்தீசன் மனைவி செங்கமலவல்லி, சோழ நாட்டில் ஒரு பகுதியான திருவாலி நாட்டில் பிறந்தவள். அவளுடையத் தந்தை திருமாலிடம் அளவு கடந்த பக்தி மிக்கவர். தன் மகளுக்குச் செங்கமலவல்லி என்று பெயரிட்டார். நந்தீசனின் அறிவுக் கூர்மையையும், ஆற்றலையும் கேள்விப்பட்டு தன் மகளை, நாடு விட்டு நாடு சென்று மணம்புரிந்து கொடுக்கத் துணிந்தார். கடல்மல்லைத் துறைமுகப்பட்டினத்தில் பொறுப்புள்ள பதவி வகிக்கும் நந்தீசன், மிக விரைவில் அரசாங்கத்தில் பெரும் பதவி வகிப்பான் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. திருமணமாகி சோழநாட்டிற்கு வடக்கே புக்ககம் செல்லும் தன் மகளைப் பிரிவதற்கு, முதலில் அவர் சங்கடமடைந்தாலும், தன் மருமகன் நந்தீசன், கடல்மல்லை நகரில் வகிக்கும் உயர் பதவியை அறிந்து, தன் மனத்தைத் தேற்றிக்கொண்டார். சோழ நாட்டில் இல்லாத வடிவமைப்பில் இராசசிம்மன் கடல்மல்லையில் எழுப்பித்துள்ள பெருமாளுக்குக் கோயில் இருப்பதைக் கண்டார். திருமாலிடம் தீவிரப் பற்று கொண்ட அவர், கற்களை அடுக்கி அமைக்கப்பட்ட கோயிலில், கிடந்த கோலத்தில் துயில்வது போன்ற



கோலத்தில் இருக்கும் திருமாலின் அழகிய வடிவம் கண்டு மெய் மறந்தார். நாள் தோறும் தன் மகள் செங்கமலவல்லி, பெருமாளை வணங்குவதற்கு ஏற்ற கோயில் கடல்மல்லை நகரில் இருப்பதால், நந்தீசனுக்கு மணம் புரிவித்ததில் மனநிறைவடைந்தார். ஆண்டுதோறும் மாசி மாதம் கோலாகலமாக நடை பெறும் விழாவிற்குக் கடல்மல்லைக்குத் தவறாமல் வரவேண்டும் என்று திட்டமிட்டார். ஆனால் கடவுள் சித்தம் வேறு விதமாக இருந்தது. திருமால் அவரைத் தன்னிடம் அழைத்துக் கொண்டார். செங்கமலவல்லிக்கு, நந்தீசனே துணை என்றாகிவிட்டது. அழகிலும் ஆண்மையிலும் சிறந்த நந்தீசன் மீது காதலும், பக்தியும் கொண்டாள்.

நந்தீசன், பல்லவ அரசருக்கு விரோதமான செயலில் மட்டும் ஈடுபடவில்லை. பண்புக்கு மாறான செயலிலும் ஈடுபடுகிறான்; தவறான வழிகளில் ஈடுபடுகிறான் என்பதைக் கேள்விப்படும்போது செங்கமலவல்லி மனம் வருந்துவாள். தன் கணவர் மனம் திருந்தி நற்குணத்துடன் வாழ வேண்டும் என்று பெருமாளை நாள்தோறும் வேண்டித் துடிப்பாள்.

சோழ நாட்டின் உட்பிரிவுகளுள் ஒன்றான திருவாலி நாட்டில், நீலன் என்பவர் படைத் தலைவராக இருந்தார். சிறந்த போர்வீரரான அவர் திறமையை அறிந்து, நீலனுக்குத் திருவாலி நாட்டை அளித்தார் சோழ மன்னர். திருமங்கை எனும் நகரைத் தலைமை இடமாகக் கொண்டு ஆட்சி புரிந்த நீலனுக்குப் பரகாலன் என்ற பட்டத்தையும் அளித்தார். நீலன், திருமாலிடம் நீங்காத பக்தி கொண்டதால், திருமங்கை மன்னர் என்று போற்றப்பட்டார். பரகாலன் திருமால் அடியாராகி ஊர் ஊராகச் சென்று திருமால் பெருமைகளைப் பரப்பி வரலானார். திருவாலி நாட்டில் பிறந்த செங்கமலவல்லி, திருமங்கை மன்னரைக் கடல்மல்லை நகருக்கும் அழைக்க விரும்பினாள்.

நந்தீசன், அவள் யோசனையைக் கேட்டுச் சிரித்தான். “செங்கமலவல்லி, இதுவரையில் உன்னுடைய சொந்த விருப்பத்தில் நான் குறுக்கிட்டதில்லை; தடை சொன்னதுமில்லை. தலசயனப் பெருமாளை வணங்குவதைப் பற்றி, நான் உன்னைக் கண்டித்ததுமில்லை. தனியாக அந்தக் கோயிலுக்குச் சென்று பூசை செய்து வருவதைப் பற்றியும், நான் மறுப்பு சொன்னதில்லை. புத்தபிரானின் கொள்கைகள் என் மனத்தைக் கவர்கின்றன. நீ பாராட்டும் பெரியவர் திருமங்கை மன்னன், நாகப்பட்டினத்துப் புத்தர் கோயிலிலுள்ள செல்வங்களை அபகரித்திருக்கிறார் தெரியுமா? அவரைச் சந்திக்கவும் எனக்கு வெறுப்பாக இருக்கிறது'' என்று சிறிது சிறிதாகத் தன் குரலை உயர்த்திக் கடைசியில் சீற்றத்துடன் பேசினான்.

அவன் பேச்சைக் கண்டு செங்கமலவல்லி திகைத்தாள். இவ்வளவு நாள் மனத்திற்குள்ளேயே மறைத்து வைத்துக் கொண்டிருப்பதைத் தன் கணவர் இப்பொழுது வெளியிடுவது அறிந்து கவலையடைந்தாள்.

"திருமங்கை மன்னர் என்ன சொல்கிறார்? பக்தி செய்து பரமனை அடையலாம் என்கிறார். பரமனின் பாதத்தை என்றுமே நினை என்கிறார். தவறான வழி எதையும் சொல்லவில்லையே?"

"எனக்கு அவர் வழி பிடிக்கவில்லை. அவர் ஒரு கொள்ளைக்காரர். புத்த விஹாரத்திற்குள் நுழைந்து செல்வங்களைக் கொள்ளையிட்டவர். தங்கத்தாலான புத்தர் சிலையை உருக்கி எடுத்தவர்."

நந்தீசன் இவ்வாறு சொல்லவும், செங்கமலவல்லிக்குக் கோபம் பொங்கி வந்தது. அவள் வீர மரபில் வந்தவள். வேறு யாராவது சொல்லியிருந்தால், அவர் நாக்கைத் துண்டித்திருப்பாள். ஆனால், தன் கணவரிடம் எந்த விதத்திலும் வாதம் செய்ய விரும்பவில்லை. அவரை மெல்ல மெல்லவே மாற்ற முடியும் என்ற முடிவுக்கு வந்தாள். பேச்சை மாற்ற விரும்பி, "நமக்குள் எதற்கு விவாதம். பக்திமான், அருளாளர், திருமால் அடியார். அவரைப் பல்லவ நாட்டிற்கு வரவேற்போம் என்று சொன்னேன். நந்திவர்ம அரசரும் மகிழ்ச்சியடைவார்" என்றாள்.

நந்தீசன் மௌனமானான். அவள் சொல்வதை, அவன் பெரிதாகக் கொள்ளவில்லை. அவன் நோக்கமெல்லாம் சாலினியைக் காஞ்சி செல்லாமல் எப்படித் தடுப்பது என்பதிலேயே இருந்தது. இரவு உறங்காமல் சாலினியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். அத்திரிக் குதிரை பூட்டிய வண்டியை ஆயத்தம் செய்தான். அதற்கிடையே, பரமகுரு வீட்டிற்குச் சென்று, அவர்கள் மனநிலையை அறிய விரும்பினான்.

பரமகுரு வீடு மூடப்பட்டிருந்தது. கதவைத் தட்டினான். உள்ளே தாளிடப்படவில்லை, திறந்து கொண்டது. வழக்கமாக உட்காரும் இடத்தில் பரமகுருவைக் காணவில்லை.

வீடெங்கும் சுற்றி வந்தான். பரமகுருவின் வீணையைக் காணவில்லை. சைலேந்திரி தங்கியிருந்த இடத்திற்கு விரைந்தான். அங்கு அவளுடைய வீணையையும் காணவில்லை. அவனுக்குக் கோபம் பொங்கியது. 'தன்னைக் கோமாளியாக்க விரும்புகிறார்களா? எங்கே சென்றுவிட்டார்கள்? என்னிடம் சொல்லாமல் சாலினியும் சென்றுவிட்டாளே? சித்திரமாயன் வகுத்த திட்டத்தைக் குலைக்க யாரோ சதி செய்கிறார்கள்' என்று மனத்திற்குள்ளே புலம்பினான்.

இப்பொழுது என்ன செய்வது என்று அவனுக்குப் புரியவில்லை. இரவெல்லாம் தன்னுடன் வாதிட்ட மனைவி மீது ஆத்திரம் ஏற்பட்டது. அவளை எந்தவிதத்திலாவது தண்டிக்கும் எண்ணத்தில் வீட்டிற்கு விரைந்தான்.

# 15

வீட்டின் வெளியே குதிரை வீரர்கள் சிலர் நிற்பதைப் பார்த்த பொன்னாச்சி திடுக்கிட்டாள். சைலேந்திரியைத் தேடி, சித்திரமாயன் ஆதரவாளர்கள் வந்திருப்பதாக நினைத்தாள். தன் கணவரை அழைக்க வெளியே வந்தாள்.

"அம்மா முதியவர் எங்கே?" என்று வீரர்களுள் ஒருவன் கேட்ட பிறகுதான், பொன்னாச்சிக்கு ஏற்பட்ட நடுக்கம் குறைந்தது.

தன் புருவத்தில் கையை வைத்து, விழிகளைச் சுருக்கி, கண்களுக்கு ஏற்பட்ட கூச்சத்தைக் குறைத்து, "யார் நீங்கள்?" என்று கேட்டு, பல்லவ வீரர்கள்தாமா என்று உறுதி செய்துகொள்ள முயன்றாள்.

"சிற்பியைத் தேடி வந்திருக்கிறோம். காஞ்சியினின்று வருகிறோம்" என்றான் வீரர்களுள் ஒருவன், மிகவும் பணிவுடன்.

பொன்னாச்சி குரல் கொடுத்தாள். எங்கிருந்தோ முதிய சிற்பியின் குரல், 'இதோ வருகிறேன்!' என்று மறுமொழியாக ஒலித்தது.

"உட்காருங்கள்" என்று மரத்தடியிலிருந்த கயிற்றுக் கட்டிலை வீரர்களுக்குச் சுட்டிக் காட்டினாள். அவர்கள் நன்றி தெரிவித்துவிட்டு, சற்று ஒதுக்குப்புறமாக நின்றார்கள்.

அவர்களுள் ஒருவன், "பாட்டி, என்னை அடையாளம் தெரியவில்லையா? நான்தான் பரஞ்சோதி" என்று அறிமுகப்படுத்திக் கொண்டான்.

சற்று யோசித்த பொன்னாச்சி, பரஞ்சோதியை நினைவுக்குக் கொண்டு வந்து, "ஓ! பரஞ்சோதியா? நலமாயிருக்கிறாயா! வளையன் குட்டை மண்டபத் திருப்பணியின்போது எங்களுக்கு உதவியாக இருந்தாய். அதுதான் பாதியில் நின்றுவிட்டதே. ஹூம்… மாமல்லபுரத்தில் எல்லாமே பாதியில் நின்றுவிட்டது. இருந்தாலும் சிற்பக்கூடத்தில் அவர் இன்னமும் தன் பணியைச் செய்து கொண்டிருக்கிறார். ஏழெட்டு மாணவர்களுக்குச் சிற்பப் பயிற்சியளிக்கிறார். நீ எப்படியிருக்கிறாய்? கல்யாணமாகிவிட்டதா? குழந்தைகள் எத்தனை பேர்? நிற்கிறீர்களே, உட்காரு… பால் காய்ச்சிக் கொண்டு வருகிறேன்" என்று உள்ளே சென்றாள்.

"சைலேந்திரி, உன்னைத் தேடி சித்திரமாயன் அனுப்பியவர்கள் வந்து விட்டார்களோ என்று பயந்து விட்டேன். இந்தக் குடிலுக்கு அருகே ஒரு சிறு குளம் இருக்கிறது. தாமரை பூத்திருக்கும், அதில் குளித்துவிட்டு வா. இங்கே யாரும் வரமாட்டார்கள். புதிய தெம்பு ஏற்படும். காஞ்சியி னின்று வீரர்கள் வந்திருக்கிறார்கள். எதற்கு என்று தெரியவில்லை. அவர்கள் வந்ததும் நல்லதற்குத்தான். சித்திரமாயனைப் பற்றியும், நந்தீசனைப் பற்றியும் நான் அவர்களிடம் சொல்லி வைக்கிறேன். உன்னைப் பற்றியும் சொல்வது நல்லது" என்றாள்.

சைலேந்திரி, குளிப்பதற்குக் குளத்தை நோக்கிச் சென்றாள். மரப் பெட்டியில் வைத்திருந்த புதுப்புடவை ஒன்றை அவளிடம் கொடுத்தாள் பொன்னாச்சி.

சிற்பி வந்து விட்டார். பரஞ்சோதியை அவர் அடையாளம் கண்டு கொண்டார். அங்கு வந்தவர்களுள் சற்று வயதானவர், நந்திவர்மனின் மெய்க்காவலருள் ஒருவர். மாமல்லபுரத்திற்கு இரண்டு நாள்களுக்கு முன்னர், படைத் தலைவர் உதயசந்திரனுடன் வந்ததாகத் தெரிவித்தார்.

நந்திவர்மனுக்குக் கலைகளின் மீது மிக ஆர்வம் என்றும், சிற்பப் பணிகளைப் பல்லவ நாட்டில் பல பகுதிகளில் தொடங்க ஆர்வம் கொண்டுள்ளார் என்றும், அது தொடர்பாகத் தங்களைச் சந்தித்துப் பேச விரும்புவதாகவும் தங்களிடம் தெரிவிக்குமாறு கூறினார் என்றும், அதற்காக வந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

முதிய சிற்பிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி, அவருடைய முகத்தில் பிரதி பலித்தது.

"ஆகா, பத்து ஆண்டுகள் மிக இருண்ட காலமாக நான் அனுப வித்து விட்டேன். ஏதோ இறைவன் அருளால் சோற்றுக்கும், துணிக்கும் பஞ்சமில்லாமல் பல்லவ அரசர்கள் வழி செய்து விட்டனர். அது மட்டும் போதுமா? ஒரு கலைஞனுக்கு வயிறு மட்டுமா முக்கியம்? கலையை அடைத்துப் போடக்கூடாது. சிற்பிகள் எல்லாம் வாதாபிக்குச் சென்று விட்டனர். பிடிவாதமாக நான் மாமல்லபுரத்திலேயே தங்கி விட்டேன். என் வாழ்நாளை இங்கேயே கழித்துவிட முடிவு செய்துவிட்டேன். மணியான இளைஞர்கள் என்னிடம் சிற்பம் பயில்கிறார்கள். சிற்பக் கலை நசிந்து விடாது என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. நான் என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்" என்றார் முதியவர்.

நந்திவர்மனிடமிருந்து வந்த மெய்க்காவலர்களின் தலைவர் கூறினார்:

"நீங்கள் இந்த நாட்டிற்கு ஆற்ற வேண்டிய பணிகள் பல, உள்ளன. சிற்பம், சித்திரம் ஆகிய கலைகளை நாட்டில் வளர்க்க விரும்புகிறார்



பல்லவ அரசர். சிற்பக் கலைக்கு ஆலோசனை பெறத் தங்களைக் காஞ்சிக்கு அழைக்கிறார்."

முதியவர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். ஆனால், ஏனோ தனக்குள் மெல்ல நகைத்துக் கொண்டார். பொன்னாச்சி, காய்ச்சிய பசும் பாலைக் குவளையில் ஊற்றிக் கொண்டு வந்தாள்.

"காஞ்சிபுரத்திற்கு வருவதைப் பற்றி யோசிக்க வேண்டும். எங்கள் மாணவர்களை இங்கே விட்டுவிட்டு வர, அவர் விரும்புவாரா என்று தெரியவில்லை. மாமல்லபுரத்து அமைதியான சூழலை விட்டு, சந்தடி மிகுந்த காஞ்சிக்கு வருவதற்கு அவர் ஒப்புக்கொள்வாரா என்பது சந்தேகமே" – பொன்னாச்சி, தன் கணவர் எண்ணத்தைப் பிரதிபலிப்பவள் போல் பேசினாள்.

"பல்லவ அரசரே இங்கு வந்து, இந்தக் குடிலில் தங்கியிருந்து பேசவே விருப்பப்படுகிறார். ஆனால் அவர் இங்கு வந்தால், அதிகாரிகள் பலர் அவரைத் தொடர்ந்து வரவேண்டியிருக்கும். ஆமாத்தியர்கள், உள் படுத்தருமத் தலைவர்கள் எல்லோரும் வரவேண்டியிருக்கும். மேலும், சக்கரவர்த்திகள் நாள்தோறும் ஸம்ஸ்கிருதம், தமிழ் இலக்கியங்களைச் சிறந்த அறிஞர்களிடம் பாடம் கேட்கிறார், அது தடைப்படும். அல்லது அந்த அறிஞர்களும் இங்கு வர வேண்டியிருக்கும். இந்த அமைதியான மாமல்லபுரம் சந்தடி மிகுந்ததாகிவிடும்" என்று மெய்க்காவல் வீரர்களின் தலைவர் சமாதானமாகக் கூறினார்.

அங்கே மீண்டும் மௌனம் நிலவியது. சைலேந்திரி குளித்து, கூந் தலை உலர்த்தியவாறு விரைந்து வந்து, குடிலுக்குள் சென்று மறைந்தாள்.

அங்கிருந்தவர்களின் விழிகள், அவளையே நோக்கின. அவள் யார் என்று தெரிந்துகொள்ள, அவர்களிடையே ஆர்வம் எழுந்தது. பரஞ்சோதி துணிந்து கேட்டுவிட்டான்: "தங்கள் பெயர்த்தியா? இதுவரை தங்கள் பெயர்த்தி எங்கு இருந்தாள்? எங்களுக்குத் தெரியவில்லையே?"

முதியவர் மெல்ல நகைத்தார். "பெயர்த்தி என்றுதான் வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு, சைலேந்திரி கடல்மல்லையில் வந்திறங்கியதிலிருந்து, பரமகுரு வீட்டிலிருந்து தப்பி ஓடி வந்தது வரையில் தெரிவித்தார்.

"எனக்கு இதுவரை கவலை என்பதே ஏற்பட்டதில்லை. நாட்டில் நடக்கும் சில ரகசியமான சம்பவங்கள் கவலையைத் தருகின்றன. மாமல்லபுரத்திலிருந்த சிற்பிகளை வாதாபிக்கு அழைத்துச் சென்றதால், இங்கு சிற்பப் பணி தடைப்பட்டது. சாளுக்கிய நாட்டு ஒற்றர்கள் பலர், நம் நாட்டில் உலவுகிறார்கள். சிற்பம், சித்திரம் வளர்ச்சியோடு, இசை வளர்ச்சிக்கும் இடையூறு செய்யத் திட்டமிட்டுள்ளார்கள். இவை எல்லாம்

சக்கரவர்த்திகளுக்கும் தெரியும். இந்த நிலையில், நான் காஞ்சிக்கு வருவது இயலுமா என்று யோசிக்க வேண்டும்'' என்றார்.

பொன்னாச்சியிடம், சைலேந்திரி வருத்தம் தோய்ந்த குரலில், "பாட்டி, எனக்குக் கவலையாக இருக்கிறது. நீங்களும் காஞ்சிக்குச் சென்றுவிட்டால் என் நிலை என்னாவது?'' என்று கேட்டாள்.

"சைலேந்திரி, கவலைப்படாதே. பெரிய சிற்பி அவ்வளவு எளிதில் சம்மதிக்க மாட்டார். அப்படிச் செல்வதென்றாலும், உன்னையும் அழைத்துச் செல்வோம்'' என்று சமாதானப்படுத்தினாள்.

"வீணை பயில வந்தேன். என் சொந்த வீணையையும் இழந்தேன். என்னுடன் துணையாக வந்த பெரியவரையும் காணவில்லை. என்னைக் காப்பாற்றிய முகுந்தனிடம் முறையிட எண்ணினேன். இப்போது வந்திருக்கும் பல்லவ வீரர்கள் நேரே அரசரிடம் செல்வார்களல்லவா? பரமகுரு இல்லத்தில் இருக்கும் என் வீணையையும், என்னுடன் வந்த பெரியவரின் பூசை விக்கிரகத்தையும், பெற்றுத் தர ஏற்பாடு செய்யுங்கள்'' என்று அவள் கேட்கும்பொழுது, அவள் குரல் தழுதழுத்தது.

பொன்னாச்சி வெளியே வந்தாள். வீரர்களைப் பார்த்து, "எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். இந்தப் பெண்ணின் வீணை, பரமகுருவின் வீட்டில் இருக்கிறது. உடனே அந்த வீணையைக் கொண்டு வந்து என்னிடம் ஒப்படைத்துவிட வேண்டும்'' என்றாள். பொன்னாச்சியின் வேண்டுகோள், ஓர் கட்டளையைப்போல் இருந்தது.

"இதோ! நாங்கள் பரமகுரு வீட்டிற்குச் செல்கிறோம். தங்களைச் சந்தித்துவிட்டுச் செல்ல எண்ணினோம். நொடியில் வீணையைக் கொண்டு வருகிறோம்'' என்று புறப்பட ஆயத்தமானார்கள்.

சைலேந்திரி, குடிசைக்கு வெளியே விரைந்து வந்து பொன்னாச்சியை நோக்கி, "பாட்டி, பெரியவரின் விக்கிரகம் மிகவும் முக்கியம்'' என்றாள்.

பல்லவ வீரர்கள் திரும்பி வந்தனர். அவர்கள் முகத்தில் சோர்வுடன், ஏமாற்றமும் கலந்திருந்தன.

"வீணை கிடைக்கவில்லை'' என்று பரஞ்சோதி மெல்லிய குரலில் கூறினான்.

"வீட்டின் பின்பக்கம் உள்ள அறையில் நான் தங்கியிருந்தேன். அங்கு சென்று தேடினீர்களா? அங்கே ஒரு பெண்... சாலினி என்று பெயர்– இருந்திருப்பாளே?'' சைலேந்திரி பரபரப்புடன் கேட்டாள்.

"பரமகுரு வீடு திறந்திருந்தது. ஒருவருமில்லை.'' பரஞ்சோதி சோகமாகக் கூறினான்.



"ஐயோ, அங்கே பரமகுரு, சாலினி ஒருவருமில்லையா? எங்கே போயிருப்பார்கள்?'' பொன்னாச்சி, தன் சொந்த வாழ்க்கையில் நடைபெற்றது போன்ற கவலையுடன் கேட்டாள்.

முதியவர் மெல்ல நகைத்தார். பல்லவ வீரர்களுக்கு அந்தச் சிரிப்பின் பொருள் புரியவில்லை.

"ஏதோ மாயாஜாலம் நடக்கிறது என்றே தோன்றுகிறது. நேற்று இரவு சைலேந்திரி, அங்கிருந்து தப்பி ஓடி வந்திருக்கிறாள்; விடிவதற்குள் அவர்கள் எங்கே சென்றிருப்பார்கள்? பல்லவ நாட்டிற்குப் பெரும் ஆபத்து காத்திருக்கிறது'' என்று கவலையுடன் கூறினார் முதிய சிற்பி.

பரஞ்சோதியும், மற்ற வீரர்களும் செய்வதறியாது திகைத்தனர்.

"சித்திரமாயன், வெளிப்படையாகவே நந்திவர்மனை எதிர்க்கத் துணிந்துவிட்டான். பல்லவ மன்னர் மிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்'' என்று கூறினார்.

பல்லவ வீரர்களின் தலைவர், ஏதோ முடிவு எடுத்தவர்போல், "படைத்தலைவர் உதயசந்திரன் மாமல்லபுரத்தில்தான் இருக்கிறார். அவரிடம் சென்று தெரிவிக்கிறோம்'' என்று கூறிப் புறப்பட்டனர்.

சைலேந்திரிக்கு என்ன செய்வது, என்ன பேசுவது என்றே தெரியவில்லை. "ஐயோ, என் வீணை போய் விட்டதே! என் உயிரை விடவும் நான் சித்தமாயிருக்கிறேன். உயிருக்கும் மேலான வீணையை இழந்து நான் உயிர் வாழ்ந்து என்ன பயன்?'' என்று கூறி விம்மினாள்.

முதியவர், அவளுக்கு ஆறுதல் கூறினார். "சைலேந்திரி! வருத்தப் படாதே. உன் வீணை கிடைத்துவிடும். நேற்று உன்னை அழைத்து வந்தாரே முகுந்தன், அவர் பல்லவ நாட்டில் செல்வாக்கு மிக்கவர். இந்நேரம் அவர் பல்லவ சக்கரவர்த்திகளிடம் எல்லாவற்றையும் தெரிவித்திருப்பார். வீணை கிடைக்கும்வரை, நீ எங்கள் பாதுகாப்பில் இருக்கலாம்'' என்றார்.

"நீங்கள் காஞ்சி செல்லப் போவதில்லையா?'' என்று சைலேந்திரி கேட்டாள்.

முதியவர் தலையசைத்தார். "என்ன நேர்ந்தாலும் நாங்கள் மாமல்லபுரத்தை விட்டு எங்கும் நகர மாட்டோம்'' என்றார்.

உச்சி வேளைக்குப் பிறகு, அந்த அமைதியான சிற்பியின் குடில் கலகலப்பாக மாறியது. பல்லவ தளபதி உதயசந்திரனும், அவருடைய பரிவாரங்களும் அங்கே வந்தனர். பரஞ்சோதியும், மெய்க்காவல் படைவீரர்களும் உடன் வந்தனர்.

# 16

சிற்பியின் குடிலுக்கு உதயசந்திரன் வருகை தந்தபோது, அங்கே ஒரு காபாலிகப் பெண் வந்தாள். அவள் எண்ணி வந்ததே வேறு. அங்கே உதயசந்திரன் வீரர்களுடன் வந்திருப்பதை அறிந்த அவள், அருகே இருந்த பாறையின் மறைவில் ஒளிந்து கொண்டாள்.

'சற்றுத் தாமதமாக வந்துவிட்டோம். காரியம் கெட்டுவிட்டது' என்று முணுமுணுத்தாள். உதயசந்திரன் அங்கிருந்து புறப்படும் வரையில் பாறை மறைவில், மற்றவர் கண்களில் படாதவாறு வசதியாக உட்கார்ந்து கொண்டாள். தன் தோளில் மாட்டியிருந்த துணிப்பையிலிருந்த குடுவையிலிருந்து, மதுவை எடுத்துக் குடித்தாள். 'ஹே, கபாலி!' என்று ஒருமுறை உச்சரித்துக் கொண்டாள்.

சாளுக்கிய நாட்டிலிருந்து பெரும் திட்டத்துடன், அவள் பல்லவ நாட்டிற்குச் சில நாள்களுக்கு முன்புதான் வந்தாள்.

சாளுக்கிய மன்னரைச் சந்தித்த அந்த நாளை, அவள் ஒரு தடவை மீண்டும் நினைவுபடுத்திக் கொண்டாள்.

வாதாபி நகரத்துத் திருமால் திருக்கோயில், அன்று ஒளிவீசித் திகழ்ந்தது. அகல் விளக்குகள், அந்தக் குடைவரைக் கோயிலை அடையும் படிக்கட்டுகளை அலங்கரித்து முகப்பு மண்டபத்தில் ஒளி கொடுத்தன. பெரிய பெரிய குத்துவிளக்குகள் ஆங்காங்கே ஐந்து முகங்களிலும் பிரகாசமாக, எரிந்து தெய்வீகச் சூழலை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

அழகிய இள மங்கையர், தம் கைகளில் பூசைக்குரிய மலர்களையும், நறுமணப் பொருள்களையும் கூடைகளில் சுமந்து சென்றனர். திருமணமாகாத கன்னியர்கள், விரைவில் தங்களுக்கு ஏற்ற மணாளன் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திப்பதற்காக அந்த விஷ்ணு கிருஹத்தை நோக்கி அன்னநடை பயின்று கொண்டிருந்தனர்.



அவர்கள் இளம் வாலிபர்களை ஓரக்கண்ணால், பார்க்காததுபோல் பார்த்தனர்.

அவர்களது கவனத்தைக் கவர்வதற்காக, இளம் வாலிபர்கள் தங்கள் அரும்பு மீசையை மெல்ல வருடியவாறும், மேலாடைகளைச் சரி செய்தவாறும், தோள்களில் தொங்கி அலைபாயும் கேசத்தை ஒதுக்கியவாறும் மார்பை நிமிர்த்திக் கம்பீரமாகப் படிக்கட்டுகளில் ஏறிச் சென்று கொண்டிருந்தனர்.

அவர்களை முந்திச் சென்ற இளைஞர்கள், அவர்களைக் கம்பீரமாகத் திரும்பி நோக்கிப் புன்முறுவல் செய்தனர்.

அன்று சாளுக்கிய மன்னர் விக்கிரமாதித்தன் பிறந்த நாள்; வாதாபி நகரம் விழாக்கோலம் பூண்டு காட்சியளித்தது. வீதிகள் எங்கும் புதுத் தோரணங்கள் கட்டியிருந்தனர். வாதாபி நகரத்தை ஒட்டியிருந்த மலையில், பாறைச் சரிவுகளில் குடையப்பட்டிருந்த கோயில்களில், பழைய கலகலப்பு மீண்டது.

பன்னிரண்டாண்டுகளுக்கு முன்பு வாதாபி நகரம், சொல்ல முடியாத துன்பத்திற்குள்ளானது. பல்லவர் படைகள் நகரில் வெறியாட்டம் ஆடின. நகர் தீக்கிரையாக்கப்பட்டது. விக்கிரமாதித்தன் துணிவுடன் மக்களுக்கு உற்சாகமூட்டினான், நகரம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. அழிந்த தங்கள் நகரத்திற்கு உயிரூட்ட, மக்கள் கடுமையாக உழைத்தனர். ஒவ்வொருவர் உள்ளத்திலும், மீண்டும் தம் நாடு நிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற இலட்சியக் கனல் மூண்டிருந்ததால், அவர்கள் ஒவ்வொருவரும், குடும்பத்து நங்கையும், நம்பியும் புதிய உற்சாகத்துடன் உழைத்தனர்.

நின்று போயிருந்த பூசைகள், மீண்டும் நடைபெறத் தொடங்கின. அன்று சிவபெருமான் திருக்கோயிலும், அரியும் அரனும் ஒருவரே என்று விளக்கும் ஹரிஹரர் சந்நிதியும், மகா விஷ்ணுவின் திருச்சந்நிதியும் புத்தொளி கொண்டு திகழ்ந்தன. சாளுக்கிய மாமன்னர் விக்கிரமாதித்தன், சுவாமி தரிசனத்திற்கு வருகிறார் என்றறிந்தவுடன் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

பாதையின் இருபுறமும் மலர்ந்த முகத்துடன் அரசரையும், பட்டத்து அரசி லோகமாதேவியையும் காண, வரிசை வரிசையாக நின்றனர்.

மலைச் சரிவில் அமைந்துள்ள கோயில்களை அடைய ஏற்படுத்தப்பட்டிருந்த படிக்கட்டுகளில் விக்கிரமாதித்தனும், லோகமாதேவியும் மெல்ல ஏறி வந்தனர். ஆரவாரத்துடன் வாழ்த்தொலி கூறிக் கொண்டிருந்த வாதாபி மக்களுக்கு, முக மலர்ச்சியுடன் கை உயர்த்தி ஆசி கூறி,

கம்பீரமாக மெல்ல நடந்து வந்தபோது, விக்கிரமாதித்தன் உள்ளத்தில் ததும்பி வழிந்த பெருமையும், பூரிப்பும், போர்க்களத்தில் ஏற்பட்ட வெற்றியையும் வென்றன.

"தேவி, நம் மக்களுக்குத்தான் இந்தச் சாளுக்கிய நாட்டின் மீது எவ்வளவு பேரன்பு பார்த்தாயா? உனக்கு நினைவிருக்கிறதா, பல்லவர் படைகள் இந்த நகரத்தின் முக்கியக் கடை வீதிகளை அழித்தன. பல ஆண்டுகள் பழமையான மாடமாளிகைகளை அழித்து, துவம்சம் செய்தன. மக்கள் வசிக்கும் வீடுகளையும், விட்டுவிடவில்லை. அவற்றையெல்லாம் செப்பனிட்டு, தங்கள் வீடுகளைப் புதுப்பிக்க அவர்கள் பட்டபாடு கொஞ்சமா? தங்களுக்கு எந்தவிதக் கஷ்டமும் ஏற்படவில்லை என்பதைப் போல், இப்போது மகிழ்ச்சியுடனிருக்கிறார்களே..." என்று பட்டத்து அரசி லோகமாதேவியின் செவிகளில் மட்டும் கேட்குமாறு மெல்லக் கூறினான்.

தேவி, புன்முறுவல் பூத்தாள். வானத்து வட்ட நிலவின் மெல்லிய ஒளியிலும், கோயில் விளக்குகளின் வெளிச்சத்திலும், தேவியின் முகத்தில் பொங்கி வழிந்த பெருமிதத்தை விக்கிரமாதித்தன் கண்டான். ஐம்பது ஆண்டுகளைக் கடந்தவள் என்று அவளை ஒருவரும் கூறமுடியாத கட்ட ழகுடன் திகழும் லோகமாதேவியின் மோகன வடிவை, அப்போதுதான் புதிதாகப் பார்ப்பதுபோல் அவளை நோக்கினான்.

தன் கணவனின் பார்வையைக் கண்டு நாணம் கொண்டு, "சுவாமி, வாதாபி மக்களுக்குத் தங்கள் நாட்டைவிடத் தங்கள் மீதுதான் மிகுந்த அன்பும், ஆசையும்" என்றாள்.

"அதெப்படி, மக்களுக்கு தங்கள் நாட்டைவிட அரசரிடம் அன்பு அதிகமாயிருக்கும் என்று கூறுகிறாய்?" -விக்கிரமாதித்தன் கேட்டான்.

"தங்கள் அரசர் நலமாக இருந்தால், நாட்டை அவர் என்றும் காப்பாற்றி விடுவார் என்று அவர்களுக்குத் தெரியும்."

அரசியின் பேச்சு, விக்கிரமாதித்தனுக்குப் பெருமையாக இருந்தது. மேலும் அரசி தொடர்ந்தாள். தன் கணவரை 'அன்பே', 'நாதா' என்றெல் லாம் அவள் பொதுஇடங்களில் அழைப்பதில்லை. 'சக்கரவர்த்திகளே, சுவாமி, தலைவா' என்று மற்ற அதிகாரிகள் அழைப்பதைப்போன்றே அழைப்பாள்.

"சுவாமி! தங்களுடைய மகத்தான பொறுப்பை, நமது வாதாபி மக்களைப்போல் சாளுக்கிய நாட்டிலுள்ள எல்லா மக்களும் அறிந்திருக்கி றார்கள். வாதாபி நகரை அழித்துத் தீயிட்டுக் கொளுத்திய பல்லவர்களைப் பழிவாங்க நீங்கள் சபதம் எடுத்துக் கொண்டு, அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதை, அவர்கள் பூரணமாக அறிவார்கள். தங்களுடைய



பிறந்த நாளான இன்று, தங்களை வாழ்த்துவதற்காக அவர்கள் கூடியிருக் கிறார்கள். ஒவ்வொருவர் கையிலும் பூசைப் பொருள்களைப் பாருங்கள். தங்கள் அரசர் நீடூழி வாழக் கோயிலில் அர்ச்சனை செய்யச் செல்கிறார்கள். தங்கள் அரசர் நீடூழி வாழ்ந்தால், சாளுக்கிய நாட்டிற்கு ஏற்பட்ட அவமானத்தை அவர் துடைத்து விடுவார் என்பது அவர்களுக்குத் தெரியும். வாதாபியின் பெருமையைத் தங்கள் அரசர் திக்கெட்டும் பரவச் செய்வார் என்பதையும் அவர்கள் அறிவார்கள்" என்றாள். அவளுடைய முகம் பெருமையின் பூச்சால் மேலும் அழகொளி வீசியது.

விக்கிரமாதித்தன், தன் பட்டத்து அரசி லோகமாதேவியை மீண்டும் ஒருமுறை திரும்பிப் பார்த்தான்.

பூரண நிலவொளி, தன் கரங்களால் அவளைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது. கோயில் தீபங்களின் செம்மஞ்சள் ஒளி, அவள் மேனி யெங்கும் புதுச் சோபையைத் தீட்டிக் கொண்டிருந்தது.

"தேவி! உன் பேச்சு இனிமையா? அல்லது நீயே இனிமையா? என்று இப்போதெல்லாம் எனக்குப் புரியவில்லை. இன்றைய இரவு நிலா முற்றத்துக்கு யாரையும் நடனமாட வரவேண்டாம் என்று கண்டிப்பாகச் சொல்லிவிடு" என்றான் விக்கிரமாதித்தன் மெல்லச் சிரித்தவாறு. தனது அடர்ந்த மீசையை, மெல்ல ஒருமுறை தடவிவிட்டுக் கொண்டான். மகுடத்தின் இடைவெளி வழியாக நீண்ட கேசம், அவன் இடுப்புவரை தொங்கிக் காற்றில் மெல்ல அலைந்தது.

லோகமாதேவி புரிந்து கொண்டாள். "ஏன், அப்படிச் சொல்கிறீர்கள்? தங்கள் பிறந்த நாளான இன்று, புதிய புதிய நடனங்களை ஆட வருமாறு நடன மங்கை சௌந்தர்யாவிடம் சொல்லியிருக்கிறேனே" என்றாள்.

"இல்லை, இல்லை. இன்று இரவில் மற்ற எவரும் என்னுடன் பங்கு கொள்ளக்கூடாது. உன்னைப் பருகத் தடையாகத் தாமதப்படுத்த ஒருவரும் வரக்கூடாது. நீ மட்டும்தான் இன்று என்னை மகிழ்விக்கப் போகிறாய்..." விக்கிரமாதித்தன் தேவியின் செவி அருகே போதையடைந் தவன்போல் – அப்போதுதான் மணமானவன்போல் பேசினான்.

நாணம் மிக உற்ற தேவி, "நாம் இன்னும் இளங் காதலர்களா?" என்று கேட்டாள்.

விக்கிரமாதித்தன் குறும்புத்தனத்துடன் சிரித்தான். "இளங்காதலர்கள் நிலா முற்றத்தில் பாட்டையும், நடனத்தையும் அனுபவிக்கமாட்டார்கள். ஆனால், நான் இன்று உனது இசையை அனுபவிக்க விரும்புகிறேன். நீ பாட வேண்டும். நான் மடியில் குழந்தையைப்போல் படுத்துக்கொண்டு, இசை கேட்டு மெய் மறக்க வேண்டும்.

லோகமாதேவி பெருமூச்சு விட்டாள்.

சுவாமி தரிசனம் செய்து கொண்டு விக்கிரமாதித்தனும், லோகமா தேவியும் திரும்பினர். வேகமாகப் படிக்கட்டுகளில் இறங்க முயன்ற தேவியை நோக்கி, "நிலா முற்றத்திற்குச் செல்ல இன்னும் அதிக நாழிகை இருக்கிறது. அதற்குள் என்ன அவசரமோ?" என்றான் விக்கிரமாதித்தன் மெல்ல நகைத்தவாறு.

"தெரியும்... தெரியும். அதற்கு முன்பாக எனக்குப் பல பணிகள் உள்ளன" என்று கூறித் தடாகக் கரையில் நின்று கொண்டிருந்த அலங்கரித்த இரதத்தை நோக்கி விரைவாக நடந்தாள். இரதத்தில் ஏறுவதற்கு முன்பு –

வராகக் கொடி பறக்கும் தேரின் அருகே நின்றிருந்த வீரர்களி டையே, பரபரப்பு ஏற்பட்டது.

சரியாக அள்ளி முடியாக் கூந்தலுடன், செந்நிறச் சேலையுடுத்திய ஒரு பெண், வீரர்களின் தடையையும் மீறி, விக்கிரமாதித்தன் எதிரே ஓடி வந்தாள். மிக விரைவாக வந்ததாலும், வீரர்கள் தடையை எதிர்த்து மல்லுக்கு நின்றதாலும் அவளுக்கு மேல்மூச்சு வாங்கியது. அவள் நெற்றியில் பெரிய செந்தூரப் பொட்டு இட்டிருந்தாள். தோளில் கனமான பை ஒன்று தொங்கியது. கையில் கபாலம் ஏந்தியிருந்தாள். கழுத்தில் எலும்பினால் ஆன மாலை ஒன்று அணிந்திருந்தாள்.

"ஜெய விஜய பவ! சாளுக்கிய சக்ரவர்த்திகளே நீடூழி வாழ்வீராக! தங்கள் திருத்தேவியின் திருமாங்கல்யம் நெடுங்காலம் அவள் கழுத்தில் தொங்கி ஆடட்டும்! இந்தச் சுடலைப் பொடியை அணிந்து கொள் ளுங்கள். உம்மை வெற்றி விரைவில் தேடி வருகிறது" என்று கூறி, அரசமா தேவியை நோக்கி, "தேவி! நீ பெரிய கோயிலைக் கட்டப் போகிறாய். சுடுகாட்டில் நடமாடுகிறானே பாம்பணியும் அந்தக் கபாலீச்வரன்... அவனுக்குத்தான் அந்தக் கோயிலில் இடம் கொடுக்க வேண்டும். ஒருவர் பேச்சையும் கேட்காதே! உன் கணவர் சொல்லையும் கேட்காதே! அந்தக் கோயிலுக்கு உன் பெயரையே சூட்டிவிடு. அது என்றும் அழியாது விளங்கும்" என்று கூறிச் சிரித்தாள். அவள் சிரிப்பொலி, மேலைத் திசையிலிருந்து கேட்கும் இடி முழக்கம் போலிருந்தது.

"அரசே! தென்னாட்டில் எங்களுக்கு ஆதரவில்லை. காஞ்சியில் எங்களை வெறுக்கிறார்கள். சாளுக்கிய நாட்டில் நாங்கள் தஞ்சம் அடைகிறோம். எங்கள் வழிபாட்டைச் செய்துகொண்டு, நாங்கள் சுதந்திரமாக வாழ வழி செய்யுங்கள்" என்று கூறி மீண்டும் நகைத்தாள் காபாலிகப் பெண்.



அவள் பேச்சு, சிரிப்பு, அவள் பார்வை, அவள் தோற்றம் – லோகமா தேவியை நடுங்கச் செய்தன. அரசன் தோள்களை அணைத்துக் கொண்ட அவள், காபாலிகையை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்று எண்ணி னாலும், "தேவி! நீ ஒரு பெரிய கோயிலைக் கட்டப் போகிறாய்" என்று காபாலிகை கூறிய சொற்கள், அவள் ஆவலை அதிகப்படுத்தின. மேலும் அவளுடன் பேச விரும்பினாள். தேவியின் மனத்தில் நெடு நாட்களாக ஓர் ஆசை. தன் பிறந்த வீட்டுச் சீதனத்தைக் கொண்டு, சிற்ப அழகுடன் கூடிய கோயிலொன்றைக் கட்ட வேண்டும் என்று. இந்தக் காபாலிகை அதை எப்படி அறிவாள்?

"அரசே, நான் பெரிய கோயில் ஒன்றைக் கட்டப் போகிறேன் என்று இவள் சொல்கிறாளே! எப்போது, எப்படி, எங்கே என்று, இவளைக் கேட்டுச் சொல்லுங்கள்" என்று அரசன் செவிகளில் மட்டும் கேட்குமாறு கூறினாள் தேவி.

"அவளோடு இங்கு நின்று பேசுவதே முறையன்று. பிறகு ஒரு நாள் அவளை அழைத்து விசாரிப்போம்" என்று கூறி, விக்கிரமாதித்தன் காவலர்களை நோக்கிக் கடுமையாக, "இந்தக் காபாலிகையை அப்புறப் படுத்துங்கள். உங்கள் பாதுகாவல் இலட்சணம் இவ்வளவுதானா? கட்டுக் காவல் முறை குலைந்துவிட்டதா?" என்று கோபித்தான்.

"விக்கிரமாதித்தா! என்னைப் பழிக்காதே! என்னை விரட்டாதே! எனக்கு ஆதரவு கொடு. இதோ! உனது வருங்கால நிகழ்ச்சிகள் என் மனத்தில் கண்ணாடி போல் பிரதிபலிக்கின்றன!" என்று காபாலிகை கூறுவதைக் கேட்காமலேயே, சாளுக்கிய வீரர்கள் அவள் கரங்களைப் பிடித்துப் பலவந்தமாக அப்புறப்படுத்தினார்கள்.

லோகமாதேவியால், அந்த நிகழ்ச்சியை மறக்க முடியவில்லை.



# 17

நிலா முற்றத்தில், தன் தேவியுடன் நேரத்தை மிகக் குதூகலமாகக் கழிக்க எண்ணிய விக்கிரமாதித்தன், தேவியை மெல்ல அணைத்தபோது, அவள் சிந்தனை வயப்பட்டிருப்பதையும், ஏதோ கனவுலகில் சஞ்சரிப்பது போல் தன்னை மறந்திருப்பதையும் கண்டான்.

"தேவி, உடல்நிலை உனக்குச் சரியில்லையா?" என்று அவளுடைய கூந்தலை மெல்ல வருடினான்.

மூடியிருந்த இமைகள் வேலாயுதம் போல் காட்சியளிப்பதை ரசித்த மன்னன், மெல்ல நகைத்தான். தேவி விழிகளை விரித்தாள். 'என்ன?' என்று கேட்பதுபோல்.

"பெண்களின் விழிகளை ஒரு கொடிய ஆயுதம் என்று கவிஞர்கள் கூறுவது சரி என்பதை, இப்போதுதான் உணர்ந்தேன்" என்றான்.

தேவியின் புருவம் கேள்வியைக் கேட்க, வில் போல் வளைந்தது.

"வில்லையும், வேலையும் வீரர்கள் அழகிய பெண்களிடம் ஒப்படைத்து விடுகிறார்கள். முதலில் அவர்களை வென்று, அந்தப் படைக் கலன்களைப் பறித்தால்தான் போரில் வீரனுக்கு வெற்றி கிடைக்கும்" என்றான்.

தேவி திரும்பிப் படுத்தாள். மன்னன் அவளைத் தனக்காகத் திருப்பியணைத்து, "கலகலப்பாகப் பேசும் தேவியின் திருவிதழ்கள் இன்று மூடியிருப்பதேன்?" என்று அவள் செவிகளின் ஓரமாக முணுமுணுத்தான்.

"தங்கள் கவிதைப் பேச்சுக்கு இன்று என்னால் ஈடுகொடுக்க முடியுமென்று தோன்றவில்லை. நான் தங்களிடம் இன்று பல வரங்களைக் கேட்டுப் பெற வேண்டும் என்று எண்ணினேன். என் மன எண்ணங்கள் திசை திரும்பிவிட்டன" என்றாள்.



அவளுடைய முகத்தைத் தன் முகத்துக்கு நேருக்கு நேர் திருப்பி, "தேவி, உன் மனநிலை திடீரென்று மாறக் காரணம் என்ன?" என்று கேட்டான்.

மன்னனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட லோகமாதேவி, "அந்தக் காபாலிகை சொன்னது, என் மனத்திலேயே இன்னும் வட்டமிடுகிறது. காபாலிகையை நான் மறுபடியும் சந்திக்க வேண்டும். நான் சில நாள்களுக்கு முன்பு ஒரு கனவு கண்டேன். அந்தக் கனவைப் பிரதிபலிப்பதுபோல், காபாலிகை கூறியது என் உள்ளத்தில் வட்டமிடுகிறது" என்று குரலில் ஒருவிதக் கவலையும், ஆர்வமும், அச்சமும் கலந்தொலிக்கக் கூறினாள்.

விக்கிரமாதித்தன், தன் பிடியை மெல்லத் தளர்த்தி, தேவியை நோக்கி, "தேவி, அந்தக் காபாலிகையைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறாய். அப்போதே நினைத்தேன்" என்று சற்றுக் கோபத்துடன் கேட்டான்.

"அப்போதே என்ன நினைத்தீர்கள்?"

"காபாலிகை இங்கும் வந்துவிட்டாள் – கலகத்தை விளைவிக்க என்று நினைத்தேன்."

"அப்படி என்றால், இந்தக் காபாலிகையை முன்பே தங்களுக்குத் தெரியுமா?

"பொதுவாகக் காபாலிகைகளைப் பற்றித் தெரியும். இவளையும் எங்கோ பார்த்ததுபோல்தான் தோன்றுகிறது. எல்லா காபாலிகைப் பெண்களும் ஒரே மாதிரியாகத்தான் இருப்பார்கள். வாரப்படாத கூந்தல்; நெற்றியில் பெரிய பொட்டு; இஷ்டப்படி அலைவதால் புழுதி படிந்த மேனி; அழுக்கடைந்த அரைகுறை ஆடை; மது அருந்துவதால் தடுமாற்றம்; சுடு காட்டு நாற்றம்; மண்டை ஓடு; சிலர் திரிசூலம் வைத்திருப்பார்கள் கையில்."

விக்கிரமாதித்தன் வர்ணிப்பதை, மிக வியப்புடன் நோக்கியவாறிருந்த லோகமாதேவி, "அப்படியென்றால், காபாலிகைகளைப் பற்றித் தாங்கள் நன்றாக ஆராய்ந்திருக்கிறீர்கள் என்று தெரிகிறது" என்றாள்.

"பல ஆண்டுகள் எனக்குப் பல படிப்பினைகளைத் தந்துள்ளன. குருகுல வாசத்தில் நான் கற்ற சாஸ்திரங்களைவிட, அனுபவப் பாடசாலையில் கற்றவையே அதிகம்" என்று கூறிய விக்கிரமாதித்தன், தன் விழிகளைச் சற்று மூடிக்கொண்டு, ஏதோ சிந்தனை செய்வது போலிருந்தான். பிறகு, "தேவி! வாதாபி நகரத்தைப் பல்லவர்கள் ஆக்ரமித்துக் கொண்டிருந்த அந்த இருண்ட நாள்களில், நான் வன வனாந்தரங்களில்

அலைந்துகொண்டிருந்தேன். அந்த அனுபவங்களை உனக்கு முன்பே சொல்லியிருக்கிறேன். அப்போது துங்கபத்திரை நதிக்கரையில் காபாலிகர் கள் கூட்டத்தோடு சில நாள்களிருந்தேன்'' என்று கூறிப் பெருமூச்சு விட்டான்.

"அவர்கள் ஏன் இப்படி அலைகிறார்கள், நாகரிகமற்ற முறையில்?'' தேவி கேட்டாள்.

"உம்; அவர்கள்தாம் நம்மை நாகரிகமற்றவர்கள், காடுடைய சுடலைப் பொடி பூசிய சிவபெருமானைத் துதிக்காத பாஷாண்டிகள் என்று குறை கூறுகிறார்கள். அது போகட்டும்; அவர்களுக்கு இப்போது பல்லவ நாட்டில் பெரும் எதிர்ப்பு. பல்லவ நாட்டில், சிவபெருமானைத் தொழு வதற்கு என்று புதிய இயக்கம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் இசையைத் தங்களுக்குத் துணையாகக் கொண்டுள்ளார்கள். வீணை, மத்தளம், யாழ், குழுவுடன் ஒவ்வோர் ஊரிலும் பக்திப் பாடல்களைப் பாடுகிறார்கள். அருமையான தமிழ்ப் பாடல்களைப் பாடுகிறார்கள். இசையைக் கேட்டு மயங்காதவர்கள் உண்டோ? காபாலிகர்களின் மீது இயற்கையாகவே மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு வருகிறது. மேலும், அரசியலில் காபாலிகர்கள் ஈடுபடத் தொடங்கியவுடன், பல்லவ மன்னருக்கு அவர்கள் மீது மிகக் கோபம்'' என்று மெல்ல மன்னன் கூறினான்.

"ராஜீய விவகாரங்களிலா?'' தேவி கேட்டாள்.

"ஆமாம். நம் நாட்டின் ஒற்றர்கள் என்று, பல்லவர்கள் காபாலிகர் களைச் சந்தேகிக்கத் தொடங்கி விட்டார்கள்.''

"பிறகு?''

"பிறகு என்ன? பல்லவ மன்னரின் கட்டுதிட்டம் பொறுக்காமல், காஞ்சியை விட்டு வடக்கிலும், வடமேற்கிலுமாக அவர்கள் செல்லத் தொடங்கி விட்டார்கள்.''

"நல்லதாகப் போயிற்று. காபாலிகர்களை நாம் ஆதரிப்போம். அந்தக் காபாலிகையை நாளையே வரவழைக்க வேண்டும்.''

தேவி இவ்வாறு கூறியவுடன், "தேவி, நீ அந்தக் காபாலிகைப் பெண்ணைப் பற்றி நினைப்பதை உடனே மறந்துவிடு. அவள்மீது எனக்கு மிகுந்த சந்தேகம்'' என்று சற்றுக் கோபமாகவே மன்னன் கூறினான்.

தேய் பிறையின் பத்தாவது நாள், சந்திரன் வானத்தை விட்டு மறைந்து விட்டான். இரவின் பின் ஜாமம். களங்கமற்ற கரிய வானில், நட்சத்திரங்கள் மட்டும் தனியே தவித்துக் கொண்டிருந்தன. விக்கிரமாதித் தன் களைத்து உறங்கத் தொடங்கினான்.



லோகமாதேவிக்கு உறக்கம் வரவில்லை. தன்னை அணைத்தவாறி ருந்த மன்னன் கரத்தை மெல்ல நீக்கி, பட்டுத் துகிலை அவனது மேனியின் மீது போர்த்திவிட்டு, எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

வாதாபியினின்று ஒரு காத தொலைவிலுள்ள மாலப்பிரபா ஆற்றங் கரையை அடுத்துள்ள கிராமத்திற்கு, அவள் சில நாள்களுக்கு முன்பு சென்ற நினைவு வந்தது. அவளுடைய மாமனார் புலிகேசி... அங்கே கோயிலொன்று கட்டுவதற்காக ஏராளமாகக் கற்களையும், பாறைகளையும் கொண்டு சேர்த்திருப்பதை அவள் கண்டாள். அந்தக் கோயில் பணியைத் தான் பூர்த்தி செய்ய வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது.

அந்தக் காபாலிகைக்கு எப்படித் தெரியும் தனது எண்ணம்? காபாலிகை முக்காலமும் உணர்ந்த ஞானியோ? அவள் மனம் சஞ்சலப் பட்டது. காபாலிகையைச் சந்திப்பது எப்படி என்று எண்ணலானாள்.

அப்போது, நிலா முற்றத்துக் கைப்பிடிச் சுவரைப் பற்றி யாரோ, அங்கே இறங்கி வருவது, அந்த மெல்லிய இருட்டில் தெரிந்தது.

"யார்... யார்...?'' தேவி திடுக்கிட்டாள்.

"ஊச்...'' என்று அந்த உருவம், இதழ்களின் மீது விரலை வைத்து எச்சரித்தது.

"தேவி, நான்தான்...'' என்றது மெல்லிய, ஆனால் கரகரப்பான குரலில் கூறி, விரைந்து வந்தது.

அதே காபாலிகைப் பெண். லோகமாதேவியின் எதிரே நின்று கொண்டிருந்தாள்.



# 18

தன் எதிரே நிற்கும் காபாலிகையைக் கண்டு, ஒருகணம் நடுங்கி விட்டாள் சாளுக்கிய அரசி லோகமாதேவி. அஞ்சா நெஞ்சம் கொண்ட சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தனுடைய துணிவில் ஒரு பகுதியாவது, அவளுடைய உள்ளத்திலும் உடலிலும் நிறைந்திருந்தது என்றாலும், அந்த இரவு வேளையில், ஒருவரும் அணுகமுடியாத அந்தப்புரத்து நிலா முற்றத்தில் காபாலிகை வந்து எதிரே திடீரென நின்றாள் என்றால்...?

"நீயா, நீ இங்கு எங்கே வந்தாய்?" என்று லோகமாதேவி கேட்டாள். வார்த்தைகள் தடுமாறின. காபாலிகை மெல்ல நகைத்தாள். இருளின் கருமையும், பற்களின் நிறமும் ஒன்றாகவே இருந்தன.

"தங்களிடம்தான் வந்தேன்..." காபாலிகை சற்று நெருங்கி வந்தாள்.

"உம்... அப்படியே நில். அரசர் விழித்தெழுந்து உன்னைப் பார்த்து விட்டால், உன் தலை போய்விடும்" என்று லோகமாதேவி எச்சரித்துத் தானும் உடனே எழுந்து நின்றாள்.

காபாலிகை மெல்ல நகைத்து, "ஆகா! தலைதானே, போகட்டுமே! என் மண்டையோட்டை அடைய வேண்டும் என்று சந்திரதத்தன் வெகு நாள்களாக ஏங்கிக்கொண்டிருக்கிறான். அது அவனுக்குப் பயன்படட்டும். என் மண்டையோட்டில், அவன் மதுவை ஊற்றிக் குடித்தாவது இந்த ஜென்மத்தில் திருப்தியடையட்டும்" என்ற காபாலிகையின் வார்த்தைகளைக் கேட்டு, தேவியின் மேனி சிலிர்த்தது.

காபாலிகையை அடைய விரும்பி, சந்திரதத்தன் என்ற காபாலிகன் ஊர் ஊராக அலைந்து கொண்டிருந்தான்.

"காபாலிகையிடம்தான் பேசுகிறோமா அல்லது பூத பிசாசு [illegible]டம்..." என்று அஞ்சிய தேவி, காபாலிகையின் பாதங்கள் பூமியில் பாவி நிற்கின்றனவா என்று நோக்கினாள்.

காபாலிகைதான்; பேய் அன்று; சந்தேகமில்லை. பிறகு ஏன் அவள் இப்படி விரக்தியாகப் பேசுகிறாள்?

"உன் தலை மீது உனக்கு ஆசை இல்லை; ஆனால் எனக்கு உண்டு. அப்படியெல்லாம் உன்னைச் சிரச்சேதம் செய்ய எளிதில் விட்டு



விட மாட்டேன்... அது சரி... நீ இங்கே எதற்கு வந்தாய்?" என்று லோகமாதேவி கேட்டாள், சுற்றும் முற்றும் பார்த்தபடி.

பேசும் சந்தடியில், சக்கரவர்த்தி திடீரென்று விழித்துக் கொண்டு விடப் போகிறாரோ என்ற கவலை தேவிக்கு.

"நீங்கள்தான் என்னைச் சந்திக்க விரும்பினீர்கள். அதனால் வந்தேன். நேர் வழியாக வந்தால் என்னை யார் விடுவார்கள்? அதனால் அதோ உப்பரிகை வரை வளர்ந்திருக்கும் கொடியைப் பிடித்துக் கொண்டு ஏறி வந்தேன்" என்றாள் காபாலிகை. தேவி திரும்பிப் பார்த்தாள். ஆம்; உப்பரிகை வரை மலர்க்கொடியொன்று அடர்ந்து வளர்ந்திருந்தது. பல வருடங்களாக அது இருக்கிறது. அதன் மூலம் உப்பரிகையைச் சுலபமாக அடையலாம் என்று இதுவரை யாருக்கும் தோன்றவில்லை.

'நாம் இவளைச் சந்திக்க விரும்பினோமா?' – தேவி ஒருகணம் சிந்தித்தாள். ஆம்; சற்று முன்பு நாம் மன்னரிடம் பேசிக் கொண்டிருந்தோம். அந்தக் காபாலிகையை நாளையே எங்கிருந்தாலும் வரவழைக்க வேண்டும் என்று நினைத்தோம்; அவள் வந்து விட்டாள். நினைப்பதை அறியும் சக்தி படைத்தவளா இந்தக் காபாலிகை?

"தேவி! உங்கள் உள்ளத்து ஆவல் எனக்கு நன்றாகத் தெரிகிறது. ஆனால், சக்கரவர்த்தி என்னைப் பற்றித் தவறாக நினைக்கிறார். பல்லவ நாட்டு ஒற்றர்களுக்கு உதவுபவள் என்று எண்ணுகிறார். நான் சாளுக்கிய நாட்டிற்கு விரோதமாக ஒருநாளும் நினைக்கவே மாட்டேன். காஞ்சியி லின்று நாங்கள் சிலர் கூட்டமாகப் புறப்பட்டு வந்தோம். எங்களுக்கு வாதாபியை விட்டால், இனி வடக்கே உஜ்ஜயினிதான் புகலிடம். அதனால் இந்த ஊரிலேயே இருந்து, இந்த நாட்டிற்கு உதவுவதற்காகவே நான் வாழ விரும்புகிறேன்" என்று காபாலிகை மிகவும் மெதுவாகப் பேசினாள். தேவி பேச வாயெடுத்தபோது, காபாலிகையே பேசினாள்:

"தேவி, நீங்கள் பெரியதொரு கோயில் கட்டப் போகிறீர்கள். அந்தக் கோயில் ஒரு நினைவுச் சின்னமாக அமையும். தங்கள் மாமன்னர் அடையப்போகும் வெற்றியின் நினைவுச் சின்னமாக அது அமையும்" என்றாள்.

தேவி பரபரப்புடன், "ஏ, காபாலிகைப் பெண்ணே! உனக்கு எப்படி என் மனத்திலிருப்பது தெரிகிறது? சொல்... சொல்..." என்றாள்.

காபாலிகை தலையை அசைத்தாள். "நான் இப்போது கூற மாட்டேன். எனக்கு நீங்கள் ஒரு வாக்குறுதி தரவேண்டும். தந்தால், நான் நடக்கப்போவதைச் சொல்லுவேன்" என்றாள்.

"வாக்குறுதியா? நான்..." தேவி திகைத்தாள்.

"ஆமாம், தேவி! தாங்கள் சொல்வதைச் சாளுக்கிய சக்கரவர்த்தி தட்டமாட்டார். அதனால் தாங்கள்தான் வாக்குறுதி தர வேண்டும்" என்று காபாலிகை கூறினாள். அவளுடைய விழிகள் துண்டம்போல் ஜ்வலித்தன.

"வாக்குறுதியா? என்னால் தர முடியுமா? நான் சொல்வதை மன்னர் கேட்பாரா?" தேவி வியப்புடன் கேட்டாள்.

"நிச்சயம் கேட்பார். சொல்லுங்கள். வாக்குறுதி தாமுடியுமா?"

தேவி, ஒரு கணம் யோசித்தாள். பிறகு, ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள்போல் "வாக்குறுதியைக் கூறு" என்றாள்.

காபாலிகை, ஏனோ இப்பொழுது சிரித்தாள். "தேவி! இங்கிருந்து தெற்கே வெகு தொலைவில் இருக்கும் காஞ்சிமாநகரில், என்னுடைய காதலன் ருத்ரதேவன் சிறையில் வாடிக்கொண்டிருக்கிறான். அவனை விடுவித்து என்னிடம் சேர்க்க வேண்டும். அவன் என்னை அடையா விட்டால், சந்திரதத்தன் என்னை எப்படியும் அடைந்து விடுவான். இந்தப் பிறவியில் நான் ருத்ரதேவனைத் தவிர, வேறு ஒருவரையும் மனத்தாலும் நினைக்க மாட்டேன். சந்திரதத்தன் என்னைப் பலாத்காரமாக அடைய முயன்றால், நான் சுடலையில் எரியும் தீயில் விழ்ந்து உயிரை மாய்த்துக் கொள்வேன்" என்றாள்.

தேவியின் உடல் சிலிர்த்தது.

'காஞ்சி நகரத்திலிருக்கும் காபாலிகையின் காதலனை விடுவிக்க வேண்டுமாமே! இது முடியும் காரியமா?'

"ஏ, காபாலிகைப் பெண்ணே! நீ கேட்கும் வாக்குறுதி விசித்திரமாக இருக்கிறதே! காஞ்சியிலுள்ள உன் காதலனை விடுவிப்பது, அவ்வளவு எளிதா? காஞ்சி, பல்லவர்களின் தலைநகரமல்லவா?" என்று தேவி கேட்டாள்.

"சாளுக்கிய மன்னரால் முடியும்!" அழுத்தம் திருத்தமாகக் காபாலிகை கூறினாள்.

"எதிரி நாட்டுச் சிறைக்குச் சாளுக்கிய மன்னர் எவ்வாறு செல்வார்?"

"செல்லப் போகிறார். அவர் காஞ்சிக்குச் செல்லக்கூடிய சந்தர்ப்பம் ஒன்று சமீபத்தில் நேரப் போகிறது."

"என்ன சொல்கிறாய்?"

"ஆமாம்! வாதாபிச் சக்கரவர்த்தி, பல்லவ நாட்டின் மீது படையெடுத்துச் செல்லப் போகிறார்" என்று கூறிய காபாலிகை, "தேவி! தாங்கள்



வாக்குறுதி அளிக்காமலேயே நாளை நடக்கப் போவதை என்னிடமிருந்து வரவழைக்கப் பார்க்கிறீர்கள்" என்று கூறி, மீண்டும் சிரித்தாள்.

"எங்கள் மாமன்னர், காஞ்சி மீது படையெடுத்துச் செல்லப்போகிறாரா?" – தேவி ஆவலுடன் கேட்டாள்.

மீண்டும் காபாலிகை நகைத்தாள். "தேவி! சாளுக்கிய நாட்டுப் பேரரசிக்கு உண்டான சகலவித சாமர்த்திய, ராஜீய தந்திரங்களும், அறிவாற்றலும் தங்களிடம் நிறைந்திருக்கின்றன. நினைத்ததை நிறைவேற்றிக்கொள்ளும் சக்தியும் தங்களிடமிருக்கிறது" என்றாள்.

"அப்படியென்றால், நான் நினைப்பது நிறைவேறும் என்று சொல்கிறாய், அப்படித்தானே?"

"வாக்குறுதி தாருங்கள்..."

"மன்னர் முடிவு செய்ய வேண்டியது மாபெரும் காரியத்தை என்னிடம் வாக்குறுதியாகக் கேட்கிறாயே?"

"தாங்கள் சொன்னால் மன்னர் கேட்பார் என்பது மட்டுமன்று. இப்போது சக்கரவர்த்தியின் மனத்தில் இருப்பதும் படையெடுப்பைப் பற்றிய சிந்தனைதான்."

காபாலிகையின் பிடிவாதம், தேவிக்குப் புரிந்தது. "காபாலிகைப் பெண்ணே! உன்னை, எனக்கு முன்பு அறிமுகமில்லை. உன் விழிகளில் உள்ள காந்த சக்தி, உன் வாக்கில் உள்ள தெய்வ சக்தி, என்னைக் கவர்ந்து விட்டன. சக்கரவர்த்திகளிடம் உன்னைப்பற்றிச் சொல்கிறேன். போதுமா?"

"போதாது. சக்கரவர்த்திகளுக்கு என்னைப்பற்றி முன்பே தெரியும். நல்லெண்ணம் ஏற்படும் வகையில் என்னைப்பற்றி அவரிடம் எடுத்துக் கூறவேண்டும். காஞ்சியில் வாடும் என் காதலனை எப்படியாவது விடுவிக்க வேண்டும்" - காபாலிகை மீண்டும் வற்புறுத்தினாள்.

"காபாலிகைப் பெண்ணே! இது பெரிய ராஜீய விவகாரம். நான் சக்கரவர்த்திகளிடம் சொல்லிப்பார்க்கிறேன்" என்றாள்.

காபாலிகை குதூகலத்துடன், "தேவி! நீங்கள் பல ஆண்டுகள் பெயரும் புகழுடன் வாழ்வீர்கள். இப்போது சொல்கிறேன் தேவி! விரைவில் சாளுக்கிய மாமன்னர், காஞ்சி மீது படையெடுத்துச் செல்லப் போகிறார். மாலப்பிரபா கோயிலைக் கட்டப்போகிறீர்கள். வெற்றிப் புகழுடன் காஞ்சியிலிருந்து திரும்பும் மாமன்னரிடம், காஞ்சியிலிருந்து தங்களுக்கு ஒரு பரிசைக் கொண்டு வருமாறு இப்போதே கேளுங்கள்" என்றாள்.

"பரிசா... என்ன பரிசு?" தேவி கேட்டாள்.

காபாலிகை கூறிய பரிசைக் கேட்ட அரசி வியப்புற்றாள்.

அசோக் நகர். சென்னை

151984
5431584

# 19

காபாலிகை கேட்ட பரிசு, காஞ்சியிலுள்ள 'பரிவாதினி' வீணை. இதைக் கேட்ட சாளுக்கிய அரசி, வியப்புடன் காபாலிகையை நோக்கினாள்.

"பரிவாதினியா? அந்த மாணிக்க வீணையையா? ஆம், நான் கேள்விப்பட்டிருக்கிறேன். பல்லவ நாட்டின் புகழுக்கு அதுவும் ஒரு காரணம். உனக்கு அந்த மாணிக்க வீணையைப் பற்றித் தெரியுமா?" – தேவி பரபரப்புடன் கேட்டாள்.

"நான் மாணிக்க வீணையைப் பார்த்திருக்கிறேன். அதில் இன்னிசை மீட்டிக் கேட்டிருக்கிறேன். ஆகா! சிவபெருமான் மகிழ்ந்து புகழ்ந்த வீணாகானத்தைப் போலவே, காஞ்சியில் அந்த வீணையைப் பல்லவ அரசர் மீட்டக் கேட்டிருக்கிறேன். அதைக் கேட்கக் கேட்க இனிமையாயிருக்கிறது."

காபாலிகை கூறியதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள் லோகமாதேவி. அப்பொழுதே அவள் செவிகளில் வீணாகானம் ஒலித்தது.

"காபாலிகைப் பெண்ணே! நீ பாக்கியசாலி. மாணிக்க வீணையை நீ பார்த்திருக்கிறாய். அதன் இன்னிசையை நீ கேட்டிருக்கிறாய்!" என்றாள் தேவி.

"நானே, அதை என் மடியில் எடுத்து வைத்துக் கொண்டு குழந்தை போல் கொஞ்சியிருக்கிறேன். ஸப்த ஸ்வரங்களை மீட்டி மகிழ்ந்திருக்கிறேன்" என்று காபாலிகை கூறும்போது, இதுவரை அவள் மீது இருந்த சிறிய அருவருப்பும் லோகமாதேவியிடமிருந்து மறைந்தது.

காஞ்சிக் கட்டுக்காவலை மீறி, மாணிக்க வீணையை எவ்வாறு இவள் மீட்டி மகிழ்ந்திருப்பாள்? அவ்வளவு செல்வாக்கு மிக்கவளா? மாணிக்க வீணையைப் பற்றி, மேலும் அவளிடமிருந்து கேட்டறிய வேண்டும் என்ற ஆவல் எழுந்தது.

"இதுபோல், இருளில் நின்றவாறு பல விஷயங்களைப் பேச வேண்டுமா? நாளைக்கு இங்கு வா. பேசுவோம்" என்றாள் தேவி. அவள் உள்ளத்தில் ஆர்வம் மிகுந்திருந்தது.



காபாலிகை சிரித்தாள். "அந்தப்புரத்திற்கு வருவது அவ்வளவு எளிதில் முடியும் காரியமா? என்னை மாளிகைக்குள்ளே விடமாட்டார்களே! மாளிகைக்குள் வந்தால் அல்லவா, அந்தப்புரத்திற்குள் வர முடியும்."

"நீ எப்போது வேண்டுமானாலும் வரலாம். இதோ, இந்த அடையாளச் சின்னத்தை வைத்துக்கொள்" என்று, தன் கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தாள் தேவி.

"இந்த அடையாள மோதிரத்தை ஜாக்கிரதையாக வைத்துக்கொள். எந்த நேரத்திலும் என்னைப் பார்க்க நீ வரலாம்" என்றாள் தேவி.

காபாலிகை, மோதிரத்தைத் தோளில் தொங்கும் பையில் போட்டுக் கொண்டு, ஆசிர்வதிப்பதுபோல் கையை உயர்த்தி, "நான் வருகிறேன். தேவி! நான் சொன்னது நினைவிருக்கட்டும். மறந்து விடாதீர்கள்" என்று கூறி அங்கிருந்து புறப்பட்டாள்.

மோதிரத்தை அலட்சியமாக எங்காவது வைத்துவிடாதே. அது மிகவும் முக்கியமான அடையாளச் சின்னம். கை விரலில் அணிந்து கொள்" என்றாள் தேவி.

"எலும்பாலான ஆபரணங்களைத் தவிர, வேறு ஒன்றையும் நான் அணியமாட்டேன். மோதிரத்தைப் பற்றிக் கவலை வேண்டாம்" என்றாள் காபாலிகை.

காபாலிகையின் அலட்சியமான பேச்சு கோபத்தை அளித்தாலும், காபாலிகையின் துணிவை, தேவி எண்ணி வியந்தாள். இமைப்பொழுதில் அங்கிருந்து தாவிச் சென்று, வந்த வழியே திரும்பிவிட்டாள் காபாலிகை.

உதய நேரத்திற்கு முன்பு சூழ்ந்திருந்த காரிருளில், காபாலிகை விரைந்து நடந்தாள். உச்சி வேளைக்குள் பட்டடக்கல் போய்ச் சேர்ந்து விடும் வேகம் அவள் உள்ளத்திலும், நடையிலும் காணப்பட்டது.

பட்டடக்கல், ஒரு காலத்தில் கலகலப்பு மிகுந்த நகரமாயிருந்தது. சாளுக்கிய மன்னர்கள் தங்கள் முடிசூட்டு விழாவை அங்கே நடத்திக் கொண்டனர். அங்கிருந்து வாதாபியைத் தலைநகரமாக்கிக் கொண்ட பிறகு, பட்டடக்கல் பொலிவிழந்தது. காபாலிகையின் உயிர்த்தோழி ரத்தினதேவி, அங்குதான் இருந்தாள்.

ரத்தினதேவியின் தந்தை குமாரதேவன், வாதாபி அரண்மனைப் பாடகர். அரண்மனையில் நடைபெறும் விசேஷ நாள்களின்போது பட்டடக்கல்லிலிருந்து வாதாபிக்குச் செல்வார்.

லோகமாதேவியைச் சந்தித்த விவரத்தை ரத்தினதேவியிடம் தெரிவிக்கும் ஆர்வத்துடன், காபாலிகை விரைந்து நடந்தாள்.

காபாலிகை, ரத்தினதேவியின் வீட்டை அடைந்தபோது, அவள் வீட்டிலில்லை. காலையிலேயே ஆற்றிற்கு நீராடச் சென்றவள் இன்னும் திரும்பி வரவில்லை என்று குமாரதேவன் கூறினார்.

மாலப்பிரபா நதி, பட்டடக்கல் அருகே வளைந்து, நகரை வலம் வருவதுபோல் ஓடிக் கொண்டிருந்தது.

நீராடுதுறையில், ரத்தினதேவி நாள்தோறும் மனங்குளிர நீந்திக் குளித்து விட்டுத்தான் வீடு திரும்புவாள்.

காபாலிகை நீராடுதுறையை அடையும்போது, ரத்தினதேவி ஈர ஆடையைக் களைந்து, வேற்றுடை அணிந்து, படிக்கட்டுகளில் மெல்ல ஏறி வந்துகொண்டிருந்தாள்.

ஒரு கரத்தால் ஈரக் கூந்தலை மெல்ல உலர்த்தியவாறு அவள் நடந்து வந்ததைக் காண, காபாலிகைக்குப் பொறாமையாக இருந்தது.

'ரத்தினதேவியின் அழகுக்கு எந்தவிதத்திலும் நம் அழகு குறைவில்லை; இருவருக்கும் ஒரே வயதுதான். அவள் மட்டும் பட்டாடை அணிந்து, ஆபரணங்கள் பூண்டு, அழகுக்கு அழகு செய்யப்பட்ட எழில் சித்திரமாக விளங்க, நாம் மட்டும் காபாலிக சமயத்தை விட்டுவிடாமல், புழுதி படிந்த மேனியுடன், எலும்பு மாலைகளுடன், தேச தேசங்களைச் சுற்றியலைந்து கொண்டிருக்கக் காரணம் என்ன?' காபாலிகை தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். மறுமொழி கூறாது தானே ஒருமுறை சிரித்துக் கொண்டாள்.

'என்னுடைய கடுமையான விரதத்தால் நான் சிவபெருமானை மிக விரைவில் கண்டுவிடுவேன். இவர்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்காது' என்று சொல்லிக் கொண்டாள்.

நதிக்கரையில், மேல் மண்டபத்தில் நின்று கொண்டிருக்கும் காபாலிகையை, ரத்தினதேவி பார்த்துவிட்டாள். ஒருகணம் அவள்தானா என்று கூர்ந்து கவனித்து உறுதிப்படுத்திக்கொண்ட ரத்தினதேவி, ஆனந்தம் மேலிட, "ஏ! தேவசோமை! நீதானா, நீயேதானா? நேற்று மாலைதான் உன்னைப்பற்றி நான் நினைத்தேன். இப்போது நீயே வந்துவிட்டாய்! நான் காண்பது கனவு இல்லையே?" என்று பேசியவாறு படிக்கட்டுகளை ஒரே தாவாகக் கடந்தாள்.

"ரத்தினதேவி! காஞ்சியில் எழுதப்பட்ட வர்ணச் சித்திரம்போல் நாளுக்கு நாள் எழில் கோலம் பொங்கி நிற்கும் என் அருமை ரத்தினதேவி!" என்று தன் இரு கரங்களையும் நீட்டினாள், ஆலிங்கனம் செய்து கொள்ள. ரத்தினதேவி முகத்தில் அருவருப்புடன், "ஏய்! இன்னும் நீ சுடுகாட்டுத் தொடர்பை விடவில்லையா? குளித்து எவ்வளவு நாள்களாகின்றன?" என்று கேட்டாள்.



காபாலிகை பெரிதாக நகைத்தாள்! "ரத்தினதேவி, என்னைப்பற்றி உனக்குத் தெரியாதா? நான் வணங்கும் முழுமுதற் கடவுள், பாம்பணியும் பெருமான் அபிஷேகப் பிரியர். நீ ஒரு நாளைக்கு ஒரு தடவை குளிப்பாய். நானோ ஒரே நாளில் பல தடவைகள் குளிப்பேன். அது கிடக் கட்டும்; நேற்று நீ என்னை நினைத்தாயே? எதற்காக நினைத்தாய்?" என்று காபாலிகை கேட்டாள்.

"நேற்று மாலை சந்திரதத்தன் என்ற காபாலிகன், என் வீட்டைத் தேடி வந்தான். உன்னைத் தேடி அவன் அலைகிறானாம். நான் உனது உயிர்த்தோழி என்பதறிந்து, என் வீட்டிற்கு வந்து விட்டான். உன்னைப் பற்றி என்னிடம் விசாரித்தான். நீ இங்கு வந்திருக்கிறாயா என்று கேள்வி மேல் கேள்வி கேட்டான். எனக்கு அவன் பேச்சும், பார்வையும் பிடிக்கவில்லை. அவன், உன்னை மிகவும் விரும்புகிறானாம். உண்மையா தேவசோமை? போயும் போய் உனக்கு அவன்தானா காதலிக்கக் கிடைத்தான்!" என்று ரத்தினதேவி நகைத்தவாறு கேட்டாள்.

காபாலிகையின் முகம் மாறியது. "சந்திரதத்தன் இங்கு வந்தானா? நீ அவனிடம் என்ன சொன்னாய்? மறுபடியும் அவன் வருவானா? ரத்தினதேவி, அவன் என்னைத் தேடி அலைகிறான். என்னை எப்படியும் அடைந்துவிடப் பார்க்கிறான். ஆனால், நான் அவன் வசப்படமாட்டேன். என் உயிருக்குயிரான என் காதலன் ருத்ரதேவன், காஞ்சியில் இருக்கிறான். அவனை நான் அடைந்தாக வேண்டும். அதற்கு உன் உதவி கேட்கத்தான் நான் வந்தேன்" என்றாள்,

"உன் காதலன் காஞ்சியில் இருக்கிறானா? என்னுடைய உதவி வேண்டுமா? என்னால் எப்படி முடியும்!" என்று வியப்புடன் கேட்டாள் ரத்தினதேவி.

"ஆமாம்; நீ காஞ்சிக்குச் செல்லப் போகிறாய்" என்று காபாலிகை கூறியது கேட்ட ரத்தினதேவி, திடுக்கிட்டாள்.

"பல்லவ நாடு, சாளுக்கியர்களின் விரோத நாடு. அந்த நாட்டின் தலைநகர் காஞ்சிபுரம். விரோதியின் நாட்டிற்கு எவ்வாறு செல்வது?"

காஞ்சிக்குச் செல்ல வேண்டும் என்று காபாலிகை கூறியவுடன், ரத்தினதேவியின் உடல் ஏனோ சிலிர்த்தது.

"காஞ்சி அருகிலா இருக்கிறது. நான் ஒரு பெண். தன்னந்தனியாய் எப்படிச் செல்வேன்?" என்று ரத்தினதேவி கேட்டாள்.

"இப்படி, இந்த மர நிழலில் உட்கார்ந்து பேசுவோம். உன் பயணத்திற்கு வேண்டிய திட்டங்களை நான் கூறுகிறேன்" என்றாள் காபாலிகை.

காபாலிகை கூறியதைக் கேட்ட ரத்தினதேவிக்கு, வியப்பும் அதிர்ச்சியும் சேர்ந்தன.

# 20

ரத்தினதேவியின் தந்தை, சிறந்த ஓவியர். அவர் ஒரு கைதேர்ந்த சிற்பி. இசையில் ஈடுபாடுடையவர். வாதாபி நகரத்து மலைச் சரிவுகளில் பாறைகளைக் குடைந்து சிற்பங்களை அமைக்கும் பணி நடைபெற்ற போது, அவர் தந்தை இளம் வயதினர். வாதாபியின் மீது பல்லவ மன்னன் பரமேச்வரவர்மன் படையெடுத்ததால் ஏற்பட்ட அழிவு – அவர் ஆர்வத்தைக் குலைத்தது. ஊரைவிட்டு மக்கள் பயந்து ஓடினர். கோயில்களில் பூஜை நடைபெறவில்லை. பாடகர்களும், நாட்டியக் கலைஞர்களும் சோர்வுற்றிருந்தனர்.

போர்க் காலத்தின்போதே ரத்தினதேவியின் தந்தை, துணிந்து பல்லவ நாட்டிற்குச் சென்றார். அங்கே அவருடைய திறமைக்கு ஏற்ற வாய்ப்புகள் காத்திருந்தன. காஞ்சியிலேயே திருமணம் செய்து கொண்டார். ரத்தினதேவியின் தாய் வாதாபியிலேயே இருந்தாள். அப்போது ரத்தினதேவி சின்னஞ்சிறியவள். அவளை மிகவும் சிரமப்பட்டு வளர்த்தாள், அவளுக்கு நடனம் கற்றுக் கொடுத்தாள். சிறு வயதிலேயே துறுதுறுவென்றிருந்த ரத்தினதேவியின் அழகுடன், ஆற்றலும் சேரவே, பட்டடக்கல் மாளிகையில் அவளுக்கு வரவேற்பு மிகுந்திருந்தது.

ரத்தினதேவியின் தாய் நெருப்புக்குச் சமானமானவள். தன் மகளைத் தவறாக நெருங்க, அவள் ஒருவரையும் அனுமதிக்கவில்லை. எழிலும், கலைப் புலமையும் ஒருங்குசேர்ந்த இளம் பருவத்து ரத்தினதேவியை மணக்க, பல செல்வந்தர்கள் போட்டியிட்டனர். இயலவில்லை. அரச குடும்பத்துச் செல்வாக்கு அவளுக்கு மிகுந்திருந்தது.

சில மாதங்களில், சாளுக்கியத் தலைநகர் பட்டடக்கல்லிலேயே தங்கிவிட்டாள். மாளிகையில் நடைபெறும் விசேஷ நிகழ்ச்சிகளின்போது ராஜ பல்லக்கு வரும். ரத்தினதேவி, பல்லக்கில் வாதாபி மாளிகைக்குச் செல்வாள். ரத்தினதேவியின் நடனம், மாளிகையிலுள்ளவர்களைப்



பெரிதும் கவர்ந்தது. விக்கிரமாதித்தன் அரியணை ஏறிய சமயம், ஒவ்வொரு நடன நிகழ்ச்சி முடிவடைந்தபோதும், விலைமதிப்பற்ற பரிசுகளை அவர் ரத்தினதேவிக்கு வழங்குவார்.

ரத்தினதேவியுடன், அவள் தாயும் உடன் வருவாள். பட்டடக்கல்லில் சிறு குடிசையாக இருந்த அவர்கள் வீடு, புதுப்பித்துப் பெரிய வீடாகக் கட்டப்பட்டது. ஒருவேளை உணவுக்கு மிகவும் தொல்லை பட்டுக் கொண்டிருந்த அந்தக் குடும்பத்திற்கு ராஜபோகமாக வாழும் அளவுக்கு வசதி ஏற்பட்டது.

ரத்தினதேவியின் தாய், ஏதும் கவலையற்றவளாக, மிகுந்த மகிழ்வுடனிருந்தாலும், ரத்தினதேவி இதயப் பூர்வமாக மகிழ்ச்சியுடனிருக்கவில்லை.

"அம்மா, நமக்கு இவ்வளவு சுக செளக்கியங்களிருந்தும் எனக்கு ஏனோ மன நிம்மதியே இல்லை" என்று ரத்தினதேவி ஒரு சமயம் கூறினாள்.

ரத்தினதேவியின் தாய் அதற்காக வியப்படையாமல் புன்முறுவலுடன், "எனக்குத் தெரியும் மகளே உன் ஏக்கம். உன் வயதில் எனக்குத் திருமணமாகிவிட்டது. உன் தந்தையை மணந்து, நான் மகிழ்வுடனிருந்தேன். வறுமை சூழ்ந்திருந்தாலும் உன் தந்தையின் கம்பீரத் தோற்றம், இனிய பேச்சு, கலை உள்ளம் என்னை அவரோடு பிணைத்துவிட்டது. எந்தக் கவலையையும், அவரது இனிய முகத்தைப் பார்த்தே சகித்துக் கொண்டேன். நான் திருமணம் புரிந்து கொண்டபோது எனக்கு இருந்த அதே வயதை அடைந்து விட்ட நீயும், நல்ல மணாளனை மணந்து மகிழ்வுடனிருக்க வேண்டாமா? அந்த ஏக்கம் உன் உள்ளத்துள்ளே உன்னைக் கவலைப்பட வைக்கிறது. உன் தாய் என்ற முறையில் என் கடமையை நான் நிறைவேற்ற வேண்டும். சிறிது காலம் பொறு; கவலையில்லாமல் வாழ்வதற்கு வேண்டிய பொருளைச் சேர்த்துக் கொள்வோம். பிறகு வரனைப் பார்த்து உனக்கு மணம் புரிவிக்கிறேன்" என்பாள்.

ரத்தினதேவி பலமாகத் தலையசைத்து. "ஐயோ, அம்மா! என் திருமணத்தைப் பற்றி நான் கவலைப்படவில்லை. தங்களைப் பற்றித்தான் என் கவலையெல்லாம். இவ்வளவு பெரிய வீடு இருந்தென்ன? வசதிகள் இருந்தென்ன? அரசரின் முழுமையான ஆதரவு இருந்தென்ன? என் தாய் மனக் கவலையுடனிருப்பதை என்னால் மறக்க முடியவில்லையே என்ற கவலைதானம்மா. என் கல்யாணத்தைப் பற்றி நான் நினைக்கவே இல்லை" என்றாள்.

"எனக்கென்ன மனக் கவலை?" தாய் கேட்டாள்.

"அம்மா, நீங்கள் வெளியே புலப்படுத்திக்கொள்ளாவிட்டாலும், தங்கள் உள்ளத்திற்குள் கனன்று கொண்டிருப்பது எனக்குத் தெரியாதா?

என் தந்தை காஞ்சி சென்றவர், இன்றளவும் திரும்பி வராததும், நாட்டிலுள்ள மற்றப் பெண்களைப் போல் கணவரின் அரவணைப்புடன் நீங்கள் இல்லை என்பதும் நான் அறியமாட்டேனா? தாங்கள் ஏக்கத்துடன் இருப்பதும் எனக்குப் புரியாததா?" என்று இவ்வளவு நாள்களாகக் கேட்க வேண்டாம் என்று மனத்திற்குள் நினைத்துக் கொண்டிருந்ததை, ரத்தின தேவி அன்று கேட்டு விட்டாள்.

தாய் திடுக்கிட்டாலும், வெளியே புலப்படுத்திக் கொள்ளாமல் முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்டு, "அடி, பைத்தியமே! எனக்கு ஒருவித மனக்கவலையோ ஏக்கமோ இல்லை. 'தந்தை' என அன்புடன் நீ அழைக்க, அவர் இங்கே இல்லையே என்ற குறைதான். அவர் காஞ்சியில் நலமுடன் இருக்கிறார் என்று கேள்விப்பட்டேன்" என்றாள்.

"அது மட்டுமா? அவர் காஞ்சியில் வேறொருத்தியை மணந்து கொண்டதும், அவளுக்கு ஒரு மகள் இருப்பதும் தாங்கள் கேள்விப்பட வில்லையா?"

ரத்தினதேவி இவ்வளவு கூறியவுடன், அவள் தாயின் முகம் மாறியது. குரல் சோகத்தைப் புலப்படுத்தியது.

"ஆமாம்; உனக்கு ஒரு தங்கை காஞ்சியில் இருக்கிறாள். அவளைக் காண வேண்டும் என்ற ஆவலால் நான் துடித்துக் கொண்டிருக்கிறேன். காஞ்சி நகரம் அருகிலா இருக்கிறது. சென்று ஒருமுறை பார்த்து வர?" என்றாள்.

ரத்தினதேவி, தாயின் மார்பில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு, "அம்மா! தங்களைப் பெரும் குணவதி என்று மட்டுமே நினைத்துக் கொண்டிருந்தேன்; நீங்கள் பெரிய தியாகியும்கூட. அன்புக் கணவர் மற்றொருத்தியை மணந்து, ஒரு குழந்தைக்கும் தந்தையாகிவிட்ட செய்தியை அறிந்தும், அதை அடக்கி வைத்துக் கொண்டு, மாற்றாந்தாய் மீதும், அவள் பெற்ற மகள் மீதும் துளிக்கூட வெறுப்புக் கொள்ளாமல், அவர்களைப் பார்க்கமுடியவில்லையே என்று வேதனைப்படுகிறீர்களே, தங்கள் குண உயர்வை எப்படிப் புகழ்வது?" என்று விம்மினாள்.

மகளுடைய முதுகை மெல்ல வருடி, "மகளே வருத்தப்படாதே, பெண்கள் என்றாலே அவர்கள் தியாகத்தின் வடிவம் என்றுதான் கூற வேண்டும். அவர்கள் ஏமாற்றத்தைச் சகித்துக் கொள்ள வேண்டும். பொறாமை எனும் நச்சு விதையை உள்ளத்தில் வளர்க்கக்கூடாது. கணவனைக் கண்கண்ட தெய்வமாக மதிக்க வேண்டும். காமத்திற்கும் காதலுக்கும் வித்தியாசம் உணர்ந்திருக்க வேண்டும். என்றாவது ஒரு நாள் உன் தந்தை இங்கு வருவார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. நம்பிக்



கைத் தவம் வீண் போகாது. அதனால் நீ கவலைப்படாதே ரத்தினா. என் மேல் உனக்குப் பிரியமிருக்குமானால், நான் கூறும் இரண்டு விஷயங் களை வாழ்நாளில் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும். ஒன்று கற்பு. மற்றொன்று, 'ஒரே கணவன், அவனே தெய்வம்' என்ற திடமான நம்பிக்கை. இவற்றில் நீ உறுதியாக இருந்தால் போதும், எந்த இடரையும் வெல்லலாம்?"

ரத்தினதேவி, தன் தாயின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். தாயின் கரங்கள், அவள் விழிநீரைத் துடைத்தன.

"தாயே நான் கேட்கிறேன், தவறாக நினைக்க மாட்டீர்களே?" என்ற மகளை நோக்கி விழிகளை அகல விரித்து, "கேள் மகளே, கேள்" என்றாள் தாய்.

"தந்தை வாதாபியை விட்டுச் செல்லும்போது, நீங்களும் ஏன் அவருடன் செல்லவில்லை?"

மகளின் இந்தக் கேள்விக்கு உடனே தாய் மறுமொழி கூறவில்லை. பிறகு மெல்லக் கனைத்துக் கொண்டு, "மகளே! பிறந்த நாட்டை விட்டு விரோதியின் நாட்டிற்கு நான் செல்ல விரும்பவில்லை. அதில்தான் எங்களுக்குள் கருத்து வேற்றுமை" என்றாள். ஏதோ சொல்ல விரும்பு வதைச் சொல்லாமல் மறைப்பது போலவும் தோன்றியது.

"சரி, தாயே! இது விஷயமாக இப்போது பேசித் தங்கள் வேத னையை வளர்க்கமாட்டேன். தாங்கள் கூறிய பொன்மொழிகள் போன்ற சொற்களை மறக்கமாட்டேன். மீறமாட்டேன். என்றாலும், ஒருநாள் நான் காஞ்சி செல்வேன். என் தந்தையைச் சந்திப்பேன். அவரை உடனே வாதாபிக்கு வருமாறு கேட்டுக் கொள்வேன். அதனால் என்னைக் காஞ்சிக்கு அழைத்துச் செல்லும் ஒருவரைத்தான் நான் மணப்பேன். என் வாழ்க்கை இலட்சியம் இதுதான்" என்றாள்.

தாய் சிரித்தாள். "இதை வெளியே சொல்லிவிடாதே. உன்னைக் காஞ்சிக்கு அழைத்துச் செல்லப் பலர் போட்டி போட்டுக் கொண்டு வந்து விடுவார்கள்" என்றாள்.

அதன் பிறகு பல நாள்கள் சென்றன. தாயின் உடல் நலம் குன்றியது. வீட்டிலே படுத்த படுக்கையாகி விட்டாள். எப்படியாவது உடனே காஞ்சிக் குச் சென்று, தந்தையைச் சந்தித்து, வாதாபிக்கு அழைத்து வரவேண்டும் என்ற துடிப்பு மகளுக்கு அதிகரித்தது.

ரத்தினதேவி, காஞ்சிக்குச் செல்வதைப் பற்றியே கனவு கண்டு கொண்டிருந்தாள். தாயின் உடல் நிலை கருதி, அவள் வாதாபிக்குச் செல்வ தில்லை.

மாலப்பிரபா நதிக்கரையில் அமர்ந்து இயற்கையை ரசிப்பது; வீட்டிலே தாயருகே இருப்பது; இவை தவிர அவள் வேறு வேலைகளில் கவனம் செலுத்துவதில்லை. வாதாபியில் அவள் உள்ளங்கவர்ந்த விஷ்ணு தேவனைச் சந்திக்க வேண்டும் என்ற துடிப்பு மட்டும், அவள் உள்ளத்தில் இருந்து கொண்டிருந்தது.

அவளுடன், தாய் வாதாபிக்கு வராத சமீப நாட்களில்தான் விஷ்ணு தேவனுடைய அறிமுகம் ஏற்பட்டது. விஷ்ணுதேவன் குழலூதுவதிலும் திறமை படைத்தவன். அவளுடைய நடனத்திற்கு மத்தளம், குழல் இரண்டும் பக்கவாத்தியமாக அமைந்திருந்தன. வழக்கமாகக் குழலூதி வந்த முதியவர் உடல் நலம் சரியின்மையால் வராது போகவே, விஷ்ணு தேவன் அப்பணியை ஏற்றுக்கொண்டான்.

தவறாமல் ரத்தினதேவி ஆடுவதைக் காணக் காண, விஷ்ணு தேவனுக்கு ஆர்வம், ஆவல், அதிசயம் எல்லாம் ஒன்றுசேரப் பொங்கின.

மாளிகையில் நடன நிகழ்ச்சி முடிந்து, ரத்தினதேவி சிவிகையில் ஏறுவதற்கு, மாளிகையின் முகப்பிலுள்ள நந்தவனம் வழியே வருகையில், விஷ்ணுதேவன் அவளை நெருங்கிப் பேசினான்.

பேச்சு முதலில் அவளுடைய நாட்டியத்தைப் பற்றி இருந்தது. பிறகு இசையைப் பற்றி அமைந்தது. நாள்தோறும் இருவரும் சந்தித்துக் குழலிசையைப் பற்றியும், நடனத்தைப் பற்றியும் பேசிக் கொள்வார்கள்.

எந்த ஆடவனுடனும் நெருங்கிப் பேச விரும்பாத அவள், விஷ்ணு தேவனிடம் நேரம் போவது தெரியாமல் பேசுவது அவளுக்கே வியப்பாக இருந்தது.

'அவர் அழகில் நாம் மெல்ல மெல்லக் கரைகிறோமா அல்லது அவரது குழலிசையில் மயங்குகிறோமா?'

'மனத்தை அவ்வளவு எளிதில் பறிகொடுக்கக்கூடாது. நம் தாய் என்ன சொல்லி இருக்கிறாள்.'

'ஆம்; நாமும் உறுதி கொடுத்திருக்கிறோம். அத்துடன் நாம் இலட்சியமொன்றும் கொண்டிருக்கிறோம். காஞ்சி செல்லும் இலட்சியம்.'

'இவர் காஞ்சிக்கு வரச் சம்மதிப்பாரா? கேட்டுப் பார்ப்போமே!'

தாயிடம், குழலூதும் கலைஞரைச் சந்தித்ததையும், பேசியதையும் சொல்லி விடுவோமா என்று நினைத்தாள். ஆனால், சொல்லவில்லை.

தோழி காபாலிகை, காஞ்சியைப் பற்றிச் சொன்னவுடன், அவள் மனத்தில் பல எண்ணங்கள் உதயமாயின.

# 21

குழலூதும் கலைஞரைச் சந்தித்த மற்றொரு நிகழ்ச்சியும் ரத்தின தேவியின் நினைவுக்கு வந்தது. ஒரு நாள் அவளுக்கு மாளிகையிலிருந்து அழைப்பு வந்தது. அன்று திருமால் எடுத்த பத்து அவதாரங்களைச் சித்தரிக்கும் நடன நிகழ்ச்சி நடக்கவிருந்தது.

ரத்தினதேவி அற்புதமாக ஆடினாள். குழலிசையும், தேவியின் பாதச் சதங்கையின் 'கலீர் கலீர்' என்ற ஓசையும் ஒன்றையொன்று போட்டியிட்டன.

நடனம் முடிந்த பிறகு விஷ்ணுவர்த்தனை ரத்தினதேவி சந்தித்தாள். இருவரும் ஒருவரையொருவர் புகழ்ந்து கொண்டனர். இருவரும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ரத்தினதேவி, விஷ்ணு வர்த்தனைக் கேட்டாள்: "நீங்கள் காஞ்சிமாநகர் சென்றிருக்கிறீர்களா?"

"காஞ்சியா? அது எங்கிருக்கிறது?"

உண்மையை மறைக்காமல் அவன் கேட்டான்.

அவள் சிரித்தாள்.

"காஞ்சிபுரம் தெரியாதா? தெற்கே பலகாதத் தொலைவில் இருக் கிறது. பல்லவர்களின் தலைநகரம்."

"ஓ! விரோதி நாட்டைப் பற்றிச் சொல்கிறாயா? அந்த நாட்டிற்கு நான் சென்றதில்லை."

"விரோதம் – நட்பு இவை அரசர்களுக்கிடையே; கலைஞர்களுக்கு அதைப் பற்றி என்ன? காஞ்சியில், கலைஞர்களுக்கு வரவேற்பு மிக அதிகமாம்."

"எதிரியின் சொர்க்கங்கூட நமக்கு நரகம்தான். காஞ்சியைப் பற்றி நான் கனவில்கூட நினைத்தது கிடையாது." அவன் மீண்டும் உண்மை யைச் சொன்னான். அவள் நகைத்தாள்.

"நான் காஞ்சியைப் பற்றி நிறைய நினைக்கிறேன். நாள்தோறும் நினைக்கிறேன். காஞ்சிக்குச் செல்ல ஆசைப்படுகிறேன்" என்று கூறி, அவன் பக்கம் திரும்பி, ஒரு முறை பார்த்தாள்.

அவனுடன் அறிமுகமாகிய சில நாள்களிலேயே, இதுபோல் நம் ஆசையைத் தெரிவிப்பது சரியா என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள். அதேபோல சிறு விஷயங்களுக்கெல்லாம் கருத்து மோதல் ஏற்படுகிறதே என்றும் வருந்தினாள்.

அன்றும் தன் தாயிடம் நடந்தவற்றைச் சொல்லவில்லை. மறுநாள் மாலப்பிரபா நதிக்கரையில் ஓடும் பிரவாகத்தைப் பார்த்தவாறு அமர்ந்து, பொழுதைக் கழித்தாள். அதற்கடுத்த நாள், வீட்டிலேயே தாயின் அருகே இருந்தாள். மாளிகையில் நடைபெற்ற தசாவதார நாட்டிய நாடகத்தைப் பற்றிச் சொன்னாள். மகளின் திறமை நாளுக்கு நாள் வளர்வதை அறிந்த தாய், மன மகிழ்ந்தாள்.

"உனக்குத் துணை இனி நீதான். உன்னுடன் இனி நான் வாதாபிக்கு வர முடியுமா என்பது சந்தேகமே. இந்த வீட்டில் இன்னும் எவ்வளவு நாள்கள் இருக்கக் கொடுத்து வைத்திருக்கிறேனோ?" என்று கவலைப்பட்டாள்.

"அம்மா! கவலைப்படாமலிருந்தாலே உங்கள் நோய் விரைவில் குணமடைந்துவிடும். என் தந்தையை இங்கே அழைத்து வந்து, தங்களுடன் சேர்க்கும் வரையிலாவது நீங்கள் உயிர் வாழ வேண்டும்" என்று ஆறுதல் கூறினாள்.

விரைவில் காஞ்சி செல்ல வேண்டும் என்ற எண்ணம் அவளிடம் வலுப்பெற்று வந்த அந்த நாளில்தான் காபாலிகை, ரத்தினதேவியை மாலப்பிரபா நதிக்கரையில் சந்தித்துக் காஞ்சிக்குச் செல்ல வேண்டும் என்று தன் வேண்டுகோளைத் தெரிவித்தாள்.

"காஞ்சி அருகிலா இருக்கிறது? நான் ஒரு பெண். தன்னந்தனியாய் எப்படிச் செல்வேன்?" என்று தேவி கேட்டாள்.

"இப்படி, இந்த மரநிழலில் உட்கார்ந்து பேசுவோம். உன் பயணத்திற்கு வேண்டிய திட்டங்களை நான் கூறுகிறேன்" என்றாள் காபாலிகை.

தொலைவில், குழலூதும் கலைஞர் விஷ்ணுதேவன் வருவதைப் பார்த்த ரத்தினதேவி, காபாலிகையின் தொடையை மெல்ல அழுத்தி, "நாம் பிறகு பேசுவோம்" என்றாள். முதலில் அவள் சொல்வதற்கான காரணம் அறியாமல், ரத்தினதேவியின் முகத்தை உற்றுப் பார்த்தாள். பிறகு அவள் பார்வை செல்லும் திசையை நோக்கினாள்.

காபாலிகையின் முகத்தில் ஒரு சுழிப்பு ஏற்பட்டது. "ஒ, இவனா!" என்று அவள் கூறிய சொற்களில், அலட்சியம் இருந்தது.

"உனக்கு அவரைத் தெரியுமா?" என்று ரத்தினதேவி கேட்டாள். தெரியுமென்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள் காபாலிகை.



"எப்படித் தெரியும்? நீண்ட காலமாகத் தெரியுமா?" என்று ஆவலுடன் கேட்டாள். இந்தக் காபாலிகைக்குத் தெரியாததே இருக்க முடியாதோ என்ற வியப்பும் ரத்தினதேவியிடம் எழுந்தது.

ரத்தினதேவி கேட்டதற்கு மறுமொழி கூறாமல், காஞ்சிக்குப் புறப்படுவதைப் பற்றியே காபாலிகை பேசலானாள்.

"நான் கேட்டது உன் காதில் விழவில்லையா? அவரை உனக்குத் தெரியுமா?" என்றாள் ரத்தினதேவி.

"அவர் என்ன அவர்? அவனை எனக்குத் தெரியும்" என்று, காபாலிகை அலட்சியமாக கூறினாள்.

ரத்தினதேவியின் முகம் சற்றுக் கறுத்தது. விஷ்ணுதேவனை இவள் ஏன் அலட்சியப்படுத்துகிறாள்? அவமதிக்கிறாள்?

"பல ஆண்டுகளாகத் தெரியுமா?" தேவி விடவில்லை.

"உம்; அதைப்பற்றி இப்போது என்ன பேச்சு? முக்கிய விஷயம் வேறு இருக்கும்போது அவனைப் பற்றிப் பேசுவானேன்?" காபாலிகையின் குரலில் அலட்சியம் இருந்தது.

விஷ்ணுதேவன் வந்துகொண்டே இருந்தான். அவர் வரும்போது இந்தப் பேச்சுத் தொடரக்கூடாது என்று தேவி விரும்பினாள்.

"சரி, சரி. சொல்ல விரும்பவில்லையென்றால் உன்னை வற்புறுத்த மாட்டேன். அவர் வரும்போது காஞ்சி செல்வதைப்பற்றிப் பேசவேண்டாம். அவருக்குக் காஞ்சி செல்வதில் விருப்பமில்லை" என்று கேட்டுக் கொண்டாள் தேவி.

"நல்லதாயிற்று! அவன் வராவிட்டால் ஒன்றும் நஷ்டமில்லை. ஆமாம், அவனை ஏன் அழைத்தாய்? காஞ்சிக்குப் போகும் பயணத்தைப் பற்றி இப்போதுதானே நான் உன் முன் சொல்கிறேன்" என்றாள் காபாலிகை.

"காஞ்சிக்குச் சென்று, என் தந்தையை அழைத்து வரவேண்டும் என்ற ஆவல் எனக்கு. சற்று நேரம் நாம் வேறு ஏதாவது பேசுவோம். அவர் அதோ வந்து கொண்டிருக்கிறார்" என்றாள் தேவி.

"கவலைப்படாதே! அவன் இங்கே வந்தாலும், நானிருப்பதைப் பார்த்துவிட்டால் உடனே இங்கிருந்து போய்விடுவான். அதனால் காஞ்சிப் பேச்சை நாம் நிறுத்த வேண்டாம்" – காபாலிகை சொன்னாள்.

"உன்னைப் பார்த்தவுடன் அவர் ஏன் போய்விடுவார்? என்ன காரணம்?" – தேவி வியப்புடன் கேட்டாள்.

காபாலிகை சற்றுக் கோபமுடன், "நான் இப்போது அவனைப் பற்றிப் பேச விரும்பவில்லை. காஞ்சி செல்வதைப் பற்றிப் பேசுவோம்.

உனக்கு மிகப் பயன்படப் போகிற ஒரு காரியத்தைப்பற்றி நான் சொல்லும் போது, நீ உன் வாழ்க்கைக்குப் பயன்படாத ஒருவனைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறாய்'' என்று காபாலிகை கூறியவுடன், ரத்தினதேவிக்கும் கோபம் வந்தது. விஷ்ணுதேவனை அவள் இவ்வளவு அலட்சியமாகப் பேசுகிறாளே என்று எண்ணினாள்.

"தேவசோமை! உனக்கும் அவருக்கும் ஏதோ விரோதமிருப்பது போல் தெரிகிறது. ஆனால், அவர் எனக்கு வேண்டியவர். அவரை நான் மெல்ல மெல்லப் புரிந்துகொண்டு வருகிறேன். அவருடன் நெருங்கிப் பழக விரும்புகிறேன். என்னிடமே நீ அவரைக் குறை கூறுவது, எனக்குப் பிடிக்கவில்லை'' என்றாள் தேவி.

காபாலிகை, தேவியின் முகத்தை ஒருதடவை கூர்ந்து நோக்கினாள்.

"சரி, சரி. உனக்கு விருப்பமில்லாவிட்டால் வேண்டாம். சிறிய பிரச்சனையைப் பற்றி விவாதித்து, மிகப் பெரிய திட்டத்தை மறந்துவிட வேண்டாம்'' என்றாள்.

விஷ்ணுதேவன் நதிக்கரையை நோக்கி வந்தவன், திடீரென்று நின்றான். அவன் சுற்றுமுற்றும் யாரையோ தேடுவதுபோல் தோன்றியது. பிறகு அவன் திரும்பி, வேறு பக்கமாக நடக்கலானான்.

ரத்தினதேவி பரபரப்புடன் எழ முயன்றாள். "நாம் இங்கு இருப்பது அவருக்குத் தெரியவில்லையா? வேறு எங்கோ போகிறாரே" என்று கேட்டாள். அவள் கையைப் பிடித்து உட்கார வைத்து, "உஷ். நாம் இங்கு இருப்பது அவனுக்குத் தெரியாது. தெரியவில்லை என்றும் சொல்லலாம்'' என்றாள்.

"நாம் இங்கிருப்பது அவருக்குத் தெரியவில்லையா?'' தேவி கேட்டாள்.

'தெரியவில்லை!'

"என்ன அப்படிச் சொல்லிவிட்டாய்? நம்மை அவர் பார்க்க வில்லையா?

"பார்க்கவில்லை!"

"அதிசயமாயிருக்கிறதே! அவரைக் குருடன் என்று சொல்லி விடுவாய் போலிருக்கிறதே!"

"பிறரை நிந்தனை செய்ய எனக்குத் தெரியாது. அவனுக்குக் கண் பார்வை போதாது. அருகில் பார்வைதான் தெரியும்."

"ஆ!"



"அதிர்ச்சியடைகிறாயா, அதிசயப்படுகிறாயா எனக்குத் தெரியாது. ஆனால் உண்மை."

"தேவசோமை, தேவசோமை! அவனைப் பற்றிய உனக்கு முழு விபரமும் தெரியுமா? உனக்கும் அவருக்கும் தீராத பகை உண்டா?"

"பகை என்றே வைத்துக்கொள். அவனைப் பற்றிய விவரங்கள் இப்போது வேண்டாம். ஆனால் நான் உன்னை ஒன்று கேட்கிறேன். உன்னைத் தேடித்தானே அவன் வாதாபியினின்று வந்தான்?"

தேவசோமை கேட்டதற்குத் தேவி உடனே மறுமொழி கூறவில்லை. விஷ்ணுதேவன், தன்னைத் தேடித்தான் வாதாபியினின்று வந்திருக்கிறான். சில நாட்களாகத் தன்னைக் காணாததால் இருக்குமிடம் தேடி வந்திருக் கிறார் – என்று அவள் எப்படி காபாலிகையிடம் கூறுவாள்? தன் இதயத்தில் வளர்ந்திருப்பது அவரது கலையின்மீது பற்றுதலா அல்லது அவர்மீது பற்றுதலா என்று புரிய முடியாத நிலையில், அவள் என்னவென்று கூறுவாள்? ஆனால், வாதாபியினின்று தன்னைத் தேடி வந்தவர், ஏன் திரும்பிச் செல்ல வேண்டும்? ஒருவேளை காபாலிகை கூறுவதுபோல் பார்வை சரியில்லையா? அல்லது காபாலிகை இருப்பதைப் பார்த்துவிட்டதாலா?

"தேவி! என்ன யோசிக்கிறாய்? நான் சொன்னது சரிதான். நாம் இங்கே இருப்பது அவனுக்குத் தெரியவில்லை'' என்றாள். பிறகு, "கவலைப்படாதே. உன்னைத் தேடி உன் வீட்டிற்குச் செல்கிறான் இப்போது. அதற்குள் நான் உனக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லி, ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டும்'' என்றாள்.

ரத்தினதேவி பெருமூச்சு விட்டாள். "தேவசோமை! காஞ்சிக்குச் செல்ல வேண்டும் என்ற துடிப்பு என் உள்ளத்தில் சில நாட்களாகப் பலமாக இருக்கிறது. நீயும் அந்த எண்ணத்தைத் தூண்டிவிட்டிருக்கிறாய். காஞ்சிக்கு எப்படிச் செல்வது? துணை வேண்டாமா?'' என்று கேட்டாள்.

"துணையா? உனக்குச் சாளுக்கிய மன்னரின் ஆதரவே கிடைக்கப் போகிறது!"

"என்ன, புதிராகப் போட்டுக்கொண்டிருக்கிறாய்? என் தந்தையைக் காணக் காஞ்சி செல்கிறேன் என்றால், சக்கரவர்த்தி சும்மாயிருப்பாரா? பல்லவ நாட்டிலேயே தங்கிவிட்ட என் தந்தையை நான் அழைத்து வந்தாலும், அவருக்குத் தண்டனை தராமலிருப்பாரா? அதனால், நான் காஞ்சிக்குச் செல்லப் போவதை யாரிடமும் சொல்லக்கூடாது என்று நினைத்திருந்தேன். காஞ்சிக்குச் செல்லுமாறு நீயும் தூண்டுகிறாய். நீயும் வருகிறாயா? இருவரும் காஞ்சிக்குச் செல்வோம்'' என்றாள் ரத்தினதேவி.

காபாலிகை யோசிக்கலானாள். ஓர் திட்டம் உருவாகியது.

# 22

இருவரும் காஞ்சிக்குச் செல்வது அவ்வளவு எளிதன்று என்பதை எவ்வாறு விளக்குவது? காபாலிகை சிந்தித்தாள். தானும் அவளும் ஒன்று சேர்ந்து போவதிலுள்ள இடர்ப்பாட்டை எப்படி எடுத்துக் கூறுவது என்பதைப் பற்றியும் அவள் சிந்தித்தாள். பிறகு, அவள் காஞ்சிக்குச் செல்லும் வழியையும், காஞ்சியில் எங்கு தங்குவது என்பதையும் விவரித்தாள். பல்லவ ஒற்றர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள். அவர்கள் எவ்வாறு கண்காணிப்பார்கள் என்பதை அறிந்துகொள்ள முடியாது என்பதையும், அவர்கள் அறியாமல் காஞ்சியில் எப்படி நடமாடுவது என்பதையும் விவரித்தாள் தேவசோமை.

"தேவசோமை! அரசியல் நுணுக்கங்கள் அனைத்தையும் நீ எவ்வாறு அறிந்திருக்கிறாய்?" என்று தேவி பாராட்டினாள்.

காபாலிகை பெருமூச்சு விட்டவாறு, "அவ்வாறு நான் அறிந்ததன் பலன்தான், ஊர் ஊராக அலையுமாறு ஆகிவிட்டது. வெயில், மழை என்று பாராமல், ஓரிடத்தில் நிலைத்து நிற்காமல் அலைகிறேன். காதலனைக் காஞ்சியில் விட்டு விட்டு வாதாபியில் தவிக்கிறேன். ஆனால், என்றாவது ஒருநாள் அதற்காகப் பல்லவ நாட்டின்மீது என் பழியைத் தீர்த்துக் கொள்வேன். என் வெஞ்சினம் ஒவ்வொரு நாளும் அதிகமாகிறது. சாளுக்கிய மாமன்னரைச் சந்திக்கப்போகிறேன். பல்லவ நாட்டின் மீது படையெடுத்துச் செல்லுமாறு தூண்டப்போகிறேன். அவர் காஞ்சியைக் கைப்பற்றுவார். பல்லவ நாட்டிற்கே மிகப் பெருமையைத் தரும் மாணிக்க வீணையை வாதாபிக்குக் கொண்டு வருவார். என் காதலனையும் சிறைமீட்டுத் தருவார். உன் தந்தையையும் உடன் அழைத்து வருமாறு, நான் அவரிடம் சொல்கிறேன்" என்று அவள் கூறும்போது, அவள் விழிகள் பாதி மூடியிருந்தன. முகத்தில் பரம திருப்தி பரிமளித்தது.



"என்ன சொல்கிறாய் சோமா? பாணத்தால் பல மரங்களைத் துளைக்கப் பார்க்கிறாய். என் தந்தையை மன்னரே மீட்டு வருவாரானால், நான் காஞ்சிக்குச் செல்ல வேண்டிய அவசியமென்ன?" ரத்தினதேவி கேட்டாள்.

"நீ செல்லத்தான் வேண்டும். உன்னால்தான் பல காரியங்கள் ஆகப்போகின்றன. சில காரியங்களுக்குப் படையும் பலமும் ஆயுதமும் அடக்குமுறையும் ஒன்றும் செய்துவிட முடியாது. சக்கரவர்த்தி, தன் படைப்பலம் கொண்டு சில காரியங்களைத்தான் அடைய முடியும். அதனால்தான் உன்னைச் செல்லச் சொல்கிறேன். நான் சொல்லவில்லை. அரசரே சொல்லப் போகிறார். இரத்தினதேவி! இந்தத் தேவசோமை, ஏதோ கற்பனை உலகில் மிதந்து பேசுவதாக நினைக்காதே. வாதாபியினின்று ராஜ சேவகர்கள் உன்னை அழைக்க வருவார்கள். அதற்கு முன்பு பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொள். மனத்தைத் திடப்படுத்திக்கொள். விஷ்ணுதேவனைப் பற்றி எப்போதும் நினைக்காதே..." என்று காபாலிகை சொல்லி வரும்போது, தேவி பரபரப்புடன் அவள் வாயைப் பொத்தி, "அதற்குமேல் பேசாதே; நீ என் உயிர்த்தோழி! அவருடைய வேணுகானம் என்னை மயக்கிவிட்டது. அவர் குழலூத நான் ஆட, ராதையும் கிருஷ்ணனுமாக வாழ்நாளை இன்பமாகக் கழிக்கத் திட்டமிட்டு விட்டேன்" என்றாள்.

காபாலிகை நகைத்தாள். "இசை உன்னைக் கவர்ந்துவிட்டதோ? காஞ்சிக்குச் சென்றால் அங்கே இசைமயமாக இருக்குமே. காஞ்சியை இசைச் சொர்க்கமாக்கிவிட்டார்களே. குழல், யாழ், மத்தளம் என்று எங்கும் ஒலிக்கின்றனவே. உன்னைப்போன்ற அழகிகள், ஊர்தோறும் ஆடப் பழகிவிட்டார்கள். அங்கு கோயிலில் இசை, நாட்டியம். இங்கு வாதாபி கோயில் அழுது வடிகிறது. புதிய கோயில்களைக் கட்டவேண்டும். அங்கே இப்போது வீணையைப் பிரபலப்படுத்தி வருகிறார்கள். நீ காஞ்சிக்குச் சென்றால், இசைக்கு அடிமை ஆகிவிடுவாய். இசையில் மயங்காமல் நீ தப்பி வரவேண்டும். அங்குள்ள இசை, நாட்டியம், சிற்பம், சித்திரம் அனைத்தையும், இங்கு கொண்டு வந்துவிட வேண்டும். அப்படியே சிறைச்சாலைக்குச் சென்று என் காதலனையும் சந்திக்க வேண்டும். இவ்வளவும் நீ செய்ய வேண்டும். உன்னைத் தேடி, உன் வீட்டிற்குச் சென்ற விஷ்ணுதேவன் மறுபடியும் இங்கே வருவதற்குள், நாம் இங்கிருந்து புறப்பட்டு விடுவோம்" என்று பரபரத்தாள் காபாலிகை.

அவள் சொல்லி முடித்தவுடன், "ரத்தினதேவி!" என்ற குரல் கேட்டது.

விஷ்ணுதேவன், அவர்கள் மிக அருகே வந்துகொண்டிருந்தான்.

விஷ்ணுதேவன் வருவதைப் பார்த்தவுடன், காபாலிகைப் பெண் தேவசோமை விரைந்தோடி, அங்கிருந்த அடர்ந்த புதர் அருகே மறைந்து கொண்டாள்.

விஷ்ணுதேவன், ரத்தினதேவி அருகே வந்து, "தேவி, உன்னை எங்கெல்லாம் தேடுவது? இங்கே தனியே அமர்ந்து என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான்.

தன் அருகே காபாலிகை அமர்ந்திருந்ததை, விஷ்ணுதேவன் கவனிக்க வில்லையா! அவன் கண்களுக்கு, அவள் தெரியவில்லையா?

காபாலிகையுடன், தான் பேசிக்கொண்டிருந்த விவரத்தைச் சொல்வதா அல்லது மறைப்பதா? தேவசோமையை, அவன் முன்பே அறிவானா? விஷ்ணுதேவனை, தேவசோமை ஏனோ மிகவும் வெறுக்கிறாள். அதன் காரணத்தை எப்படியும் அறிந்து விடவேண்டும்.

ரத்தினதேவியின் மௌனத்தைக் கண்டு, அதை அறிய விரும்பி விஷ்ணுதேவன், அவள் அருகே அமர்ந்தான். அவன் பேசினான்:

"வழக்கத்துக்கு மாறாக நீ கவலையுடன் இருக்கிறாய். எதையோ நினைத்துக்கொண்டிருக்கிறாய். உன் தாய்க்கு உடல் நலம் சரியில்லை என்று கூறினாயே, அதனாலா?" விஷ்ணுதேவன், மேலும் அவளை நெருங்கினான்.

அவள் என்ன சொல்வாள்? தன் அருகே காபாலிகை இருந்ததை அவர் ஏன் அறியவில்லை? பாசாங்கு செய்கிறாரா?

"என் தாய்க்கு ஏற்பட்டுள்ள உடல்நலக் குறைவு, என்னைக் கவலையில் ஆழ்த்துகிறது. தவிர, என் தாயின் இரண்டு கோரிக்கைகளை எவ்வாறு நிறைவேற்றப்போகிறேனோ என்ற கவலை வேறு..." என்றாள் தேவி.

"உன் தாயின் கோரிக்கை என்னவென்று என்னிடம் சொல்லு. என்னால் முடிந்ததைச் செய்கிறேன்" என்றான் விஷ்ணுதேவன்.

"என் தந்தை காஞ்சியில் இருக்கிறார். அவரை இங்கு அழைத்து வர வேண்டும்; எனக்கு விரைவில் திருமணம் செய்துவைக்க, என் தாய் ஆசைப்படுகிறாள்" என்று கூறிய தேவி, விஷ்ணுதேவனின் முகத்தை நோக்கினாள்.

அவன் அதிர்ச்சியடைந்திருப்பது தெரிந்தது.



"உன் தந்தை காஞ்சியில் இருக்கிறாரா? பகைவர் நாடென்று சொல்லியிருக்கிறாயே?" என்று கேட்கும்போது, அவன் குரலில் பரிதாபம் மிகுந்திருந்தது.

"ஆமாம்... நான் காஞ்சிக்குச் செல்ல நினைப்பதாக முன்பே சொன்னேன், நினைவிருக்கிறதா? என் எண்ணம் இப்போது தீவிரமாகிவிட்டது."

"காஞ்சிக்கு நீ தனியே செல்வதா?"

"ஆம்; அதற்குள் எனக்குத் திருமணம் செய்து வைக்க, என் தாய் ஆசைப்படுகிறாள். எனக்குத் துணையாக என்னை மணப்பவர் வருவார் என்ற தைர்யம் என் தாய்க்கு."

ரத்தினதேவி சொல்வதைக் கேட்டு, விஷ்ணுதேவன் திடுக்கிட்டான். "என்ன சொல்கிறாய் தேவி? உன்னை மணக்கப் போகிறவர் யார்? நான், என் மனதிலிருப்பதை வெளியிட நேரம், காலம் பார்த்துக் கொண்டிருந்தது தவறாகப் போய்விட்டது. என் மீது உனக்குப் பிரியம் இல்லையா? என்னைப்பற்றி உன் தாயிடம் நீ சொல்லவில்லையா? உனக்கும் எனக்கும் ஏற்பட்டுள்ள தொடர்பு கலைக்காக மட்டும்தான் என்று நினைத்துவிட்டாயா? உன் கரம்பற்றத் தகுதியுடையவனில்லையா?" என்று கூறி, அவள் கரத்தைத் தன் கரத்துடன் இணைத்துக்கொண்டான்.

"என் தாயிடம் சொல்லத் தகுந்த நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், காஞ்சிக்கு வர உங்களால் முடியுமா?" – தேவி அவன் விழிகளை உற்று நோக்கினாள்.

விஷ்ணுதேவன், சிறிது நேரம் மௌனமாக இருந்தான். பிறகு, அவள் விரல்களுடன் தன் விரல்களைப் பிணைத்துக்கொண்டு, "தேவி, நான் கனவுகள் பல கண்டு வருகிறேன். நீயும் நானும் மணம் புரிந்து கொண்டால், இருவர் வாழ்விலும் வசந்தம் பூத்துக் குலுங்கும் என்று கற்பனைக் கோட்டைகள் கட்டினேன்" என்று கூறும்போது, அவன் குரலில் ஏமாற்றம் பிரதிபலித்தது.

"உங்களுக்கே, நம்பிக்கையில்லையா?" தேவி கேட்டாள்.

"முழு நம்பிக்கை இருக்கிறது தேவி. ஆனால், காஞ்சி செல்வது என்பது எளிதில் நடைபெறும் காரியமா? வாதாபியில் அதிகாரிகளுக்குத் தெரிந்துவிட்டால்...?" கவலையுடன் கேட்டான் விஷ்ணுதேவன்.

"என் தந்தையை நான் காணக்கூடாது என்கிறீர்களா? என் தாயின் விருப்பத்தை நிறைவேற்றக்கூடாது என்கிறீர்களா?" தேவி அழுத்தம் திருத்தமாகக் கேட்டாள்.

"இல்லை... இல்லை... அப்படிச் சொல்லவில்லை. பகைவர் நாட்டிற்கு நாம் சென்று திரும்ப முடியுமா? என்ற கவலைதான்."

"நமக்கு தேவசோமை உதவுவதாகக் கூறியிருக்கிறாள்" என்று கூறிய தேவி, விஷ்ணுதேவன் முகத்தில் ஏற்படும் உணர்வைக் கூர்ந்து நோக்கினாள்.

அவள் எதிர்பார்த்ததுபோல், விஷ்ணுதேவன் திடுக்கிட்டான்.

"தேவசோமை... அந்தக் காபாலிகைப் பெண்ணைப் பற்றியா சொல்கிறாய்?"

"ஆமாம்; என் அருகில் இவ்வளவு நேரம் இருந்து பேசிக்கொண்டிருந்தாளே, அவளைத்தான் சொல்கிறேன். நீங்கள் பார்க்கவில்லையா?" என்று தேவி கேட்டாள்.

"இல்லை தேவி. உன்னை நெருங்கி வரும்போது நீ மட்டும்தான் இருப்பது தெரிந்தது. தேவசோமை இருந்திருந்தால், நான் வந்திருக்க மாட்டேன்" என்று விஷ்ணுதேவன் கூறினான்.

"ஏன்... தேவசோமையை முன்பே உங்களுக்குத் தெரியுமா? அவள் என் தோழி. என்னைத் தேடி அவள் இங்கு வந்தாள். அவள் என்னுடன் பேசிக்கொண்டிருந்ததை நீங்கள் நிச்சயம் பார்த்திருக்க வேண்டும். அவள் உங்கள் கண்களில் படவில்லையா?" என்று ரத்தினதேவி கேட்டாள்.

அதற்கு விஷ்ணுதேவன் கூறிய மறுமொழியும், தேவசோமையை பற்றிக் கூறியதும் கேட்ட ரத்தினதேவி அதிர்ச்சியடைந்தாள்.



# 23

காஞ்சி நகரத்திற்கு எப்படியும் செல்வது என்ற முடிவுக்கு வந்துவிட்டாள் ரத்தினதேவி. தாய் அருகே அமர்ந்து, தன் எண்ணத்தைத் தெரிவித்தாள். விஷ்ணுதேவனிடம் தனக்கு மலர்ந்துள்ள காதலையும் விவரித்தாள்.

மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த ரத்தினதேவியின் தாய், அழுத்தந்திருத்தமாகக் கூறினாள். "தேவி, நீ காஞ்சிக்குச் செல்வதில் எனக்கு ஆஷேபணையில்லை. ஆனால், நீ காதலிக்கும் குழல் கலைஞரை மறந்துவிடு."

ரத்தினதேவி அதிர்ச்சி அடைந்தாள். தன் காதலுக்குத் தாயின் வாழ்த்து கிடைக்கும்; நல் ஆசியுடன் தன்னை வழியனுப்பிவைப்பாள் என்று எண்ணினாள். தனியே காஞ்சி மாநகர் செல்லத் தடை விதிப்பாள் என்று எண்ணினாள். 'சில நாட்களிலேயே திருமணம் முடித்து, துணைக்குக் கணவரையும் அழைத்துச் செல்' என்று தெரிவிப்பாள் என எண்ணினாள். தாயின் மனப்போக்கு, அவளுக்குப் புரியவில்லை.

விஷ்ணுதேவனைப் பற்றி தேவசோமை தன் தாயிடம் ஏதாவது சொல்லியிருப்பாளோ என்ற ஐயம் ஏற்பட்டது. தேவசோமையிடம் விவாதித்து, விரோதித்துக்கொள்ளவும் விருப்பமில்லை. காஞ்சிக்குச் செல்ல அவளுடைய துணை தேவை என்பது அவளுக்குத் தெரியும். விஷ்ணு தேவனுக்கும், தேவசோமைக்கும் உள்ள பிணக்கு, தன் காதலுக்கு இடையூறாக அமைந்து, பல தொல்லைகளை ஏற்படுத்திவிடுமோ என்று அஞ்சினாள்.

தாயின் மனத்தை மாற்ற விரும்பி, சற்று அமைதியுடனும் அன்புடனும், "அம்மா, தங்களை காபாலிகைப் பெண் சந்தித்தாளா?" என்று கேட்டாள்.

"ஆமாம்; இப்பொழுது சில நாள்களாக தினமும் என்னை வந்து பார்க்கிறாள். என் உடல் நலம்பெற சிவபெருமானைத் துதிக்கிறாள். அவள் தந்த மூலிகையால், என் உடல் நோய் சிறிது குறைந்திருக்கிறது. அவள் நல்ல பெண். பாவம்; ஊர் நாடு என்று ஓரிடம் தங்காமல் அலைகிறாள். அவள் உடையும், அவள் கொள்கையும் எனக்குப் பிடிக்கவில்லை. சுடுகாட்டில் நடமாடும் சிவபெருமானை, அவள் நேரே காண்பதற்காகத் தவம்

புரிவதாகச் சொல்கிறாள். காபாலிகர்களுக்குத் தொல்லை தரத் தொடங்கியதால், பல்லவ அரசர்கள் மீது அவளுக்குக் கடுங்கோபம். நியாயம்தானே? நம் அரசியிடம் மிகுந்த மரியாதை வைத்திருக்கிறாள். அரசியை அடிக்கடி சந்திக்கிறாள். வாதாபிக்கு மாணிக்க வீணையைக் கொண்டு வரவேண்டும் என்பதில் அவளுக்கு உள்ள ஆர்வம், என்னை வியப்படையச் செய்தது" தாய் பேசிக் கொண்டே செல்வதைப் பார்த்த வுடன், தன் பேச்சுத் திறமையால் தேவசோமை தன் தாயை வசீகரித்து விட்டாள் என்பதைப் புரிந்துகொண்டாள் தேவி. விஷ்ணுதேவனைப் பற்றியும் அவள் சொல்லியிருப்பாள். அதனால்தான் தன் காதலை ஒப்புக்கொள்ள மறுக்கிறாள், தடுக்கிறாள்.

தாயிடம் அதைப்பற்றிக் கேட்டுவிட விரும்பினாள். "அம்மா, காபாலிகை தேவசோமை, என் உயிர்த்தோழி. காஞ்சி நகர் செல்ல என்னை அவள்தான் வற்புறுத்தினாள், உற்சாகப்படுத்தினாள். தானும் உடன் வருவ தாகச் சொல்லியிருக்கிறாள்" என்று பேச்சைத் தொடங்கினாள்.

"தேவசோமை மிகவும் துணிவுடையவள். பெண்ணாக இருந்தா லும் அவள் நூறு ஆணுக்குச் சமம்" என்று கூறிய தாய், மெல்லிய குரலில், "தேவி, அவளிடம் சூலாயுதம் இருக்கிறது. அவளுடைய தோளில் தொங்கும் பையில் அது இருக்கிறது. கூரிய முனைகளையுடைய அந்தச் சூலாயுதத்தை, நொடியில் வேல் கம்பியில் சொருகிவிடுகிறாள். இணைக் கப்பட்ட சிறு சிறு பாகங்களாக, அந்த இரும்பாலான கோல் அவள் பையில் இருக்கிறது. அவள் கை நகங்கள், புலியின் நகம்போல் கூர்மையானவை. சடை பிடித்த கூந்தலுடனும், அழுக்கு ஆடையுடனும் இருந்தாலும், சிரிக்கும்போது அதில் குழந்தைத்தனம் இருக்கிறது. பளிச்சென்ற பற்கள், நெற்றியில் சுடலைத் திருநீறு; அதன் நடுவே ஒழுங்காக இடப்படாத குங்குமப் பொட்டு. விழிகளில் பயங்கரமிருந்தாலும், அந்தப் பார்வையில் கனிவு இருக்கிறது. பேசும்போது பழிவாங்கும்தன்மை தெரிகிறது."

தேவசோமையைத் தன் தாய் வர்ணிப்பதில், ரத்தினதேவிக்குப் பெருமைதான் என்றாலும், இவ்வளவு நாட்கள் அவளைப்பற்றிப் புகழ்ந்து ஒரு வார்த்தைகூடச் சொல்லாத தாய், இப்போது அங்கம் அங்கமாக வர்ணிக்கிறாளே? ஏன்?

மேலும் தாய் தொடர்ந்தாள், "தேவி, நீ காஞ்சிபுரம் செல்வதில் எனக்கு எள்ளளவும் சம்மதமில்லை. தேவசோமையும் உன்னுடன் வருவது உறுதி என்றால், நீ செல்லலாம். உன் தந்தையைச் சந்திக்கக் காஞ்சி செல்வதில் எனக்கு மகிழ்ச்சி. அந்தக் குழலூதும் விஷ்ணுதேவனை நீ மறந்து விடுவ தற்கு ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படும் என்பதில், எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி" என்று தாய் சொன்னபோது, ரத்தினதேவிக்குத் தாயிடம் கோபம் ஏற்பட்டது.



"அம்மா! விஷ்ணுதேவனை உங்களுக்கு முன்பே தெரியுமா? அவரிடம் உங்களுக்கு வெறுப்பு ஏற்படுவதற்கு என்ன காரணம்?" என்று கேட்டாள் தேவி.

"உன் நன்மைக்குத்தான் நான் சொல்கிறேன். விஷ்ணுதேவனை எனக்குத் தெரியும். அவன் சகோதரனையும் அறிவேன். தேவசோமைக்கு அவன் பல தொல்லைகள் கொடுத்திருக்கிறான்..." என்று சொல்லும்போது, தேவி குறுக்கிட்டு, "அம்மா, தேவசோமை எல்லாவற்றையும் சொல்லி விட்டாளா? அவள், விஷ்ணுதேவனைத் தவறாகப் புரிந்து கொண்டிருக் கிறாள். எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது. தேவசோமையையும் நான் விலக்கிடமுடியாது. விஷ்ணுதேவன் மீது கொண்டுள்ள காதலையும் என்னால் மறக்கமுடியாது. நீங்கள்தான் என்னை இந்தக் குழப்பத்திலிருந்து விடுவிக்க வேண்டும்" என்று கூறும்போது, அவள் குரல் தழுதழுத்தது.

ரத்தினதேவியின் தாய் மௌனமாக இருந்தாள். "சாளுக்கிய நாட்டை விட்டு நீ, பகை நாடான பல்லவ நாட்டிற்குச் செல்வதென்றால், சக்கரவர்த்தி யின் அனுமதியைப் பெறவேண்டும். நீ காஞ்சி செல்வதன் காரணம், நோக்கம் இவற்றைச் சக்கரவர்த்தியிடம் சொல்லிவிட்டாயா?" என்று கேட்டாள்.

"நான் விரைவில் சக்கரவர்த்தியைச் சந்திப்பேன். அரசர் என்னை அழைக்கப்போவதாக தேவசோமை சொல்லியிருக்கிறாள்!" என்றாள். தொடர்ந்து தாயைச் சமாதானப்படுத்தும் குரலில், தன் காதலுக்கு ஆசி வழங்குமாறும், காஞ்சி செல்லும் முன்பு, திருமணத்தை முடித்துக் கொண்டு தன் கணவருடன் செல்ல அனுமதிக்குமாறும் மிகவும் வேண்டி னாள். 'தேவசோமையைக் கேட்டுச் சொல்கிறேன்' என்று தாய் கூறியவுடன், ரத்தினதேவிக்கு அந்தக் காபாலிகைப் பெண்ணின் மீது ஆத்திரம் ஏற்பட்டது. உயிர் சிநேகிதி என்று எண்ணியவள், ஆருயிரைப் பிரித்துவிடுவாள் போலிருக்கிறதே! தேவசோமையைச் சந்தித்தாள்.

"உனக்கு விஷ்ணுதேவனின் மீது ஏதோ கோபம்; அதற்காக, அவர் மீது வெறுப்பு ஏற்படுமாறு என் தாயிடம் சொல்லி இருக்கிறாயே, நியாயமா? உன் பேச்சைக் கேட்டு என் காதலுக்கு முட்டுக்கட்டைப் போடுகிறாள் என் தாய். விஷ்ணுதேவனை என்னால் மறக்க முடியாது. விஷ்ணுதேவனை மறக்கவில்லை என்றால், என் தாயிடமிருந்து நான் பிரிந்தாக வேண்டும். தாயைவிட்டு விலகி, தந்தையைத் தேடி அழைத்து வர, நான் காஞ்சிக்குச் செல்வதில் ஏது அவசியம்?" என்று தேவசோமையை நோக்கி மிகவும் ஆத்திரத்துடன் கேட்டாள்.

தேவசோமையிடம் வழக்கத்துக்கு மாறாகப் புன்சிரிப்பு எழுந்தது. அதில் விஷமத்தனம் நிறைந்திருந்தது.

"தேவி, உன் தந்தையைச் சந்தித்து அழைத்து வருவதற்காக மட்டும் நீ காஞ்சிபுரம் செல்லவில்லை. மாணிக்க வீணையைக் கொண்டு வந்து சாளுக்கியச் சக்கரவர்த்தியிடம் அளிக்கப் போகிறாய். இந்த நாட்டிற்கு நீ செய்யும் சேவை மகத்தானது. சாளுக்கிய நாட்டிற்கு நீ செய்யும் சேவை மகத்தானது. சாளுக்கிய நாட்டிற்கு வந்த மகேந்திரவர்மன், மாறுவேடத்தில் பரிவாதினி வீணையை இங்குதான் உருவாக்கினார். அந்த வீணை மீண்டும் உரிய இடத்தில் வந்து சேர்கிறது என்றால், அது உன்னால்தான் என்பதை அறிந்து, நாட்டு மக்கள் உன்னைப் போற்றுவார்கள். உனக்குச் சிறந்த வெகுமதிகளைச் சாளுக்கிய அரசர் வழங்குவார். வாதாபி நகரத்திலே உன் பெருமை, அந்தஸ்து மிகவும் உயர்ந்துவிடும். உன்னை மணப்பதற்குப் பெரும் தனவந்தர்கள் போட்டியிடுவார்கள். விஷ்ணுதேவனை நீ மறந்துவிடு. உன் அழகில் மயங்கி, அவன் உன்னைக் காதலிப்பதுபோல் நடிக்கிறான். தன் பசிக்கு உன்னைப் பயன்படுத்திய பிறகு, உன்னை விட்டுவிடுவான். அவன் ஒரு வண்டு. அவன் காமாந்தகன்; அது மட்டுமன்று; அவனுக்குப் பார்வைக் கோளாறு, கொடிய நோய் ஒன்று அவனைப் பற்றியிருக்கிறது. இன்னும் சிறிது நாட்களில் அவன் விழிகளை இழந்துவிடுவான். நான் வணங்கும் காபாலீச்வரன் அவனைத் தண்டித்துவிடுவான்."

தேவசோமையின் பேச்சு, ரத்தினதேவிக்குக் கோபம் பொங்கிவரச் செய்தது.

"நிறுத்து, தேவசோமை! உன் அவதூறு நிறைந்த பேச்சை, இனி ஒரு நொடிகூட நான் கேட்கமாட்டேன். விஷ்ணுதேவன் விழிகள் இழந்தால், நான் அவருக்கு விழியாயிருப்பேன். அவர் குழலோசையைக் கேட்டு, என் வாழ்நாளைக் கழிப்பேன். அவர் கரங்களைப் பொன்போல் பாதுகாப்பேன். நான் ஓர் உறுதியான முடிவுக்கு வந்துவிட்டேன். நான் விஷ்ணுதேவனை மணம் புரிந்து கொள்வேன்; காஞ்சிபுரமும் செல்வேன்" என்று உறுதியாகக் கூறினாள்.

தேவசோமை, தலையை அசைத்தவாறு சிரித்தாள்.

"என் அருமைத் தோழி ரத்தினதேவி! உன் உறுதியை நான் பாராட்டுகிறேன். நீ யாரை வேண்டுமானாலும் மணந்துகொள். உன் தலைவிதியை மாற்ற என்னால் முடியாது. அரச மாளிகையினின்று உனக்கு அழைப்பு வரும். காஞ்சி செல்ல அவர்கள் உனக்கு உதவுவார்கள். நான் உன்னுடன் காஞ்சிக்கு வரப்போவதில்லை" என்றாள்.

தேவசோமை கூறியதைக் கேட்டு, தேவி திடுக்கிட்டாள். தேவசோமையின் உதவியில்லாமல் காஞ்சிப் பயணம் பெரும் தொல்லைகளைத் தரும் என்ற கவலை, அவளைச் சூழ்ந்தது.

# 24

காபாலிகை தேவசோமை, சாளுக்கிய அரசி லோகமாதேவியைச் சந்திக்க வந்தபோது, சாளுக்கிய அரசர் விக்கிரமாதித்தனும் அங்கு வீற்றிருந்தார்.

"சாளுக்கிய சக்கரவர்த்தியுடன் அந்தரங்கமாகப் பேசிக்கொண்டிருக்கும் வேளையில் நான் வந்துவிட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள்; பிறகு வருகிறேன்" என்று கூறிப் புறப்பட எத்தனித்த காபாலிகையை, லோகமாதேவி, போக வேண்டாம் என்று சைகை செய்தாள்.

காபாலிகையிடம் அரச இலட்சினை இருந்ததால், மாளிகைக்குள் எந்த நேரத்திலும் அவளால் நுழைய முடிந்தது. அரசியின் அபிமானத்தைப் பெற்று விட்டவள் என்பதைப் புரிந்து கொண்டதால் காவலர்கள் தேவசோமையைத் தடுப்பதில்லை. தேவசோமையின் தோற்றமும், ஒருவருக்கும் பயப்படாத பேச்சும், அவளிடம் நெருங்கவே ஒருவருக்கும் துணிவில்லை. மிகவும் அபூர்வமாகிவிட்ட காபாலிக சமயத்தினர்களின் நடவடிக்கைகள், அச்சத்தை அளித்தது. காபாலிக சமயத்தைச் சேர்ந்த பெண்கள் சாளுக்கிய நாட்டில் வேறு ஒருவரும் அப்போது இல்லாததால், கொடிய நாகம் என்று அவளை வர்ணித்தனர். மந்திர தந்திரம் அறிந்தவள் தேவசோமை என்று அஞ்சி, அவளை நெருங்கவே பயந்தனர்.

"இறைவன் எங்கெல்லாம் அழகை வைத்திருக்கிறார் பார்த்தாயா?" என்று விக்கிரமாதித்தன், லோகமாதேவியிடம் கேட்டிருக்கிறார்.

"காலம், நேரம் பாராமல் அலைகிறாள்; கிடைத்ததை உண்கிறாள். கல்லிலும், தரையிலும் படுத்துறங்குகிறாள். நாம் அணுகவே அச்சப்படும் சுடுகாட்டிலே திரிகிறாள். அப்படியிருந்தும் அவள் எழில் குறையவில்லை, மேனி வாடவில்லை. அந்த இரகசியம் புரியவில்லை" என்று லோகமா

தேவியும் வியப்புடன் கூறியிருக்கிறாள் அரசரிடம். மேலும், அவள் கவலையுடன் சொன்னாள்: "அழகுள்ள ஒரு பெண், துணையின்றித் தனியே எவ்வாறு நாட்டில் நடமாட முடிகிறது?"

விக்கிரமாதித்தன் பெரிதாகச் சிரித்தார். "அழகாயிருந்தால் சாளுக்கிய நாட்டில் ஆபத்து என்றா சொல்கிறாய்?"

"காமுகர்கள் எந்த நாட்டிலும் இருக்கிறார்கள். செல்வாக்கு மிகுந்த வர்களாகவும் அவர்கள் இருந்துவிட்டால், பெண்கள் அவர்களிடமிருந்து தப்ப முடியாது. அந்தத் தீச் செயல்கள் அரண்மனைக்கு வேண்டப் பட்டவர்களிடமிருந்து தொடங்குகிறது" என்று லோகமாதேவி கூறினாள்.

விக்கிரமாதித்தன் சிரித்தார், "அரசன் காமுகனாக இருந்தால் மக்களும் அப்படியிருப்பதில் துணிவு கொள்கிறார்கள். தேவிக்கு என்னைப் பற்றித் தெரியும்" என்றார் கண் சிமிட்டியவாறு.

"நம் நாட்டைப் பொறுத்தவரை பெண்களுக்கு எந்தத் துன்பமும் நேராது" என்று சமாதானமாகக் கூற விரும்பிய அரசரை நோக்கிச் சற்றுக் கடுமையான குரலில், "நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். எவ்வளவோ ஏழைப் பெண்கள், தங்களுக்கு ஏற்பட்ட அவமானத்தை வெளியே சொல்ல முடியாமல் நொந்து நொந்து மாய்ந்து போயிருக்கிறார்கள். உங்கள் கவனத் துக்கு அவை வராமல் போயிருக்கலாம். அவர்கள் அழுத கண்ணீர் நம்மைச் சும்மாவிடாது" என்றாள்.

இன்று அரசியின் மனத்தில் ஏதோ ஓர் சம்பவம் நினைவுக்கு வந்திருக்க வேண்டும். அதனால்தான் கோபத்துடன் பேசுகிறாள் என்ற முடிவுக்கு வந்த விக்கிரமாதித்தன், தேவியின் தோளைத் தழுவி, மெல்லத் தன் பக்கமாக அணைத்து, "லோகமாதேவி, திடீரென நாட்டு மக்கள்-ஏழைகள் என்று என்னென்னவோ பேசுகிறாயே, அவர்களுக்கு என்ன நேர்ந்துவிட்டது? நம் நாட்டில் எந்தப் பெண்ணுக்குக் கொடியவர்களால் தொல்லை ஏற்பட்டது? என் கவனத்திற்கு வந்திருந்தால், நான் குற்றவாளியைத் தண்டிக்காமல் இருந்திருப்பேனா? நீ அறிந்திருந்தால், நீயே நடவடிக்கை எடுத்திருக்கலாம்; அல்லது என்னிடம் தெரிவித்திருக்கலாம்."

லோகமாதேவி சொன்னாள்: "காபாலிகை தேவசோமை, தனக்கு ஏற்பட்ட துன்பத்தை என்னிடம் முறையிட்டாள்."

"ஓ! பல்லவ நாட்டில் அவளுக்கு – அவள் சேர்ந்திருக்கும் காபாலிகத்திற்கு இடர்ப்பாடு ஏற்பட்டது. காபாலிகர்கள், பைரவர்கள், சமணர்கள், பௌத்தர்கள் என்ற அனைவரையும் அங்கே தலைதூக்காமல் செய்துவிட்டார்கள். நாம் அவ்வாறு செய்தோமா?" என்று விக்கிரமாதித்தன் கேட்டார்.



"ஆனால், தேவசோமைக்கு நம் நாட்டில்தான் தொல்லை ஏற்பட்டது."

"தேவசோமையிடம் முறைகேடாக நடக்கவும் ஒருவன் துணிந்தானா?"

"தேவசோமையாக அவள் இருந்ததால்தான், அவள் பிழைத்தாள். மற்ற பெண்களாக இருந்தால், காமுகனின் பசிக்குப் பலியாகியிருப்பாள். அந்தக் கயவன் இன்றும் நம் நாட்டில் உலவுகிறானாம்." அரசி இவ்வாறு கூறியதும், விக்கிரமாதித்தன் நிமிர்ந்து உட்கார்ந்து, "யார் அந்தக் கொடியவன்? சொல். இப்போதே அவனைத் தேடிப்பிடித்து தண்டனை அளிக்கிறேன்" என்றார், சற்றுக் கோபத்துடன்.

"சந்திரதத்தன் என்று பெயர் குறிப்பிட்டுத் தேவசோமை சொல்லியிருக்கிறாள். தேவசோமை, பல்லவ நாட்டிலிருந்து வாதாபிக்கு வந்து சேர்ந்தாள். அவளை மணக்க இருந்தவன் காஞ்சியிலேயே தங்கிவிட்டான். அவனுக்குக் காபாலிக சமயத்தில் பற்றில்லை. தேவசோமை தனியாக வாதாபியில் அலைவதைப் பார்த்த சந்திரதத்தன், அவளை அடையத் திட்டமிட்டான். அரண்மனைப் பாடகன், குழலூதும் விஷ்ணுதேவன் பொய் சொல்லி ஏமாற்றி, தேவசோமையிடம் பழகச் செய்திருக்கிறான். அதற்காக காபாலிகர்கள் போல் நடையுடை பாவனைகளைக் கற்றுக் கொடுத்தான் விஷ்ணுதேவன். அவர்களுடைய கூட எண்ணம் அறியாமல், தேவசோமை பழகினாள். சாளுக்கிய நாட்டில் காபாலிகத்தைப் பரப்ப வேண்டும் எனும் துடிப்புடன் தேவசோமை செயலாற்றியதால், சந்திரதத்தனின் சூழ்ச்சியை அறியவில்லை."

அரசி விவரித்து வருவதைக் கேட்டுக்கொண்டிருந்த விக்கிரமாதித்தன் குறுக்கிட்டு, "மீதிக் கதையை நான் சொல்லிவிடுகிறேன்" என்று பேச முற்பட்டபோது, அரசி சற்றுக் கோபத்துடன், "கதை, என்றா சொல்கிறீர்கள்? காபாலிகை விவரித்தவை கதை, கற்பனையல்ல; உண்மை நிகழ்ச்சி; அவள் பொய் சொல்லமாட்டாள்" என்றாள்.

விக்கிரமாதித்தன் அரசியைச் சமாதானப்படுத்தி, "கேட்ட செய்தியை நீ விவரித்தவிதம் கதை போல் இருந்தது; அதனால் கதை என்றேன். கதையின் முடிவு இப்படித்தான் இருக்க வேண்டும் என்பது தெரிந்த விஷயம்தானே! ஒரு நாள் காபாலிகை உண்மையை அறிந்தாள், பொங்கி எழுந்தாள், பெண்புலி எனச் சீறினாள், அப்படித்தானே!" என்று தேவியை அணைத்தவாறு சொன்னார்.

"இல்லை... இல்லை... தேவசோமையைக் கல்யாணம் செய்து கொள்ளக் காத்திருக்கும் அவள் காதலன் காஞ்சியில் இருந்தான். அவனைச்

சந்திக்கக் காஞ்சி போக விரும்பிய தேவசோமை, சந்திரதத்தனிடமிருந்து தப்பிக்க விரும்பி, வேறு எங்கோ சென்றுவிட்டாள். சில ஆண்டுகள் கழித்து இப்போது வாதாபிக்கு வந்திருக்கிறாள். சந்திரதத்தன் மீண்டும் தொல்லை கொடுக்க மாட்டான் என்பது என்ன நிச்சயம்?" அரசி கேட்டாள்.

இவை நடந்த சில நாட்களுக்குப் பிறகு, அரசியை சந்திக்க தேவசோமை வந்த போது விக்கிரமாதித்தன் கேட்டான்: "தேவசோமை, இப்போது எதற்கு வந்திருக்கிறாள்?"

மாணிக்க வீணையைக் கொண்டுவர ரத்தினதேவியை காஞ்சிக்கு அனுப்ப ஏற்பாடு செய்வதாக தேவசோமை கூறியிருந்தாள். அதைப்பற்றிப் பேச வந்திருக்கலாம். பல்லவ நாட்டிற்குத் தனியே ஒரு பெண் செல்வது என்றால், நமது அனுமதியும் பாதுகாப்பும் இல்லாமல் முடியுமா?" என்றாள் அரசி.

விக்கிரமாதித்தன் சிறிது யோசித்தார். "முன்பே காஞ்சி சென்ற சாலினி, அங்கேயே ஐக்கியமாகி விட்டாள். இதுபோல் நமது கலைஞர்கள் நமக்கு உதவும் எண்ணத்துடன் அங்கு சென்று, அங்கு தங்கிவிடுவதால் நமக்கு நஷ்டம்தானே? பல்லவ நாட்டிலிருந்து சிற்பிகளை அழைத்துவர மிகுந்த பிரயாஷை எடுத்தோம். இப்போது இங்குள்ள நாட்டியக் கலைஞர் களை அங்கு அனுப்புவது சரியெனத் தோன்றவில்லை."

தேவசோமையிடம், விக்கிரமாதித்தன் சில கேள்விகளைக் கேட்டார். பிறகு, ரத்தினதேவி காஞ்சி செல்லக்கூடாது என்று, அவளிடம் தெளிவாகக் கூறிவிட்டார். மாணிக்க வீணையைக் கொண்டுவரும் பொறுப்பை, தேவசோமையே ஏற்க வேண்டும் என்று உறுதியாகக் கூறிவிட்டார்.

சாளுக்கிய அரசரிடமிருந்து ரத்தினதேவிக்கு அழைப்பு வந்தது. காஞ்சி செல்வதைக் குறித்து கட்டளையிட அரசர் அழைக்கிறார் என்ற எண்ணத்தில், அவள் மாளிகைக்குச் சென்றாள். ஆனால், அங்கு நிகழ்ந்ததோ வேறு. ரத்தினதேவி காஞ்சிக்குச் செல்வதை சாளுக்கிய அரசர் ஏற்கவில்லை. செல்லக்கூடாது என்று கண்டிப்பாகத் தடுத்துவிட்டார்.

தன் தந்தையை எப்படியாவது சந்திக்க வேண்டும் எனும் ஆர்வம் ரத்தினதேவிக்கு மிகுந்தது. எடுத்த முயற்சியினின்று பின்வாங்கக் கூடாது என்று, ரத்தினதேவி அரசரின் கட்டளையை மீறிப் புறப்பட்டாள். தேவசோமை, காஞ்சிக்குச் செல்வதை சந்திரதத்தன் அறிந்தான். விஷ்ணு தேவனின் உதவியை அவன் நாடினான்.

# 25

ரத்தினதேவியின் வருகைக்காக, மாலப்பிரபா நதிக்கரை மண்டபத்தில் காபாலிகை தேவசோமை காத்திருந்தாள். பொழுது சாய்ந்து இரவு வந்தது. கரிய வானத்தில் நட்சத்திரங்கள் மின்னின. பஞ்சமி சந்திரன், மெல்ல மெல்ல வானத்தே இறங்கிக் கொண்டிருந்தான். தேவியை எதிர் பார்த்துக் காத்திருந்த தேவசோமையின் விழிகள் சோர்ந்தன. உறக்கமும் பசியும் அவளை வேதனைப்படுத்தின. காலை உணவுக்காகக் கையிலே கொண்டு வந்திருந்த உணவு மூட்டையை அவிழ்த்துத் தன் பங்கை அள்ளிப் போட்டுக்கொண்டாள். படி இறங்கி, சலசலவென்று ஓடும் ஆற்று நீரில், வேண்டிய மட்டும் பருகினாள். தூக்கத்தைக் கலைக்க முகத்தில் நீரை அள்ளித் தெளித்துக்கொண்டாள். மீண்டும் ஆற்றங்கரை மண்டபத் திண்ணையில் அமர்ந்துகொண்டாள். விடியற்காலை குளிர்ந்த காற்று அவளைத் தாலாட்டியது. சற்றுக் கண்ணயர்ந்தாள். அருகே யாரோ அமர்ந்திருப்பதுபோல் தோன்றவே, திடுக்கிட்டு விழித்தாள். சந்திரதத்தன், அவள் அருகே நெருங்கி அமர்ந்திருந்தான். கரத்தை மெல்லத் தொட்டான்.

"நீயா?" என்று சீறினாள்.

சந்திரதத்தனின் பளிச்சென்ற பல் வரிசை தெரிந்தது. "தேவ சோமை, நீ காஞ்சிக்குப் போகவேண்டாம். நாம் இங்கேயே இருப்போம். .வாதாபி பிடிக்கவில்லை என்றால், நாம் இருவரும் வேறு எங்காவது சென்று விடுவோம்" என்று குழைந்தான்.

தேவசோமைக்கு ஏற்பட்ட கோபத்திற்கு அளவில்லை. பெண் புலியெனச் சீறினாள். "சீ... தள்ளிப் போ! என் அருகே நெருங்க உனக்குத் துணிவு எப்படி வந்தது?"

"இன்னும் கோபம் தீரவில்லையா தேவசோமை? உன் தோழி ரத்தினதேவி, என்னைப் பற்றி நிறைய சொல்லியிருப்பாளே? சமாதானப்

படுத்தவில்லையா? நான் உன்னை உண்மையிலேயே காதலிக்கிறேன்"– சந்திரதத்தன் நெருங்கினான்.

காபாலிகை துள்ளி எழுந்தாள். "எனக்குத் தீங்கு விளைவித்தது போல், என் அருமைத் தோழி ரத்தினதேவியையும் விஷ்ணுதேவன் ஏமாற்ற முயல்கிறான்! இனி அவள் வாதாபியில் இருக்கமாட்டாள். அவளும் நானும் காஞ்சிக்குச் செல்கிறோம். தன் தந்தையை அவள் விடுவிக்கப் போகிறாள். அவள் வருகைக்காகக் காத்திருக்கிறேன். அவள் எங்கே? நீ ஏன் வந்தாய்?"– அவள் குரலில் பொங்கிய கோபம், எளிதில் தணிவதாகத் தெரியவில்லை.

சந்திரதத்தன் சிரித்தான். காமமும், கபடமும் பின்னிய குரலில், "அவள் வரமாட்டாள்" என்றான்.

"ஏன் வரமாட்டாள்? அவளை யாரும் தடுக்க முடியாது. காஞ்சி செல்வதில் அவள் மிகுந்த ஆவலுடன் இருக்கிறாள்." தேவசோமை பரபரப்புடன் பேசினாள்.

"அவள் வரமாட்டாள். அவள், விஷ்ணுதேவனுடன் தங்கி இருக்கிறாள்." மீண்டும் சந்திரதத்தன் சிரித்தான்.

"என் வாழ்க்கையில் நீ குறுக்கிட்டதுபோல், ரத்தினதேவி வாழ்க்கையில் நீ குறுக்கிட்டுச் சதி செய்கிறாயா?"

"இல்லை… உன்னை நான் விரும்பினேன். உனக்காக நான் மதம் மாறினேன். ஆனால், உன் வாழ்க்கையை நீயே கெடுத்துக்கொண்டாய்." ரத்தினதேவியின் மனத்தைக் கலைக்காதே. பெண்களுடன் விளையாடாதே." தேவசோமை ஆத்திரம் கொப்பளிக்கப் பேசினாள்.

"உன்னைப்போல் ரத்தினதேவி யாருக்கும் அடங்காதவள் அல்லள் சுடுகாட்டுப் பேய்த்தனம் உன்னைப் பிடித்துக்கொண்டது. அவள், தன் தாய் சொல்லைத் தட்டமாட்டாள். உனக்குத் தெரியுமா? சாளுக்கிய மாமன்னர், காஞ்சி போகக்கூடாது என்று உத்திரவிட்டுவிட்டார். அவள் புறப்படும்போது, வீரர்கள் அவளை அரசரிடம் அழைத்துச் சென்றனர். வீணாக அவளுக்காக இங்கே காத்திருக்காதே. வா, நாம் இன்பமாக வாழலாம்."

"பொய்… பொய். மாணிக்க வீணையைக் கொண்டு வர, ரத்தினதேவி காஞ்சிக்கு என்னுடன் வருவதாக உறுதியளித்திருக்கிறாள். தன்னுடன் வருமாறு என்னை வற்புறுத்தியிருக்கிறாள்."

"அவள் வரமாட்டாள். விஷ்ணுதேவனுடன் அவள் நேற்று இரவு உல்லாசமாக இருந்தாள். வாழ்க்கையைப் புரிந்து கொண்டவள். உன்



தோழி, இன்பத்தை அனுபவிக்கும் இள வயதில், உன்னைப்போல் காடு, மலையெல்லாம் அலையமாட்டாள். தேவசோமை, நான் சொல்வதைக் கேள். இன்னும் பத்து நாள்களில் நாம் இங்கிருந்து இன்னும் வடக்கே சென்றுவிடுவோம். நீ விரும்புவதுபோல் உஜ்ஜயினி செல்வோம். பௌர்ணமி நாளில், மனித சஞ்சாரமற்ற இடத்தில், பூர்ண இன்பம் அனுபவிப்போம். சாகும்வரை நீயும் நானும் இணைபிரியாதிருப்போம். மாணிக்க வீணையைத் தேடி வீணே அலையாதே. நாம் புதிதாக வீணையைச் செய்வோம்; மீட்டுவோம்; இன்ப நாதம் எழுப்புவோம். வா, வா… இன்னும் இருள் பிரியவில்லை; இங்கேயே இந்த மண்டத்தில்…" சந்திரதத்தன், தேவசோமையைத் தாவி அணைக்க முயன்றான்.

கணத்தில் அவள் விலகிக்கொண்டாள். தடுமாறி விழுந்த சந்திரதத்தனைத் தன் வலது காலால் எட்டி உதைத்தாள். இமைக்கும் நேரத்தில் தன் பையினின்று சூலாயுதத்தை எடுத்துப் பூட்டி, கடுங் கோபத்துடன் அவன்மீது பாய முயன்றாள். அவள் தள்ளிய வேகத்தில் நிலைதடுமாறிய சந்திரதத்தன், படிக்கட்டருகே வீழ்ந்தான். தணியாத கோபத்துடன், ரீங்காரமிட்டு அவள், "ஏய், உன்னை விடமாட்டேன். உன் குடலைக் கிழித்து இரத்தம் குடிக்காமல் உறங்கமாட்டேன்" என்று பாய்ந்து ஓடினாள். அதற்குள் அவன் படிக்கட்டுகளில் உருண்டு உருண்டு, ஆற்று நீர் செந்நிறமாகக் காட்சியளித்தது.

"ஒழிந்தாயா, மோசக்காரா!" என்று முணுமுணுத்த தேவசோமை, சூலாயுதத்தைக் கையில் ஏந்தியபடி விரைந்தாள். வாதாபி எல்லை வரையில் ஓட்டமும் நடையுமாகச் சென்றாள். பொழுது புலர்ந்து, மெல்லிய இருள் விலகுவதற்கு வழி தேடிக்கொண்டிருந்த வேளையில், அவளுடைய தோற்றத்தைப் பார்த்த சிலர் நடுங்கி ஓட்டம் பிடித்தனர்.

வெயில் ஏறியது. களைப்பு மிகுதியால், வழியில் ஓர் மரத்தடியில் இளைப்பாறினாள். அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி மெல்லக் குறைந்தது. சற்று உறங்கினால் களைப்பு நீங்கும் என எண்ணினாள்.

விழித்தெழுந்தபோது, வெயில் குறையத் தொடங்கியது. தன்னிடம் மீதியிருந்த சோற்று மூட்டையினின்று இரண்டு கவளம் மட்டும் உண்டு, நிறைய தண்ணீர் குடித்து, களைப்பு நீங்கியவளாக நடக்கத் தொடங்கினாள். காஞ்சி செல்லும் பாதை, அவளுக்குப் புதியதன்று. மீண்டும் காஞ்சியை அடைந்துவிட வேண்டும் என்ற வேகம். ரத்தினதேவி உடன் வராமல் ஏமாற்றி விட்டாளே என்ற கோபம் இருந்தாலும், வாதாபியில் அவளுக்கு ஏதோ நேர்ந்திருக்கவேண்டும் என்று எண்ணினாள். மிக விரைவில் காஞ்சிமீது சாளுக்கியர்கள் படையெடுத்து, பல்லவ நாட்டை அழித்துவிடச் செய்ய வேண்டும் என்ற ஆக்ரோஷமும், தன் காதலனுடன்

சேரவேண்டும் என்ற ஆசையும் சேர, அவள் பறந்து சென்றாள் என்றுகூடச் சொல்லலாம்.

மாலப்பிரபா நதிக்கரையில் சந்திரதத்தன் இரத்த வெள்ளத்தில் கிடந்த செய்தி, வாதாபி எங்கும் பரவியது. தேவசோமை சூலாயுதத்தால் குத்திக் கொன்றுவிட்டாள் என்றும் பேசிக்கொண்டனர்.

அரசர் செவிக்கும் எட்டியது. அவர் அதிகாரிகளை அனுப்பி, நடந்த நிகழ்ச்சியை ஆராய்ந்து வருமாறு கட்டளையிட்டார். சந்திரதத்தன் உடலில் சூலாயுதம் தாக்கியதற்கான அடையாளம் ஏதும் இல்லை என்று ஆராய்ந்து, அதிகாரிகள் முடிவு செய்தனர்.

சாளுக்கிய மன்னர், தேவியிடம், நடந்த நிகழ்ச்சியை விவரித்தார்.

"அவன்தானே தேவசோமைக்குத் தொந்தரவு தந்தவன்?" என்று கேட்டார்.

தேவி, 'ஆம்' என்று தலையசைத்து, "தெய்வம் தண்டனை வழங்கி விட்டது" என்றாள்.

"நம் கட்டளையின்படி ரத்தினதேவி காஞ்சிக்குச் செல்ல வில்லை" என்று கூறிச் சற்று நிறுத்தியபிறகு, "தேவசோமை காஞ்சிக்குச் சென்றுவிட்ட செய்தி கிடைத்திருக்கிறது. மாணிக்க வீணையை நம் நாட்டிற்குக் கொண்டு சேர்த்துவிடவேண்டும் என்ற ஆவல், அவளுக்கு மிக அதிகம். முதன்முதலில் அவள் என்னைச் சந்தித்த அன்று என்ன சொன்னாள் தெரியுமா?"

"நான் மாலப்பிரபா நதிக்கரையில் பெரிய கோயில் ஒன்றைக் கட்டப் போகிறேனாம். நீங்கள் காஞ்சி மீது படையெடுத்துச் சென்று பல்லவர்களை வென்றுவரப் போகிறீர்களாம். அவள் முக்காலும் உணர்ந்தவளோ? காஞ்சிக்குச் சென்று, பல இரகசியச் செய்திகளைச் சொல்லி அனுப்புவதாக உறுதியளித்திருக்கிறாள்" என்று தேவி மிகப் பெருமையுடன் கூறினாள்.

விக்கிரமாதித்தன் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார். இங்கே மற்றொரு வீணையைச் செய்துகொள்ளமுடியும் என்றாலும், மகேந்திரன் கண்டுபிடித்த அந்த அற்புத வீணையைக் கொண்டுவர வேண்டும்; நந்திவர்மனைத் தலைகுனிய வைக்கவேண்டும். அதுவே இந்தப் படை யெடுப்பின் நோக்கம். "மாணிக்க வீணை இருப்பிடத்தை அறிந்து கொள்வதற்காக மட்டுமா அவள் செல்கிறாள்? அவளுடைய காதலனைச் சந்திக்கவும் செல்கிறாள்" என்று கூறி மெல்ல நகைத்தார் சக்கரவர்த்தி. பிறகு, "தேவி, காஞ்சி படையெடுப்புத் திட்டத்தை நாம் மிகவும் இரகசியமாகப் பாதுகாக்க வேண்டும். பெருமையாகக்கூட ஒருவரிடமும் சொல்லிவிடாதே" என்றார்.



காபாலிகை தேவசோமை, காடு, மலை கடந்தாள். கோதாவரி, கிருஷ்ணை 'போன்ற பெரும் நதிகளைக் கடந்தாள். வானத்தில் மூன்று பௌர்ணமிகளையும், இரண்டு, மூன்று அமாவாசைகளையும் கண்டாள். அவள் காஞ்சி மாநகரை அடையும்போது, பௌர்ணமி நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. நேராகக் காஞ்சிக் கோட்டைக்குள் நுழைந்துவிட வில்லை. தன்னை அடையாளங்கண்டு சிறையிலடைத்து, தண்டனை வழங்கி விடுவார்கள் என்ற பயம் அவளுள் இருந்தது. வேகவதி ஆற்றங்கரையில், அவள் நலன் விரும்பும் கொல்லர் ஒருவர் இருக்கிறார். சூலாயுதத்தைக் கூர்மையாக்கிக் கொள்ள அவள் செல்வது வழக்கம்.

'இப்போது அவர் இருக்கிறாரோ...' என்ற சந்தேகத்துடன், அவர் வீட்டின் முன்பக்கமாகச் சென்று, 'ஐயா' என்று அழைத்தாள். சந்தடியில்லை. மீண்டும் குரல் கொடுத்தாள்.

"யாரது?" என்று குரல் கொடுத்துக்கொண்டே, நடுத்தர வயது டைய இளைஞன் வெளியே வந்தான். அவனைத் தொடர்ந்து, அவன் மனைவி வெளியே வந்தாள். அவள், தேவசோமையை அடையாளங் கண்டுகொண்டு, தன் கணவன் காதருகே முணுமுணுத்தாள். "ஓ" என்றவன், தேவசோமை அருகே வந்து, "தேவசோமையா? காபாலிகப் பெண்ணே, எங்கே நீண்ட நாட்களாகக் காணவில்லை? பல்லவ அரசரின் அதிகாரிகளுக்குப் பயந்து ஓடிப்போய்விட்டாயா? என் தந்தை உன்னைப் பல நாள்கள் எதிர்பார்த்து, உன்னைப்பற்றிக் கேட்டுக்கொண்டிருந்தார். முன்பு நடுநிசிப் பிசாசு போல் நீ வருவாயே!" என்றான், பழைய சம்பவங் களை நினைவுபடுத்திக்கொண்டு!

தேவசோமை, அந்த மங்கிய ஒளியில் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். "உன் தந்தை இப்போது இல்லையா?" என்று கேட்கும்போது, அவள் குரல் தழுதழுத்தது.



# 26

தேவசோமை, அன்று இரவு கொல்லர் வீட்டுத் திண்ணையிலே தங்கினாள். இதுவரை அவள் அத்தகைய சோர்வையும், களைப்பையும் அடைந்ததில்லை. பல காத தொலைவு நடந்து வந்ததால் களைப்பு. அவள் தேடி வந்த கொல்லர் இறந்துவிட்டார் என்பதைக் கேள்விப்பட்டவுடன் சோர்வு. அவருடைய உதவியை மலைபோல் நம்பி, அவள் அங்கு வந்தாள். அவர் மகன் பூபதிக்கு, அரசியல் ஈடுபாடு கிடையாது. தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பவன்.

மறுநாள் காலை, அவனிடம் விடைபெற்றுக்கொள்ள வந்தாள்.

"ஒரே ஒரு செய்தியாவது சொல்ல முடியுமா, தம்பி?" என்று தேவசோமை கேட்டாள். "இப்பொழுது நாட்டின் நிலைமை எப்படி இருக்கிறது?"

அவன் சிரித்தான். "நாட்டின் நிலைமை எனக்குத் தெரியாது. என் நிலைமையைப் பற்றிக் கேளுங்கள். இவ்வளவு நாள் உலைக் கூடத்தில் சாம்பல் நிறைந்திருந்தது. இப்போது இரண்டு நாள்களாகக் கொஞ்சம் வேலை வந்திருக்கிறது. செந்நிறத் தணல் ஒளி வீசுகிறது. சக்கரம் சுற்றி உலைக்குக் காற்றூதுவதும், பழுக்கக் காய்ச்சுவதும், சம்மட்டி கொண்டு அடிப்பதுமாக இப்போது சுறுசுறுப்பு மிகுந்திருக்கிறது. உதவிக்குத் தக்கவர்கள் கிடைக்காததுதான் கவலையாக இருக்கிறது" என்றான்.

தேவசோமை நிமிர்ந்து உட்கார்ந்து, அவன் சொல்வதை ஆர்வத்துடன் கேட்டாள்: "இப்பொழுது வேலை வந்திருக்கிறதா? வேளை வந்திருக்கிறதா? தம்பி, என்னென்ன கருவிகள் செய்கிறாய்?" கேட்டுவிட்டு, செய்தி அறிய, அவனைக் கூர்ந்து நோக்கினாள்.

"தாழ்ப்பாள், பூட்டு, பாக்கு வெட்டி, மண்வெட்டி" என்று சிரித்துவிட்டான்.



தேவசோமைக்கு ஏமாற்றமாக இருந்தது. தன்னை, அவன் ஏமாற்றுகிறானோ என்றும் தோன்றியது. ஆனால், தேவசோமையை மாட்டுக் கொட்டிலுக்குப் பின்புறமிருந்த குடிசைக்கு அழைத்துச் சென்றான்.

அங்கே வேல், வாள் எனப் போர்க் கருவிகள் ஏராளமாகச் செய்து அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. சாணை பிடிக்க வேண்டிய நிலையில், அவை அமைதியாக அங்கு கிடந்தன.

தேவசோமை திடுக்கிட்டாள். "திடீரென்று இவ்வளவு வாள்களுக்கும் வேல்களுக்கும் இப்போது அவசியம் எதற்கு?" என்று கேட்டாள்.

"போர் வரப்போகிறதாம்."

"யாருக்கும், யாருக்கும்?"

"தெரியாது. எதிரிகளுடன் சண்டை ஏற்படப்போகிறது என்று சொல்கிறார்கள்."

"யார் எதிரிகள்?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. என் அப்பா இருந்தால் சொல்வார். நீங்கள் வரும்போது நேரம் போவது தெரியாமல் பேசுவார். எனக்கு வெட்டிப்பேச்சில் நம்பிக்கை இல்லை."

தேவசோமை அந்த இடத்தைச் சுற்றி வந்தாள். நூற்றுக்கணக்கான வேல்களும், கேடயங்களும் இருந்தன. இரகசியமாக அங்கே சேமித்து வைக்கப்பட்டிருப்பதுபோல் தோன்றியது.

இப்போது, அவன் மனைவி பைரவி அங்கு வந்த சேர்ந்தாள். காலையிலிருந்து உணவு ஏதும் அருந்தாமல், தேவசோமை புறப்படுகிறாளே என்ற கவலை அவளுக்கு.

அருகே வந்து நின்ற பைரவியை, தேவசோமை அடிமுதல் முடிவரை பார்த்தாள். "அழகாக இருக்கிறாள்" என்று சொல்லிக் கொண்டாள். அழகுக்கு ஏற்ற உடல்கட்டு.

"உன் பெயர் என்ன?" என்று அவள் தோளைத் தொட்டு, தேவசோமை கேட்டாள். அவள் சொன்னவுடன், "கிட்டத்தட்ட எனக்குப் பிடித்தமான பெயர். பைரவி, நீ யாரை வணங்குகிறாய்?" என்று கேட்டாள்.

பைரவி உடனே மறுமொழி கூறாமல், ஒரு கணம் திகைத்து, தன் கணவரைச் சுட்டிக்காட்டி, "இவரைத்தான்" என்றாள்.

மூவரும் சிரித்தனர்.

"பதிக்கு ஏற்ற சதிதான். ஒற்றுமையாக நீங்கள் வாழ்வதைக் கண்டு எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது" என்றாள் தேவசோமை.

"இல்லை" என்று தலையசைத்தாள் பைரவி.

"ஒற்றுமை இல்லை தாயே! இவர் போக்கு இப்போதெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை" என்று கூறிக் கணவனை உற்று நோக்கினாள்.

அவன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். "இதோ பாருங்கள்; இங்கேயே நின்று பேசிக்கொண்டிருக்க வேண்டாம். வீட்டைத் தேடி வந்திருக்கும் காபாலிகைக்கு உணவு படைக்காமல் என்ன பேச்சு? எனக்குப் பசிக்கிறது. வீட்டிற்குள்ளே போய்ப் பேசுவோம். அதற்குள் சித்திரமாயன் வந்துவிடுவார்" என்றாள்.

'சித்திரமாயன்...'

ஒருமுறை அந்தப் பெயரை உச்சரித்தாள் தேவசோமை.

"சித்திரமாயன் இங்கு வருவாரா? இன்று வருவாரா?" என்று ஆவலுடன் கேட்டாள்.

"இங்கு வருவார். இன்றும் வருவார்; என்றும் வருவார். இவரைப் போல ஏமாளிகள் இருந்தால், அவர் எங்கும் போகாமல் இங்கே சுற்றிச் சுற்றி வருவார்" என்றாள் பைரவி எரிச்சல் குரலில் ஒலிக்க. பிறகு பேச்சை மாற்ற விரும்பி, "உம்... வாருங்கள். உள்ளே போய்க் கம்பங்கூழ் கொஞ்சம் குடிக்கலாம்" என்று பைரவி வற்புறுத்தினாள்.

வயிறு முட்டக் கூழ் குடித்த பிறகு தேவசோமை கேட்டாள்: "சித்திரமாயன் எப்போது வருவார்? அவரை நான் சந்திக்கலாமா?"

பைரவியின் கணவன் பரபரப்புடன், "ஐயோ, அவர் வரும்போது நீங்கள் இங்கே இருக்கவேண்டாம். இரகசியம் சொல்லியிருப்பேனோ என்று சந்தேகப்படுவார்" என்றான்.

"அம்மா, நீங்கள் இங்கேயே இருங்கள். சித்திரமாயனுக்கு இவர் மிகவும் பயப்படுகிறார். நான் பயப்படமாட்டேன். பகல் சோறு வடித்து, வெஞ்சனம் கறி அமுதுடன் இடுகிறேன். சிவபெருமான் திருவிளையாடல் பெருமைகளைச் சொல்லுங்கள். கேட்டுப் பல நாட்களாகிவிட்டன" என்றாள்.

தேவசோமை அமைதியுடன் இருந்தாள். பைரவியிடமிருந்து பல செய்திகளை அறியலாம் என்ற முடிவுடன், "காபாலீச்வரன், மண்டை ஓட்டுடன் வெண்நீறு பூசி, மயானத்தில் ஏன் நடமாடுகிறான், தெரியுமா?" என்று கேட்டாள்.

"தெரியாதே தாயே! சொல்லுங்கள், சொல்லுங்கள்" என்றாள் பைரவி.



அவள் கணவன் இருகரம் கூப்பி, "தேவசோமை! இங்கிருந்து போய்விடுங்கள். இளவரசர் சித்திரமாயன் இங்கு வந்து தங்களைப் பார்த்தால் கடும் கோபம் கொள்வார்" என்று பணிவுடன் கூறினான்.

"என்னைப் பார்த்து அவர் ஏன் கடுங்கோபம் கொள்ளவேண்டும்?"

"போருக்கு வேண்டிய ஆயுதங்களை நான் செய்வது மிக இரகசிய மானது. மற்றவர்களுக்கு அது தெரிந்துவிடக்கூடாது என்பது அவர் கட்டளை. ஒருவரையும் நான், என் வீட்டிற்குள் அனுமதிப்பதில்லை. உங்களைப் பார்த்தால்..." என்று அவன் பேசும்போது, மிகக் குழப்பமடைந்தான்.

பைரவி சிரித்தாள். "இது என்ன வேடிக்கை! டொக்டொக்கென்று பழுக்கக் காய்ச்சித் தட்டும் ஓசையை யார் தடுத்துவிடமுடியும்? இந்தக் கிராம மக்களுக்குத் தெரியாமல் போய்விடுமா?"

"தெரியாது; இங்கே வீட்டுக்கு வேண்டிய சில கருவிகள் மட்டுமே செய்கிறோம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். நானும் என் மாமாவும் மட்டுமே உழைக்கிறோம்."

பைரவி குறுக்கிட்டாள். "ஏன் பயந்து பயந்து போர்க் கருவிகளைச் செய்யவேண்டும்? சித்திரமாயன், நாட்டுக்கு விரோதச் செயல்களைச் செய்கிறார். நந்திவர்ம அரசரிடமிருந்து ஆட்சியைப் பிடிக்கவேண்டும் என்று சதி செய்கிறார். போர்க் கலன்களை இரகசியமாகச் செய்ய இந்த ஏமாளிதான் கிடைத்தார்" என்று தன் கணவரைச் சுட்டிக்காட்டினாள்.

தேவசோமை குறுக்கிட்டாள். "பைரவி, அப்படியெல்லாம் சொல்லி விடாதே. இப்போது மட்டுமா? உன் மாமனார் காலத்திலும் அப்படித்தான். ஆட்சி செய்யும் பல்லவ அரசர்களைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது" என்று சொல்லிவிட்டு, பைரவியின் கணவரைப் பார்த்து, "நல்ல காரியம் செய்கிறாய். சித்திரமாயனை எனக்குத் தெரியும். இந்த பல்லவ சிம்மாசனம் சித்திரமாயனுக்குத்தான் உரிமை. எனக்குத் தெரியும். உன் கணவர் உதவுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. சித்திரமாயனை நான் சந்தித்தாக வேண்டும். அவர் வரும் வரையில் நான் இங்கேயே இருக்கிறேன்" என்றாள்.

பல்லவ அரசரை எதிர்ப்போருடன், இந்தக் காபாலிகையும் சேர்ந்து விடப் போகிறாளே என்ற கவலையுடன், "தாயே! சிவபெருமானின் பல தோற்றங்களுள் ஒன்று காபாலி வடிவம். அவரை முழுமுதல் கடவுளாக ஏற்கும் நீங்கள், சிவ சமயத்தை வெறுக்கும் சித்திரமாயனுடன் சேரலாமா?" என்று பைரவி கேட்டாள்.

தேவசோமை நகைத்தாள். "பைரவி, உனக்கு எதற்கு இந்தக் கவலை எல்லாம்? உன் கணவரும் நீயும் என்றுமே ஒற்றுமையுடன் இருக்க

வேண்டும். இந்த நாடு சித்திரமாயனுக்குத்தான் உரிமை. அதை அடையப் பாடுபடும் அவருடன், ஒத்துழைக்கும் உன் கணவருக்கு வருங்காலம் மிகச் சிறப்பாக இருக்கப்போகிறது. சித்திரமாயன் பல்லவ நாட்டின் மன்னரானவுடன் உன் கணவருக்கு ஏற்படப்போகும் மரியாதை கிடைக்கப்போகும் செல்வம், இவற்றை நீ இப்போதே எண்ணிப் பார்க்க வேண்டும். ஓர் இளவரசிபோல் நீ மாளிகையில் உலவலாம்" என்று கூறிக் கொண்டிருக்கும்போதே, பைரவி ஆத்திரத்துடன், "நிறுத்துங்கள். நாளைக்கு நான் சுகபோகம் அனுபவிப்பதற்காக இந்தத் துரோகச் செயலைச் செய்ய உடந்தையாக இருக்கமாட்டேன். ஒரு கணம்கூட நீங்கள் இங்கு இருக்கக்கூடாது, போய்விடுங்கள். அரச துரோகிகளின் மடமாக இந்த வீடு இருக்கக்கூடாது" என்று கூறினாள்.

வெளியே யாரோ சிலர் வரும் ஓசை கேட்டது. பைரவியின் கணவன் வெளியே சென்று பார்த்து, உள்ளே ஓடிவந்து, "அதோ சித்திரமாயன் வருகிறார். இனியும் இப்படிப் பேசாதே" என்று கூறி, அவள் வாயைப் பொத்தி, அவளை இழுத்துச் சென்று அருகே இருந்த அறைக்குள் தள்ளினான்.



# 27

தேவசோமையை அவ்வளவு எளிதில் அடக்கி வைக்க முடியவில்லை.

"ஓ! சித்திரமாயப் பேரரசரா? வருக, வருக" என்று தேவசோமை இருகரம் நீட்டி வரவேற்றாள். பூபதியும், பைரவியும் பயத்துடன் ஓர் ஓரமாக நின்றனர். அங்கே போர்க்கருவிகள் செய்யப்படுவதைத் தான் கண்டதாகக் கூறிவிடப் போகிறாளோ; அப்படி அவள் சொல்லிவிட்டால், ரகசியத்தை வெளியே சொல்லிவிடுவோம் என்று சித்திரமாயன் கோபம் கொள்ளலாம். தண்டனை தரலாம் என்று நடுங்கினர்.

சித்திரமாயன், காபாலிகையை உற்றுப் பார்த்தவாறு சிறிது நின்றான். தன்னுடன் வந்தவர்களிடம் மெல்லிய குரலில், "இவள் தேவசோமை தானே? இங்கு எங்கே வந்தாள்?" என்று கேட்டான்.

அருகே இருந்தவர்களும் வியப்புடன் காபாலிகையைப் பார்த்தார்கள்.

"பல்லவ மகாராசரே! என்னைத் தங்களுக்கு அடையாளம் தெரியவில்லையா? காஞ்சி நகரத்திலிருந்து ஓட ஓட விரட்டப்பட்ட தேவசோமை நான்தான்? பல்லவ நாட்டிற்கே பரம விரோதி!" என்று கூறி நகைத்தாள். அவள் சிரிப்பது பெரும் இடி இடிப்பது போலிருக்கும்.

"தேவசோமைதானே, உன்னை மறக்க முடியுமா? ஆனால் உடனே அடையாளம் தெரியவில்லை. காடும் மலையும் திரிந்ததால், உன் பொன் உடம்பு கறுத்துவிட்டது. எங்கு சென்றிருந்தாய்? எப்பொழுது காஞ்சிக்கு வந்தாய்?" சித்திரமாயன் மளமளவென்று கேட்டான்.

சித்திரமாயனை விழுங்கி விடுபவள்போல் பார்த்த தேவசோமை, "எதற்காக வந்தாய் என்று கேட்க மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். உங்களைப் பார்க்க வந்தேன்" என்றாள்.

"என்னைப் பார்க்கவா? உன் காபாலிக சமயத்திற்குப் பரம விரோதியான சமண சமயத்தைச் சேர்ந்தவனாயிற்றே நான். என்னைப் பார்ப்பதால் உனக்குப் பலனுண்டா? உன் காதல் என்னவாயிற்று?" என்று சித்திரமாயன் கேட்டான்.

தேவசோமை வியப்பால் புருவங்களை உயர்த்தி, "மாமன்னர் என்றால் தாங்கள்தான் உண்மையான மாமன்னர். எல்லாம் வல்ல காபாலீசன் விழிகளை ஏன் மூடியிருக்கிறார். இன்னும் தங்களுக்கு நல்லது செய்யக் கண் திறவாமல்? என் நலனை மறக்காமல் நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்களே? தங்களிடம் மூன்று முக்கிய செய்திகளைத் தெரிவிக்க வந்துள்ளேன்" என்றாள்.

"தேவசோமை—பொய் மட்டும் சொல்லாதே. என்னை நேரே நோக்கிச் சொல்லு; என்னைச் சந்திக்கவா வந்தாய்?" சித்திரமாயன் கேட்டான்.

"ஆமாம், மகாராசரே! பொய் சொல்லி எனக்குப் பழக்கமில்லை. காஞ்சிக்கு நான் வந்தது தங்களையும் சந்திக்கத்தான். சாளுக்கிய மாமன்னரிடம் கலந்து பேசிவிட்டே வந்தேன்" என்று கூறியவளைக் குறுக்கிட்டு, "சாளுக்கிய மாமன்னரா?" என்று கேட்ட குரலில் அதிர்ச்சியும், ஆச்சர்யமுமிருந்தன.

அங்கே பட்டறையில் நின்று பேச விரும்பாமல், தேவசோமையைத் தனியே அழைத்துச் சென்றான். தேவசோமை, ஒன்றுவிடாமல் வாதாபியில் நடந்தவற்றைச் சொன்னாள்.

சித்திரமாயன் சிறிது நேரம் மௌனமாக இருந்தான். பிறகு தேவசோமையின் செவிகளில் மட்டும் கேட்கும்படிச் சொன்னான்: "தேவசோமை! உன்னைப் பெரிதும் நம்பிச் சில திட்டங்களையும், செய்திகளையும் சொல்கிறேன். நந்திவர்மனுடன் போர் தொடுக்க முடிவு செய்துவிட்டேன். போர்க்கலன்களை ஆயத்தம் செய்து வருகிறேன். சாளுக்கிய மன்னர் அனுப்பிய ஒற்றர்கள் பலவிதங்களில் உதவுகிறார்கள் என்றாலும், திட்டங்கள் கைகூடுவதில் ஏமாற்றங்கள் ஏற்படுகின்றன. மரகத வீணையை அபகரிப்பதும் என் நோக்கங்களுள் முக்கியமானது. மரகத வீணையைப் பெற்றுத் தருவதாக சாளுக்கிய மன்னருக்கு வாக்குறுதி அளித்திருப்பதற்கு மகிழ்ச்சி. நான் உனக்கு உதவுகிறேன். நீயும் உதவ வேண்டும். உறுதியாகச் செய்வாயா?"

தேவசோமை ஏதும் பேசவில்லை. கையை நீட்டினாள். "உம், உங்கள் வலது கரத்தை நீட்டுங்கள்" என்றாள்.



சித்திரமாயன் வலது கரத்தின் மீது, தன் வலக்கரத்தைத் தட்டி, "நான் என்ன செய்யவேண்டும் சொல்லுங்கள்" – தேவசோமை கேட்டாள்.

"முதலில் இந்த வேடத்தைக் களையவேண்டும்."

"முடியாது. இது வேடமன்று. என் இயற்கையான உடை என் தாய், தாய்க்குத் தாய், அவர்களுக்குப் பாட்டி என்று காபாலிகர்கள் பரம்பரையாக அணியும் உடை. அது எங்கள் பண்பு. நான் சற்றுப் புதுமையாக, சற்று மாறுதலுடன் ஆடைகளை அணிகிறேன். அது மட்டுமன்று; இந்த உடை எனக்கும் பாதுகாப்பாக இருக்கிறது. கழுத்தில் அணிய எலும்பு மாலை கிடைக்கவில்லை. சரியான மண்டை ஓடு கிடைக்கவில்லை; சுடுகாட்டில் மட்டும் வாழ முடிவதில்லை. மயான பூமி என்று நாங்கள் சொந்தம் கொண்டாடி வாழ முடியவில்லை. அந்த பிள்ளைச் சம்பந்தரும், நாவுக்கரசரும் மக்கள் மனத்தை மாற்றிவிட்டனர். திருமாலை வணங்குபவர்கள் எங்களைப் பரம விரோதியாகக் கருதி வாதிட்டு, பெருத்தத் தொல்லைகள் கொடுக்கிறார்கள்."

தேவசோமை கண்டிப்பாகவும், அழுத்தந்திருத்தமாகவும் பேசுவது சித்திரமாயனுக்குப் பிடித்திருந்தது. 'எதற்காகவும், யாருக்காகவும் கொள்கையை மாற்றிக் கொள்ளாதவர்களே, தான் எடுத்த இலட்சியத்திற்குத் தேவை' என்ற முடிவிற்கு வந்த சித்திரமாயன், தேவசோமையைக் கனிவுடன் நோக்கி, "உன் உறுதியை மெச்சுகிறேன். நந்திவர்மனை எதிர்த்துப் போராட முடிவு செய்துவிட்டேன். உன்னைப்போன்ற லட்சிய உறுதி படைத்தவர்கள்தான் எனக்கு வேண்டும். காபாலிகையாகப் பல்லவ நாட்டில் நடமாட முடியாது என்ற எண்ணத்தில்தான், உன் வேடத்தை மாற்றிக்கொள்ளுமாறு சொன்னேன்" என்று கூறினான்.

தேவசோமை கண்டிப்பாக மறுத்து விட்டாள். "இன்னொரு தடவை வேடம் என்று கூறாதீர்கள்" என்று மீண்டும் கூறினாள்.

தேவசோமையை வேல்களும், வாள்களும் செய்யும் இடத்திற்கு அழைத்துச்சென்று, அவற்றைச் சுட்டிக்காட்டி, "திடீரெனக் காஞ்சி மாளிகையைத் தாக்கும் என் திட்டத்திற்கு இந்த ஆயுதங்களைச் சேகரிக்கிறேன்" என்றான்.

தேவசோமை மெல்லச் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய் தேவசோமை?" என்று கேட்டான் சித்திரமாயன்.

"நந்திவர்மனிடம் இருக்கும் ஆயுதங்களுக்கு இவை ஈடாகுமா? என்று நினைத்தேன். சிரித்தேன்!" என்றாள் தேவசோமை.

"தேவசோமை, நீ நினைப்பது மிகவும் சரி. சாளுக்கியப் படைகள் காஞ்சிக் கோட்டையை முற்றுகையிடும்போது, என் படைகள் நகரத்தின் முக்கிய இடங்களைத் தாக்கும்" என்று, தன் திட்டத்தை விவரித்தான்.

"சாளுக்கிய மன்னரிடமிருந்து தகவல் கிடைத்திருக்கிறதா?" தேவசோமை கேட்டாள்.

"காஞ்சி நிலைமையைத் தெரிவிக்குமாறும், தக்க தருணம் பார்த்துப் படைகளுடன் வருவதாகவும் சாளுக்கிய அரசர் சொல்லியிருக் கிறார்" என்று பெருமையுடன் சொல்லிக் கொண்டான் சித்திரமாயன்.

செய்தி எப்படிக் கிடைத்தது என்று தேவசோமை கேட்கவில்லை.

"சாளுக்கியர்களின் படை எடுப்பிற்கு முன்பே பரிவாதினி வீணை யைச் சாளுக்கிய மன்னரிடம் ஒப்படைத்துவிட வேண்டும். அந்தப் பொறுப்பை நான் ஏற்றிருக்கிறேன். நான் வாக்களித்துள்ளேன். ஓர் வீணை யைக் கடத்திச் செல்வது அவ்வளவு கஷ்டமான செயலாயிராது என்று நினைக்கிறேன். பல்லவர் படைகளுடன் தாங்கள் மோதுவதற்கு முன்பே வீணையை நான் அடைவதற்கு உதவுங்கள். மாணிக்க வீணையான பரிவாதினியைச் சேதமில்லாமல் சாளுக்கிய அரசரிடம் ஒப்படைத்தால் என் கௌரவம் உயரும்" என்றாள் தேவசோமை.

சித்திரமாயன் மெல்ல நகைத்தான். "தேவசோமை, சாளுக்கிய அரசரிடம் உனக்குள்ள செல்வாக்கை நான் புரிந்துகொண்டேன். மாணிக்க வீணையை அபகரிக்க மட்டுமா நீ காஞ்சி வந்திருக்கிறாய்? உன் காதலனைச் சிறையிலிருந்து மீட்க வேண்டாமா?" என்று கேட்டான்.

"ஆம்; நான் மூன்று முக்கிய லட்சியங்களுடன் வாதாபியிலிருந்து காஞ்சிக்கு வந்தேன்..."

"இரண்டு லட்சியங்களைச் சொல்லிவிட்டாய். மாணிக்க வீணையை அடைவது; உன் காதலனைச் சிறையிலிருந்து மீட்பது - மற்றொன்று?"

"என் உயிர்த்தொழி ரத்தினதேவியின் தந்தையை மீண்டும் வாதாபிக்கு வருமாறு செய்ய வேண்டும்."

"பல்லவ நந்திவர்மனை அவமானப்படுத்தக்கூடிய திட்டங்களா கவே வைத்திருக்கிறாய். மகேந்திரவர்மன் கண்டுபிடித்த பரிவாதினியை இழப்பது ஒன்றே, நந்திவர்மனுக்குத் தோல்வியை அளித்ததாகும்" என்று கூறிய சித்திரமாயன், ஏதோ சிந்தனையில் சிறிது நேரம் இருந்தான். பிறகு, தன் திட்டங்களை விளக்கினான்.



"தேவசோமை, நீ மிகக் கவனமாக இயங்க வேண்டும். மாணிக்க வீணையை அடைவதற்கு முன்பு, மாமல்லபுரத்தில் நீ செய்ய வேண்டிய பணி இருக்கிறது. காம்போஜ நாட்டிலிருந்து சைலேந்திரி என்ற அழகிய பெண் வந்திருக்கிறாள்..." என்று அவன் சொல்லத் தொடங்கும்போது, "ஓ! சித்திரமாய மாமன்னருக்கு, அயல் நாட்டிலிருந்து வந்திருக்கும் அந்த அழகிய பெண் தேவை! அவளை நான் கவர்ந்து வரவேண்டும். அவ்வளவு தானே?" என்று கூறிச் சிரித்தாள்.

"தேவசோமை, உண்மையான வீரன், மங்கையிடம் மனத்தை இழக்கமாட்டான். மது, மங்கை இவற்றில் நாட்டம் செலுத்தமாட்டான். சைலேந்திரி வீணை வாசிப்பதில் வல்லவள். மாணிக்க வீணையை வாதாபிக்குக் கொண்டு சென்றால் போதுமா? வீணையை மீட்டக் கற்றறிந்தவர் வேண்டாமா? சாளுக்கிய நாட்டில் வீணையைக் கற்றுத் தருவதற்கு ஏற்ற ஆசானை அனுப்பாமல், வீணையை அனுப்பி என்ன பயன்? சைலேந்திரியை எப்படியாவது வாதாபிக்கு அழைத்துச் சென்றுவிட வேண்டும்" என்று சித்திரமாயன் கூறி, சைலேந்திரி இருக்குமிடத்தையும், அவளை எவ்வாறு மாமல்லபுரத்திலிருந்து வெளியேற்றுவது என்பதற்கான திட்டங்களையும் கூறினான்.

கடல் மல்லையின் முதிய சிற்பியின் வீட்டில் அவள் தங்கியிருக் கும் செய்தி அறிந்த தேவசோமை, சிற்பியின் வீடு நோக்கிச் சென்றாள்.

அவள் சென்றபோது, உதயசந்திரன் சிற்பியைச் சந்திக்க வந்ததால், அவள் மறைந்திருக்க வேண்டியதாயிற்று. உதயசந்திரன் பேசிக்கொண்டி ருந்தபோது, சைலேந்திரியைத் தொலைவிலிருந்து பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

சைலேந்திரியின் அழகைக் கண்டவுடன், தேவசோமை வியப் படைந்தாள். சாளுக்கிய மன்னருக்கு, வீணையுடன் சேர்த்து சைலேந்திரி யையும் பரிசாக அளிக்க வேண்டும் என்று முடிவு செய்தாள்.



# 28

சிற்பியின் குடிலுக்குள் உதயசந்திரன் பேசிக்கொண்டிருப்பதை அறிந்த தேவசோமை, பாறைகளுக்கு மறைவில், யாரும் காண இயலாத இடத்தில் அமைதியாக உட்கார்ந்து கொண்டாள்.

உதயசந்திரனும் அவனுடைய பரிவாரங்களும் சென்றபிறகு அங்கிருந்து புறப்படுவோம் என்று முடிவு செய்தாள். அவளுக்குச் சற்று ஓய்வும் தேவைப்பட்டது.

பாறை மீது சாய்ந்து கொண்டு கண்ணயர்ந்தாள். அவள் விழித்த போது பொழுது சாயத் தொடங்கியிருந்தது.

பசி அவள் சிறுகுடலைப் பிடித்து உலுக்க ஆரம்பித்தது. சைலேந்திரியை எப்படியாவது சந்தித்துப் பேசினால், அவள் மனத்தை மாற்றிவிடலாம் என்று முடிவு செய்தாள்.

உதயசந்திரன் அங்கிருந்து சென்றுவிட்டார். குடிலுக்குச் சென்று பசியாற ஏதாவது உணவு கேட்போமா என்று நினைத்தாள். அதைவிட, மது கிடைத்தால் புதிய உற்சாகம் ஏற்படும் என்ற சிந்தனை ஏற்பட்டது. கடல்மல்லையில் மது கிடைக்கும் இடம் அவளுக்குத் தெரியும்.

அவளுக்குச் சிரிப்பு வந்தது. மகேந்திரவர்மன் எழுதிய நாடகத்தை அவள் பார்த்திருக்கிறாள். புத்தபிக்குகளையும், காபாலிகர்களையும் அவர் கேலி செய்து எழுதியிருந்த அந்த நாடகத்தில், இரட்டைப் பொருள் தரக்கூடிய வசனங்களைக் கேட்டிருக்கிறாள். காபாலிகனும், காபாலிகப் பெண்ணும் குடித்து விட்டுக் கூத்தாடும் சம்பவங்கள், அந்த நாடகத்தில் பல உண்டு. 'கள்ளுக் கடை' என்ற பெயர்ப் பலகையையும் அந்த நாடகத் தில் காணலாம். காபாலிகர்களின் முக்கியப் பாண்டமான கபால மண்டை ஓட்டை, நாய் ஒன்று வாயில் கல்விக்கொண்டு ஓடும். புத்தபிட்சு



திருடிவிட்டதாக காபாலிகன் கோபங்கொண்டு, பிச்சுவிடம் சண்டையிடு வான். அந்தக் காட்சியை, நாடக நடிகர்கள் இயற்கையாக நடிப்பதைப் பார்த்திருக்கிறாள். இப்போது நினைத்தாலும் அவளுக்குச் சிரிப்பு வந்தது.

'மத்த விலாசம்' என்ற அந்த நாடகம், இப்போது பல்லவ நாட்டில் எங்கும் நடிக்கப்படுவதில்லை. புத்தபிட்சுகளும், காபாலிகர்களும் பல்லவநாட்டை விட்டுச் சென்றுவிட்டனர். மௌனமாக அமர்ந்து, தேவசோமை பழைய சம்பவங்களை நினைத்துக்கொண்டாள். பசியும், கள் அருந்த வேண்டும் என்ற அவாவும் மேலிடவே, அவள் அங்கிருந்து மெள்ள எழுந்தாள்.

'தேவசோமை' என்று யாரோ அழைக்கும் குரல் கேட்டது. நந்தீசன் தோப்பிற்குள்ளிருந்து வந்துகொண்டிருந்தான்.

அவன் குரல், அவளுக்கு முன்பு எப்போதோ கேட்ட குரலாகத் தோன்றியது. அவனை அடையாளம் தெரியவில்லை.

அவள் நின்று உற்றுப்பார்த்தாள்.

"தேவசோமை, என்னைத் தெரியவில்லையா? நான்தான் நந்தீசப் பெருமாள்" என்று அறிமுகப்படுத்திக்கொண்டான்.

அவளுக்குப் புரியவில்லை. வழியில் தடுத்து நிறுத்திப் பேசும் அவனிடம் பேசிக்கொண்டு நின்று, பசியை வளர்த்துக்கொள்ள விரும்ப வில்லை.

"உன்னை யாரென்று தெரியவில்லை" என்று முகத்திலடித்தது போல் கூறி, நடக்கத் தொடங்கினாள்.

நந்தீசப் பெருமாள் சிரித்தான். "பயந்துவிட்டாயா, தேவசோமை? 'பல்லவநாட்டில் காபாலிகர்களை வெறுக்கிறார்களே; பல்லவ அதிகாரி யிடம் சிக்கிவிட்டோமே' என்று பயந்து, பேசாமல் நடக்க முயல்கிறாயா? சித்திரமாயன் உன்னைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்" என்றான்.

சித்திரமாயன் என்றவுடன் அவள் நின்றாள், நந்தீசனை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் சொல்வது உண்மைதானா என்று, அவன் மனத்தை அறிய முயன்றாள்.

"தேவசோமை! கடல்மல்லைக்கு வந்தவுடன் என்னைச் சந்தித் திருக்க வேண்டாமா? மிகவும் களைப்பாக இருக்கிறாய் போலிருக்கிறது" என்று தொடர்ந்து பேசி, அவளைப் பேசவைக்க முயன்றான்.

"கடல்மல்லை — பெயரில்தான் பெருமை. உபயோகமற்ற ஊராகி விட்டது. இராசசிம்மன் என்ற சிவ பக்தன் கட்டிய கோயிலுக்குச் சென்றேன். சிவபெருமானுக்கும், திருமாலுக்கும் ஒரே இடத்தில் கோயில்

கட்டியிருக்கிறான் அவன்! ஒற்றுமைப்படுத்துகிறானாம்! ஆனால், ஒரு பெருமை அந்தக் கோயிலுக்கு. உனக்குத் தெரியுமா?'' என்று தேவசோமை கேட்டாள்.

தன் சுயநினைவோடு அவள் பேசுகிறாளா, இல்லையா என்பதை நந்தீசப் பெருமாளால் கண்டுபிடிக்க முடியவில்லை.

"அந்தக் கோயிலுக்குப் பல பெருமைகள் உண்டு."

"எந்தப் பெருமையைச் சொல்கிறாய்?'' என்று கேட்டான் நந்தீசன்.

"நீ என்ன பல்லவ அதிகாரி! சித்திரமாய மன்னருடன் சேர்ந்து விட்டதாலேயே உனக்குச் சகல அறிவு வந்துவிடுமா? நான் சொல்கிறேன் கேள்! திருமால் அடியவர் ஒரு தடவை அந்தக் கோயிலுக்கு வந்தாராம். சிவபெருமானும் விஷ்ணுவும் ஒன்றாய் ஒரே இடத்தில் இருப்பதைப் பார்த்து அவருக்குப் பெருமை! எங்கள் சிவபெருமானுடைய இடத்தில் அவர் போற்றும் பெருமாளுக்கும் இடங்கொடுத்ததால் அவருக்கு ஆனந்தம்! "பிணங்கள் இடுகாடதனுள் நடமாடும் பிஞ்சகனோடு இணங்கு திருச்சக்கரத்து எம்மான்'' என்று அவர் போற்றிப் பாடினாராம். பிணங்களைச் சுடும் காட்டில் நடமாடும் காபாலிகன் என்று சிவனைத் தூற்றுவதாக அவர் எண்ணிவிட்டார். ஆனால் உண்மையில் அவர் எங்கள் ஈசனைப் போற்றுகிறார். எங்களுக்குப் பெருமை.

"காலையில் அந்தக் கோயிலுக்கு அருகே சென்று, காம்போஜத்திலிருந்து வந்திருக்கும் அழகிய பெண்ணைப் பற்றிக் கேட்டறிய முயன்றேன். கேட்டுக்கேட்டு, அலைந்து அலைந்து, கடைசியில் கண்டுபிடித்துவிட்டேன். அலைச்சல், களைப்பு, பசி, நீ வேறு இப்பொழுது வழியை மறித்துப் பேசுகிறாய். வழிவிட்டு நில்; இல்லாவிடில் வயிற்றுக்குச் சோறும், கள்ளும் வாங்கித் தா!'' என்று கடுமையான குரலில் பேசினாள்.

நந்தீசன் பெரிதாகச் சிரித்தான்.

"சிரிக்காதே! பசி பொல்லாதது; பல்லவ நாட்டின் அதிகாரிகளைப் பழிவாங்குவதை இலட்சியமாகக் கொண்ட எனக்கு, இந்த வேளையில் என் ஆத்திரத்தைத் தூண்டாதே. என் பையில் இருக்கும் சூலாயுதத்திற்கு இரையாகாதே!'' என்று சீறினாள்.

நந்தீசப் பெருமாளை நோக்கி ஒரு பெண் இப்படிக் கேட்பதா? ஆனாலும் அவன் கோபத்தை அடக்கிக்கொண்டு புன்முறுவலுடன், "தேவசோமை! கோபப்படும்போதும் நீ அழகாய் இருக்கிறாய். நந்தவனத்தில் மலரவேண்டிய மலர், காட்டில் முள் செடியில் மலர்ந்திருக்கிறது. நல்ல செய்தி ஒன்றைச் சொன்னாய்; போதும் போதும் என்று நீ சொல்லும் வரையில் குடம் குடமாகக் கள் வாங்கித் தருகிறேன். காம்போஜ நாட்டிலிருந்து வந்த பெண் எங்கே இருக்கிறாள்? கண்டுபிடித்துவிட்டாயா? இருக்குமிடம் சொல்லுகிறாயா?'' நந்தீசன் உற்சாகமாகப் பேசினான்.



"முதலில் நீ சொன்னபடி செய். பிறகு நான் அவள் இருப்பிடம் சொல்கிறேன்'' என்றாள்.

"என்ன சொன்னேன்?'' என்று கேட்டுக் குறும்பாகச் சிரித்தான்.

"அதற்குள் சொல்லை மறக்கும் உன்னிடம், எனக்கு என்ன பேச்சு? குடம் குடமாகத் தருவதாகச் சொன்னாயே!''

"ஓ!'' என்று சிரித்த நந்தீசன், அவளை அருகே இருந்த தோப்பிற்கு அழைத்துச் சென்றான். பானையிலே இருந்த கள்ளின் மணத்தை நுகர்ந்தவுடனேயே, தேவசோமை உற்சாகத்துடன் ஆடத் தொடங்கினாள்.

நந்தீசனைக் கண்டவுடன், மதுக்கடையில் இருந்தவர்கள் பயபக்தியுடன் எழுந்து நின்றார்கள்.

"நந்தீசா! காம்போஜத்திலிருந்து வந்த அழகியைப்போல் வேறு அழகியை நான் இதுவரையில் பார்த்ததில்லை'' என்று தேவசோமை உற்சாகமாகக் கூறினாள்.

"உன்னைவிடவா?'' என்று குறுக்கிட்டான் நந்தீசன்.

"குறுக்கே பேசாதே! குறும்பாகப் பேசாதே! நீ என்னைப் புகழ்வதன் உள்நோக்கம் புரிகிறது. எனக்கென்று ஒருவன் வாழ்கிறான். என் அழகில் மயங்கியவன், அவனை விடுவிக்க வந்திருக்கிறேன். அதற்கு முன்பாக மாணிக்க வீணையைச் சாளுக்கிய மன்னரிடம் சேர்ப்பிக்க வந்தேன். முதலில் அந்தப் பணி..''

"சித்திரமாயன் என்னிடம் சொல்லிவிட்டார்!''

"குறுக்கே பேசாதே. மரியாதை தெரியாதவன் நீ. சித்திரமாய மகாராஜா என்று சொல்லு. மாணிக்க வீணையைத் தேடிப்போனபோது, மாணிக்கச் சிலையைக் கண்டேன். ஆகா! அழகு என்றால் அழகு.''

"தேவசோமை, அந்த அழகியைத்தான் நான் தேடுகிறேன். சித்திரமாய மாமன்னருக்குப் பரிசாக அளிக்க விரும்புகிறேன். அதற்காக அரும்பாடுபடுகிறேன். ஓர் அம்பில் இரு பறவைகளை வீழ்த்த எண்ணினேன். அதற்காகத்தான் சைலேந்திரியை வீணைக் கலைஞர் பரமகுரு வீட்டில் தங்குமாறு செய்தேன்.''

"ஓ! பரமகுரு எங்கே இருக்கிறார்? அவரை நான் பார்க்க வேண்டும்.''

"அவரையும் தேடுகிறேன். அவருடன், சாளுக்கிய நாட்டு அழகி சாலினியும் இருக்கிறாள்."

"கேள்விப்பட்டேன். சாளுக்கிய நாட்டிற்கு உதவுவதாகக் கூறி, பல்லவ நாட்டிற்கு வந்து எண்ணம் மாறி, பல்லவ அரசருக்கு உதவுகிறாள், அப்படித்தானே? இப்போது அவளைப் பற்றி எனக்குக் கவலையில்லை. சைலேந்திரியை வாதாபிக்குக் கொண்டு சென்று, சாளுக்கிய அரசரிடம் சேர்க்க வேண்டும்."

"தேவசோமை, நேரத்தை வீணடிக்கிறாய். சைலேந்திரியை எங்கே பார்த்தாய்? உடனே சொல்லு. இரவோடு இரவாக, அவளைக் கவர்ந்து சென்றுவிட வேண்டும்" என்று நந்தீசன் பரபரப்புடன் கூறினான்.

"ஓ! அதுமட்டும் நடக்காது. சைலேந்திரி, சித்திரமாயனுக்கு என்று சிவபெருமானால் படைக்கப்படவில்லை. நீ வழியைவிட்டு விலகிச் செல். என் திட்டத்தில் குறுக்கிட்டால் என்ன நடக்கும் தெரியுமா?" தேவசோமையின் விழிகளில் வீசிய தணல் ஒளியைக் கண்டு, நந்தீசன் ஒரு கணம் திகைத்தான். அன்பாகப் பேசினான். சைலேந்திரியின் இருப்பிடம் அறிய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தவனாய், "தேவசோமை, ஆகா! கோபங்கொள்ளும்போதும்கூட நீ அழகாக இருக்கிறாய். காம்போஜத்து அழகியை நீ யாருக்கு வேண்டுமானாலும் பரிசாகக் கொடு. அவள் இருக்குமிடத்தை மட்டும் எனக்குத் தெரிவித்துவிடு. சாளுக்கிய மன்னருக்குப் பரிசாக அளிக்க வேண்டாமா? சித்திரமாயனுக்குச் செய்தி அறிவித்து, அவருடைய மெய்க்காவல் வீரர்களை அழைத்துவர வேண்டும். நடுநிசிக்குள் செயலாற்ற வேண்டும்" என்று குழைந்து பேசினான்.

காபாலிகை, அவனை உற்றுப் பார்த்தாள். பிறகு பெரிதாகச் சிரித்தாள். "நந்தீசா! என்னை ஏமாற்ற முடியாது. நீ பொல்லாதவன். வாய்ப்பு நேர்ந்தால் சித்திரமாய மகாராஜாவுக்கே நீ துரோகம் செய்துவிடுவாய். காம்போஜ மங்கை இருக்குமிடம் சொல்லமாட்டேன், போ, போ!" என்று சொல்லிவிட்டு தேவசோமை, மீண்டும் சைலேந்திரி இருக்குமிடம் நோக்கி நடக்கலானாள்.

# 29

காஞ்சி மாநகரில், பல்லவர்களின் புராதன மாளிகையில், விசாலமான கூடத்தில், வீணைக் கலைஞர் பரமகுரு ஓய்வெடுக்க ஏற்பாடாகியிருந்தது.

சாலினிக்கு வேறு ஓர் அறையை ஒதுக்கியிருந்தார்கள்.

"நான் அவருடன்தான் இருக்கவேண்டும். அவருக்குப் பணிவிடை செய்து பழக்கப்பட்டவள் நான்" என்று மாளிகை அதிகாரியிடம் சொல்லிப்பார்த்தாள் சாலினி.

இரவோடு இரவாக, பரமகுருவையும் அவளையும் இரட்டை மாட்டு வண்டியில் அமர்த்திக் காஞ்சிபுரம் அழைத்து வந்தார்கள். துணைக்குக் குதிரை வீரன் ஒருவன் தொடர்ந்து வந்தான். சற்றுத் தொலைவில் பத்துப் பதினைந்து பல்லவ வீரர்கள் பாதுகாப்பிற்காக வந்தனர்.

"இப்பொழுது நேரம் என்ன இருக்கும் சாலினி?" என்று பரமகுரு கேட்டார்.

"தெரியவில்லை. வானத்தில் சந்திரனைக் காணவில்லை. காலைப் பொழுது நெருங்கும் வேளையாக இருக்கலாம்" என்றாள் சாலினி.

"நாம் எங்கே போகிறோம்? உனக்கு யாராவது சொன்னார்களா? சித்திரமாயனும், நந்தீசனும் அறியாவண்ணம் நம்மை அழைத்துச் செல்கிறார்கள்" என்றாள் சாலினி.

"பல்லவ இலச்சினையைக் காட்டி, வண்டியில் ஏறுமாறு சொன்னார்கள்" என்றாள் சாலினி.

"பல்லவ சக்கரவர்த்திகளின் உத்திரவு என்றார்கள்" என்றாள் சாலினி.

"காம்போஜ நாட்டிலிருந்து வீணை பயில வந்த பெண் எங்கே? அவளும் நம்முடன் வரவில்லையா?" கவலையுடன் கேட்டார் பரமகுரு.

"எனக்கும் கவலையாக இருக்கிறது. அவள் எங்கே சென்றிருப்பாள்? நரேந்திரன் என்ற பெயருடன் ஓர் இளைஞன் வந்தான். ஒருவேளை அவன் அழைத்துச் சென்றிருக்கலாம். அவளுக்கு என்ன நேர்ந்ததோ? என்ன ஆனாளோ? அவள் உடன் கொண்டுவந்திருந்த வீணையின் கதி என்ன? அந்தப் பொல்லாத நந்தீசன் கரங்களில், அவள் சிக்கிவிட்டால், சீரழிந்து விடுவாள்" என்று சாலினி கூறும்போது, அவளிடம் கவலை மிகுந் திருந்தது.

"கவலைப்படாதே சாலினி, இறைவன் காப்பாற்றுவான்" என்று கூறித் தேற்ற முயன்றார் பரமகுரு. அவளுடைய கரத்தை எடுத்துத் தன் கரங்களுடன் மெல்ல வைத்துக்கொண்டார்.

"சாலினி, நீ இல்லாவிட்டால் இருள் நிறைந்த உலகில் நான் எப்படி வாழமுடியும்? வீணைப் பயிற்சி தடைப்பட்டுவிட்டதே என்ற கவலைதான். காஞ்சிபுரத்தில் முகுந்தனுக்கு வீணை கற்றுத்தர வேண்டு மாம். அவருக்குக் கற்றுத் தந்த நேரம் போக, மீதி நேரத்தில் நீயும் பயிலலாம்" என்றார்.

சாலினி, அவர் கரங்களை எடுத்துத் தன் விழிகளில் வைத்துக் கொண்டாள்.

"சாலினி, என்ன இது? நீ அழுகிறாயா? வெப்பமான கண்ணீர் என் விரல்களை நனைத்துவிட்டதே! என்ன கவலை உனக்கு? மனம் விட்டுச் சொல்லு; காஞ்சி சென்றதும் முகுந்தனிடம் கேட்டு உதவிகள் பெறுகிறேன். பல்லவ சக்கரவர்த்தியைச் சந்திக்க நேர்ந்தால், நீ எனக்குச் செய்யும் உதவிக்காக உனக்குச் சிறப்புப் பரிசுகள் பெற்றுத் தருவேன்" என்று கூறி, அவள் விழிநீரைத் துடைத்தார். மெல்ல அவளைத் தன் மீது சாய்த்துக்கொள்ள முயன்றார்.

சாலினி, அவர் கரங்களைத் தடுத்து மெல்லிய குரலில், "உச்... வண்டி ஓட்டி உங்களைப்பற்றித் தவறாக நினைத்துவிடப் போகிறார்" என்றாள்.

"என்னைத் தவறாக நினைக்க இந்தப் பல்லவ பூமியில் யாரும் இல்லை. விழியற்று வேதனையுடன் வாடும் நான், என்னை நானே நொந்து கொள்கிறேன். வீணையின் இனிய இசையைக் கேட்டுக் கொண்டு இருப்பதால் உயிருடன் இருக்கிறேன். இனிய இசையை மீட்ட உதவுவது நீ. நீ என் உயிர். உன்னோடு நான் சல்லாபிப்பதைத் தவறாக



நினைப்பவர் யார்?" பரமகுரு உணர்ச்சிமிகுதியில் பேசினார். கம்பீரமான காளை பூட்டப்பட்டு ஜல்ஜல் ஓசையுடன் விரைந்து வந்த வண்டியி லிருந்து வேறு வண்டிக்கு அவர்களை அழைத்துச் செல்கிறார்கள். மாட்டு வண்டி அசைந்தாடிச் சென்றுகொண்டிருந்தது. வந்தவுடனேயே, பரமகுருவுக்குத் தனி இடமும், சாலினிக்குத் தனி இடமும் தரப்பட்டன.

"மாலையில் முகுந்தன், பரமகுருவைச் சந்திக்க வந்தார். சாலினி பரமகுரவின் அருகே இருந்தாள்.

"நாளையிலிருந்து வீணை பயில வருகிறேன்" என்றார் முகுந்தன்.

தலையசைத்த பரமகுரு, முகுந்தனை நோக்கி, "ஓர் உதவி செய்ய வேண்டும்" என்றார்.

"என்ன வேண்டும் கேளுங்கள். உடனே நிறைவேற்றுகிறேன்" என்றார் முகுந்தன், சாலினியை நோக்கியவாறு.

"சாலினியை என் வீட்டில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். எனக்குப் பணிவிடைகள் செய்வதில் அவளுக்குப் பெரும் மகிழ்ச்சி. என் அருகே அவளில்லாவிட்டால் எனக்குச் சோர்வு ஏற்படுகிறது. அவளை வேறு எங்கோ தங்குமாறு ஏன் ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்? இங்கேயே தங்கட்டும்" என்றார்.

சாலினியைப் பார்த்தவாறு முகுந்தன் சொன்னார். "ஐயா, தங்களுக்கு உதவியாக சாலினி இருந்துவந்தது எனக்குத் தெரியும். பெண்கள் இந்த மாளிகையில் தங்குவதற்கு அனுமதி இல்லை. பகலிலும், ஓர் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே சாலினி இங்கு வரமுடியும். தங்களுக்குத் தேவையானவற்றைச் செய்துதர பணியாட்கள் இருக் கிறார்கள்" என்றார்.

"குறிப்பிட்ட நேரம் என்றால்...?"

"பகலில் இரண்டு நாழிகை... பிறகு நான் தங்களிடம் வந்துவிடு வேன். பல்லவ சக்கரவர்த்தி, பரிவாதினி வீணையை இங்கே கொண்டு வரப்போகிறார். அவர் அதை மீட்டும்போது, மற்றவர்கள் இருப்பது சரியன்று" என்றார் முகுந்தன்.

"பரிவாதினியா?" என்று பரமகுரு கேட்கும்போது, குரலில் ஆவல் மிகுந்திருந்தது.

"ஆம்; பரிவாதினி வீணையைப் பாதுகாப்பான இடத்தில் வைத் திருக்கிறார். அதை இந்த இடத்திற்குக் கொண்டுவருகிறார். அந்த வீணை இங்குதான் இருக்கும். அந்த வீணையைக் கவர்ந்து செல்ல, சாளுக்கியர்கள் திட்டமிடுகின்றனர் என்பது உங்களுக்குத் தெரிந்

அசோக் நகர், சென்னை-83



திருக்கும். நம் சக்கரவர்த்தி பல்லவநாட்டைவிட பரிவாதினி வீணையைக் காப்பாற்றுவதில் கவனம் செலுத்துபவர் என்பதும் தங்களுக்குத் தெரிந்திருக்கும். தங்கள் இருப்பிடத்தில் வீணை இருக்கும்; அதற்குக் காவலர்கள் தேவை. ஒரு பெண் தனியே இந்த இடத்தில் இருப்பதை பல்லவ அரசர் விரும்பமாட்டார்" என்று கூறிவரும்போது முகுந்தன், சாலினியை ஓரக்கண்ணால் நோக்கினார்.

"பரிவாதினி வீணையை இங்கு கொண்டுவரப் போகிறாரா? முகுந்தன் அவர்களே! பரிவாதினியை நான் பார்த்திருக்கிறேன். என் தந்தையும், பாட்டனாரும் வீணையைப்பற்றி விளக்கிக் கூறியிருக் கிறார்கள். ஸ்வரங்களை மீட்ட, மகேந்திர சக்கரவர்த்தி பல நாட்கள் உறக்கம் மறந்தும் ஆராய்ந்திருக்கிறாராம். ஞானசம்பந்தப் பெருமாள் அந்த வீணையை மீட்டி, கோளறுபதிகம் பாடியிருக்கிறார். நானும் பிற்காலத்தில் அந்த வீணையில் தேவாரப் பதிகங்களைப் பாடிக்கொண்டே மீட்டும் பெரும்பேறு எனக்குக் கிடைத்திருக்கிறது. ஓ, முன்பிறவியில் நான் என்ன பாவம் செய்தேனோ? என் பார்வை போய்விட்டது. ஆனால் கலை உள்ளமும் அதன் வழிநடக்கும் என் விரல்களும் இன்றளவும் விழிப்புணர் வுடன் இருக்கின்றன. என் சொந்த வீட்டை விட்டு வருகிறோமே என்று நான் கவலைப்பட்டேன். எனக்கு இனி எந்தக் கவலையுமில்லை. ஆனால் அந்த மகிழ்ச்சியிலும் சிறு கவலை. அதுதான் சாலினியை என்னிடமிருந்து பிரிப்பது. சக்கரவர்த்தியிடம் சொல்லி, அவர் முடிவில் சிறு மாற்றம் செய்யச் சொல்லுங்கள். அவளில்லாமல் நான் இல்லை என்ற நிலை ஏற்பட்டு விட்டது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை... எனக்குப் பிறகு அவள்தான் இந்தக் கலைக்கு வாரிசு. வீணையில் தேர்ச்சி பெற இந்த நாட்டில் பத்து சீடர்களையாவது உருவாக்கவேண்டும் என்பது என் ஆசை. சக்கரவர்த்திகளிடம் நானும் சொல்கிறேன். நீங்களும் சொல்லி ஆதரிக்க வேண்டும்." 151984|5431584

பரமகுரு நெகிழ்ந்து பேசியபோது, முகுந்தன், சாலினியைப் பார்த்த வாறிருந்தார். பரமகுருவின் கரங்களைப் பற்றி, "ஐயா! இந்தக் கரங்களுக் குக் கோடிகோடியாகப் பொன்னும் பொருளும் தரலாம். வீணைக் கலையை வளர்க்கவேண்டும் என்பதுதான் எங்கள் ஆசை. எங்கோ இருட்டறையில் பாதுகாப்பாக தூசு படிந்து இருக்கும் பரிவாதினியை, வெளிச்சத்தில் வைக்கவேண்டும். பரிவாதினியிலிருந்து எழும் இனிய நாதம், எங்கும் ஒலிக்கவேண்டும் என்பதுதான் எங்கள் ஆசை. காம்போஜத்திலிருந்து, வீணை பயில்வதற்காகவே பல்லவ நாட்டிற்கு வந்த சைலேந்திரியும் தங்கள் வாரிசாக உருவாக முடியும். அவள் இப்போது எங்கே இருக்கிறாள் என்று தெரியவில்லை. ஐயா, வீணைக்



கலைஞரே! சாலினிக்கும், சைலேந்திரிக்கும் வீணைக் கலையில் உள்ள நுட்பங்களைக் கற்றுக்கொடுத்துத் திறமையுடையவர்களாக்குங்கள்" என்றார்.

"சைலேந்திரி – மலைநாட்டு மங்கை, என் வீட்டில் அவள் தங்கி யிருந்திருக்கிறாள். என்னிடம் வீணை பயில வேண்டும் என்ற ஆவலில், காம்போஜத்திலிருந்து வந்திருக்கிறாள் என்பதை நான் அறியவில்லை" என்று அவர் கூறும்போது, முகுந்தன் குறுக்கிட்டு, "தாங்கள் கூறுவதை மறுக்க வேண்டியிருக்கிறது. தங்களிடம் வீணை பயில அவள் வரவில்லை. பல்லவ நாட்டிற்குச் சென்று காஞ்சியில் வீணை பயிலுமாறு அவளுடைய தாய் சொல்லி அனுப்பியிருக்கிறாள். தங்களுடைய புலமை அவளுக்குத் தெரியாது. கடல்மல்லையில் மரக்கலத்திலிருந்து இறங்கிய வுடனேயே சைலேந்திரிக்குத் தொல்லை தொடங்கிவிட்டது. நந்தீசன் அவளைச் சந்தித்து, தங்கள் இல்லத்தில் சேர்த்திருக்கிறான். பல்லவ நாட்டிற்கு விரோதமானவர்கள் கூடிப் பேசும் இடமாகத் தங்கள் வீட்டைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்..." என்று கூறும்போது, பரபரப்புடன் பரமகுரு கேட்டார்: "நந்தீசனும் அப்படிப்பட்டவரா?"

"ஆமாம். நந்தீசன், சித்திரமாயனின் ஆதரவாளர். இதோ இங்கு நிற்கிறாளே. சாலினி, அவளும் சாளுக்கிய நாட்டிலிருந்து வந்தவள்தான்" என்று கூறிவரும்போது, சாலினி நடுக்கத்துடன், "ஐயா, நான் மாறி விட்டேன். இப்போது நான் பல்லவ நாட்டிற்கு விசுவாசமுள்ளவள். என்னைத் தவறாக நினைக்காதீர்கள். நந்தீசன் வலையில் நான் சிக்கினாலும், அதிலிருந்து அறுபட்டு வெளிவந்துவிட்டேன். நான் – நான் வீணைக் கலைஞர் பரமகுருவின் பரம ரசிகை. அவரைக் குருநாதராகக் கொண்டவள்" என்று கூறினாள். அவள் குரல் அச்சத்தால் தடுமாறியது.



# 30

அன்று இரவு முழுவதும் சைலேந்திரி உறங்கவில்லை. கடல் மல்லைக்கு வந்தபிறகு, உறங்காது பல இரவுகளைக் கழித்திருக்கிறாள். கவலையும், வேதனையும் இதயத்தை அழுத்த, உறங்காமல் இருக்கும் ஒவ்வொரு நொடியும் அவளைப் பயமுறுத்தும்.

தன்னுடன் வந்த பெரியவரைக் காணவில்லை. தன்னைச் சந்திக்க அவர் எந்த முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லையா? என் தாயிடம் வாக்களித்து வந்த அவர், அதை மீறவேமாட்டார். அவருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருக்க வேண்டும். அவரைத் தேடிக் கண்டுபிடித்துவிட நரேந்திரன் உறுதிபூண்டிருக்கிறார். கண்டுபிடித்து விடுவார் – நினைவலைகள் அவள் உறக்கத்தைக் குலைத்தன.

சைலேந்திரி, இருள் பிரிவதற்கு முன்பே எழுந்துவிட்டாள். குடிலுக்கு அருகே உள்ள சிறிய கேணிக்குச் சென்றாள். குளிக்க வேண்டும் என்று தோன்றியது.

கதிரவனுக்குக் கட்டியம் கூற கீழ்வானில் ஆயத்தமாகும் வேளையில், யாரோ அங்கே குளித்துக்கொண்டிருப்பது தெரிந்தது. கேணிக்கரை ஓரமாக ஒரு சிறு மூட்டை. சூலாயுதம் வெளியே நீட்டிக்கொண்டிருந்தது. அவிழ்த்து வைக்கப்பட்ட புடவை, ஒரு பெண் குளிக்கிறாள் என்பதைப் புலப்படுத்தியது.

சைலேந்திரியும் மார்பளவுக்குச் சேலையைச் சுற்றிக்கொண்டு நீரில் இறங்கினாள். கேணியில் மண்டியிருந்த தாமரை இலைகளைக் கைகளால் தள்ளிக்கொண்டே, ஆழமற்ற பகுதியில் தண்ணீரில் அமிழ்ந்தாள். பிறகு எழுந்தபோது, கரையில் யாரோ நிற்பதைத் கண்டாள். கேணியில் குளித்துக் கொண்டிருந்தவளாகத்தானிருக்கவேண்டும்.



மெல்ல மெல்ல கிழக்கு வெளுத்தது. அந்தப் பெண் இன்னும் அங்கேயே நின்றுகொண்டிருக்கிறாள். சைலேந்திரி கரை ஏறி, சற்று மறைவான இடத்திற்குச் சென்று ஈரச் சேலையைப் பிழிந்துகொள்ள முயன்றாள்.

தேவசோமை, சைலேந்திரியின் நடவடிக்கையை இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் இதழ்கள் முணுமுணுத்தன. 'நேற்றுப் பார்த்த அதே சைலேந்திரிதான். மெல்லிய காலைப் பொழுதில் தேவதை போல் தோன்றுகிறாள். இனியும் தாமதப்படுத்தக்கூடாது. சைலேந்திரியிடம் பேசவேண்டும்.'

"சைலேந்திரி" என்று குரல் கொடுத்தாள் தேவசோமை.

ஈரக் கூந்தலை ஈரம் போகக் கோதியவாறு, சைலேந்திரி திடுக்கிட்டுத் திரும்பினாள்.

மென்மையான குரல். சைலேந்திரி நின்றாள்.

"சைலேந்திரி! மலைநாட்டு மங்கையே! உன்னைப் பார்க்க வேண்டும் என்று துடித்துக்கொண்டிருக்கிறேன். மாமல்லபுரத்துச் சிற்பம் போல் அழகெல்லாம் ஓர் உருவமாகத் திகழும் உன்னை நெருங்கிப் பேச வேண்டும் என்ற என் ஆவலை எப்படி விவரிப்பேன்?"

சைலேந்திரி, திரும்பிப் பார்த்தாள். தேவசோமையின் விசித்திரத் தோற்றம் வியப்பை அளித்தது. "இவள் யார்? என் பெயர் இவளுக்கு எப்படித் தெரியும். என்னுடன் பேசுவதற்குக் காத்திருந்ததாகச் சொல்கிறாள். என்னைச் சந்தித்துப் பேச, யார் தடை செய்தார்கள்? எதற்காகப் பேச வேண்டும்?"

கீழ்வானத்துக் கதிரவனின் மெல்லிய குளிப்பாட்டலால், இருவர் மேனியிலும் புதிய பளபளப்பு பிரதிபலித்தது.

"சைலேந்திரி, என்னை இமைக்காமல் பார்ப்பதிலிருந்து, நான் ஒரு விசித்திரப் பெண்ணாக உனக்குத் தோன்றுகிறேனா? உன் தந்தையை எனக்குத் தெரியும். காஞ்சிமா நகரத்தில் எனக்கு அறிமுகமாகாதவர்களே கிடையாது. உன் தாய் காம்போஜத்தில் வசிப்பதும் தெரியும். நீ கடல் மல்லைக்கு வந்து, திசை தெரியாமல் தவித்துக்கொண்டிருப்பதும் தெரியும்" என்று தேவசோமை பேசிக்கொண்டே வரும்போதே, சைலேந்திரியின் முகத்திலிருந்து வியப்பு மெல்ல மறைந்து, தேவசோமையைப் பற்றி அறிந்துகொள்ளும் ஆவல் மேலிட்டது.

அருகேயிருந்த தாழம் புதருக்கருகே இருவரும் அமர்ந்தனர். தேவசோமை, தன் பேச்சுத்திறமையால் சைலேந்திரியைக் கவர்ந்து

விட்டாள். நேரம் போவதே தெரியாத அளவிற்கு, தேவசோமையின் சுவையான பேச்சு அமைந்திருந்தது.

சைலேந்திரியைக் காணாமல் பொன்னாச்சி குரல் கொடுத்தாள்.

"அதோ பாட்டி கூப்பிடுகிறாள். எவ்வளவு அன்பானவள். அவர்களின் அன்பு மட்டுமில்லாமல் இருந்திருந்தால், நான் அதிர்ச்சியாலே இறந்திருப்பேன் – ஆனால், எவ்வளவுநாள் இங்கே தங்கியிருக்க முடியும்? மாணிக்க வீணை பயில வந்தேன்" என்று கூறும்போது, அவள் குரல் தழுதழுத்தது. அதுவரை நடந்த சம்பவத்தை விவரித்தாள்.

மீண்டும் 'சைலேந்திரி' என்ற குரல்.

தேவசோமை பரபரப்புடன் எழுந்தாள். "சைலேந்திரி போ, போ. உடனே போ. மாணிக்க வீணை பயிலவேண்டும். அவ்வளவுதானே? உன்னை அழைத்து வந்த பெரியவரைத் தேடிப்பிடித்துத் தரவேண்டும். அவ்வளவுதானே? இவற்றை நான் செய்தால் எனக்கு நீ என்ன தருவாய்?" தேவசோமை கேட்டாள். சைலேந்திரியின் விழிகளில் தோன்றியது வியப்பா, நன்றியைத் தெரிவிக்க வெறும் வார்த்தைகளின் பிரதிபலிப்பா?

"தேவசோமை– என்னுடன் குடிலுக்கு வரவேண்டும். பொன்னாச்சி மிக நல்ல பாட்டி" என்று தேவசோமையை அழைத்தாள்.

"முதிய சிற்பியின் மனைவிதானே? நான் அவர்களை நன்றாக அறிவேன். நான் இப்போது அங்கே வரவில்லை. நீ இங்கே தங்கியிருந்தால், எக்காலத்திலும் வீணையைக் கற்றுக் கொள்ள முடியாது. பெரியவரைச் சந்திக்க முடியாது. நீ நினைப்பதுபோல் நந்திவர்மன் நல்லவரல்லர். சரி, சரி, பிறகு வருகிறேன்" என்று கூறிப் புறப்பட்டாள்.

சைலேந்திரி, தேவசோமையின் கரத்தைப் பிடித்துக்கொண்டு, "எப்பொழுது வருவீர்கள்?" என்று கேட்டாள்.

"இன்று மாலை. இதே தாமரைக் கேணி அருகே சந்திப்போம். என்னைச் சந்தித்ததாக யாரிடமும் சொல்லிவிடாதே" என்றாள் தேவசோமை. திரும்பிப் பாராமலேயே தேவசோமை நடந்து மறைந்தாள்.

"தேவசோமை" என்ற குரல் கேட்டுத் திரும்பினாள். பாறையின் மறைவிலிருந்து குரல் வந்தது. நந்தீசன் சிரித்தவாறு எதிரே வந்தான்.

"போ, போ- தடுக்காதே. எனக்கு இப்போது அசுரப்பசி, வயிற்றுக்கு ஏதாவது போடாவிட்டால் உன்னைத்தான் தின்று விடுவேன்" என்று அதட்டலுடன் கூறிவிட்டு, தேவசோமை செல்ல முயன்றாள்.

"தேவசோமை! உனக்கு வேண்டிய உணவு வகைகளைத் தருகிறேன். நீ கேட்டபடி மது அபிஷேகமே செய்தேனே! இரவுக்குள் மறந்துவிட்டாயா? அந்த மலைமகள் இருக்குமிடம் சொல்லமாட்டாயா?" என்று நந்தீசன் குழைந்தான்.

"வழியை விடுகிறாயா அல்லது இந்தச் சூலாயுதத்திற்கு இரையாகிறாயா? உன்னோடு எனக்கென்ன பேச்சு?"– விழிகளில் தீப்பொறி பறக்கக் கூறிவிட்டுச் செல்ல முற்பட்டாள்.

"கோபப்படாதே தேவசோமை. எங்களிடமும் கோபப்பட்டால், வேறு யார் உனக்கு ஆதரவாக இருக்கப்போகிறார்கள். உன் மீது எனக்கு உள்ளது அன்பா, காதலா என்று இன்றளவும் புரியவில்லை" என்று சொல்லி வரும்போது, தேவசோமை அவன் மீது பாய்ந்து, தன் சூலத்தின் பின்புறத்தால் மண்டையில் அடித்தாள்.

கரத்தால் அடிபட்ட இடத்தை அழுத்திப் பிடித்துக் கொண்ட நந்தீசனை நோக்கி, "எவ்வளவு பெண்களிடம் காதல் கொள்வாய்? காமப் பேயே! எனக்கென்று காஞ்சிச் சிறையில் ஒருவர் காத்திருக்கிறார் என்பது உனக்குத் தெரியாதா? அவரை விடுவிக்கும் முன்பு, மாணிக்க வீணையைச் சாளுக்கிய அரசருக்குப் பரிசாகத் தரத் துடிக்கும் என்னிடம் காதல் பேசுகிறாயா? இனி ஒரு தடவை இப்படிப் பேசினால் மரண அடிதான்" என்று சொல்லிக்கொண்டே விரைந்தாள்.

நந்தீசன் முன் மண்டையில், பலமாக வீழ்ந்த அடியினின்று இரத்தம் அதிகம் வெளியேறவே, அவனால் எழ முடியவில்லை. அங்கேயே மயங்கி வீழ்ந்தான்.

மாலை மறைந்தது. இரவு நகர்ந்தது. இரவு இரண்டாவது சாமத்தில், தேவசோமை தாமரைக் கேணிக்கருகே வந்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் சைலேந்திரியும் அங்கு வந்தாள்.

"அந்த மூதாட்டி என்னைத் துளைத்து எடுத்து விட்டாள். காபாலிகைப் பெண்ணுடன் நான் பேசிக்கொண்டிருப்பதை யாரோ அவர்களிடம் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். உன்னிடம் பேசுவதோ, உன்னைப் பார்ப்பதோ அவ்வளவு பெரிய குற்றம் என்கிறாரே அந்த மூதாட்டி, ஏன்? பல்லவநாட்டிற்குக் காபாலிகர்கள் விரோதிகள் என்று சொல்கிறாரே அவர். உண்மைதானா?" என்று கேட்டாள். ஒரு சிறு குழந்தையின் உள்ளம் பிரதிபலித்தது.

"சைலேந்திரி! நீ இந்த நாட்டிற்குப் புதியவள். ஓர் லட்சியத்துடன் நீ வந்திருக்கிறாய். உன்னுடன் துணையாக வந்த பெரியவரைக் காணவில்லை. வீணை பயிலவும் முடியாமல், நீ வீணே காலத்தைக் கழிக்கிறாய். அந்தச் சிற்பியும், அவர் மனைவியும் மிகப் பொல்லாதவர்கள். பல்லவ மாளிகையிலுள்ள அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு,

உன்னை மணம் முடித்துக் கொடுத்துவிடப் போகின்றனர். படைத் தளபதி உதயசந்திரன் அங்கு வந்தானா?" என்று கேட்டுச் சற்று நிறுத்தினாள்.

"ஆமாம். இப்போதுகூட இங்கேதான் அவர் தங்கியிருக்கிறார்" என்றாள் சைலேந்திரி.

"நான் நினைத்தது சரி. நாளையே உதயசந்திரனுடன் உன்னை மூதாட்டி அனுப்பிவிடுவாள்."

"ஐயோ..."

"பயப்படாதே. நானிருக்கிறேன். உனக்கு ஒரு நல்ல செய்தி. உன்னுடன் துணைக்கு வந்த பெரியவரைச் சந்தித்தேன்."

"ஓ! பெரியவரா? எங்கே இருக்கிறார்? தேவசோமை, நீ அவரைப் பார்த்தாயா? அவரிடம் என்னைப்பற்றிச் சொன்னாயா?" என்று சைலேந்திரி பரபரப்புடன் கேட்டாள்.


"சொல்லாமல் இருப்பேனா? பாவம், அவரை ஓர் பாழடைந்த வீட்டிற்குள் பூட்டி வைத்திருக்கிறார்கள்" என்று சொல்லிவிட்டு, சைலேந்திரியை உற்றுப்பார்த்தாள்.

சைலேந்திரி பரபரப்புடன் எழுந்தாள். "பாழடைந்த வீட்டிலிருக்கிறாரா? ஐயோ! என்னால் அவருக்குத் தொல்லை. அவரை உடனே பார்த்தாக வேண்டும்." பரபரப்புடன் – துக்கம் தொண்டையை அடைத்தது.

"அவரைப் பார்க்க வருகிறாயா?"– தேவசோமை கேட்டாள். சைலேந்திரி தலையை அசைத்தாள்.

"இப்போதே வருகிறாயா?" தேவசோமை கேட்டாள்.

"ஒரு கணம்கூட தாமதிக்கமாட்டேன்" என்றாள் சைலேந்திரி.



# 31

தேவசோமை பொய் சொல்லவில்லை. பெரியவர் இருக்குமிடத்திற்கு சைலேந்திரியை அழைத்துச் சென்றாள். பெரும் பாறைகளுக்கு அருகே பழங்காலக் கட்டடம் ஒன்று. அதற்கு ஒரே ஒரு பலகணி, ஒரே ஒரு நுழைவாயில்.

வானத்தில் சிரித்துக்கொண்டிருந்த சந்திரன் ஒளியில், அந்த இடத்தை அடைவது சற்றுக் கடினமாக இருந்தது. கல்லும் முள்ளும் காடும் மலையும் கடந்து நடந்து செல்லும் தேவசோமைக்கு, அங்கு செல்வதில் எந்தத் தொல்லையும் ஏற்படவில்லை. சைலேந்திரி தவித்துப் போனாள்.

அந்தக் கட்டடத்தின் வெளியே வீரனொருவன் அரைத் தூக்கத்திலிருந்தான்.

"என்னப்பா, காவல் காக்கும் லட்சணம் இதுதானா?" என்று தேவசோமையின் அதட்டல் குரலில், அவன் நடுநடுங்கி எழுந்து, கை கட்டி நின்றான்.

காபாலிகைப் பெண்களைப் பற்றி அவனுக்குத் தெரியும். காபாலிகர்கள் பல்லவ நாட்டில் இல்லை என்பதும் தெரியும். இவள் மட்டும் பயமின்றி எவ்வாறு உலவுகிறாள்?

"என்ன அப்படிப் பார்க்கிறாய்? கதவைத் திற!" என்றாள் அதிகாரத்துடன்.

காவல்காரன் திகைத்தான். ஒருகணம் அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

"திறவுகோலை என்னிடம் கொடு" என்று கூறி, அவனை நெருங்கினாள்.

"ஐயா கட்டளை – ஒருவரையும் உள்ளே விடக்கூடாது என்று!"

அவன் பயத்துடனும், அத்துடன் கடமை உணர்வுடனும் கூறினான்.

"ஐயாவா – யாரது ஐயா?" தேவசோமை சீறினாள்.

அவன் மெல்லக் கூறினான். தேவசோமை பெரிதாக நகைத்து, "நந்தீசனா? இந்த நேரம் அவன் சிவலோகம் செல்ல ஆயத்தமாக இருப்பான். கொடு திறவுகோலை" என்று, அவன் கரத்திலிருந்த திறவு கோலைப் பறித்தாள். தடுக்க முயன்ற அவன் முகத்தில், தன் முஷ்டியால் குத்தினாள்.

பாழடைந்த வீட்டில் இருந்தது ஒரே ஒரு சிறு கூடம். மண் தரை. கூடத்தின் நடுவே இருந்த சிறு மாடத்தில் அகல் விளக்கு எரிந்து கொண் டிருந்தது. அதற்கு எண்ணெய் வார்த்து, திரியிட்டு விளக்கேற்றும் பணியைக் காவல்காரன் ஏற்றிருந்தான். மாலை மறையும் நேரத்தில், ஒரு மண் தட்டில் சோறும், சிறிது குழம்பும் ஊற்றி வைத்துவிடுவான். மண் கலயத்தில் குடிக்க நீர் கொண்டு வைப்பான்.

"எவ்வளவு நாளைக்குத்தான் உப்பில்லாக் குழம்பும், களி போன்ற சோறும் தின்று உயிர் வாழ வேண்டியிருக்குமோ? தேவி! உன்னைப் பூசிக்காது, உயிரை ஏன் வைத்துக்கொண்டிருக்கிறேன் என்று தெரிய வில்லை. தம்பி! உன்னைப் பார்த்தால் மிகவும் நல்லவனாகத் தெரிகிறது. என்னை ஏன் இங்கு அடைத்து வைத்திருக்கிறார்கள்? சொல்வாயா?" என்று குழந்தையைப்போல் கெஞ்சிக் கேட்டார் பெரியவர்.

காவல்காரன் சிரித்தான். "நான் நல்லவனாக இருப்பதால்தான் உங்கள் தொந்தரவைச் சகித்துக் கொண்டிருக்கிறேன். உங்களை இங்கே கொண்டு வந்து அடைத்தவுடனேயே, நந்தீசப் பெருமாளைக் கேட்டிருக் கலாமே" என்று அவன் சொல்லிச் சிரித்தான்.

"மரக்கலத்திலிருந்து இறங்கியவுடனேயே நாங்கள் சந்தித்த முதல் கொடியவன் நந்தீசன்தான். சைலேந்திரியை எங்கே அடைத்து வைத்திருக் கிறானோ? அவளுக்கு என்ன நேர்ந்ததோ? என் உயிர் போனாலும் சரியே. சைலேந்திரிக்கு ஒன்றும் நேராதிருக்கவேண்டும். நான் வணங்கும் சியாமளை, அவளைக் காப்பாற்ற வேண்டும். உன் வடிவில் வந்து அம்பிகை காப்பாற்றுவாள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அதனால் தான் உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன். என்னை ஏன் இங்கு அடைத்து வைத்திருக்கிறார்கள்? எப்போது விடுவிப்பார்கள், சொல்லு தம்பி" என்று கண்ணீர் விடுவார்.

அவர் தடுத்தும் கேளாமல், வலுக்கட்டாயமாக அவர் தாடி, மீசையை வழித்து மொட்டையடித்துவிட்டார்கள்.

"அந்தக் கத்தியால் என் கழுத்தை அறுத்துவிடு" என்று கூவினார் பெரியவர்.

அருகே இருந்தவர்கள் பெரிதாக நகைத்தனர். ஒருவன் கூறினான்: "எங்கள் வேலை அதுவன்று; கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்வது."



"எவ்வளவு காலமாகும்?" பெரியவர் குரலில் ஆத்திரம் இருந்தது.

"உங்களைச் சித்திரவதை செய்யாமல் விட்டுவிட வேண்டு மென்றால், ஒரு காரியத்திற்குச் சம்மதிக்கவேண்டும்" என்றான் ஒருவன்.

"என்ன செய்யவேண்டும். என்ன செய்யவேண்டும்...?" பரபரத்தார், பெரியவர்.

"காம்போஜத்திற்குச் செல்லும் மரக்கலத்தில் ஏறி, உங்கள் நாட்டிற் குப் போகிறேன் என்று உறுதி கூறவேண்டும்."

"ஆகா! உடனே போகச் சித்தமாயிருக்கிறேன். பல்லவநாட்டில் ஒரு கணம்கூட இருக்க விரும்பவில்லை. இந்த மண்ணில் அடி வைத்தது முதல் தொல்லை, துன்பம்தான்!" – பெரியவர் குரலில், துயரம் மிகுந்திருந்தது.

"நாளை மறுநாள் துறைமுகத்திலிருந்து மரக்கலம் புறப்படுகிறது. உங்களை அதில் ஏற்றிவிடுகிறோம்."

"நான் மட்டும் போகமாட்டேன். என் சைலேந்திரியை அழைத்துக் கொண்டுதான் போவேன். அவளுக்குத் துணையாக வந்தேன். சைலேந்திரியின் தாயிடம் நான் கொடுத்து வந்த வாக்குறுதியை மீறமாட்டேன். சைலேந்திரியை நான் உடனே பார்த்தாக வேண்டும்" – பெரியவர் குரலில் அழுத்தம் இருந்தது.

"எங்கள் தலைவரும் சைலேந்திரியைத் தேடிக்கொண்டிருக்கிறார்" என்று அங்கிருந்தவன் சொன்னபோது, பெரியவர் சோகக் குரலில், "சைலேந்திரி எங்கிருக்கிறாள் என்று உங்களுக்கும் தெரியாதா?" என்றார். மறுகணம் அவர் அழுதுவிடுவார்போல் தோன்றியது.

அந்தப் பாழடைந்த கட்டடத்தில், பெரியவர் புலம்பியவாறிருந்தார். ருசியான உணவு உண்டு, சுகமாக வாழ்ந்தவர். சரியான ஆகாரமின்றி மெலிந்துவிட்டார். தாடி, மீசை இல்லாமல், மெலிந்து இருந்த அவரை அடையாளம் காண்பது கடினமே.

அவரைச் சந்தித்தவுடன், சைலேந்திரி வாய்விட்டு அழுதுவிட்டாள்.

தேவசோமை அவர்களைச் சமாதானப்படுத்தினாள். இருவரும் பிரிந்திருந்தீர்கள்; சந்தித்துவிட்டீர்கள். அடுத்து ஆகவேண்டியதைக் கவனிக்கவேண்டும். விரைந்து திட்டமிட வேண்டும்" என்றாள்.

பெரியவரும், சைலேந்திரியும், தங்களுக்கு ஏற்பட்ட தொல்லை களைப் பேசிக்கொண்டனர். தேவசோமை கடிந்துகொண்டாள்.

"இன்னும் சிறிது நேரத்தில் நாம் புறப்படவேண்டும். இங்கிருந்தால் பெரும் ஆபத்து. சைலேந்திரியைச் சித்திரமாயன் அழைத்துச் சென்று விடுவான். அல்லது, சைலேந்திரியைக் காணவில்லை என்று தேடுவதற்கு,

நான்கு திசைகளிலும் பல்லவ வீரர்கள் புறப்பட்டு விடுவார்கள். சைலேந்திரியை, உதயசந்திரன் அடையத் திட்டமிடுகிறான். அவன் கரத்தில் இவள் அகப்பட்டுக்கொண்டுவிடுவாள். மலைப் பாம்பா, கொடும் புலியா—யாரிடம் அகப்பட்டுக்கொள்ள விரும்புகிறீர்கள்?" என்று தேவசோமை, அவர்களை நோக்கிப் பரிந்து பேசுவதுபோல் கோபமாகப் பேசினாள்.

சைலேந்திரி கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "பெரியவர் என்ன முடிவு எடுக்கிறாரோ, அதன்படி நடக்கச் சம்மதிக்கிறேன். பல்லவ நாட்டைப் புரிந்துகொள்ள முயவில்லை. நல்லவர்களும் இருக்கிறார்கள்; கொடியவர்களும் இருக்கிறார்கள். யாரை நம்புவது என்றே எனக்குப் புரியவில்லை. நாம் காம்போஜத்திற்கே திரும்பிவிடுவோம். இங்கிருந்தால் இன்னும் எந்தவிதமான ஆபத்து ஏற்படுமோ!" என்று சொல்லி நிறுத்தியவள், தேவசோமையைப் பார்த்து, "எங்கள் குடும்பத்திற்கு உற்ற துணைவரான பெரியவருக்கு நேர்ந்திருப்பதைப் பார்த்தீர்களா? அவரை அலங்கோலம் செய்திருப்பதைப் பார்த்தீர்களா? பெண் என்று பாராமல் என்னையும் அவமானப்படுத்தினால் யார் பாதுகாப்புத் தருவார்கள்? யார் காப்பாற்றுவார்கள்?" என்றாள்.

"நானிருக்கிறேன். உங்களைக் காப்பாற்றத்தான் வாதாபியிலிருந்து ஓடோடி வந்தேன். சித்திரமாயனையும் நம்பவேண்டாம். நந்திவர்மனையும் நம்பவேண்டாம். ஒரு கணமும் தாமதிக்காமல் என்னுடன் புறப்பட்டு வாருங்கள். நடந்துபோனதைப்பற்றிப் பேசிக்கொண்டே இருந்தால், நடப்பதே வேறாக இருக்கும்" என்று தேவசோமை கூறினாள். வழக்கத்துக்கு மாறாக, அவள் குரலில் அன்பு பிரதிபலித்தது.

பாழடைந்த வீட்டுக் காவலன், முகத்தில் பலமாக தேவசோமையால் தாக்கப்பட்டு விழுந்து கிடந்தவன் மயக்கம் தெளிந்து, கண்விழித்துக் குரல் கொடுத்தான். அவனை மீண்டும் தேவசோமை, தன் சூலாயுதத்தால் தாக்கி நினைவிழக்கச்செய்து, அவனைப் பிடித்து இழுத்து அருகிலிருந்த புதர் மறைவில் கிடத்தினாள்.

"நந்தீசன் ஒன்று; இவன் இரண்டு. என் பணிக்கு இடையூறு செய்பவர்கள் யாராயிருந்தாலும் கைலாசம் செல்ல வேண்டியதுதான்" என்று கூறிப் பயங்கரமாக நகைத்தாள்.

பெரியவரையும், சைலேந்திரியையும் அழைத்துக்கொண்டு தேவசோமை அந்த இருளில் விரைந்து நடந்தாள்.

சற்று வேகமாகச் செல்ல வேண்டும், இன்னும் ஒரு நாழிகை நடக்க வேண்டும். இரவின் கடைசி சாமத்தில் நாம் சாளுக்கியன் குப்பம் அடைந்து விடுவோம். அங்கே நீங்கள் கவலையின்றி, பயமின்றி ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். இரண்டு நாள்கள் கழித்து நான் வருவேன். நாம் வாதாபிக்குப் புறப்படுகிறோம்" என்றாள்.

# 32

காஞ்சி மாளிகையின், விசாலமான கூடத்தில், பரிவாதினி வீணை ஓர் மேடையின்மீது வைக்கப்பட்டிருந்தது. மேடையை அலங்கார விரிப்பு அழகுபடுத்தியது. மல்லிகை மாலை வீணையின் மீது அணிவிக்கப் பட்டிருந்தது.

படைத்தலைவர் உதயசந்திரன், யாருடைய வருகைக்காகவோ நுழைவாயிலை நோக்கி அமர்ந்திருந்தார். வீணைக் கலைஞர் பரமகுரு அமைதியாக அமர்ந்திருந்தார். மற்றவர் சொல்படி நடக்க வேண்டிய நிலை அவருக்கு. பட்டாடை அணிந்திருந்தார். நெற்றியில், சந்தனத் திலகத்தின் நடுவே குங்குமம் இடப்பட்டிருந்தது.

காலையிலிருந்தே சாலினி பரபரப்புடனிருந்தாள். பரமகுரு நீராடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட பிறகு, மாளிகைப் பணியாளர்கள் பட்டுப் பீதாம்பரத்துடன் காத்திருந்தனர்.

"மஞ்சள் நிற வெண்பட்டும், மேலே வெளிர் நீல நிற உத்தரீயமும் வைத்திருக்கிறார்கள். உங்களுக்குப் பிடித்தமான ஆடை என்று அவர்களுக்கு எப்படித் தெரியும்?" —சாலினி கேட்டாள்.

"பல்லவ சக்கரவர்த்தி நந்திவர்மனுக்கு, என் மீது பிரியம் அதிகம். என் தேவையை நன்றாக உணர்ந்தவர். அவர்தாம் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்க வேண்டும்" என்றார் பரமகுரு.

"பல்லவ அரசரை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். பிரியம் உடையவர் என்று சொல்கிறீர்கள். ஆனால், அவர் இதுவரை தங்களை வந்து சந்திக்கவில்லையே ஏன்?" என்று சாலினி கேட்டாள். பல்லவ சக்கரவர்த்தியை ஒருமுறை காணவேண்டும் என்ற ஆவல் அவளுக்கிருந்தது.

"தங்களிடம் வீணை பயிலுகிறாரே முகுந்தன், அவரிடம் நீங்கள் கேட்கவில்லையா, 'அரசரைச் சந்திக்க வேண்டும்' என்று. பரிவாதினியை நீங்கள் மீட்டவேண்டும் என்ற ஆசை, நந்திவர்ம அரசருக்குக் கிடையாதா? இந்த முகுந்தன் குறுக்கே தடை செய்கிறார். நீங்கள் அவரை இன்று உறுதியுடன் கேட்டுவிட வேண்டும். நீங்கள் கேட்கிறீர்களா? அல்லது நானே கேட்கட்டுமா? பல்லவ சக்கரவர்த்தி இருப்பிடத்திற்கு நானே செல்கிறேன். எனக்கு என்ன பயம்?" என்று சாலினி, சற்று அழுத்தமாகவே கேட்டாள்.

பரமகுரு, அவளைச் சமாதானப்படுத்தினார். "சில நாட்களாக முகுந்தன் என்னிடம் மனம்விட்டுப் பேசுகிறார். எப்போதும் நீ என்னருகே இருக்க அனுமதி கேட்டேன். பரிவாதினி வீணையை இரண்டொரு நாளில் இங்கே கொண்டு வரப்போகிறார்களாம். அந்த நாளிலிருந்து உன்னை என்னுடன் தங்க வைக்க ஏற்பாடு செய்கிறாராம்!" என்று பரமகுரு கூறியவுடன், சாலினி அவர் கரத்தைப் பற்றி, "அப்படியா? நல்ல செய்தி! முகுந்தன் வாழ்க! என்றும் நான் உங்களைப் பிரியக்கூடாது. பரிவாதினி வீணையை நீங்கள் மீட்டுவதை நான் உடனிருந்து பார்த்து, கேட்டு, ரசிக்க வேண்டும்" என்று உற்சாகத்துடன் கூறினாள். சுற்று முற்றும் பார்த்து அவர் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்தாள். பரமகுருவிற்குப் பரமசுகமாக அது இருந்திருக்க வேண்டும்.

பரிவாதினி வீணையை, இமைகொட்டாமல் சாலினி பார்த்துக் கொண்டிருந்தாள். பரமகுரு, அவளைப் பல கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தார். அந்தக் கூடத்தில் பரிவாதினி வைக்கப்பட்டிருக்கும் இடத்தைப்பற்றிக் கேட்டார். அதன் வடிவழகை விவரிக்கச் சொன்னார். தாம் வாசிக்கும் வீணைக்கும், பரிவாதினிக்கும் உள்ள ஒற்றுமை–வேற்றுமைகளைக் கேட்டார். பல ஆண்டுகளுக்கு முன், தான் நேரே பார்த்திருக்கும் பரிவாதினி வீணையின் வடிவத்தை நினைவில் கொண்டு, அங்க அடையாளங்களை விவரித்து, அதன்படி இப்போது பரிவாதினி இருக்கிறதா என்று வினவினார்.

"நான் பரிவாதினியின் அருகே செல்லவில்லை. எப்படியும் நீங்கள் பரிவாதினியை மீட்டச் செல்வீர்கள். உங்களை மெல்லப் பிடித்து அழைத்துச் செல்வேன். உங்கள் அருகே அமர்வேன். வீணையின் தந்தியைப் பற்றி விவரிப்பேன். இனிய நாதம் எழுப்பும் வீணைத் தந்திகள் எப்படி இருக்கின்றன என்று ஒருமுறை ஸ்பரிசித்துப் பார்ப்பேன். பரிவாதினியை அடைய சாளுக்கிய அரசர் ஏன் ஆவல் கொண்டிருக்கிறார் என்பதற்கான காரணத்தை நான் மீண்டும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்" என்றாள்.



அவள் மிகவும் மெல்லிய குரலில் பேசினாள். 'சாளுக்கிய அரசரைப் பற்றி விவரித்திருக்கக்கூடாதோ' என்று எண்ணினாள். வாய் தவறி ரகசியத்தை வெளியிட்டதற்காகத் தன்னையே நொந்துகொண்டாள்.

பரமகுரு திடுக்கிட்டிருக்க வேண்டும். "சாளுக்கிய அரசன், பரிவாதினியை அபகரிக்கத் துடிக்கிறார் என்பது எனக்குத் தெரியும். உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார்.

சாலினி மௌனமாயிருந்தாள். அவர்கள் பேசுவது உதயசந்திரன் செவிகளில் வீழ்ந்திருக்க வேண்டும். ஆனால், கேட்டும் கேளாதவன் போல் இருந்த உதயசந்திரன், பரமகுரு அருகில் வந்தான்.

"பல்லவ சக்கரவர்த்தி நேரம் தவறாதவர். சிறிது நேரத்தில் வந்து விடுவார். பல ஆண்டுகளுக்குப்பிறகு இன்று பரிவாதினி வெளியே வருகிறாள். தங்கள் திருக்கரத்தால் மீட்டி, இனிய ஒலி எழுப்புங்கள். நான் உங்கள் அருகே இருக்கிறேன். பரிவாதினியின் இனிய நாதம் கேட்க, மிக மிக முக்கியமானவர்கள் மட்டும் கூடியிருக்கிறோம். முதல் அமைச்சர் வரப் போகிறார். பல்லவ அரசரும் பட்டத்து அரசியும் வர இருக்கிறார்கள். வேறு யாரையும் இந்த இடத்தில் இருக்க முகுந்தன் அனுமதிக்கவில்லை" என்று கூறிய உதயசந்திரன், விழிக்கோணத்தால் சாலினியை நோக்கினான்.

உதயசந்திரன் எதிர்பார்த்தபடியே சாலினியின் முகம் மாறியது. உள்ளத்தின் கள்ளம், முகத்தில் பிரதிபலித்தது.

பல்லவ அரசர் நந்திவர்மன் வரவில்லை. ஆனால், அங்கு முகுந்தன் வந்துகொண்டிருந்தார். சாலினி, பரமகுருவுக்கு மட்டும் கேட்கும் விதத்தில் மெல்லிய குரலில் பேசினாள்:

"முகுந்தன் வருகிறார். அரசர் ஏன் வரவில்லை?"

பரமகுருவுக்கு எல்லாம் இருட்டாகவே இருந்தது. ஒன்றும் புரியவில்லை; புலப்படவும் இல்லை. சாலினியிடம் அவர் கேட்டார்: "உதயசந்திரன் அருகே இருக்கிறாரா?"

"அவர் முகுந்தனிடம் பேசிக்கொண்டிருக்கிறார்."

"அரசர் வரவில்லையா?"

"தெரியவில்லை."

"நீ கேட்டுப்பாரேன்..."

"நான்?" –சாலினி தயங்கினாள். அதற்குள் முகுந்தன், பரமகுருவின் அருகே வந்து, அவர் கரத்தைப் பிடித்துத் தன் கண்களில் அழுத்திக்

கொண்டு, "இந்த விரல்களுக்கு விலைமதிப்பற்ற நவரத்தின மோதிரத்தை அணிவிக்கவேண்டும். ஒருகாலத்தில் பரிவாதினியை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். இன்று, அதோ அந்த மேடையில் பரிவாதினி வீணை கம்பீரமாகத் திகழ்கிறது. உங்கள் திருக்கரத்தால் அதை மீட்டவேண்டும். பரிவாதினியின் இனிய ஒலி, இந்த மாளிகையில் பரவவேண்டும். பல்லவ நாடெங்கும் பரவவேண்டும். இன்னும் இரண்டு கலைஞருக்கு நீங்கள் வீணையைக் கற்றுத் தரவேண்டும். அவர்கள் வீணையை நாடெங்கும் பரப்ப நாம் உதவுவோம்" என்றார்.

பரமகுரு இரு கரம் கூப்பி, "பல்லவ சக்கரவர்த்திகளுக்கு என் நமஸ்காரங்கள். அவர் இங்கு வரப்போவதாகக் கேள்விப்பட்டேன். அவர் வரவில்லையா? பல்லவ அரசியும் வருவதாக அறிந்தேன். வீணையின் இனிய நாதத்தை அவரும் கேட்டு ஆனந்திக்கவேண்டாமா?" என்று கூறும்போது, உணர்ச்சி மிகுதியால் விழிகளில் நீர்த்துளிகள் பளபளத்தன.

"அரசர் இங்கு வருவதாக ஏற்பாடாகியிருந்தது. அதனால்தான் கருவூல அறையிலிருந்து வீணையை எடுத்துச் சுத்தப்படுத்தி, இங்கே கொண்டுவைத்தோம். புறப்படுவதற்கு முன்பு முக்கியச் செய்தியை ஒற்றன் தெரிவித்தான். அதனால் அவர் வரவில்லை. இன்று நல்ல நாள். உங்கள் திருக்கரத்தால் பரிவாதினியை மீட்டுங்கள்."

பரமகுருவை மெல்ல மேடைக்கு அழைத்துச் சென்றார். சாலினியும் உடன் வந்தாள். பரமகுருவை வீணை எதிரே அமரவைத்து, அவருக்கு உதவி செய்த சாலினி, பரிவாதினி வீணையை, குழந்தை ஒன்றைப் பார்ப்பதுபோல் வாஞ்சையுடன் பார்த்தாள்.

அவள் மனத்தில் பற்பல எண்ணங்கள் நிழலாடின. வாதாபி நகரம் வந்து நின்றது. சாளுக்கிய இளவரசரின் இனிய முகம் வந்து நின்றது. அவரிடம் வாக்குறுதி அளித்த சொற்கள் நினைவுக்கு வந்தன. 'பரிவாதினி வீணையிடம் சாளுக்கிய அரசர் காதல் கொண்டதில் தவறில்லை. இந்த மாணிக்க வீணை சாளுக்கிய நாட்டில் இருந்தால், அந்த நாட்டின் புகழ் மேலும் அதிகமாகும் என்பது உறுதி' என்ற நினைவு எழுந்து, அவள் ஒரு கணத்தில் பரபரப்படைந்தாள். பரிவாதினியின் மிக அருகே இருந்தும், அதை அடையமுடியாமல் தவிக்கிறோமே என்று வேதனையடைந்தாள். பரிவாதினியை எப்படிக் கவர்ந்து செல்வது? பரமகுருவிடம் மனத்தைப் பறிகொடுத்துவிட்டோம். இப்போது அவள் முன் காதலா? — கடமையா? என்ற கேள்வி எழுந்து நின்றது. உள்ளத்தின் எண்ணங்கள், முகத்தில் பிரதி பலித்தன.

அவள் தோளை மெல்லத் தொட்டு உலுக்கினார் முகுந்தன்.




"சாலினி, உனக்கு என்ன நேர்ந்துவிட்டது? உன் முகம் திடீரென்று கறுத்துவிட்டது. விழிகளில் ஓர் சோகம், உற்சாகம் குறைந்த, நோய் வாய்ப்பட்ட நிலையில் நீ இருக்கக் காரணம் என்ன? உன் குருநாதர் வீணையை மீட்டத் தொடங்கும் நேரத்தில், உனக்கு என்ன நேர்ந்துவிட்டது? மருத்துவரை அழைக்கட்டுமா?" என்று கேட்டார்.

சாலினி தன் நிலை உணர்ந்தாள். புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு, "பரிவாதினியைப் பார்க்கவேண்டும் என்று பலகாலமாகத் துடித்துக்கொண்டிருந்தேன். இன்று கண்டவுடன் ஏற்பட்ட பரபரப்பை என்னால் அடக்கமுடியவில்லை" என்றாள்.

"இதுவரையில் பரிவாதினியை நீ பார்த்ததில்லையா? விழாக் காலங்களில் ஓரிருமுறை பொதுமேடையில் மக்கள் காண வைத்திருந்தோமே?" என்றார்.

"அதைக் காணும் பாக்கியம், நான் இப்போதுதான் பெற்றேன். எங்கள் நாட்டில் பரிவாதினியைப் பற்றிப் புகழ்ந்து பேசுவார்கள். அதனால் என் உள்ளத்தில் ஏற்பட்ட ஆசை இப்போதுதான் தணியப் போகிறது" என்றாள். இப்படிக் கூறியவள் அதிர்ச்சியடைந்தாள். வாய் தவறி 'எங்கள் நாட்டில்' என்ற வார்த்தையைக் கூறியது, பின்விளைவுகளை ஏற்படுத்தப் போகிறதோ என்ற பயம், அவளைச் சூழ்ந்தது.



# 33

சைலேந்திரியும், பெரியவரும் பல நாள்களுக்குப் பிறகு பாழடைந்த வீட்டில் சந்தித்துக் கொண்டனர். "மாண்டவர் மீண்டதுபோல் அவ்வளவு மகிழ்ச்சி" என்றாள் சைலேந்திரி.

"எனக்கு மகிழ்ச்சி ஒருபுறம்; பயம் ஒருபுறம்" என்றார் பெரியவர்.

அவர் எதற்காக அப்படிச் சொல்கிறார் என்று சைலேந்திரிக்குப் புரியவில்லை.

"சைலேந்திரி, புலி வாயிலிருந்து தப்பி, பாம்பின் வாயில் வீழ்ந்தது போல் இருக்கிறது. இங்கே வந்த காபாலிகையை என்னால் நம்பமுடியவில்லை. நம்மை அவள் என்ன செய்யப்போகிறாளோ?" என்று கவலைப்பட்டார் பெரியவர். குரலில் பயம் இருந்தது.

"எனக்குப் பயம் இனி இல்லை. தேவசோமை நமக்கு உதவி செய்வாள் என்று தோன்றுகிறது. பல்லவ நாட்டில் ஒரே குழப்பம். நமக்குப் பாதுகாப்பு இல்லை. இந்தப் பாழடைந்த வீட்டில், உங்களை அடைத்தவனுடைய நோக்கம் என்ன தெரியுமா?" சைலேந்திரி கேட்டாள். பெரியவர் கருத்துக்கு நேர்மாறாக இருந்தது அவள் எண்ணம்.

'தெரியாது' என்பதற்கு அடையாளமாகப் பெரியவர் தலையை அசைத்தார். "என்னைச் சிறை வைப்பதால் யாருக்கு என்ன பலன் என்று எனக்குப் புரியவில்லை" என்றார்.

"உங்களைத் தனிமைப்படுத்தி, முன்பின் தெரியாத இடத்திற்கு என்னை அழைத்துச்சென்றனர். எதற்குத் தெரியுமா?" சைலேந்திரி கேட்டாள்.

தெரியாது என்பதற்குத் தலையை அசைத்தார் பெரியவர்.



"உங்களை என்னிடமிருந்து பிரிப்பதன் மூலம், நந்தீசன் என்னை அடைவதற்குச் சதி செய்திருக்கிறான்" என்று சைலேந்திரி கூறியபோது, 'ஐயோ' என்று அலறினார் பெரியவர்.

"உங்களை இனி சந்திக்கமுடியாது என்றே எண்ணிவிட்டேன். பல்லவ நாட்டில் பாழ்பட்டுச் சாகப்போகிறோம் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். ஆனால், தேவசோமை காப்பாற்றினாள். உங்களிடம் கொண்டு சேர்த்தாள்" -சைலேந்திரியின் குரலில் நம்பிக்கை இருந்தது.

பெரியவர் மறுமொழி கூறாமல், மௌனமாக இருந்தார். பிறகு-

"நாளை என்ன நடக்கப்போகிறதோ, தெரியாது. ஆனால், உன்னைச் சந்தித்தது-உயிரே வந்ததுபோல். ஆனால், அவள் எந்தவிதத்தில் உதவப் போகிறாள், அவளை நீ நம்புகிறாய்" என்றார் பெரியவர்.

வாதாபிக்கு அழைத்துச் செல்வதாகக் கூறியிருக்கிறாள் தேவசோமை. பல்லவ நாட்டைவிட சாளுக்கிய நாட்டில் நமக்கு ஆதரவு அதிகமாயிருக்கும் என்று தேவசோமை தெரிவித்திருக்கிறாள்" என்றாள் சைலேந்திரி. அவள் குரலில் நம்பிக்கை இருந்தது.

"எல்லாம் சரி, நரேந்திரன் எங்கே? நம்மைத் தேடி அவன் எங்கு அலைகிறானோ? அவனும் நம்முடன் வந்துவிட்டால் எந்தக் கவலையுமில்லை" என்றார் பெரியவர்.

சைலேந்திரி மௌனமாயிருந்தாள். 'நரேந்திரன்' என்று அவள் முணுமுணுத்தாள்.

"நரேந்திரன் வந்துவிட்டால், நாம் காம்போஜத்திற்குத் திரும்பிவிடலாம் என்றே நினைக்கிறேன். பல்லவ நாடும் வேண்டாம். சாளுக்கிய நாடும் வேண்டாம். காம்போஜம் சென்று, என் தாயைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டுவிட்டது" என்றாள் சைலேந்திரி.

"உன் தாய் சொல்லியனுப்பியது என்ன ஆவது? காஞ்சி சென்று உன்னை ஒப்படைக்கவேண்டாமா?" -பெரியவர் கேட்டார்.

"அது நடைபெறாது என்பது புரிந்துவிட்டது. இங்கு இருப்பதால் துன்பம்தான் மிஞ்சும் எனத் தோன்றுகிறது" -சைலேந்திரி கூறியதற்குப் பெரியவர் சம்மதிக்கவில்லை என்பது, அவர் முகத்திலிருந்து தெரிந்தது. இருவரிடமும் கருத்து ஒற்றுமை ஏற்படவில்லை. வெளியே இருளும்-எங்கோ நரி ஊளையிடும் ஓலமும், சைலேந்திரிக்கு மேலும் அச்சத்தை அளித்தன. எவ்வளவு நேரம் விழித்திருக்க முடியும்? சைலேந்திரி, களைப்பு மிகுதியால் உறங்கிவிட்டாள்.

விடியும் நேரத்தில், சைலேந்திரி திடீரெனக் கண்விழித்தாள். வெளியே இனிய பாடல் ஒன்று, கடற் காற்றுடன் கலந்து மிதந்து வந்தது.

ஆ! அது அவர் குரல்தான். நரேந்திரன்தான் பாடுகிறார். கனவாக இருக்குமோ? கனவு இல்லை; அதோ பெரியவர் படுத்து உறங்குகிறார். அவருடைய குறட்டை ஒலி, காதைப் பிளக்கிறது. கனவாக இருக்க முடியாது.

சைலேந்திரி மெல்ல எழுந்து, கதவைத் திறந்தாள். அருகே உள்ள பாறை மீது அமர்ந்து, நரேந்திரன் பாடிக்கொண்டிருந்தான்.

பெரியவரை எழுப்பினாள். திடுக்கிட்டு விழித்தெழுந்த அவர், சைலேந்திரியை வியப்புடன் நோக்கினார். "எதற்காக எழுப்பினாய்? நல்ல தூக்கம் கலைந்துவிட்டது" என்று சலித்துக்கொண்டார். "உங்கள் காதில் ஏதும் விழவில்லையா?" என்று சைலேந்திரி கேட்டாள்.

அவர் விழித்து விழித்துப் பார்த்தார்.

"மரக்கலத்தில் நீங்கள் பாடுவீர்களே. அந்தப் பாட்டு நினைவிருக்கிறதா?" என்று கேட்டாள்.

"சைலேந்திரி, சம்பந்தமில்லாமல் ஏதோ கேட்கிறாயே? ஆம்; நான் பாடுவேன். தேவிக்குப் பூசை செய்வேன். எல்லாம் மறந்துபோய்விட்டது. வெள்ளித் தாம்பாளத்தையும், தேவி விக்ரகத்தையும் பறிகொடுத்து விட்டேன். அவை எங்கே போயின? பல்லவ நாட்டிற்கு வந்ததற்குக் கிடைத்த பரிசு, என் தேவியைப் போக்கடித்துவிட்டேன். சைலேந்திரி, நீ சொல்வதிலும் உண்மை இருக்கிறது; ஒப்புக்கொள்கிறேன். நாம் காம்போஜத்திற்கே திரும்பிவிடுவோம்"- அவர் கவலையுடன் புலம்பினார்.

சைலேந்திரி சிரித்தாள். தன் கருத்தை அவள் ஏற்றுக்கொள்வாள் என்று அவர் எண்ணினார். ஆனால், அவள் ஏன் சிரிக்கிறாள்?

"சற்று அமைதியாக, அந்தப் பாடலைக் கேளுங்கள். நீங்கள் மரக்கலத்தில் நாள்தோறும் தேவி பூசையின்போது பாடுவீர்களே, அந்தப் பாடலின் பொருளை ஒருவர் தமிழில் பாடினாரே, நினைவிருக்கிறதா?"– சைலேந்திரி கூறியவுடன், பெரியவர் காற்றில் மெல்ல மிதந்து வரும் பாடலைக் கேட்டார்.

"சைலேந்திரி, அதே பாடல்; அதே குரல்..." என்று வியப்புடன் கூறியவாறு, வெளியே ஓடினார். சைலேந்திரி, அவரைப் பின்தொடர்ந்தாள்.

"நரேந்திரன், நரேந்திரன்... உன்னைப் பார்த்தவுடன் எனக்குப் பெரும் நம்பிக்கை வந்துவிட்டது" என்று கூறியபடி, பெரியவர் ஓடிச்சென்று அவனைத் தழுவிக்கொண்டார்.



பெரியவரின் பின்பக்கம் நின்று சைலேந்திரி, நரேந்திரனை நோக்கினாள்.

பொழுது நன்றாகப் புலர்ந்து விட்டிருந்தது.

"சங்குக் கழுத்தின் வழியே இனிய இசை பொங்கி வருவதைக் கண்டு நான் மகிழக்கூடாதா? சந்திரோதயத்தினால் பொங்கிவரும் பாற்கடலினின்று வெளிவரும் சங்கின் வடிவழகைப் போன்ற கழுத்தை உடையவளே" என்று, அவன் மெல்ல முணுமுணுத்தான்.

அந்தச் சம்பவத்தை ஒருமுறை அவன் நினைத்துக்கொண்டான்.

ஒரு நாள் மாலை, மரக்கலம் ஆடி அசைந்து சென்று கொண்டிருக்கும்போது, விழிகளை மூடி, மனத்தை அலையாமல் செய்ய அவன் முயன்று கொண்டிருந்தான். 'களுக்'கென்ற சிரிப்பொலி கேட்டது!

"இந்த இளம் வயதிலேயே முற்றும் துறந்தவராகப் போகிறீர்களா?" என்று அவள் கேட்டாள். 'நான் அந்தக் குரலின் இனிமையை நினைத்துக் கொண்டேன். வண்டின் ரீங்காரமோ, பொங்கிவரும் புது நிலவின் மோகன ராகமோ என்று மனத்தளவில் வர்ணனை செய்துகொண்டேன். அவளுடன் அப்போது பேசியிருக்கலாம். கப்பலின் மேல்தளத்தில் கண்ட சைலேந்திரியிடம், ஒரே ஒரு தடவைதான் பேசியிருக்கிறோம்...' அவர்களைப் பற்றி அறியத் துடித்து, அன்று அவன் முணுமுணுத்தபோது, பெரியவரிடம் மிகவும் பயந்ததை நினைத்துக்கொண்டான். இப்போது பயம் ஏது?

"கரை இறங்கியவுடன் மாமல்லையில் தங்கிப் பிறகு உங்கள் ஊருக்குச் செல்லப் போகிறீர்களா?"– நரேந்திரன், பெரியவரைப் பார்த்து அன்று கேட்டான். அவளும், அவனுடன் பேசத் துடித்துக்கொண்டிருந் தாள். நரேந்திரன் கேட்ட கேள்விக்கு, சைலேந்திரியே விடை கூறினாள். சில கணநேரம் அவள் சிரித்தவாறு பேசியது, பெரியவருக்குப் பொறுக்க வில்லை. தளபதியிடம் சொல்லிவிடப் போகிறார் என்ற பயம் இருந்தது; அதனால் நரேந்திரன் அவளிடம் பேசவில்லை.

இப்போதும் இடையூறாக அவர் அவளை மறைத்து நிற்கிறார். 'சைலேந்திரி ஒரு வார்த்தையாவது பேசக்கூடாதா?' என்று நினைத்தான்.

"எனக்கும் இப்போதுதான் உயிர் வந்தது. உங்களை இனி காண முடியுமா என்ற கவலையுடனிருந்தேன்" என்று சைலேந்திரி, அவனை நோக்கிக் கேட்டாள். ஓரடி எடுத்து வைத்து, முன்னே வந்தாள்.

பாறையினின்று நரேந்திரன் கீழே குதித்து, அவர்கள் அருகே வந்தான். சைலேந்திரியை சில கணம் இமைக்காமல் பார்த்து, "உனக்காகத் தான் கடல்மல்லையில் நான் தங்கியிருக்கிறேன். உங்கள் இருவரையும் கண்டுபிடித்துவிட்டேன். இனி..." என்றான்.

"எங்களைச் சந்தித்து விட்டீர்கள்... இனி கடல்மல்லையை விட்டுப் புறப்பட்டுவிடுவீர்களா?"- சைலேந்திரி கேட்டாள். கவலை கலந்திருந்தது.

"எனக்கு இந்த நாட்டில் ஒரு வேலையும் இல்லை. அனாதை எங்கு வேண்டுமானாலும் தங்கலாம்; சுற்றலாம். ஆனால், இங்கே சில நாள்கள் தங்கவேண்டிய கட்டாயத்தை ஒருவர் ஏற்படுத்திவிட்டார்" என்றான் நரேந்திரன். அவள் பாதம் முதல் கேசம்வரை நோக்கினான்.

"கட்டாயத்தை ஏற்படுத்தியவர் யார்?" —சைலேந்திரி ஆவலுடன் கேட்டாள்.

"என்னுடைய வாழ்நாளில் நான் யாரிடமும் மனத்தைப் பறிகொடுத்ததில்லை. மனத்தை அடக்கிக்கொள்ள நான் கற்றிருக்கிறேன். ஆனால், என் புலனடக்கத்தை வெல்லவும் ஒருவர் வந்துவிட்டார்"—சைலேந்திரியை நேருக்குநேர் பார்க்காமல், பெரியவரைப் பார்த்தவாறு பேசினான்.

சைலேந்திரி ஆவல் மேலீட்டால், "உங்கள் விரதத்தைக் கலைத்தவர் ஆணா, பெண்ணா?" என்று கேட்டாள்.

"விரதத்தைக் கலைக்க ஆணால் முடியாது. சபதத்தைக் குலைக்க முடியும். என் மனக் குளத்தில் சஞ்சலத்தை ஏற்படுத்திய அந்த அழகிக்காக, நான் சிறிது காலம் பல்லவ நாட்டில் இருந்தாக வேண்டும். அதற்காகப் பல துயரங்களை அனுபவித்தாக வேண்டும்" என்றான். அவன் இதழ்களில் குறும்புத்தனம் துள்ளியது.

சைலேந்திரியின் முகம் மாறியது. புதிர் போடாமல் நரேந்திரன் பேசக்கூடாதா என்று எண்ணினாள்.

"யார் அந்த அழகி, சொல்லக்கூடாதா?" சைலேந்திரி கேட்டுவிட்டாள்.

"சொல்லாமலிருப்பேனா? ஆனால், இப்போது சொல்லமாட்டேன். நாம் இங்கே நின்று பேசிக்கொண்டிருக்கக்கூடாது. ஆபத்து நிறைந்த இடத்தில் மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டிருக்கலாமா? உங்களை மிகவும் பத்திரமான இடத்தில் கொண்டு சேர்த்து விட்டுப் பிறகு அமைதியாகப் பேசுவோம்" என்றான்.

"நாங்கள் இங்கு இருப்பதை எவ்வாறு அறிந்தீர்கள்? எங்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற உணர்வு, உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது? உங்கள் மனத்தில் சஞ்சலத்தை ஏற்படுத்திய அந்த அழகியின் பாசக் கயிற்றிலிருந்து எப்படி மீண்டீர்கள்?" என்று சைலேந்திரி கேட்டாள்.

இதுவரை உட்கார்ந்திருந்த பாறையினின்று, நரேந்திரன் உற்சாகத்துடன் கீழே குதித்தான்.



"நானும், பெரியவரும், உன்னைத் தேடிக் கண்டு பிடிக்கத் தனித் தனியே புறப்பட்டோம். பிறகு பெரியவர் என்ன ஆனார் என்று எனக்குத் தெரியாது. நான் பரமகுரு வீட்டிற்குச் சென்றேன். நந்தீசன், உன்னை எங்கோ காவலில் வைத்திருப்பதாக அறிந்தேன். மறைவாக அவன் நடவடிக்கைகளைக் கண்காணித்தேன். பல ரகசியங்கள் தெரியவந்தன. பல்லவ நாட்டிற்கு மிக வேகமாக ஆபத்து வந்துகொண்டிருக்கிறது என்பதை அறிந்தேன். நந்தீசனுக்குச் சொந்தமான சில இடங்களில் உன்னைத் தேடினேன். சிற்பியின் வீட்டில் நீ தங்கியிருந்தது எனக்குத் தெரியாது. சிற்பியின் வீட்டிற்குச் சென்றபோதுதான், நீ காணாமல் போனது தெரிந்தது. பாழடைந்த இந்த வீட்டைப்பற்றிக் கேள்விப்பட்டேன். வீட்டிற்குள் யார் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இளங்காலை வேளையில் பராசக்தியைத் துதித்துப் பாடினால், தேவியின் அருள் கிடைக்கும் என நம்பினேன். பாடினேன்; நீங்கள் காட்சியளித்தீர்கள். சில இடங்களில் இப்படிப் பாடி இருக்கிறேன். பாட்டைக்கேட்டு நீ வருவாய் என்ற நம்பிக்கை. புறப்படுங்கள். மிகவும் பாதுகாப்பான இடத்திற்குச் சென்ற பிறகு, மற்றவற்றை விரிவாகப் பேசுவோம்" என்றான் நரேந்திரன்.

"உங்கள் மனக்குளத்தில் அமைதியைக் குலைத்தவள் யார்? சொன்னால்தான், நான் இந்த இடத்தைவிட்டு நகருவேன்" என்றாள் சைலேந்திரி.

நரேந்திரன் விழிகள், சைலேந்திரியின் விழிகளை உற்று நோக்கின. அவை ஏதோ கூறியிருக்க வேண்டும்.

சைலேந்திரியின் முகம் நாணத்தால் சிவந்தது. அவள் தலை குனிந்தாள்.



# 34

நந்தீசன் அருகே இரவும் பகலுமாக உட்கார்ந்து, தன் கணவர் கண் விழிப்பதற்காகக் காத்திருந்தாள் செங்கமலவல்லி. நந்தீசனுக்குத் தலையில் விழுந்த பலத்த அடியால், மயக்கம் தெளிய இரு நாள்களாயின. தேவசோமை, சூலாயுதத்தால் தாக்குவாள் என்று நந்தீசன் எதிர்பார்க்கவில்லை. இரத்த வெள்ளத்தில் கிடந்த அவனை, கடல்துறைக் காவலர்கள் அவன் வீட்டிற்குக் கொண்டு சேர்த்தனர்.

அரசு மருத்துவர் விரைந்து வந்து அளித்த சிகிச்சையால், மரண பயம் நீங்கியது. மருக்கொழுந்து பயிரிடுபவர்கள் பலர் வந்து பார்த்தனர். கடல்மல்லையிலுள்ள அரசாங்க அலுவலகத்து அதிகாரிகள் விரைந்து வந்தனர். காபாலிகப் பெண் ஒருத்தி அவனைத் தாக்கிவிட்டாள் என்ற செய்தி, கடல்மல்லை நகரம் எங்கும் பரவியது.

தன் கணவன் அருகே அமர்ந்து, விழிகளை மூடிக்கொண்டு திருமாலைத் துதித்துக் கொண்டிருந்தாள் செங்கமலம். 'அன்று பாஞ்சாலியின் மானம் காக்க சேலை கொடுத்துக் காத்தவரே! கடும் மழையினின்று ஆயர் பாடியைக் காத்து ஆநிறைகளை ரட்சித்தவரே! என் கணவர் உயிரைக் காத்து எனக்கு மாங்கல்யப் பிச்சை அருள்வாய், கோபாலா' என்று திருமாலை மனத்தில் எண்ணி, இடைவிடாது பிரார்த்தித்தாள்.

பிரார்த்தனைக்குப் பலன் ஏற்பட்டது. கடவுள் அருளால் மயக்கம் தெளிந்து நந்தீசன் கண் விழித்தான். ஆனால், வாய்திறந்து பேச முடியவில்லை. தன்னருகே இரவும் பகலுமாக இருந்து, பணிவிடை செய்து வரும் தன் மனைவியைப் பார்த்துக் கண்ணீர் விட்டான்.

நந்தீசன், பல்லவ அரசுக்குத் துரோகம் செய்தபோதிலும், இன்னும் அவன் பல்லவ அரசின் ஊழியன் என்பதனால், அரச அதிகாரிகள் பலர் அவன் இல்லம் வந்து, நலன் கேட்டுச் சென்றனர்.



பல்லவ சக்கரவர்த்திகளிடம் தெரிவிக்க, அதிகாரிகள் காஞ்சிபுரமும் விரைந்தனர். மீண்டும் காபாலிகர்கள் நடமாடத் தொடங்கிவிட்ட செய்தி அறிந்து, ஆங்காங்கே அதிகாரிகள் எச்சரிக்கையாக இருந்ததுடன், காபாலிகர்கள் நடமாட்டத்தைக் கண்காணிக்கத் தொடங்கினர்.

திருக்கழுக்குன்றத்தில் தங்கியிருந்த சித்திரமாயனிடம் இந்தச் செய்தி தெரிவிக்கப்பட்டதும், சித்திரமாயன் திடுக்கிட்டான்.

சாளுக்கிய நாட்டினின்று சாலினியுடன் வந்த ஒற்றன், அப்போது சித்திரமாயன் அருகே இருந்தான். நந்தீசனுக்கு ஏற்பட்ட ஆபத்தை சித்திரமாயன் விளக்கினான்.

"பரிவாதினி வீணையைக் காஞ்சி மாளிகையினின்று கவர்வதற்கு ஏற்ற திட்டங்களை நந்தீசன் வகுத்து வந்தான். நம்பிக்கை மிகுந்தவன். பரமகுரு வீட்டில் சாலினியைச் சேர்ப்பித்து, அவள் வீணை கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்தவன் நந்தீசனே. மற்றொரு பெண்ணையும் கொண்டு சேர்த்தான். ஆனால், சில நாள்களாக நமது திட்டங்களுக்கு நேர் எதிர்த் திட்டங்களை யாரோ வகுக்கிறார்கள். நாம் விழிப்புடன் இருக்கவேண்டும். படைகளுடன் வருமாறு நீங்கள் வாதாபிக்குச் செய்தி அனுப்பும்போது, மிக எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்" என்றான் சித்திரமாயன்.

சாளுக்கிய ஒற்றன் திகைத்து நின்றான். அவன் சித்திரமாயனைப் பெரிதும் நம்பியிருந்தான். வருங்கால பல்லவ மன்னனான அவர் திட்டமும் யோசனைகளும், தனக்குப் பெரிதும் உதவியாக இருக்கும் என்று உறுதியுடன் இருந்தான். சித்திரமாயனுக்கும், சாளுக்கிய இளவரசருக்கும் தொடர்பு ஏற்படுத்துவதில் முனைப்பாக இருந்தான். பரிவாதினி வீணையை அபகரித்து வாதாபிக்கு எடுத்துச் சென்றுவிட்டால், சாளுக்கிய நாட்டில் தனக்கு மதிப்பும் மரியாதையும் அதிகமாகும்; தான் பிரபலமடைந்து விடலாம் என்ற ஆர்வத்தில், காஞ்சி நகரத்தையே வட்டமிட்டு வந்தான். சாளுக்கிய ஒற்றனின் உதவி, தனக்குப் பெரிதும் தேவை என்று சித்திரமாயனும் நம்பினான்.

காஞ்சி மாளிகையில் பரிவாதினி வீணை இருக்குமிடத்தை ஒற்றன் அறிந்துகொண்டு அங்கு சென்று அதை அபகரிக்கப் பல திட்டங்களை வகுத்தான். காவலர்களைத் தன் வயப்படுத்த முயன்றான். அது அவ்வளவு எளிதான செயல் எனத் தோன்றவில்லை. வாதாபியினின்று வந்த சில மாதங்கள்வரை சாலினியின் உதவியுடன் 'பரிவாதினியை'க் கைப்பற்ற முடியும் என்று நினைத்திருந்தான். ஆனால், சாலினியை அவனால் எளிதில் சந்திக்க இயலவில்லை என்பதுடன், சாலினியின் போக்கில் ஏற்பட்ட மாறுதல், அவள் மீது அவனுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது.

“பல்லவ மகாராசா! சாலினி செய்தது பெரும் துரோகம்; அவளை இப்படியே விட்டுவைப்பது சரியன்று; தாங்கள் அனுமதியளித்தால் அவளைக் கணநேரத்தில் ஒழித்துவிடுவேன்; உத்தரவிடுங்கள்” என்று சித்திரமாயனை நோக்கிக் கேட்டான் ஒருநாள்.

சித்திரமாயன் மௌனமாகச் சிந்தித்தான். பிறகு, “சாலினியைக் கொன்று விடுவதால் ஏதாவது பலன் உண்டா என்பதைச் சொல்லு; பிறகு என் முடிவைக் கூறுகிறேன்” என்றான்.

“வாதாபியினின்று வந்த சதிகாரி என்று தன்னைப் பற்றிய உண்மையை அவள் சொல்லிவிட்டால், அவளுக்கு ஆபத்துதானே.”

“அவளுக்கு ஆபத்து அல்லது தண்டனை, பல்லவ அரசரால் கிடைக்கட்டுமே? நாம் ஏன் அவளைக் கொல்லவேண்டும்?”

“அவளை உயிரோடு விட்டால், அவளுக்குச் சிறைத் தண்டனை தருவதற்கு முன்பு, காஞ்சியில் உள்ள சாளுக்கிய ஒற்றர்களைப் பற்றிய விபரங்களை அவளிடமிருந்து அறிந்துவிடுவார்களே பல்லவ அரசு அதிகாரிகள். அல்லது அவளை மன்னிப்பதாகக் கூறி, உண்மையை அறிந்துகொள்ளக்கூடும். வாதாபியினின்று நானும் அவளும் ஒன்றாகப் புறப்பட்டோம். தன் தாய்நாடான சாளுக்கிய நாட்டின்மீது அவள் மிகுந்த பற்று கொண்டவள். தன் அழகாலும், அறிவாற்றலாலும் விரைவில் எல்லோரையும் கவர்ந்து, பரிவாதினியை அபகரிக்க முடியும் என்று உறுதி கூறியிருந்தாள். பார்ப்பவர்களை மோகம் கொள்ளச் செய்யும் அழகு உடையவள். அழகெனும் அஸ்திரத்தால் அவளால் சாதிக்க முடியாததே இல்லை என்று சொல்லலாம். ஆனால், அவள் பல்லவர்களிடம் சரணடைந்து விட்டாளே? வீணைக் கலைஞர் பரமகுருவின் ஆசை நாயகியாகி விட்டதாகப் பேசிக்கொள்கிறார்கள். அவர் வயது என்ன, இவளுடைய இளமை என்ன? எவ்வாறு அவருக்கு அடிமையானாள்?” —சாளுக்கிய ஒற்றன் பேச்சில் ஆத்திரமும், அதேபோல் ஏமாற்ற உணர்ச்சியும் கலந்திருந்தன.

சித்திரமாயன் மெல்லப் பேசினான்: “உன் உணர்ச்சி, கவலை எல்லாம் எனக்குப் புரிகிறது. சாலினியைப் பரமகுருவிடம் கொண்டு சேர்த்தவனே நந்தீசன்தான். அவனுடைய திட்டம் சரியானதுதான். காம்போஜத்திலிருந்து வந்த இளம் பெண்ணையும், அவளுடன் வந்தவர்களிடமிருந்து பிரித்து, பரமகுரு வீட்டில் கொண்டு சேர்த்துவிட்டான். நந்தீசன் மிகவும் திறமைசாலி. ஆனால், அவன் திட்டத்தை முறியடிக்க பின்னணியில் யாரோ மாற்றுத் திட்டமிடுகிறார்கள். நம் திட்டங்களையும் மிகவும் கூர்ந்து கவனிக்கிறார்கள். இதுவரை உன்னை அடையாளம்



கண்டு, சிறைப்படுத்த முயலாது இருப்பதே வியப்பாக இருக்கிறது. இந்த நிலையில், நீ, நான்— மற்ற எல்லோரும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும். சாலினியைக் கொன்றுவிட முயற்சி செய்யாதே. நீ நினைத்ததை வேறு யாரிடமாவது சொல்லிவிடாதே” என்றான்.

ஒற்றன் மௌனமானான். “நம் நடவடிக்கைகளை யார் கண்காணிக் கிறார்கள் என்று, உங்களுக்குச் சந்தேகம் எவர்மீதாவது ஏற்பட்டதா?” என்று கேட்டான்.

சித்திரமாயன் உடனே மறுமொழி கூறவில்லை. “நந்தீசனை குற்றுயிரும் குலை உயிருமாக யாரோ பலமாகத் தாக்கியிருக்கிறார்கள் என்பதை அறியும்போது எனக்குக் கவலையாயிருக்கிறது. அவனைத் தாக்கியவர் யார் என்று அறிந்தால், நமக்கு விரோதமாகச் செயல்படுபவர்களைப் புரிந்துகொள்ளலாம். நாம் மிக எச்சரிக்கையுடனிருக்கவேண்டும். நந்தீசனை உடனே சந்திக்க வேண்டும்” என்றான்.

நந்தீசன் வீட்டிற்குத் தன் ஆதரவாளர்கள் சூழ, சித்திரமாயன் சென்றான்.

நந்தீசன் வீடு அமைதியாக இருந்தது. நந்தீசன் அருகே மனைவி செங்கமலம் சோகமே உருவாய் அமர்ந்திருந்தாள். மயக்கநிலை மாறி, ஓய்வுடன் படுத்திருந்த நந்தீசன் சில சமயங்களில், மனைவியுடன் மெல்லப் பேசுவான்.

செங்கமலம், திருமால் அடியாரான திருமங்கை மன்னருடைய பெரிய திருமொழியிலிருந்து ஒரு பாசுரத்தை மெல்லப் பாடினாள். பிறகு திருமங்கை மன்னர், கடல்மல்லையில் உள்ள தலசயனப் பெருமானைப் போற்றிப் பாடிய பாடலைப் பாடினாள்.

*“பிச்சச் சிறு பீலிச்*
*சமண் குண்டர் முதலா யோர்,*
*விச்சைக் கிறையென்று*
*மவ்விறையைப் பணியாதே,*
*கச்சிக் கிடந்தவனூர்*
*கடல்மல்லைத் தலசயனம்*
*நச்சித் தொழுவாரை*
*நச்சென்றன் நன்னெஞ்சே!”*

நந்தீசன் மெய்சிலிர்த்தான். பாடலை உற்றுக்கேட்டான்.

நடந்த சம்பவங்களை மெல்ல நினைத்துக்கொண்டான். தன் மனைவியின் இனிய குரல், மனத்துக்கு அமைதியை அளித்தது.

"செங்கமலம், உன் பாடல் எனக்குப் பெரும் மருந்தாக அமைந்தது. இவ்வளவு நாள் உன் இனிய குரலை நான் கேட்காமல் இருந்துவிட்டேன். நான் துர்பாக்கியசாலி" என்றான், அவள் கரங்களைப் பற்றியவாறு.

"என் குரலில் என்ன இருக்கிறது? திருமால் அடியவரான திருமங்கை மன்னனின் பாடலின் மகிமை. இறைவனின் அருளைப் பெற உதவும் மருந்து அது. அவரை நீங்கள் மனதில் துதித்துக் கொள்ளுங்கள்" என்றாள் செங்கமலம்.

"இந்த வேளையில், நீ என்ன சொன்னாலும் நான் கேட்கிறேன். ஆனால், நீ வணங்கும் திருமங்கை மன்னர், மற்ற மதத்தவர்களைக் குறை கூறுவதை ஏற்கமுடியாது. நான் போற்றும் சித்திரமாயன், அருக தேவனை வணங்குபவர். சமண சமயத்தவர்களுக்கு ஆதரவு தரவேண்டும் என்று கொள்கை உடையவர். நான் சித்திரமாயன் வழி நடப்பவன். நீ நல்ல குரல் எடுத்துப் பாடுகிறாய். என் மனம் நிம்மதி அடைகிறது; அது போதும்" என்று கூறிய, தன் கணவரைப் பார்த்து, "நீங்கள் திருமங்கை மன்னரைக் கண்டு வணங்க வேண்டும். அவரை கடல்மல்லைக்கு அழைத்து வரவேண்டும். அவரை மாமல்லைக்கு வரவழைக்க ஏற்பாடு செய்யுங்கள். தளபதி உதயசந்திரன் அவர்களிடமும் முன்பே நான் வேண்டிக்கொண் டேன்" என்றாள்.

நந்தீசன் முகம் கறுத்தது. "என்ன சொன்னாய்? நானில்லாதபோது அன்று நீ உதயசந்திரனிடம் பேசிக்கொண்டிருந்தபோதே உன்னைத் தண்டித்திருக்க வேண்டும். எழுந்திருக்கக்கூடிய சக்தி இப்போது எனக் கிருந்தால், உன் நாவைத் துண்டித்திருப்பேன்" என்று நந்தீசன் கடுமை யாகப் பேசினான்.

"அமைதி, அமைதி நந்தீசா! உடல் நலம் சரியில்லாதபோது இப்படி உணர்ச்சிவசப்படலாமா?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந் தான் சித்திரமாயன், தன் ஆதரவாளர்களுடன்.

# 35

சைலேந்திரியும், பெரியவரும் காஞ்சியை நோக்கிச் சென்றனர். காஞ்சிபுரத்தில் நடைபெறும் திருவிழாவுக்குச் செல்லும் பயணிகளோடு இருவரையும் கூண்டு வண்டியில் ஏற்றி அனுப்பினான் நரேந்திரன்.

"நான் உங்களைக் காஞ்சியில் சந்திக்கிறேன்" என்றான் நரேந்திரன். கூண்டு வண்டிக்குள் ஏறுவதற்குச் சைலேந்திரிக்கு உதவினான். பெரியவர், வண்டியின் முன்னால் ஏறி அமர்ந்தார். இப்போதாவது அவனு டன் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டதற்கான மகிழ்ச்சி முகத்தில் நிலவ, புன்முறுவல் புரிந்தாள் சைலேந்திரி.

"சின்னஞ்சிறு மலர் பூப்பது போலிருக்கிறது. நீ இதழ் மெல்ல விரித்து நகைப்பது" என்றான் நரேந்திரன் சிரித்தபடி.

அவனுடன் பேச வேண்டும் என்று துடித்த சைலேந்திரி, "நினை விருக்கிறதா? மரக்கலத்திலிருந்து கரை இறங்க முயலுகையில், கீழே இறங்க உதவக் கையை நீட்டினீர்கள்" என்றாள் சைலேந்திரி.

"உன் கரத்தைத் தொட்டுவிடுவேனோ என்று பயந்து, பெரியவர் தானே கைகொடுத்து நீ இறங்குவதற்கு வழி செய்தார் இல்லையா?" என்றான் நரேந்திரன். மேலும் தொடர்ந்து, "ஒன்றும் தெரியாதவள்போல் முக உணர்வு; ஆனால், அன்றே நீ அதைக் கவனித்திருக்கிறாய்" என்றான் நரேந்திரன் கண்களில் குறும்புத்தனம் கூத்தாட.

சைலேந்திரியின் முகம் நாணத்தால் சிவந்தது. "இப்போது அவர் இல்லை. அதனால் வண்டியில் ஏற உதவினீர்கள். கொஞ்சம் அதிகச் சுதந்திரம் எடுத்தீர்கள். பயம் குறைந்து, உங்கள் கரம் இடை தொட்டு உதவியது."

"தவறாக நினைத்துவிட்டாயா? வண்டியில் ஏற எளிதாக இருக்க உதவினேன். அன்று நடவாததற்கு இது பிராயச்சித்தமன்று; ஏறுவதற்குக் கஷ்டப்படுவதுபோல் நீ நடித்தாய். அப்படித்தானே?"

"தங்கள் கரம் பட்டவுடன் என் மெய் சிலிர்த்தது" –சைலேந்திரி தலை குனிந்தவாறு சொன்னாள். "மெய்யாகவா? எனக்கு எந்தவித உணர்வும் ஏற்படவில்லையே! உங்களிருவரையும் விரைவில் பத்திரமாக அனுப்பவேண்டும் என்ற கவலை" -நரேந்திரன் சிரித்தான்.

"பல தேசங்கள் சுற்றிப் பல பெண்கள் ஸ்பரிசம் பட்டதால் மரத்துப் போயிருக்கலாம்."

"அப்படி நினைக்காதே! பல தேசம் சுற்றியிருப்பது உண்மையே. பெண்களைத் தொட வாய்ப்பு ஏற்பட்டதும் உண்மையே. எனக்குப் பெண்களிடம் விருப்பம், ஆசை ஏதுமில்லை. ஆனால், உன்னைப் பார்த்தது முதல் உன்னுடன் பேசவேண்டும் என்கிற ஆசை என் மனத்தில் உண்டு. விரைந்து காஞ்சி சென்று, நீங்கள் வருவதற்கு முன்பு கிழக்குக் கோட்டை வாசலில் நிற்பேன். மாளிகை வரை வண்டியுடன் தொடர்ந்து வருவேன். அங்கே உனக்குச் சிறந்த வரவேற்பு காத்திருக்கும். மாளிகைக்குள் நீ சென்றுவிட்டால், பிறகு நான் உன்னைச் சந்திக்க முடியுமா என்பது தெரியவில்லை" –நரேந்திரன் குரலில் கவலை இருந்தது.

"ஓ! எனக்கு முகுந்தனைத் தெரியும். அவர் அங்கிருப்பார். அவரிடம் சொல்லி உங்களுக்கு வீணை கற்றுத்தர ஏற்பாடு செய்கிறேன். அதனால் நீங்களும் நானும் அடிக்கடிச் சந்திக்கலாம்" என்று கூறிய சைலேந்திரியின் கரம், அவளை அறியாமல் நீண்டது. நரேந்திரன் மெல்ல எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டான்.

வண்டி புறப்பட்டுவிட்டது. சிறிது தொலைவு வண்டியுடன் நரேந்திரன் நடந்து வந்தான். 'ஜல் ஜல்' என்று காளைகளின் சதங்கை ஒலிக்க, வண்டி வேகமாகச் செல்ல ஆரம்பித்தது. உடன் வந்து கொண்டிருந்த நரேந்திரன் நின்றுவிட்டான். நின்றபடி கையசைத்தான். சைலேந்திரியின் பார்வையிலிருந்து, நரேந்திரன் மெல்ல மெல்ல மறைந்தான். ஆனால், அவள் இதயத்தில் மெல்ல மெல்ல அமர்ந்தான். அவள் விழிகளில் துளிர்த்த நீர், பார்வையை மறைத்தது.

குதிரை மீதேறி விரைந்து செல்லவேண்டும் என்ற எண்ணத்தில், நரேந்திரன் குதிரை ஒன்றைப் பெறுவதற்காகக் கடல்மல்லையின் பல இடங்களில் அலைந்தான். ஓரிருவர்களைத் தவிர மற்றவர்களை அவனுக்கு அறிமுகமில்லை. இரவு இரண்டாம் சாமத் தொடக்கத்தில் கூண்டுவண்டி காஞ்சி நகரை அடைந்துவிடும். திருக்கழுக்குன்றத்துக் குளக்கரை ஆலமர நிழலில், மதியம் உணவுக்காக வண்டி நிறுத்தப்படும். பயணிகள் இறங்கி விடுவர். கதிரவன் மேற்குத் திக்கில் இறங்கும் போதுதான் வண்டி மீண்டும் புறப்படும்.



பாழடைந்த வீட்டிற்கு மீண்டும் வந்து பார்க்கும் தேவசோமையின் மனநிலையை எண்ணி, நரேந்திரன் தனக்குத்தானே ஒருமுறை சிரித்துக் கொண்டான்.

'சித்திரமாயனுடைய உதவியில்லாமல் தேவசோமை, சைலேந்திரியைக் கவர்ந்து பாழடைந்த வீட்டில் அடைத்திருக்கமாட்டாள். சைலேந்திரியைக் காணவில்லை என்ற செய்தியைச் சித்திரமாயனிடம் தெரிவித்து, நடந்த செய்தியையும் விவரிப்பாள். உடனே சைலேந்திரியைக் கண்டு பிடிக்குமாறு, தன் வீரர்களுக்குச் சித்திரமாயன் கட்டளையிடுவான். காஞ்சி செல்லும் வண்டிகளை ஒருவேளை அவர்கள் கண்காணிக்கலாம். அப்போது சைலேந்திரியும், பெரியவரும் அகப்பட்டுக்கொண்டால்...? உதயசந்திரனிடம் இந்தச் சம்பவத்தைத் தெரிவிப்பது நல்லது' என்று எண்ணியவனாக, உதயசந்திரனைச் சந்திக்க நரேந்திரன் விரைந்தான். உதயசந்திரன் எங்கு தங்கியிருப்பார் என்பதை அறிய, அவன் முதிய சிற்பியின் வீட்டுக்குச் சென்றான்.

நடந்தவற்றைக் கேட்ட பொன்னாச்சி கவலையடைந்தாள். உதயசந்திரன் சிறிது நேரத்திற்கு முன்புதான் இங்கு வந்து, நந்தீசனைக் காணச் சென்றிருப்பதாகத் தெரிவித்தாள். சைலேந்திரிக்குத் தொல்லைக்கு மேல் தொல்லை ஏற்படுவதை எண்ணி வருந்தினாள்.

நந்தீசன் வீடு நோக்கி நரேந்திரன் விரைந்தான். வீட்டை அடையு முன்பே, பல்லவ வீரனொருவன் அவனைத் தடுத்து நிறுத்தி, உதயசந்திரன் அழைப்பதாகக் கூறினான். நரேந்திரன் திகைத்தான்.

உதயசந்திரனை இவ்வளவு விரைவில் சந்திக்கமுடியும் என நரேந்திரன் நினைக்கவில்லை. நந்தீசன் வீட்டுக்கு அருகே மறைவான இடத்தில் உதயசந்திரன் அமர்ந்திருந்தார். அவர் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து மற்றவர்களைக் காணமுடியும். ஆனால், அவர் அங்கிருப்பது ஒருவருக்கும் தெரியாது.

"நரேந்திரா, இங்கே வா. எங்கே விரைந்து செல்கிறாய்? சைலேந்திரியைக் கண்டுபிடித்துவிட்டாயா?" என்று உதயசந்திரன் கேட்டவுடன், நரேந்திரன் வியப்புடன் நோக்கினான்.

"நந்தீசனை யாரோ தாக்கிவிட்டார்களாம். அவன் கடல்மல்லையில் முக்கிய அதிகாரி. அவன் மனைவி விஷ்ணு பக்தை. கணவனுக்கு நேர் மாறான குணம். அவர்கள் நலன் கேட்டுவரப் புறப்பட்டேன். ஆனால்,

அங்கு, சித்திரமாயன், தன் கூட்டாளிகளுடன் இருப்பதாக அறிந்தேன். அவன் இருக்கும்போது நான் செல்வதில் பல பிரச்னைகள் ஏற்படும். சித்திரமாயன் என்ன சொல்கிறான் என்று பார்ப்போம். இந்தச் சமயத்தில் நீ அங்கே செல்லாதே; உன்னை அவர்கள் தேடிக் கொண்டிருக்கிறார்கள்'' என்றார்.

பல்லவ தளபதி எவ்வளவு செய்திகளைத் தெரிந்து வைத்திருக்கிறார் என்று வியப்புடன் அவரைப் பார்த்தான் நரேந்திரன்.

அவரைப் புகழ்ந்துவிட்டு, நடந்தவற்றை விவரித்தான்.

''நரேந்திரா! கடல் கடந்து வந்திருக்கும் உன் கடமை உணர்ச்சியைப் பாராட்டுகிறேன். காம்போஜத்திலிருந்து பல்லவ நாட்டிற்கு வந்திருக்கும் சைலேந்திரிக்கு ஏற்பட்டுள்ள தொல்லைகளுக்கு வருத்தப்படுகிறேன். நல்லவேளையாக நீ அவளைக் காப்பாற்றித் தக்க இடத்திற்கு அனுப்பியுள்ளாய். உனக்குக் குதிரை ஒன்றை உடனே தருமாறு சொல்கிறேன். சைலேந்திரி காஞ்சியை அடைவதற்குள், நீ கிழக்குக் கோட்டை வாயிலுக்குப் போய்ச் சேர்ந்துவிடு. காஞ்சி செல்லக் குறுக்கு வழியொன்றைக் காட்டச் சொல்கிறேன். விரைவில் காஞ்சி போய்ச் சேர்ந்துவிடலாம். அவளைச் சந்திக்காமல் தவிக்க விட்டுவிடாதே'' என்றார் உதயசந்திரன்.

நரேந்திரனுக்கு குதிரை ஒன்றும், உடைவாள் ஒன்றும் கிடைத்தன. மற்றொரு குதிரை வீரனும் நரேந்திரனுடன் வந்தான்.

''வழியைச் சொல்லிவிடுங்கள். நான் போய்விடுகிறேன். உங்களுக்கு வீண் தொல்லை எதற்கு?'' என்றான் நரேந்திரன்.

''நாம் காட்டுப் பகுதி வழியாகச் செல்கிறோம். இருவராகச் செல்வது நல்லது'' என்றான் குதிரை வீரன்.

அந்தி வேளையில், காட்டுப் பகுதி வழியே இருவரும் சென்றனர். காட்டின் எல்லையில் இவர்களுக்காகக் காத்திருப்பவன்போல், மற்றொரு குதிரை வீரன் அங்கு நின்றிருந்தான்.

நரேந்திரனுடன் வந்த வீரன் அவனைப் பார்த்து, ''நீ யார்?'' என்று கேட்டான்.

''என்னைத் தெரியவில்லையா? குமரேசன் என்று பெயர். நானும் பல்லவப் படை வீரர்களுள் ஒருவன்தான்'' என்று கூறி, அடையாள இலச்சினையைக் காட்டினான். எனினும், நரேந்திரனுக்கும் அவனுடன் வந்த குதிரை வீரனுக்கும் சந்தேகம்தான். இதை வெளியே புலப்படுத்திக் கொள்ளாமலும், வழிப்பயணக் களைப்பு தெரியாமல் இருக்கவும், நரேந்திரன் குரலெடுத்துப் பாடிக்கொண்டே வந்தான்.



புதிய குதிரை வீரன் குமரேசன் கேட்டான்: ''நீங்கள் நன்றாகப் பாடுகிறீர்களே? காஞ்சிக்கு எதற்குச் செல்கிறீர்கள்?''

நரேந்திரன் மறுமொழி கூறவில்லை. நரேந்திரனுடன் துணைக்கு வந்த வீரன் பேசினான்: ''தளபதி உதயசந்திரன் கட்டளை; இன்று இரவுக்குள் நாங்கள் காஞ்சிக் கோட்டை வாசலில் இருக்க வேண்டும்.''

''எதற்காக இருக்கச் சொல்லியிருக்கிறார்? யாரையாவது எதிர்கொள்வதற்காகவா?'' என்று குமரேசன் கேட்டான்.

நரேந்திரனுக்கு அவன் கேட்ட கேள்வி எரிச்சலை அளித்தது. உடன் வந்த குதிரை வீரன் அமைதியாக, ''எனக்குத் தெரியாது. தளபதி கட்டளையிட்டார்; அதன்படி நடக்கிறோம்'' என்றான்.

குமரேசன் சிரித்தான். குதிரை வீரன் கூறியதை நம்பவில்லை என்பதை அந்தச் சிரிப்பு புலப்படுத்தியது.

''தம்பிமார்களா! நரேந்திரனுக்குத் தெரிந்தவர்கள் வரலாம். வரவேற்க, வழிகாட்ட உங்களைக் கீழ்க்கோட்டை வாசலில் நிற்கச் சொல்லியிருக் கலாம்'' என்றான்.

நரேந்திரன் பொறுமையை இழந்தான். ''ஏ, அண்ணன்மாரே! உமக்கு என்ன வேலை இட்டார்களோ, அதை நிறைவேற்றுங்கள். வீண் வம்புப் பேச்சு வேண்டாம். படைவீரர்கள் தங்கள் ரகசியத்தை மற்றவர்களிடம் தெரிவிக்கக்கூடாது என்பது உமக்குத் தெரியாதா? உங்கள் வேலையைப் பார்த்துப் போய்க்கொண்டே இருங்கள்'' என்றான்.

''கோபப்படாதே தம்பி! நாமெல்லாம் ஒரே தளபதியிடம் பணியாற்றுகிறோம். ஒருவரோடொருவர் கருத்தைப் பகிர்ந்துகொண்டால் நல்லது. உதவியாகவும் இருக்கும். உதாரணமாக, காஞ்சியில் உள்ள பரிவாதினி வீணையைப் பாதுகாக்குமாறு என்னிடம் பெரும் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார் தளபதி. மலை நாட்டிலிருந்து வந்திருக்கும் ஓர் அழகிய பெண்ணை, பரமகுரு என்ற இசைக் கலைஞரிடம் ஒப்படைக்குமாறு சொல்லியிருக்கிறார். அந்தப் பெண் எப்படி இருப்பாள்? கறுப்பா, சிவப்பா எனக்குத் தெரியாது. இருந்தாலும், நம்பிக்கையுடன் செல்கிறேன். இந்தச் செய்தியைச் சொல்லிவிட்டேன். இதில் என்ன ரகசியம் இருக்கிறது?'' என்று, குமரேசன் முகத்தில் எவ்விதச் சலனமுமில்லாமல் கடமை மிகுந்தவன்போல் பேசினான்.

நரேந்திரன் திடுக்கிட்டான். பரிவாதினி வீணையைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தளபதி அவனிடம் ஒப்படைத்திருக்கிறாரா? மலைநாட்டிலிருந்து வந்திருக்கும் பெண்ணைச் சந்தித்து, பரமகுரு வீட்டில் சேர்க்க

வேண்டுமாமே! அவனுக்கு அதிர்ச்சியாகவும், வியப்பாகவும் இருந்தது. "என்ன சொல்கிறீர்கள்? அடையாளம் தெரிந்து அவர்களைத் தவறாமல் சந்திக்க வேண்டும் என்ற நம்பிக்கையுடன் செல்கிறீர்களா? எனக்கு அடையாளம் தெரியும். ஆனால், அவர்களை தவறாமல் சந்திக்க வேண்டுமே என்ற கவலையுடன் செல்கிறேன். உங்களுக்கு மலைநாட்டிலிருந்து வந்த பெண்ணின் அடையாளம் தெரியாது. எப்படி ஒப்படைப்பீர்?" என்று கேட்டான்.

"இதோ, எனக்குத் துணிவு வந்துவிட்டது. கவலை தீர்ந்தது" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினான் குமரேசன்.

"திடீரென எப்படித் துணிவு ஏற்பட்டது?" நரேந்திரன் கேட்டான்.

"நீங்கள்தான் காரணம்; மலைநாட்டுப் பெண்ணை நீங்கள் அறிவீர்கள். அவர்களை எப்படிக் கண்டுபிடிப்பது என்று கவலைப்படுகிறீர்கள். எனக்கு அவர்கள் வரும் இடம் தெரியும். நாமிருவரும் ஒன்றுசேர்ந்தால், எளிதில் காரியம் முடிந்தது. துணிவு வராமல் என்ன செய்யும்?" குமரேசன் சிரித்தான்.

நரேந்திரனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.



# 36

பரமகுருவுக்கு இரவெல்லாம் உறக்கம் வரவில்லை. வெளி உலகத்தைப் பார்க்க முடியாமல் இருள் சூழ்ந்திருப்பதைப்போல், மனதிலும் இருள் நிறைந்திருந்தது.

சாலினியின் மீது அவருக்குச் சந்தேகம் எழுந்தது. முகத்தைப் பார்த்திருந்தால், அவளுடைய கள்ள மனம் அவருக்குப் புரிந்திருக்கும். இறைவன் இசைஞானத்தைக் கொடுத்துவிட்டு, விழிகளைப் பறித்துக் கொண்டு விட்டானே! ஆனால், உள்ளுணர்வு அவருக்கு அதிகம். பல்லவ நாட்டில் அரசருக்கு விரோதமாகச் சதி நடக்கிறது என்பதை அவர் உணர்ந்திருந்தார். தன் வீட்டில் சித்திரமாயன், தன் குழுவினருடன் வந்து பேசிக் கொண்டிருந்தவற்றை நினைத்துப் பார்த்தார். நல்லவேளையாக முகுந்தன் காஞ்சிக்கு அழைத்து வந்ததால், சதிகாரர்களுக்கு உதவுவதனின்று தப்பினோம் எனத் தனக்குத்தானே சமாதானப்படுத்திக்கொண்டார். இப்படியெல்லாம் எண்ணியவாறிருந்ததால் உறக்கம் வரவில்லை.

காலையிலேயே முகுந்தன் வந்துவிட்டார். சாலினி வரவில்லை. பரிவாதினி வீணையைக் குறித்து அவர் பேசினார்:

"இந்த வீணையை இன்னும் சிலருக்கு நீங்கள் கற்றுத்தர வேண்டும்."

"மலைநாட்டிலிருந்து வந்த சைலேந்திரி இங்கு வருகிறாள். அவளுடைய தாயாரை நான் அறிவேன். தன் மகளைக் காஞ்சிக்கு அனுப்பியதன் காரணமே, பரிவாதினி வீணையைப் பயில வேண்டும் என்பதற்காகவே. ஆனால், அவள் காஞ்சிபுரம் வந்து சேர இயலாமல், இடையூறுகளுக்குமேல் இடையூறு ஏற்பட்டது. எப்படியும் அவள் இன்னும் இரண்டு நாள்களில் இங்கு வந்து சேர்வாள். அவளைத் தங்கள் மகள்போல் கருதி பயிற்றுவிக்க வேண்டும்" என்றார்.

பரமகுரு திடுக்கிட்டார். "முகுந்தன்! நீங்கள் கூறுவதைப் பார்த்தால், என் வீட்டில் ஒரு பெண் வந்திருந்தாள். அவளாக இருக்குமோ என்று தோன்றுகிறது" என்றார்.

"ஆமாம். நந்தீசன் என்ற துரோகி அவளை உங்கள் வீட்டில் மறைத்து வைத்திருந்தான்" என்றார் முகுந்தன்.

பரமகுரு, முகுந்தன் கரத்தைப் பற்றிக்கொண்டு, "என்னைப் பொறுத்தருள வேண்டும். நந்தீசனை நான் மிகவும் நம்பினேன். அவன் தான் சாலினியை எனக்கு அறிமுகப்படுத்தினான். நான் பலவிதங்களில் தவறு செய்திருக்கிறேன். நல்லவேளையாக என்னை இங்கு அழைத்து வந்து விட்டீர்கள். பரிவாதினியைக் கற்றுக்கொள்வதில் நீங்கள்தான் முதல் சீடர். உங்களுக்குப் பல பணிகள் இருப்பதாக அறிகிறேன். வேத சாத்திரங்களைக் கற்பிக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டேன். பல்லவ சக்கரவர்த்திகளுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் நீங்கள். சக்கரவர்த்தி இங்கு வரப்போவதாகக் கூறினார்கள். ஏன் வரவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. என்னையாவது அவரிடம் அழைத்துச் செல்லுங்கள். அதுதான் முறை, மரியாதை" என்று குரல் தழுதழுக்கக் கூறினார்.

முகுந்தன் மெல்ல நகைத்தார். "சக்கரவர்த்தியை விரைவில் சந்திக்கலாம். நான் இன்று தங்களைக் காலையிலேயே சந்திக்க வந்ததன் காரணமே, வீணையின் நாதத்தைக் கேட்டு இன்புறவே. ஏகாந்தமாக இசையை அனுபவிக்கவேண்டும் என்ற ஆசை" என்றார்.

பரமகுரு, அவர் வேண்டுகோளை ஏற்று, பரிவாதினியை மீட்டினார். வீணை அருகே பரமகுருவை அமர வைத்து உதவினார்.

வீணையின் நாதத்தில், முகுந்தன் மெய்மறந்தார். பரமகுருவும் வீணையுடன் இரண்டறக் கலந்து, மீட்டி, இனிய நாதமெழுப்பினார்.

சிறிது நேரம் கழிந்தவுடன் முகுந்தன், பரமகுருவின் வீணை மீட்டிய கரங்களை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டார்.

"பரமகுரு அவர்களே! பரிவாதினி வீணையைக் கண்டுபிடித்து, அதில் வெற்றி காண மகேந்திர பல்லவர் எவ்வளவு முயற்சி எடுத்திருக்க வேண்டும்! அதை எளிதில் அடையப் பார்க்கிறார் சாளுக்கிய அரசர். அதை அபகரிக்கப் பலர், இங்கு பல வேடங்களில் திரிகிறார்கள். இதுவரை மிகப் பாதுகாப்பான இடத்தில் பரிவாதினி இருந்தது. பாதுகாப்பான இடம் என்றாலும் கவனிப்பாரின்றி, அதன் நரம்புகளின் மீது விரல்களைக் கொண்டு தடவுவோரின்றி இருந்தது. தங்களால் வேளை மலர்ந்தது. இனி, பரிவாதினியைக் காப்பாற்றுவது தங்கள் பொறுப்பு" என்றார்.



பரமகுரு, வீணையை மெல்ல அணைத்துக்கொண்டார்.

"தங்களை ஒன்று கேட்க வேண்டும் என்று ஆவல்" என்றார் முகுந்தன்.

"நன்றாகக் கேளுங்கள். தங்களுடன் பேசிக்கொண்டிருப்பதால், பொழுதுபோவதே தெரியவில்லை" என்றார்.

சாலினி பார்த்துக்கொண்டிருந்தாள். அவர்கள் பேசுவதையும் கேட்டுக்கொண்டிருந்தாள்.

நடுநிசியைத் தாண்டிய பிறகு, ஓர் உருவம் பரமகுரு இருக்கும் அறையை நோக்கி விரைந்து வந்தது. அந்த உருவத்தைப் பார்த்து, மாளிகைக் காவலர் இருவர் விரைந்தோடி வந்தனர்.

அந்த உருவத்தைத் தடுத்து, "யார் நீ?" என்று கடுமையாகக் கேட்டனர். உருவிய வாள் இருளிலும் பளபளத்தது.

முகத்தைக் கூர்ந்து கவனித்தவுடன், வணக்கம் தெரிவித்துவிட்டு நகர்ந்தனர். அந்த உருவம், தான் கொண்டு வந்திருந்த வீணையை அங்கே வைத்துவிட்டு, பரிவாதினியை எடுத்துக்கொண்டு விரைந்தது.

அந்த உருவம் சென்ற சிறிது நேரத்தில், சாலினி சந்தடி செய்யாமல் அங்கு வந்தாள். அங்கே பிரிந்து இருந்த வீணையை மெல்ல எடுத்தாள். ஒரு துணி கொண்டு மூடினாள். அதை எடுத்துக்கொண்டு விரைந்து சென்று, மாளிகைத் தோட்டத்து மதில் சுவர் அருகே நின்றிருந்தவனிடம் அதைக் கொடுத்தாள்.

"மிகவும் கவனமாகக் கொண்டு செல்ல வேண்டும். இரவோடு இரவாகக் காஞ்சி எல்லையைத் தாண்டிவிட வேண்டும்" என்று எச்சரித்துக் கூறினாள்.

அவர்கள் இருவரையும், காபாலிகை மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.



# 37

வீணையை எடுத்துக்கொண்டு அந்த உருவம் மாளிகைச் சுவரைத் தாண்டி மறைந்தவுடன், சாலினியின் தோளைக் குமரேசன் தொட்டான். அந்த இருளில், யார் தன் தோளைத் தொட்டிருக்கமுடியும்? சாலினி தடுக்கிட்டுத் திரும்பினாள்.

"சாலினி, பயந்துவிட்டாயா? நீ அதிர்ச்சி அடைவது நியாயமே. பயப்படாதே, நான்தான். என் குரலிலிருந்து என்னைத் தெரிந்து கொண்டிருப்பாய்!" என்று அவன் பேசியபடி, அவள் தோளை அழுத்தினான். சாலினி அந்தக் கரத்தின் ஸ்பரிசத்தை உணர்ந்துகொண்டாள். குரலினின்று குமரேசன் என்று அடையாளம் கண்டாள். அவளுடைய அச்சம் மேலும் அதிகமாகியது.

பல மாதங்களுக்கு முன்பு அவனும், அவளும் ஒன்றாகக் காஞ்சிபுரம் வந்தனர். சாளுக்கிய இளவரசன் கீர்த்திவர்மன், அவளுடன் குமரேசனையும் உதவிக்கு அனுப்பினான். குமரேசன் நன்றாகத் தமிழ் பேசினான். காஞ்சியிலும், சுற்றுப்புறங்களிலும் பல்லவர்களுக்கு வேண்டியவன் போல் நடித்து நடமாடி வந்தான். சித்திரமாயனை அறிமுகப்படுத்திக் கொண்டான். கடல் மல்லையினின்று காஞ்சிக்குச் சைலேந்திரியும், பெரியவரும் செல்கிறார்கள் என்றும், அவர்களை அனுப்பியவன் நரேந்திரன் என்ற கடல் கடந்த நாட்டு இளைஞன் என்பதையும் அறிந்துகொண்டான்.

சைலேந்திரி, பல்லவ மாளிகையில் தங்கப் போகிறாள் என்பதும், பரமகுருவின் மாணவியாக இருந்து பரிவாதினி வீணையைப் பயிலப் போகிறாள் என்பதையும், காஞ்சிக் கோட்டைக்கருகே சைலேந்திரியைச் சந்திக்க நரேந்திரன் காத்திருப்பான் என்பதையும், குமரேசன் அறிந்து கொண்டான். நரேந்திரனுடன் நெருங்கிப் பழகினான். ஆனால், நரேந்திரன்



அவனை நம்பவில்லை. குமரேசனை எப்படித் தவிர்ப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தான். இரவு இரண்டாம் சாமம் தொடங்கியபோது, ஓரிடத்தில் சற்று இளைப்பாறியபோது, குமரேசனைத் திடீரென்று காணவில்லை 'அப்பாடா! விட்டது தொல்லை' என்று பெருச்சு விட்டு காஞ்சிக் கோட்டையை நோக்கி நரேந்திரனும், அவனுடன் வந்த உதவியாளனும் நடந்தனர்.

காஞ்சிக் கோட்டைக்குள் நுழைந்த குமரேசன், பல்லவ மாளிகையைச் சுற்றிச் சுற்றி வந்தான். நடுநிசி தாண்டியவுடன், ஓர் உருவம் மாளிகையினின்று மறைந்து மறைந்து சென்றதைக் கண்டு, அந்த உருவத்தைப் பின்தொடர்ந்தான். மாளிகை நந்தவனத்தருகே மறைந்திருந்து பார்த்தான். சாலினி அங்கே ஒருவருடன் பேசிக்கொண்டிருந்ததை மங்கிய ஒளியில் கண்டான்.

அவன் யாரைத் தேடி காஞ்சி மாளிகையைச் சுற்றிச் சுற்றி வந்தானோ, அவள் அங்கே நிற்கிறாள். ஆகா! என்ன அதிர்ஷ்டம்!

"சாலினி, எவ்வளவு நாள்களாக உன்னைத் தேடுவது? நீ மனம் மாறிவிட்டாய் என்றும், சாளுக்கிய இளவரசருக்கு நம்பிக்கைத் துரோகியாகி விட்டாய் என்றும் கேள்விப்பட்டேன். வீணை வித்வான் பரமகுருவுடன் காஞ்சி மாளிகையில் தங்கியிருக்கிறாய் என்றும் அறிந்தேன். இப்போது நடுநிசியில் இங்கே என்ன செய்கிறாய்?" என்று கேட்டான். "இருளில் கூட உன் அழகு பளிச்சிடுகிறது" என்று காதல்மொழி பேசினான்.

"உச்... மெல்லப் பேசுங்கள். எல்லாம் வெற்றிதான். நாளைக் காலையில் நாம் விவரமாகப் பேசுவோம். இப்போது, தாமதமின்றி நான் மாளிகைக்குள் சென்றாக வேண்டும்" என்று கூறி, அவன் கரத்தை விலக்கினாள்.

"வெற்றி என்றால் – எதில் வெற்றி? யாருக்கு வெற்றி. உன் பேச்சை நம்ப முடியாது. நீ துரோகி. எனக்குத் துரோகம் செய்துவிட்டு, பரமகுருவின் ஆசை நாயகியாகி விட்டாய். உண்மையை மறைக்கிறாய்" என்று மெல்லிய குரலில், ஆனால் கடுமையாகப் பேசினான். சாலினி சீற்றங்கொண்டாள். அவனுடன் விவாதிக்க அது சமயமில்லை.

"குமரேசா, உன்னை எச்சரிக்கிறேன். நான் சாளுக்கிய இளவரசருக்கு ஒருபோதும் துரோகம் செய்யமாட்டேன். நாம் எதற்காகக் காஞ்சி வந்தோமோ, அதை நிறைவேற்றிவிட்டேன். பல்லவர்களுக்கு வேண்டியவள்போல் நடித்தேன். மாணிக்க வீணையை மாளிகையிலிருந்து கைவசப்படுத்தி அனுப்பிவிட்டேன். இப்போதுதான் அதை நம்பிக்கையான ஒருவரிடம் கொடுத்தேன். அதிக நேரம் நான் இங்கே நிற்கமுடியாது. மாளிகையில் என்னைத் தேடுவார்கள். நான் ஒன்றும் அறியாதவள்போல்

மாளிகைக்குச் சென்றுவிட வேண்டும். நாளைப் பொழுது விடிந்தவுடன் பரிவாதினி வீணையைக் காணாமல், அரண்மனை அல்லோல கல்லோலப் படும். பரமகுருவைச் சந்தேகிப்பார்கள். சித்திரமாயனுடன் நெருங்கிப் பழகியவர் என்பதை அரசர் அறிவார்.

"பரிவாதினியை சித்திரமாயன் அபகரித்துச்செல்ல, பரமகுரு உடந்தையாக இருந்திருப்பார் என்று பழிசுமத்துவார்கள். அவருடைய காதலியாக நடித்த என்னையும் தேடுவார்கள். மாளிகைக்குச் சென்று சில பொருள்களை எடுத்துக்கொண்டு, பொழுது புலர்வதற்கு முன்பு காஞ்சிபுரத்தின் எல்லையைத் தாண்டிவிட வேண்டும். அங்கே வீணையுடன் காத்திருப்பவருடன் சேர்ந்து, வாதாபியை நோக்கி விரையவேண்டும். நீயும் வந்துவிடுகிறாயா? நாம் வந்த வேலை முடிந்துவிட்டது. இனி நாம் இங்கே இருக்கக்கூடாது" என்று கூறி அங்கிருந்து புறப்படத் தொடங்கினாள்.

குமரேசன், அவள் கரத்தை அழுத்தமாகப் பிடித்துக்கொண்டாள்.

"சாலினி, உன் வார்த்தைகளை என்னால் இனியும் நம்ப முடியாது. மாணிக்க வீணையை அபகரித்து, சாளுக்கிய ஒற்றன் ஒருவன் மூலம் நீ அனுப்பியது உண்மையானால், இனியும் நீ பல்லவ மாளிகைக்கு ஏன் திரும்பவும் செல்லவேண்டும்? அப்படி என்ன பொருள் அங்கே இருக்கிறது? நீயும் நானும் இரவோடு இரவாகக் காஞ்சியைவிட்டு ஓடிவிடுவோம். சாளுக்கிய இளவரசரிடம் பரிவாதினி வீணையைக் காணிக்கையாக்கி, நாம் இருவருமே வெற்றிக் கூத்தாடுவோம். நம் சாதனையை அவர் பாராட்டிப் பரிசுகள் வழங்குவார். நீயும் நானும் திருமணம் புரிந்துகொண்டு இன்பமாய் வாழ்வோம்" என்று கூறி, அவள் கரம் பற்றி இழுத்தான்.

"வேண்டாம், வேண்டாம் குமரேசா; என் கையை விடு. நான் மாளிகைக்குத் திரும்பிச்சென்று, ஒன்றும் அறியாதவள்போல் படுத்துறங்கி, விடிவதற்கு முன்பு எழுந்து செல்லவேண்டும். என்னை விட்டுவிடு. உன் பகல் கனவுகளை மறந்துவிடு. வாதாபி சென்றவுடன், உன்னை நான் மணப்பேன் என்று மனப்பால் குடிக்காதே!" என்று அழுத்தமாகக் கூறினாள்.

"முடியாது. உன்னை விட்டுவிட முடியாது. உண்மையிலேயே நீ சாளுக்கிய இளவரசருக்கு நம்பிக்கையானவளாக இருக்கப்போவதாக உறுதிகொண்டிருந்தால், இப்பொழுது என்னுடன் வரவேண்டும். பரிவாதினி காணாமல் போனதை அறிந்தால், பல்லவர்கள் அமைதியாக இருக்கமாட்டார்கள். கோட்டைக் கதவுகள் மூடப்படும். நீயும் நானும் இந்த நகரத்தில் நடமாட முடியாது. மாளிகையிலிருந்து நீ தப்பமுடியாது. உன் சமாதி இங்கே எழுப்பப்பட்டுவிடும்" என்று கடுமையாகக் கூறி, அவள் கரம் பற்றிப் பலமாக இழுத்தான்.



"கொடியவனே! அன்றே உன் நயவஞ்சகம் எனக்குத் தெரியும். காமாந்தகனான நந்தீசனிடம் என்னை ஒப்படைக்க நீ திட்டமிட்டிருப்பதை நான் அறிவேன். என்னைத் தடுக்காதே" என்று சாலினி சீறினாள். குமரேசன் பயங்கரமாக நகைத்தான். அவன் பிடி அழுந்தியது. சிரிப்பொலி பயங்கர ஓலமாக மாறியது. மறைவாக வைத்திருந்த குறுவாளால், அவன் அடிவயிற்றில் குத்தினாள் சாலினி. பீறிட்ட – சிவப்பு இரத்தம் இருளோடு இருளாகக் கலந்தது.

மறைவில் நின்று அங்கு நடப்பதைப் பார்த்தவாறிருந்த தேவசோமை, பாய்ந்து வந்து சாலினியின் கரத்தைத் தாவிப் பிடித்தாள்.

"என்ன காரியம் செய்துவிட்டாய் சாலினி? சாளுக்கிய மன்னரின் திட்டத்தை நிறைவேற்ற வந்திருக்கும் நாம், ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொள்ளலாமா? குமரேசன், சாளுக்கிய இளவரசரின் நன்மதிப்புக்குப் பாத்திரமானவன். அவனைக் கொன்றுவிட்டாயே! அவனைக் கொன்றதால், பெரும் சிக்கலை வரவழைத்துவிட்டாய். கொலையுண்டு கிடப்பவன் சாளுக்கிய ஒற்றன் எனப் புரிந்துகொண்டு, இன்னும் பல ஒற்றர்கள் நகரத்தில் இருப்பர் என அறிந்து, வலைவீச ஆரம்பித்து விடுவார்கள். கொன்றவர் யார் என்று தேட ஆரம்பித்துவிடுவார்கள்..." என்று பேசிக் கொண்டு சென்ற தேவசோமையை நோக்கி, சாலினி சீற்றமுடன், "நீ யார் என்னைத் தடுக்க? எல்லாம் அறிந்தவள்போல் தர்மம் பேசுகிறாயே? நீயும் ஒரு துரோகிதான். என் கையைவிடு. நான் போக வழிவிடு. சற்று முன்பு அவனுக்குச் சொன்னதுதான் உனக்கும்" என்று கூறி, அவள் பிடியிலிருந்து விடுபட்டு அங்கிருந்து ஓட முயன்றாள்.

"சாலினி, பின் விளைவு அறியாமல் பேசுகிறாய். நாம் இருவரும் இங்கிருந்தும் தப்பி விடுவதுதான் நல்லது. பரிவாதினி வீணையைக் கொண்டு வருவதாக நானும் சாளுக்கிய அரசரிடம்-உறுதி கூறியிருக்கிறேன், நீயும் நானுமாக வீணையை அவருக்குக் காணிக்கையாக்குவோம்" என்றாள் தேவசோமை.

"நாளைக் காலையில் நான் புறப்பட்டு வரும்வரை அவன் அங்கிருப்பான். சாளுக்கிய சக்கரவர்த்தியிடம் பரிவாதினியைக் கொண்டு வருவதாக வாக்களித்து, நீ காஞ்சி வந்திருப்பதும் நான் அறிவேன். காபாலிகையுடன் நட்புடன் பழகுவது அபாயம் மிகுந்தது என்பதையும் நான் அறிவேன். என்றாலும், நாம் இருவரும் ஒரே லட்சியத்துடன் இங்கு வந்திருப்பதால், லட்சிய வெற்றியுடன் வாதாபியை அடைவோம். இப்போது என்னைப் போகவிடு. நீ காஞ்சி நகர எல்லையிலுள்ள காட்டிற்குச் சென்று காத்திரு. தாமதப்படுத்தாதே. இப்போது என்னைப் போகவிடு" என்றாள்.

சிறிது நேரம் சும்மாயிருந்து, பிறகு ஆவேசமாக, "நீ போ... போய்விடு" என்றாள். மூச்சு வாங்கியது.

"முடியாது, உன்னை விடமுடியாது" என்றாள் தேவசோமை.

"தடுத்தால், குமரேசனுக்கு நேர்ந்ததுதான் உனக்கும்" என்று கூறி, குறுவாளை எடுத்தாள் சாலினி.

ஆனால் கண்மூடித் திறப்பதற்குள், வேறுவிதமாக நேர்ந்துவிட்டது. தேவசோமை, சூலாயுதத்துடன் அவள் மீது பாய்ந்தாள்.

சாலினி இரத்தவெள்ளத்தில், குமரேசன் அருகே சாய்ந்தாள். தேவசோமை அங்கிருந்து விரைந்தோடினாள், சாலினி கூறிய காட்டுப் பகுதியை நோக்கி. அவள் நோக்கமெல்லாம் பரிவாதினி வீணையை அடையவேண்டும் என்பதே.

பரமகுரு விழித்தெழுந்து, சாலினிக்காகக் காத்திருந்தார். முகுந்தன் அங்கு விரைந்துவந்தார்.

"யார் முகுந்தனா? வாருங்கள் வாருங்கள். இரவெல்லாம் எனக்கு உறக்கம் இல்லை. கண்ணை மூடினால் பயங்கரத் தோற்றங்கள். விடிகாலையில் வீணையை மீட்ட நினைத்தேன். சாலினியைக் காண வில்லை. அவளை உடனே வரச்சொல்லுங்கள்" என்றார்.

முகுந்தன் மெல்ல நகைத்தார். "அவள் இனி வரமாட்டாள்" என்றார்.

பரமகுருவுக்கு ஒன்றும் புரியவில்லை. முகுந்தன் மிகச் சுருக்கமாக விளக்கினார்.

சாலினிக்கும், சாளுக்கிய ஒற்றனுக்கும் நேர்ந்த பயங்கர முடிவைப் பற்றி பரமகுரு வருத்தப்படவில்லை. "ஐயோ, பரிவாதினி வீணையை அபகரித்துச் சென்றுவிட்டார்களே?" என்று கூவினார். அவர் குரல் தழுதழுத்தது.

"மகேந்திர பல்லவர், எவ்வளவு இடையூறுகளுக்கிடையே பரிவாதினியைப் படைத்தார். இவ்வளவு ஆண்டுகளாக விரோதிகளிடம் அந்த மாணிக்க வீணை சிக்காமல் காப்பாற்றி வந்தீர்களே! ஒரு பெண் அதைக் கவர்ந்து சென்றுவிட்டாளே? சாலினி எனும் சதிகாரிக்கு, நான் அடைக்கலம் கொடுத்தேன். அவளிடம் மனத்தைப் பறிகொடுத்தேன். ஓர் கலைஞன் செய்யக்கூடாததைச் செய்துவிட்டேன். நான் பல்லவ நாட்டின் மாபெரும் துரோகி. என்னைக் கழுவிலேற்றுங்கள்" என்று கூறி, வாய்விட்டு அழத் தொடங்கிவிட்டார்.

முகுந்தன் அவரைச் சமாதானப்படுத்தினார். அவர் முதுகை அன்புடன் தடவி, "ஐயா பரமகுரு அவர்களே! நீங்கள் வருத்தப்படக்



கூடாது. ஒப்பற்ற உண்மைக் கலைஞர் அழலாமா? அவ்வளவு எளிதில் பரிவாதினியை நாங்கள் இழந்து விடுவோமா? பரிவாதினியை யாரும் கவர்ந்து சென்றுவிட முடியாது. பரிவாதினி என்றெண்ணி, வேறொரு வீணையை சாலினி கொண்டு போய்விட்டாள். சாலினி ஓர் சதிகாரி என்பதை நாங்கள் முன்பே அறிவோம். ஆனால், உங்களிடம் அவள் உண்மைக் காதல் கொண்டுவிட்டதால், வீணைக் கலையைத் தங்களிடம் பயின்று மனம் மாறி, பல்லவ நாட்டிற்கு உண்மையாக நடப்பாள் என்று எண்ணினோம். ஆனால், அவள் சாளுக்கியர்களுக்கு உண்மையாக நடந்து கொண்டாள். பரிவாதினி வீணையைக் கவரத் திட்டமிட்ட சதிகாரர்கள், ஒருவரை ஒருவர் மாய்த்துக்கொண்டனர். முதல் வேலை, இங்குள்ள துரோகிகளை ஒழிக்கவேண்டும்" என்று விளக்கினார்.

பரமகுரு, விழிகளில் ததும்பிய கண்ணீரைத் துடைத்து கொண்டார். "முகுந்தன் அவர்களே! நான் உடனே பல்லவ மன்னரைச் சந்திக்க வேண்டும்" என்றார்.

முகுந்தன் மெல்ல நகைத்தார்.



# 38

பொன்னாச்சியும், அவள் கணவர் முதியவர் சிற்பியும் கவலையுடன் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். முக்கியச் செய்தி ஒன்றை எதிர்பார்ப்பவர்போல் முதியவரும், பொன்னாச்சியும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

"இந்த வயதில் நீங்கள் கவலைப்படும்படியாகிவிட்டதே" என்று பொன்னாச்சி வருத்தத்துடன் கூறினாள்.

"உனக்கும்தான். நீண்டநாள் நம்முடன் பழகியவளை இழந்தது போல் சைலேந்திரியை எண்ணி நீ வருந்துகிறாய். இரண்டு நாள்களாக சரியான உணவு எடுத்துக்கொள்ளவில்லை" என்றார் முதியவர். பிறகு தொடர்ந்து, "நாட்டு நடப்பே சரியில்லை பொன்னாச்சி! சூதும் வாதும் உடைய மக்கள் அதிகமாகி வருகிறார்கள். நம் மக்களே துரோகிகளாக மாறுகிறார்கள். என்ன நடக்குமோ தெரியவில்லை" என்று வருத்தப்பட்டுக் கொண்டார்.

"நான் தெரியாமல்தான் கேட்கிறேன். பல்லவ அரசரிடம் படைவீரர்கள் அதிகமில்லையா? கண்ணுக்குத் தெரிந்து துரோகம் செய்யும் சித்திரமாயனை அடக்கமுடியாதா? அவனுக்குத் தண்டனை தரக்கூடாதா?" என்று கேட்டாள் பொன்னாச்சி.

முதியவர் மௌனமாயிருந்தார். அவர் வாழ்நாளில், பல்லவ நாட்டிற்கு ஏற்பட்ட பல ஆபத்துக்களைக் கண்டிருக்கிறார். நாட்டில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தை அனுபவித்திருக்கிறார். காஞ்சிக் கோட்டையை முற்றுகையிட்ட எதிரிகளின் அட்டகாசத்தை, மாமல்லபுரத்திலிருந்தே அறிந்திருக்கிறார். அவற்றையெல்லாம்விட இப்போது நாட்டில் ஏதோ பயங்கரச் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக அவருக்குத் தோன்றியது. பல்லவ நாட்டிற்கு ஏதோ ஆபத்து ஏற்படப்போகிறது என்று உள்ளுணர்வு கூறியது.



"பொன்னாச்சி, நீ ஏன் கவலைப்படுகிறாய்? நந்திவர்ம அரசருக்குத் தெரியாதது ஏதுமில்லை. இளம் வயதிலேயே பல்லவ மகுடத்தை ஏற்ற அவருக்கு ஏற்படாத எதிர்ப்பா? பல அனுபவங்களைப் பெற்றவர். சித்திரமாயன் அவர் உறவினன். பல்லவ அரியணை உரிமை தனக்கே என்று கிளர்ச்சிசெய்கிறான். தனக்கு ஆதரவாகப் பலரைச் சேர்த்துக் கொண்டுள்ளான். பார்த்துக்கொண்டே இரு; தக்க தருணம் பார்த்து சித்திரமாயனைச் சிறையிலடைத்து விடுவார். அன்று பேசிக்கொண்டிருந்த போது, படைத் தலைவர் உதயசந்திரன் நம்மிடம் சொன்னது நினைவிருக்கிறதா?" என்று பொன்னாச்சிக்கு ஆறுதல் கூறுபவர்போல் பேசினார்.

"ஆமாம், நினைவிருக்கிறது. இரவு வீட்டை விட்டுச் சென்ற சைலேந்திரி திரும்பவில்லையே. அவளுக்கு என்ன நேர்ந்ததோ? அவளைக் கண்டுபிடித்து விடுவதாக உதயசந்திரன் உறுதியளித்தாரே?"

"சைலேந்திரி நலமாக இருக்கிறாள் என்று சொல்லியனுப்பினாரே. மறந்துவிட்டாயா?" முதியவர் கேட்டார்.

"படைத்தலைவரின் வீரர்கள் உங்களிடம் ஏதோ கூறிச் சென்றனர். சைலேந்திரி நலமாக இருக்கிறாள் என்று சொன்னால் போதுமா? எங்கே இருக்கிறாள்? அவளை எங்கிருந்து கண்டுபிடித்தனர். இரவு வீட்டை விட்டு வெளியே வந்தவள், காணாமல் போய்விட்டாள் என்றால், பல்லவ நாட்டில் ஆட்சி நடக்கிறதா என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது. நந்தீசனையும் யாரோ பலமாகத் தாக்கிவிட்டார்களாமே? வேறு ஏதோ முக்கிய செய்தியை நம்மிடம் தெரிவிக்க இங்கே வருவதாக உதயசந்திரன் சொல்லி அனுப்பினாரே. அவர் எப்போது வரப்போகிறார்?" என்று பேசியவாறே நெற்றியின் மீது கையை வைத்து, யாராவது வருகிறார்களா என்று பொன்னாச்சி உற்றுப்பார்த்தாள்.

"உதயசந்திரனிடமிருந்து செய்தி எதிர்பார்த்து, நானும் காலையிலிருந்து ஆவலுடன் காத்திருக்கிறேன்" என்று கூறிப் பெருமூச்சுவிட்ட முதியவர், தன்னிடம் சிற்பம் பயிலும் மாணாக்கன் ஒருவனை அழைத்தார்.

குடிலுக்குச் சற்றுத் தொலைவில், மர நிழலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த மாணாக்கர்களுள் ஒருவன் விரைந்து வந்து, குருவின் கட்டளையை எதிர்பார்த்துக் கைகட்டி நின்றான்.

"நகரத்தில் ஏதாவது செய்தி உண்டா?" என்று கேட்டார் முதியவர். உண்டு என்பதுபோல் தலையை அசைத்தவன், "ஆங்காங்கே தெரு முனையில் கூடி நின்று, மக்கள் பேசிக்கொள்கிறார்கள்" என்றான்.

"என்ன பேசிக்கொள்கிறார்கள்?" என்று முதியவர் கேட்டார்.

"சாளுக்கியர்கள், காஞ்சியின்மீது படையெடுத்து வரப்போகிறார்களாம்" என்றான். அவன் குரலில் அச்சம் மிகுந்திருந்தது.

"யுத்தம் என்றால் நீ ஏன் பயப்படுகிறாய்?" என்று கேட்டார்.

"எனக்குப் பயம் இல்லை ஐயா. சாளுக்கியப் படை வீரர்கள் மாமல்லபுரத்திற்குள் நுழைந்து, சிற்பங்களையெல்லாம் சிதைத்துவிடப் போகிறார்களே என்ற கவலைதான். நம் முன்னோர்கள் படைத்த கலைச் செல்வங்களைப் பாழ்படுத்திவிடப் போகிறார்களே என்ற கவலைதான்" என்றான் இளைய சிற்பி.

முதியவர் மெல்ல நகைத்தார். "உயிரைவிட ஜீவ சிற்பங்களை நீ மதிப்பதற்காக நான் உன்னைப் பாராட்டுகிறேன். அப்படியெல்லாம் நேர்ந்துவிடாது பயப்படாதே" என்றார்.

"சுந்தரனைக் கேட்டுப் பாருங்கள்; என்னைவிட அவன்தான் அதிகம் அஞ்சுகிறான். பல செய்திகள் அவனுக்குத் தெரிந்திருக்கின்றன" என்று கூறி, அவன் தோழன் சிற்பி சுந்தரனை அழைத்தான்.

சுந்தரன், பல முக்கியச் செய்திகளைச் சொன்னான்.

நந்தீசன் பலமாகத் தாக்கப்பட்டதையும், அதைக் கேள்விப்பட்ட சித்திரமாயன் அவனைக் காணச்சென்றதையும், வாதாபியினின்று படை வரப்போகும் செய்தியையும், சித்திரமாயன் நந்தீசனிடம் தெரிவித்ததையும், ரகசியமாக மறைந்து கேட்டிருந்தவர்கள் கூறியதையும் சுந்தரன் சொன்னான்.

"நான் நினைத்தது சரியாகிவிட்டது. எதிரிகள் படையெடுப்பை அறிந்திருக்கிறான் சித்திரமாயன். அவனை ஏன் இன்றளவும் வெளியே நடமாடவிட்டிருக்கிறார்கள்?" என்று முதியவர் கேட்டார்.

"நந்தீசன் வீட்டில் சித்திரமாயன் இருப்பதை அறிந்த உதயசந்திரன், சித்திரமாயனைச் சிறைப்படுத்த, அந்த வீட்டை முற்றுகையிட்டிருக்கிறார். சித்திரமாயனுடன் உதவியாளர்கள் நூற்றுக்கணக்கானவர் எங்கிருந்தோ பாய்ந்துவந்து, சித்திரமாயனைக் காப்பாற்றியிருக்கிறார்கள். சித்திரமாயன் தப்பிவிட்டான். நந்தீசனால் நகரமுடியவில்லை; அகப்பட்டுக் கொண்டான். பல்லவ வீரர்கள் பலர் பலியாகிவிட்டனர்."

நடந்தவற்றைச் சுந்தரன் விவரிக்க, முதியவரும், பொன்னாச்சியும் அதிர்ச்சியடைந்தனர்.

"என்ன சொல்கிறாய் சுந்தரா? நடந்த சண்டையில் நம் நாட்டுக் காவல் வீரர்கள் இறந்தார்களா? இதென்ன அநியாயம்? சொந்த நாட்டவர்களைச் சொந்த நாட்டவர்களே தாக்குவதா? அண்ணன் தம்பிகளுக்குள்



பயங்கரச் சண்டையா? உதயசந்திரனுக்கு ஒன்றும் நேரவில்லையே?" என்று கவலையுடன் கேட்டார்.

"சித்திரமாயனுக்கு உதவியாக வந்த ஆதரவாளர்கள், எண்ணிக்கையில் அதிகம். ஆனால், உதயசந்திரன் தலைமையின் கீழிருந்த காவல் வீரர்கள் போர்முறை அறிந்தவர்கள். அதனால் நம் வீரர்கள் சிலர்தான் இறந்தனர். சித்திரமாயன் ஆதரவாளர்கள் பலர் கொல்லப்பட்டனர்.

"சித்திரமாயன் தப்பி ஓடிவிட்டான். பெரும்பான்மையான அவன் ஆதரவாளர்களும் செத்தோம் பிழைத்தோம் என்று ஓடி மறைந்தனர். ஓரிருவர் சிக்கினர். படுத்த படுக்கையாயிருக்கும் நந்தீசன் வீட்டைச் சுற்றிக் காவல் போட்டிருக்கிறார்கள்" என்றான்.

பிறகு அவன் சொன்னான்: "ஐயா, சாளுக்கியர் படையெடுப்பைப் பற்றிச் சிறைப்பிடிக்கப்பட்ட சித்திரமாயன் ஆதரவாளர்களிடமிருந்துதான் அறிந்தோம். படைத்தலைவர் உதயசந்திரன், படைவீரர்களுள் ஒருவரை அழைத்துத் தங்களிடம் செய்தியைத் தெரிவிக்குமாறு அனுப்பினார்.

"ஆமாம், தானே வருவதாகவும் அல்லது முக்கியமான ஒருவரை இன்று இங்கு அனுப்புவதாகவும் உதயசந்திரன் சொல்லியிருக்கிறார் என்று அந்தக் காவல் வீரன் தெரிவித்தான். உதயசந்திரனை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். என்ன செய்தி வரப் போகிறதோ? நாடு நலமாக இருக்க வேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொள்வதைத் தவிர வேறு எனக்கு ஒன்றும் செய்யத் தோன்றவில்லை" என்றார் முதியவர்.

அங்கே மௌனம் நிலவியது. உச்சி வெயில் கடுமையாகத் தாக்கியது.

"பொன்னாச்சி, இப்படியே உட்கார்ந்திருந்தால் எப்படி? சோறாக்க உனக்குத் தோன்றவில்லையா? பட்டினிதானா?" என்று முதியவர் கேட்டார்.

"என்ன செய்தி வரப்போகிறதோ? காலையிலிருந்து மனமே சரியா யில்லை" என்றாள் பொன்னாச்சி.

'இப்படியே உட்கார்ந்திருந்தால் மனசு சரியாகிவிடுமா? கூழாவது காய்ச்சு" என்றார் முதியவர்.

பொன்னாச்சி கூழ் காய்ச்ச எழுந்தாள். அப்போது பல்லவ வீரன் ஒருவன் அங்கு வந்தான். இளம் சிற்பிகள் ஓடிவந்து, அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

"ஐயா, இன்னும் இரண்டு நாள்களுக்குள் இந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டு, காஞ்சிக் கோட்டைக்கு வந்து சேர்ந்துவிடுமாறு தங்களிடம்

படைத்தலைவர் சொல்லச் சொன்னார். வண்டியொன்று ஏற்பாடு செய்திருக்கிறார். காவலுக்கு இரண்டு வீரர்கள் உடன் வருவார்கள். நல்ல காலம் வந்தவுடன் மறுபடியும் இங்கு திரும்பி வரலாம் என்று சொல்லச் சொன்னார்'' என்றான் மிக மரியாதையுடன்.

"யார் சொல்லச் சொன்னார்?"

"மரியாதைக்குரிய படைத்தலைவர் உதயசந்திரன்."

"இரண்டு நாள்களுக்குள் கடல்மல்லையைவிட்டுப் புறப்பட வேண்டுமாமே, ஏன்?" முதியவர் கேள்விக்கு வீரன் மறுமொழி கூறவில்லை.

"நல்ல காலம் வந்தவுடன் மீண்டும் இங்கு வரலாம் என்றா சொன்னார்? அப்படியென்றால் இப்பொழுது கெட்டகாலம் வந்துவிட்டது என்று அர்த்தம். அப்படித்தானே?" என்று கேட்டார் முதியவர்.

காவல் வீரன் மிகவும் பணிவுடன், "ஐயா, இந்த நகரத்தில் சாளுக்கிய ஒற்றர்கள் நடமாட்டம் அதிகமாகிவிட்டது. வாதாபியினின்று மிக விரைவில் படைகள் வரப்போகின்றன. அந்த நிலையில் தாங்களும் தங்கள் மாணாக்கர்களும் இங்கே தங்கியிருக்கக்கூடாது என்பது படைத் தலைவர் விருப்பம். எவ்வளவு சீக்கிரம் உங்கள் முக்கிய உடைமைகளை எடுத்து வைக்க முடியுமோ எடுத்து வையுங்கள்; புறப்பட ஆயத்த மாயிருங்கள்; நான் நாளை வருகிறேன்'' என்றான்.

"போர், போர்... நீயும் நானும் பயந்தபடி யுத்தம் வரப்போகிறதாம். பொன்னாச்சி, நாம் இங்கேயே இருந்து மடிவோமா? அல்லது இந்த சிற்பபுரியைவிட்டு காஞ்சிமாநகர் செல்வோமா? உன் முடிவைச் சொல்'' என்றார் முதியவர்.

"நாம் இங்கேயே இருப்போம். இங்கேயே மடிவோம்'' என்றாள் பொன்னாச்சி.

# 39

இரவு கடைசி சாமத்தில், சைலேந்திரியும், பெரியவரும் காஞ்சியை வந்தடைந்தனர். கிழக்குக் கோட்டை வாயில் அருகே, அவர்கள் நரேந்திரனுக்காகக் காத்திருந்தனர். சிறிது நேரம் சென்றவுடன் இரண்டு வீரர்கள் அவர்கள் அருகே வந்து வணங்கி நின்றனர். அவர்கள் மிகவும் பணிவான குரலில், பெரியவரைப் பார்த்து, "வீணைக் கலைஞர் பரமகுரு இல்லத்திற்குத்தானே செல்லவேண்டும்? என்று கேட்டனர்.

சைலேந்திரிக்கு வியப்பாக இருந்தது. பெரியவரை நோக்கி, "இவர்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள்.

வண்டியின் குலுக்கலும், இனிய தென்றலும் அவரை உட்கார்ந் தவாறே தூங்கச் செய்தன. வண்டியோட்டி இனிய தெம்மாங்கு இசைத்துக் கொண்டே வந்தார். அவர் அருகே பெரியவர் அமர்ந்திருந்தார்.

ஒரு சமயம் வண்டியோட்டி பாட்டை நிறுத்திவிட்டு, "தாத்தா, தூங்காதீர்கள், தூக்கத்தில் கீழே விழுந்துவிடுவீர்கள்'' என்றார்.

இப்போது படுத்தால், அமைதியான தூக்கம் அவருக்கு வரும். சைலேந்திரி கேட்டது அவர் மனத்தில் பதியவில்லை.

"அதோ சிவிகை இருக்கிறது. நீங்கள் ஏறிக்கொள்ளுங்கள். தாத்தா விரும்பினால், ஓர் குதிரையில் அமர்ந்து வரலாம்'' என்றார் வீரர்களுள் ஒருவர்.

"குதிரையிலா... ஹூம்... முடியாது'' என்று மறுத்த பெரியவருக்கு, கடல்மல்லைக்கு வந்தவுடன் ஏற்பட்ட அனுபவம் நினைவுக்கு வந்தது.

"ஓ! மறுபடியும் சூழ்ச்சியா? நான் ஏமாறமாட்டேன். என்னைக் குதிரையிலேற்றி அனுப்பிவிட்டு, உன்னை எங்காவது கண்காணாத இடத்திற்குத் தூக்கிச் சென்றுவிடச் சதி செய்கிறார்கள்'' என்று கோபத்துடன் பேசினார்.

வீரர்கள் மிகவும் பணிவுடன், "தளபதி உதயசந்திரன் உத்திரவின் பேரில் நாங்கள் வந்துள்ளோம். உங்களை அழைத்துச் சென்று, மாளிகையில் தங்கவைக்குமாறு கட்டளை" என்று கூறி, அடையாள இலச்சினையைக் காட்டினர்.

சைலேந்திரிக்குக் களைப்புடன், இப்போது கவலையும் சேர்ந்தது. நரேந்திரன் வருகிறானா என்று, அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள்.

அவர்களுடைய தயக்கத்தைக் கண்ட குதிரை வீரர்கள், சைலேந்திரியின் பக்கம் திரும்பி, "இந்த நேரத்தில் நீங்கள் இங்கே நின்று கொண்டிருப்பதில் பலனில்லை. இரவு தங்குவதற்குச் சத்திரமும் அருகி லில்லை. அத்துடன் காவல் கெடுபிடியும் அதிகமாய் இருப்பதால், வெளி ஊர்க்காரர்கள் மீது சந்தேகம் ஏற்படும்" என்றனர்.

சைலேந்திரி, பெரியவரை நோக்கினாள். "நரேந்திரன் எப்போது வருவான் என்று தெரியவில்லை. எங்காவது உடலைச் சாய்த்தால் போதும் என்று தோன்றுகிறது" என்றார்.

"அப்படியென்றால் வீரர்கள் சொல்வதுபோல் நான் சிவிகையில் வருகிறேன். இல்லாவிடில் நடந்து வருகிறேன். நீங்களும், நானும் நடந்தே செல்லலாம்" என்றாள்.

"தளபதி இட்ட கட்டளையை நாங்கள் மீறக்கூடாது. தங்களைச் சிவிகையில் அழைத்துவரச் சொல்லியிருக்கிறார்" என்றார் வீரர் ஒருவர்.

சிவிகையில் சைலேந்திரி ஏறிக்கொண்டாள். பெரியவர் மற்றொரு குதிரையில் அமர்ந்தார்.

நிலவொளியில், காஞ்சியின் அகன்ற வீதிகளின் வழியே சென்றனர். ஊர் அமைதியாக அடங்கியிருந்தது. பெரிய பெரிய வீடுகள், தோட்டத்தின் நடுவே வீடுகள். இரவிலும் விளக்கு ஏற்றி, பண்டங்கள் விற்கும் கடைகள். சில வீதிகளில் மக்கள் நடமாட்டமில்லை. பல்லவ மாளிகையின் முன், சிவிகையிலிருந்து சைலேந்திரி இறங்கினாள். மாளிகையின் பெரிய கதவுகள் திறக்கப்பட்டன. விசாலமான ஓர் அறையில் பெரியவரும், சைலேந்திரியும் தங்குவதற்கு ஏற்பாடாகியிருந்தது. இரவின் கடைசி ஜாமமாதலால், நிசப்தம் எங்கும் நிறைந்திருந்தது. பேயுறங்கும் வேளை என்பார்களே, அதுபோல் காவலர்களும் விழியில் தூக்கம் சேர களைத்து நின்றனர்.

பொழுது விடிந்து நீண்ட நேரம் கழித்தே பெரியவர் விழித்துக் கொண்டார். சைலேந்திரியும் அயர்ந்து உறங்கி, காலை வெயிலின் தாக்குதலால் விழித்துக்கொண்டாள். பணியாளர்கள் அவர்களுக்கு உதவக் காத்திருந்தனர்.



குளித்து நீராடி, உணவு அருந்தி பகலில் இளைப்பாறி, தோட்டத்தில் சிறிது நேரம் உலவியும் பொழுது போகவில்லை.

"நரேந்திரனைக் காணவில்லையே" என்று சைலேந்திரி கவலையு டன் கேட்டாள்.

குரல் வந்த திசையை நோக்கி, பரமகுரு கையை உயர்த்தி, "ஓ! சைலேந்திரியா! எந்தவிதத் துன்பமும், துயரமும் இன்றி வந்து சேர்ந்து விட்டாயா? மிக்க மகிழ்ச்சி. வீணை கற்க வந்த இந்தப் பெண்ணுக்கு எத்தனை சோதனைகள். காலை எழுந்தவுடன் வீணையை மீட்டாதது கை உடைந்தது போலிருக்கிறது" என்று வருத்தத்துடன் கூறினார் பரமகுரு.

சைலேந்திரி அனைவருக்கும் வணக்கம் தெரிவித்தாள். "காம்போஜத்திலிருந்து கொண்டு வந்த வீணை என்னிடம் இருக்கிறது" என்றாள்.

"ஓ! மலைநாட்டு வீணையா? அதில் என்ன புதுமை இருக்கிறது பார்ப்போம்! அதைக் கொடு" என்று ஆவலுடன் கேட்டார் பரமகுரு.

சைலேந்திரியின் கண்கள், அந்தக் கூடத்தை நோக்கி வட்ட மிட்டன. சாலினியை அவள் தேடினாள். அவளைப் பற்றிக் கேட்க விரும்பினாள். அதற்குள் பரமகுரு, "இன்றாவது சக்கரவர்த்தியைச் சந்திக்கலாமா? சாலினி துரோகம் செய்து ஓடிவிட்ட பிறகு, எனக்கு இந்த இடத்தில் இருக்கவே பிடிக்கவில்லை" என்று வருத்தத்துடன் கூறினார்.

"சாலினி துரோகம் செய்துவிட்டாளா? சாலினி எங்கே? ஐயாவுக்கு மிகவும் நெருங்கியவளாக இருந்தாளே!" என்று சைலேந்திரி வியப்புடன் கேட்டாள். மீண்டும் சுற்றும் முற்றும் பார்த்தாள்.

"ஆமாம்; நச்சு நாகம் என்று தெரியாமல், நான் அவளை மிகவும் நம்பினேன். என் உள்ளத்தை ஒப்படைத்தேன்" என்று கூறும்போது, பரமகுருவின் குரல் தழுதழுத்தது.

"வருத்தப்படாதீர்கள் பரமகுரு. கலைஞர்கள் வேதனைப்படக் கூடாது" என்றார் முகுந்தன், சைலேந்திரியைப் பார்த்தவாறு.

"கலைஞர்களுக்குத்தான் சோதனைக்குமேல் சோதனையே வருகிறது" என்றாள் சைலேந்திரி.

"நான் உடனே பல்லவ சக்கரவர்த்தியைச் சந்தித்தாக வேண்டும்" என்றார் பரமகுரு.

"காம்போஜத்திலிருந்து வந்திருக்கும் சைலேந்திரியும், சக்கரவர்த்தி யைச் சந்திக்கும் ஆவலில் இருக்கிறாள். அவள் தாய் காஞ்சியில் அவரிடம்

அசோக் நகர், சென்னை-83



சேர்ப்பிக்குமாறு ஓர் முகவரி கொடுத்து அனுப்பியிருக்கிறாள் என்பதும் நான் அறிவேன். அந்த முகவரிக்குடையவர் நமது சக்கரவர்த்திதான்" என்றார் முகுந்தன்.

சைலேந்திரி, ஆவலுடன் முகுந்தனை நோக்கினாள். அந்த விழிகளுக்குத்தான் எத்தனை காந்த சக்தி. விழிகளைச் சந்திக்க முடியாமல் தலை குனிந்தாள், சைலேந்திரி. நரேந்திரன் கண்களுடன், அவர் விழிகளை ஒப்பிட்டுப் பார்த்தாள். ஹூம்... நரேந்திரன் கண்களுக்கு இன்னும் அதிக சக்தி.

'நரேந்திரன் எங்கே?' யாரைக் கேட்பது என்று புரியாமல் தவித்தாள். தளபதி அனுப்பியதாக ஒருவர் நரேந்திரனுடன் வந்தார். அதனால் நரேந்திர னைப் பற்றி தளபதியைக் கேட்போம் என்று சைலேந்திரி முடிவு செய்தாள்.

உதயசந்திரன், பெரியவரைப் பார்த்து, "நேற்று நன்றாக இளைப்பாறி னீர்களா? எவ்விதக் குறையுமில்லையே?" என்றார். பிறகு சைலேந்திரியை நோக்கி, "வழிப்பயணத்தில் எந்த இடையூறுமில்லையே? நந்தீசனுடைய ஆட்கள் வழியில் தொல்லை கொடுத்தார்களா? துணைக்கு இருவரை அனுப்பி வைத்தேனே?" என்று கூறி, அவரும் சைலேந்திரியை நோக்கினார்.

151984 | 543154

உதயசந்திரனின் கூர்மையான மதியையும், மற்றவர் உள்ளத்தில் உள்ளதை அறியும் சக்தியையும் சைலேந்திரி மனத்திற்குள் வியந்து, தலை குனிந்தவாறு, "கிழக்குக் கோட்டை வாயிலில் சந்திப்பதாகக் கூறிய நரேந்திரனை இரண்டு நாள்களாகியும் காணவில்லை. கடல்மல்லையில் மரக்கலத்திலிருந்து இறங்கியதிலிருந்து, ஒன்றைத் தொடர்ந்து ஒன்றாக எதிர்பாராத சம்பவங்கள் நிகழ்கின்றன. இதுவரையில் தைரியமாக இருந்து விட்டேன். இந்தக் கணத்திலிருந்து எனக்குப் பயமாக இருக்கிறது" என்று சொல்லும்போது, அவள் குரல் தழுதழுத்தது.

இப்போது முகுந்தன் பேசினார்: "சைலேந்திரி, திடீரென்று உனக்குப் பயம் ஏன் வந்தது? கடல்மல்லையில் இருந்தால், ஒருவேளை உனக்கு ஏதாவது ஆபத்து நேர வாய்ப்புண்டு. அதனால் காஞ்சிக்கு அழைத்து வரச்செய்தேன். கட்டுக்காவல் அதிகம். அதை மீறி காஞ்சியில் எந்தவிதத் துன்பமும் உங்களுக்கு நேராது."

சைலேந்திரி, அவரை நிமிர்ந்து பார்த்தாள். "காம்போஜ நாட்டில் என் தாயிடம் நான் வீணை பயின்றேன். அந்தக் கலையில் என்னைச் சிறந்தவளாக்க, என்னைப் பல்லவ நாட்டிற்கு என் தாய் அனுப்பினாள். எங்கள் குடும்ப நண்பரான பெரியவரையும் என்னுடன் துணைக்கு அனுப்பினாள். என் தாய், சிறுவயதில் காஞ்சியில் வாழ்ந்தவள். அதனால்



காஞ்சிமாநகரில் பலரை அவள் அறிவாள். காஞ்சியில் ஒருவரைச் சந்திக்குமாறு முகவரி ஒன்றையும் கொடுத்தாள். என் துரதிர்ஷ்டம், கரை இறங்கியவுடனேயே தொல்லைமேல் தொல்லைகள் ஏற்பட்டன. கடைசியாக வீணைக் கலைஞர் – குருநாதர் பரமகுரு வீட்டில் ஏற்பட்ட சம்பவங்களை நீங்கள் அறிவீர்கள். பரிவாதினி என்ற அதிசய வீணை யைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அதைக் கண்ணால் காணக்கூட முடிய வில்லை. கட்டுக்காவல் நிறைந்த பல்லவ மாளிகையிலிருந்து அதைக் கவர்ந்து சென்றுவிட்டார்கள் என்றால், என்னைப் போன்ற பேதைப் பெண்களின் நிலை என்ன? அதனால், நான் மீண்டும் திரும்பி காம்போஜம் செல்ல விரும்புகிறேன். நரேந்திரனுக்கும் அதே எண்ணம்தான். அவர் எங்கே? அவரையும் காணவில்லையே. என்ன நேருமோ தெரிய வில்லையே! ஐயோ அம்மா, உன்னை எப்போது பார்க்கப்போகிறேன்? கடல்கடந்து வீணை பயின்றுவா என்று அனுப்பினீர்களே... ஆனால், நான் உங்களை உயிரோடு காணமுடியுமா என்ற பயம், இப்போது ஏற்பட்டு விட்டது" என்று கூறும்போது, சைலேந்திரியின் விழிகளில் கண்ணீர் நிறைந்தது.



# 40

பல திங்களுக்குப் பிறகு தேவசோமையைப் பார்க்கும்போது, இரத்தினதேவிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. கண்களைக் கசக்கிக்கொண்டு, வீடுதேடி வந்திருப்பவள் காபாலிகை தேவசோமை தானே என்று உற்று நோக்கினாள்.

"என்ன அப்படிப் பார்க்கிறாய், ரத்தினதேவி? நான் உன் அன்புத் தோழி தேவசோமைதான்" என்று கூறிச் சிரித்தாள் தேவசோமை.

அவள் மிகவும் இளைத்திருந்தாள். ஆனால், முகத்தில் வெற்றிப் பெருமிதம் இருந்தது.

"ரத்தினதேவி, உன் காதலன் விஷ்ணுவர்த்தனன் எப்படி இருக்கிறான்?" என்று வினவி, அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள்.

முகத்தில் எந்தவிதச் சலனமுமில்லாமல், "நாங்கள் இருவரும் மகிழ்ச்சியுடன் இருக்கிறோம். திருமணம் நடந்துவிட்டது. என் தாய் இறந்துவிட்டாள். காஞ்சியில் இருக்கும் தந்தையை அடையமுடியவில்லை. தாயும் இறந்துவிட்டாள்; இனி நான் அனாதை. நான் அரசரின் மாளிகைக்குச் செல்வதில்லை. வீட்டில் அடைபட்டுக் கிடக்கிறேன்" என்றாள்.

துக்கத்தையும், மகிழ்ச்சியையும் சமமாக ஏற்கும் மனமுடைய தேவசோமைக்கும் சிறிது வருத்தம் ஏற்பட்டது.

"எல்லாம் காபாலிகன் செயல். உனக்கு ஆதரவாக இருப்பேன். உன்னை அடிக்கடிச் சந்திப்பேன். கவலையில்லாமல் மாலப்பிரபா நதிக்கரையில் பொழுதை மகிழ்ச்சியுடன் கழிப்போம்" என்றாள்.

தேவசோமை மிகவும் உற்சாகத்துடன் இருப்பதைக் கண்ட ரத்தினதேவி, அவளுடன் தொடர்ந்து பேசி, அவளுடைய காஞ்சி விஜயத்தை அறிய விரும்பினாள்.



தேவசோமை, ஒன்றுவிடாமல் விவரித்தாள். அவள் சொல்வதைக் கேட்கக்கேட்க, ரத்தினதேவிக்கு வியப்பு தாங்கவில்லை.

பகைவர் நாட்டில், ஒரு பெண்ணால் இவ்வளவு சாகசங்கள் செய்ய முடிகிறதா? "பரிவாதினி வீணையைக் கொண்டுவந்தாயா? அதை முதலில் சொல்" என்று ரத்தினதேவி ஆவலுடன் கேட்டாள்.

"எடுத்த காரியம் வெற்றியடையாமல் வாதாபிக்குத் திரும்புவேனா? வாதாபி அரசரின் முகத்தில் விழிக்கும் துணிவு ஏற்படுமா? ரத்தினதேவி! பரிவாதினி வீணையை மிக எளிதில் கைப்பற்றிவிட்டேன்" என்று குதூகலத்துடன் கூறினாள்.

"ரத்தினதேவி! நான் எதிர்பார்த்ததுபோல் காஞ்சியில் கட்டுக் காவல் இல்லை. நந்திவர்மனுக்கு எதிர்ப்பு அதிகமாக இருக்கிறது. காஞ்சி மகுடத்தை அடைய, நந்திவர்மன் உறவினன் சித்திரமாயன் கடுமையாக முனைகிறான். தன் கட்சிக்கு ஆள்களைச் சேர்த்திருக்கிறான். பலசாலிகள் அவன் பக்கம் இருக்கிறார்கள். அரசு ஊழியர்களில் பலர், நந்திவர்மனுக்கு விரோதமாகச் சதி செய்கிறார்கள். என் பணி மிக எளிதில் நிறைவேறி விட்டது.

"வாதாபியின்று பல ஒற்றர்கள் காஞ்சிக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்களை ஒற்றர்கள் என்று ஒருவரும் சந்தேகிக்க முடியாது. சாலினி என்பவள் காஞ்சிக்கு வந்து சில மாதங்கள் ஆகியும், அவளால் பரிவாதினி யைக் கைப்பற்ற முடியவில்லை. பரமகுரு என்ற வீணைக் கலைஞரின் காதலியாகவே மாறிவிட்டாள். வாதாபியினின்று வந்தவர்கள் அவள் மீது சந்தேகம் கொண்டனர். கடைசியில் அவள்தான் பரிவாதினி வீணையைக் கவர்ந்து வந்தாள். நான் அதை மிக எளிதாக அவளிடமிருந்து அடைந்தேன்.

"காஞ்சிநகரத்துக்கு வெளியே காட்டில் பாழடைந்த கோயில் அருகே காத்திருந்தேன். அவள் வரவில்லை. ஓட்டமும் நடையுமாக வாதாபியை வந்தடைந்தேன். பறவைபோல் பறந்து வருவோமா என்று எண்ணினேன். பரிவாதினியைக் காணாமல் பல்லவர்கள் படைகளுடன் தொடர்ந்து வந்து விடுவார்கள் என்ற பயமுமிருந்தது. ஆனால் ரத்தினதேவி! ஓர் ஆபத்து மில்லாமல் பொழுது புலரும் வேளையில் நான் பரிவாதினி வீணையை ஒரு குழந்தைபோல் அணைத்து சக்கரவர்த்தியின் பாதங்களில் சமர்ப்பித்து விட்டேன்.

"சக்கரவர்த்திகள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. பரிவாதினியைக் காஞ்சியினின்று கொண்டுவர ஒற்றர்கள் பலர் முயன்று கொண்டிருக்கும்போது, சபதம் செய்து, வீணையைக் கொண்டு வந்ததற்காக அவர் என்னைப் பாராட்டினார்.

இளைப்பாறிவிட்டு, பகல் வேளையில் தன்னைச் சந்திக்குமாறு என்னிடம் கூறினார். பட்டத்தரசி என்னை ஆலிங்கனம் செய்து கொள்ளாதது ஒன்றுதான் பாக்கி. இந்த சாம்ராஜ்யத்தையே அளித்து விடுவதுபோல் புகழ்ந்தாள்."

உற்சாகத்துடன் தேவசோமை பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த ரத்தினதேவி கேட்டாள்:

"தேவசோமை! உன்னை ஒன்று கேட்கிறேன், கோபிக்க மாட்டாயே?"

"ஆகா! நிறைய நீ கேட்கலாம். அதற்கு ஏற்ற மறுமொழி நான் கூறுவேன். கோபம் ஏன் வருகிறது? ஒன்றுவிடாமல் உன்னிடம் தெரிவிக்கவே இங்கு வந்தேன். என் மனம் சலனமற்று இருக்கிறது. மகிழ்ச்சித் தடாகத்தில் நான் நீந்திக்கொண்டிருக்கிறேன்" என்று கூறி, ரத்தினதேவியின் கரத்தைப் பற்றினாள்.

"உன் மூதாதையர்கள் பல்லவ நாட்டைச் சேர்ந்தவர்கள்தாமே?"

"ஆமாம்."

"அப்படி இருக்க, சாளுக்கிய நாட்டிற்கு உதவவேண்டும், பல்லவ நாட்டிற்குத் துரோகம் செய்ய வேண்டும் என்ற எண்ணம், உனக்கு ஏன் ஏற்பட்டது?"

ரத்தினதேவி கேட்டதற்கு, தேவசோமை பெரும் சிரிப்புடன் "துரோகமா? எது துரோகம்? எனக்கு எல்லா நாடும் ஒரே நாடுதான். எனக்குத் தீங்கிழைத்த பல்லவ நாட்டைப் பற்றி உன்னிடம் நான் முன்பே சொல்லியிருக்கிறேன். பரிவாதினி எனும் அற்புத மாணிக்க வீணையைத் தங்களிடம் வைத்திருப்பதால், பல்லவனுக்குக் கலைக் கர்வம் அதிகம். அவன் கொட்டத்தை ஒடுக்க முதல் வழி இதுதான். இதில் துரோகம் எங்கிருக்கிறது?" என்று அழுத்தந்திருத்தமாகப் பேசினாள்.

தேவசோமையின் துணிவை, முன்பே ரத்தினதேவி அறிவாள். எடுத்தக் காரியத்தை அவள் வெற்றிகரமாக முடித்ததில், ரத்தினதேவிக்கும் பெருமைதான்.

வெளியே முரசு ஒலிப்பது கேட்டது. யானை மீது முரசை ஏற்றி 'தம்தம்' என்று முரசு கொட்டி, பிறகு ஒரு செய்தியை நகரமெங்கும் சாளுக்கிய வீரன் அறிவித்தவாறே சென்றான்.

"பல்லவ நாட்டினின்று பரிவாதினி வீணையைக் கொண்டுவந்த தேவசோமையைப் பாராட்டி, அரண்மனையில் விழா ஒன்று இன்று நடைபெறுகிறது. வாதாபி மக்கள் எல்லோரும் கலந்துகொள்ள அழைக்கப்படுகிறார்கள்." 'தம்தம் தம்தம்' என்று முரசு முழங்கியது.



தேவசோமையைப் பாராட்டும் விழாவில் கலந்து கொள்ளப் பெரிதும் ஆவல் கொண்டாள் ரத்தினதேவி. தன் கணவர் விஷ்ணுவர்த்தனனிடம், தன் எண்ணத்தை வெளியிட்டாள். காபாலிகை மீது ஆத்திரம் கொண்டிருந்த விஷ்ணுவர்த்தன், ரத்தினதேவியின் விருப்பத்தை எதிர்த்தான்.

ரத்தினதேவிக்கு ஏற்பட்டது ஆத்திரமா, வருத்தமா என்று சொல்ல முடியாத அளவுக்கு அவள் பேசினாள். விழாவிற்குப் போய்த்தான் தீர்வேன் என்று பிடிவாதம் பிடித்தாள்.

"காபாலிகையைப் பார்க்கச் சென்றால், பிறகு நீ அவளுடனேயே நாடோடிபோல் திரிய வேண்டியதுதான். என்னை மறந்துவிட வேண்டியது தான்" என்று அவன் கண்டிப்பாகக் கூறினான்.

ரத்தினதேவி ஏதும் பேசாமல், அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டு வாய்விட்டு அழுதாள். விஷ்ணுவர்தனன் மௌனமாகச் சென்று விட்டான்.

இரவு அவன் வீடு திரும்பும்போது, 'ரத்தினதேவி ரத்தினதேவி' என்று பரபரப்புடன் அழைத்தபடி வந்தான். கதவைப் பலமாகத் தட்டினான்.

"உன் தேவசோமைக்கு நேர்ந்த துயரத்தைச் சொல்கிறேன். கதவைத் திறந்து வெளியே வா!" என்று கூறினான்.

"ரத்தினதேவி, எனக்குச் சொல்லவே நடுங்குகிறது. வார்த்தைகள் வரவில்லை தேவி—தேவசோமைக்கு இப்படி நேரும் என்று யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்." அவன் குரலில் துயரம் மிகுந்திருந்தது. சொற்கள் தடுமாறி வந்தன. அவன் பேசும் குரல் கேட்டு, ரத்தினதேவி கதவைத் திறந்து வெளியே வந்தாள்.

"தேவசோமைக்கு என்ன நேர்ந்தது? விழா சிறப்பாக நடந்ததா? சாளுக்கிய மாமன்னர், தேவசோமையைப் பாராட்டிப் பரிசளித்தாரா? கோலாகலமாக நடைபெற்ற அந்த நிகழ்ச்சியைக் காணும் பாக்கியம் எனக்குத்தான் கிடைக்கவில்லை. 'அந்த விழாவைக் காண நீ வந்தாயா?' என்று தேவசோமை கேட்டால், நான் என்னவென்று சொல்வேன்?" என்று ரத்தினதேவி சோகக் குரலில் கேட்டாள்.

"நல்லவேளையாக நீ வரவில்லை. ரத்தினதேவி, தேவசோமையை அரசர் கண்டித்தார்; தண்டித்தார். அதைப் பார்த்த நீ வருத்தப்பட்டிருப்பாயா, வேதனைப்பட்டிருப்பாயா, சொல்ல முடியாது" என்றவுடன், ரத்தினதேவி ஒன்றும் புரியாமல் கேட்டாள்: "என்ன நேர்ந்தது? தேவசோமைக்குத் தண்டனையா?"

விஷ்ணுவர்த்தனன் அங்கு நடந்தவற்றை விவரித்தான்.

# 41

தேவசோமை கொண்டு வந்து கொடுத்த பரிவாதினியைக் குழந்தைபோல் மடியில் வைத்துக்கொண்டு, அரசர், தன் பட்டத்து அரசியை அழைத்தார். அரண்மனைப் பாடகரை அழைத்தார். முதல் அமைச்சரை அழைத்தார்.

எல்லோரும் பரிவாதினியை வியப்புடன் பார்த்தனர். அரண்மனைப் பாடகர் வீணையைக் கூர்ந்து கவனித்தார். வயது முதிர்ந்த அவர், வீணையை மீட்டிப் பார்த்தார். பிறகு அவர் அரசரை நோக்கி, "வீணையை இரு பகுதியாகப் பிரிக்கமுடியும். பிரிக்கலாமா?" என்றார்.

சாளுக்கிய மாமன்னர் வீணையை ஒருமுறை பார்த்தார். பிறகு அவர் பாடகரை நோக்கி, "மாலையில் நடைபெறும் விழாவில் தேவசோமையைக் கேட்போம். தேவி நல்லதொரு பாடலை பரிவாதினியில் மீட்டப் போகிறாள். பிறகு வீணையை இரு பிரிவாகப் பிரிப்போம்" என்றார்.

பாடகர், அரசரை நெருங்கி, "சக்கரவர்த்திகளே! வீணையின் குடத்துக்குள் விலைமதிப்பற்ற மாணிக்கக் கற்கள் பதிக்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். சாளுக்கிய நாட்டின் விலைமதிப்பற்ற ஆஸ்தி அது. அந்தப் பொக்கிஷம் அதில் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும்" என்றார்.

சபை கூடியது. தேவசோமையை அந்தப்புரத்திற்கு வரவேற்று, அவளுக்குப் பல புதுப்புடவைகளும், அணிமணிகளும் பரிசளித்தார். சாளுக்கிய மன்னர்.

"எனக்கு இந்தப் பரிசுகள் வேண்டாம். இவற்றை வைத்துக் கொண்டு நான் என்ன செய்யப்போகிறேன். நல்லதொரு மண்டை ஓடு, புதிய மது. இதுபோதும்" என்று மிகவும் மரியாதையுடன் தெரிவித்தாள் தேவசோமை.



"உன் மகத்தான சேவைக்கு நான் பரிசளித்தாக வேண்டும். மக்கள் எதிரே உன்னைப் பாராட்டினால் இந்த நாட்டில் உன் மதிப்பு உயரும்" என்றார்.

"சாளுக்கிய சக்கரவர்த்தியே! நம் நாட்டின் மதிப்புயரச் சபதம் செய்து, நான் பரிவாதினியைக் கவர்ந்து வந்தேன். தங்கள் அன்பு ஒன்றே எனக்குப் பரிசு. மற்றொன்றும் என் மனத்திற்குள் துடித்துக்கொண்டிருக்கிறது. காஞ்சி நகரம் தக்க பாதுகாப்பின்றி இருக்கிறது. உறவின்முறைப் பூசல்கள் நிறைய உள்ளன. இதுவே தருணம் படையெடுக்க. காஞ்சி வீழவேண்டும். நான் அங்கு சென்று ஆனந்தக் கூத்தாட வேண்டும். மீண்டும் காபாலிகர் பெருமை மலர வேண்டும்" தேவசோமையின் இந்த எண்ணத்தை சாளுக்கிய சக்கரவர்த்தி மெச்சினார்.

ஆனால், மறுகணம் அரண்மனைப் பாடகர் அங்கு விரைந்து வந்தார். சக்கரவர்த்தியின் செவிக்கருகே வந்து ஏதோ தெரிவித்தார். சக்கரவர்த்தியின் முகம் மாறியது. விழிகளில் கோபத் தணல் கொப்பளித்தது.

"ஏ, தேவசோமை! உண்மையைச் சொல்லு. இந்த வீணைதான் பரிவாதினியா? இதுதான் நிஜமான பரிவாதினியா? இதுதான் மாணிக்கக் கற்கள் பதிக்கப்பட்ட மாணிக்க வீணையா? என்னை ஏமாற்றப் போலி வீணையைக் கொண்டுவந்திருக்கிறாயா?" என்று கர்ஜித்தார்.

தேவசோமை, ஒருகணம் திகைத்தாள். அரசர் முகம் கணத்தில் மாறியதையும், குரலில் சீற்றம் மிகுந்திருப்பதையும் கண்டாள். அரண்மனை பாடகரைத் திரும்பிப் பார்த்தாள். ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது என்பதைக் கணத்தில் புரிந்துகொண்டாள். அச்சம் சிறிதுமின்றி, அவளும் குரலை உயர்த்தினாள்:

"என்ன கேட்கிறீர்கள் சக்கரவர்த்தி, திடீரென்று மரியாதை குறைகிறதே?"

"ஆம்; உன் கபட நாடகம் என்னிடம் செல்லாது. உண்மையைச் சொல். மகேந்திரப் பல்லவன் கண்டு பிடித்த பரிவாதினி இதுதானா? பல்லவர் பெருமைக்குக் காரணமாக இருந்த பரிவாதினி இதுதானா? மாணிக்கக் கற்கள் புதைந்திருக்கும் மாணிக்க வீணை இதுதானா?" - சக்கரவர்த்தியின் குரலில் கடுமை இருந்தது.

"ஆம், அதில் என்ன சந்தேகம்? காஞ்சி மாளிகையிலிருந்து கவரப் பட்டு, பல இடையூறுகளுக்கிடையே இதை நான் கொண்டு வந்தேன். யார் இதை மறுப்பது?" தேவசோமையும் குரலைத் தாழ்த்தவில்லை.

"நான்தான் சொல்கிறேன். இது உண்மையான பரிவாதினி வீணையன்று. இதில் மாணிக்கக் கற்கள் இல்லை" என்றார் அரண்மனைப் பாடகர்.

தன் கணவர் விவரித்து வந்ததைக் கேட்டு வந்த ரத்தினதேவி 'ஐயோ' என்று அலறினாள்.

"நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையா? பிறகு என்ன நடந்தது? தேவசோமை பொய் சொல்லி ஏமாற்றிவிட்டாளா? சாளுக்கியச் சக்கரவர்த்தியின் கோபத்திற்கு ஆளாகிவிட்டாளா? அவளுக்குக் கடுந்தண்டனை கிடைத்திருக்குமே?" என்று நடுங்கும் குரலில் கேட்டாள்.

"ஆமாம், ரத்தினதேவி! நீ அதிர்ச்சியடைவாய் என்பதை நான் அறிவேன். அரண்மனைப் பாடகர், வீணையை மீட்டினார். ஸ்வரநாதத்தில் பேதமிருந்தது. வீணையைப் பிரித்தார். அதில் மாணிக்கக் கற்களில்லை. சாளுக்கிய சக்கரவர்த்திகளிடம் விரைந்து வந்து தெரிவித்தார்; காவல் வீரர்களைச் சக்கரவர்த்தி அழைத்தார்.

"இவளை இழுத்துச் சென்று, பாதாளச் சிறையிலடையுங்கள் . தீர விசாரித்துக் கடுத்தண்டனை அளிப்போம்" என்று கட்டளையிட்டார்.

பல்லவ மன்னர் நந்திவர்மனும், உதயசந்திரனும் அந்தரங்கமாகப் பேசிக்கொண்டிருந்தனர். நந்திவர்மன் நினைப்பதை உதயசந்திரன் செய்வார். உதயசந்திரன் என்ன செய்ய வேண்டும் என்று திட்டமிடுகிறாரோ, அதை நந்திவர்மன் சொல்வார்.

"பரிவாதினியைப் பறிகொடுக்காமல் இருந்தோமே" என்றார் நந்திவர்மன், மகிழ்ச்சியுடன்.

உதயசந்திரன் உடனே மறுமொழி கூறவில்லை. "சாளுக்கியர்களுக்கு அதன்மீது ஒரு கண். நம் நாட்டுக் கலை வளர்ச்சியைக் கண்டு அவர்களுக்கு எழுந்த பொறாமை, நம்மிடத்துத் தணியாத விரோதத்தை ஏற்படுத்திவிட்டது" என்று கூறினார்.

"உதயசந்திரா! இங்கிருந்து சிற்பிகளை அழைத்துச் சென்றுவிட்டார்கள். புதிதாகக் கோயில் கட்ட நான் திட்டமிட்டும், போதிய சிற்பிகள் நம் நாட்டில் தேடினாலும் கிடைக்கவில்லையே" என்று நந்திவர்மன் கவலை தெரிவித்தார்.

"மாமல்லபுரத்திலுள்ள முதிய சிற்பியை உடனே காஞ்சிபுரம் வருமாறு வேண்டிக்கொண்டும், ஏனோ அவர் மறுக்கிறார்" என்றார் உதயசந்திரன்.

நந்திவர்மன், வியப்புடன் உதயசந்திரனை நோக்கினார். "அமைதியாக அவரும் அவர் மனைவியும் வாழ்க்கையை நடத்துகின்றனர். சிற்பக் கலை அழியாமல் இருக்க, அவர் இளைஞர்களை உருவாக்குகிறார். அவரை ஏன் காஞ்சிக்கு வருமாறு கூறினீர்கள்?" என்று நந்திவர்மன் கேட்டார்.



"பரமகுருவைக் காஞ்சிக்கு அழைத்து வந்த அதே காரணம்தான், அரசே! காஞ்சிக்கு வராமலிருந்தால், சாளுக்கியர்கள் பரமகுருவைக் கடத்திச் சென்றிருப்பார்கள். சிற்பிக்கும் அதே கதி நேரக்கூடாது என்று நான் நினைக்கிறேன்" என்றார் உதயசந்திரன்.

"அவர் என்ன சொல்லுகிறார்?" நந்திவர்மன் கேட்டார்.

"கடல்மல்லையை விட்டு வர மறுக்கிறார்." உதயசந்திரன் கூறினார்.

"அவரிடம் உண்மை நிலையைக் கூறினீர்களா?" நந்திவர்மன் கேட்டார்.

"இல்லை. ஆனால், சாளுக்கிய ஒற்றர்களின் நடமாட்டம் அவருக்குத் தெரியும். சித்திரமாயன் செய்யும் சதித்திட்டங்களையும் அவர் அறிவார். கடல்மல்லையில் தங்கியிருந்தால் அவருக்கும், அவரது மாணவர்களுக்கும் ஆபத்து என்பதை எடுத்து உணர்த்தவேண்டும்" என்றார் உதயசந்திரன்.

நந்திவர்மன் ஏதோ யோசனையில் இருந்தவர், "சாளுக்கியர்கள் வெகு விரைவில் படையெடுத்து வந்துவிடுவார்கள் என்று உறுதியாக நீ நினைக்கிறாயா?" என்று கேட்டார்.

"ஆமாம், அரசே! நம் ஒற்றர்ப் படைத் தலைவர், வாதாபியின்று விரைந்து வந்துவிட்டார். இனி அவர் அங்கு செல்லப்போவதில்லை என்று தெரிவித்துவிட்டார். வாதாபியை விட்டுப் படைகள் புறப்படும் வரையில், அவர் உதவியாளர்கள் அங்கு இருப்பார்கள்" என்று சொன்னவர், "பல்லவ சக்கரவர்த்திகளே! பரிவாதினி வீணை கிடைக்காததால் மிகவும் சினங்கொண்டு, படையெடுப்பைச் சாளுக்கிய மன்னர் துரிதப்படுத்துவார்" என்றார்.

நந்திவர்மன் மெல்ல நகைத்து, "பரிவாதினி வீணைக்கு மாறாக வேறு வீணையை நாம் வைக்காதிருந்தால்? பரிவாதினியை அடைவதுடன் திருப்தியடைந்திருப்பார்களா?" என்று கேட்டார்.

"பரிவாதினியையும் அடைந்து, பல்லவ நாட்டையும் அடைவது அவர்கள் எண்ணம்" என்று கூறினார் உதயசந்திரன்.

"படையெடுப்பு உறுதி என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" நந்திவர்மன் கேட்டதற்கு, "ஆமாம் அரசே! நாம் பேசிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், சாளுக்கிய மன்னர், தன் புதல்வருடன் காஞ்சியை நோக்கிப் புறப்படுவதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்திருப்பார்" என்றார்.

நந்திவர்மனும், உதயசந்திரனும், போர் ஏற்பட்டால் தாக்குவதற்கு ஏற்ற பல திட்டங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்.

"காஞ்சிக் கோட்டை முற்றுகையிடப்பட்டால், எதிரிகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளப் போதுமான உணவுப் பண்டங்களைச் சேமித்து வைக்கவேண்டும். நகரத்திலுள்ள பல்லவர்களுக்கு எதிரான துரோகிகளை, உடனே சிறைச்சாலையில் அடைக்கவேண்டும். அவர்களைக் கோட்டைக் குள்ளே உள்ள சிறைச்சாலைகளில் அடைத்து விடவேண்டும்" என்று உதயசந்திரன் தெரிவித்தார். தொடர்ந்து அவர் கூறினார்:

"முதலில் நந்தீசனைச் சிறைப்படுத்த உத்தரவிட்டுள்ளேன். சித்திரமாயனையும் அவனது உதவியாளர்களையும் கண்காணித்து, காஞ்சிச் சிறையில் அடைக்க உத்தரவிட்டுள்ளேன்."

"அவர்களையும், காஞ்சிக்கு வெளியே சிறையிலிட்டால் என்ன?"- நந்திவர்மன் கேட்டார்.

"கூடாது, சக்கரவர்த்திகளே! கோட்டை முற்றுகையின்போது, அவர்களைச் சாளுக்கியப் படைகள் மீட்டுவிடும். சித்திரமாயன் குழுவினர், சாளுக்கியப் படைகளுக்கு உதவியாக இருப்பார்கள். கோட்டத் தலைவர்களுடன் சேர்ந்து, காஞ்சிக் கோட்டையை வீழ்த்த முயல்வார்கள்" என்றார் உதயசந்திரன்.

நந்திவர்மன் விழிகளை மூடிச் சிறிது நேரம் யோசித்தார். "கோட்டையை முற்றுகையிடவிடாமல் நாம் சாளுக்கியர்களைத் தடுக்க முடியாதா? வடபெண்ணை ஆற்றங்கரையருகே நம் படைகளை இறங்கச் செய்து, தடுக்கமுடியாதா?" என்று கேட்டார்.

உதயசந்திரன் மெல்லச் சிரித்தார். அந்தச் சிரிப்பில் வேதனை இருந்தது. "நிரந்தரமாக உள்ள படைகளின் எண்ணிக்கை நமக்குக் குறைவுதான். கிராமங்களிலுள்ள வேளாண்மைத் தொழில் செய்பவர் களையும், நெசவாளர்களையும் முரசு அறிவித்துப் படைகளில் சேர்க்க வேண்டும். கோட்டத் தலைவர்களின் ஒத்துழைப்பைப் பெறவேண்டும். அதற்கெல்லாம் போதிய அவகாசம் வேண்டும். முதலமைச்சரையும், மற்றவர்களையும் கலந்தாலோசிப்போம்" என்றார்.

"உதயசந்திரா! உங்களைவிட தக்க யோசனை கூறுபவர்கள் யார் இருக்கிறார்கள்? சென்ற சில ஆண்டுகளாகவே நான் மெத்தனமாக இருந்து விட்டேன். என்னை ஏதோ ஒரு சக்தி பிடித்திழுத்தது. இப்போதுதான் எனக்குத் தெளிவு பிறந்துவிட்டது. விஷ்ணு பக்தர் திருவாலி திருமங்கை மன்னரைக் காஞ்சிக்கு வரவேற்று, அவர் அருள் பெற்றிருந்தால் இத்தகைய சோதனை ஏற்பட்டிராது. திருமங்கை மன்னரைக் காஞ்சிக்கு



அழைப்போமா?" -நந்திவர்மன், உதயசந்திரன் கரங்களைப் பற்றிக் கொண்டார்.

"திருமங்கை மன்னரை வரவேற்க இப்போது தக்க தருணமில்லை. நான் மூன்று யோசனைகளைச் சொல்கிறேன். ஒன்று, சித்திரமாயன் மற்றும் அவர் ஆதரவாளர்களைச் சிறையிலிடுவது. இரண்டு, உடனே தெற்கே நந்திபுரத்துக்கு நீங்கள் பட்டத்தரசியுடன் செல்வது. அங்குள்ள கோட்டை யைப் பழுதுபார்த்து, பலப்படுத்தச் சொல்லியிருக்கிறேன். இப்போது திருக்குடந்தைப் பகுதிகளில் திருமங்கை மன்னர் கோயில்கள்தோறும் விஜயம் செய்து, கோயிலில் குடிகொண்டுள்ள திருமால் மீது பதிகங் களைப் பாடி, அடியார்களுக்கு அருள்புரிந்து வருகிறாராம். அவரை அங்கே நீங்கள் சந்தித்து ஆசி பெறலாம். ஏற்படும் போரில் வெற்றி நம் பக்கம் கிடைக்குமாறு அருள் பெறலாம். மூன்று..." என்று கூறி நிறுத்தினார்.

"மூன்றாவதையும் சொல்லிவிடுங்கள் உதயசந்திரன்" என்றார் நந்திவர்மன்.

"மூன்றாவது: உறையூர், பழையாறை, திருவாரூர் என்று தனித் தனியே பிரிந்திருக்கும் சோழர்கள் குலத்தலைவர்களைச் சந்தித்து, நமக்கு உதவி கேட்பது. கோட்டத் தலைவர்களைச் சந்திப்பது. பாண்டியர்களுக் குத் தூது அனுப்புவது" என்றார் உதயசந்திரன்.

"நீங்கள் சொல்வது ஒவ்வொன்றையும் நான் ஏற்கிறேன். அரசியலும், ராஜதந்திரமும் நிறைந்த திறமைசாலியான நீங்களே, இனி முதல் அமைச்சர். எனக்கு ஒரு சந்தேகம். என்னையும், பட்டத்தரசியையும், அரச குடும்பத்தினரையும் ஏன் நந்திபுரம் செல்லச் சொல்கிறீர்கள்? காஞ்சிக் கோட்டைக்குள்ளேயே தங்கியிருக்கக்கூடாதா? மக்கள் என்ன நினைப் பார்கள்?" என்று நந்திவர்மன் கேட்டார்.

"ஒன்றும் நினைக்கமாட்டார்கள். படையெடுப்பு நேரப்போகிறது என்ற செய்தி பரவுவதற்கு முன்பே நீங்கள் புறப்பட்டுவிடுங்கள். காஞ்சிக் கோட்டை முற்றுகையில் சாளுக்கியர்கள் வெற்றியடைந்துவிட்டால், காஞ்சியில் தங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் முனைந்துவிடுவார்கள். அது ஆபத்தானதல்லவா?" உதயசந்திரன் சமாதானப்படுத்தினார்.

நந்திவர்மன் கவலையுடன் கேட்டார்: "நந்திவர்மன் ஓடி ஒளிந்தான் என்ற அவப்பெயர் ஏற்பட்டுவிடாதா?"

"பல்லவ சக்கரவர்த்தி விண்ணகரம் ஒன்று கட்டுவதற்காக நந்திபுரம் சென்றார். அங்கே திருமங்கை மன்னரைச் சந்தித்தார். நந்திபுரம் கோட்டையைப் பலப்படுத்தினார் என்ற புகழ்ப் பெயர்தான் பேசப்படும்" என்றார் உதயசந்திரன்.

அவர்கள் அந்தரங்கமாகப் பேசிக்கொண்டிருக்கும்போது, உதய சந்திரன் உதவியாளர் ஒருவர் விரைந்து வந்து, உதயசந்திரனிடம் செய்தி ஒன்றைத் தெரிவித்தார்.

உதயசந்திரன் அந்தச் செய்தியைக் கேட்டுப் பதற்றப்படவில்லை. "அப்படியா?" என்று புன்முறுவல் கூறி, அமைதியாக அரசரிடம் தெரிவித்தார்.

நந்தீசனைச் சிறைப்படுத்தி காஞ்சிக்குக் கொண்டு வரும்போது, சித்திரமாயனுடைய உதவியாளர்கள் வழிமறித்து நந்தீசனை மீட்டுச் சென்றுவிட்ட அந்தச் செய்தி கேட்டு, பல்லவ சக்கரவர்த்தி நந்திவர்மன் பரபரப்படைந்தார்.

"உதயசந்திரா! நீ கூறியதுபோல் சித்திரமாயனுடைய வீரர்கள் பலம் பொருந்தியவர்கள். திட்டமிட்டுச் செயலாற்றக்கூடியவர்கள். நாம் எடுக்கும் ஒவ்வொரு முடிவையும் முன்பாகவே அறிகிறார்கள். நம் படைபலம், ஒற்றர்பலம் எல்லாவற்றையும் சித்திரமாயன் வென்றுவிடுவது கண்கூடாகத் தெரிகிறது. இப்போது என்ன செய்யலாம்?" என்று கேட்டார்.

தன் உதவியாளனைப் போகுமாறு சொல்லிவிட்டு, "சக்கரவர்த்திகளே! இப்போது, அமைதியாகத் திட்டமிட்டு நிறைவேற்றும் மனப்பான்மையும் துணிவும் தேவை. நீங்கள் நாளைக் காலையில் திருப்பாதிரிப் புலியூரிலுள்ள கல்விச்சாலையைக் காணப் புறப்படுகிறீர்கள். தங்கள் பட்டத்தரசியும், சைலேந்திரியும், அவருடன் வந்த பெரியவரும் இன்று மாலை நந்திபுரம் நோக்கிப் புறப்பட ஏற்பாடு செய்கிறேன். திருப்பாதிரிப் புலியூரிலிருந்து தில்லைக்குச் சென்று, குறுக்கு வழியாக நந்திபுரம் அடைகிறீர்கள். நான் காஞ்சியில் தங்கிவிடுகிறேன். நாளை மறுநாள், காஞ்சிக் கோட்டைக் கதவுகள் அடைக்கப்படும்" என்றார்.

# 42

பரமகுருவும், சைலேந்திரியும் நந்திபுரம் வந்தடைந்து சில நாள்களாகி விட்டன. நந்திபுரம், காஞ்சி நகரைவிட மிகச் சிறிய நகரம். காவிரித் தாயின் அரவணைப்பால் பொலிவுடன் திகழ்ந்த அந்த நகரத்தில், சிறிய மாளிகையின் ஒரு பகுதியில் அவள் தங்க ஏற்பாடாகியிருந்தது. அழைத்த குரலுக்கு ஓடிவர பணிப் பெண்கள் இல்லை. பரமகுருவுக்கு வேறிடம் என்றாலும், அவருக்குப் பணிவிடை செய்ய அவள் அங்கு சென்று விடுவாள்.

விடிவெள்ளி முளைக்கும் முன்பே அவர் எழுந்துவிடுவார். வீணையின் இனிய நாதம், இளங்காலைப் பொழுதில் எங்கும் ஒலிக்கும். அவர் எதிரே அமர்ந்து, சைலேந்திரி பரிவாதினி வீணையை மீட்டுவாள். புதிய புதிய பாக்களை பரமகுரு கற்றுத்தருவார்.

இருள் நீங்கி, பொன் கதிர்கள் தவழத் தொடங்கும்போது, பரமகுருவை அழைத்துக்கொண்டு சைலேந்திரியும் பெரியவரும் காவிரிக் கரையை நோக்கி மெல்ல நடந்து செல்வார்கள். நடந்த சம்பவங்களைப் பேசிச் செல்வார்கள். காவிரியில் நீராடிவிட்டு, நந்திபுர விண்ணகரக் கோயிலுக்கு வருவார்கள். நந்திவர்மன் எழுப்பித்த விஷ்ணு கோயில், அந்த நகரத் திற்குப் பொலிவூட்டிக்கொண்டிருந்தது. அங்கே இசையுடன், திருமால் புகழ் கூறும் பாசுரங்களைப் பெண்கள் பாடுவர். யாழும், குழலும் ஒலிக்கும்.

நடந்து செல்லும்போது, சைலேந்திரியின் கண்கள் நான்கு பக்கமும் சுழலும். நரேந்திரனை அவள் எதிர்பார்ப்பாள். 'அவர் ஏன் இன்னும் வரவில்லை?' என்ற கேள்வி அவள் மனத்தில் எழுந்து, வேதனையை அளிக்கும். யாரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளமுடியும்?

பகல் பொழுதில் நந்திபுரத்து வீதிகளில் மெல்ல உலா வரும் பெரியவர், ஏதாவது செய்தியை அறிந்து வந்திருப்பாரா என்று அவள் கேட்கத் துடிப்பாள்.

சொற்கள் நெஞ்சை விட்டு வெளியே வராமல் தடுப்பது நாணமா, அச்சமா என்று அவளுக்குப் புரியவில்லை.

"நல்ல வேளையாக அன்று நரேந்திரன் வீரர்களுடன் வந்திரா விடில், நம் நிலை என்ன ஆகிருக்கும்?" என்று பெரியவர், ஒருநாள் நடந்த சம்பவத்தை நினைவுபடுத்திக்கொண்டு கேட்டார்.

"என்ன நடந்தது என்று மீண்டும் ஒருமுறை விளக்கிச் சொல், சைலேந்திரி. பல்லக்கிற்குள் இருந்தேன். வெளியே எழுந்த ஓலங்கள்தாம் கேட்டன. வேறு என்ன தெரிந்தது? விழியை இழந்து வாழ்வதைவிட, சாவதுமேல் சைலேந்திரி" என்று பரமகுரு வேதனையுடன் சொன்னார்.

"விழி இருந்தும் என்ன பயன்? நாங்கள் கண்களை அழுத்தமாக மூடிக்கொண்டோம். அந்தப் பயங்கர நிகழ்ச்சியை இப்போது நினைத்தாலும் உடல் நடுங்குகிறது உயிர் போய் மீண்டும் வந்த உணர்வு ஏற்படுகிறது." அன்று நடந்த சம்பவத்தை நினைத்துக்கொண்டாள்.

காஞ்சிக் கோட்டையை விட்டுப் புறப்பட்டு ஒரு பகல் ஓர் இரவு கழிந்தபிறகு, ஒரு காலை வேளையில் அவர்கள் சென்றுகொண்டிருந்த பல்லக்கைச் சிலர் சூழ்ந்துகொண்டனர்.

துணைக்கு வந்த பல்லவ வீரர்கள், அவர்களை எதிர்க்க முடியவில்லை. திடீரென பல்லவ வீரர்கள் தாக்கப்பட்டதால், சைலேந்திரி பயத்தால் கூச்சலிட்டாள். சிவிகைகளைச் சுமந்து வந்தவர்கள், நடுச்சாலையில் அவற்றை இறக்கி வைத்துவிட்டு, செத்தோம் பிழைத்தோம் என்று ஓடி ஒளிந்தனர். 'சித்திரமாயனுடைய வீரர்கள் வந்திருக்கிறார்கள்' என்று, அவர்கள் பயத்தால் கூறியவாறு ஓடினர்.

பல்லவ அரசி இருந்த சிவிகையை நோக்கிச் சித்திரமாயனுடைய வீரர்கள் ஓடிவந்தனர்.

'அந்தப் பல்லக்கில்தான் மலைநாட்டுப் பெண் இருக்கிறாள். அவளைத்தான் நம் தலைவர் தூக்கிவரச் சொன்னார். ஒரு சிறு சிராய்ப்பு கூட அவளுக்கு ஏற்படாமல், தூக்கி வாருங்கள்' என்று ஒருவன் கூவினான். தலைவர் என்று அவன் குறிப்பிட்டது, சித்திரமாயனை.

பல்லவ அரசி இருக்கும் சிவிகையை நோக்கிச் சிலர் ஓடுவதைக் கண்டு, சைலேந்திரி ஓவென்று அலறினாள். அரசிக்கு ஆபத்து ஏற்பட்டு விடப்போகிறதே என்று பயந்து, சைலேந்திரிக்கு என்ன செய்வது என்றே தோன்றவில்லை. சிவிகையிலிருந்து வெளியே பாய்ந்து, சாலையில் இரு புறமும் அடர்ந்து வளர்ந்திருக்கும் மரங்களின் மறைவை நோக்கி ஓடினாள்.



"அதோ ஓடுகிறாள் மலைநாட்டுப் பெண், அவளை விட்டுவிட்டுத் தவறாக எங்கோ செல்கிறீர்களே!" என்று ஒருவன் கூறினான். அவளை நோக்கிப் பாய்ந்து வந்தனர் முரடர்கள் சிலர்.

பல்லவ அரசி, மற்றும் மாளிகைப் பெண்கள் சிலரும் காஞ்சியிலிருந்து புறப்பட்டு நந்திபுரம் செல்லும் செய்தியை அறிந்த சித்திரமாயன், அவர்களைப் பின்தொடர்ந்து சென்று சிறைப்பிடிக்கக் கட்டளையிட்டிருந்தான். பரமகுருவும், சைலேந்திரியும் செல்கிறார்கள் என்பதையும் அறிந்திருந்தான். பரிவாதினி வீணையை அவர்கள் கொண்டு செல்கிறார்கள் என்பதை அறிந்து, வீணையையும் சைலேந்திரியையும் கவர்ந்துவரக் கட்டளை இட்டிருந்தான். பாதுகாப்பு அற்ற இடமாகத் தேர்ந்தெடுத்து, அவர்களைத் தாக்க சித்திரமாயனின் ஆட்கள் பின்தொடர்ந்தனர்.

சைலேந்திரியைச் சில வீரர்கள் சூழ்ந்துகொண்டனர். "வீணை எங்கே?" என்று அவளை அதட்டினர். "பரிவாதினி வீணையா, என்னிடம் இல்லையே" என்று சைலேந்திரி நடுங்கும் குரலுடன் கூறினாள். பிறகு "காப்பாற்றுங்கள்... என்னைக் காப்பாற்றுங்கள்" என்று கூவினாள். சைலேந்திரியைக் காப்பாற்ற பெரியவர் ஓடி வந்தார். கண் இமைக்கும் நேரத்தில் அது நடந்துவிட்டது.

நரேந்திரன் குதிரை மீது அங்கே வந்துவிட்டான். கரிய வானில் மின்னல் வெட்டிச் சென்று உலகை நடுநடுங்க வைப்பதுபோல், நரேந்திரன் வாளை வீசினான். அது புயல் எனச் சீறியது. திருமால் கைச் சக்கரம்போல் சுழன்றது.

சித்திரமாயன் வீரர்களின் தலைகள் வெட்டுண்டு, மண்ணில் உருண்டன. கரங்கள் துண்டாடப்பட்டன. வெட்டுண்ட கால்கள் துள்ளிப் போய், வெகுதூரம் சென்று வீழ்ந்தன. தலையற்ற உடல்கள் துடித்துக் கொண்டிருந்தன. மரண ஓலம் எங்கும் எழுந்தது. கண் இமைத்து மூடுவதற்குள், அந்தச் சம்பவம் நிகழ்ந்துவிட்டது.

குற்றுயிரும் குலை உயிருமாக எதிரிகள் மண்ணில் கிடந்தனர். உயிர் தப்பினால் போதும் என்று சிலர் ஓடினர். பூமி செந்நீரால் அபிஷேகம் செய்யப்பட்டது.

அந்த நிகழ்ச்சியை இப்போது நினைத்துக்கொண்டாலும், பெரியவர் சிறு குழந்தைபோல் நடுநடுங்கினார். பேச்சு வரவில்லை.

"தெய்வம்போல் வந்து காப்பாற்றினான் நரேந்திரன். ஒவ்வொரு தடவையும் அவன் திடீரென வந்து காப்பாற்றுகிறான்" என்று பெரியவர் சொல்லும்போது, பெருமையும் கம்பீரமும் இருந்தன.

"ஆபத்தில் காக்கும் அவரைக் கண்டால்தான் உங்களுக்குப் பிடிக்கவில்லையே!" என்று முணுமுணுத்தாள் சைலேந்திரி. அவள் கூறியது பெரியவர் செவியில் முழுமையாக விழவில்லை. "என்ன சொல்கிறாய் சைலேந்திரி? அவனை நான் காணவிரும்பவில்லை என்றா கூறுகிறாய்? அப்படிச் சொல்லாதே. இப்போது அவன் இங்கு வந்தால், நம் எல்லோருக்கும் மகிழ்ச்சிதானே" என்றார் பெரியவர்.

நரேந்திரன் வரவில்லை. நந்திவர்மனும் அங்கு வந்து சேரவில்லை.

"சாளுக்கியர்கள் படையெடுத்து வருவதாகச் சொன்னீர்களே, காஞ்சிக் கோட்டையை அவர்கள் சூழ்ந்திருப்பார்களோ? சக்கரவர்த்தி கோட்டைக்குள் சிக்கிக் கொண்டிருப்பாரோ? அப்படி இருக்காது. நந்திபுரக் கோட்டைக்குள் இருப்பதாக உதயசந்திரன் சொன்னாரே! ஒன்றும் புரியவில்லையே!" என்று கவலையுடன் கேட்டார் பரமகுரு.

"காஞ்சியிலேயே சக்கரவர்த்தியைச் சந்திக்கமுடியவில்லை. நந்திபுரத்திலா சந்திக்கப்போகிறேன்? ஹூம்... எதற்காக என்னை இங்கே அனுப்பினார்களோ!" என்று வருத்தப்பட்டுக்கொண்டார் பரமகுரு. அவர் அருகே இருந்து, அவருக்கு வேண்டிய பணிவிடைகளை அவள் செய்தாள். குருவுக்குத் தொண்டாற்றுவது புண்ணியம் என்று நினைத்தாள். சில சமயங்களில் அவள் கரத்தைப் பிடித்து அவர் தடவிக் கொடுப்பார். ஓர் தந்தையின் பாசம் அதில் இருக்கும் சிலபோதில் அந்த ஸ்பரிசத்தில் வித்தியாசம் தெரியும். சைலேந்திரி நடுங்குவாள். மெல்ல விலகுவாள். அன்று முழுவதும் அவர் அருகே செல்லமாட்டாள். பெரியவரை அனுப்பிவிடுவாள். "சைலேந்திரி எங்கே?" என்று பலமுறை அவர் கேட்பார். தாம் தவறு செய்ய நினைக்கிறோமோ என்று துடிப்பார்.

சோகமே உருவான அவர், இரண்டு நாள்களாகச் சரியாக உணவு கொள்வதில்லை. காலையில் வெகு நேரம் கழித்தே எழுந்தார். வீணையைத் தொடுவதில்லை. ஒருவருடனும் பேசுவதில்லை. திடீரென ஒருநாள், அவர் சைலேந்திரியை அழைத்தார்.

"இரவு ஓர் தீய கனவு கண்டேன். அதை நினைக்கும்போது பயமாயிருக்கிறது சைலேந்திரி" என்று அவர் நடுங்கும் குரலில், தான் கண்ட கனவை விவரிக்கலானார்.

"காஞ்சிக் கோட்டையைச் சாளுக்கியர்கள் சூழ்ந்துகொள்கிறார்கள். நந்திவர்மனும் மற்றவர்களும் எதிரிகளிடமிருந்து, சுரங்கப்பாதை வழியே கோட்டைக்கு வெளியே தப்பி வருகிறார்கள். அங்கே இவர்களுக்காகக் காத்திருந்தவர்கள்போல் சாளுக்கிய வீரர்கள் நந்திவர்மனைச் சிறைப்பிடிக்கின்றனர். நந்திவர்மனிடம் பரிவாதினி வீணை இருக்கிறது. அவர்கள் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள்.



சாளுக்கியத் தளபதியிடம், நந்திவர்மனை அழைத்துச்சென்று நிறுத்துகிறார்கள். "நாம் காஞ்சி மீது படை எடுத்ததே இந்த வீணைக்காகத் தான். வீணை கிடைத்துவிட்டது. இந்தப் பல்லவன் நமக்கு எதற்கு?" என்று பரிவாதினி வீணையைப் பறித்துக்கொண்டு, நந்திவர்மன் கட்டுகளை அவிழ்த்துவிட்டு விடுகிறார்கள். நந்திவர்மன் உயிர் தப்பினால் போதும் என்று ஓடோடி வருகிறார்.

நந்திபுரத்திற்கு வந்து, என் எதிரே தலைகுனிந்து நிற்கிறார்.

"அரசே பரிவாதினி எங்கே?" என்று நான் அலறுகிறேன்.

பல்லவ சக்கரவர்த்தி ஏதோ சொல்கிறார். என்னால் மறுமொழி கூற முடியவில்லை. சக்கரவர்த்தி நின்று கொண்டிருந்த கோலம் கண்டு, நான் ஓவென்று அலறுகிறேன். என் உடல் முழுவதும் வியர்த்துவிட்டிருந்தது. நெஞ்சை அடைக்கிறது... 'எனக்கு இந்தப் பூமியில் இனி என்ன வேலை?' என்று அலறுகிறேன். திடீரென்று விழித்துக்கொண்டேன்.

கண்டது கனவுதான். நனவாகி விடக் கூடாதே என்று நான் அஞ்சுகிறேன். யாரையாவது நீங்கள் விசாரித்து செய்தி கேட்டறியக் கூடாதா? காஞ்சிக் கோட்டை ஒருவித ஆபத்துமில்லாமல் இருக்கிறதா? பரிவாதினி வீணை பத்திரமாயிருக்கிறதா? சக்கரவர்த்தி நந்திபுரத்திற்கு எப்போது வருவார்? இந்தச் செய்தி எல்லாம் கேட்டு வரக் கூடாதா? நான் கண்ட கனவு உண்மை என்றால், நான் உயிரோடிருந்து பயனில்லை"– பரமகுரு குரல் தழுதழுக்க, கெஞ்சும் குரலில் கேட்டார்.

சைலேந்திரிக்கு ஒன்றும் புரியவில்லை. பெரியவர் ஒன்றும் பேசமுடியாமல் 'திரு திரு'வென்று விழித்தபடி நின்றிருந்தார். வெளியே சென்று செய்தி அறிந்து வருமாறு, சைலேந்திரி அவரை வற்புறுத்தினாள். "இப்படி கல்போல் நிற்கிறீர்களே?" என்று கடிந்துகொண்டாள். செய்தியைக் கேட்டு வர, அவர் வெளியே சென்றார்.

மாலை நெருங்கும்போது, அவர் உற்சாகத்துடன் திரும்பி வந்தார்.

"சைலேந்திரி, சைலேந்திரி... நரேந்திரனை நந்திபுர விண்ணகரக் கோயிலுக்கருகே கண்டேன்" என்றார்.

"அவர் எங்கே? அவர் எங்கே? அவரை ஏன் அழைத்து வரவில்லை? அவரைப் பார்த்தேன் என்று சொல்வதற்காகவா இங்கு வந்தீர்கள்? உடனே ஓடிச்சென்று அவரை இங்கு அழைத்து வாருங்கள்" என்று சைலேந்திரி பரபரப்புடன் பேசினாள்.

நரேந்திரனை அழைத்துவரப் பெரியவர் விரைந்தார்.

# 43

நரேந்திரனைச் சந்தித்துத் திரும்பி வரும்போது, பெரியவர் சோர்வுடனிருந்தார்.

நரேந்திரன் உடன் வராமல், அவர் மட்டும் திரும்பி வந்ததும், கலகலப்பாக இல்லாமல் அவர் முகமாற்றமும் சைலேந்திரியைத் திகைக்க வைத்தது. "அவர் அங்கே?" என்று கேட்க நினைத்தாள். வந்தவுடன் அவரே சொல்லியிருக்கலாம். ஏனோ அவர் மௌனம் சாதித்தார்.

"நரேந்திரன் கோயில் அருகே உள்ள மண்டபத்தில் படுத்திருக்கிறான்" என்றார் மெதுவாக.

"நாம் இங்கே இருப்பது அவருக்குத் தெரியவில்லையா? என்ன சொன்னார்? எப்போது இங்கு வருகிறார்" - சைலேந்திரி கேள்வி மேல் கேள்வி கேட்டாள்.

'இவர் என்ன மனிதர்? சிறிது சிறிதாகச் சொல்கிறார். இவரால் எனக்கு எந்தவிதப் பயனும் இல்லை. காம்போஜத்திலிருந்து எனக்குத் துணையாக வந்தவர் என்று பெருமையாக தளபதி உதயசந்திரனிடம் சொல்கிறார். இவருக்கு நரேந்திரனைக் கண்டாலே பிடிக்கவில்லை. அதனால்தான் அவரை அழைத்துவராமல் திரும்பி வந்திருக்கிறார்' என்று எண்ணினாள்.

"சைலேந்திரி! நரேந்திரன் நடக்க முடியாமல் படுத்திருக்கிறான். முழங்காலில் பலத்த காயம்" என்றார் பெரியவர். அவர் குரல் தழுதழுத்தது.

சைலேந்திரி திடுக்கிட்டாள். "ஐயோ, அவருக்கு என்ன நேர்ந்தது?" என்று கூறி எழுந்து நின்றாள். "இப்பொழுதே போவோம். காலில் பலத்த காயத்துடன் எங்கோ மண்டபத்தில் படுத்திருக்கிறார் என்று சொல்கிறீர்கள். உடனே போய் இங்கே அழைத்து வருவோம்" என்றாள் பரபரப்புடன்.



அவர் மறுமொழி கூறுவதற்கு முன்பே, வீட்டைவிட்டு இறங்கி மண்டபத்தை நோக்கி விரைந்தாள். பெரியவரும், அவளைப் பின் தொடர்ந்தார்.

நந்திபுரத்து விண்ணகரக் கோயிலருகே சிறு வீடு இருந்தது. அது ஒரு மண்டபம், வீடாக மாற்றப்பட்டது. அந்த வீடு, இரண்டாகத் தடுக்கப் பட்டிருந்தது. குறுக்குச் சுவருக்குப் பின்புறம், கயிற்றால் பின்னப்பட்ட கட்டில் ஒன்றில் நரேந்திரன் படுத்திருந்தான்.

அவன் அருகே முகுந்தன் உட்கார்ந்திருந்தார். நரேந்திரன் உற்சாகத்துடன் பேசிக்கொண்டிருந்தான்.

"நான் எல்லாவற்றையும் கேள்விப்பட்டேன். தக்க தருணத்தில் நீ வந்திராவிடில் பெரிய ஆபத்து நேர்ந்திருக்கும். உனக்கு இந்தப் பல்லவ நாடே கடமைப்பட்டிருக்கிறது" என்றார்.

நரேந்திரன், மௌனமாக அவருடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். "பழையாறையிலிருந்து மருத்துவர்கள் உடனே வந்து விட்டனர். மூலிகைகளைச் சாறு பிழிந்து, காயத்தில் கட்டியிருக்கிறார்கள். சில நாள்களில் நான் எழுந்து நடமாடுவேன். பல்லவ அரசரின் ஆட்சி இவ்வளவு தொலைவு பரவியிருக்கிறது என்பதை அறிய மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆறும், வயலும், சுற்றுச் சூழலும், செழுமையும் நிறைந்த இந்தப் பகுதி என் மனத்தைக் கவர்கின்றது" என்றான் நரேந்திரன். தொடர்ந்து, "சித்திரமாயன் அனுப்பிய வீரர்கள் சிலர், தலை தப்பினால் போதும் என்று ஓடிவிட்டனர். அவர்களைத் தப்பி ஓடுமாறு விட்டது தவறு. அவர்களுள் ஒருவன் மறைந்திருந்து தாக்கியதால் ஏற்பட்டதுதான் இது" என்று காலைச் சுட்டிக் காட்டினான்.

"அரசிக்கு எந்தவித ஆபத்துமில்லையே?" என்று கேட்டான், நரேந்திரன்.

"அவர்கள் அனைவரும் நலமாக வந்து சேர்ந்தனர். பல்லவ அரசி, உன் வீரத்தை மிகவும் பாராட்டிப் புகழ்ந்தார்" என்றார் முகுந்தன்.

"பரிவாதினி வீணைதான் அவர்களின் குறிக்கோள் என்று தெரிந்தது" – நரேந்திரன்.

"ஆமாம். எப்படியாவது வீணையை அபகரித்து வாதாபிக்கு அனுப்பிவிடத் துடிக்கிறான் சித்திரமாயன். வாதாபிக்குக் கொண்டு சென்ற வீணை போலியானது என்றறிந்த வாதாபி அரசன் மிகவும் சீற்றங் கொண்டு, காஞ்சியை நோக்கி வருகிறார். சித்திரமாயனுக்கும் தலைக் குனிவு ஏற்பட்டதனால், பரிவாதினியை எப்படியாவது கண்டுபிடித்துச் சாளுக்கியரிடம் ஒப்படைப்பதில் தீவிரமாக இருக்கிறான்" என்றார் முகுந்தன்.

"இந்த நாட்டிற்கு நாங்கள் வந்தது முதல், எல்லாமே விசித்திரமாக நடைபெறுகின்றன. பாவம், அந்த மலைநாட்டுப் பெண்ணுக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி" என்றான் நரேந்திரன்.

"கேள்விப்பட்டேன். மலைநாட்டுப் பெண்ணுக்கு எந்தவித ஆபத்தும் நேராமல் பார்த்துக்கொள்வேன்" என்றார் முகுந்தன்.

"ஆபத்து ஒருபுறம் இருக்க, அவள் தேடி வந்தவரைச் சந்திக்காதது அவளுக்கு வருத்தம். வீணையைப் பயில வாய்ப்பில்லை என்பதில் பெரும் ஏமாற்றம்."

பல்லவ சக்கரவர்த்தியை, சைலேந்திரி சந்திக்க முடியாமல் இருப்ப தால் அவள் சோர்வுற்றிருப்பதாகவும், வீணைக் கலைஞர் பரமகுருவுக்கு ஏற்பட்டிருப்பது கோபமா ஏமாற்றமா என்பதும், பல்லவ சக்கரவர்த்தி நந்திபுரத்திற்கு எப்போது வரப்போகிறார் என்பதும் தெரியவில்லை என்று, நரேந்திரன் வருத்தப்பட்டுக்கொண்டான்.

அவன், முகுந்தனைப் பார்த்துக் கேட்டான்: "ஐயா, பல்லவ நாட்டின் இன்றைய நிலைமையைப் பற்றிச் சொல்லுங்கள். சித்திரமாயனுடைய வீரர்களை எதிர்த்து நிற்கப் பல்லவ வீரர்களால் முடியவில்லையே. போது மான அளவுக்குப் படைவீரர்கள் இல்லையா? சாளுக்கியர்கள் படை யெடுத்து வருவதாகச் சொல்கிறீர்கள். எதிர்த்துப் போராடப் போதுமான வீரர்கள் இல்லை என்றால் பல்லவ சக்கரவர்த்தி என்ன செய்யப்போகிறார்? காஞ்சியைவிட்டுப் புறப்பட்ட சக்கரவர்த்தி, இன்னும் நந்திபுரம் வந்து சேரவில்லையே?" என்று நரேந்திரன் கவலையுடன் கேட்டான்.

முகுந்தன் புன்முறுவல் பூத்தது. அவருடைய தாடி மீசைக் கிடையே பளிச்சிட்டது. நரேந்திரனுக்கு பல்லவ நாட்டின் மீது இவ்வளவு அக்கறையா? அவன் கரத்தை அவர் அன்புடன் பற்றி, "நரேந்திரா, பல்லவ நாட்டின் மீது நீ கொண்டுள்ள அன்பையும், மதிப்பையும், பாராட்டுகிறேன். உன்னைப்போன்று துடிப்புள்ள பத்து வீர இளைஞர்களைத் தளபதி உதயசந்திரன் தேடிப் பிடித்து, பல்லவப் படைகளின் பல பிரிவுகளுக்குச் தலைவராக நியமிக்கப்போகிறார். கிராமங்களுக்குச் சென்று இளைஞர் களையும், பலம் மிக்கவர்களையும் தேடிப்பிடித்துப் படையில் சேர்க்கப் போகிறார். சக்கரவர்த்தி விரைவில் வருவார். அதுவரையில் இங்கே தங்கி ஓய்வு எடுத்துக்கொள்" என்று சொன்னவர், "நரேந்திரா, மலைநாட்டுப் பெண்ணையும், பரமகுருவையும் சந்தித்துவிட்டு வருகிறேன். இனி நான் நந்திபுரத்தில்தான் இருக்கப்போகிறேன். நந்திபுரக் கோட்டையைச் செப்பனிட்டுப் பலப்படுத்துவதை, அருகே இருந்து மேற்பார்வையிடப் போகிறேன்" என்றார்.



"மலைநாட்டுப் பெண்ணுடன் வந்த பெரியவர், சற்று முன்பு என்னைச் சந்தித்துவிட்டுச் சென்றார். அந்த மங்கையும், பரமகுருவும் சக்கரவர்த்தியைக் காணத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். நானும் சந்திக்க வேண்டும். அவருடன் நிறையப் பேசவேண்டும். எங்கள் நாட்டிற்கு அவரை அழைக்கப்போகிறேன்" என்றான் நரேந்திரன்.

"பல்லவ சக்கரவர்த்திகள் விரைவில் இங்கே வந்து உன்னைச் சந்திப்பார்" என்றார் முகுந்தன்.

"இங்கேயா? என்னை வந்து சந்திக்கப்போகிறாரா? ஐயா, இந்த எளியவனை அவர் சந்திப்பதா? கூடாது, கூடாது. அவர் இருக்கும் இடத்தைச் சொல்லுங்கள். நானே வருகிறேன்" என்றான் நரேந்திரன்.

"நரேந்திரா, இன்று நீ இருக்கும் நிலையில், சில நாள்களுக்கு நீ நகரக் கூடாது. பிறகு உன்னுடைய பணி, பல்லவ நாட்டிற்கு மிக மிகத் தேவை. சக்கரவர்த்திகள் உன்னைப்போன்ற நம்பிக்கைக்கு உகந்தவர் களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைவார்" என்றார்.

நரேந்திரனிடம் பேசிவிட்டுத் திரும்பும்போது, சைலேந்திரி அறை வாயிலில் நின்று கொண்டிருப்பதை முகுந்தன் கண்டார்.

"நரேந்திரன் உன்னைப்பற்றிக் கவலையுடன் கேட்டான். இவ்வளவு நேரம் நான் நரேந்திரனிடம் பேசிக்கொண்டிருந்தேன். அதனால் மிகவும் களைத்துப் போயிருக்கலாம். ஓய்வு எடுத்துக் கொள்கிறான். நரேந்திரன், இனி இங்கேதான் இருக்கப் போகிறான். இப்போது அவனைத் தொந்தரவு செய்ய வேண்டாம். நீ பிறகு சந்திக்கலாம்" என்றார்.

அவள் அருகே நின்றிருந்த பெரியவரை நோக்கி, "இடவசதியெல் லாம் எப்படி இருக்கிறது? சைலேந்திரியை அழைத்துக் கொண்டுச் செல்லுங்கள். நரேந்திரனைப் பிறகு சந்திக்கலாம்" என்றார்.

முகுந்தனின் பேச்சை அவள் ரசிக்கவில்லை. ஒளி பொருந்திய விழிகளுடன் இனிமையாகப் பேசும் முகுந்தனைச் சந்திப்பதில், முன்பு ஆவல் கொண்டிருந்த சைலேந்திரிக்கு, இன்று அவரை நேருக்கு நேர் பார்த்துப் பேசப் பிடிக்கவில்லை.

"ஆமாம், ஆமாம். நரேந்திரன் மிகவும் களைப்புடன் இருக்கிறார். பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்றார் பெரியவர்.

சைலேந்திரி, அவரை எரித்துவிடுவதுபோல் பார்த்தாள். ஒருவருட னும் பேசாமல், விரைவாக நடந்து சென்றாள்.

இருள் மெல்லச் சூழத் தொடங்கியது. நரேந்திரனைச் சந்திக்க சைலேந்திரி, நந்தவனத்தின் வழியே விரைந்து சென்றுகொண்டிருந்தாள்.

இனி பல்லவ நாட்டில் இருக்கக்கூடாது என்ற உறுதியான முடிவுக்கு வந்திருந்தாள். அவள் வந்த நோக்கம் நிறைவேறவில்லை. பல்லவ நாட்டின் சூழ்நிலை சரியில்லை. எந்த நேரத்தில் எந்தவித ஆபத்து ஏற்படுமோ என்ற கவலையில் பொழுதைக் கழிக்க வேண்டியிருந்தது. காஞ்சிபுரத்தினின்று நந்திபுரம் குடிபெயர்ந்தாகிவிட்டது. மீண்டும் காஞ்சி செல்ல முடியும் என்ற நம்பிக்கை இல்லை. பல்லவ நாட்டில் இனியும் ஏன் இருக்க வேண்டும்? நரேந்திரனைச் சந்திக்க முடியாமல் இருப்பதே அவளுக்கு மன வேதனையை அளித்தது. இன்று எப்படியும் நரேந்திரனைச் சந்தித்து, காம்போஜப் பயணத்தைப் பற்றி முடிவு எடுப்பது என்ற உறுதியான எண்ணத்துடன், அவள், அவன் தங்கியிருந்த வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள்.

"சைலேந்திரி, எங்கே வேகமாகச் செல்கிறாய்?" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள் சைலேந்திரி.



# 44

வாதாபி நகரம் பரபரப்பு மிகுந்து காணப்பட்டது. பல்லவ நாட்டின் மீது படையெடுத்துச் செல்ல, விரைவில் நாள் குறிப்பிடப்போகிறார்கள் என்ற செய்தி எங்கும் பரவியது.

காஞ்சியின் மீது படைஎடுத்துச் செல்வதில், இளைஞர்களும் முதியவர்களும் ஆர்வம் காட்டினர். வாதாபி மீது படையெடுத்து வந்த பல்லவர்கள் புரிந்த அட்டூழியங்களைப் பெரியவர்கள், கதைகதையாக இளைஞர்களுக்கு எடுத்துச்சொன்னார்கள்.

'நானும் சாளுக்கியப் படையில் சேர்ந்து வீராவேசமாகப் போராடப் போகிறேன்' என்று, வாலிபர்கள் அரும்பு மீசையைத் தடவிவிட்டுக் கொண்டனர்.

திருமணமானவர்கள், தங்கள் இல்லத்தரசிகளிடம், தாங்கள் போர்க்களம் சென்று வீரப்போர் புரியப் போவதைப்பற்றிப் பெருமையுடன் தெரிவித்தார்கள். அழகு மனைவியர், கணவனைக் கட்டிப்பிடித்து முத்தம் தந்து அப்போதே வீரத்திலகமிட்டனர்.

வாள்களும், வேல்களும் பழுதுபார்க்கப்பட்டன. புதிய புதிய ஆயுதங்கள் செய்து குவிக்கப்பட்டன. குதிரைப் படைகளில் மேலும் பல நூறு குதிரைகள் மேற்கே இருந்து கொண்டுவரப்பட்டன. மங்களாபுரியினின்று காடும் மலையும் கடந்து, சோனக நாட்டுக் குதிரைகள் வந்து சேர்ந்தன.

சாளுக்கிய மன்னர் விக்கிரமாதித்தனும், அவர் மகன் கீர்த்திவர்மனும் ரகசியமாக ஆலோசனை செய்தனர். காஞ்சியினின்று நாள்தோறும் வந்துகொண்டிருக்கும் செய்தியை, தந்தையும் மகனும் அலசி அலசி ஆராய்ந்தனர்.

"காபாலிகையை நம் வீரர்கள் கொல்லவிட்டிருக்கக்கூடாது" என்றார் கீர்த்திவர்மன்.

"பரிவாதினி வீணை என்று நாம் நம்பும்படி, வேறு வீணையைக் கொண்டு வந்த அவள் செய்கையை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. மேலும் நமது வீரர்கள் மீது அவள் சூலாயுதத்துடன் பாய்ந்தாள். அவர்கள் பெண்ணென்றும் பாராமல், அவளை வாளால் வெட்டிச் சாய்த்தனர். அதில் நான் என்ன செய்திருக்க முடியும் மகனே!" என்றார் சாளுக்கிய வேந்தன் விக்கிரமாதித்தன்.

கீர்த்திவர்மன் பெருமூச்சு விட்டான். "நமக்கு வேண்டியவர்கள் கொலை செய்யப்பட்டனர். உதவக்கூடியவர்களும் கொலையுண்டனர். காஞ்சி படையெடுப்பின்போது நமக்கு உதவக்கூடியவர்கள் இனி யார் இருக்கிறார்கள்?" என்றான்.

விக்கிரமாதித்தன், தன் மகனிடம் ஓர் ஓலைச் சுருளை நீட்டினான். அதைப் படித்துப் பார்த்த கீர்த்திவர்மன் முகம் மலர்ந்தது.

"ஓ! சித்திரமாயனுக்கு எந்தவித ஆபத்தும் நேரவில்லை என்பதை அறிய மகிழ்ச்சியாக இருக்கிறது. நந்திவர்மனைவிடப் பலமடங்கு பலமும், ஆதரவும் கொண்டவன் சித்திரமாயன். நம் படைகளை வரவேற்கக் காத்திருக்கிறான்" என்று விக்கிரமாதித்தன் உற்சாகத்துடன் கூறினார்.

"இதோ, இந்த வரைபடத்தைப் பார்! இதுதான் காஞ்சிக்கோட்டை."

பதப்படுத்தப்பட்ட தோலில், கறுப்புக் கோடுகளால் ஏதோ கோடுகள் வரையப்பட்டிருந்தன.

தந்தை காட்டிய வரைபடத்தை, மகன் கீர்த்திவர்மன் ஆவலுடன் நோக்கினான். வியப்பால் அவன் விழிகள் விரிந்தன.

"காஞ்சிக்கோட்டை முன்பைவிட மிகவும் விரிந்து பரந்திருக்கிறதே!" என்றான்.

"ஆமாம், கோட்டையை எளிதில் தகர்க்க முடியாமல் பலப்படுத்தி இருக்கிறார்கள். மதில்கள் உயரமாகக் கட்டப்பட்டுள்ளன. அகழிகள் ஆழமாக உள்ளன. கோட்டைக் கதவுகளை எளிதில் தகர்க்க முடியாது" என்றார் விக்கிரமாதித்தன்.

கீர்த்திவர்மன் பெரிதாக நகைத்தான். "தந்தையே! அழுத்தமான இரும்புத் தூண்களைத் துதிக்கைகளால் தூக்கிவந்து, கதவுகளின் மீது மோதுமாறு யானைகள் பழக்கப்படுத்தப்பட்டுள்ளன! பயிற்சி பெற்ற யானைப்பாகர்கள், யானைகளை மிகத் திறமையுடன் பழக்கி உள்ளனர். இரண்டு அல்லது மூன்றுமுறை மோதினாலே கதவுகள் தூள் தூள்!" என்றான்.

"மகனே! யானைகளுக்கு அதிக வேலை இராது. கோட்டைக்கு வெளியே உள்ள ரகசிய வாயில் வழியே, கோட்டைக்குள் நுழைய வழி சொல்லுவான் சித்திரமாயன்."

"கோட்டைக்குள்ளிருந்து வருவானா? அல்லது வெளியே இருந்து நம் படைகளை உள்ளே அழைத்துச் செல்வானா?"

"கோட்டைக்கு வெளியே இருக்கிறான் சித்திரமாயன். பல்லவ நாட்டுக் கோட்டத் தலைவர்கள் பலர், நமக்குப் படை வீரர்களை அளித்து உதவக் காத்திருக்கிறார்கள்."

தந்தையும் மகனும், படைகளை அணிவகுத்துச் செல்வதைப் பற்றியும், வியூகம் அமைப்பதைப்பற்றியும், கோட்டை முற்றுகையின் போது சுற்றுப்புறத் தாக்குதல் ஏற்படாது எவ்வாறு காத்துக்கொள்வது என்பது பற்றியும் ஆலோசித்துத் திட்டமிட்டனர்.

இரண்டு நாள்கள் கழித்துப் புதிய செய்தி காஞ்சியினின்று கிடைத்தது.

"தந்தையே! இதைப் பாருங்கள். பல்லவ மன்னன் நந்திவர்மன், காஞ்சிக் கோட்டையைவிட்டு வெளியேறிவிட்டானாம். அவன் தளபதி உதயசந்திரன், கோட்டைக்குள் இருக்கிறானாம்" என்று கீர்த்திவர்மன் செய்தியைத் தெரிவித்தான்.

"பரிவாதினி வீணையைப்பற்றி ஏதாவது செய்தி வந்துள்ளதா?" விக்கிரமாதித்தன் கேட்டார்.

"பரிவாதினி வீணை காஞ்சியில்தான் இருக்கிறது. காஞ்சிக் கோட்டையை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைவோம்" என்றான் கீர்த்திவர்மன். "இந்தத் தடவை காஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றி, உன்னைப் பல்லவ அரியணையில் அமர்த்திவிட்டுத்தான் வரப்போகிறோம்" என்று விக்கிரமாதித்தன் உற்சாகத்துடன் கூறினார்.

வாதாபியினின்று, சாளுக்கியப் படைகள் புறப்படுவதற்கான நல்ல நாள் குறித்தாகிவிட்டது.

லோகமாதேவி திலகமிட்டு, வாழ்த்துக் கூறி, விக்கிரமாதித்தனையும், மகன் கீர்த்திவர்மனையும் வழியனுப்பினாள்.

"மறவாமல் மாணிக்க வீணையைக் கொண்டு வாருங்கள்" என்று விக்கிரமாதித்தனிடம் கேட்டுக்கொண்டாள்.

வாதாபியினின்று சாளுக்கியப் படைகள் காஞ்சியை நோக்கிப் புறப்பட்டன. புழுதி வானத்தை எட்டியது. வீரர்கள் நடக்கும் காலடியோசை, இடி முழக்கம் என எங்கும் எதிரொலித்தது.

வடபெண்ணை ஆற்றின் கரையில் தண்டு இறங்கியிருந்தன சாளுக்கியப் படைகள். காஞ்சியின் நிலைமையை அறிந்துவரச் சென்றிருந்த ஒற்றர்கள், விக்கிரமாதித்தனிடம் கூறிய செய்தி, அவரைத் திடுக்கிட வைத்தது.

காஞ்சிக் கோட்டையினின்று, நந்திவர்மனும், அவனது பட்டத்தரசியும் பரிவாரங்களுடன் வெளியேறி, தெற்கே நந்திபுரத்திற்குச் சென்றுவிட்டனர் என்றும், உதயசந்திரன் காஞ்சிக் கோட்டைக்குள்ளே தங்கியிருப்பதாகவும், ரகசிய வழியைக் காவல் காத்து சித்திரமாயன் வீரர்கள் நிற்பதாகவும் அந்தச் செய்தி கூறியது.

"மாணிக்க வீணை எங்கே இருக்கிறது?" என்று கேட்டார் விக்கிரமாதித்தன். மாணிக்க வீணை காஞ்சியில் இருப்பதாகச் சித்திரமாயன் நினைத்திருந்தான்.



# 45

நரேந்திரனைக் காணச் சென்றுகொண்டிருந்த சைலேந்திரியின் எதிரே வந்து முகுந்தன் நின்றுகொண்டிருந்தார்.

"சாயங்கால பூஜையைக் காணக் கோயிலுக்குச் செல்கிறாயா?" என்று, சைலேந்திரியை முகுந்தன் கேட்டார்.

அவர் பார்வையும், பேச்சும், சைலேந்திரிக்குப் பிடிக்கவில்லை.

"நரேந்திரனைக் காணச் செல்கிறேன்" என்றாள். வழியின் குறுக்கே அவர் நிற்பதைப் பார்த்து, "சற்று நகர்கிறீர்களா?" என்று கேட்டாள்.

முகுந்தன் சிரித்தது, அந்த மங்கிய ஒளியிலும் அவர் எண்ணத்தைப் புலப்படுத்தியது. ஒளி நிறைந்த அவர் விழிகளும், சிரிப்பும் இதற்கு முன்பு அவளை மயக்கியது உண்மைதான். ஆனால், இன்று அவர் முகத்தைப் பார்க்க அவள் விரும்பவில்லை. அவர் விழிகளைச் சந்திக்க விரும்பவில்லை. கால் விரல்களால் தரையில் கோலமிட்டவாறு, "ஆமாம். அவரைச் சந்திக்கவேண்டும்" என்றாள்.

"நான் உன்னைத்தான் இப்போது காண வந்துகொண்டிருக்கிறேன்" என்றார் முகுந்தன். "மாலை வேளைக்கு உகந்த இனியராகத்தைப் பாடச் சொல்லிக் கேட்க எண்ணினேன். குருநாதர் நலமாக இருக்கிறாரா?" என்று கேட்டார்.

நரேந்திரனைக் காணச் செல்வதை அவர் தடுக்க விரும்புகிறார் என்றறிந்த சைலேந்திரி கோபத்துடன், "என்னைப்போன்று குருநாதரும் மிகவும் கோபமாக இருக்கிறார். எதற்காக நந்திபுரத்திற்கு எங்களை வரச் சொன்னீர்கள்? பல்லவ மன்னரை நாங்கள் எப்போது சந்திப்பது? நரேந்திரனைக் காணச் சக்கரவர்த்தி வரப்போவதாகச் சொன்னீர்களே. நாங்களும் பல்லவ மன்னரைச் சந்திக்கவேண்டாமா?"

முகுந்தன் பெரிதாகச் சிரித்தார். "நீ எப்போதும்தான் அவரைச் சந்தித்துக் கொண்டிருக்கிறாய்" என்றார்.

"என்ன சொல்கிறீர்கள்?"

"ஆமாம். இப்போதும், எப்போதும் அவரைச் சந்திக்கலாம். என்னுடன் வந்தால் பல்லவ மன்னரைச் சந்திக்கலாம்."

"இல்லை. நான் இப்போது நரேந்திரனைச் சந்திக்கச் செல்கிறேன். வழிவிடுங்கள்" என்றாள் சைலேந்திரி கடுமையாக.

"இப்போது பல்லவ மன்னரைச் சந்திக்க வேண்டுமா? அல்லது நரேந்திரனைச் சந்திப்பதுதான் உன் எண்ணமா?" என்றார் முகுந்தன். உரிமையுடன் பேசுவதாக அவர் குரலிலிருந்து புலப்பட்டது.

"இப்போது நரேந்திரனைச் சந்திக்க வரும்போது மன்னரை, அவருடன் சேர்ந்து சந்திக்கிறேன்" என்று அழுத்தந்திருத்தமாகக் கூறி, "இருள் சூழ்வதற்குள் நான் செல்லவேண்டும். வழிவிடுங்கள்" என்றாள் கடுமையான குரலில்.

முகுந்தன் திகைத்தார். சற்று நகர்ந்தார். மறுகணம், சைலேந்திரி அவரைத் திரும்பிப் பாராமல் வேகமாக நரேந்திரன் தங்கியிருக்கும் இடம் நோக்கி விரைந்தாள்.

நரேந்திரன் படுத்திருந்த அறைக்குள் மெல்ல எட்டிப் பார்த்தாள் சைலேந்திரி. நரேந்திரன் காலை நீட்டிக்கொண்டு கட்டிலில் உட்கார்ந்திருந்தான். ஒரு காலில் ஏற்பட்டிருந்த காயத்திற்கு மூலிகையிட்டுக் கட்டியிருந்தார்கள். ஓலையில் எழுத்தாணி கொண்டு ஏதோ எழுதிக்கொண்டிருந்தான்.

சைலேந்திரி, தான் வந்திருப்பதை மெல்ல ஓசைப்படுத்தித் தெரிவித்தாள்.

நரேந்திரன் திரும்பிப் பார்த்தான். அவளைக் கண்டவுடன், அவன் முகம் மலர்ந்தது.

"சைலேந்திரி, வா. வா. உன்னைத்தான் நினைத்தேன்" என்றான்.

சைலேந்திரி மெல்ல நகைத்தாள். அந்தச் சிரிப்பு அவன் சொன்னதை அவள் நம்பவில்லை என்பதைப் புலப்படுத்துவதுபோல் இருந்தது.

"உண்மையாகத்தான் சொல்கிறேன் சைலேந்திரி. உன்னைத்தான் நினைத்தேன்" என்றான் நரேந்திரன். அவன் குரலில் ஆவலும், ஆசையும் நிறைந்திருந்தன.



மீண்டும் அவள் சிரித்தாள், "ஓலையில் எனக்குத்தான் லிகிதம் எழுதுகிறீர்களா?"

"ஆமாம் சைலேந்திரி, உனக்குத்தான் எழுதிக்கொண்டிருக்கிறேன். படித்துப் பார், உண்மை விளங்கும்" என்று கூறி, சைலேந்திரியிடம், தான் எழுதிக்கொண்டிருந்த ஓலையைக் கொடுத்தான். அவனிடமிருந்து ஓலையைப் பெற்றுக்கொள்ளும்போது, அந்த அழகிய விரல்கள் உறவாடின.

"உங்களுக்கு இப்படி ஆபத்து ஒன்று ஏற்பட்டதை அறிய எனக்கு மிகவும் அதிர்ச்சியாகிவிட்டது..." என்றாள் சைலேந்திரி. அந்த ஓலையைப் படிக்கத் தொடங்கினாள்.

ஓலையைப் படிக்கப் படிக்க, அவளுடைய அழகிய முகத்தில் செம்மை படர்ந்தது.

"சைலேந்திரி, சற்று வாய்விட்டுத்தான் படியேன்" என்று முகத்தில் குறும்புத்தனம் கூத்தாட நரேந்திரன் சொன்னான். அவள் அந்த ஓலையை அவனிடம் நீட்டி, "மீதியையும் சொல்ல வேண்டியவற்றை எழுதி என்னிடம் திருப்பிக்கொடுங்கள், பிறகு படிக்கிறேன்" என்றாள்.

நரேந்திரன் மெல்ல நகைத்தான். "நானே படிக்கிறேன்" என்றான்.

"வேண்டாம், வேண்டாம். யாராவது கேட்டுக் கொண்டிருக்கப் போகிறார்கள்" என்று ஓலையை அவனிடமிருந்து பெற முயன்றாள். ஆனால், அவன் படிக்கத் தொடங்கினான்.

"என் இனியவளே சைலேந்திரி! இப்படி நான் உன்னை அழைக்க நினைப்பேன். சுற்றுச் சூழல் என்னைத் தடுத்துவிடும்! இந்த லிகிதத்தில் மனம்விட்டு எழுதலாம் அல்லவா? காம்போஜத்திலிருந்து புறப்பட்ட மரக்கலத்தில் நீயும் பெரியவரும் வந்தபோது, உன்னைப் பார்த்தேன். உன் வீணையின் நாதத்தில் மயங்கினேன். அதைவிட உன் வடிவழகில் மனத்தைப் பறிகொடுத்தேன். ஆனால், அங்கே உன்னுடன் பேச அதிக வாய்ப்பு நேரவில்லை. மரக்கலத்தில் நான் ஒரு தொழிலாளி. பயணிகளிடம் நெருங்கிப் பேச அனுமதி கிடையாது. கடல்மல்லைத் துறையில் இறங்கி, அங்கே தங்கவேண்டும் என்ற எண்ணமே எனக்கு இல்லை. ஆனால், உன்னுடன் நெருங்கிப் பேச வாய்ப்பு ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்ததால், கப்பல் தலைவரிடம் சொல்லிவிட்டு கடல்மல்லையில் இறங்கினேன். ஒரே ஒரு தடவை உன்னுடன் பேசவேண்டும் என்ற ஆவல் துள்ளியிருந்ததால், உன்னைச் சந்திக்கக் கடல்மல்லையில் அலைந்தேன்..."

நரேந்திரன் ஓலையைப் படிப்பதை நிறுத்தினான். சைலேந்திரி இரு கரங்களால் முகத்தை மூடியவாறு, தலையைக் குனிந்துகொண்டாள்.

அவன் படிப்பதை நிறுத்தி, சைலேந்திரியின் கரங்களை நீக்கி, அவள் முகத்தாமரையை நோக்கினான்.

"சைலேந்திரி, கோபமா, நாணமா?" என்றான்.

"எழுதியதை முழுமையும் படியுங்கள்" – சைலேந்திரிக்கு வார்த்தைகள் தடுமாறின.

"அவ்வளவுதான் எழுதியிருக்கிறேன். எழுதி முடிப்பதற்குள் நீ வந்துவிட்டாய்!"

"நடந்த செய்தி, தெரிந்த விஷயம். லிகிதம் எதற்கு எழுதினீர்கள்?"

"ஆமாம்; பிறகு நடந்தவை அனைத்தும் நம் இருவருக்கும் தெரியும். லிகிதம் எதற்கு என்று நான் நினைத்தேன். ஆனால், உன்னைச் சந்திக்க முடியாமலே போய்விடுமோ என்ற கவலையில், என் உள்ளத்தை எழுத்தில் வெளிப்படுத்தி உன்னிடம் தர முடிவு செய்தேன்."

"முற்றிலுமாக வெளிப்படவில்லையே?"

"கலத்திலிருந்து உன்னைத் தொடர்ந்து நான் இறங்கியதிலிருந்து தெரியவில்லையா? உன்னைப் பாழடைந்த கட்டடத்திலிருந்து விடுவித்தது தெரியவில்லையா? உன்னைத் தொடர்ந்து காஞ்சி வந்ததிலிருந்து புரிந்துகொள்ளவில்லையா? நந்திபுரம் செல்கிறாய் என்றவுடன், உன்னைத் தொடர்ந்து வந்தது எதற்காக என்று நீ அறிந்து கொள்ளவில்லையா?" – அவன் பேசிக்கொண்டிருக்கும்போது, அவன் அங்க அசைவுகள் ஒவ்வொன்றையும் கூர்ந்து நோக்கினாள்.

அவள் உள்ளத்தில் ததும்பி நிற்கும் காதல் உணர்வு பொங்கி நின்றது. அது கண்ணீராகக் கோத்து நின்றது. மூலிகையைக் கொண்டு கட்டுப் போடப்பட்ட வலது காலை, மெல்ல வருடினாள். அன்னத்தின் தூவி எடுத்துத் தடவியதுபோல், அவள் ஸ்பரிசம் இதமாக இருந்தது.

நரேந்திரன், விழிகளை மெல்ல மூடிக்கொண்டான். அவள் கரங்கள் முழங்கால் முதல் பாதம் வரை மெல்ல நகர்ந்தன.

நரேந்திரன், அவள் கரத்தை அழுத்தமாகப் பற்றி, "உன்னைச் சந்திக்க முடியாமல் போய்விடுவேனோ என்று கவலைப்பட்டேன் சைலேந்திரி" என்றான்.

"ஆமாம். உங்களை நான் சந்திப்பதைப் பெரியவர் விரும்பவில்லை. விரும்பாதவர் குழுவில் இப்போது மற்றொருவரும் உடன் சேர்ந்துவிட்டார். தங்களைச் சந்திக்க நான் வந்தபோது, தடை செய்வதுபோல் வழியில் நின்றார்."



"யார் அவர்? நந்திபுரத்திலும் உனக்குத் தொல்லை தர ஒருவர் இருக்கிறாரா?"

"உங்களுக்கும் மிகவும் வேண்டியவர்; அவர்தான் முகுந்தன். அவர் போக்கை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர் மிகச் சிறப்பாக வீணையை மீட்டுகிறார். பரமகுருவுக்கு மிகவும் நெருக்கமானவர். பல்லவ சக்கரவர்த்தியைச் சந்திக்க முடியாமல் தடுத்து வருகிறார். அவர் பார்வை எனக்குப் பிடிக்கவில்லை. அவர் முக உணர்வுகளைப் புலப்படுத்தாமல், தாடியும் மீசையும் மறைக்கின்றன. ஆனால், விழிகள் காட்டிக்கொடுத்து விடுகின்றன!"

"நான் அறிந்தவரை, முகுந்தன் சிறந்த அறிவாளி. ஆற்றல் மிக்கவர். பலசாலி. அறிவும், பலமும் நிறைந்த அவர் இல்லாவிட்டால், பல்லவ நாட்டிற்கு எதிர்காலமே இல்லை என்று நான் நினைக்கிறேன். மன்னருக்கு மிக நெருக்கமானவர்!"

"உங்கள் பார்வைக்கு, அவர் மகா மேதையாக இருக்கலாம். பாம்பின் கால் பாம்பறியும். அவர் என்னைப் பார்க்கும் பார்வையின் மறைபொருளை நான் உணர்ந்துவிட்டேன். அரசரை அணுகமுடியாமல் ஏன் அவர் தடுக்கிறார்?"

"என்ன சொல்கிறாய் சைலேந்திரி? அவர் பார்வையில் குற்றமிருக்கிறதா? பழகுவதில் நச்சுத்தன்மை இருக்கிறதா? இதைப்பற்றி அவரிடமே கேட்டுவிடுகிறேன்."

"வேண்டாம், வேண்டாம். வீணைக் கலைஞர் என்பதால் அவருடன் பேசிப் பழகினேன். என்னைக் காத்துக்கொள்ள எனக்குத் தெரியும்" என்று கூறிவிட்டு, சைலேந்திரி அவனிடம் சற்று நெருங்கி, "நரேந்திரா! உங்களிடம் தோள் வலிமை இருக்கிறது, கலைப் புலமை இருக்கிறது. தங்களைத்தான் என் மனம் நெருங்க விரும்புகிறது" என்று கூறி மெல்லிய குரலில், "தங்களை ஒன்று வேண்டுவேன்; அதை ஏற்பீர்களா? பேதைப் பெண், மனம் விட்டுப் பேசுகிறேன். கடல் கடந்த நாட்டில் வந்து செய்வதறியாது நிற்கும் நான், உங்களை மட்டுமே நம்புகிறேன். இதுவரை உள்ளக் கடலில் மிதந்து கொண்டிருந்த பொற்கலசத்தை எடுத்துத் தங்களிடம் காணிக்கையாக்க விரும்புகிறேன்.

சைலேந்திரி உணர்ச்சி வயப்பட்டுச் சொல்லிக்கொண்டே போகும் போது, நரேந்திரன் அவளுடைய மென்மையான கரத்தை எடுத்துத் தன் கன்னத்தில் வைத்துக்கொண்டான். அவள் அழகிய விரல்கள், அவன் முகமெங்கும் கோலமிட்டன. விழிகளைத் தட்வின. கூர்மையான நாசியை அளவெடுத்தன. அடர்ந்த புருவத்தின் அழகிய வளைவை அளவெடுத்தன.

இதழ்களில் சித்திரம் வரைந்தன. இதழை மெல்லப் பிரித்துப் பற்களைத் தொட்டன. மெல்லிய மீசையை வருடின.

"நரேந்திரா... நீங்கள்தான் எனக்கு அடைக்கலம்." வார்த்தைகள் மழலையாக மாற, அவன் முகத்தின் அருகே குனிந்தாள். அவன் செவிக்கருகே, அவளுடைய வெப்ப மூச்சு பரவியது.

"சொல் சைலேந்திரி! ஏன் தயக்கம், சைலேந்திரி?"

"நரேந்திரா! நாம் இருவரும் இந்த நாட்டைவிட்டு உடனே புறப்பட்டுவிடுவோம். கலம் ஏறி, காம்போஜம் சென்றுவிடுவோம். இருவரும் கலைவானில் பறப்போம். வீணையை இசைத்துக் கொண்டு மகிழ்ச்சிக் கடலில் நீந்துவோம். பல்லவ நாட்டில் ஒரு கணம்கூட இருக்க அச்சமாக இருக்கிறது நரேந்திரா. என் வேண்டுகோளை ஏற்பீர்களா?" என்றாள். வார்த்தைகளின் முடிவில், அவள் விழிகளிலிருந்து கண்ணீர் பெருகி, அவன் மார்பை நனைத்தது. அவள் மார்பகங்கள் விம்மித் தணிந்தன.

நரேந்திரனின் பரந்த மார்பில் சைலேந்திரி தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு, விம்மல் ஒலியின் மூலம் இதய கீதத்தை எதிரொலிக்கச் செய்தாள்.

நரேந்திரனின் வலக்கரமும் இடக்கரமும் ஒன்றுசேர்ந்து அவள் முதுகின் மென்மையை உணர, மேலும் கீழும் இயங்கின. இடைவெளியில்லாமல் இறுக்கம் அதிகமாகியது.



# 46

காஞ்சி மாநகரத்தின் எல்லையைச் சாளுக்கியப் படைகள் வந்தடைந்தன. படைகள் வருவதற்கு ஐந்து நாள்களுக்கு முன்பே, செய்தி கோட்டைக்குள்ளும் எட்டியது. அதற்குமுன்பே கோட்டைக் கதவுகள் மூடப்பட்டுவிட்டன.

உதயசந்திரனும் மற்றும் படைத் துணைத் தலைவர்களும் கலந்தாலோசித்தனர். முப்பது நாள்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் சேமிப்பில் இருந்தன. உணவை வீணாக்காது பயன்படுத்துமாறு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன.

"ரகசிய வழியின் மூலம் சென்று, நாம் சாளுக்கிய வீரர்களை எதிர்க்கலாம்" என்று கூறப்பட்ட யோசனையை உதயசந்திரன் நிராகரித்தார்.

"தம்பிகளே! கோட்டைக்கு வெளியே செல்லும் ரகசிய வழியைச் சித்திரமாயன் தெரிந்து வைத்திருக்கிறான். அந்த வழியைச் சாளுக்கியர்களுக்குக் காட்டிக்கொடுத்து, கோட்டைக்குள் வரச் செய்வதை ஓர் ஆயுதமாகச் சித்திரமாயன் கையாளப்போகிறான் என்பதும் எனக்குத் தெரியும். அதனால் ரகசிய வழியை நாம் பயன்படுத்தக்கூடாது" என்றார்.

காஞ்சியில் மூத்த அறிஞர்கள், சபை மண்டபத்தில் கூடினர். அவர்கள் பலவாறு விவாதித்தனர். நெருக்கடியான சமயத்தில், பல்லவ சக்கரவர்த்தி காஞ்சியைவிட்டு வெளியேறி நந்திபுரம் சென்றிருக்கக் கூடாது என்று ஓர் அறிஞர் கூறினார்.

"சாளுக்கியர் படையெடுப்பு நேரிடும் என்பதை, ஒற்றர்கள் முன்பே அறிந்து, அவர்களை எதிர்க்க ஏன் முயலவில்லை?" என்று ஒருவர் கேட்டார்.

"சாளுக்கியர்களை விரட்டியடித்து, வாதாபியையும் தீக்கிரையாக்கிய பல்லவர்கள், கோழைபோல் கோட்டைக்குள் ஒளிந்திருப்பது நமக்கு மாறாத அவமானம்" என்று ஓர் இளம் அறிஞர், தீவிரமாகக் கருத்து தெரிவித்தார். முகுந்தன் என்ற அறிஞரும் வெளியேறிவிட்டார் என்று பேசப்பட்டது. நகரத்தில் தெரு முனைகளில் விவாதங்கள் நடைபெற்றன.

துடிப்புள்ள இளைஞர்கள் சிலர், உதயசந்திரனைச் சந்தித்தனர். படையில் சேர்வதாக அவர்கள் வாக்களித்தனர். அவர்களுக்கு வாள் பயிற்சி கற்றுக்கொடுக்கப்பட்டது. குறி பார்த்து வேல் எறியவும், யானை ஏற்றமும் .பழக்கப்படுத்தப்பட்டன.

அவர்களுள் ஓர் இளைஞன் உதயசந்திரனைப் பார்த்துக் கேட்டான்: "நாங்கள் நூறு பேர் இருக்கிறோம். எங்களுக்கு வாளும், வேலும் கொடுங்கள்."

உதயசந்திரன் மெல்ல நகைத்து, அந்த இளைஞனைப் பார்த்து, "வீரத் துடிப்புடையவனே! வேல், ஈட்டி, வாள் – இவை நந்திபுரத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஏன் அவ்வாறு அனுப்பினோம் என்பதற்குக் காரணம் சொல்லுங்கள் பார்க்கலாம்" என்று கேட்டார்.

"காஞ்சிக் கோட்டை பிடிபட்டால், அவை விரோதிகள் வசம் சிக்கிவிடும் என்பதால், அவை முன் எச்சரிக்கையாக நந்திபுரம் அனுப்பப்பட்டன" என்றான் இளைஞன் ஒருவன்.

"அப்படியென்றால் காஞ்சிக்கோட்டை பிடிபட்டுவிடும் என்று நீ நினைக்கிறாயா? உனக்கு நம்பிக்கை இல்லையா?" என்று மற்றொரு இளைஞன் அவனைப் பார்த்துக் கேட்டான்.

இருவரும் விவாதித்தனர். மற்றொரு இளைஞன் சொன்னான்: "காஞ்சிக் கோட்டைக்குள்ளிருக்கும் வீரர்களுக்கு மட்டும் போதுமான ஆயுதங்கள், அவர்களிடையே உள்ளன. கூடுதலான வீரர்கள் நம்மைப் போல் படையில் சேர்வார்கள் என்று எதிர்பார்க்கப்படவில்லை. நந்திபுரம் இருக்கும் சோழநாட்டுப் பகுதியில், படையில் சேர வீரர்கள் முன்வரலாம். அவர்களுக்கு ஆயுதங்கள் வேண்டுமல்லவா? அதனால் ஆயுதங்கள் அனுப்பப்பட்டுவிட்டன."

உதயசந்திரன் விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார். "உங்கள் கருத்தெல்லாம் சரியே. ஆனால், நந்திபுரக் கோட்டைக்குள் ஆயுதங்கள் அனுப்புவதற்கு இரண்டு காரணங்கள்: காஞ்சிக்கோட்டையை முற்றுகையிடும் சாளுக்கியர்கள், கோட்டைக்குள் நுழையமுடியாமல் தெற்கு நோக்கிச் செல்வார்கள். நந்திபுரக் கோட்டையை முற்றுகையிடுவார்கள். அப்போது நந்திபுரக் கோட்டைக்குள் இருக்கும் நம் வீரர்கள், சாளுக்கிய



வீரர்களை எதிர்த்துப் போரிடுவார்கள். அவர்களுக்குத் தேவையான படைக்கலன்களை இப்போதே அனுப்பிவிட்டோம். காஞ்சிக் கோட்டையைச் சூழ்ந்திருப்பதைக் கைவிட்டு, தெற்கே நோக்கி நகரும் சாளுக்கியர்கள் இங்கிருந்து புறப்படும் முன்பே, நந்திபுரக் கோட்டைக்குள்ளிருந்து பல்லவ வீரர்கள் வெளியே வந்து, சுற்றுப்புறக் கிராமங்களில் நிறைந்து மறைந்திருப்பார்கள். தக்க சமயம் பார்த்து, அவர்கள் சாளுக்கியர்கள் மீது பாய்வார்கள். அவர்களுக்கு ஆயுதங்கள் வேண்டுமல்லவா?" என்ற கருத்தைக் கேட்டவுடன், இளம் வீரர்கள், தளபதி உதயசந்திரனின் அறிவாற்றலையும், போர்த் தந்திரத்தையும் பாராட்டிப் புகழ்ந்தனர்.

போர்க்களத்திற்குத் தோள் வலிமையுடன், தந்திரமும், சரியான திட்டமும் மிகத் தேவை என்பதை உணர்ந்தனர்.

"நாங்கள் கோட்டைக்குள்ளே எவ்வளவு நாள்கள் அடைந்திருப்பது?" என்று இளைஞர்கள் கேட்டனர். "எங்கள் தோள்கள் துடிக்கின்றன. வாள் சுழற்றக் கரங்கள் துள்ளி நிற்கின்றன" என்றனர்.

"அடைந்திருப்பதா? நகர வீதிகளைச் சுற்றி வாருங்கள். சமூக விரோதிகள் மக்களைத் துன்புறுத்த முயல்வார்கள். அவர்களிடமிருந்து மக்களுக்குப் பாதுகாப்பு அளியுங்கள். உணவுத் தானியங்களைப் பதுக்க முயல்பவர்களைக் கண்டுபிடித்துத் தண்டனை அளியுங்கள்" என்றார் உதயசந்திரன்.

காஞ்சிக் கோட்டையைச் சுற்றிலும் சாளுக்கியப் படைகள் சூழ்ந்து கொண்டன.

"அகழிக்குச் சற்றுத் தொலைவிலேயே நீங்கள் இருக்க வேண்டும். பல்லவ தளபதி உதயசந்திரன், திறமை மிகுந்தவன்; தந்திரசாலியும்கூட. காஞ்சி நகரத்துக்கு வெளியே நம்மை எதிர்த்துக் கடும்போர் நடக்கும் என்று எதிர்பார்த்தேன். எங்கும் அமைதி. கிராமப் பகுதியில் மக்கள் நடமாட்டமே இல்லை. பல்லவ வீரர்கள் கோட்டைக் கொத்தளத்தில் பதுங்கியிருக்கலாம். கவனமாக இருங்கள்" என்று விக்கிரமாதித்தன் எச்சரித்தார்.

சித்திரமாயன் அவ்வப்போது யோசனை கூறிவந்தான். விக்கிரமாதித்தன், சித்திரமாயனிடம் கேட்டார்: "பல்லவப் படை வீரர்கள் கோட்டை மதில் மீதிருந்து தாக்குதல் நடத்துவார்கள். அவர்கள் மதில் மீது தென்பட்டவுடன், விஷக் கணைகளை வீசுவோம் என்று நினைத்தேன். ஒருவரையும் காணவில்லையே? பயத்தால் பதுங்கியிருக்கிறார்களா? அல்லது வேறு திட்டம் வைத்திருக்கிறார்களா? கோட்டைக்குள் நடப்பதை அறிந்துகொள்ள என்ன வழிவகை செய்திருக்கிறீர்கள்?"

சித்திரமாயன் சிந்தித்தான். கவலை ரேகைகள் அவன் முகத்தில் பரவின. "காஞ்சிக் கோட்டைக்குள் நம்மை எதிர்க்கப் போதிய படைகள் இல்லை. உதயசந்திரனின் தவறான யோசனையால், நந்திவர்மன் அழியப்போவது உறுதி. காஞ்சியை நெருங்கும்போதே நம்மை எதிர்க்கப் படைகள் எதிர்ப்படும் என்றெண்ணினேன். காஞ்சிக் கோட்டைக்குள் அமைதி நிலவுகிறது. முற்றுகையைக் கடுமையாக்குவோம். மக்கள் பட்டினியால் வாடத் தொடங்கியவுடன், அவர்களே கிளர்ந்து எழுந்து கோட்டைக் கதவைத் திறந்துவிடுவார்கள்" என்றான் சித்திரமாயன்.

"அதிருக்கட்டும். கோட்டைக்குள்ளே நிலைமை எப்படி இருக்கிறது? அதை அறிய ஏதாவது வழி இருக்கிறதா?" என்று விக்கிரமாதித்தன் கேட்டார். சித்திரமாயன் யோசித்தான். காஞ்சிக் கோட்டைக்குள் எப்படிச் செல்வது?

"கேடயங்கள், வாள்கள், வேல் முனைகளைக் கூர்மைப்படுத்தும் ஸ்ரீபதியின் உலைக்கூடத்தில் உள்ள ஆயுதங்களைக் கோட்டைக்கு வெளியே கொண்டுவர வேண்டும். பல்லவர்கள் கோட்டைக் கதவுகளை அவ்வளவு விரைவில் மூடிவிடுவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. இப்போது என்ன செய்வது? உலைக்கூடம் நடத்தும் ஸ்ரீபதியின் மனைவி பைரவி, சாமர்த்தியம் மிக்கவள். எப்படியாவது கோட்டைக்கு வெளியே வந்துவிடுவாள்" என்று சித்திரமாயன் எண்ணினான்.

"சக்கரவர்த்திகளே! காஞ்சிக் கோட்டைக்குள் செல்வதற்கு ஏற்ற திட்டத்துடன் நாளைக் காலையில் தங்களிடம் வருகிறேன்" என்று சாளுக்கிய அரசரிடம் உறுதி கூறிவிட்டுப் புறப்பட்டான் சித்திரமாயன். காஞ்சி மகுடம் தனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது.

உதயசந்திரனை வீர இளைஞன் ஒருவன் சந்தித்துச் செய்தி ஒன்றைத் தெரிவித்தான். நகரில் ஓர் உலைக்கூடத்தில் ஏராளமான கேடயங்களையும், வாள்களையும், வேல்களையும் கண்டதாக அவன் கூறியவுடன், உதயசந்திரன் திடுக்கிட்டார்.

ஸ்ரீபதியின் உலைக்கூடம் காஞ்சி மாநகரில் மிகப் பழமையானது என்பதை உதயசந்திரன் அறிவார். அந்த உலைக்கூடத்தில் இப்போது எந்தப் பணியும் நடைபெறவில்லை என்றே நினைத்திருந்தார். அங்கே போர்க்கலன்கள் செய்யப்படுகின்றன என்ற செய்தி, உதயசந்திரனைத் திடுக்கிட வைத்தது.

உதயசந்திரனும், வீர இளைஞனும் மாறுவேடத்தில் உலைக் கூடத்திற்குச் சென்றனர்.



இரவின் இரண்டாவது சாமம். காஞ்சி மாநகர வீதிகள் களை இழந்திருந்தன. வீதி விளக்குகள் சில நாள்களாகவே ஏற்றப்படவில்லை. உலைக்கூடம் இருக்கும் சிறு வீதி, இருள் சூழ்ந்திருந்தது.

ஸ்ரீபதியின் உலைக்கூடத்திற்கு அருகே இருந்த அவன் வீட்டின் கதவு மூடியிருந்தது. உள்ளே பேச்சுக்குரல் கேட்டது. ஸ்ரீபதியின் குரல்.

"பல்லவ மகாராஜவிடமிருந்து செய்தி வரும் என்று எதிர்பார்த்துக் காத்திருக் கிறோம்" என்று மெல்லிய குரலில் பேசினாள், பைரவி. சித்திரமாயனைத் தான் அவள் பல்லவ மகாராஜா என்று குறிப்பிட்டாள்.

"கோட்டையைச் சுற்றி வாதாபிப் படைகள் முற்றுகை இட்டுள்ளனவாம். மகாராஜா கோட்டைக்குள் எப்படி வருவார் என்று கவலையுடன் இருந்தோம். இங்கு ஆயுதங்கள் இருப்பது உதயசந்திரனுக்குத் தெரிந்து விட்டால் பெரிய ஆபத்துதான்" என்றான் ஸ்ரீபதி.

"உயிருக்குப் பயப்படுகிறாயா?" என்று குரல் கேட்டது. அந்தக் குரல் நந்தீசனுடையது.

நந்தீசன்-அவன் இங்கு வந்ததெப்படி? மாறுவேடத்தில் இருந்த உதயசந்திரன் திகைத்தார். மேலும் அங்கு அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கூர்ந்து கவனிக்கலானார்.

சிறையில் அடைபட்டிருந்த நந்தீசன், போர்க்கலன்கள் செய்யும் இடத்திற்கு வந்தது எப்படி? அவனுக்கு ஏற்பட்ட காயங்களுடன் அவன் வெளியேறியது, ஏதோ சதித்திட்டம் உருவாகிறது என்று எண்ணினார் உதயசந்திரன்.



# 47

பல்லவ நாட்டைவிட்டுப் புறப்பட்டுவிடவேண்டும் என்று சைலேந்திரி கூறிய கருத்து, நரேந்திரனுக்கு மிகவும் குழப்பத்தை அளித்தது.

"இன்னும் சில ஆண்டுகளுக்குப் பல்லவ நாட்டில் குழப்பம் தீராது. சாளுக்கியர்கள் வென்றாலும், தோற்றாலும் நாட்டின் அமைதி குலைந்து விடும். பல்லவர்கள் தோற்றால், சாளுக்கியர்கள் தங்கள் சீற்றத்தைப் புலப்படுத்தி பழிதீர்த்துக்கொள்வார்கள். கிராமப்புறத்திலுள்ள நெற்களஞ்சியங்கள் கொளுத்தப்படும். பயிர் நிலங்கள் ஆமணக்கிட்டு உழுது, ஒன்றுக்கும் உதவாமல் செய்யப்படும். அழகிய பெண்களைச் சிறைப்பிடித்து வாதாபிக்கு அழைத்துச் சென்றுவிடுவார்கள்.

"சிற்பங்களைச் சிதைக்காமல் இருந்தால், சாளுக்கியர்களுக்குக் கோயில் கட்டிக் கும்பிடலாம். காஞ்சியிலுள்ள கைலாசநாதர் ஆலயத்தின் மீது அவர்களுக்கு எப்போதும் ஓர் கண்! பரிவாதினி வீணையைத் தேடித் திரிவார்கள்."

நரேந்திரன், சைலேந்திரியிடம் இவ்வாறு பேசித் தன் கவலையைத் தெரிவித்தான். இரண்டு நாள்களாக அவர்கள் மாலை வேளையில் சந்தித்து மனம்விட்டுப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

நாகைப்பட்டினத் துறைமுகத்தை நந்திபுரத்திலிருந்து எளிதில் சென்று அடையலாம் என்பதையும் சைலேந்திரி அறிந்து வைத்திருந்தாள்.

"நாகைப்பட்டினத்திலும் பல்லவர்கள் ஆட்சிதானே நடைபெறுகிறது?" என்று சைலேந்திரி கேட்டாள்.

"இல்லை, சோழர் பரம்பரையில் வந்த ஓர் குறுநில மன்னரின் ஆளுகைக்கு உட்பட்டிருக்கிறது. ஏன் கேட்கிறாய் சைலேந்திரி?" என்று நரேந்திரன் கேட்டான்.



அவனுக்குக் காலில் ஏற்பட்டிருந்த ரணம் முற்றிலும் ஆறிவிட்டது. மெள்ள நடக்கத் தொடங்கியிருந்தான்.

"இரவோடு இரவாக நாம் நந்திபுரத்திலிருந்து புறப்பட்டு, நாகைப்பட்டினத்தை அடைந்துவிடலாம். பல்லவர்கள் ஆளுகைக்கு உட்பட்டிருந்தால், அவர்கள் நம்மைக் கண்டு சிறைப்படுத்திவிடக்கூடும். அதனால் கேட்டேன்" என்று சைலேந்திரி கூறும்போது, அவன் முகத்தில் கவலைக்கோடுகள் பரவியிருந்தன.

நரேந்திரன் மெள்ள நகைத்தான். "இந்த நாட்டிலிருந்து சென்று விடவேண்டும் என்பதில் உனக்கு ஏன் அவ்வளவு உறுதி?" என்று கேட்டான்.

"எதற்காகப் பல்லவ நாட்டிற்கு வந்தேனோ, அது நிறைவேறப் போவதில்லை. பல்லவ அரசரைச் சந்திக்கமுடியவில்லை. பல கலைகளைக் கற்றவர், பேரறிஞர் என்று புகழப்படும் முகுந்தனின் பேச்சு, பார்வை எனக்குப் பயத்தை அளிக்கின்றன. மேலும், சற்று முன்பு நீங்களே சொன்னீர்கள், 'பல்லவ நாட்டில் சில ஆண்டுகள் வரையில் குழப்பம் நிலவும்' என்று. காம்போஜத்தில் அமைதியாக வாழ்வதைவிட்டு, வீணையைப் பயில வந்த தொல்லையில் வீணே சிக்கிச் சீரழிய வேண்டாம் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்" என்று சைலேந்திரி கூறினாள்.

நரேந்திரன், அவளைக் கூர்ந்து நோக்கியவாறு, "முகுந்தன் மிக நல்லவர். அவர்மீது தவறான எண்ணம் உனக்கு எப்படி ஏற்பட்டது?" என்று கேட்டான்.

"நரேந்திரன்! பெண்களுக்கு ஆண் மனம் எளிதில் புரியும். உங்களுடன் பேசுவதை அவர் விரும்பவில்லை. தங்களைச் சந்திப்பதை எப்படியும் தடைசெய்ய நினைக்கிறார். என்னை அவர் விரும்புகிறார்..." என்று சொல்லும்போது, சைலேந்திரியின் குரலில் அச்சமிருந்தது.

"சைலேந்திரி, நீ நினைப்பதுபோல் இல்லை. உன் கலைப் புலமையை அவர் பெரிதும் போற்றுகிறார். பரமகுருவின் கலைப்புலமை அனைத்தையும் உனக்குக் கற்றுத்தரத் துடிக்கிறார். உன் முழுக் கவனமும் கலையில் மூழ்கியிருக்க வேண்டும் எனும் பேரவா அவருடையது. என்னை நீ சந்திப்பதை அவர் தடுப்பதற்குக் காரணமே, நம் இருவர் காதல் இன்னும் சில ஆண்டுகள் கழித்துப் பூத்துக் காய்த்தால் போதும் என்பது, அவர் அழுத்தமான முடிவு..."

நரேந்திரன் சொல்லி வரும்போது, சைலேந்திரி ஆத்திரத்துடன் குறுக்கிட்டு, "இல்லை, இல்லை. அவர் போலித்தனத்தை நம்புகிறீர்கள்.

நீங்கள் அவரைப்பற்றித் தவறாக முடிவு செய்துள்ளீர்கள். அவர் ஓர் வேடதாரி. நம் காதலில் குறுக்கிட அவர் யார்? அவர் என்ன, இந்த நாட்டு அரசரா? அவரை நீங்கள் ஏன் நம்புகிறீர்கள் என்று எனக்குத் தெரிய வில்லை. இதுவரையில் பல்லவ சக்கரவர்த்திகளை நீங்கள் சந்தித்த துண்டா? படுகாயமுற்றுப் படுத்த படுக்கையில் கிடந்த தங்களைச் சந்திக்க பல்லவ சக்கரவர்த்தி வந்தாரா? குருநாதர் பரமகுருவைச் சந்திக்கவும் சக்கரவர்த்தி வரவில்லை. நரேந்திரா! நல்ல முடிவொன்றை விரைவில் நீங்கள் சொல்ல வேண்டும்" என்று கூறினாள். ஆத்திரம் படிப்படியாக அவள் குரலில் குறைந்தது. கடைசியில் நரேந்திரனிடம் அது கெஞ்சுவதாக மாறியது.

"சக்கரவர்த்தி நாளைக் காலையில் இங்கு வருகிறார். நிச்சயமாக வருகிறார். கவலைப்படவேண்டாம்; கோபப்படவேண்டாம் சைலேந்திரி" என்ற குரல் கேட்டது. முகுந்தன் நகை முகத்துடன் அங்கே வந்தார்.

'இவ்வளவு நேரம் நாம் பேசிக் கொண்டிருந்ததை முகுந்தன் கேட்டி ருப்பாரோ?' —சைலேந்திரி பயந்தாள்.

முகுந்தன் மலர்ந்த முகத்துடன், இதுவரை அங்கு பேசப்பட்டதை அறியாதவர்போல், "நரேந்திரா, பரிபூரணக் குணமடைந்துவிட்டாயா? நந்திபுர விண்ணகரத்துக் கோயிலில் குடிகொண்டிருக்கும் திருமாலை நாள்தோறும் நான் வேண்டிக்கொண்டேன், 'அச்சுதா – கேசவா – முகுந்தா! கடல் கடந்த நாட்டிலிருந்து பல்லவ நாட்டிற்கு வந்து, நாட்டிற்குப் பேருதவி செய்திருக்கும் நரேந்திரன் முழு குணமடைய அருள்புரியுங்கள்' என்று. பெருமாள் அருள் பாலித்துவிட்டார். நரேந்திரா, நீ பல்லவ நாட்டிற்கு ஆற்ற வேண்டிய அரும்பணிகள் ஏராளமாக இருக்கின்றன. உனக்குத் தெரிந்திருக்கும்; சாளுக்கியப் படைகள் காஞ்சிக் கோட்டையைச் சூழ்ந்து கொண்டுவிட்டன. கோட்டைச் சுவர்கள் பலமானவை. அவற்றைத் தகர்க் கவும் அவர்கள் ஆயத்தமாக வந்திருக்கிறார்கள். பரிவாதினி வீணை, காஞ்சிக் கோட்டைக்குள் இருப்பதாகவே நினைத்திருக்கிறார்கள்" என்று கூறி நிறுத்தினார்.

நரேந்திரனும், சைலேந்திரியும், முகுந்தன் சொல்வதை ஆவலுடன் கேட்டுக்கொண்டிருந்தார்கள். தன் நலனுக்காக அவர் வேண்டிக்கொண்ட பேருள்ளத்தைக் கண்டு நரேந்திரன் வியந்தான். காஞ்சியை சாளுக்கியப் படைகள் சூழ்ந்துவிட்டன என்ற செய்தி கேட்டவுடன், நரேந்திரன் பரபரப் படைந்தான்.

"பரிவாதினி வீணையை அடைய அவர்கள் துடிக்கிறார்கள். கோட்டைக்குள் வீணை இல்லை; நந்திபுரத்திற்குக் கொண்டுவந்து



விட்டோம் என்பதறிந்தால், அவர்கள் ஏமாந்து திரும்பிவிடுவார்கள் அல்லவா?"– நரேந்திரன் கேட்டான்.

சைலேந்திரியைப் பார்த்தவாறு முகுந்தன் நகைத்தார். "நரேந்திரா, அரசியல் தந்திரம் இன்னும் நீ அறியவில்லை. தோள்வலிமையுடன், அரசியல் ஆற்றலும் உனக்குக் கைவரப்பெற்றால், நீ ஒரு மகத்தான வீரன். தாங்கள் எதிர்பார்த்ததுபோல் பரிவாதினி வீணை கோட்டைக்குள் இல்லை என்பதறிந்தவுடன், அவர்கள் தெற்கு நோக்கி வருவார்கள். போர் வெறியு டன் ஏமாற்றமும் ஒன்றுசேர்ந்தால், அவர்கள் வழியிலுள்ள ஊர்களைச் சூறையாடுவார்கள். அதுதான் எனக்குக் கவலையாயிருக்கிறது."

முகுந்தன் கூறவும், நரேந்திரன் முகத்தில் வீர ஒளி வீசியது. "நம் படைத் தலைவர் உதயசந்திரன் எங்கே? நல்லதொரு திட்டம் வகுத்திருப் பாரே?" என்று கேட்டான்.

"அவர் காஞ்சிக் கோட்டைக்குள் தங்கிவிட்டார்."

"வெளியே வந்து போர் புரிந்து, சாளுக்கியப் படைகளைப் புறமுது கிட்டு ஓடச் செய்துவிடலாமே? அவர் கோட்டைக்குள்ளிருந்து வெளியே வரமுடியாதா?"

"வெளியே வரமுடியும். ஆனால், ரகசிய வழி சித்திரமாயனுக்குத் தெரியும். அந்த வழியின் அருகே சாளுக்கிய வீரர்கள் காத்திருக்கிறார்கள். உதயசந்திரன் வெளியே வருவதில் ஆபத்து இருக்கிறது."

"பிறகு சக்கரவர்த்தி என்ன சொல்கிறார்? அவரைச் சந்தித்தால், நான் சில யோசனைகளைத் தெரிவிப்பேன்."

"யோசனையா. அதைத்தான் நானும் விரும்புகிறேன். உன்னைப் போன்ற இளைஞர்கள், இப்போது நம் படையில் சேரவேண்டும். அறிவாற்றலும், சக்தியும் இணைந்தவர்களால்தாம் பல்லவ நாட்டைக் காப்பாற்றமுடியும். அரசரிடம் நீ என்ன யோசனை சொல்லப்போகிறாய்? என்னிடம் சொல்லலாமே!"

"நான் அரசரைச் சந்தித்துப் பேசக்கூடாதா? சைலேந்திரிக்கும் அதுதான் வருத்தம். நாங்கள் அரசரைச் சந்திக்க என்ன தடை? யார் தடையாய் இருக்கிறார்கள்?"–நரேந்திரன் கேட்டான்.

முகுந்தன் மீண்டும் சிரித்தார். "நரேந்திரா, தக்க தருணத்தில் அரசர் சந்திப்பார். நாளைக்கு அவரை நீங்கள் பார்க்கலாம். என்னிடம் சொல்ல விரும்பாவிட்டாலும், நீ அரசரிடமே உன் யோசனையைச் சொல்லலாம். அதற்கு முன்பாக நீ ஓர் உறுதி தரவேண்டும்."

"சொல்லுங்கள். ஓர் உறுதி என்ன, ஓராயிரம் உறுதிகள் தருகிறேன்."

"எக்காரணம் கொண்டும் நீ பல்லவ நாட்டைவிட்டு, சில காலத்திற்குக் காம்போஜம் செல்லக்கூடாது."

முகுந்தன் இவ்வாறு கூறியவுடன், நரேந்திரனும், சைலேந்திரியும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

நரேந்திரன் மறுமொழி கூறுவதற்குள் சைலேந்திரி, "அந்த உறுதியை நரேந்திரன் தரமாட்டார். நாங்கள் உடனே காம்போஜம் செல்ல வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்யுங்கள். இந்த நாட்டைவிட்டு உங்களுக்குத் தெரியாமல் சென்றுவிடத் திட்டமிட்டிருந்தோம். நாங்கள் மனம்விட்டுப் பேசிக்கொண்டிருந்ததை நீங்கள் கேட்டுக் கொண்டிருந்தீர்கள். ஒன்றுமே தெரியாதவர்போல் நடிக்கிறீர்கள்" என்றாள்.

சைலேந்திரியின் கோபக் குரலைக் கேட்டு, நரேந்திரன் வியப் படைந்தான். கையசைத்து அவளைச் சமாதானப்படுத்தினான்.

முகுந்தன் பேசினார்: "சைலேந்திரி, நீ வீணையின் நுணுக்கங் களைப் பயில வந்தாய். அதில் தேர்ச்சியுறாமல் காம்போஜம் செல்ல விரும்பு கிறாயே? மீண்டும் சிந்தித்துப் பார்."

"இல்லை, இல்லை. நாங்கள் அமைதியாகச் சிந்தித்து எடுத்த முடிவுதான். இன்று இருக்கும் நிலையில், நான் வீணை பயில முடியாது. எங்கள் நாட்டிற்கே செல்கிறேன்" என்றாள்.

"உன் எண்ணம் நியாயமானதாக இருக்கலாம். ஆனால், நரேந்திர னையும் அழைத்துச்செல்வதாகக் கூறுவது நியாயமா?" —முகுந்தன் பார்வை இருவரிடமும் சென்றது.

"ஆமாம். அவரிருக்குமிடத்தில்தான் நான் இருக்கவேண்டும். நானிருக்குமிடத்தில்தான் அவர் இருக்கவேண்டும். எங்கள் புனிதமான காதலைப் பிரிக்க விரும்பாதீர்கள்" —சைலேந்திரி உணர்ச்சிவயப்பட்டுப் பேசினாள்.

நரேந்திரன், ஏதோ கூற வாயெடுத்தான். சைலேந்திரி, அவன் பக்கம் திரும்பி, "நீங்கள் ஏதும் கூறாதீர்கள். இவரிடம் நமக்கு என்ன பேச்சு? நாம் அரசரைச் சந்திக்கத் தடையாயிருக்கிறார். நாம் அரசரைச் சந்தித்து நம் முடிவைத் தெரிவிப்போம்" என்றாள்.

முகுந்தன், நரேந்திரனை நோக்கி, "நான் கேட்ட உறுதிமொழி பற்றி நீ முடிவு சொல்லவில்லையே" என்று கேட்டார்.

"நாளைக்கு நான் சொல்கிறேன்" என்றான் நரேந்திரன். முகுந்தனுக் குக் கவலையாக இருந்தது.

# 48

வழக்கம்போல் கோயில்களில் ஆறுகால பூஜை நடைபெற்றது. மடாலயங்களில் பக்திப் பாடல்கள் பாடப்பட்டன. வீதிகளில் மக்கள் நடமாடினர். காலையில் பொழுது புலருமுன்பே பெண்டிர் எழுந்தனர். வீட்டு வாயிலைப் பெருக்கித் தண்ணீர் தெளித்துக் கோலமிட்டனர்.

கோலமிடும்போது, அடுத்த வீட்டு, எதிர் வீட்டுப் பெண்களுடன் மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டிருப்பது குறைந்தது.

சாலையில் எதிர் எதிரே வருபவர்கள், ஒருவரோடொருவர் பேசிக் கொள்ளாமல் மௌனமாகச் சென்றனர்.

கோயில் பூசை செய்வோர் மந்திரம் உச்சரிக்கும்போது, அதில் முழு ஈடுபாடில்லை.

கோயில் மணி ஒலிக்கும்போது, அதன் நாதத்தில் குறையிருப்பது போல் தோன்றியது.

பண்டம் விற்பவர், மாற்றுப் பண்டத்தின் மதிப்பைப் பாராமலேயே விற்பனை செய்தனர். அவர்கள் மௌனத்தில் ஏதோ கவலை இருந்தது. வணிகர்களும், கல்விமான்களும், பக்திமான்களும் கவலைகொள்ளத் தொடங்கினர்.

குறுக்கும் நெடுக்குமாகக் குதிரைமீது வீரர்கள் விரைந்தனர். நாற்சந்தியின் ஓரமாக நின்று, மெல்லிய குரலில் சிலர் பேசிக்கொண்டனர்.

"கோட்டை முற்றுகையிடும் சாளுக்கியர்களுக்கு உணவு கிடைக்கவில்லையாம். சுற்றிலுமுள்ள ஊர்களுக்குச் சென்று, கிடைத்த தான்யங்களைச் சேகரித்து வருகிறார்களாம்."

"கோட்டைக்குள்ளிருந்து எதிர்ப்பு வராததால், சாளுக்கிய வீரர்கள் போராட வாய்ப்பின்றி, ஏமாற்றமுடன் சோர்ந்துவிட்டார்களாம்."

"நம் வீரர்கள் ஏன் கோட்டைக்கு வெளியே சென்று, எதிர்த்துப் போராடக்கூடாது?"

"தெரியவில்லை. அரசரின் உத்தரவை மீறி நடக்கக்கூடா தல்லவா?"

"அரசர் கோட்டையை விட்டு தெற்கே சென்று பல நாள்களாகி விட்டனவாமே? உங்களுக்குத் தெரியுமா?"

"கோட்டை முற்றுகையின்போது, அரசர் நகரத்தில் இல்லாமல் வேறு எங்கோ செல்லலாமா?"

"நமக்குத் தெரியாது; ஏதாவது காரணமிருக்கும்."

"திருமங்கை அருளாளரைத் தரிசிக்க தெற்கே சென்றிருக்கிறார் என்று சொல்கிறார்கள். விரைவில் திரும்பி வந்துவிடுவார். அப்போது கோட்டைக்கு வெளியே சண்டை நடக்கும்."

"கோட்டைக்குள்ளே சாளுக்கியர்களை நுழையவிடாமல் பாது காப்பதும் பெரிய சாமர்த்தியம்தான்."

"தளபதி உதயசந்திரன் நகரத்திலேயே இருந்து, வீரர்களுக்கு அவ்வப்போது கட்டளையிட்டுக்கொண்டிருக்கிறார்."

"ஆகா; உதயசந்திரன் இங்குதான் இருக்கிறாரா? கட்டளையிடு கிறாரா? இனி நமக்குக் கவலையே இல்லை. ஏன் இப்படிப் பயந்து செத்துக் கொண்டிருந்தீர்கள்?"

"நானா பயந்தேன்? நீரல்லவா தொடை நடுங்கினீர். கோட்டைக்கு வெளியே சென்று ஏன் போர் புரியவில்லை என்று கேட்டீர். நெருக்கடியான வேளையில் நகரத்திற்குள் இல்லாமல் அரசர் வெளியே சென்றுவிட்டாரே என்று பிலாக்கணம் வைத்தீர்?"

"ஓய்! பிலாக்கணம்– ஒப்பாரி என்று சொல்லாதீர்! சாளுக்கிய அரசன் தான் ஒப்பாரி வைக்கப்போகிறான். இப்போதே நான் சென்று தளபதி உதயசந்திரனைச் சந்தித்து, என்னால் இயன்ற உதவியைச் செய்வதாகச் சொல்லப் போகிறேன்."

"நானும் உம்முடன் வருகிறேன். வீரர்கள் என்றால் இரண்டு வேளை நல்ல உணவு கிடைக்கும் இல்லையா? இப்போது ஒரு வேளை தான் நமக்குக் கிடைக்கிறது."

"உணவு சும்மா போட்டுவிடமாட்டார் சுவாமி! வாளெடுத்துச் சுழற்ற வேண்டும், மல்யுத்தம் செய்ய வேண்டும்."



"எது வேண்டுமானாலும் செய்து, நம் நகரத்தைக் காப்பாற்ற வேண்டும்."

"நகரத்தை மட்டுமன்று ஐயா, பல்லவ நாட்டையே காப்பாற்ற வேண்டும். காஞ்சிக் கோட்டையைப் பிடிக்க முடியாத ஏமாற்றத்தில், ஆத்திரத்தில், சாளுக்கியர்கள் சுற்றிலுமுள்ள ஊர்களை அழித்து விடுவார்கள்."

"அப்படித்தான் அந்தக் காலத்தில் சாளுக்கியப் புலிகேசி செய்ததாக என் பாட்டனார் சொல்வார்."

"புலிகேசி மட்டுமா? அவருக்குப் பிறகு காஞ்சி மீது படை யெடுத்து வந்த சாளுக்கிய அரசர்கள் அத்தனைபேரும் அப்படித்தான் செய்தார்கள். காஞ்சிக்குள்ளேயே புகுந்த ஓர் அரசர் அமர்க்களம் செய்துவிட வில்லையா? மாமல்லபுரச் சிற்பங்கள் பலவற்றை அழித்துவிடவில்லையா? நாம் இப்படி வீண் பேச்சுப் பேசாமல், இப்போதே தளபதியைச் சந்திப்போம்."

இப்படி முச்சந்தியில் பேசிக்கொண்டே, பலர் தளபதி உதயசந்தி ரனை அணுகினர்.

பல்லவ மாளிகை சபை மண்டபத்தில் உதயசந்திரன் கவலையுடன் அமர்ந்து மந்திரிப் பிரதானிகளுடன் யுத்தப் போக்கைக் கலந்து ஆலோசித்த வண்ணமிருந்தார்.

காஞ்சி நகர இளைஞர்கள், எவ்விதத் தியாகத்திற்கும் ஆயத்தமாக இருப்பதாக உறுதியளித்திருப்பதாக உதயசந்திரன் கூறினார். நகரத்தி லுள்ள முக்கியமான குடிமக்கள், போர்க்கோலம் பூண்டு, எதிரிகளுடன் கடும் போரிடத் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்திருப்பதாகவும் கூறினார்.

நகரத்து மக்கள் கவலைப்படாமல், பீதியடையாமல், அச்சப்படாமல் இருப்பதறிந்த உதயசந்திரனுக்குப் புதுத்தெம்பு ஏற்பட்டது.

இளைஞர்களை அழைத்து, அவர் சில திட்டங்களைத் தெரிவித்தார்.

நகரத்து மூத்த குடிமக்களுள் பலசாலிகளைத் தேர்ந்தெடுத்துச் சில உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

அமாவாசை கழிந்த இரண்டாம் நாள், வானத்து இருள் பயங்கரத் தைத் தூண்டியது. சாளுக்கியர்கள் பாடி வீட்டில் கூடி ஆலோசித்தவா றிருந்தனர். கோட்டையைத் தகர்ப்பதற்கான திட்டங்களை வகுத்துக் கொண்டிருந்தனர். எல்லா படைத் தளபதிகளும் அங்கு கூடியிருந்தனர். அப்பொழுது வீரனொருவன் மூச்சு இரைக்க ஓடிவந்தான்.

காஞ்சிக் கோட்டையின் மதில் மீது, தீவர்த்தி வெளிச்சத்தில் சிலர் நடமாடுவதைப் பார்த்ததாகக் கூறினான்.

கீர்த்திவர்மன் வெளியே வந்து பார்த்தார். தொலைவிலிருந்து நோக்கியபோது, மதிலின் மீது தீவர்த்திகள் இங்குமங்கும் நகருவதையும் பிறகு அவை ஓரிடத்தில் வரிசையாக நிலைபெற்றிருப்பதையும் கண்டார். மதிலின் மீது, பல்லவ வீரர்கள் தாக்குதலுக்கு ஆயத்தம் செய்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டார். அதை உறுதிப்படுத்த, படைவீரர்கள் சிலரைக் கோட்டைக்கு அருகே அனுப்பினார்.

அகழியின் அருகே சென்ற சாளுக்கிய வீரர்கள் மீது, எதிர்பாராதவிதமாக மதில் மீதிருந்து அம்புகள் பாய்ந்தன. சாளுக்கிய வீரர்கள் சுருண்டு வீழ்ந்தனர்.

மதிலின் மீது பல்லவ வீரர்கள் தாக்குவதற்கு நிறுத்தப்பட்டுள்ளனர் என்ற செய்தி, விரைவாக சாளுக்கிய வீரர்களை நோக்கி விஷக்கணைகளை வீசுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கோட்டையைச் சுற்றிலும் சாளுக்கிய வீரர்கள் சூழ்ந்து, தீவர்த்தி வெளிச்சத்தை நோக்கி அம்புகளை எய்தனர். விஷம்தோய்ந்த அம்புகள், நூற்றுக்கணக்காய் மதிலின் மீது மாரியெனப் பாய்ந்தன. என்ன அதிசயம்! மதில் மீதிருந்து யாரும் திருப்பித் தாக்கவில்லை. வெள்ளி முளைக்கும் நேரம் வரை, சாளுக்கிய வீரர்கள் ஆயிரக்கணக்கான அம்புகளை எய்தனர். அநேகமாக சாளுக்கிய வீரர்களிடமிருந்த கையிருப்பு முழுவதும் தீர்ந்தது.

மதில் மீது பல்லவ வீரர்கள் ஒருவருமில்லை. வெறும் தீவர்த்திகள் நடப்பட்டிருக்கின்றன; தீவர்த்தி வெளிச்சத் துணையுடன் பல்லவ வீரர்கள் மதில் மீது வந்து அணிவகுத்து நின்று, தாக்குதலை நடத்தப்போகிறார்கள் என்ற எண்ணத்தில் ஏராளமான அம்புகளை எய்து ஏமாந்ததை நினைத்து வேதனைப்பட்டனர் சாளுக்கிய வீரர்கள்.

"ஆயிரத்திற்கும் மேலாக அம்புகளை இழந்தோம்" என்றார் சாளுக்கியத் தளபதி.

"நல்லவேளை, பல்லவர்கள் தாக்காததால் ஒரு வீரன்கூட நம் பக்கத்தில் சேதமில்லை" என்று விநயாதித்தன் பெருமைப்பட்டுக் கொண்டார்.

மறுநாள் நண்பகல் வரையில், இமைகொட்டாமல் கோட்டையைச் சுற்றி நின்றிருந்த சாளுக்கிய வீரர்கள் சலிப்படைந்தனர். போதுமான உணவு இல்லாததால் அவர்கள் களைப்படைந்திருந்தனர்.



"எவ்வளவு நாள்களுக்குத்தான் கோட்டைக்குள்ளிருக்கும் மக்கள் உணவு இல்லாமல் இருப்பார்கள். பார்த்து விடுவோம்" என்று சூளுரைத்த சித்திரமாயன், "நந்தீசன் இன்று மாலைக்குள் கோட்டையின் இரகசியப் பாதை வழியே வெளியே வருவான். ஏராளமான போர்க்கலன்களைக் கொண்டு வருவான். நாம் இழந்த அம்புகளுக்கு ஈடு செய்துவிடலாம்" என்று விநயாதித்தனைச் சமாதானப்படுத்துபவன்போல் பெருமையாகக் கூறினான்.

சித்திரமாயன் சொன்னபடி, நந்தீசன் மேற்குக் கோட்டை வாயிலுக்கு அருகே இருந்து ரகசிய வழியின்மூலம் வந்தான். அந்தப் பகுதியில் காடுபோல் அடர்ந்த புதர், மரஞ்செடிகள் நிறைந்திருந்தன. ரகசிய வழி இருப்பது சிலருக்கே தெரியும்.

இரண்டு வண்டிகள் நிறைய கேடயம், அம்பு, வாள், வேல்கள் இருந்தன. இருள் சூழ்ந்திருந்ததால் என்ன நடக்கிறதென்று அறிய முடியவில்லை. ரகசியப் பாதையின் வழியே தொடர்ந்து மேலும் இருபது வண்டிகள் வந்தன. கோட்டைக்கு வெளியே வந்தவுடன், திடீரென்று அவற்றிலிருந்த பல்லவ வீரர்கள் பாய்ந்து குதித்து, வில்லை வளைத்து மின்னல்போல் சாளுக்கிய வீரர்கள் மீது அம்பெய்தனர். மதில்மீது வீசப்பட்ட விஷம் தோய்ந்த அம்புகளைச் சேகரித்து வைத்திருந்த அம்புகள் அவை. சாளுக்கியர்களின் விஷ அம்புகள் அவர்கள் மீதே தைத்தன.

கண் இமைக்கும் முன் பல்லவ நாட்டு இளைஞர்கள், சாளுக்கிய வீரர்களைத் தாக்கிவிட்டு, மீண்டும் கோட்டைக்குள் நுழைந்துவிட்டனர். முதல் நாளிரவு சாளுக்கியர்கள் வீசிய விஷ அம்புகளைச் சேகரித்துப் பல்லவ வீரர்கள் வீசியதால், அவை தைத்த கண நேரத்தில் சுருண்டு வீழ்ந்தவர்களுள் நந்தீசன் ஒருவன். தப்பிச்சென்ற சாளுக்கிய வீரர்கள், செத்தோம் பிழைத்தோம் என்று கீழே கிடந்த நந்தீசனைக் கவனிக்காமல், ஓடும்போது அவனை மிதித்துச் சென்றனர்.

உருத்தெரியாமல் நந்தீசன் நசுங்கிக் கிடந்தான்.



# 49

பொழுது புலர்வதற்கு முன்பு, இருள் விலகிக்கொண்டிருக்கும் நேரத்தில், நரேந்திரன், சைலேந்திரியைக் காணச் சென்றான்.

சைலேந்திரி, தெருத் திண்ணையில் கவலையுடன் உட்கார்ந்திருந்தாள். பெரியவர் உலவுவதற்குச் சென்றுவிட்டார்.

அடுத்து என்ன நடக்கப் போகிறதென்று புரியாமல், அவள் சிந்தனை யிலாழ்ந்திருந்தாள். தாயகத்திற்குத் திரும்பிச்செல்வது என்ற உறுதியான முடிவுக்கு வந்துவிட்டாள்.

முதல் நாள் இரவே அதைப் பற்றிப் பெரியவரிடம் பேசியபிறகு, அந்த முடிவுக்கு வந்துவிட்டாள். பரமகுருவிடம் தெரிவித்தாள்.

"திடீரென்று ஏன் இப்படியொரு முடிவுக்கு வந்துவிட்டாய்?" என்று அவர் கேட்டார்.

"இந்த நாட்டில் ஒரு கணம்கூட இருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை. சாளுக்கியர்கள் தொல்லை அதிகமாகிவிடும் என்று நினைக்கிறேன். என் தாய் சொல்லியனுப்பியது ஏதும் நடைபெறவில்லை. தங்களிடம் வீணை பயிலலாம் என்றும் எண்ணினேன். அதுவும் நடைபெறாது போலிருக்கிறது. பல்லவ சக்கரவர்த்தியையும் சந்திக்க முடியவில்லை"- சைலேந்திரியின் குரலில் வருத்தம் நிறைந்திருந்தது.

"சைலேந்திரி, நீ சொல்வதில் பெரும் பகுதியை நான் ஒப்புக்கொள்கிறேன். போர் மேகம் எங்கும் சூழ்ந்துவிடும் என்றே தோன்றுகிறது. பூஞ்சேரியிலும், காஞ்சியிலும் இருக்கும் அமைதி, நந்திபுரத்தில் இல்லை. மிக வளப்பமான பூமி என்கிறார்கள். பசுமையான சோலையும், எங்கும் நீர் நிலைகளும், காவிரியின் தெள்ளிய நீரோட்டமும், தோப்பும், பழத்



தோட்டங்களும் எங்கும் நிறைந்திருக்கின்றன என்று சொல்கிறார்கள். இறைவன் என் விழியை எடுத்துக்கொண்டுவிட்டான். உறுதுணையாக இருந்தவளும் ஓர் சதிகாரி என்று பிறகு தெரிந்தது. இங்கு வந்து நான் செய்தது என்ன? செய்வது என்ன? சக்கரவர்த்திகளைச் சந்திக்க என்னாலும் இயலவில்லை. காஞ்சிக் கோட்டையினின்று நாம் புறப்படும்போது முகுந்தனிடம், நந்திபுரத்தில் சந்திப்பதாகச் சொல்லியனுப்பினார். இங்கு அவரைச் சந்திக்க முடியவில்லை. ஆனால், எனக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறது. அதற்குள் மனம் தளர்ந்துவிடாதே சைலேந்திரி" என்று பரமகுரு சமாதானமாய்ப் பேசினார்.

நரேந்திரனைத் தான் விரும்புவதாகவும், அவருடன் சேர்ந்து காம்போஜம் சென்றுவிட முடிவு செய்திருப்பதாகவும் அவரிடம் சொல்ல விரும்பினாள் சைலேந்திரி. ஆனால், ஏனோ சொல்லவில்லை.

முகுந்தன் கேட்ட உறுதிக்கு, நரேந்திரன் மறுநாள் முடிவு கூறுவதாகச் சொல்லியிருக்கிறாரே? என்ன முடிவு கூறப்போகிறார்?

நரேந்திரனை அவள் விரும்புவதைப் பெரியவர் ஏற்கவில்லை. அவருக்கு, நரேந்திரனைக் கண்டால் ஆரம்பத்திலிருந்தே பிடிக்கவில்லை.

"சைலேந்திரி, நரேந்திரனை நீ மறந்து விடுவதுதான் நல்லது. உன் தாயின் விருப்பத்தை அறியாமல், நீ அவனிடம் காதல் கொண்டதை நான் ஏற்கமாட்டேன்."

"காதலிக்கவா கடல் கடந்து வந்தாய்? நீ வீணை பயின்று, அதில் கலைவாணியாகவேண்டும் என்பது உன் தாயின் ஆசை. அது நிறைவேறவில்லை. உனக்குத் துணையாக என்னை அனுப்பினாள். வீணையின் நுட்பங்களை அறியச் செய்து, உன்னை சர்வ ஜாக்கிரதையாக காம்போஜம் கொண்டு சேர்க்கவேண்டும். அதனால் எனக்கு ஏற்படும் எத்தகைய தொல்லையையும், எதிர்ப்புகளையும், இழப்புகளையும் நான் ஏற்கச் சித்தமாயிருக்கிறேன். நான் பரம்பரையாக பூசித்த விக்கிரகத்தை இழந்தேன். பூசை செய்யாமல் உணவருந்தாத என் கொள்கையை, இங்கே கைவிட்டுவிட்டேன். கடல்மல்லையில் இறங்கியதிலிருந்து எவ்வளவு தொல்லைகள், ஆபத்து! உன்னை என்னிடமிருந்து பிரிக்கச் சதி செய்தான் நந்தீசன். காபாலிகையிடம் சிக்குண்டோம். இப்போது நந்திபுரத்திற்கு வந்து பொழுதை வீணே கழித்துக்கொண்டிருக்கிறோம். நீ சொல்வதுபோல் காம்போஜம் திரும்புவதற்கு முயற்சி செய். வந்ததுபோல் திரும்பி விடுவோம். உன் சொந்த வீணையையும் நீ இழந்தாய், நான் அருமை விக்கிரகத்தை இழந்தேன். உன்னைப் பின்னப்படாமல் கொண்டு சேர்ப்பது என் கடமை" என்று பெரியவர் நயமாகவும், அழுத்தமாகவும் பேசினார்.

"ஒவ்வொரு முறையும் நம்மைக் காப்பாற்றியவன் நரேந்திரன் என்பதை நீங்கள் மறந்துவிட்டீர்களா? எனக்கும் நரேந்திரனுக்கும் ஏற்பட்ட காதலை, என் தாயிடம் பக்குவமாக எடுத்துச்சொல்வேன்" என்று அழுத்தந்திருத்தமாகச் சொன்னாள் சைலேந்திரி.

"நான் சம்மதிக்கமாட்டேன், நரேந்திரன் உன்னுடன் வருவதென்றால் நான் வரமாட்டேன்" பெரியவர் கண்டிப்பாகக் கூறினார்.

சைலேந்திரி மௌனமாக இருந்தாள்.

இன்று நரேந்திரன் வருவார். சாதகமாக முடிவு கூறுவார். பெரியவர் தடுத்தாலும், நரேந்திரனுடன் சென்றுவிட அவள் முடிவு செய்து விட்டாள்.

இருள் விலகா முன்பே எழுந்துவிட்ட சைலேந்திரி, திண்ணையில் அமர்ந்திருந்தபோது, நரேந்திரன் வந்தவுடன் அவளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

நரேந்திரனும், சைலேந்திரியும் சிறிது நேரம் பேசாமல், ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருந்தனர்.

"உள்ளே போய்ப் பேசலாமா?" என்று சைலேந்திரி கேட்டாள்.

"இங்கேயே பேசுவோம். காலை இளங்காற்று புத்துணர்ச்சியை அளிக்கிறது. உன்னைப் பார்க்கும்போது, இப்பொழுதுதான் பூத்த புதுமலர் போல் புதிய தெம்பு எனக்கு ஏற்படுகிறது."

சைலேந்திரி, தன் அகன்ற விழியால் அவனை நோக்கினாள். அதில் நாணம் கலந்திருந்தது.

"வர்ணிக்கக் கற்றுக்கொண்டு விட்டீர்கள் போலிருக்கிறது."

"காயமுற்றுப் படுத்திருந்தபோது உன்னைப் பற்றி அமைதியாகச் சிந்தித்தேன். உன் விழிகளும், சிரிப்பும், நடையும் என்னைச் சுற்றிச் சுற்றி வந்தன. கப்பலின் மேல்தளத்தில் நடந்த நிகழ்ச்சியை நினைவுபடுத்திக் கொண்டேன்.

*"பால்வண்ண நிலவொளியின் தாக்கம் பெற்ற*
*பாற்கடலின் வெண்சங்கே, உனது வெண்மை*
*நூல் அருளும் கலைவாணி திருமிடற்றின்*
*நுண்ணழகு வெண்மைக்கே தோற்கும் கண்டாய்."*

என்று நான் மெல்ல முணுமுணுத்தேன். அதைக் கேட்டுக் கொண்டிருந்த பெரியவர், என் தோளைத் தொட்டார்.

"ஒருகணம் நான் பயந்துவிட்டேன். உன்னை வர்ணித்ததைக் கேட்டுவிட்டுக் கோபங்கொண்டு, கப்பல் அதிகாரியிடம் முறையிடப்



போகிறார் என்று நினைத்தேன். பெண்களிடம் மரியாதைக் குறைவாக நடந்தால் என்ன தண்டனை தெரியுமா?"

"தெரியாதே" என்றாள் சைலேந்திரி.

"கடலில் தூக்கி எறிந்துவிடுவார்கள்."

"ஐயோ, அப்படியெல்லாம் நிகழ்ந்திருந்தால்...?"

"நீ இப்போது தேவியைத்தானே வர்ணித்தாய்? என்று பெரியவர் கேட்டாரோ, நான் பிழைத்தேன்."

"உண்மையில் நீங்கள் தேவியை வர்ணித்துத்தான் பாடினீர்களா?"

'ஆமாம்' என்று தலையசைத்த நரேந்திரன் "இந்தத் தேவியைத் தான்" என்று, அவளை நோக்கி விரலை நீட்டினான்.

பிறகு சில கணம் விழிகளை மூடிக்கொண்டு, மரக்கலத்து நிகழ்ச்சிகளை நினைவுபடுத்திக்கொண்டான்.

பொழுது புலராத அந்தக் காலைப் பொழுதில் சைலேந்திரி உறங்கிக் கொண்டிருப்பாள். மரப்படிக்கட்டுகள் வழியே நரேந்திரன் மேல்தளத்திற்கு ஏறிவரும்போது, அறை மஞ்சத்தில் சைலேந்திரி படுத்திருக்கும் கோலம் அவன் விழியில் படும். அவ்வாறு மறைந்திருந்து பார்ப்பது – ரசிப்பது தவறு என்று அவனுக்குத் தெரியும். என்றாலும் பொங்கித் ததும்பிக் கொண்டிருக்கும் கலையூற்றை – ரசனை உணர்வைத் தடுக்க, எவ்வளவு முயன்றாலும் அவனால் முடியவில்லை.

அந்த நிகழ்ச்சியை அவன் எடுத்துக்கூறி, "சைலேந்திரி, அலை பாயும் மனத்தை அன்று அப்பொழுது நான் அடக்கிக்கொண்டிராவிட்டால், என் பயணம் பாழ்பட்டிருக்கும். என் தாய்க்குக் கொடுத்திருந்த வாக்குறுதி சிதைந்துவிட்டிருக்கும்" என்றான்.

"அப்படி என்ன வாக்குறுதி கொடுத்திருந்தீர்கள்?"

"ஓரிடத்தில் நிலைக்காமல் பல நாடுகளைச் சுற்றி வருகிறேன். காலில் சக்கரம் என்றுகூட வேடிக்கையாக என் தாயார் சொல்வார்கள். 'மகனே, பல்வேறு நாடுகளுக்குச் செல்வாய். அங்கே பல பெண்களுடன் பழகவேண்டியிருக்கும். ஆனால், நீ ஒருத்தியிடமும் மனத்தைப் பறிகொடுத்துவிடக்கூடாது. உன்னை இழந்துவிடக்கூடாது. எனக்குத் தெரியாமல் கல்யாணம் செய்துகொள்ளக்கூடாது' என்று. நான் வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். அந்த மரக்கலத்தில் ஒரு கணத்தில் உன்னிடம் மனத்தை இழந்து, என் பணியைவிட்டு உன்னைப் பின்பற்றி வந்திருந்தால்?" என்று கூறி நிறுத்தினான்.

சைலேந்திரி திடுக்கிட்டாள். இவர் என்ன சொல்கிறார்?

"நரேந்திரரே! சற்று முன்புவரை நான் நினைத்திருந்தது வேறு; இப்போது நீங்கள் சொல்வது வேறு. நீங்கள் என்னைக் காதலிக்க வில்லையா?"

"சைலேந்திரி, அதில் என்ன சந்தேகம்?"

"உங்கள் தாய்க்குக் கொடுத்த வாக்குறுதி?"

"காம்போஜம் சென்ற பிறகுதானே நாம் திருமணம் செய்து கொள்ளப் போகிறோம்? இங்கேயே, பல்லவ நாட்டிலேயே, நந்திபுர விண்ணகரத்திலேயே திருமணம் முடித்துவிடவேண்டும் என்று விரும்புகிறாயா?"

இதைக் கேட்டு சைலேந்திரி பெருமூச்சுவிட்டாள். "அப்பாடா! இப்போதுதான் உயிர் வந்தது. நம் திருமணம் இங்கே நடக்கவேண்டாம். என் தாய்க்குத் தெரியாமல் நானும் கல்யாணம் செய்துகொள்ளமாட்டேன். பெரியவர் ஒரு நாளும் சம்மதிக்கமாட்டார். நரேந்திரன், உங்களுடன் பழகுவது பெரியவருக்குப் பிடிக்கவில்லை. காம்போஜம் சென்றபிறகு என் தாயின் ஆசியுடன், உங்கள் தாயின் முன்னிலையில் திருமணம் செய்து கொள்வோம்" என்று கூறிய சைலேந்திரி, "நாம் இந்த ஊரிலிருந்து எப்போது புறப்படுகிறோம்?" என்று கேட்டாள்.

நரேந்திரன் மறுமொழி கூற வாயெடுக்கு முன்பு குதிரை வீரர்கள் சிலர் அங்கு வந்தனர். ஒரு வீரன் குதிரையினின்று இறங்கி, வணங்கி, நரேந்திரனை நோக்கி, "தாங்கள்தானே வீரர் நரேந்திரன்?" என்று கேட்டான், சைலேந்திரியைப் பார்த்தவாறு. நரேந்திரன் தலையசைத்தான். அந்த வீரன், "ஐயா, தங்களைச் சக்கரவர்த்தி உடனே சந்திக்க விரும்பு கிறார். தாமதமின்றி உடனே வருமாறு பணித்துள்ளார்" என்றான்.

பிறகு சைலேந்திரியை நோக்கி வணக்கம் தெரிவித்து, "வீணைக் கலைஞர் பரமகுரு இங்கேதானே தங்கியிருக்கிறார்?" என்று கேட்டான்.

"தங்களையும், பரமகுரு அவர்களையும் உடனே சந்திக்க விரும்பு கிறார். சிவிகை சிறிது நேரத்தில் இங்கு வரும்" என்றான்.

"சக்கரவர்த்தி எங்களை உடனே வருமாறு கூறினாரா?" என்று சைலேந்திரி மகிழ்ச்சியுடன் கேட்டு, அரசர் அழைப்பதை பரமகுருவிடம் தெரிவிக்க விரைந்தாள்.

நரேந்திரன், தன்னைப் பின்தொடர்வான் என்று அவள் எண்ணி னாள். ஆனால், நரேந்திரன் பல்லவ மன்னரைச் சந்திக்க விரைந்தான்.

# 50

பல்லவ சக்கரவர்த்தி நந்திவர்மன், ஓர் இருக்கையின் மீது அமர்ந் திருந்தார். அலங்கரிக்கப்பட்ட அரியணை அது அன்று. தேக்கு மரப் பலகைகளால் இணைக்கப்பட்ட அந்த இருக்கை, சற்று உயரமாக இருந்தது. அவர் அருகே சாமரம் வீசும் பணிப்பெண்கள் இல்லை. திரைச்சீலைகள் அசையவில்லை. கட்டியங்கூற ஆள் இல்லை. நுழை வாயிலில் வேலுடன் வீரர்கள் காத்து நிற்கவில்லை. அவர் அமர்ந்திருந்த இடம், சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தூண்களுடைய சபை மண்டபம் அன்று. நந்திபுரக் கோட்டைக்குள் சிறியதாகச் செங்கற்களால் கட்டப்பட்ட மாளிகை அது.

காஞ்சி அரியணையில் அமர்ந்த சில நாள்களிலேயே, இளம் பிராயத்து நந்திவர்மன் நாடு நகரங்களைச் சுற்றிப்பார்க்க விரும்பினார். தன்னுடன் தளபதி உதயசந்திரனை அழைத்துக்கொண்டு சுற்றுப் பயணம் செய்தபோது, பழையாறை நகருக்கு வந்தார். காவிரி நதியின் குளிப்பாட்ட லால் எழிலுடன் திகழ்ந்த பழையாறையின் ஒரு பகுதி, நந்திவர்மனைப் பெரிதும் கவர்ந்தது. உதயசந்திரனுடன் அந்த இடத்தில் சில நாள்கள் தங்கிய நந்திவர்மன், பல்லவர்களின் தலைநகரை, அங்கே மாற்றிவிடலாமா என்று எண்ணினார்.

உதயசந்திரன் அவர் கருத்தை ஏற்கவில்லை. உதயசந்திரனின் வாதம் ஒப்புக்கொள்ளக்கூடியதாக இருந்தது. "பொன்னிப்புனல் தவழும் அந்தப் பூமி, சோழர்களுக்குச் சொந்தமானது. இன்று சோழர்கள் சிறு சிறு பகுதிகளாகப் பிரிந்து ஆட்சி நடத்துகிறார்கள். என்றாவது ஒருநாள் அவர்கள் ஒன்று சேரும்போது, நமக்கு ஆபத்து ஏற்படலாம். தலைநகர் இங்கு இருந்தால் எளிதில் கைப்பற்றிவிடுவார்கள். தலைநகரை இழந்த பிறகு, நம் பெருநாடு சிதைந்து போகவேண்டியதுதான்" என்ற உதயசந்திரன் கருத்தை, நந்திவர்மன் ஏற்றார். இளைஞரான அவர், கூரிய

மதி உடையவர். குழப்பமில்லாமல் முடிவெடுக்கக்கூடியவர். படைத் தளபதியாக வந்தமர்ந்த உதயசந்திரன், நந்திவர்மனைவிட வயதில் பெரியவர். தோள் வலிமையுடன், நுண்ணறிவு படைத்தவர். அதனால் நந்திவர்மன், உதயசந்திரனுடன் பதவி வேற்றுமையில்லாமல் விவாதிப்பார். தான் ஓர் அரசர் என்ற கௌரவம் பார்க்காமல், தன் முடிவு தவறு என்றால் தயங்காது அதை ஏற்பார்.

வடக்கே வேங்கடம் முதல், காவிரிக்கரை வரையில், இன்னும் தெற்கே நார்த்தாமலைக் குன்றுகள் வரை விரிந்திருக்கும் பல்லவ நாட்டின் தலைமைஅகம் பழையாறையிலோ, உறையூரிலோ இருக்க வேண்டும் என்பது அவர் எண்ணம்.

ஆனால், உதயசந்திரன் தெரிவித்த கருத்தை நந்திவர்மன் ஏற்றார். "பழம் பெருமை வாய்ந்த காஞ்சிமா நகரிலிருந்து தெற்கே செல்வது சரியன்று என்பதை ஒப்புக் கொள்கிறேன். என்றாலும் பாண்டிய நாட்டின் எல்லைக்கருகே நமக்குப் பலத்த அரண் வேண்டும். பழையாறைக்கருகே புதிய நகரம் ஒன்றை நிர்மாணிப்போம்; அதைச்சுற்றி ஓர் கோட்டை கட்டுவோம்" என்று கூறிய நந்திவர்மன் கருத்தை, உதயசந்திரன் ஏற்றார்.

கோட்டை கட்டப்பட்டது. நகரம் உருவானது. நந்திபுரம் என்ற பெயர் சூட்டப்பட்டது. திருமாலுக்கு அழகிய கோயில் கட்டப்பட்டது. திருவாலி நகரத்தின் தலைவராகவும், சிறந்த வீரராகவும் விளங்கிய கலியன், தன் பட்டம் பதவி துறந்து, திருமால் பக்தரானார். அவர், திருமால் குடிகொண்டிருக்கும் திருப்பதிகள் தோறும் சென்று வணங்கித் தீஞ்சுவைப் பதிகங்களைப் பாடிக் காணிக்கையாக்கினார். அவர் நந்திபுர விண்ணகரத்துக்கு வருகைதந்து, பெருமாளைச் சேவித்து பாசுரங்களை திருமாலுக்கு மாலையாகச் சூட்டினார். அதனால் நந்திவர்மனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

"உதயசந்திரா! சூரிய சந்திரர் உள்ளளவும் என் பெயர் நிலைத்து நிற்க, நான் போரில் அடையும் வெற்றியைவிட, சிற்ப அற்புதங்கள் நிறைந்த கோயில்களைக் கட்டுவதைவிட, திருமங்கை மன்னரால் மங்கள சாசனம் செய்யப்பட்ட என்னால் கட்டுவித்த கோயில்கள்தாம் அழியாது விளங்கப் போகின்றன" என்று பெருமையுடன் அடிக்கடி கூறுவார்.

நந்திபுரக் கோட்டைக்குள்ளும், வெளியேயும் மக்கள் குடியேறினர். அவ்வப்போது அங்கு வருகை தரும் பல்லவ மன்னரின் அன்பு ஆட்சியை ஏற்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர்.

காஞ்சியில் சித்திரமாயனால் ஏற்பட்ட பதவிப் பூசலால், நந்திவர்மன் காஞ்சியை விட்டு எங்கும் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. அரசர்



கவனிக்காததால், நந்திபுரத்தின் பொலிவு குறையத் தொடங்கியது. இதை யறிந்த நந்திவர்மன், நந்திபுரத்துக்கு விரைவில் வந்து சில நாட்கள் தங்க எண்ணினார். நந்திபுரக் கோட்டையைச் செப்பனிட ஏற்பாடுகள் செய்தார். விண்ணகரத்தைப் புதுப்பித்தார். திருமங்கை மன்னர் நந்திபுரம் வரும் போது, அவரைச் சேவித்து ஆசிபெற ஆர்வங்கொண்டார். தக்கவர்களைத் தூதனுப்பினார்.

சாளுக்கியர் படை எடுப்பு தொடங்குவதற்கு முன்பே, காஞ்சி மாளிகையிலுள்ள அந்தப்புரத்து மகளிரையும் மற்றும் முக்கியமானவர் களையும் நந்திக்கோட்டைக்குள் சென்றுவிட ஏற்பாடு செய்தார். பகைவர் களால் பரிவாதினி வீணை அபகரிக்கப்படும் என்ற செய்தி கிடைத்த வுடன், பரமகுரு போன்ற கலைஞருக்கு எந்தவித ஆபத்தும் நேர்ந்துவிடக் கூடாது என்பதற்காக அவரையும் நந்திபுரத்திற்கு அழைத்துச்சென்றார். முதிய சிற்பி மட்டும் பிடிவாதமாக கடல்மல்லையை விட்டு நகர மறுத்தார்.

நந்திவர்மனின் மூதாதயர்களின் உறவினர்கள் காம்போஜத்தில் குடியேறியிருந்தனர். அவர்களுள் ஒருத்தியான சைலேந்திரியின் தாயைப் பற்றி, நந்திவர்மன் முன்பே அறிந்திருந்தார். இசைக் கலையில் மிகவும் புலமை பெற்றிருந்த அவளைப் பல்லவ நாட்டிற்கு வரவழைக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்குண்டு. சைலேந்திரி, வீணை பயிலக் காஞ்சிக்கு வந்த செய்தி, சற்றுத் தாமதமாகவே அவருக்குக் கிடைத்தது.

நந்தீசனிடம், சைலேந்திரி சிக்கிவிட்டாள் என்பதறிந்து அவளை மீட்கத் திட்டமிட்டார். ஆனால், சித்திரமாயன் முயற்சி மிக வேகமாக வெற்றி பெற்றது. பரிவாதினி வீணையைச் சாளுக்கியர்கள் எப்படியும் அபகரித்துவிடத் திட்டமிட்டிருப்பதை அறிந்த நந்திவர்மன், பரிவாதினி வீணையையும், பரமகுருவையும், சைலேந்திரியையும் காப்பாற்ற முடிவு செய்தார். நரேந்திரன் என்ற இளைஞனின் வீரத்தை அறிந்தார். அவனை நந்திபுரம் வரச்செய்தார். சைலேந்திரியையும், பரிவாதினி வீணையையும், சித்திரமாயன் ஆதரவாளர்களிடமிருந்து காப்பாற்ற நடந்த போரில் நரேந்திரன் காயமுற்றான்.

சைலேந்திரி, பரமகுரு இருவரும், பரிவாதினி வீணையுடன் நந்திபுரத்திற்கு வந்து சேர்ந்ததால், இனி எந்த ஆபத்தும் இல்லை என்று நந்திவர்மன் நம்பிக்கையுடன் இருந்தபோது, நிலை மாறியது. சைலேந்திரி, நரேந்திரன் மீது காதல் கொண்டிருப்பது தெரியவந்தது. சைலேந்திரிக்கு உதவும் நோக்கத்துடனிருந்த முகுந்தனைச் சைலேந்திரிக்குப் பிடிக்க வில்லை, பல்லவ நாட்டில் இனி தங்கியிருக்கவும் அவள் விரும்ப வில்லை என்பதை மன்னர் அறிந்தார். முகுந்தன் மீது ஏற்பட்ட கோபத்

தால் அத்தகைய முடிவுக்கு வந்திருப்பதை உணர்ந்த நந்திவர்மன், அவள் மனத்தை மாற்ற விரும்பினார்.

காஞ்சிக் கோட்டையைச் சாளுக்கியர்கள் சூழ்ந்துகொண்டு விட்டனர். அவர்களை எதிர்த்துப் போராடும் அளவிற்குப் பல்லவப்படை வீரர்களில்லை. அதேபோல காஞ்சிக் கோட்டையைச் சாளுக்கியர்களால் கைப்பற்ற முடியாதவாறு, உதயசந்திரன் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

காஞ்சிக் கோட்டையைக் கைப்பற்ற முடியாததால் ஏற்பட்ட ஏமாற்றமும், கோட்டைக்குள்ளிருந்து திடீரென்று ஏற்பட்ட தாக்குதலும், நந்தீசன் இறந்ததால் ஏற்பட்ட அதிர்ச்சியும், பரிவாதினி வீணையை அபகரிக்க முடியாததும், சாளுக்கிய வீரர்களின் ஆத்திரத்தை அதிகரிக்கச் செய்தன. சித்திரமாயனும், விக்கிரமாதித்தனும் கலந்து யோசித்தனர். தெற்கே நந்திபுரக் கோட்டைக்குள் நந்திவர்மன் இருப்பதையும், பரிவாதினி வீணை மிகவும் பாதுகாப்பாகக் கொண்டு செல்லப்பட்டிருப்பதையும் அறிந்த சித்திரமாயன், ஓர் யோசனை கூறினான்.

"உடனே நந்திபுரம் நோக்கிச் சாளுக்கிய வீரர்கள் விரைந்து செல்லுமாறு கட்டளையிடுங்கள். நந்திபுரக் கோட்டை பலமற்றது. அதைப் பாதுகாக்கப் படை வீரர்கள் எண்ணிக்கையும் குறைவு. நாம் படையெடுத்து வந்ததறிந்து, தெற்கிருந்து பாண்டியர்களும், பல்லவ நாட்டின் எல்லைப் பகுதியைக் கைப்பற்றப் படைகளுடன் வரப்போவதாகக் கேள்வி. அதனால், உடனே நந்திபுரம் நோக்கி நம் வீரர்கள் பாய்ந்து செல்லட்டும்" என்ற சித்திரமாயன் திட்டத்தை, கீர்த்திவர்மனும், விக்கிரமாதித்தனும் ஏற்றனர்.

காஞ்சிக் கோட்டை முற்றுகையைக் கைவிட்டு, சாளுக்கியப் படைகள் வருகின்றன என்பதறிந்து நந்திவர்மனும், அமைச்சர்களுடன் கலந்தாலோசிக்கலானார். நந்திபுரக் கோட்டைக்குள்ளிருந்த முதியவர், பெண்டிர், சிறியவர்கள் அனைவரையும் வெளியேற்றி, அருகிலுள்ள கிராமங்களில் சென்று சிறிது காலம் வசிக்குமாறு கட்டளையிட்டார்.

பரிவாதினி வீணையைக் கைப்பற்றுவதுடன், பரமகுருவையும், சைலேந்திரியையும் சிறைப்பிடித்து வாதாபிக்கு அழைத்துச் செல்லத் திட்ட மிட்டிருப்பதாகவும் காஞ்சியினின்று செய்தி வந்தது. பிறகுதான் நரேந்திரனையும், சைலேந்திரியையும் சந்திக்க அழைத்தார்.

கம்பீரமாக அமர்ந்திருக்கும் நந்திவர்மனைக் கண்ட உடனேயே நரேந்திரன் ஒருகணம் திகைத்தான். அந்த ஒளி நிறைந்த விழிகளை, இதற்கு முன்பு எங்கோ கண்டிருப்பதாக ஓர் உணர்வு ஏற்பட்டது



நரேந்திரன் கீழே வீழ்ந்து, அரசரை வணங்கினான். அரசர் அவனை வாழ்த்தி, "நரேந்திரா, உன் வீரதீரச் செயல்களை அறிந்தேன். உனக்குக் காலில் ஏற்பட்ட ரணம் முழுமையும் ஆறிவிட்டதா? நலமாக இருக்கிறாயா? சைலேந்திரியை உடன் அழைத்து வரவில்லையா?" என்று கேட்டார்.

தன்னைப் பின் தொடர்ந்து சைலேந்திரி வருவாள் என்று எண்ணிய நரேந்திரன் ஏமாற்றமடைந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். அரசனுக்கு என்ன மறுமொழி கூறுவது என்று புரியாமல் திகைத்தான்.

நந்திவர்மன், நரேந்திரனைப் பார்த்து, "நரேந்திரா! அறிஞர் முகுந்தன் உன்னிடம் ஓர் உறுதிமொழி கேட்டாரல்லவா? அதற்கு நீ மறுமொழி கூறவில்லை. சைலேந்திரிக்கும் நிலையான முடிவைத் தெரிவிக்க வேண்டும்; என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார்.

முகுந்தன், தன்னிடம் கேட்டது பல்லவ அரசருக்கு எப்படித் தெரியும்!

முகுந்தன் எங்கே? சைலேந்திரி எங்கே? என்று குழப்பத்தில் ஆழ்ந்திருந்த நரேந்திரன், சைலேந்திரி அங்கு வருவதைக் கண்டான். அவள், அவனைத் திரும்பிப் பார்க்கவில்லை.

சைலேந்திரியுடன் காம்போஜம் செல்வதா? முடிவை இந்தக் கணத்தில் கூறியாக வேண்டும். என்ன சொல்வது என்று குழம்பியவாறு நிற்கும்போது, பல்லவ சக்கரவர்த்தி கூறியது சைலேந்திரியைத் திடுக்கிட வைத்தது.



# 51

பல்லவ மாமன்னர் நந்திவர்மன், மிக அமைதியாகப் பேசினார். அவர் எதிரே கைகட்டி மிக மரியாதையுடன் நின்றிருந்தவர்களை, ஒவ்வொருவராகப் பெயர் சொல்லி விளித்து, அமருமாறு சொன்னார். பிறகு அவர்களைப் பார்த்துச் சொன்னார்:

"நரேந்திரா! இதுவரை சுதந்திரமாக நடமாடிய நீ, இன்று முதல் கட்டுப்பாட்டிற்குள் சிக்குகிறாய். கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரத்தால் தான் வெற்றியடைய முடியும். தோள்வலிமை உடையவன் நீ. பல நாடுகளைச் சுற்றி வந்தவன். பல்லவ நாட்டைச் சுற்றிப்பார்க்க வந்தாய். இங்கே தங்கிவிட முடிவெடுத்தாய். ஏனோ, மீண்டும் காம்போஜம் செல்லத் திடீரென முடிவெடுத்துள்ளாய். உன் மனத்திற்குள் பெரும் போராட்டம்" என்று கூறிச் சற்று நிறுத்தி, சைலேந்திரியின் பக்கம் திரும்பி அவளை நோக்கினார்.

"சைலேந்திரி, உன் தாயைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். உன் தாய்வழிப் பாட்டி, பல ஆண்டுகளுக்கு முன்பு காஞ்சிபுரத்தில்தான் இருந்தாள். சிறந்த கலைக் குடும்பம். அப்பொழுது நான் சிறுவன். காஞ்சிபுரம் சென்று, என்னைச் சந்திக்குமாறு உன் தாய் உன்னை அனுப்பினாள். வீணைக் கலையில் சிறந்தவள் உன் தாய். உன் தாய்தான் உனக்குக் குரு என்பதும் எனக்குத் தெரியும். காஞ்சிக்குச் சென்றால் வீணையின் நுணுக்கங்களை மேலும் அறியலாம் என்ற எண்ணத்தில், உன்னை இங்கு அனுப்பினாள். உனக்குத் துணையாகப் பெரியவர் ஒருவரையும் அனுப்பினாள். கடல்மல்லைத் துறையில் இறங்கியதிலிருந்து நடந்த சம்பவங்களை நான் அறிவேன். உனக்கு ஏற்பட இருந்த ஆபத்தையும் நான் அறிவேன். முகுந்தன் வீணைக் கலையில் மேதை. அவர், உன் வீணையை நேசித்தார். உன்னோடு பாசங்கொண்டு பழக விரும்பினார்... ஆனால் நீ அவரைத் தவறாக நினைத்து விட்டாய்" என்று



சொல்லிக்கொண்டிருக்கும்போதே, சைலேந்திரியால் அமைதியாக இருக்க முடியவில்லை. இதுவரை அடக்கி வைத்திருந்த உணர்வுகள், பொங்கிப் பீறிட்டன. அவள் எழுந்து நின்றாள்.

"சக்கரவர்த்திகளே! என்னைப் பொறுத்தருளுங்கள். நானும் பெரியவரும் கடல்மல்லைக்கு வந்தோம். வழியில் நந்தீசன் குறுக்கிட்டு, என்னைப் பரமகுரு வீட்டில் கொண்டு சேர்த்தார்.

"பரமகுரு வீணைக் கலையில் மாமேதை என்றறிந்ததால், நான் அங்கே தங்கியிருக்கச் சம்மதித்தேன். நந்தீசன் குணக் கேடுடையவர் என்பதைப் பிறகு புரிந்துகொண்டேன். தங்களை அடிக்கடி சந்திக்கும் முகுந்தன், என்னைக் காப்பாற்றியதற்கு நன்றி தெரிவிக்கிறேன். அவர் மகாமேதை என்பதறிந்தேன். ஆனால் நந்திபுரம் வந்தபிறகு, அவர் உள்நோக்கம் வெளிப்பட்டது. என்னையும், நரேந்திரனையும் அவர் பிரித்துவிட முடிவு செய்திருக்கிறார். அவர் பார்வையும், பேச்சும் அவர் மேதைத்தன்மைக்கு ஏற்புடையனவாக இல்லை. நானும், நரேந்திரனும் காம்போஜம் திரும்ப முடிவு செய்திருப்பதைத் தடுக்க விரும்புகிறார். இவர் யார் என் சொந்த நலன்களில் குறுக்கிட? சக்கரவர்த்திகளைச் சந்திக்கத் தடையாயிருப்பவர் முகுந்தன் என்பதறிந்து நான் மிக வருந்தினேன்.

"குருநாதர் பரமகுருவுக்கும் அதே நிலைதான். மிகவும் தயாள குணமுடையவராகவும், மக்களால் எளிதில் நெருங்கக்கூடியவராகவும் இருக்கும் மாமன்னரான தங்களைச் சந்திக்கவிடாமல் அவர் ஏன் தடுக்கிறார்? பரமகுருவைக் காஞ்சிக்கு அழைத்தீர்கள். என்னையும் ஆபத்தினின்று காத்துக் காஞ்சி மாளிகைக்கு வரச்செய்தீர்கள். ஆனால், தங்களைச் சந்திக்க முடியவில்லை, ஏன்? சக்கரவர்த்திகளே! பல்லவ நாட்டில் ஏற்பட்டிருக்கும் குழப்பச் சூழ்நிலையைவிட, என் மனத்தில் ஏற்பட்டிருக்கும் குழப்பம் மிக அதிகம். அதைத் தீர்க்கவே நான் மீண்டும் காம்போஜம் திரும்ப முடிவு செய்திருக்கிறேன். என்னுடன் நரேந்திரனும் வருவதற்குச் சம்மதித்திருக்கிறார். எங்கள் முடிவை முகுந்தன் தடுக்கிறார். பல்லவ நாட்டின் இன்றைய நெருக்கடி நிலையைச் சுட்டிக்காட்டி, நரேந்திரன் மனத்தை மாற்ற, வாக்குறுதி பெற முயல்கிறார். சக்கரவர்த்தி அவர்களே! முகுந்தனிடம் கேளுங்கள். அவரை இங்கே அழைத்து விசாரியுங்கள். கலைஞர்களின் பழிக்கு ஆளாகாமல், தங்களுக்கு என்றும் உதவக்கூடிய பேரறிஞராக மட்டும் இருக்குமாறு அவருக்குக் கட்டளையிடுங்கள்" என்றாள்.

அவள் பேச்சில் ஆத்திரமும், கோபமும் மிகுந்து காணப்பட்டன. சைலேந்திரியா இவ்வாறு பேசுகிறாள் என்று, அங்கிருந்தவர்கள் வியப்படைந்தனர்.

பெரியவர் இடையில் குறுக்கிட்டார். "சக்கரவர்த்தி அவர்களே! சைலேந்திரி வயதில் சிறியவள். வீணைக் கலையில் தேர்ந்தவள் என்ற பெருமை ஒன்றைத் தவிர, அவள் மற்ற குணத்தில் குழந்தைதான். என் மூலம் அவள் சொல்லியிருக்கலாம். அவள் பேச்சில் மரியாதைக் குறைவு ஏதாவது இருந்தால் பொறுத்தருளுங்கள். முகுந்தன்மீது எனக்கும் கோபம்தான். ஆனால், அதைவிட நரேந்திரன் மீது எனக்குள்ள கோபம் அதிகம். அவன், இளம் பெண்களை வசியம் செய்யும் ஆற்றல் மிகுந்தவன். ஓர் ஊர், ஓர் தேசம் என்றில்லாமல் கப்பலில் சுற்றிவரும் அவனுக்கு, எவ்வளவு ஊர்களில் எவ்வளவு பேருடன் தொடர்போ! சைலேந்திரி ஊர் உலகம் அறியாச் சிறுமி. கடல் கடந்து காஞ்சிக்கு வந்து, வீணையின் நுணுக்கம் கற்பித்துப் பத்திரமாக அழைத்து வருமாறு என்னிடம் அவளை, அவள் தாய் ஒப்படைத்தாள். என் விருப்பப்படி, என் கட்டளைப்படித்தான் அவள் நடக்கவேண்டும். பல்லவ மண்ணில் காலடி எடுத்து வைத்தது முதல் எல்லாமே குழப்பம்தான். சைலேந்திரி இங்கே தங்கியிருப்பது சரியன்று என நான்தான் முடிவு எடுத்தேன். அதற்கு மற்றொரு காரணமும் உண்டு. நரேந்திரனுடன், சைலேந்திரி பழகுவதைத் தடுக்கவேண்டும். நரேந்திரன், சைலேந்திரியை மயக்கிவிட்டான். விபரமறியாப் பெண்ணின் மனத்தில் சஞ்சலமேற்படுத்திவிட்டான். இனியும் கணநேரம் அவன் இங்கே தங்கியிருப்பதோ அல்லது சைலேந்திரி விருப்பப்படி அவளுடன் காம்போஜம் வருவதோ ஆபத்தானதுதான். இன்னும் சொல்லப்போனால், நரேந்திரனால் பல்லவ நாட்டிற்குக்கூட ஆபத்துதான்..." என்று கூறும் போது, நரேந்திரன் துள்ளி எழுந்தான். "என்ன சொன்னீர்கள் பெரியவரே? இது அரச அவையாக இருப்பதால் அடங்கி இருக்கிறேன். ஆபத்தானவன் என்று என்னைச் சொல்ல உங்களுக்கு என்ன உரிமை? ஆபத்தானவனாக இருந்தால், உங்களைக் காப்பாற்றியிருப்பேனா? சைலேந்திரியை மட்டும் காப்பாற்றி உங்களைப் பிரித்துத் திண்டாடவிட்டிருக்கலாம்; எனக்கும் சைலேந்திரிக்கும் ஏற்பட்டிருக்கும் காதல் தெய்வீகமானது. சைலேந்திரி யைத் தேட நாம் இருவரும் புறப்பட்டோமே, ஆபத்தானவனாக இருந்தால் அப்போதே உங்களுக்கு இடையூறு செய்திருக்கமாட்டேனா? மரக்கலத் தில் சைலேந்திரி பாடிக்கொண்டிருக்கும்போதே, அவள் இசையில் மயங்கினேன். நாடு, நகரம் என்று நான் ஊர் சுற்றுபவன்தான். ஆனால், இசை என் மூச்சு. இசை ஒன்றிற்குத்தான் நான் கட்டுப்படுபவன். எங்கள் காதலைத் தடுக்க யாராலும் முடியாது. பெரியவரை, முகுந்தன் தூண்டிவிட் டிருப்பார் என்று நினைக்கிறேன். இள வயதினரான அவருக்குக் காதலின் மதிப்பு தெரியவில்லை. இன்னொரு தடவை பெரியவர் முறைகேடாகப் பேசினால் நடப்பதே வேறு..." என்று சீறிய நரேந்திரனை, அரசர் கையமர்த்தி, "நரேந்திரா! வீரனுக்கு அழகே கட்டுப்பாடுதான். சைலேந்திரி மீது நீ கொண்டுள்ள காதல் தூய்மையானது என்பதை நான் அறிவேன். உன்னைச் சந்தித்து சைலேந்திரி மனம்விட்டுப் பேசியதையும் நான் அறிவேன். சைலேந்திரி நினைப்பதுபோல், முகுந்தனைப் பற்றி சைலேந்திரியும் நீயும் நினைப்பது தவறு. உங்கள் இருவர் காதலுக்கும் இடையூறு விளைவிப்பவர் அல்லர். அல்லது சைலேந்திரி நினைப்பது போல் அவர் சைலேந்திரியிடம் தவறான எண்ணம் கொண்டிருக்க வில்லை..."



சக்கரவர்த்தி சொல்லிக்கொண்டிருக்கும்போது, பரமகுரு குறுக்கிட் டார். "சக்கரவர்த்திகளே! இதுவரையில் தங்களைச் சந்திக்கவிடாமல் முகுந்தன் ஏன் தடுத்தார்? அவர் என் வீட்டிற்கு வருவார். வீணையின் நுணுக்கங்களை விவரிப்பார். சுரங்களைப் பற்றி விவாதிப்பார். திருஞான சம்பந்தப் பெருமானின் பதிகங்களை வீணையில் மீட்டி, அதைப் பற்றி ஆராயும் அவர் ஆற்றலைக் கண்டு நான் வியப்பேன். பல்லவ சக்கரவர்த்திகளாகிய தங்களைப் போன்று, பரிவாதினி வீணையை மீட்ட வல்லவர் என்பதை அறிந்தபோது, நான் மேலும் வியப்படைந்தேன். பல்லவ நாட்டில் ஒரே வயதுடைய இரண்டு இசைமேதைகள் என்பது எனக்குப் பெருமைதான். ஆனால், அவர் ஏன் தங்களுக்கும் எனக்கும் இடையே குறுக்கே நின்றார்? நந்திபுரம் வந்து இவ்வளவு நாள்களாகியும் தங்களைச் சந்திக்க அவர் ஏன் ஏற்பாடு செய்யவில்லை?

"சக்கரவர்த்திகள் முன்னிலையில் நான் வீணை இசைக்க ஆசையும், ஆர்வமும் கொண்டேன். அதற்குத் தடையாக அவர் இருந்தது ஏன்? என் வீட்டிலேயே தங்களை எதிர்த்துச் சதி நடப்பதை அவர் அறிந்து, உங்களுக்கு அறிவிக்கவில்லையே ஏன்? சாலினி என்ற பெண் படு கொலை செய்யப்பட்டாள். இவை எல்லாம் எனக்குக் கவலையைத் தருகின்றன. பூஞ்சேரியில் என் வீட்டின் நிலை என்ன? யார் பார்த்துக் கொள்கிறார்கள்? எனக்கு ஒன்றும் புரியவில்லை" இதுவரை அடக்கி வைத்திருந்த மனக்குமுறலை அவர் வேகமாகக் கூறும்போது, அவர் உடல் நடுங்கியது.

நந்திவர்மன், தன் இருக்கையிலிருந்து எழுந்து அவர் அருகே வந்தார். அவர் கரங்களைப் பற்றி, "இசைமேதை பரமகுரு அவர்களே! தங்களைப் பெற்றிருப்பதற்கு இந்த நாடு பெருமை அடைகிறது. நான் உங்கள் அருகேதானே எப்போதும் இருந்தேன். உங்களுடன் இணைந்து வீணையை மீட்டியிருக்கிறேன். நந்திபுரம் வந்த பிறகும், நான் பல தடவை தங்களைச் சந்தித்து அளவளாவி மகிழ்ந்திருக்கிறேன். உங்கள் கரத்தைப் பற்றியிருக்கிறேன். அந்த ஸ்பரிசத்தை நீங்கள் உணர வில்லையா?..."

மன்னர் தன் அருகே வந்து, தன் கரத்தைப் பற்றியது அறிந்து, அன்புடன் பேசியது கேட்டு, பரமகுரு திடுக்கிட்டார். பரபரப்படைந்தார்.

"யார்... யார்...? என் அருகே வந்திருப்பது முகுந்தனா? பல்லவ சக்கரவர்த்திகளா? முகுந்தன் குரல்போல் இருக்கிறதே! அதே உணர்வு; அதே ஸ்பரிசம்; அதே குரல்; அதே பரிவு..." பரமகுரு மேலும் பேச முடியாமல் தடுமாறினார். "யார்... யார்...?" என்றார்.

நந்திவர்மன், பரமகுரு அருகே வந்து குனிந்து அவருடன் பேசியதையும், பரமகுரு அவருக்கு மறுமொழி கூறியதையும் கேட்ட சைலேந்திரியும், நரேந்திரனும், பெரியவரும் திகைத்தனர்.

"மதிப்புமிகு பரமகுரு அவர்களே! முகுந்தனும், நானும் ஒருவரே! இதை மற்றவர்கள் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், தாங்கள் புரிந்து கொள்ளவில்லையா?" என்றார்.

ஒரே சமயத்தில் பரமகுரு, சைலேந்திரி, பெரியவர், நரேந்திரன் அனைவரும் திடுக்கிட்டனர். "ஆஹா!" என்ற வியப்புக் குரல், அவர்களிடமிருந்து எழுந்தது.



# 52

முகுந்தன், பல்லவ மன்னர் நந்திவர்மன்– இருவரும் ஒருவரே என்பதறிந்து திகைத்த சைலேந்திரி, சக்கரவர்த்திகளின் பாதத்தில் வீழ்ந்து வணங்கி, "சக்கரவர்த்திகளே! நான் தவறாகப் பேசியிருந்தால் என்னைப் பொறுத்தருளுங்கள்" என்றாள்.

"எள்ளளவும் சந்தேகப்பட முடியாதவாறு, தங்களால் முகுந்தனைப் போல் எப்படி நடிக்க முடிந்தது? அப்பாடா... எனக்குப் பெரிய பிரச்னை தீர்ந்தது!" என்றான் நரேந்திரன். பல்லவ சக்கரவர்த்திகளிடம் பேசுகிறோம் என்ற உணர்வில்லாமல், யாரோ நண்பரிடம் பேசுவதுபோல் பேசினான்.

"உனக்கு ஏற்பட்ட பிரச்னை என்ன?" என்று சக்கரவர்த்திகள் கேட்டார்.

"சைலேந்திரியின் மனத்தில் ஏற்பட்ட குழப்பத்தை எப்படித் தீர்ப்பது என்று கவலைப்பட்டேன். இந்த நாட்டிற்கு உதவுவதா, அல்லது சைலேந்திரியோடு இந்த நாட்டைவிட்டுச் செல்வதா என்று குழம்பிக் கொண்டிருந்தேன். இப்போது குழப்பம் நீங்கியது" என்று கூறும்போது, நரேந்திரன் முகத்தில் புதிய ஒளி பிறந்தது.

"எவ்வாறு தீர்ந்தது என்று விளக்க முடியுமா?" என்று நந்திவர்மன் கேட்டார். அவர் இதழ்களில் மெல்லிய புன்னகை நெளிந்தது.

"இனி அதைத் தீர்த்துவைக்கப்போவது தாங்கள்தான் என்பதால், என் கவலை தீர்ந்தது" என்றான் நரேந்திரன்.

"எல்லோரும் மகிழ்ச்சியுடன் வீடு சென்று, மாலையில் நந்திபுரம் கோயிலுக்கு வந்துவிடுங்கள்; நான் சில முடிவுகளைக் கூறுகிறேன்" என்றார்.

நரேந்திரனும், சைலேந்திரியும் கோயில் நந்தவனத்தில் சந்தித்தனர். "சக்கரவர்த்தி கூறும் முடிவை நீங்கள் ஏற்கப்போவதாகக் கூறிவிட்டீர்களே; அவர் முடிவு நம் எண்ணத்திற்கு விரோதமானதாக இருந்தால்?" என்று கவலையுடன் கேட்டாள் சைலேந்திரி.

"சைலேந்திரி, நீ உன் முடிவை மாற்றிக்கொண்டால், எல்லாம் சுலபமாக முடிந்துவிடும்."

"என் முடிவை மாற்றிக்கொள்வதா?"

"மீண்டும் காம்போஜம் செல்லும் யோசனையை விட்டுவிட்டால், எல்லாம் சரியாகிவிடும்" என்றான் நரேந்திரன்.

சைலேந்திரி, உடனே மறுமொழி கூறவில்லை. நரேந்திரனுக்குப் பல்லவ நாட்டை விட்டு இப்போது காம்போஜம் வருவதில் பிரியமில்லை என்பதைப் புரிந்துகொண்டாள்.

"நான் ஒரு பேதைப் பெண் என்பது சரியாக இருக்கிறது. என் தாயையும், வீணையையும் தவிர, மற்ற யார் மீதும் பற்றுகொள்ளாத என் மனத்தில், சஞ்சலத்தை ஏற்படுத்திக்கொண்டு, பெரும் பிழையைச் செய்துவிட்டேன்." —சைலேந்திரி மெல்லக் கூறும்போது, வார்த்தைகள் தடைப்பட்டு வந்தன.

அவன் அவள் கண்ணீரைத் துடைத்து, "சைலேந்திரி, சிறு குழந்தைபோல் ஏன் துக்கப்படுகிறாய்?" என்று கூறி மெல்ல அவளை நெருங்கி, அணைக்க முயன்றான்.

சைலேந்திரி, அவன் அணைப்பைத் தவிர்க்க நகர்ந்து, "நான் கபடமற்ற குழந்தைதான். பல்லவ நாட்டிற்கு இந்தக் குழந்தையை என் தாய் ஏன் அனுப்பினாள் என்று எனக்குப் புரியவில்லை. பல்லவ நாட்டிற்கு வந்தபிறகு எனக்கு ஏற்பட்ட தொல்லைகள் கொஞ்சமா? கயவனிடம் சிக்கினேன். அவனிடமிருந்து தப்பினேன். வீணைக் கலைஞர் பரமகுரு அறிமுகம் கிடைத்தது. சிற்பியின் அன்பு மனைவி பொன்னாச்சி, என்னைக் குழந்தைபோல் நேசித்தாள். பிறகு உங்களைச் சந்தித்தேன். யாரைப் பிரிந்தாலும் நான் துயரங்கொள்ளமாட்டேன். ஆனால், தங்களைப் பிரிவதை நினைத்தால், மனம் ஏனோ கலங்குகிறது" என்றாள்.

சைலேந்திரியின் கரத்தை, தன் கரத்தோடு பிணைத்துக் கொண்டான் நரேந்திரன். அவள் தடுக்கவில்லை. "சக்கரவர்த்தி தன் முடிவைத் தெரிவிப்பதற்குள் பிரிவைப்பற்றிப் பேசுகிறாய். மாலை வரையில் காத்திருக்கக்கூடாதா?" என்றான்.



"மாலைவரையில் மட்டுமா? காலமெல்லாம் காத்திருப்பேன்" என்றாள், அவன் கரத்தில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு. விழிகளிலிருந்து வீழ்ந்த இருசொட்டுக் கண்ணீரின் வெப்பம் உணர்ந்த நரேந்திரன், குனிந்திருந்த அவள் முகம் நிமிர்த்தினான்.

தொலைவில் பெரியவர் வந்து கொண்டிருந்தார்.

"சைலேந்திரி, உன்னை வீணைக் கலைஞர் அழைக்கிறார். உன்னை எங்கெல்லாம் தேடுவது? காலையிலிருந்து நீ ஏதும் உண்ணவில்லை, இங்கே நின்று என்ன பேச்சு?" என்று கூறிய அவர் குரலில் கடுமை இருந்தது. ஆனால், கனிவாக அழைப்பதுபோல் ஒரு தோற்றம். நரேந்திரனிடம் ஏற்பட்ட வெறுப்பு, அவருக்கு இன்னமும் குறையவில்லை.

நரேந்திரன் அங்கிருந்து சென்றுவிட்டான்.

சைலேந்திரி, பெரியவரைப் பார்த்து, "நரேந்திரனிடம் உங்களுக்கு வெறுப்பு ஏன் ஏற்பட்டது?" என்று கோபமாகக் கேட்டாள்.

பெரியவர் தன் முக உணர்ச்சியை மாற்றிக் கொண்டு, "சைலேந்திரி, உன் நன்மைக்காகவே நான் இதுவரை எந்த ஒரு காரியத்தையும் செய்து வந்திருக்கிறேன். நரேந்திரனை நான் வெறுக்கவில்லை. உன்னுடன் அவன் பழகுவதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. அவனை நீ விரும்புகிறாய். திருமணம் செய்து கொள்ளவும் துணிந்துவிட்டாய். என்னிடம் கலந்து ஆலோசிக்கவில்லை. 'காதல் என்றால் என்ன? திருமணம் என்றால் என்ன?' என்று அறியமுடியாத வயது உனக்கு. உன் தாயின் அனுமதியின்றி, நீ ஏதும் செய்யக்கூடாது. பல்லவ மன்னரைச் சந்தித்துவிட்டேன். அவருடன் தனியே பேச அனுமதி கேட்டேன். உன் தாய் சொல்லியனுப்பிய செய்தியை, அவரிடம் தெரிவிக்க வேண்டும்" என்றார்.

'இவர் என்ன பேசுகிறார்? நரேந்திரன் என்னுடன் பழகுவதைத் தடுக்க இவருக்கு என்ன உரிமை இருக்கிறது?' என்று எண்ணிய சைலேந்திரி, வெளியே தெரிவிக்க விரும்பாமல், "காதல் என்றால் என்ன, கல்யாணம் என்றால் என்ன என்று எனக்குத் தெரியும். யார் தடுத்தாலும் நான் இந்த நாட்டிலிருந்து புறப்படுவது உறுதி. நரேந்திரனும் என்னுடன் வருகிறார். நீங்கள் அவரைத் தடுக்க முயலவேண்டாம் என்று மட்டுமே தங்களை வேண்டிக்கொள்வேன்" என்றாள்.

"சைலேந்திரி! உன் மனம் எனக்குப் புரிகிறது; உன் தாயிடம் நான் கொடுத்த வாக்குறுதியை மீறமுடியாது." —பெரியவர் கண்டிப்பாகக் கூறினார்.

"என்னிடம் சொல்லாமல், என் தாய் தங்களிடம் பெற்றுக்கொண்ட வாக்குறுதி என்ன?" —சைலேந்திரி கோபமாகக் கேட்டாள்.

"உன் தாய், என்னிடம் உன்னை ஒப்படைத்துவிட்டுச் சொன்ன வற்றை அப்படியே சொல்கிறேன்.

"என் தாய் பிறந்த பல்லவ நாட்டைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் எனக்கு உண்டு. வீணைக் கலையில் சிறந்து வர, அவளை அந்த நாட்டிற்கு அனுப்புகிறேன். பல்லவ அரசர் இளம் வயதினர். கலைப்புலமை மிக்கவர். அவர் பக்திமான். ஒருவேளை அவருக்கு என் மகள் மீது விருப்பம் ஏற்பட்டு, அவளை மணக்க விரும்பினால் அதற்குக் குறுக்கே நிற்காதீர் கள். திருமணம் நிச்சயம் செய்து எனக்குத் தெரிவித்தால், நான் தக்க துணையுடன் அங்கு வருகிறேன். ஒருவேளை அது நிறைவேறாவிட்டால், என் மகளுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாமல் என்னிடம் கொண்டு சேர்த்து விடுங்கள். நான் சொன்னதை மறவாமல் நிறைவேற்றுவீர்களா? என்று கேட்டு உறுதி பெற்றுக்கொண்டாள். முகுந்தனுக்கு உன் மீது ஏற்பட்டது காதலா, பாசமா என்று எனக்கே தெரியாது. அவர் பார்வை, பேச்சு சரியில்லை என்று, நீ என்னிடம் வருத்தப்பட்டிருக்கிறாய். நரேந்திரனை விரும்புவதாக வும், முகுந்தன் இடையூறாக இருக்கிறார் என்றும் அரசரிடம் தெரிவித்தி ருக்கிறாய். முகுந்தனும் அரசரும் ஒருவரே என்பது தெரிந்திருந்தால், அப்படிச் சொல்லியிருப்பாயா?"

"பொய், பொய். முற்றிலும் கற்பனை. என் தாய் என்னைக் கலந் தாலோசிக்காமல் தங்களிடம் சொல்லியிருக்கமாட்டாள். ஒரு பெண் மனத்தில், முதலில் ஓர் ஆடவர்தான் இடம்பெறுவார். சஞ்சலமுடைய சபல மனதுடையவள் பெண் அல்லள். முகுந்தனும், பல்லவ மன்னரும் ஒருவரே என்பது எனக்குத் தெரிந்திருந்தாலும், நான் அவர் காதலை ஏற்றிருக்கமாட்டேன். பெரியவரே! இனியும் கற்பனையில் காலந்தள்ளாதீர். நான், என் தாயை உடனே பார்த்தாக வேண்டும். அரசரின் முடிவு எப்படி இருந்தாலும், நரேந்திரனும் நானும் புறப்படுவது உறுதி" என்று சைலேந்திரி அழுத்தந் திருத்தமாகப் பேசினாள்.

அன்று மாலையில், நந்திபுர விண்ணகரக் கோயிலுக்கு அனைவரும் புறப்பட்டனர்.

"பரமகுருவை அழைத்துக்கொண்டு நீங்கள் செல்லுங்கள். நான் சிறிது நேரம் கழித்து வருகிறேன்" என்று கூறிய சைலேந்திரியின் குரலில் கடுமை தெரிந்தது. பெரியவர் தயங்கினார்.

"நான் சொல்வதுபோல் செய்யுங்கள். அரசர் அழைப்பைத் தட்ட மாட்டேன்" என்றாள் சைலேந்திரி.



நரேந்திரனுக்காக சைலேந்திரி காத்திருந்தாள். அவனைக் காணாமல் தவியாய்த் தவித்தாள். 'கோயிலில் பல்லவ அரசர் காத்திருப் பாரே' என்று எண்ணும்போது, அவள் இதயத் துடிப்பு அதிகமானது.

அதோ! நரேந்திரன் வருகிறான். குதிரை மீதமர்ந்து வருகிறான். அவனைத் தொடர்ந்து வந்த வீரர்கள் நந்திக்கொடி பிடித்திருக்கிறார்கள். நரேந்திரன் உடையில் மாறுதல். இடையில் வாளும் கேடயமும்; மார்பிலே கவசம்.

குதிரை மீதிருந்து இறங்கிய நரேந்திரனை, வியப்புடன் நோக்கி னாள் சைலேந்திரி.

"சைலேந்திரி, கோயிலுக்குப் புறப்படவில்லையா?" நரேந்திரன் கேட்டான்.

"தங்களுக்காகக் காத்திருக்கிறேன். இருவரும் சென்று கடவுளை வணங்கி, பிறகு அரசரை வணங்கி ஆசிபெறுவோம்" —சைலேந்திரி விழிகளை உயர்த்திக் கேட்டாள். அந்த விழிகளில் ஆயிரம் ஆயிரம் உணர்ச்சிகள் பொங்கிப் பாய்ந்தன. நரேந்திரன் கரத்திலுள்ள கேடயத்தால் கூட, அந்த விழியின் தாக்குதலைத் தடுக்கமுடியுமா என்பது சந்தேகம்!

"சைலேந்திரி, என்னால் இங்கு ஒரு கணங்கூடத் தாமதிக்க முடியாது. சக்கரவர்த்திகளை நான் சந்தித்தாக வேண்டும். உனக்குச் செய்தி தெரியுமா? காஞ்சிக் கோட்டையை முற்றுகையிட்ட சாளுக்கியர்கள், தங்கள் முயற்சி வெற்றிபெறாததால் சோர்வடைந்து, சோர்வு வெறியாக மாற, நந்திபுரம் நோக்கி விரைந்து வருகிறார்கள்" என்றான்.

சைலேந்திரி திடுக்கிட்டாள்.

"ஊர் மக்களை உடனே நகரிலிருந்து வெளியேற்றிச் சுற்றிலு முள்ள கிராமங்களுக்குச் சென்று தங்குமாறு கட்டளையிட்டுவிட்டார். தெருத் தெருவாக முரசின் மூலம் செய்தியை மக்களுக்கு அறிவித்து வருகிறார்கள். நந்திபுரக் கோட்டைக்குள் மிக முக்கியமானவர்கள். மட்டுமே தங்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். என்னைக் கோயிலுக்கு உடனே வருமாறு செய்தி அனுப்பியுள்ளார். நான் செல்கிறேன். நீ உடனே வந்துவிடு" என்று கூறிய நரேந்திரன், அவளுடைய மறுமொழிக்கும் காத்திராமல் விரைந்தான். ஒருமுறை அவன் திரும்பிப் பார்ப்பான் என்று அவள் நினைத்து, அங்கேயே நின்றிருந்தாள். அவன் திரும்பிப்பார்க்கவில்லை. குதிரைகள் சென்றதால், புழுதிப்படலம் எழுந்து பார்வையை மறைத்தது.

தன்னிடம் நரேந்திரன் உண்மையான காதல் கொண்டுள்ளானா என்ற சந்தேகம், சைலேந்திரியின் மனத்தில் இப்போது எழுந்தது. அவள்

உறுதியான முடிவிற்கு வந்துவிட்டாள். நந்திபுரம் கோயிலை நோக்கி விரைந்தாள்.

"வடக்கே இருந்து எதிரிப்படைகள் வருகின்றனவாம். சுற்றிலுமுள்ள ஊர்களுக்குச் சென்று சில நாள்கள் நாம் வசிக்க வேண்டும் என்பது அரச கட்டளை" என்று நகர மக்கள் கவலையுடன் பேசிக் கொண்டனர். பல ஆண்டுகளாகப் போர் என்ற பேச்சையே கேட்காதவர்கள். எப்போதாவது பாண்டியர்கள் குறைந்த எண்ணிக்கையில் படைகளுடன் வருவார்கள். உறையூர்வரை அவர்களைப் பல்லவ வீரர்கள் ஓட்டி விடுவார்கள். ஒருவேளை பாண்டியர் படைகளும் தெற்கே இருந்து தாக்க முற்படலாம் என்றும் மக்கள் பேசிக்கொண்டனர்.

கோயில் மண்டபத்தில், பல்லவ மன்னர் நந்திவர்மன் கம்பீரமாக அமர்ந்திருந்தார். அவர் எதிரே பலர் அமர்ந்திருந்தார்கள். நரேந்திரனும் மற்றும் மல்லர்களும், வீரர்களும் அரசர் எதிரே நின்றிருந்தனர். ஆலோசனை பெற அவர்கள் வந்திருந்தார்கள். பரமகுரு, வீணையை மீட்டிக்கொண்டிருந்தார். வீணையின் இனிய நாதம் எங்கும் எழுந்து, மனத்துக்குப் புதிய உற்சாகத்தை அளித்துக்கொண்டிருந்தது. கோயில் நுழைவாயிலுக்கருகே பெரியவர். சைலேந்திரியை எதிர்பார்த்துத் தவித்தவாறு காத்துக்கொண்டிருந்தார்.

பரமகுரு, ஒரு பாடல் முடிந்து அடுத்த பாடலை வாசிக்கத் தொடங்கினார். மிகவும் ரசித்திருந்த பல்லவ மன்னர், சைலேந்திரி அங்கு வந்தவுடன் அருகிலிருந்தவர்களிடம் சைகை செய்தார். அத்துடன் நிறுத்துமாறு, அவர்கள் பரமகுருவைக் கேட்டுக் கொண்டனர்.

"சைலேந்திரி, உனக்காகக் காத்திருக்கிறேன். நந்திபுரத்தைச் சாளுக்கியப் படைகள் நெருங்கிக்கொண்டிருக்கின்றன. கொள்ளிடத்தில் பெருவெள்ளம் செல்வதால், அவர்களால் ஆற்றைக் கடக்கமுடியாமல் தவித்து, மறுகரையிலேயே தங்கியிருக்கிறார்கள். அது நந்திபுரத்து இறைவன் நமக்களித்த பேருதவி. நகர மக்களை ஊரைவிட்டுச் செல்லுமாறு கட்டளையிட்டுவிட்டேன்.

"கோட்டையைப் பாதுகாக்கும் முழுப் பொறுப்பை நரேந்திரன் ஏற்றுக்கொண்டுவிட்டான். நரேந்திரனின் மூதாதையர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். மற்றெல்லாப் பற்றையும்விட நாட்டுப் பற்று மேலோங்கி நிற்க, நாட்டைக் காப்பாற்றும் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்த நரேந்திரன் உறுதி பூண்டுவிட்டான்.

"பரிவாதினி வீணை நந்திபுரக் கோட்டைக்குள் இருப்பதால், அதை எப்படியாவது மீட்டுவிட கீர்த்திவர்மனும், விக்கிரமாதித்தனும் முடிவு



செய்துவிட்டார்கள். வீணையை அவர்களிடம் கொடுத்துவிட்டால், போரை நிறுத்திவிட்டுத் திரும்பிச் சென்று விடுவோம் என்று அவர்கள் சமாதானப் பேச்சைத் தெரிவித்திருக்கிறார்கள்.

"எப்படியாவது பரிவாதினி எனும் மாணிக்க வீணையைக் கோட்டையிலிருந்து கைப்பற்றிவிடலாம் என்று சித்திரமாயன் உறுதியளித்துள்ளான்.

பரிவாதினியை எதிரிகளிடம் ஒப்படைக்க நான் விரும்பவில்லை. மகேந்திரவர்மன் படைத்த தெய்வீக வீணையை, ஓர் கலைஞரிடம் ஒப்படைக்காமல், ஜென்ம விரோதியிடம் ஒப்படைத்து, போர் நிறுத்த உடன் படிக்கையை ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

"கடுமையாகப் போர் நடைபெறும் என்பது உறுதி. நந்திபுரம் நோக்கிச் செல்லுமாறு யோசனையைச் சித்தரமாயன் கூறியுள்ளான். அது எவ்வளவு பெரிய தவறு என்பதை அவன் உணரமாட்டான்.

சாளுக்கியர் படைகள் தெற்கு நோக்கிப் புறப்பட்டவுடன் உதயசந்திரனும் பெரும்படைகளுடன் காஞ்சியினின்று புறப்பட்டுப் பின் தொடர்கிறார். நந்திபுரக் கோட்டையை நரேந்திரன் பாதுகாத்துக் காப்பாற்ற முன்வந்துள்ளான். பல்லவ நாட்டைக் காப்பாற்றுவது என்ற அவன் முடிவு, ஒருவிதத்தில் பெரும் தியாகம்தான்" என்று கூறிய நந்திவர்மன், சைலேந்திரியை நோக்கி, வீணையை வாசிக்குமாறு சைகை செய்தார்.

சைலேந்திரி, அரசருக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, பரமகுரு எதிரிலிருந்த வீணையை மீட்டலானாள். ஏனோ சோகரசமே வீணை நரம்புகளிலிருந்து வெளிப்பட்டது. அவள் விழிகளில் துயரத்தின் பிரதி பலிப்பு இருந்தது.

சைலேந்திரியின் விரல்கள் வீணை நரம்புகளை வேகமாகத் தடவிக்கொண்டிருந்தன. அவள் விழிகள் ஒருமுறை நரேந்திரனை நோக்கின. நரேந்திரன் அவளைப் பார்க்காமல், வேறு எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பார்வை, கோயிலுக்கு வெளியே யார் வருகையையோ எதிர்பார்த்திருந்தது. நந்திவர்மன், நரேந்திரனைப் பார்ப்பதும், சைலேந்திரியைப் பார்ப்பதுமாய் பார்வையை இங்குமங்கும் மாறிமாறி அலையவிட்டுக் கொண்டிருந்தார்.

திடீரென நரேந்திரன் அங்கிருந்து வெளியேறியதை, நந்திவர்மன் புரிந்துகொண்டார். அருகே இருந்தவர்களிடம் மெல்லச் சொன்னார். "காஞ்சியினின்று உதயசந்திரன் படைகளுடன் புறப்பட்டுவிட்டாராம். கொள்ளிடத்தில் வெள்ளம் தணியவில்லை. கோட்டைக் கதவை நாளை மாலை அடைத்துவிடச் செய்யுங்கள்."

அடுத்த பாடலைத் தொடங்கும் முன்பு சைலேந்திரி, அரசரை நோக்கினாள்.

நந்திவர்மன் கையசைத்து, "சைலேந்திரி, வருங்காலத்தில் இசைக் கலையில் பெரும் புகழ் பெறுவாய். பரமகுருவிடம் நீ மேலும் மேலும் சாதகம் செய்துகொண்டால் உன் திறமை மேலோங்கும். நந்திபுரக் கோட்டையை நோக்கிப் போர் மேகங்கள் நெருங்குகின்றன. கோட்டையைக் காப்பாற்ற நரேந்திரன் உறுதி எடுத்துவிட்டான். இந்தச் சூழ்நிலையில், கலை மேதைகளான நீங்கள் இங்கு இருப்பது சரியன்று. தாயைக் காணவேண்டும் என்ற ஆவலில் சைலேந்திரி முனைப்பாக இருக்கிறாள். பல்லவ நாட்டுப் பொக்கிஷமான பரிவாதினியையும், வீணை மேதை பரமகுருவையும் இழக்க நான் விரும்பமாட்டேன். சைலேந்திரிக்கு என்றுமே குருநாதராகப் பரமகுரு விளங்க வேண்டும். அவருக்கு ஒரு குறையும் வராமல் சைலேந்திரி பாதுகாக்கவேண்டும். இருவரும் இன்றே காம்போஜம் புறப்படுகிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாகப் பெரியவர் செல்லட்டும். பரிவாதினி வீணையை சைலேந்திரியிடம் ஒப்படைக்கிறேன். பரிவாதினியில் மேலும் மேலும் ஆராய்ச்சிகள் செய்து, பல்லவ நாட்டில் வீணைக் கலை பரவுவதற்கான திட்டங்களை இருவரும் உருவாக்கட்டும். இன்னும் சிறிது காலத்திற்கு இந்த நாட்டில் அமைதி இராது. பல்லவ நாட்டில் போர், பூசல் முடிந்து, அமைதி நிலவத் தொடங்கியவுடன் சைலேந்திரியும், பரமகுருவும் மீண்டும் காஞ்சிக்குத் திரும்பி வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன். அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கக் காத்திருப்பேன்" என்று கூறி, இருக்கையிலிருந்து எழுந்து பரிவாதினி வீணையை எடுத்து, சைலேந்திரியின் கரங்களில் ஒப்படைத்தார். கோயில் மணி ஓம் ஓம் என்று ஒலித்தது.

பல்லவ மன்னர் நந்திவர்மன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிய சைலேந்திரி, பயபக்தியுடன் பரிவாதினியைப் பெற்றுக்கொண்டாள். பிறகு பரமகுருவின் பாதங்களைத் தொட்டு வணங்கினாள். இரு துளி கண்ணீர் முத்துக்கள் இவர் பாதங்களையும் நனைத்தன.

அவள் வணங்கி எழுந்தபோது நந்திவர்மன் சொன்னார்: "சைலேந்திரி, நீ திரும்பிவரும் நன்னாளை எதிர்பார்த்து நரேந்திரன் காத்திருப்பான். அல்லது பல்லவ நாட்டில் உதயசந்திரனுக்கு உதவியாக இருந்து அமைதியை நிலைநாட்டிய பிறகு காம்போஜம் வந்து, உன்னை உன் தாயின் முன்னிலையில் திருமணம் புரிந்து கொள்வான்" என்றார்.

சைலேந்திரியின் இலேசான விம்மல் ஒலி எழுந்தது. அது மகிழ்ச்சியின் விளைவாகத்தான் இருக்க முடியும்.



பெரியவர் பக்கம் திரும்பிய நந்திவர்மன், "இதோ, உங்கள் பூசைப் பெட்டி, தேவி விக்கிரகங்கள். கப்பலில் திரும்பிப் போகும்போது, பூசை செய்யாத நாள்களுக்கும் சேர்த்துப் பூசை செய்யுங்கள். பல்லவ நாடு மீண்டும் அமைதியாகி, செழிப்புடன் வளரவேண்டும் என்று தேவியிடம் வேண்டிக்கொள்ளுங்கள்" என்று கூறி, தேவியின் விக்கிரகமிருக்கும் பூசைப் பெட்டியை ஒப்படைத்தார்.

காலை இளம் வெயில் மண்ணின் மீது கோலமிட்டுக் கொண்டிருக்கும்போது, இரட்டை மாட்டு வண்டி ஒன்று நாகைப்பட்டினம் செல்லும் பாட்டையில் சென்று கொண்டிருந்தது. வண்டியில் பரமகுரு, சைலேந்திரி, பெரியவர் மூவரும் அமர்ந்திருந்தனர். பெரியவர் தூங்கி வழிந்துகொண்டிருந்தார். பரமகுருவுக்கு வெளி உலகத்தைப் பார்க்க முடியாது. சாலையின் இருபுறங்களிலும் காட்சியளித்த பசுமை வயல்களும், தோப்புகளும், இரு கரைகளையும் அணைத்தவாறு செல்லும் ஆற்று வெள்ளமும், ஆறுகளிலிருந்து பிரிந்து செல்லும் வாய்க்கால்களும் சைலேந்திரியின் பார்வையில் படவில்லை. அவள் கரங்கள் பரிவாதினி வீணையைக் குழந்தையைப்போல் அணைத்துக்கொண்டிருந்தன.

நாகைப்பட்டினத்திலிருந்து கீழ்த்திசை நாடுகளுக்குப் புறப்படும் பெரிய மரக்கலம், நடுக்கடலில் நங்கூரம் பாய்ச்சிக் காத்திருந்தது. நாகைத் துறையிலிருந்து படகேறி மரக்கலத்தை அடையவேண்டும்.

சைலேந்திரி, காம்போஜத்திலிருந்து மரக்கலத்தில் புறப்பட்டதிலிருந்து கடல்மல்லைத் துறையில் இறங்கியவரையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை ஒருமுறை நினைத்துக்கொண்டாள். நரேந்திரனின் வடிவத்தை மீண்டும் ஒருமுறை நினைத்துக்கொண்டாள்...

இனி, அவளுக்கு மாணிக்க வீணைதான் துணை.

* * * * *

அசோக் நகர். சென்னை-83
15/984/54315